# இளங்கதிர்

2015-2016




44வது இதழ்

தமிழ்ச் சங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கதிர் அன்னைக்கு இனிய வாழ்த்து

விளங்குதிரை முழங்குகிற ஈழ நாட்டின்
வித்தகத்தை உலகுக்(கு) எடுத்துக்காட்டும்
இளங்கதிரே! நின்தனது உதயங் கண்டு
இதய கமலங்களெலாம் பூக்கும் பூக்கும்
துலங்குகிற அறிவோடு இளைஞர் தங்கள்
தொலைநோக்குப் படைப்புகளை இனியதாக
வழங்குகிற தாயே! நீ வருடந் தோறும்
வந்தெம்மைப் புரக்கின்றாய் வாழி, அம்மா!

– கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கதிர்

**2016**

**௪௪வது இதழ்**

"தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

இதழாசிரியர்கள்
திரு. சி. ஸ்ரீகாந்த்
செல்வி. த. அருள்விழி

வெளியீடு
தமிழ்ச் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
2015 – 2016





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : இளங்கதிர் 2016
இதழாசிரியர்கள் : சி.ஸ்ரீகாந்த்
: த.அருள்விழி
வெளியீடு : தமிழ்ச் சங்கம் (2015/2016)
பிரதிகள் : 150

அச்சுப்பதிப்பு : 'ஸ்பேஸ் எட்வெடேசிங் அன்ட் டெக்நொலொஜி'
8/1, காமினி திஸ்ஸாநாயக
மாவத்தை,
கண்டி.
(081-4545845/071-9611311)

Book Title : Ilankathir 2016
Editors : S.Srikanth
:T.Arulvizhi
Published by : Tamil sangam(2015/2016)
Copies : 150

Printed by : Space Advertising & Technology
8/1, Gamini Dissanayake
Mavatha,
Kandy.
(081-4545845/071-9611311)

*(அட்டைப்படம் : இணையத்தளத்தினைத் தழுவி உருவாக்கப்பட்டது. நன்றி இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ILANGATHIR

## 2016
## 44th Magazine

**"Let blow Tamil trumpet much wider reach"**

## Editors

**Mr. S.Srikanth**
**Ms. T.Arulvizhi**



***<u>Published by</u>***
***Tamil Sangam***
***University of peradeniya***
***2015 - 2016***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ச் சங்கக் கீதம்

புகழ் திகழ் தமிழ்மகள் புவிமீ தாளும்
பொன்னாள் வருக! வருக!
மகிழ்வுறு தமிழ்நில மாந்தர்கள் பண்பு
மலை விளக்காகவே ஒளிர்க
சகலரும் ஒருதாய் தன் பிள்ளை கள்போல்
சமத்துவமாகவே வாழ்க
தனித்துவம் காத்திட எழுக! எங்கள்
தமிழ்க் குல நெறி தழைக்க
தாயக மணிக்கொடி துலங்க
பனித்திடு மலைசூழ் பழநகர் பேரா
தனையுயர் தமிழ்க் கலை மன்றம்
வளர்க! வளர்க! வளர்க!
மாவிடம் போற்றிட வளர்க!

வளம்தரு மாவலி நதிமருங் கமைந்தபே
ராதனைப் பல்கலை மன்றில்
விளைந்திடு பயிராய் விளங்கிடு சங்கம்
வீறு கொண்டிலங்கி மிளிர்க
இளம்தமிழ் மாணவர் இன்கலைக் கோட்டம்
இவ்வுலக குளவரை துலங்க
ஈழமணி நாடு வுயர்க! எங்கள்
நாளைய வாழ்வும் உயர்க
நமதிறை அருண்வழி பொலிக
பாளையின் குளிர்தரு மலைசூழ் பேரா
தனைத் தமிழ்ப் பணியகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!
பல்லாண் டுயர்வுடன் வாழ்க!

மெட்டு: "ஜன கன மன" எனும் இந்தியத் தேசிய கீதம்
ஆக்கம்: சக்திதாசன் (அக்கரைச்சக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the - Vice chancellor University of Peradeniya.

It is with great pleasure that I write to extend my sincere wishes to the Tamil society on the release of its annual publication **"Elankathir-2016"**

I am happy to note that your annual publication **"Elankathir"** completes its **44th** consecutive year which is a remarkable achievement. This is solely because of the hard work and cooperation extended by all concerned. If not for the cooperation of all staff and students this would have not been impossible.

Your magazine is one of the most popular publications among the university community today and the credit for that exclusively goes to the membership of the Tamil Society.

While congratulating the members of the Tamil Society for making a tremendous effort towards the success of **"Elankathir-2016"**, I hope this magazine would reach great heights in the years to come.

**Prof. Upul B.Dissanayake**
**Vice-chancellor**
**University of Peradeniya.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெருந்தலைவரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் வருடார்ந்த வெளியீடான இளங்கதிர் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். நமது பல்கலைக்கழக வரலாற்றிலேயே நீண்ட சுவடுகளைப் பதித்தது தமிழ்ச் சங்கம். நாடெங்கிலுமிருந்து உயர்கல்வி கற்க பல்கலைக்கழகத்துள் பிரவேசித்த மாணவர்கள் தங்களுடைய பல்கலைக்கழகக் கூட்டுவாழ்வின் ஓரங்கமாகவே தமிழ்ச் சங்கத்தைக் கருதி அதனை நேசித்தனர் அதன் செயற்பாடுகளில் எல்லாம் பங்கு கொண்டனர் தம்முடைய தனித்த ஆளுமைகளை வெளிப்படுத்தினர். இதனால், ஈழத்து அரசியல், சமூக, கலாசார செல்நெறிகளின் காலக்கண்ணாடியாகத் தமிழ்ச் சங்கத்து நிகழ்வுகளும், அதன் வெளியீடான இளங்கதிரும் விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை. கடந்த கால இளங்கதிர் இதழ்களும் தமிழ்ச் சங்கத்து நிகழ்வுகளும் இதற்குத் தக்க சான்றாவணங்களாக விளங்குகின்றன. அந்தவகையில், தமது முன்னோரின் தொடரோட்டத்தில் தாமும் இணைந்துகொண்ட தமிழ்ச் சங்க ஆட்சிக்குழுவினர் இன்று தமிழ்ச் சங்கக் கலைவிழாவை நடத்தி, இளங்கதிரையும் வெளிக்கொணர்கின்றனர். இந்த அயரா முயற்சியில் முன்னின்றுழைத்த தமிழ்ச் சங்க ஆட்சிக்குழுவின் மாணவ நண்பர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள். காலவெளிகளைத் தாண்டி இந்தத் தொடரோட்டம் நிகழவேண்டும் என்பது என்னுடைய வேணவா.

**பேராசிரியர் வ. மகேஸ்வரன்,**
**பெருந்தலைவர்,**
**தமிழ்ச் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும்பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடாகிய 'இளங்கதிர்' இதழுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். பல்லின, பல்மத, பல்பண்பாடு நிலவும் பல்கலைக்கழகச் சூழலில் தமிழ் பேசும் மாணவர்களின் தனித்துவத்தை எடுத்தியம்புவதில் இச்சங்கம் ஆற்றும் பணி போற்றத்தக்கது. ஏனைய மொழிகளையும், மதங்களையும், சமூகங்களையும் புரிதலோடு அணுகுதல் மாணவர்களுக்குரிய மிகப்பெரிய கடமை. அதேவேளை, தமது மொழிசார் தனித்துவத்தையும், சமூக பாரம்பரியத்தையும் காப்பதும், வளர்ப்பதும் அவசியம். இவற்றை இன்றுவரை தமிழ்ச் சங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் தமிழ்மொழி பேசும் சமூகங்களைச் (தமிழ், முஸ்லிம்) சேர்ந்த மாணவர்கள் இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களிலிருந்து வந்தவர்கள். அம்மாணவர்கள் தமது பிராந்தியங்களில் காணப்படும் நிகழ்த்துகலைகள், சடங்கியல் மரபுகள், இலக்கிய வெளிப்பாடுகள் முதலானவற்றை அறிமுகம் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களை தமிழ்ச் சங்கம் வழங்குகிறது. அத்தோடு பொது வழக்கிலுள்ள கலை இலக்கியங்களை வளர்த்தெடுக்கவும் தவறுவதில்லை.

தமிழ்ச் சங்கத்தோடு மாணவர்கள் கொண்டுள்ள தொடர்பு எதிர்வரும் காலத்தில் மேலும் விரிவுபட வேண்டும். தமிழ்ச் சங்கம் வெறுமனே மாணவர்களினதும் அவர்களைச் சார்ந்த சமூகத்தினரதும் பொதுவழக்கிலுள்ள கலைகளையும், பாரம்பரியத்தையும் பேணுவதிலும் வளர்ப்பதிலும் மாத்திரம் கவனம் கொள்ளவில்லை. மாணவர்களுக்காக இயங்கும் இச்சங்கத்தின் வழியே படைப்பாளிகளையும், ஆய்வாளர்களையும் உருவாக்குவதும் அவர்களிற்கு ஊக்கமளிப்பதுமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அம்முன்னெடுப்பின் வெளிப்பாடே 'இளங்கதிர்' எனும் இவ்விதழ். இதழாக்க முயற்சி என்பது சாதாரண விடயமன்று. ஒரு பெரும்பணியது. அதனைச் செவ்வனே நிறைவேற்றி வந்திருக்கிறது தமிழ்ச் சங்கம். இன்று அவ்விதழின் 44வது இதழ் வெளிவருவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. அதனைச் சிறப்பாகச் செய்த சங்கத்தாருக்கும் இதழாசிரியர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

**வடிவேல்முருகன் தர்மதாசன்,**
**பெரும்பொருளாளர்,**
**தமிழ்ச் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் வாழ்த்துச் செய்தி

இலங்கையில் இயங்கிவருகின்ற தமிழ்ச் சங்கங்களில் தாய்ச் சங்கமான பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கமானது இற்றைக்கு 90 ஆண்டுகளாகப் பல்கலைக்கழகத்தில் முத்தமிழையும் ஒன்றிணைத்து கலை, கலாசார மேம்பாட்டுக்காகப் பணியாற்றிவருகின்றது. எமது தமிழ்ச் சங்கத்தை நிறுவிய புகழ்மிக்க சங்கச் சான்றோர்களுக்கும் அதனை ஆண்டுதோறும் சிறப்பாக நடாத்திவரும் மாண்புமிகு சகோதர, சகோதரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எமது சங்கம் சிறப்பான முனைப்போடு செயலாற்ற வழிகாட்டிவரும் மதிப்பிற்குரிய கல்விச் சமூகத்தினரிற்கும் கல்விசாரா ஊழியர்களிற்கும் மற்றும் அனைவரிற்கும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் 2015/2016 நிர்வாகச் செயற்குழு சார்பில் சிரம்தாழ்த்தி நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். முத்தமிழிலும் திறமையுடைய அறிஞர்களினதும் மாணவர்களினதும் திறமைகளை வெளிக்கொணர்வதற்குக் களமாக வருடந்தோறும் எமது சங்கத்தால் நடாத்தப்படுகின்ற புதுவசந்தம், நாடகத் திருவிழா, கலைவிழா ஆகியனவும், கலைவிழாவில் வெளியிடப்படும் இளங்கதிர் சஞ்சிகையும் அமைகிறது. அந்தவகையில், எமது சங்கச் செயற்பாடுகளில் பங்கெடுத்து இவ்வாண்டின் சஞ்சிகைக்கான தரமான ஆக்கங்களை வழங்கிய அனைவரும் அன்புக்கும் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாவர்.

இச்சங்கமானது சிறப்பாக இயங்கி வருவதற்குப் பல பொருளாதார உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிவருகின்ற சிரேஷ்ட மாணவர்களுக்கும் சஞ்சிகைக்கான விளம்பரங்களையும், நன்கொடைகளையும் தந்துதவிய வர்த்தக நிறுவனங்களுக்கும் மற்றும் பல்வேறு உதவிகளை வழங்கிய எம் இனிய உறவுகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் 2015 - 2016 வருட இளங்கதிர் சஞ்சிகைக்கான ஆக்கங்களைச் சேகரித்து அதனை உருப்பெறச் செய்த இதழாசிரியர்களையும் அவர்களிற்கு உறுதுணையாய் இருந்தவர்களையும் பாராட்டுகின்றேன்

எமது தமிழ்ச் சங்கம் பாரம்பரியத்தை இழந்துவிடாமல் தொடர்ந்தும் தன் சேவைகளைச் செவ்வனே செய்யவேண்டும் எனவும், எதிர்காலங்களிலும் இளங்கதிர் வெற்றிகரமாகத் துளிர்த்து அறுவடை நிகழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.கீர்த்தனன்,**
**தலைவர்,**
**தமிழ்ச் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்திற்கெனத் தனியானதும் நீண்டதுமான ஒரு வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. இத்தமிழ்ச் சங்கமானது முத்தமிழ்ச் செயற்பாட்டிற்குச் சிறந்த பங்களிப்பினை ஆற்றிவருகின்றது. அந்தவகையில், வருடம்தோறும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்படும் இளங்கதிரின் 44வது இதழினை வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

இளங்கதிர் இதழானது பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கியவாறு வெளிவருகின்றது. இந்தவகையில் அவர்களது திறமைகளை உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் எடுத்துச் செல்கின்ற ஒரு கருவியாகவும் தளமாகவும் காணப்படுகின்றது.

இளங்கதிரானது பல்துறைசார் ஆக்கங்களையும் வரலாற்றுப் பதிவுகளையும் நடைமுறை விடையங்களையும் தன்னகத்தே சுமந்து வெளிவருகின்றது. அந்தவகையில் பெறுமதியானதும் பேணப்பட வேண்டியதுமான எழுத்தாவணமாக இவ்வருடமும் இளங்கதிர் மலரைச் சிறப்பாக வெளியிட முடிந்தமைக்காக முதற்கண் இறைவனுக்கு நன்றி கூறி, தமிழ்ச் சங்கத்தின் பெருந் தலைவர், பெரும் பொருளாளர், கணக்காய்வாளர், தொழில்நுட்ப ஆலோசகர், இதழாசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் மலரைச் செவ்வனே வெளியிட உதவிய அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பா.பசீகரன்,**<br>
**செயலாளர்,**<br>
**தமிழ்ச் சங்கம்,**<br>
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளம்பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

தமிழ்கூறும் நல்லுலகத்திற்குத் தமிழ் இலக்கியக் கர்த்தாக்களையும் கலைஞர்களையும் தமிழ்ப் பேராசான்களையும் உருவாக்கி அளித்த பெருமை முதுபெரும் முதன்மைச் சங்கமாகிய பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்திற்கே உரித்தானது. பேராசான்கள் எல்லாம் அலங்கரித்த, சேவைபுரிந்த தமிழ்ச்சங்கத்தில் 2016ம் ஆண்டின் இளம் பொருளாளராக இருந்து நானும் பணியாற்றக்கிடைத்த பெரும்பேற்றை எண்ணி இறைவனுக்கும் தமிழ்த்தாய்க்கும் ஒருங்கே என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கமானது பல்வேறு இடர்களுக்கும் சோதனைகளுக்கு மத்தியிலும் தன்மகத்தான பணிகளில் ஒரு மைல்கல்லாக 'இளங்கதிர்' இதழினை வெளியிட்டு வந்திருக்கின்றது. அந்த வரலாற்று வழமையின் அடிப்படையில் இந்த ஆண்டும் ஆற்றல்மிகு ஆக்கங்களைத் தாங்கி சிறந்த மலராக 'இளங்கதிர்' வெளிவருவது கண்டு நானும் பெருமகிழ்வடைகின்றேன். 1926ம் ஆண்டு முதல் பல்வேறு விழாக்களை நடாத்திவரும் தமிழ்ச் சங்கமானது இவ்வாண்டும் பல நிகழ்வுகளைத் திறம்பட நடாத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக 'இளங்கதிர்' நூல் வெளியீடும் இடம்பெறுகின்றது. 'இளங்கதிர்' சிறப்புடன் வெளிவர உதவிய எல்லாம் வல்ல இறைவனுக்கும் மற்றும் அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

**நி.ஜனலக்ஷன்,**
**இளம்பொருளாளர்,**
**தமிழ்ச் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இளங்கதிர் ஒளியால் இவ்வுலகு தழைக்கும்"



வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

இலங்கைத்தீவின் பல்கலைக்கழகங்களுள் பல்லின, மத, மொழி, கலாசாரங்களையும் விழுமியங்களையும் பண்பாடுகளையும் கொண்ட மாணவர்கள் செறிந்திருந்து, ஒற்றுமையாய் இணைந்து அறிவுவிருத்தி செய்யும் களமே பேராதனைப் பல்கலைக்கழகமாகும். ஏனைய சமூகங்களின் கலாசார செயற்பாடுகளைப் புரிந்தும் தமக்குரிய கலாசாரத்தைப் பேணி, வளர்த்தும் வருகின்றமையானது பேராதனைப் பல்கலைக்கழகச் சமூகத்தின் சிறப்பியல்பாகும்.

"தமிழ்மொழியையும் தமிழர் பண்பாட்டையும் தமிழ்ச் சமூகத்தையும் வளர்ப்பதற்காகவும் எம்மோடு தொடர்புடைய ஏனைய பண்பாடுகளைக் கற்றறிந்து கொள்வதற்காகவும் கடந்த நூற்றாண்டில் நிறுவப்பட்டதே பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கமாகும்." என்பது ஆய்வறிஞர்களின் வரலாற்றுப் பதிவாகும். அதனை இன்றுவரை தமிழ்ச் சங்கம் மரபு சிதையாமலும் உயிர்ப்புக் குன்றாமலும் வளர்த்து வருகின்றது. அந்த வெளிப்பாட்டின் ஆவணமே இளங்கதிர் இதழ்களின் வெளியீடுகளாகும்.

இளங்கதிர் சஞ்சிகையானது, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழை வளர்க்கவும் தமிழியலின் ஆழங்களையும் அகலங்களையும் ஆராய்ந்திடவும் கலைத்திறனை வெளிக்கொணர்வதற்கும் சிறந்த களம் அமைத்திருக்கின்றது. அவ்வகையில், தமிழ்ச் சங்கத்தின் 90வது அகவை கொண்டாடப்படும் இவ்வருடமும் முத்தமிழினை அறிவியலிலும் கணினியியலிலும் வளம்பொருந்திய இயங்குதமிழாக்கி இளங்கதிரின் 44வது இதழினை உங்கள் கரங்களில் மலரச்செய்வதில் பேருவகை அடைகிறோம்.

**தமிழ்ச் சங்கமும் இளங்கதிரும்.**

இலங்கைப் பல்கலைக்கழகம் (1942) ஆரம்பிப்பதற்கு முன்பே இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் (1923), 1926ம் ஆண்டு புகழ் பூத்த கணிதப் பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் தலைமையில் தமிழ்ச் சங்கமானது உருவாக்கப்பட்டது. தொடர்ந்து 1948ம் ஆண்டு பேராசிரியர். க.கணபதிபிள்ளையின் உழைப்பால் காகிதத்தில் செய்த ஆயுதமாக முதலாவது இளங்கதிர் த.சண்முகசுந்தரம் அவர்களை இதழாசிரியராகக் கொண்டு எழுந்தது. தொழிநுட்ப புரட்சியில் வேகமாக வளர்ந்து வரும் வலைப்பின்னல்களும் விஞ்ஞான விந்தைகளும் புவியினை சிறைப்பிடித்துள்ள நிலையில் தமிழ்ச் சங்கத்தோடு இளங்கதிரும் இணைந்து உலகையும் அதன் பன்முக வளர்ச்சியையும் செவ்வனே புரிந்து, எதிர்கால முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் வேண்டிய அறிவையும் ஆற்றலையும் உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகத் திருவிழா**

இயலுக்கும் இசைக்கும் இல்லாத எளிமையும் கவர்ச்சியும் நாடகத்திற்கு உண்டு. வாழ்வின் ஒரு பிரதான நிகழ்ச்சியை எடுத்து அந்நிகழ்ச்சியில் நிகழும் தவறைத் திருத்தும் நோக்கத்துடன் நாடகக் கலையை நாடக விழாவாக ஆரம்பத்திலிருந்தே அரங்கேற்றி வளர்த்துவருகின்றது எமது தமிழ்ச் சங்கம். அதன் தொடர்ச்சியாகவே இவ்வருடமும் நாடக விழா அரங்கேறியது. இம்முறை நடைபெற்ற நாடகங்களின் கருத்துரையை இணைக்க முடியாவிடினும் வெற்றிபெற்ற நாடகங்களின் விபரங்களை இவ்விதழில் இணைத்துள்ளோம். இனிவரும் காலங்களில் இதழாசிரியர்கள் நாடக கருத்துரைகளை இளங்கதிர் இதழ்களில் இணைப்பதானது தமிழ்ச் சங்கத்தின் நாடகப் பாரம்பரியத்தையும் வளர்ச்சிப் போக்கினையும் வரலாறாகப் பதிக்கும் சேவையாக இருக்கும்.

**ஓவியக்கலை**

கலைகளுள் ஓவியக்கலைக்கெனத் தனித்துவமானதோர் இடம் உண்டு. இளங்கதிரோடு ஓவியமானது அட்டைப்படமாகவும் ஆக்கமாகவும் நீண்டகாலமாக இணைந்து வந்துள்ளது. தமிழ்ச் சங்கத்தின் 1992-1993ம் காலப்பகுதியில் வெளிவந்த 27வது இளங்கதிர் இதழில் அவ்வாண்டுச் செயற்குழு நடாத்திய கார்டூன் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட மூன்று கார்டூன் ஓவியங்கள் முதன்முதலாக அச்சுப் பதிக்கப்பட்டன. அவை அச்சமகால எரியும் பிரச்சினைகளைத் துல்லியமாகப் பிரதிபலித்திருந்தன (காலக்கண்ணாடி – பேராசிரியர் க. அருணாசலம்). இந்நிலையில் ஓவியக்கலையினை மாணவர் மத்தியில் வளர்ச்சியடையச் செய்ய இவ்விதழிலும் சில ஓவியக்கீற்றுக்களை இணைத்து வெளியிட்டுள்ளோம். எதிர்வரும் காலங்களிலும் இளங்கதிரில் ஓவியங்களை இணைக்க இதழாசிரியர்கள் முயற்சிக்க வேண்டும்.

**கவிதை நூல் வெளியீடு**

எமது தமிழ்ச் சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றான "எமது மாணவர்களின் கலைத்திறனை வெளிக்காட்டலும் ஊக்கப்படுத்தலும்" என்பதற்கு இணங்க கடந்த சில வருடங்களுக்குப் பிறகு மீண்டும் இவ்வருடம் ஒரு படைப்பையும் படைப்பாளரையும் அறிமுகம் செய்ததில் பெருமிதம் கொள்கின்றோம். விஞ்ஞான பீட மாணவன் நா.திருச்செந்தூரன் (மூன்றாம் வருடம்) எழுதிய "**யாதுமாகி**" என்ற கவிதை நூல் தமிழ்ச் சங்கத்தினால் வெளியிடப்பட்டது. இவ்வாறான படைப்புகளின் வெளிப்பாடுகள் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் இலக்கிய ரீதியிலான ஆற்றலை வெளிக்காட்டுவதோடு அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு தொண்டுசெய்வதையும் பறைசாற்றுகின்றது.

**இளங்கதிரின் சிறப்பியல் பண்பு**

"இளங்கதிரின் ஒவ்வொரு இதழும் அவ்வப்போதைய சூழ்நிலைகளையும் வரலாற்றுப் போக்குகளையும் பிரதிபலித்து நின்று அவற்றின் தராதரங்களை அலசுவதாக அமைந்துள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் வரலாற்றையும், அதன் வளர்ச்சியையும் செயற்பாடுகளையும், சாதனைகளையும் அதன் வளர்ச்சிப்பாதையில் ஏற்பட்டுள்ள இடையூறுகளையும், அதற்கான காரணங்களையும் தக்க முறையில் அவ்வப்போது பதிந்து வைத்துள்ளமை இளங்கதிர் இதழ்களின் தனிச் சிறப்பாகும்." மேலும் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளர்களுக்கும் அறிவைத் தேடுபவர்களுக்கும் இளங்கதிர் தகவல் களஞ்சியமாக உதவி செய்கின்றது.

**தொகுப்பு முயற்சிகள்**

இளங்கதிரில் தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், வரலாறு, புவியியல், அரசறிவியல், மெய்யியல், கல்வியியல், பொருளியல், மருத்துவம், பொறியியல், சமயம், பண்பாடு, ஓவியம், சிற்பம், நடனம் போன்ற பல்துறை சார்ந்த கட்டுரைகளும், படைப்பிலக்கியங்களும் (சிறுகதைகள், கவிதைகள்) அதிகளவாக இடம்பெற்றுள்ளன. இளங்கதிர் இதழ்களில் உறைந்து கிடக்கின்ற இவற்றை துறைவாரியாகத் தொகுக்க வேண்டும். இவ்வாறு தொகுப்பாகும் நூல்கள் இலக்கிய உலகில் அனைவருக்கும் பெரும்பயன் நல்கும்.

**இதழ்க்கட்டமைப்பு**

இளங்கதிரின் 44ஆவது இதழாக வெளிவரும் இவ்விதழானது வாழ்த்தியல், கட்டுரையியல், படைப்பியல், பதிவியல் எனும் நான்கு இயல்களைக் கொண்டமைந்துள்ளது. இந்நான்கு இயல்களும் தமிழியலினதும் தமிழ்ச் சங்கத்தினதும் வளர்ச்சியையும் சிறப்பையும் எழுத்துருவாக்கியுள்ளது. வாழ்த்தியலில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதல் தமிழ்ச் சங்கச் செயற்குழுவின் இளம் பொருளாளர் வரையிலான வாழ்த்துரைகளும் கட்டுரையியலில் பல்துறைசார் கட்டுரைகளும் படைப்பியலில் கலைகளினால் சமூகத்தையும் மனித எண்ணங்களை மாற்றியமைக்கும் ஈடுபாடு கொண்ட படைப்பாளர்களின் சிறுகதைகளும் கவிதைகளும் வரைகலையும் இடம்பெற்றுள்ளன. பதிவியலில் சங்கச் சான்றோர் விருது, எழுத்தாளர் விருது பெற்றவர்களுடைய விபரங்கள், இளங்கதிரின் அஞ்சலிகள், சங்கச் செயற்பாடுகள், தமிழ்ச் சங்கப் போட்டி முடிவுகள், 1948ம் ஆண்டிலிருந்து இன்றுவரையுள்ள தமிழ்ச் சங்க செயற்குழுக்களின் விபரத்திரட்டு போன்றவற்றையும் முதன் முதலாக கடந்தகால தமிழச் சங்கப் பெருந்தலைவர்களின் புகைப்படங்களை இணைத்துள்ளதையும் காணலாம்.

**இளங்கதிரின் நன்றிகள்**

இளங்கதிர் சிறந்த முறையில் வெளிவருவதற்கு எமது எண்ணங்களைச் சீர்செய்து, எம்மை ஊக்கப்படுத்தியதுடன் பல்வேறு வகையில் ஆலோசனைகள் தந்து வழிகாட்டித் துணைபுரிந்த தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் அவர்களுக்கு நன்றிகள். மாணவர்களின் ஆக்கங்களைத் தெரிவு செய்வதற்கு உதவிபுரிந்த உதவி விரிவுரையாளர் செ.பிறைசில் அவர்களுக்கும் இளங்கதிரின் தரத்தைப் பேண ஆலோசனைகள் தந்து வழிகாட்டிய உதவி விரிவுரையாளர் பா.சுமன், விரிவுரையாளர்கள் பெ.சரவணகுமார், எம்.எம்.ஜெயசீலன் அவர்களுக்கும் நன்றிகள். தமிழ்ச் சங்கத்தால் நடாத்தப்பட்ட நாடகப்போட்டிக்கு நடுவர்களாகக் கடமையாற்றியவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். மேலும் இளங்கதிர் நல்ல முறையில் வெளிவர உதவிய விளம்பரதாரர்களுக்கும் நன்கொடையாளர்களுக்கும் அச்சுத்துறையினருக்கும் மற்றும் பல்வேறு வழியில் உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

இவ்வருடம் பீடங்களுக்கிடையிலான பருவகாலக் கல்விச்செயற்பாட்டு நேரங்களின் ஒருமித்த தன்மையின்மை, நிதிப் பற்றாக்குறை, பிரத்தியேகமான விடுமுறைகள் போன்ற பல காரணங்களினால் சங்கத்தினுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்வதில் காலதாமதம் ஏற்பட்டது.

**நிறைவாக வாசகர்களே,**

இளங்கதிர் இதழினை இதழியல் பண்புகளின் வரையறைக்குட்படுத்தி பல்சுவையுடனும் அதேவேளை பல்வேறு ஆளுமைகளுக்கும் இடமளித்து சுபீட்சமான நல்லுறவைப் பேணவேண்டியது இதழாசிரியர்கள் என்றவகையில் எமது பொறுப்பாகும். எமக்குக் கிடைக்கப்பெற்ற ஆக்கங்களைச் சேகரித்து அவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றைத் திருத்தியமைத்து இதழாக்கியுள்ளோம். இளங்கதிரிற்காக மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ஆக்கங்கள் கணிசமாக குறைவடைகின்ற போதிலும் பல வழிகளில் முயற்சித்து அவற்றைப் பெறவேண்டிய கடமை இதழாசிரியர்களுக்குரியதாகும். இளங்கதிர் வெறுமனே எமது தமிழ்ச் சங்க வரலாற்றைப் பாதுகாக்கும் ஆவணம் மட்டுமல்ல. எமது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்க் கல்விச் சமூகத்தின் அறிவையும், ஆளுமைகளையும் வெளிச்சமூகத்திற்கு எழுத்துருவில் கொண்டுசேர்க்கின்ற ஊடகமாகும். இது வெளிக்கல்விச் சமூகத்தினரிடையே எமது பல்கலைக்கழக மாணவர்களின் அறிவினை வெளிக்காட்டவும் மதிப்பிடவும் உதவுகின்றது. எனவே, அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் பாதுகாத்துப் பல்துறைசார் சுவையோடு தரமான இதழ்களாக வெளிக்கொணரவும் மாணவர்கள் பங்களிக்கவேண்டும். “குற்றம் களைந்து குறை பெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்” ஆகையால், இது மாணவர்களின் முயற்சி என்பதனைக் கருத்திற் கொள்ளுங்கள். ஏதாவது தவறுகள் காணப்படலாம். இவ்விதழைச் சிறப்புற வெளியிடவேண்டும் என்ற எண்ணமே உள்ளத்தில் உறைகிடந்தது. கற்றல் செயற்பாடுகளின் மத்தியில் கலை முயற்சிகளிலும் ஈடுபடக்கிடைத்த பெரும்பேற்றை எண்ணி முடிந்தளவு சிறப்பாக இவ்விதழைச் செதுக்கியுள்ளோம். இவ்விதழில் காணப்படும் ஆக்கங்களுக்கு அவற்றை ஆக்கியோரே பொறுப்புடையவர்கள். இதழில் இடம்பெறும் ஒவ்வொரு ஆக்கங்களும் உங்களுக்குப் பயன்தருவது உறுதி. “தமிழ்மொழியின் மணங்கமழும் தமிழியல் பூக்களைத் தொகுத்துத் தமிழ்த் தாயின் பாதங்களில் சூடித் தலைவணங்குகின்றோம்.”

“தமிழ்த் தாயே எம் உயிருள்ள வரை உன் கழல் தொழுவோம்”

சி. ஸ்ரீகாந்த் – த. அருள்விழி,
இதழாசிரியர்கள்,
தமிழ்ச் சங்கம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## 1. வாழ்த்தியல்


1. Message from the - Vice chancellor v
2. பெருந்தலைவரின் வாழ்த்துச் செய்தி vi
3. பெரும்பொருளாளரின் வாழ்த்துச் செய்தி vii
4. தலைவரின் வாழ்த்துச் செய்தி viii
5. செயலாளரின் வாழ்த்துச் செய்தி ix
6. இளம்பொருளாளரின் வாழ்த்துச் செய்தி x
7. இதழாசிரியர்கள் உள்ளத்திலிருந்து... xi


## 2. கட்டுரையியல்


1. பெரியபுராணம் காட்டும் இருவேறு ஆளுமைகள் 01
   பேராசிரியர் துரை. மனோகரன்
2. சிறுபான்மையினரும் சுயநிர்ணய உரிமையும் : சர்வதேச சமூகத்தின் தவறான புரிதல் பற்றிய ஓர் ஆய்வு 09
   கலாநிதி ச.பாஸ்கரன்
3. பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீட யாழ் மாணவர்களின் செயற்திறன் 15
   கலாநிதி ரொஷான் ராகல், செல்வி அருட்சுதா சுப்பிரமணியம்.
4. இளங்கதிரிலிருந்து இனி... 20
   கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்
5. இலங்கையில் அரசியல் அமைப்பு உருவாக்கச் செயன்முறை குறித்த சில அவதானிப்புகள் 24
   விரிவுரையாளர் இரா.ரமேஷ்
6. சந்திரலேகா கிங்ஸ்லியின் கவிதைகள் - சில அறிமுகக் குறிப்புகள் 31
   பெருமாள் சரவணகுமார்
7. ஆண் - ஆண்மை - பெண்ணியம் 39
   விரிவுரையாளர் எம்.எம். ஜெயசீலன்
8. யாழ்ப்பாண இராச்சியம் மீதான போர்த்துக்கேயரது மேலாதிக்கமும் சுதேச ஆட்சியாளர்களது எதிர் நடவடிக்கைகளும் - ஒரு வரலாற்று நோக்கு 45
   விரிவுரையாளர் க.ஜெயதீஸ்வரன்
9. இலங்கையில் மாகாணசபை முறைமையும் பிரச்சினைகளும் 56
   விரிவுரையாளர் திரு.ந.சிவகுமார்
10. அனல் மின் உற்பத்தி நிலையத்தினால் ஏற்படுத்தப்படும் சூழல் மற்றும் விவசாய நடவடிக்கையின் மீதான தாக்கங்கள் 63
   உதவி விரிவுரையாளர் எஸ்.பிரியதர்சினி, விரிவுரையாளர் எஸ். விஜேசந்திரன்
11. தி.த.சரவணமுத்துப்பிள்ளை : 'தத்தைவிடுதூது' வழியான புரிதல் 71
   உதவி விரிவுரையாளர் பாஸ்கரன் சுமன்
12. இளம்பூரண உரைச்செல்வாக்கில் நன்னூல் என்னும் இலக்கண நூல் 79
   உதவி விரிவுரையாளர் எம். வை. எ.ஃப். ரிஸ்மியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஆரம்ப உரைநடையில் கிறிஸ்தவ அறிஞர்களின் பேச்சுவழக்கு நடை 85
உதவி விரிவுரையாளர் செ.பிறைசில்
14. ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் பங்களிப்பு 92
உதவி விரிவுரையாளர் ஜெஸ்மினா ஜெஸீம்
15. ஆனந்தகுமாரசுவாமியும் கலைப்பணியும் ஒரு மெய்யியல் நோக்கு 96
உதவி விரிவுரையாளர் இ.நிரோகரன்
16. இராஜதந்திரம் பற்றிய கண்ணோட்டம் 103
உதவி விரிவுரையாளர் லிண்டா பிரசானி எழிலரசு
17. தமிழர்களின் தனித்தன்மை உறுதிப்படுத்தல்- சோழராட்சி வரலாற்று நோக்கு 111
உதவி விரிவுரையாளர் வ.கபிலன்
18. பெண்களும் சீதனமும் 117
உதவி விரிவுரையாளர் க.கஸ்தூரி
19. உரிமை, கடமை பற்றிய மெய்யியல் - ஒழுக்கவியல் நோக்கு 121
உதவி விரிவுரையாளர் புலேந்திரன் நேசன்

மாணவர் பகுதி

20. இலங்கையில் மருத்துவக் கல்வியைத் தனியார் மயப்படுத்துகை ஒரு நடுநிலை நோக்கு 134
வே.குகதாசன்
21. இலங்கையில் இன முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட நோர்வேயின் மத்தியஸ்த செயற்பாடு தொடர்பான ஒரு நோக்கு 141
ம.சந்திரலேகா
22. விவசாயத்தில் இரசாயன வளமாக்கி மற்றும் கிருமிநாசினிப் பாவனையும் அதன் விளைவுகளும் 149
நா.சுஜீவன்
23. அறுவடை நாவல் (பெண்ணிய நோக்கிலான திறனாய்வு) 157
எம்.எஸ்.ஷப்னா
24. வாய்ச் சுகாதாரமும் வாய்ப் புற்றுநோயும் 162
விபூஷிதா ஜோன்சன்
25. இலங்கையின் காலநிலையில் சூறாவளியின் வகிபங்கு 165
சி.லதீஸ்குமார்
26. இலங்கையில் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இந்து சமயத்தின் நிலைமை 169
என்.டி.இர்ஷானா
27. வன்னிப் பண்பாடு - அறிந்ததும் அறியாததும் 175
சிவசோதி கேசவன்
28. இயன் மருத்துவத்தின் மகத்துவமும் இடுப்பு வலி, மூட்டு வாதம் குறித்த சில பதிவுகளும் 186
க.ஹரன்ராஜ்
29. அரச மற்றும் தனியார் கூட்டுறவு **(3P System)** 196
நா.திவ்யா மிஹிராங்கனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. சூழலியல்வாதம் கருத்தும் முக்கியத்துவமும் ஓர் அறிமுகம் — 199
த.கார்த்திகா

31. இலங்கை அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் — 203
அ.லோயலா கப்ரினி

32. பழங்கதை மரபும் சிலப்பதிகார இலக்கிய உருவாக்கமும் — 207
சி. குருபரநாத்

32. சிறுநீரகநோய் மற்றும் இரத்தச்சுத்திகரிப்பு முறை — 213
யோ.கிருத்திகன்.


## 3. படைப்பியல்


1. கண்கள் கட்டப்பட்டவனுக்கு முன்னே — 08
விரிவுரையாளர் திருமதி ஆன்யாழினி.எஸ்.

**மாணவர் பகுதி**

**சிறுகதை**

1. யாருக்குச் சொந்தம் — 12
பிரியந்தினி சத்தியசீலன்

2. விடியாத இரவுகள் — 193
கா.சுகேசன்

**கவிதைகள்**

1. தூரமில்லை - தே.கஜீபன் — 5[illegible]
2. பள்ளி நினைவுகள் - நா.திருச்செந்தூரன் — 7[illegible]
3. பிரிவு - ச.பிரியந்தினி — 1[illegible]
4. இலையுதிர்காலம் - நர்மி — 1[illegible]
5. (அ)வித்தை - இ.ஜெயந்தன் — 1[illegible]
6. அம்மா நீ! - வி.அனுஜன் — 1[illegible]
7. வியர்வையின் விதியினமே - சி.ஸ்ரீகாந்த் — 1[illegible]
8. நான் (பல்)கலையில் - ஷாலுஜா இலங்கேஸ்வரன் — 1[illegible]

**வரைகலை**

1. ரா.டிலீசன். — 2[illegible]


## 4. பதிவியல்


4.1 சங்கக் கௌரவம் பெறும் பெரியோர்கள்
1. சங்கச் சான்றோர் விருது — 217
2. எழுத்தாளர் கௌரவம் — 220
3. இளங்கதிரின் அஞ்சலிகள் — 222

4.2 தமிழ்ச் சங்கப் போட்டி முடிவுகள் — 223
4.3 செயலாளர் அறிக்கை — 224
4.4 சங்க செயற்பாடுகளின் நிழற் பதிவுகள் — 227
4.5 செயற்குழு 2015 - 2016 — 228
4.6 தமிழ்ச் சங்கமும் அதன் கடந்தகாலப் பெருந்தலைவர்களும் — 231
4.7 1948 முதல் 2016 வரையிலான தமிழ்ச் சங்க செயற்குழுக்களின் விபரத்திரட்டு — 232
4.8 நன்றியுரை — 235




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கப் பொறி விளக்கம்

வட்ட வடிவமாக அமைந்துள்ள செந்தாமரை மலர்
உருவுக்குள் கண்ணும், யாழும், ஏடும்,
பொறிக்கப்பட்டுள்ளன. 'ஏடு' – கல்வியையும்,
'யாழ்' – இசையையும், 'சங்கு வடிவினதாக
அமைந்துள்ள கண்' – அறிவையும் அறிவின்
தெளிவையும் குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம் காட்டும் இருவேறு ஆளுமைகள்

## (கண்ணப்பநாயனார் புராணம் – திருநாளைப்போவார்நாயனார் புராணம் அடிப்படையில் ஒரு நோக்கு)

பேராசிரியர் துரை. மனோகரன்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



சோழர்காலத்தில் எழுந்த சேக்கிழாரின் பெரியபுராணம் தமிழ் இலக்கிய உலகில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய இலக்கியங்களில் ஒன்றாக விளங்குகிறது. சிலப்பதிகாரத்தை அடுத்து, தமிழ்நாடு முழுவதையும் உள்ளடக்கிய காவியமாக அது திகழ்கிறது. சுந்தரர் தமது திருத்தொண்டத்தொகையில் தொகைப்படுத்திய அறுபத்துமூன்று திருத்தொண்டர்களைப் பற்றி நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடியுள்ளார். இவை இரண்டையும் பயன்படுத்தி, மேலும் அவர்களது வாழ்க்கை வரலாற்று அம்சங்களையும் சேகரித்து, சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரில் பெரியபுராணமாக விரித்துள்ளார்.

பெரியபுராணத்தில் இடம்பெறும் பல்வேறு நாயன்மார்கள் மத்தியில், இருவர் வெவ்வேறு வகைகளில் தனித்துவமாக விளங்குகின்றனர். அவர்களில் கண்ணப்பர் வேடர் சமூகத்தையும், திருநாளைப்போவார் புலையர் சமூகத்தையும் சேர்ந்தவர்கள். தமக்கெனத் தனித்துவ இயல்புகளையும் கொண்டவர்கள். தமது பக்திநெறியைத் தத்தமது இயல்புகளுக்கும், விருப்புகளுக்கும் ஏற்ப அமைத்துக்கொண்டவர்கள். எவற்றுக்கும் கட்டுப்படாத தூய அன்பு ஒன்றே கண்ணப்பரின் பக்திநெறியாக அமைந்தது. சமூக நியதிகளுக்கு ஏற்ப, தமது பக்தியை வெளிப்படுத்தத் திணறும் ஒருவராகவும், ஈற்றில் இறையருளால் தமது பக்திநெறியில் வெற்றிபெற்றவராகவும் திருநாளைப்போவார் சித்திரிக்கப்படுகிறார்.

சுந்தரர் கண்ணப்பரைப் பற்றித் தமது திருத்தொண்டத்தொகையில் *"தலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்"* என்று பாட, நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில் பின்வருமாறு விரிவாக அவரைப்பற்றிக் குறிப்பிடுகிறார்:

*"நிலத்திற் திகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மேல்*
*நலத்திற் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுண்ணடுங்கி*
*வலத்திற் கடுங்கணை யால்தன் மலர்க்கண் ணிடந்தப்பினான்*
*குலத்திற் கிராதனங் கண்ணப்ப னாமென்று கூறுவரே."*

அதுபோன்று, சுந்தரர் திருநாளைப்போவார் பற்றித் திருத்தொண்டத்தொகையில் *"செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்"* என்று பாட, நம்பியாண்டார் நம்பி விரிவாகத் திருத்தொண்டர் திருவந்தாதியில் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நாவார் புகழ்த் தில்லை யம்பலத் தானருள் பெற்றுநாளைப்*
*போவா னவனாம் புறத்திருத் தொண்டன்றன் புன்புலை போய்*
*மூவா யிரவர்கை கூப்ப முனியா யவன்பதிதான்*
*மாவார் பொழில்திகழ் ஆதனூ ரென்பரிம் மண்டலத்தே."*

சுந்தரரும், நம்பியாண்டார் நம்பியும் இவ்வாறு இவ்விருவரையும் பற்றித் தெரிவித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, சேக்கிழார் தாம் தேடிச் சேகரித்த செய்திகளையும் இணைத்து, இவ்விருவரின் புராணங்களையும் பாடியுள்ளார்.

சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் இருவரதும் தனித்துவ ஆளுமைகளைத் தமக்கேயுரிய படைப்பாளுமைக்கேற்பச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். சிவபிரான்மீது அவர்களுக்கு ஏற்பட்ட பக்தி உணர்வு, அதை அவர்கள் தத்தம் பாணியில் செயல்படுத்திய முறை, அவர்கள் பெற்ற பெரும்பேறு முதலியன சேக்கிழார் கைவண்ணத்தில் சிறப்பாக வெளியீடு பெறுகின்றன. அவரவர்கள் பிறந்து வளர்ந்த சூழல், அவரவரது இயல்புகள் சேக்கிழாரால் தத்ரூபமாகக் காட்டப்படும் முறை, அவரின் படைப்பாளுமையைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

கண்ணப்பநாயனார் புராணம் 181 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. திருநாளைப்போவார் நாயனார் புராணம் 37 பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. சேக்கிழார் ஒவ்வொரு நாயனாரின் சரிதையையும் தொடங்குவதற்கு முன், அதற்கு முந்திய நாயனாரின் சரிதையின் இறுதிப்பகுதியிலேயே பின்வரும் நாயனாரின் சிறப்புப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லிச் செல்வது வழக்கம். அவ்வகையில், கண்ணப்பநாயனார் புராணத்துக்கு முந்திய ஏனாதிநாத நாயனார் புராணத்தின் இறுதியில் *"உம்பிரான் காளத்தி யுத்தமர்க்குக் கண்ணப்ப நம்பெருமான் செய்தபணி நாந்தெரிந்த படியுரைப்பாம்"* என்று கண்ணப்பர் பற்றிக் குறிப்பிடுகிறார். உருத்திரபசுபதி நாயனார் புராணத்தின் இறுதியில் *"எயிலு டைத்தில்லை யெல்லையில் நாளைப்போ வாராஞ் செயலு டைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை மொழிவாம்"* எனத் திருநாளைப்போவார் பற்றிக் கூறுகின்றார். இவ்வாறு குறிப்பிடுவதனால், பின்னால் சொல்லப்படப்போகின்ற நாயனாரின் பொதுவான ஆளுமையை வாசகர் முன்னரேயே புரிந்துகொள்வதற்குரிய வாய்ப்பினைச் சேக்கிழார் வழங்குகிறார்.

சேக்கிழார் நாயன்மார்களின் சரிதைகளைக் கூறத் தொடங்கும்போது, அவர்கள் பிறந்து வளர்ந்த பின்னணியைத் தத்ரூபமாகக் காட்ட முனைவது வழக்கம். அவ்வகையில், இருவேறு நாயன்மார்களின் சரிதைகளின் தொடக்கத்தில் இருவரினதும் வாழிடங்களையும் விபரமாகக் காட்டிச்செல்கிறார். அவரவருக்குரிய நாட்டினையும், ஊரினையும் முதலில் விபரிப்பது அவரின் வழக்கம். கண்ணப்பநாயனார் புராணத்தில், அவரின் பிறந்த நாடும், ஊரும் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன:

*"மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்*
*காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்ப*
*நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற*
*பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"இத்திரு நாடு தன்னி லிவர்திருப் பதியா தென்னில்*
*நித்தில வருவிச் சார நீள்வரை சூழ்ந்த பாங்கர்*
*மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்றொடர் வேலி கோலி*
*யொத்தபே ரரணஞ் சூழ்ந்த முதுபதி யுடுப்பூ ராகும்."*

இதேபோன்று, திருநாளைப்போவார் நாயனார் புராணத்திலும் அவர் பிறந்த ஊர் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

*"பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகுந்*
*திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்காத்தான்*
*முகந்துதர இருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்*
*அகன்பணைனீர் நன்னாட்டு மேற்கானாட் டாதனூர்."*

கண்ணப்பநாயனாரின் இயற்பெயர் திண்ணன். திருநாளைப்போவாரின் இயற்பெயர் நந்தன். இருவரும் வளர்ந்த வெவ்வேறு வாழ்க்கை முறைகளையும் சேக்கிழார் காட்டிச்செல்கிறார். முன்னவர் வேடர்சேரியிலும், மற்றவர் புலைப்பாடியிலும் வளர்ந்தவர்கள். இருவரும் வளர்ந்த இடங்களையும் சேக்கிழார் அழகாகச் சித்திரித்துள்ளார். கண்ணப்பநாயனார் புராணத்தில் வேடர் சமூகத்தின் வாழ்வியல் பின்னணி பின்வருமாறு காட்டப்படுகிறது:

*"ஆறலைத் துண்ணும் வேட ரயற்புலங் கவர்ந்து கொண்ட*
*வேறுபல் லுருவின் மிக்கு விரைவுமா நிரைக ளன்றி*
*யேறுடை வானந் தன்னி லிடிக்குர லெழிலி யோடு*
*மாறுகொண் முழக்கங் கட்டு மதக்கைமா நிரைக ளெங்கும்."*

*"ஐவன வடிசில் வெவ்வே றமைந்தன புற்பாற் சொன்றி*
*மொய்வரைத் தினைமென் சோறு மூங்கில்வன் பதங்கண் மற்றும்*
*கைவினை யெயின ராக்கிக் கலந்தவூன் கிழங்கு துன்றச்*
*செய்வரை யுயர்ப்ப வெங்குங் கலந்தனர் சினவில் வேடர்."*

*"செந்தினை யிடியுந் தேனு மருந்துவார் தேனிற் றோய்த்து*
*வெந்தவூ னயில்வார் வேரி விளங்கனிக் கவளங் கொள்வார்*
*நந்திய ஈய லுண்டி நசையொடு மிசைவார் வெவ்வே*
*றந்தமி லுணவின் மேலோ ராயின ரளவிலார்கள்."*

*"அயல்வரைப் புலத்தின் வந்தா ரருங்குடி யிருப்பி லுள்ளா*
*ரியல்வகை யுணவி லார்ந்த வெயிற்றிய ரெயின ரெல்லா*
*முயர்கதி ருச்சி நீங்க வொழிவில்பன் னறவு மாந்தி*
*மயலுறு களிப்பி னீடி வரிசிலை விழவு கொள்வார்."*

அத்தோடு, *"தாளில் வாழ் செருப்பர் தோல் தழைத்த நீடு தானையார் வாளியோடு சாபமேவு கையர் வெய்ய வன்கணார்"* என வேடரின் இயல்புகள் மேலும் சித்திரிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று, திருநாளைப்போவார் நாயனார் புராணத்திலும் புலைப்பாடிச் சூழலைச் சேக்கிழார் திறம்படச் சித்திரித்துள்ளார்.

*"மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயன்மருங்கு பெருங்குலையிற்*
*சுற்றம்விரும் பியகிழமைத் தொழிலுழவர் கிளைதுவன்றிப்*
*பற்றியபைங் கொடிச்சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்*
*புற்குரம்பைச் சிற்றில்பல நிலைத்துளதோர் புலைப்பாடி."*

*"வன்சிறுதோல் மிசையுழத்தி மகவுறக்கு நிழல்மருதுந்*
*தன்சினைமென் பெடையொடுங்குந் தடங்குழிசிப் புதைநீழல்*
*மென்சினைய வஞ்சிகளும் விசிப்பறைதூங் கியமாவும்*
*புன்தலைநாய்ப் புனிற்றுமுழைப் புடைத்தெங்கு முடைத்தெங்கும்."*

இதுபோன்று பல பாடல்களில் புலைப்பாடி வர்ணனை இடம்பெற்றுள்ளது. திண்ணனின் இளம்பராயச் செயல்பாடுகள் பற்றிக் குறிப்பிடும்போது, சேக்கிழார் உணர்வுபூர்வமாக அவரது பெருமையைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

*"பொற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு கடன்முன் செய்த*
*விற்றொழிற் களத்தில் நண்ணி விதிமுறை வணங்கி மேவு*
*மற்றைநாள் தொடங்கி நாளு மடற்சிலை யாண்மை முற்றக்*
*கற்றனன் என்னை யாளுங் கானவர்க் கரிய சிங்கம்."*

பிறிதொரு பாடலிலும் திண்ணனின் வளர்ச்சியைக் காட்டுமுகமாகச் சேக்கிழார் அவரைப் பின்வருமாறு புகழ்ந்துரைக்கிறார்: *"கலைவளர் திங்க ளேபோல் எண்ணிரண் டாண்டின் செவ்வி யெய்தினா ரெல்லை யில்லாப் புண்ணியந் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார்."*

நந்தனின் இளம்பருவச் செயல்பாடுகளைச் சேக்கிழார் பிறிதொருவகையாகக் காட்டுகிறார். அவர் பிறந்து உணர்வு தொடங்கிய பின்னர், இறைவனுக்கு ஆட்படத் தொடங்கினார் எனக் குறிப்பிட்டுச் செல்கிறார்.

*"பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணில் பெருந்தகைபாற்*
*சிறந்தபெருங் காதலினாற் செம்மைபுரி சிந்தையராய்*
*மறந்தும்அயல் நினைவின்றிவருபிறப்பி வழிவந்த*
*அறம்புரிகொள் கையராயே அடித்தொண்டின் நெறிநின்றார்."*

ஊரில் விடப்படும் புலைமைத் தொழிலுக்குரிய மானியத்தைத் தமது உணவுக்கு ஆதாரமாகக் கொண்டு, தமது சமூகச்சார்பான தொழில் செய்வார். திருத்தொண்டிலும் உயர்ந்துநின்றார். சிவபிரானின் கோயில்கள் தோறும் பேரிகை முதலான முக்கருவிகளுக்கும் போர்வைத்தோல், விசிவார் போன்றவையும், வீணை, யாழ் ஆகியவற்றுக்கு ஏற்றவகையில் பொருத்தமான தந்திரியும், இறைவனுக்குரிய அர்ச்சனைகளுக்குக் கோரோசனை முதலிய பொருள்களும் வழங்குவார்.

திருப்புன்கூர் கோயிலில் இறைவனை நேரே வணங்க விரும்பிய நந்தனுக்கு, இறைவன் இடபத்தை விலக்கி, தமது காட்சியை வெளிப்படுத்தினார் என்று சேக்கிழார் தெரிவிக்கிறார். தற்போதும் திருப்புன்கூர்க் கோயிலில் இடபம் விலகியிருக்கும் நிலையே காணப்படுகிறது என்று கூறப்படுகிறது. அக்கோயிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம் இல்லாத நிலையை உணர்ந்த நந்தன், கோயிலின் பின்புறமாகக் குளம் ஒன்றைத் தோண்டினார் என்றும் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

திருக்காளத்தி கோயில்புறத்தை அடைந்ததும், திண்ணனாரில் ஏற்பட்ட மாற்றங்களைச் சேக்கிழார் அழகாகச் சித்திரித்துச் செல்கிறார். பின்வரும் பாடல்கள் அதனைத் தெளிவாகக் காட்டுகின்றன:

*"ஆவதென் இதனைக்கண்டிங் கணைதொறும் மென்மேற் பாரம்*
*போவதொன் றுளது போலும் ஆசையும் பொங்கி மேன்மேன்*
*மேவிய நெஞ்சம் வேறோர் விருப்புற விரையா நிற்கும்*
*தேவரங் கிருப்ப தெங்கே போ'தென்றார் திண்ணனார்தாம்."*

*"திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே*
*அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க மெய்தத்*
*தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்*
*பொங்கிய வொளியின் நீழற் பொருவிலன் புருவ மானார்."*

*"மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள*
*ஏகநா யகரைக் கண்டா ரெழுந்துபே ருவகை அன்பின்*
*வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடு*
*போகமா யோடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார்,*

கண்ணப்பரின் பக்திநிலையைச் சேக்கிழார் புகழ்ந்துரைக்கும் சிறப்பினைப் பின்வரும் பாடல் காட்டுகிறது:

*"சார்வருந் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமுங்*
*கார்வரை அடவி சேர்ந்துங் காணுதற் கரியார் தம்மை*
*ஆர்வமுன் பெருக ஆரா அன்பினில் கண்டு கொண்டே*
*நேர்பெற நோக்கி நின்றார் நீளிருள் நீங்க நின்றார்."*

திண்ணனோடு காட்டுக்கு வந்தவர்களுள் ஒருவனான காடனுக்கு நாணன் கூறுவதாக அமைந்த பகுதி, அவரின் பக்திச் சிறப்பை வெளிப்படுத்துகிறது.

*"அங்கிவன் மலையில் தேவர் தம்மைக்கண் டணைத்துக் கொண்டு*
*வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கான்*
*இங்குமத் தேவர் தின்ன இறைச்சிகொண் டேகப் போந்தான்*
*நங்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க் கென்றான்."*

திருநாளைப்போவார் நாயனார் புராணத்தில், நந்தனார் தில்லைக்குச் சென்று இறைவனை வழிபட விரும்புகிறார். ஆனால், தாம் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்துவிட்டதான தாழ்வுச்சிக்கல் அவரை வாட்டிவதைக்கிறது. இதனைச் சேக்கிழார் பின்வருமாறு காட்டுகிறார்:

*"அன்றிரவு கண்துயிலார் புலர்ந்ததற்பின் அங்கெய்த*
*ஒன்றியணை தருதன்மை யுறுகுலத்தோ டிசைவில்லை*
*என்றிதுவும் எம்பெருமான் ஏவலெனப் போக்கொழிவார்*
*நன்றுமெழுங் காதன்மிக நாளைப்போ வேனென்பார்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை போவதாக அவர் தீர்மானம் எடுத்து நாட்கள் பல கடந்ததன்பின், ஒருவாறு தாம் தீர்மானித்தவாறு தில்லை செல்கிறார். *"நாளைப்போ வேனென்று நாள்கள்செலத் தரியாது பூளைப்பூ வாம்பிறவிப் பிணிப்பொழியப் போவாராய்ப்... பழம்பதியி நின்றும்போய்... தில்லை மருங்கணைவார்"* என்று சேக்கிழார் இதனைத் தெரிவிக்கிறார். தில்லை சென்றடைந்த பின்னரும் நந்தனாரின் தாழ்வுச்சிக்கல் அவரை விடவில்லை என்பதைப் பின்வரும் பாடல் வாயிலாகச் சேக்கிழார் காட்டுகிறார்:

*"செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து*
*பல்குஞ்செந் தீவளர்த்த பயில்வேள்வி யெழும்புகையும்*
*மல்குபெருங் கிடையோது மடங்கள்நெருங் கினவுங்கண்*
*டல்குந்தங் குலநினைந்தே யஞ்சியணைந் திலர்நின்றார்."*

இதனால் நந்தனாருக்கு ஏற்பட்ட தில்லையை அணுகமுடியாத துன்பநிலையைச் சேக்கிழார் பின்வரும் அடிகள் மூலம் வெளிப்படுத்துகிறார்:

*"ஆராத பெருங்காதல் ஒப்பரிதாய் வளர்ந்தோங்க உள்ளுருகிக்*
*கைதொழுதே செப்பரிய திருவெல்லை வலங்கொண்டு செல்கின்றார்."*

*"இன்னல்தரு மிழிபிறவி யிதுதடை என் றேதுயில்வார்."*

கண்ணப்பநாயனார் புராணத்தில் பக்தியில் விளைந்த கண்ணப்பரின் செயல்களைக் காவியகர்த்தா பின்வருமாறு விரிவாகக் காட்டிச்செல்கிறார்:

*"முடிமிசை மலரைக் காலில் வளைத்தபொற் செருப்பான் மாற்றி வாயின்மஞ் சனநீர் தன்னை விளைத்தஅன் புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார்."*

*"கழலுறு பதத்திற் காய்ச்சிப் பல்லினா லதுக்கி நாவிற்*
*பழகிய இனிமை பார்த்துப் படைத்தவிவ் விறைச்சி சால*
*அழகிது நாயனீரே அமுதுசெய் தருளும் என்றார்."*

திண்ணனாரின் அன்பின் திறத்தைச் சேக்கிழார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*"அண்ணலார்க் காம்பரிசு தாஞ்சோதித் தமைப்பதற்குத்*
*திண்ணனார் திருவாயி லமைத்தாரூன் திருவமுது."*

திண்ணனாரின் பக்தியின் பெருமையைக் காட்ட விரும்பிய சேக்கிழார், இறைவன் அவருக்கு ஏற்படுத்திய சோதனைகளைச் சொல்லிச்செல்கிறார். தமது வலது கண்ணில் இரத்தம் வடியச் செய்து இறைவன் சோதித்தபோது, திண்ணனார் தமது கண்களில் ஒன்றை இறைவன் கண்ணில் அப்பினார். மேலும் அவரைச் சோதிக்க விரும்பிய இறைவன், தமது மற்றைய கண்ணிலும் இரத்தம் வடியச் செய்தார். அதைக் கண்டு பதைபதைத்த திண்ணனார், தமது மற்றக் கண்ணையும் பாதிக்கப்பட்ட இறைவன் கண்ணில் அப்ப முயற்சிப்பதைச் சேக்கிழார் பின்வருமாறு காட்டுகிறார்: "எங்கள் காளத்தி யார்க ணொன்று புண்தரு குருதிநிற்க மற்றைக்கண் குருதி பொங்கி மண்டுமற் றிதனுக் கஞ்சேன் மருந்துகை கண்டேன் இன்னும் உண்டொரு கண் அக்கண்ணை இடந்தப்பி ஒழிப்பேன்." இறைவனின் கண்ணில் அப்புவதற்காகத் தமது மற்றக் கண்ணையும் தோண்ட முயற்சித்த திண்ணனாரை இறைவன் தடுத்தாட்கொண்ட செய்தியைச் சேக்கிழார் அருமையாகக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"செங்கண்வெள் விடையின் பாகர் திண்ணனார் தம்மை யாண்ட*
*அங்கணர் திருக்கா ளத்தி அற்புதர் திருக்கை யம்பாற்*
*தங்கண்மு னிடக்குங் கையைத் தடுக்கமுன் றடுக்கு நாக*
*கங்கணர் அமுத வாக்குக் 'கண்ணப்ப நிற்க' என்ற."*

கண்ணப்பரை இறைவன் தடுத்தாட்கொண்டபோது இடம்பெற்ற நிகழ்வுகளைச் சேக்கிழார் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

*"கானவர் பெருமா னார்தங் கண்ணிடந் தப்பும்போது*
*ஊனமு துகந்த ஐய ருற்றுமுன் பிடிக்கும்போது*
*ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலா யுள்ள*
*வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைக ளார்ப்ப."*

இறுதியாக இறைவன் கண்ணப்பருக்கு அருள்செய்தவாற்றையும் சேக்கிழார் அழகாகச் சித்திரிக்கிறார். *"பிரான்திருக் கண்ணில் வந்த ஊறுகண் டஞ்சித் தங்கண் இடந்தப்ப வுதவுங் கையை ஏறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக்கொண் டென்வ லத்தின் மாறிலாய் நிற்க வென்று மன்னுபே ரருள்புரிந்தார்"* என்று கூறி, *"பேறினி யிதன்மே லுண்டோ?"* என்றும் கண்ணப்பரைச் சிறப்பிக்கிறார்.

நந்தனாருக்கு இறைவன் அருள் செய்த முறைமை வித்தியாசமானது. அவரைத் தீயில் மூழ்கச் செய்து, அவருக்கு உருமாற்றத்தை அளித்து இறைவன் ஆட்கொண்டார். *"இப்பிறவி போய்நீங்க எரியினிடை நீமூழ்கி முப்புரிநூல் மார்பருடன் முன்னணைவாய்"* என்று நந்தனாருக்கு இறைவன் கனவில் தெரிவித்து, அவ்வாறே தில்லைவாழ் அந்தணர்களுக்கும் அவர்களின் கனவில் அறிவித்தார். அதன்படியே *"பிஞ்ஞகர்தம் நிறையருளால் மறையவர்கள் நெருப்பமைத்த குழியெய்தி இறையவர்தாள் மனங்கொண்டே எரிசூழ வலங்கொண்டார்."* அதன்பின்னர் அவர் உருமாற்றம் பெறுவதைச் சேக்கிழார் இவ்வாறு தெரிவிக்கிறார்:

*"கைதொழுது நடமாடுங் கழலுன்னி அழல்புக்கார்*
*எய்தியவப் பொழுதின்கண் எரியின்கண் இம்மாயப்*
*பொய்தகையும் உருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்*
*மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார்."*

*"செந்தீமே லெழும்போழ்து செம்மலர்மேல் வந்தெழுந்த*
*அந்தணன்போல் தோன்றினார் அந்தரதுந் துபிநாதம்*
*வந்தெழுந்த துயர்விசும்பில் வானவர்கள் மகிழ்ந்தார்த்துப்*
*பைந்துணர்மந் தாரத்தின் பனிமலர்மா ரிகள்பொழிந்தார்."*

*"திருவுடைய தில்லைவா ழந்தணர்கள் கைதொழுதார்*
*பரவரிய தொண்டர்களும் பணிந்துமனங் களிபயின்றார்."*

நந்தனார் திருநாளைப்போவார் நாயனாராக மாறியமையைப் பின்வருமாறு வர்ணிக்கிறார், சேக்கிழார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"அருமறைசூழ் திருமன்றி லாடுகின்ற கழல்வணங்க*
*வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர்."*

திருநாளைப்போவார்நாயனாரை இறைவன் இறுதியாக ஆட்கொண்ட முறைமையினைச் சேக்கிழார் தமக்கேயுரிய பாணியில் பின்வருமாறு தெரிவிக்கிறார்:

*"தில்லைவா ழந்தணரு முடன்செல்லச் சென்றெய்திக்*
*கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி*
*ஒல்லைபோ யுட்புகுந்தார் உலகுய்ய நடமாடும்*
*எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால்."*

கண்ணப்பர், திருநாளைப்போவார் ஆகிய இருவேறு அடியார்களின் ஆளுமைகளையும், அவர்தம் பக்திநிலைகளையும் சேக்கிழார் தமக்கே உரித்தான படைப்பாளுமையுடன் பெரியபுராணத்தில் காட்டிச்செல்கிறார். தமிழ் இலக்கிய வரலாற்றில் தமது படைப்பாளுமை காரணமாகச் சேக்கிழார் தமக்கெனத் தக்கதோர் இடத்தினைத் தக்கவைத்துள்ளார்.

## கண்கள் கட்டப்பட்டவனுக்கு முன்னே

அலையாடிய மேனிக்கு அறிமுகமான
உப்புசேர் காற்றின் வாசனை அல்ல இது.
இந்த
துயரம் பேசும் நிசப்தமும்
நிச்சயமாய்
ஒரு கடலுக்குறியதல்ல.
எனில்,
கட்டப்பட்ட என் கண்களுக்கு முன்னால்
ஒரு வயல் இருக்கக்கூடும்.

மண்டியிட்டபோது
முட்டியை ஆதரவாய்த் தாங்கிய மண்ணில்
ஈரமிருக்கிறது.
எனில் ஒரு சிற்றோடை
கசிந்தோடிய இடமாய்
இது இருக்கக்கூடும்.

முகங்குப்புற
என் கனவுகளோடு நானும்
சரியப்போகும் இந்த இடம்
எதுவாகவேனும்
இருக்கட்டும்...

கால்களை மீன்களுக்குக்
கொறிக்கக்கொடுத்தபடியே
என் பாதையை நான் தீர்மானித்த
அந்த இடமொன்றைத் தவிர
இந்த இடம் இருக்கட்டும்
எதுவாகவேனும்...

திருமதி ஆன்யாழினி. எஸ்,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினரும் சுயநிர்ணய உரிமையும் : சர்வதேச சமூகத்தின் தவறான புரிதல் பற்றிய ஓர் ஆய்வு

**கலாநிதி ச.பாஸ்கரன்,**
**சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**அரசறிவியல் துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



## அறிமுகம்

தற்காலத்தில் எவ்வளவுதான் மனித நாகரிகமும் பண்பாடும் வளர்ச்சியடைந்திருந்தாலும் மனிதர்களின் மனங்கள் மட்டும் இன்னும் வளர்ச்சியடையவில்லை. சமூக அக்கறையும் பொதுநலனும் அதிகரித்திருந்தாலும் சுயநலன் இன்னும் குறையவில்லை. என்னதான் பொதுநலன் என்று பேசினாலும் சுயநலன் என்று வருகின்றபோது பொதுநலனுக்கு அவ்வளவு இடமிருப்பதாயும் தெரியவில்லை. இந்தவிடயம் மனிதர்களுக்கு மட்டுமல்ல அரசுகளுக்கும் கூட பொருத்தமாகவே இருக்கின்றது. சர்வதேச அரசுகள் தொடர்பாக உயர்ந்த அபிப்பிராயமும் நல்லெண்ணமும் கொண்டுள்ள எமக்கெல்லாம் அந்த அரசுகள் அனைத்தும் தேசிய நலன் என்ற சுயநலன் அடிப்படையிலேயே செயற்படுகின்றன என்பது வியப்பிற்குரியதாக இருந்தாலும் உலக நடைமுறையும் யதார்த்தமும் அவ்வாறுதான் இருக்கின்றது. சுயநிர்ணய உரிமை என்பது மனித உரிமைகளிலிருந்து பிரிக்கமுடியாத மிக முக்கியமான ஓர் அம்சமாகக் காணப்படுகின்றபோதும் சர்வதேச சமூகத்தில் மனித உரிமைகளுக்குத் தரப்படுகின்ற முக்கியத்துவம் சுயநிர்ணய உரிமைக்கு வழங்கப்படுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் சுயநிர்ணய உரிமை என்பது அரசுகளால் தீண்டத்தகாத ஒரு விடயமாகவே பார்க்கப்படுகின்றது. சில நாடுகளில் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசவே முடியாது. அந்தளவுக்கு சுயநிர்ணய உரிமை என்பது சர்வதேச சமூகத்தினால் அங்கீகரிக்கப்படாத ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

ஒரு சிலர் *"ஐக்கிய நாடுகள் நிறுவனம் கூட சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ளது. மக்களின் சுயநிர்ணய உரிமை என ஐக்கிய நாடுகள் நிறுவனம் குறிப்பிடும் சரத்துக்கள் இன்று உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன"* என்று குறிப்பிடுகின்றார்கள். ஆனால் மக்களின் சுயநிர்ணய உரிமையும் அரசுகளின் சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவது சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று அர்த்தமாகாது. அரசுகள் தமது சுயநலன் கருதிச் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவில்லை என்பதே நிதர்சனமாகும். சர்வதேச அரசுகள் அனைத்தும் தேசிய நலனையும் தேசிய அதிகாரத்தையும் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டே இயங்குகின்றன. தமது தேசிய நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய எந்த விடயத்தையும் அவை விரும்புவதுமில்லை. வரவேற்பதுமில்லை. இதனால்தான் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையை அரசுகள் இன்னும் அங்கீகரிக்கவில்லை. அரசுகளின் இந்தத் தப்பான புரிதலுக்கான காரணங்கள் எவை? இந்த விடயத்தில் சர்வதேச சமூகமும் அரசுகளும் ஏன் இத்தனை அக்கறையற்று செயற்படுகின்றன? சிறுபான்மையினருக்கான சுயநிர்ணய உரிமை என்பது அடைந்துகொள்ள முடியாத ஒரு விடயமா? இதனால் ஏற்படப்போகும் பாரதூரமான விளைவுகள் எவை? என்பது போன்ற வினாக்களுக்குப் பதில் தேட முயற்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சுயநிர்ணய உரிமை**

சுயநிர்ணய உரிமை என்பது "*தம்மைத் தாமே தீர்மானித்தல் அல்லது நிர்ணயித்தல்*" என்று பொருள்படும். மக்களோ அல்லது அரசுகளோ தம்மைத் தாமே தீர்மானிப்பதற்காகக் கொண்டுள்ள உரிமையை இது குறிக்கும். இதைச் சற்று ஆழமாக நோக்கினால் "*சொந்த விருப்பம் மற்றும் முன்னுரிமை என்பவற்றின் அடிப்படையில் மக்களோ அல்லது அரசுகளோ தமது தெரிவுகளையும் முடிவுகளையும் தாமே மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் உரிமையை*" இது குறிப்பிடுகின்றது.

சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே நடைபெறுகின்றன. கிரேக்கர் காலத்தில் அந்நிய அரசுகளின் படையெடுப்பு மற்றும் ஆதிக்கம் என்பவற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும், மத்தியகாலத்திலும் அதன் பின்னரும் மதம் மற்றும் மன்னரின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவும் சுய நிர்ணய உரிமைப் போராட்டங்கள் இடம்பெற்றன. நவீன காலத்தில் இங்கிலாந்தில் இடம்பெற்ற புரட்சியிலிருந்து பிரான்சியப் புரட்சி வரைக்கும் இதன் வரலாறு நீண்டு செல்கின்றது. இக்காலத்தில் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் ஜனநாயகத்திற்கான போராட்டங்களாகவும் பார்க்கப்பட்டன.

அண்மைக்காலத்தில் காலனித்துவத்தின் பிடியிலிருந்தும் வல்லரசுகளின் ஆதிக்கத்திலிருந்தும் விடுபடுவதை இது நோக்கமாகக் கொண்டிருந்தது. தற்காலத்தில் அரசுகளின் அடக்குமுறைக்கு எதிராக சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன.

**சுயநிர்ணய உரிமைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பு**

சுயநிர்ணய உரிமை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பு மிக முக்கியமானது. ஐக்கிய நாடுகள் சபையின் வருகைக்குப் பின்னர் நிறைய முன்னேற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சாசனமும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பிரகடனங்களும் மக்களினுடைய சுயநிர்ணய உரிமையையும், அரசுகளின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்திருக்கின்றது. மக்களினதும் மற்றும் அரசுகளினதும் சுயநிர்ணய உரிமை மீறப்படும் சந்தர்ப்பத்தில் அதனைப் பாதுகாப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்களினதும் அரசுகளினதும் சுயநிர்ணய உரிமை மீறப்படுகின்றபோது தேசியச் சட்டத்தின் அடிப்படையிலும், சர்வதேசச் சட்டத்தின் அடிப்படையிலும், நீதிச் செயற்பாடுகளின் மூலமும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால் சிறுபான்மைக் குழுக்களின் சுயநிர்ணய உரிமை மட்டும் இன்றுவரை அங்கீகரிக்கப்படவில்லை. இதற்கு மிக முக்கியமான காரணம் அரசுகள் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுக்கின்றமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் சபை சட்டரீதியாக மக்களினுடைய சுயநிர்ணய உரிமையையும் அரசுகளின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்தபோது அதற்கு உடன்பட்டு அனுமதியளித்த அரசுகள் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க முன்வரவில்லை. இதற்கான பிரதானமான காரணம் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தால் தமது நாட்டினுடைய தேசிய இறைமையை இழக்கவேண்டி ஏற்படும் என்ற அச்சமாகும். அதாவது தமது நாட்டிற்குள் இருக்கின்ற சிறுபான்மையினர் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று புதிய தனி நாடொன்றை உருவாக்க முனைவர் என்பதாகும். இதனால் தமது நாடு தனித்தனிப் பகுதிகளாகப் பிரிவதையும் ஒரு நாட்டினுடைய இறைமை அதிகாரம் இழக்கப்படுவதையும் விரும்பாத அரசுகள் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க முன்வரவில்லை. இதனாலேதான் அரசுகளின் இறைமைக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

**இறைமைக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் இடையிலான தொடர்பு**

இங்கு அரசுகளின் இறைமைக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் இடையில் முக்கியமான மூன்று விதமான தொடர்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமை என்பது அரசுகளின் இறைமைக்குப் பாதகமான ஒரு விடயம் என்ற நம்பிக்கை காணப்படுகின்றமை.
2. சிறுபான்மை இனக்குழு ஒன்று சுயநிர்ணய உரிமையை அடைந்து கொள்ளும்போது அது இறைமையுடைய ஒரு புதிய நாடாக மாற்றம் பெறும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றமை.
3. ஓர் அரசு தனது இறைமையைப் பேணுகின்ற அதேசமயம் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையும் அடைந்துகொள்ள முடியும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றமை.

இம் மூன்று விடயங்களில் முதல் இரண்டும் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையானது அரசுகளின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதகமானது என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளது. மற்றையது அரசுகளின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதிப்பற்ற வகையில் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையானது அடைந்துகொள்ளப்படக்கூடியது என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. இதில் முதல் இரண்டு கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே அரசுகள் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுக்கின்றன.

**சர்வதேச அரசுகளின் தப்பபிப்பிராயம்**

உண்மையில் சர்வதேச சமூகமும் அரசுகளும் இதை தப்பாகப் புரிந்துகொண்டுள்ளன என்றே நினைக்கத் தோன்றுகின்றது. சில சமயங்களில் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையானது அங்கீகரிக்க மறுக்கப்படுகின்றபோதுதான் அந்தச் சிறுபான்மை இனம் பிரிந்துசென்று தனது சுயநிர்ணய உரிமையை நிர்ணயிக்க முயற்சிக்கும். அதுவே அரசுகளின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதகமாக அமையும். ஆகவே, சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதானது அரசுகளின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதகமானது என்ற நம்பிக்கை தற்காலத்துக்குப் பொருத்தமற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால உலகம் அரசுகள் பிரிந்துபோவதை விடுத்து ஒன்றுபடுவதையே வலியுறுத்துகின்றது. தற்காலத்தில் அரசுகளின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதிப்பற்ற வகையில் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையை அடைந்துகொள்வதற்கான வழிமுறைகளும் காணப்படுகின்றன.

பொதுவாக, சுயநிர்ணய உரிமையில் இரண்டு வகைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று உள்ளக சுயநிர்ணய உரிமை, மற்றொன்று வெளியக சுயநிர்ணய உரிமை என்பனவாகும். உள்ளக சுயநிர்ணய உரிமை என்பது அரசுகளின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதிப்பற்ற வகையில் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையை அடைந்துகொள்வதாகும். அதாவது ஒரு நாட்டுக்குள்ளேயே அதிகாரப் பகிர்வுகளை மேற்கொள்வதன் மூலம் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி அரசுகளின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படாமல் சுயநிர்ணய உரிமையை அடைந்துகொள்வதை இது குறிக்கும். உதாரணமாக இந்தியாவில் சமஷ்டி அதிகாரப்பகிர்வு வழிமுறைகளினூடாக மாநிலங்கள் ஏற்படுத்தப்பட்டு சிறுபான்மை இனங்களினுடைய சுயநிர்ணய உரிமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளமையையும் அதேசமயம் இந்திய நாட்டின் ஒருமைப்பாடு பேணப்பட்டுள்ளமையையும் குறிப்பிடலாம்.

வெளியக சுயநிர்ணய உரிமை என்பது ஒரு நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மைக் குழுக்கள் அந்த நாட்டைப் புறக்கணித்து, ஒரு புதிய நாட்டை ஏற்படுத்தி தமது சுயநிர்ணய உரிமையை அடைந்துகொள்வதாகும். வெளியக சுயநிர்ணய உரிமை அரசுகளின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதிக்கின்றது. உதாரணமாக, பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து சென்று தனி நாடாக உருவானதைக் குறிப்பிடலாம். சில சமயங்களில் அதிகாரப்பகிர்வு முயற்சிகள் தோற்றுப்போகின்றபோதும் கூட ஒரு நாடு பிரிந்து செல்லவேண்டி ஏற்படலாம். ஆயினும் இன்றைய உலகப்போக்கு நாடுகள் பிரிந்து செல்வதற்கு எதிராகவே காணப்படுகின்றது. இன்று உலகம் ஒருமைப்பாட்டை நோக்கி பயணித்துக்கொண்டிருகின்றது. உலகமயமாக்கம், பொருளாதாரத்தில் தங்கியிருக்க வேண்டியுள்ளமை, உலகப் பிரச்சனைகளுக்குத் தனித்து தீர்வு காணமுடியாமை போன்ற பல காரணங்களினால் உலக நாடுகள் பிரிந்து போவதை விட ஒன்றுபடவே விரும்புகின்றன. இதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மிகச்சிறந்த உதரணமாகும். இந்நிலையில் அரசுகள் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தால் தமது இறைமையும் ஒருமைப்பாடும் பாதிக்கப்படும் என்று நினைப்பது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. இதில் முக்கியமான விடயம் யாதெனில் சில சமயங்களில் அரசுகளால் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்க மறுக்கப்படுகின்ற போதுதான் அரசுகளின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதாகும். ஊதாரணமாக, சோவியத் ஒன்றியத்தில் சோசலிச அரசு நிறுவப்பட்டபோது லெனின் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதப்படுத்தியிருந்தார்.

சோவியத் ஒன்றியத்திலுள்ள மாநிலங்கள் தாம் விரும்பியபோது பிரிந்து செல்லக்கூடிய உரிமை அவற்றுக்குச் சட்டரீதியாக வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் பிற்காலத்தில் ஸ்டாலின் போன்ற ஆட்சியாளர்கள் இதை மாநிலங்களுக்கு வழங்குவதற்கு முன்வரவில்லை. இதனால் பிற்காலத்தில் சோவியத் ஒன்றியமே பிரிந்து வீழ்ச்சியடையவேண்டி ஏற்பட்டது. அதேபோன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டதால் நீண்டகால உள்நாட்டு யுத்தமும் பிரிவினைவாதப் போராட்டமும் இடம்பெற்றது. சூடானிலிருந்து தென்சூடான் பிரிந்து தனியரசாக மாறியது. அரசுகளால் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுகின்றபோது மறுபுறமாக அது அரசுகளின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதகமாக அமைந்துவிடும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் குறிப்பிடப்படுகின்றன. மறுபுறமாக ஒற்றையாட்சி இடம்பெறும் நாடாகப் பிரித்தானியா இருந்தபோதும் அது சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையை மதித்து அங்கீகரித்ததன் காரணமாக அண்மையில் இடம்பெற்ற சர்வசன வாக்கெடுப்பில் ஸ்காட்லாந்து பிரித்தானியாவிலிருந்து பிரிந்து போவதற்கு மறுத்துவிட்டது. இவையெல்லாம் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுகின்றபோதே அரசுகளின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படும் என்பதற்கும் மறுபுறமாக, அரசுகளின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பாதிப்பற்ற வகையில் சிறுபான்மையினருடைய சுயநிர்ணய உரிமையை அடைந்துகொள்ள முடியும் என்பதற்கும் சிறந்த முன்னுதாரணமாக குறிப்பிடப்படுகின்றது.

### முடிவுரை

சுயநிர்ணய உரிமையைக் கோருவது சிறுபான்மையினரின் அடிப்படை ஜனநாயக உரிமையாகும். அதனை நிராகரிப்பது ஜனநாயக விரோதச் செயற்பாடாகும். சிறந்த ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி என்பவை பற்றிப் பேசுகின்ற சர்வதேச சமூகமும் அரசுகளும் ஜனநாயகம் என்ற போர்வையில் பெரும்பான்மையை மட்டும் கருத்திற்கொண்டு சிறுபான்மையினரையும் அவர்களுக்கான சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்க மறுப்பது எவ்வகையிலும் நியாயமற்றது என்று வலியுறுத்தப்படுகின்றது. ஆகவே, சிறுபான்மையினருக்கான அங்கீகாரத்தினை வழங்குதல், அவர்களுக்கான ஆட்சி அதிகாரங்களை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தல், இனங்களுக்கிடையில் அதிகாரங்களைப் பகிர்தல், எதுவிதக் கட்டுப்பாடுகளுமின்றி சிறுபான்மையினருக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்படல் போன்ற நடவடிக்கைகள் தேசிய அரசுகளின் இறைமையைப் பாதுகாக்கவும் சிறுபான்மையினர் பிரிந்து போகாமல் இருக்கவும் வழிவகுக்கும்.

வூட்ரோ வில்சன் சர்வதேச சங்கத்தில் உரையாற்றுகின்றபோது *"தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழி"* என்று குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பூடோஸ் காலி *"சர்வதேச ரீதியாக புதிய அரசியல் கொள்கைகள் வகுக்கப்படாதவிடத்தும் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான விடயம் நிகழ்ச்சி நிரலில் முதலிடத்தைப் பிடிக்காதவிடத்தும் உலகமானது 4000 நாடுகளாகப் பிரிவதைத் தடுக்க முடியாது"* என்று குறிப்பிட்டுள்ளமை சுய நிர்ணய உரிமை தொடர்பான யதார்த்தமான உண்மையை அரசுகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் சரியான நேரத்தில் சரியாக புரியவைக்கின்றது என்றே எண்ணத்தோன்றுகின்றது. அரசுகள் தப்பபிப்பிராயம் என்ற மாயையிலிருந்து விடுபட்டு சுயநிர்ணய உரிமை தொடர்பான உண்மையை தரிசிக்காவிட்டால் நாடுகள் பிரிவதைத் தடுக்கவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்


- Deci, E.L. and Ryan, R.M., 2002. **Handbook of self-determination research.** University Rochester Press.
- Deci, E.L., 1980. **The psychology of self-determination**. Free Press.
- Cobban, A., 1970. **The nation state and national self-determination** (Vol. 2102). Crowell.
- Bear, L.L., Boldt, M. and Long, J.A., 1984. **Pathways to self-determination**: Canadian Indians and the Canadian state. University of Toronto press.
- Margalit, A. and Raz, J., 1990. **National self-determination**. The journal of philosophy, 87(9), pp.439-461.
- Musgrave, T.D., 2000. **Self-determination and national minorities**. Oxford University Press.
- Hannum, H., 2011. **Autonomy, sovereignty, and self-determination**: The accommodation of conflicting rights. University of Pennsylvania Press.
- Iorns, C.J., 1992. **Indigenous peoples and self determination**: Challenging state sovereignty. Case W. Res. J. Int'l L., 24, p.199.
- Marshall, M.G. and Gurr, T.R., 2003. **Peace and Conflict 2003**: A global survey of armed conflicts, self-determination movements, and democracy. Center for International Development and Conflict Management.
- 10.Danspeckgruber, W.F., 2002. **The self-determination of peoples:** community, nation, and state in an interdependent world. Lynne Rienner Publishers.
- 11.Halperin, M.H., Scheffer, D. and Small, P.L., 1992. **Self-determination in the new world order**. Brookings Inst Pr.
- 12.Thornberry, P., 1989. **Self-determination, minorities, human rights**: a review of international instruments. International and Comparative Law Quarterly, 38(04), pp.867-889.
- 13.Thamilmaran, V.T., 1988. **Human rights in Third World perspective**.
- 14.Rifkin, M., 2017. **Beyond Settler Time**: Temporal Sovereignty and Indigenous Self- determination. Duke University Press.


நிலம் பிடிப்பதும்
நெற்றியின் நேரிலே
நீதியை கொலை செய்வதும்
மற்றவர்
நலம் கெடுப்பதும்
உரிமை பறிப்பதும்
நாணம் இன்றித் தமிழை ஒதுக்கலும்
குலம் கெடுத்திடும் சூழ்ச்சிகள்

– முருகையன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீட யாழ் மாணவர்களின் செயற்திறன்

கலாநிதி ரொஷான் ராகல்
மற்றும்
செல்வி அருட்சுதா சுப்பிரமணியம்,
பொறியியற் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.




இவ்வாய்வுக்கட்டுரையானது கடந்த சில ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர்களின் கல்வி நிலவரங்களை ஆராய்வதாக அமைந்துள்ளது. பிரதானமாக யாழ்ப்பாணத்திலிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு வருகைதரும் மாணவர்களின் கல்வித்தரத்தில் ஏற்படும் தளம்பல்கள் கூர்ந்தாராயப்படுகிறது. எனவே எதிர்காலங்களில் அவ்வாறான ஈடாட்டங்களை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

வரைபு 1இல் உள்ளது போல், 2002இல் இருந்து 2009 (E/02-E/09) ஆண்டுகள் வரையான பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்கு உள்வாங்கப்பட்ட கீழ்க் குறிப்பிட்டுள்ள மாணவர் குழுக்களின் சராசரிப் பெறுபேறுகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டது. (இவ்வாய்வு நடத்தப்படும்போது இறுதியாகப் பட்டப்படிப்பினை நிறைவு செய்த மாணவர்கள் 2009 கல்வியாண்டுக்குரியவர்கள்.)

1. அக்கல்வியாண்டில் அனுமதி பெற்ற மாணவர்கள் (Average)
2. கீழ்க்காணும் மாவட்டங்களில் இருந்து வருகை தந்தவர்கள்
   1. யாழ்ப்பாணம் (Jaffna)
   2. கம்பஹா (Gampaha)
   3. கண்டி (Kandy)
   4. நுவரெலியா (Nuwara Eliya)
   5. குருநாகல் (Kurunegala)

இம்மாவட்டங்களிலிருந்தே பெரும்பான்மையான மாணவர்கள் பேராதனைப் பொறியியல் பீடத்திற்கு நுழைகிறார்கள் (பொதுவாக 20க்கும் மேல்).







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வரைபு 1: ஒவ்வொரு கல்வியாண்டுக்குமான மாணவர்களின் சராசரி z-புள்ளி*

வரைபில் காண்பிக்கப்படுவது போல், கண்டி மாவட்டத்திலிருந்து வருகைதரும் மாணவர்களின் சராசரி z-புள்ளி, ஏனைய மாவட்ட மாணவர்களின் சராசரி z-புள்ளியை விடச் சிறந்ததாக உள்ளது. அடுத்ததாகக் குருநாகல் மாவட்ட மாணவர்களின் z-புள்ளி காணப்படுவதுடன், கண்டி மாணவர்களின் z-புள்ளிக்கு நெருக்கமாகவும் உள்ளது. கம்பஹா மாவட்ட z-புள்ளி, பேராதனைப் பொறியியல் பீடத்திற்கு அனுமதி பெற்ற அனைத்து மாணவர்களின் சராசரி z-புள்ளிக்கு அண்மையாகவும், சற்றுக் குறைவாகவும் உள்ளது. நுவரெலியா மாவட்ட மாணவர்களின் z-புள்ளி, மிகவும் தாழ்மையாகக் காணப்படுகிறது. யாழ்ப்பாண மாணவர்களின் z-புள்ளி, பேராதனைப் பொறியியல் பீடத்தின் அக்கல்வியாண்டிற்குரிய மாணவர்களின் சராசரி z-புள்ளியை விட மிகவும் அதிகமாகவும், முதல் நிலையில் காணப்படும் மாவட்டங்களான கண்டி, குருநாகலுக்கு அண்மித்தும் காணப்படுகிறது.

வரைபு 1இல் z-புள்ளி விபரிக்கப்பட்டது போல், வரைபு 2இல் பொறியியல் கற்கைநெறியின் முதலாம் ஆண்டு நிறைவில் அம்மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் (Grade Point Average, GPA) எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. முதலாம் வருடப் பெறுபேறு அவர்களின் எதிர்காலத் தொழில் தெரிவில் கணிசமானளவு பங்களிப்புச் செலுத்துகிறது. அப்பெறுபேறுகளின் அடிப்படையிலேயே அவர்களுடைய சிறப்புத்துறை தெரிவு செய்யப்படுகிறது. அதாவது சிறந்த பெறுபேறு எடுக்கும் மாணவர்கள் அவர்களுடைய விருப்பத்திற்குரிய துறையினை பின்பற்றக் கூடுதல் வாய்ப்பினைப் பெறுவார்கள். எனவே, முதலாம் ஆண்டு தேர்வுப் பெறுபேறு இளநிலைப் பட்டதாரி மாணவர்களால் முக்கியமான விடயமாக ஏற்கப்பட்டிருக்கிறது.




*வரைபு 2: ஒவ்வொரு கல்வியாண்டுக்குமான மாணவர்களின் சராசரி முதலாம் ஆண்டுப் பெறுபேறு*


வரைபு 2ல் சித்தரிக்கப்பட்டது போல், முதலாம் வருட இறுதியிலும், கண்டி மாணவர்கள் முதல் நிலையிலும் நுவரெலியா மாவட்ட மாணவர்கள் இறுதி நிலையிலும் காணப்படுகின்றனர். இவ்விரண்டு மாவட்டங்களின் நிலைகள் முன்னையதைப்போன்றே காணப்படுகிறது. எனினும் ஏனைய மூன்று மாவட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் நிலை முதலாம் வருட இறுதியில் மாறுபட்டுள்ளது. உதாரணமாக, யாழ் மாவட்ட மாணவர்களின் சராசரிப் பெறுபேறு (GPA) முதலாம் வருட இறுதியில் அக்கல்வியாண்டு மாணவர்களின் சராசரிப் பெறுபேற்றுக்குச் சமமாக அல்லது குறைவாகக் காணப்படுவதுடன் கம்பஹா மாவட்ட மாணவர்களின் நிலை சராசரியை விட உயர்வாகக் காணப்படுகிறது. மேலும் பல்கலைக்கழகத்திற்குப் புகும்போது கண்டி மற்றும் யாழ் மாணவர்களுக்கிடையில் z-புள்ளியில் காணப்பட்ட இடைவெளியைவிட முதலாம் வருட பெறுபேற்றில் (GPA) பாரிய இடைவெளியைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே, இவ்வீழ்ச்சிக்கான காரணத்தை அறியுமுகமாக முதல் ஆண்டுக்கான பாடநெறிகளின் பெறுபேறுகளைத் தனித்தனியே ஆராய்ந்தோம். நாம் கண்டுகொண்ட ஒரு காரணி, யாழ் மாணவர்களினதும் இங்கு கருதப்படும் மற்றைய மாவட்ட மாணவர்களினதும் ஆங்கிலப்புலமையில் காணப்படும் வேறுபாடு. எடுத்துக்காட்டாக, E/09 மாணவர்களின் சராசரி திறமையை உருப்படுத்திக்காட்டும் வரைபு 3ஐ கருதுக. சராசரி z-புள்ளி அடிப்படையில் இம்மாவட்டங்களை வரிசைப்படுத்தின் சிறந்த மாவட்டமாக கண்டி, அடுத்து யாழ்ப்பாணம், குருநாகல், கம்பஹா இறுதியாக நுவரெலியா உள்ளது. சராசரி முதல் வருடப் பெறுபேற்றின் (GPA) அடிப்படையில் இறங்குவரிசைப்படுத்தின் சற்று மாற்றமடைந்து கண்டி, கம்பஹா, குருநாகல், யாழ்ப்பாணம், நுவரெலியா என்ற ஒழுங்கில் காணப்படுகிறது. அதாவது கண்டி, குருநாகல், நுவரெலியா மாவட்டங்கள் அதேநிலையில் இருக்கும் சமயத்தில் யாழ் மாவட்டம் இரண்டாவது இடத்திலிருந்து நான்காம் இடத்திற்கும், கம்பஹா மாவட்டம் நான்காம் படியிலிருந்து இரண்டாம் படிக்கும் மாறியுள்ளது.





*வரைபு 3: 2009 கல்வியாண்டு மாணவர்களின் சராசரித் திறமை*

அதேவரைபில் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான கணித பாட சராசரிப் பெறுபேற்றை (GPA) உற்று நோக்கின், பல்கலைக்கழகத்திற்குப் புகும்போது சராசரி z-புள்ளியில் காணப்பட்ட ஒத்த தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. இருந்தபோதிலும், ஆங்கிலப் பெறுபேற்றில் யாழ் மாவட்டம் வீழ்ச்சி கண்டுள்ளது. மேம்பட்ட ஆங்கிலப்புலமை இன்மையினால் முதலாம் வருடப் பெறுபேற்றிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. உண்மையில், முதலாம் வருடப் பெறுபேற்றின் படி,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கருதப்படும் மாவட்டங்களின் வரிசைக்கிரமம் ஆங்கிலப் பெறுபேற்று ஒழுங்கிற்கு அமையவே உள்ளது. கணித பெறுபேற்றடிப்படையில் அல்ல. ஏனைய மாவட்ட மாணவர்களின் ஆங்கிலப்புலமை யாழ் மாணவர்களின் முதல் வருடப் பெறுபேற்று வீழ்ச்சிக்கு (அல்லது கம்பஹா மாவட்ட உயர்வுக்கு) காரணமாக உள்ளது எனலாம். முன்னர் குறிப்பிட்டது போல், யாழ் மாவட்ட மாணவர்களின் Z-புள்ளி, சராசரியை விட மேலே காணப்பட்டதுடன் முதலாம் ஆண்டு பெறுபேறு சராசரியை விட கீழே காணப்படுகிறது. (முன்னைய வரைபுகளில் போலவே, இங்கும் சராசரி மதிப்புகள் கோடிட்ட வரியால் காட்டப்பட்டுள்ளது.)




*வரைபு 4: 2008 கல்வியாண்டு மாணவர்களின் சராசரித் திறமை*

மேலே விளக்கப்பட்ட 2009 கல்வியாண்டுக்கான செயல்திறன், விதிவிலக்கான ஒன்று அல்ல. ஆய்வில் கருதப்படும் ஏனைய கல்வியாண்டுக்கான செயல்திறனும் இதே மாதிரியான போக்கையே கொண்டுள்ளது. இடப் பற்றாக்குறை, நிமித்தம் மேலும் இரண்டு கல்வியாண்டுகளுக்கான வரைபுகளை மட்டும் இங்கு உள்ளடக்குகிறோம். (E/08 - வரைபு 4, E/07 - வரைபு 5)





*வரைபு 5: 2007 கல்வியாண்டு மாணவர்களின் சராசரித் திறமை*

இறுதியாக இன்னொரு வரைபையும் நாங்கள் இங்கு தருகிறோம். வரைபு 6 இம்மாணவர்களின் பொறியியல் கற்கைநெறியின் இறுதி மதிப்பெண்களைக் (GPA) காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*வரைபு 6: ஒவ்வொரு கல்வியாண்டுக்குமான மாணவர்களின் சராசரி இறுதிப் பெறுபேறு*

வரைபு 6இல் விரித்துரைக்கப்பட்டுள்ளது போல், பொறியியல் கற்கைநெறியின் இறுதியிலும் கண்டி மாணவர்கள் முதல் நிலையில் உள்ளனர். முதலாம் வருடத்துடன் ஒப்பிடுகையில் நான்காம் வருட இறுதியில் யாழ் மாணவர்கள் முன்னேற்றமடைந்துள்ளனர். அவர்களின் பெறுபேறுகள் சராசரியை விட அதிகமாகக் காணப்படுவதுடன் சில ஆண்டுகளில் கண்டி மாணவர்களைப்போன்று சிறப்பாகவும் செயற்பட்டுள்ளனர். எனினும் யாழ் மாணவர்கள் முதலாம் வருடத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றிருந்தால் மேலும் சிறப்பான நிலையை அடைந்திருக்கமுடியும். அத்துடன், விருப்பத்திற்குரிய துறையைத் தெரிவு செய்து திருப்திகரமான தொழில் வாய்ப்பையும் பெற்றிருக்கமுடியும்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவு தரவுகளைக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் முடிவாக, நம்பப்படுவது பேராதனைப் பொறியியல் பீடத்திற்கு நுழையும் யாழ் மாணவர்கள் மேலும் சிறந்த ஆங்கிலத் திறமையுடன் உட்புகுந்திருப்பின் இன்னும் சிறப்பான இடத்தை அடைந்திருக்க முடியும் என்பதாகும். ஆகையால், எதிர்கால மாணவர்களை, இந்த உண்மையைத் தீவிரமாக கருத்திற்கொண்டு பல்கலைக்கழகத்திற்குள் அனுமதி பெற முன் அவர்களின் மொழித்திறனை மேம்படுத்திக் கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம். அத்துடன், ஏற்கனவே பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கும் இளநிலைப் பட்டதாரி மாணவர்களையும் மொழித்திறனின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு தங்களின் மொழியாற்றலை இங்கு படிக்கும் காலப்பகுதியில் மேம்படுத்துமாறு வலியுறுத்துகிறோம்.

***(இவ்வாய்வுக்கட்டுரையின் மூலப்பிரதி ஆங்கிலப்பதிவாக கீதவாணி விருதுகள்-2015 இதழில் வெளியாகியது).***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கதிரிலிருந்து இனி...
## (செய்யப்படவேண்டிய தொகுப்பு முயற்சிகள் பற்றிய ஒரு முன்மொழிவு)

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்,
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



இது தொகுப்பு முயற்சிகளின் காலம். அதுவும் தமிழ்நாட்டில் தனிமனிதரை முன்னிலைப்படுத்தியோ அல்லது தனி இதழை முன்னிலைப்படுத்தியோ அல்லது வேறு அடிப்படையிலோ தினம் தினம் புதுப்புது தொகுப்பு நூல்கள் வெளிவந்து கொண்டுள்ளன. இச்செயற்பாடானது தேடல்மிக்க எதிர்கால வாசகனுடைய சிரமங்களைக் குறைப்பதோடு ஒரே பார்வையில் ஓர் இலக்கிய கர்த்தாவுடைய அல்லது ஓர் இலக்கிய இதழுடைய ஆளுமையைத் தரிசிக்க உதவுவதாகும். இத்தொகுப்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்குதல் இலகுவானதாயிருக்கும்.

**1.0 தனி மனிதரை முன்னிலைப்படுத்துவது.**
1.1 தனி மனிதரது தனித்துறை சார்ந்த முயற்சிகளின் தொகுப்பு.
1.2 தனி மனிதரது பல்துறை சார்ந்த முயற்சிகளின் தொகுப்பு.
1.3 தனி மனிதரது இலக்கியப்பணி பற்றிய பலரது ஆக்கங்களின் தொகுப்பு.

**2.0 தனி இதழை (மலரை-பத்திரிகையை) முன்னிலைப்படுத்துவது.**
2.1 இதழ்களின் தொகுப்பு.
2.2 இதழ்களில் பிரசுரமானவற்றில் தரமானவற்றைத் (ஏதோ ஓர் அளவுகோல் மூலம்) தேர்வு செய்து தொகுத்தல்.
2.3 இதழ்களில் பிரசுரமானவற்றில் ஒரு துறைசார்ந்தவற்றைத் தொகுத்தல்.
2.4 இதழில் தொடர்ந்து வெளிவந்த ஒருவரது தொடர் ஆக்கத்தை பின் தொகுத்து நூலாக்கல்.

**3.0 பலவிடங்களிலும் வெளிவந்த பலருடைய ஆக்கங்களை, ஏதோ ஒரு பொருண்மை அடிப்படையில் தொகுத்தல்.**

இவ்வகையில் ஈழத்திலும், தமிழகத்திலும், புலம்பெயர் இடங்களிலும் ஈழத்தவருடைய ஆக்கங்கள் தொகுதிகளாக வெளிவரத் தொடங்கியுள்ளன.

**உ+ம்** "மல்லிகைச் சிறுகதைகள்", "வேற்றாகி நின்ற வெளி",
சில நூல்கள் மீளப்பதிப்பிக்கப்படுவதனையும் காணமுடிகிறது.

**உ+ம்** "மரணத்துள் வாழ்வோம்" கவிதைத்தொகுதி.

ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றுக்குக் கணிசமான பங்களிப்பாற்றியுள்ள பேராதனைப் பல்கலைக்கழகமும் இதுபற்றிய அக்கறை கொள்ளவேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பல்கலைக்கழகம் சார்ந்த தமிழறிஞர்களுடைய படைப்புகள் பல தற்புதுமை மிக்கவை. ஈழத்தமிழிலக்கிய வளர்ச்சிப்போக்கை சில, பல படிகளேனும் அவ்வக்காலங்களில் வளர்த்துவிட உதவி செய்தன. இவற்றுள் பெரும்பான்மையான ஆக்கங்கள் பேராதனைப் பல்கலைக்கழக வட்டத்துக்குள்ளேயே தம்முடைய பயன்பாட்டை முடித்துவிட்டு தூங்கப்போய்விட்டன. அவற்றைத் தட்டி எழுப்பி வெளியுலகத்தார்க்கு அறிமுகம் செய்துவைக்கவேண்டிய காலம் கனிந்திருக்கிறது. இவ்வகையில் இளங்கதிர் ஆக்கங்கள் முக்கியமாக நோக்கப்பட வேண்டியனவாகின்றன. இளங்கதிரை முன்னிட்டுப் பின்வரும் அடிப்படையில் ஒருவாறு தொகுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

**1.0 தனிமனிதரது ஆளுமைகள் வெளிப்படுமாறு தனித்தனித்தொகுப்புகளை வெளியிடுதல்.**

**உ+ம்** "பேராசிரியர். வி. செல்வநாயகத்தின் கட்டுரைகள்"

"புறநானூற்றில் ஒரு பாட்டு" - இளங்கதிர் 1959/1960, "உவமையும் உருவகமும்" - இளங்கதிர் 1965/1966 முதலிய பல பெறுமதியான கட்டுரைகள் காணப்படுகின்றன. இவையும், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை போன்ற பிறபேராசிரியர்களது கட்டுரைகளும் தனித்தனியே தொகுக்கப்படவேண்டும்.

**2.0 தனிப் பொருண்மை பற்றிய பலரது பல கட்டுரைகளைத் தொகுத்தல்.**

**உ+ம்** "ஈழத்தமிழ் இலக்கியக் கட்டுரைகள்"

இத்தொகுப்பில் பேராசிரியர். சு. வித்தியானந்தன் எழுதிய "ஈழத்தின் கிராமிய நாடகங்கள்" - இளங்கதிர் 1969/1970, கலாநிதி. கா. இந்திரபாலா எழுதிய "13ம் நூற்றாண்டுக்கு முன் இலங்கையில் இயற்றப்பெற்ற இரு தமிழ்ச்செய்யுள்கள்" - இளங்கதிர் 1966/1967 போன்ற ஈழத்தமிழ் இலக்கியங்கள் பற்றியும், ஈழத்தமிழ் இலக்கிய வரலாறு பற்றியும் பலரது கட்டுரைகள் இடம்பெறலாம். இதே போன்று "தமிழிலக்கிய வரலாற்றுக்கட்டுரைகள்", "மொழியியற் கட்டுரைகள்" போன்ற பல தலைப்புக்களிலும் நூல்கள் உருவாக்கப்படவேண்டும்.

**3.0 துறைசார்ந்த படைப்புகளைத் தொகுத்தல்.**

**உ+ம்** "இளங்கதிர் கவிதைகள்"

இத்தொகுப்பில் இளங்கதிர் மலர்களில் வெளிவந்துள்ள மஹாகவி, புதுவை இரத்தினதுரை, இராஜபாரதி, மு. பொன்னம்பலம் ஈழத்துக் குழூஉ இறையனார் போன்ற பிரபலமான கவிஞர்களுடைய கவிதைகள் இடம்பெறும். இன்று விமர்சகர்களாகவும், பேராசிரியர்களாகவும் புகழ்பெற்றுள்ள கா. சிவத்தம்பி, சி. தில்லைநாதன், அ. சண்முகதாஸ், சி. மௌனகுரு போன்றோருடைய அந்தக்காலத்துக் கவிதைகளை இத்தொகுப்பினூடு அறிவது சுவாரசியமான அனுபவமாகும்.

ஏற்கனவே, பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து சில தமிழ்த்தொகுப்பு நூல்கள் வெளி வந்துள்ளன. யுகம், கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், தரிசனங்கள் முதலிய சிறுகதைத் தொகுப்புகளும், பேராதனைக் கவிதைத்தொகுப்பு என்னும் கவிதை நூலும், காலத்தின் குரல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் நாட்டுக்கூத்துப்பிரதிகளின் தொகுப்பும், பேராதனை அரங்க அளிக்கைகள் என்னும் நாடகப்பிரதிகளின் தொகுப்பும் பிரபலமானவை.

இத்தொகுப்புகள் பற்றிய விமர்சனம் இவ்விடம் அவசியமில்லை. எனினும் இனி மேற்கொள்ளப்படவிருக்கும் தொகுப்புகளின் செம்மை கருதி ஒருவிடயம் சுட்டப்படவேண்டியது அவசியமாகிறது. அது தொகுப்பாளர்களின் அக்கறையும், நடுவுநிலைமையும் பற்றியதாகும்.

தொகுப்பை மேற்கொள்ளும் தொகுப்பாளர்கள் சோம்பற்படாது "தேவையான பிரதிகள் கிடைக்கவில்லையே" என்று கைசலியாது வேண்டியளவு முயலவேண்டியது அவசியமானதாகும். மேலும் எல்லா இன, சமய, சமூக வாழ்வியல்களும், அவ்வக்கால பிரச்சினைகளும் ஓரளவுக்கேனும் வெளித்தெரியும் வகையில் தொகுப்பு சிறந்த தேர்ந்தெடுத்த படைப்புக்களை உள்ளடக்கியதாய் இருத்தல் வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தொகுப்பாசிரியர்கள் நடுவுநிலைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும். ஏதோ ஒரு அளவுகோலை ஏற்றுக்கொண்டு அதற்குத் தக தொகுப்புப் பிரதிகள் சேகரிக்கப்பட வேண்டும். இவ்விடத்தில் முன்னைய தொகுப்பு முயற்சிகளில் குறைபாடுகள் தொகுப்பாளர்களின் நடுவுநிலையற்ற தன்மையினால் ஏற்பட்டுள்ளன என்பதையும் மனங்கொள்ள வேண்டும். உதாரணமாக பேராதனை நாடக அரங்க அளிக்கைகள் என்னும் தமிழ்ச்சங்க வெளியீட்டில் நாடகப்பிரதிகள் பன்னிரண்டு தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பேராசிரியர்களான க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன் ஆகிய இருவரது பிரதிகளைத் தவிர்த்துவிட்டால் ஏனைய பத்தும் பேராதனையில் வருடாவருடம் நடாத்தப்படும் நாடகப்போட்டியில் பங்குபற்றிய பிரதிகளாகும்.

இப்படியாகப் போட்டிகளில் பங்குபற்றிய பிரதிகளை தொகுப்பதாயின் ஏதோ ஒரு அளவு கோலை முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும். முதற்பரிசு பெற்ற நாடகப்பிரதிகள், சிறந்த நாடகப்பிரதிக்கான பரிசுபெற்ற பிரதிகள் போன்றவையே தொகுப்பில் முக்கியமாக இடம்பெற வேண்டும். ஆனால் மேற்சொன்ன நாடகத்தொகுப்பு நூலில் அவ்வாறான ஒரு செம்மையான அளவுகோல் பயன்படுத்தப்படாமல் தொகுப்பாளர்களின் விருப்பு வெறுப்புக்கள் தொகுப்பைப் பாதித்துள்ளன.

மேற்படி நூலில் இடம்பெற்றுள்ள நாடகப் பிரதிகளும் அவை போட்டியில் பங்குபற்றிய ஆண்டும், பெற்ற விருதும் கீழே தரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 'இப்படிக்கு உணர்வுகள்' | - | 1992ல் 2ம் இடம்பெற்றது. |
| 'திக்குத் தெரியாத காட்டில்' | - | 1993ல் 1ம் இடம்பெற்றது. |
| 'வரும்' - 1994ல் 1ம் இடம்பெற்றது, சிறந்த பிரதிவிருதுபெற்றது. | | |
| 'கட்டு' | - | 1995ல் 3ம் இடம்பெற்றது. |
| 'மீண்டும் மீண்டு' | - | 1995ல் பங்குபெற்றது. |
| 'காட்டாறு' | - | 1995ல் 1ம் இடம்பெற்றது. |
| 'அரும்பு' | - | 1996ல் 3ம் இடம்பெற்றது. |
| 'குழப்பம்' | - | 1996ல் 2ம் இடம்பெற்றது. |
| 'அகங்களும் முகங்களும்' | - | 1997ல் 1ம் இடம்பெற்றது. |
| 'கோதுடைக்கும் குஞ்சுகள்' | - | 1997ல் சிறந்த பிரதிவிருது பெற்றது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பை அவதானிப்பவர்கள் இதிற்காணப்படும் செம்மையற்ற தன்மையை உணர்ந்து கொள்வதற்கு அதிக நேரம் எடுக்காது. 1992இல் முதலாம் இடம்பெற்ற 'முதலீடுகள்' எனும் நாடகப்பிரதி இத்தொகுப்பில் இல்லை. 1993இல் சிறந்தநாடகப்பிரதி விருதுபெற்ற ஷமொஸ்கோ விசாரணை' எனும் நாடகப்பிரதியும் இதில் இல்லை. 1995இல் சிறந்த நாடகப்பிரதி விருதையோ முதல் மூன்று இடங்களில் ஒன்றையோ பெறாத 'மீண்டும் மீண்டு' என்ற நாடகம் இத்தொகுப்பில் உண்டு. ஆனால் அவ்வாண்டு சிறந்த பிரதி விருதைப்பெற்ற 'இனியுமா' எனும் நாடகம் இந்நூலில் தொகுக்கப்படவில்லை. மேலும் 1996இல் சிறந்த நாடகப்பிரதி விருதைப்பெற்று முதலாம் இடம்பெற்ற 'அலை நடுவில்' எனும் நாடகமும் தொகுப்பாளர்களால் கவனியாது விடப்பட்டுள்ளது.

இப்படியாக செம்மையற்ற தொகுப்பாக அமையாமல் இளங்கதிர் இதழ்களை ஆராய்ந்து, தேவையேற்படின் ஒரு தெரிவுக்குழுவை அமைத்து படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டே இனிவரவுள்ள தமிழ்ச் சங்கத்தின் தொகுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்விடத்தில் இளங்கதிர் பத்திராதிபர்களுடைய செம்மைபற்றியும் அவதானித்தல் அவசியம். இளங்கதிர் தாங்கியுள்ள விடயங்களையும் நூறுவீதம் ஏற்றுக்கொள்ளமுடியாமல் இளங்கதிர் இதழாசிரியர்கள் அவ்வக்காலங்களில் தங்கள் அனுபவமின்மைகளால் அல்லது விருப்புவெறுப்புகளால் மலரைப் பாதித்துள்ளனர். உதாரணமாகச் சென்ற ஆண்டு (2000/2001) இளங்கதிரைக் குறிப்பிடமுடியும். எட்டு விருதுகளைப் பெற்று முதலிடம் பெற்ற 'நடந்தாய் வாழி' எனும் நாடகத்தின் படத்தைத் 'தமிழ்ச்சங்க செயற்பாடுகள்' என்னும் பகுதியில் பிரசுரிக்காமல் உதாசீனப்படுத்தி இளங்கதிர் மரபிற்கு மாறாக வேறொரு நாடகப் படத்தை தமது விருப்பத்திற்கேற்ப இளங்கதிர் ஆசிரியர்கள் வெளியிட்டுள்ளனர். இவ்வாறான நடுவுநிலைமையற்ற செயற்பாடுகள் ஒட்டுமொத்தமாக இளங்கதிர்களை ஆராயும்போது தவறான கருத்துக்களை தொகுப்பாளர்களுக்கு ஏற்படுத்தி விடக்கூடும். எனவே தொகுப்பாளர்கள் கடந்த இளங்கதிர் வெளியீடுகளோடு தொடர்புபட்ட பேராசிரியர்களின் ஆலோசனைகளைப் பெற்று உண்மையறிந்தே தொகுப்பில் ஈடுபட வேண்டும். அவ்வாறு ஈடுபட்டால் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் அழிக்கப்படமுடியாத ஒருசில தொகுப்பு நூல்களையேனும் பேராதனைப்பல்கலை வழங்கிப்பெருமை கொள்ள முடியும்.

**வெள்ளத்தின் பெருக்கைப்போல்**
**கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவு மாயின்,**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்**
**விழிபெற்றுப் பதவி கொள்வர்.**

**– சு.பாரதியார். –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அரசியல் அமைப்பு உருவாக்கச் செயன்முறை குறித்த சில அவதானிப்புகள்

இரா.ரமேஷ்,
விரிவுரையாளர்,
அரசறிவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



## அறிமுகம்

கடந்த வருடம் தொடர்ச்சியாக இடம்பெற்ற ஆட்சி மாற்றங்களானது அரசியல் மறுசீரமைப்பு, நல்லாட்சி, ஜனநாயகம், மனித உரிமைகள், ஊழல் மோசடியற்ற ஆட்சி போன்ற வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்தன. அதன் தொடர்ச்சியாக அரசியலமைப்பினை மறுசீரமைத்தல் அதிகாரப் பரவலாக்கம், தேர்தல் மறுசீரமைப்பு, நிறைவேற்று ஜனாதிபதி முறையினை நீக்குதல் என்பன குறித்த முன்னெடுப்புகள் இடம்பெற்றதுடன், அவை தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக பெரியளவிலான கவனத்தை ஈர்த்த விடயங்களாகவும் காணப்படுகின்றன.

புதியதொரு அரசியலமைப்பினை உருவாக்குவதன் மூலம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த இனத்துவ முரண்பாட்டிற்கான தீர்வினை எட்டமுடியும் என்பதும், அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளதக்க ஆட்சி முறையினை உருவாக்கி நல்லாட்சி, ஜனநாயக விழுமியங்களை மேலோங்கச் செய்ய முடியுமென்பதும் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் எதிர்பார்ப்பாகும். எவ்வாறாயினும், அரசியல் அதிகாரத்தினை மீள்கட்டமைத்தல், தற்போதைய அரசியல் அமைப்பின் அடிப்படைத் தத்துவங்களை மறுசீரமைத்தல் ஆகியன காலத்தின் தேவையாகக் காணப்படுவதுடன், அது அரசாங்கம் தாராள நோக்குக் கொண்ட பெரும்பான்மை மக்களினதும், சிறுபான்மை மக்களினதும், சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையினையும் ஆதரவினையும் வென்றெடுப்பதற்குப் பெரிதும் துணையாக அமையும் என நம்பலாம். எல்லாவற்றிற்கும் அப்பால் புதிய அரசியலமைப்பானது நாட்டில் நிலையான சமாதான, அரசியல் இஸ்திரத்தன்மை, சிறுபான்மை மக்களின் மனக்குறைகள் என்பவற்றைப் பிரதிபலிப்பதாக அமையவேண்டும். நீடித்த போர் இடம்பெற்ற, இனங்களுக்கிடையில் குரோத மனப்பாங்குகள் ஆழமாகக் காணப்படுகின்ற பல்லினத்தன்மை கொண்ட நாடுகளில் புதியதொரு அரசியலமைப்பினை உருவாக்குவதென்பது பெரிதும் சவாலான காரியமாகும். அந்தவகையில் தற்போதைய தேசிய ஐக்கிய அரசாங்கம் (National Unity Government) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியில் ஈடுபட்டுள்ளது என்றே கூறவேண்டும். அதேவேளை அரசியலமைப்பு என்பது அரசாங்கத்தின் செயற்பாடு அல்ல. மாறாக அது மக்களால் மக்களின் அங்கிகாரத்துடன், பங்கேற்புடன் உருவாக்கப்படுகின்ற மிக உயர்ந்த ஜனநாயக விழுமியங்களைக் கொண்ட சட்டம் என்பதனையும் நாம் மனங்கொள்ள வேண்டும். உயிர்த்துடிப்புள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக நாடொன்றில் அரசியலமைப்பானது சகல சமூகத்தினரதும் உரிமைகளையும், நலன்களையும், அங்கிகாரத்தினையும், பிரதிபலிப்பதாக அமைய வேண்டுமென்பது அரசியலமைப்பு நிபுணர்கள் தொடர்ந்து வலியுறுத்தும் கருத்தாகும். அத்துடன் அரசியலமைப்பு உருவாக்கச் சபையானது தனிப்பட்ட குழு மற்றும் நிறுவனம் சார்ந்த விருப்பு மற்றும் நலன்களைத் தவிர்த்துக் கொள்வதற்குச் சுயாதீன தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். பொதுவாகவே அரசியலமைப்பு உருவாக்கம் என்பது கலந்துரையாடல், கருத்துப் பகிர்வு, பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டுதல், தனிப்பட்ட கட்சி ஒன்றின் ஆதிக்கத்தினை இல்லாது செய்தல் மற்றும் தனிநபர் குழு மற்றும் சிறுபான்மை உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல் தொடர்பான போராட்டமாகவே காணப்படும்.

ஆகவே, அரசியல் யாப்பு உருவாக்கச் செயன்முறையானது சுயாதீனத்தன்மைக் கொண்ட நிறுவனரீதியான ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். மறுபுறமாக, புதிய அரசியலமைப்பு தற்போதைய அரசியலமைப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளைக் களைந்து, உயர்ந்த ஜனநாயக விழுமியங்கள், நியாயமான அதிகாரப் பரவலாக்கம், மனித உரிமை, சமத்துவம் மற்றும் நல்லாட்சியினை உறுதி செய்வதாகக் காணப்பட வேண்டும் என ஜனநாயகத்திற்காகக் குரல் கொடுக்கும் அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புகள், மத நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் எதிர்பார்க்கின்றனர். தற்போது நாட்டில் காணப்படுகின்ற தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கம் இந்த விடயத்தில் பெரியளவிலான பொறுப்பினைக் கொண்டுள்ளது. உண்மையில், தேசிய அரசாங்கமொன்று புதிய அரசியலமைப்பினை நிறைவேற்றுமாயின் அது தேசிய அரசியலில் மாத்திரமன்றி சர்வதேச அரசியலிலும் ஒரு முக்கிய நிகழ்வாக அமையும்.

புதிய அரசியலமைப்பானது பெரும்பான்மை மக்களை மாத்திரமன்றிப் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் மனக்குறைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும் என்பதுடன், மலையக மற்றும் முஸ்லிம் மக்களின் நலன்களையும் உள்வாங்கியதாக அமைய வேண்டும். மலையக மக்கள் இன்று தேசிய சிறுபான்மை இனமாகப் பரிணமித்துள்ளதுடன், அதற்கான அடிப்படைப் பண்புகளையும் கொண்டுள்ளனர். ஆகவே புதிய அரசியலமைப்பு தேசிய அளவிலான மக்கள் சம்மதத்தைப் பெறத் தவறுமாயின், அது சமூக ஒப்பந்தம் (social contract) என்ற தத்துவத்தை மறுதலிப்பதாக அமைந்துவிடும். இதுவே அரசியலமைப்பு உருவாக்கச் செயல்முறையில் பெரிதும் சவாலான காரியமாகும்.

நிலைமாற்றம் கண்டுள்ள சமூகங்களில் அரசியலமைப்பு உருவாக்கமானது மிகவும் நிதானமாகப் பொறுமையுடன் மேற்கொள்ளப்படவேண்டிய ஓர் அரசியல் செயற்பாடாகும். இங்கு பேரம் பேசுதல், பரஸ்பரக் கருத்துப் பகிர்வு, கருத்து முரண்பாடு, நலன்களை அடைந்து கொள்ளுதல், பதவி நிலைகளைப் பெறுதல், ஆதிக்கம் செலுத்துதல், உடன்பாட்டினை எட்டுதல் ஆகியன வேறுபட்ட குழுக்களிடையே, அரசியல் தலைவர்களிடையே இடம்பெறும். இதனை வெற்றி கொள்வதும் காத்திரமான முறையில் முகாமை செய்வதும் அரசியலமைப்பு உருவாக்கச் செயல்முறையில் ஈடுபடும் தனிப்பட்டவர்கள், குழுக்களிடையே இருக்க வேண்டிய பிரதான திறனாகும். மறுபுறமாக இதற்கு பெரியளவிலான அரசியல் மதிநுட்பமும் பொறுமையும் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்பு ஒரு நாட்டின் மிக உயர்ந்த சட்டமாகக் கருதப்படுவதுடன், ஆட்சியாளர்கள் சட்ட நெறிமுறைக்குள் இருந்து கொண்டு ஜனநாயக ஆட்சியினை மேற்கொள்வதற்கான பரந்த கட்டமைப்பினை வழங்குகின்றது. அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சிறந்த அரசியலமைப்பானது அரசாங்கத்தின் தரத்தினையும் (Quality of government), ஆட்சி முறையின் தரத்தினையும் (Quality of governance) மேம்படுத்துவதற்குப் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் இக்கட்டுரையானது இலங்கையில் அரசியலமைப்பு உருவாக்கம் செயன்முறை, அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், சவால்கள் தொடர்பாக ஆராய்வதாக அமைகின்றது.

**அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறை**

இலங்கையில் அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையினை மூன்று கட்டங்களாக நோக்க முடியும். இதில் முதல் கட்டமானது 2016 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதும் பொது மக்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்குமான பொறிமுறையாகும். இப்பணியினை 21 பேரைக் கொண்ட பொதுமக்கள் கருத்தறியும் குழு மேற்கொண்டது. இக்குழு நாடு முழுவதும் சென்று பொதுமக்கள், சிவில் அமைப்புகள் போன்ற வேறுபட்ட தரப்பினரிடமிருந்து கருத்துக்களையும் மனுக்களையும் பெற்றுக் கொண்டது. இலங்கையின் அரசியலமைப்பு உருவாக்க வரலாற்றில் மக்கள் பங்கேற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக இதனைக் குறிப்பிடலாம். இது பெரிதும் வரவேற்கத்தக்க விடயமாகும். இதன்மூலம் இலங்கைப் பிரஜைகளுக்குப் புதிய அரசியலமைப்புத் தொடர்பாக, அதன் உள்ளடக்கம் தொடர்பாகத் தமது அபிப்பிராயங்களை, எதிர்பார்ப்புகளை வழங்கக் கூடிய வாய்ப்புக் கிட்டியது. உண்மையில், அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையில் மக்கள் பங்கேற்பு என்பது அடிப்படை அம்சமாகும். இது பிரஜைகள் மத்தியில் அரசியலமைப்பு மீது மேலான மதிப்பு, பற்று என்பவற்றினை வளர்ப்பதுடன், உரித்துடைமையினையும் அதிகரிக்கின்றது. உலகில் தென்னாபிரிக்காவிலேயே அரசியலமைப்பு உருவாக்கச் செயல்முறையில் மக்கள் பங்கேற்புக்குப் பரந்த வாய்ப்பு வழங்கப்பட்டதெனக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும் இலங்கையில் மக்கள் கருத்தறியும் செயன்முறை எதிர்பார்த்த அளவிற்கு வினைத்திறன்மிக்கதாக இருக்கவில்லை என்பது வெளிப்படையான குற்றச்சாட்டாகும். பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட குறைந்த கால அவகாசம், அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டக் கையாண்ட நடைமுறைகள், ஊடகங்களின் குறைந்தளவிலான பங்களிப்பு ஆகியன வினைத்திறன் மிக்கவகையில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையாக அமைந்தன என்பது பலரின் கருத்தாகும்.

அண்மையில் மாற்றுக்கொள்கைக்கான நிலையம் (CPA) அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மேற்கொண்ட (October – September, 2016) ஆய்வொன்றில் 1.1 வீதமானவர்களே அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் விழிப்புள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் 21.9 வீதமானவர்கள் இது குறித்து ஓரளவு அறிந்தவர்களாகவும், 34.1 வீதமானவர்கள் இது குறித்து அறிந்துள்ளதாகவும் ஆனால் அதன் உள்ளடக்கம் ஏனைய விபரங்கள் குறித்து எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ள அதேவேளை, 25 வீதமானவர்கள் தற்போதைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறை தொடர்பில் தாம் எதுவும் அறியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். விசேடமாக இவ்வாய்வின்படி 70 வீதமானவர்கள் பொதுமக்கள் கருத்தறியும் குழு குறித்தும், அரசியலமைப்புப் பேரவை குறித்தும் அறியவில்லை எனக் குறிப்பிட்டிருந்தமை வியப்புக்குரிய விடயமாகக் காணப்படுகிறது. இது அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையில் காணப்படுகின்ற தொடர்பாடல் இடைவெளியினைக் காட்டி நிற்கின்றது. உண்மையில் அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையில் மக்கள் பங்கேற்பு அதிகரிக்கும்போது அது அரசியலமைப்பின் சட்டத்தன்மை, ஏற்புடைமை மற்றும் நிலைத்தல் தன்மை என்பவற்றை அதிகரிக்கச் செய்கின்றது என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிற்கும் அப்பால் மக்கள் பங்கேற்பானது ஜனநாயக விழுமியங்களை மேலோங்கச் செய்கின்றது. அரசியல் அமைப்பொன்றின் வெற்றியானது அதனை நடைமுறைக்கு ஏற்றவாறு மாற்றுவதிலேயே தங்கியுள்ளது. அத்துடன் வேறுபட்ட பகுதியினர் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். தற்போது நாட்டில் எழுச்சி அடைந்து வருகின்ற இனத்தேசியவாதம் மற்றும் மத அடிப்படையிலான செயற்பாடுகள் அரசியலமைப்பு உருவாக்கச் செயல்முறையினை சவாலுக்கு உட்படுத்தலாம். ஆகையால் மக்கள் மத்தியில் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கான பொறிமுறையொன்றினை உருவாக்க வேண்டும். அப்பொறிமுறை மக்களின் மனங்களை வென்றெடுக்க வேண்டும். இதற்குத் தென்னாபிரிக்கா, தாய்லாந்து, ஹங்கேரி மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் கையாண்ட உபாயங்களைப் படிப்பினையாகக் கொள்ள முடியும்.

**அரசியலமைப்புப் பேரவை தாபிக்கப்பட்டமை**

அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையின் இரண்டாவது கட்டமானது அரசியலமைப்புப் பேரவையினை தாபித்தலாகும். அரசியலமைப்பு உருவாக்கச் செயல்முறை அரசியலமைப்பு பேரவையின் உருவாக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டது எனக் குறிப்பிடுவது பொருத்தமாகும். 2016 March 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஏகமனதாகக் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் அரசியலமைப்புப் பேரவைக்கான சட்டகம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதன்படி இலங்கைக்கான புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் பொறுப்பு அரசியலமைப்பு பேரவைக்கு வழங்கப்பட்டது. இது இருநூற்று இருபத்தைந்து பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இதன் நோக்கங்கள் அரசியலமைப்பின் உருவாக்கம் யாவரையும் உள்வாங்கியதாக அமைய வேண்டும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் பங்கு, பொறுப்புண்டு என்பதனை உறுதி செய்தல், குறிப்பாக அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையில் நெகிழ்ச்சித் தன்மையைப் பேணுதல், இறுக்கத்தன்மையை தகர்த்தல் மற்றும் பாராளுமன்றத் தாமதம், ஏனைய தடைகளைத் தவிர்த்தல் என்பனவாகும். அரசியலமைப்புப் பேரவையினை நிறுவுவதற்கான தீர்மானமானது அரசியலமைப்புப் பேரவையின் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கென இருபத்தொரு பேரைக் கொண்ட நிலையியற்குழு ஒன்றினைத் தாபிப்பதற்கான அங்கிகாரத்தினை வழங்கியது. இக்குழுவிற்கு பிரதமர் தலைமை தாங்குவதுடன், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் சார்ந்த பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டனர். இக்குழு நகல் அரசியலமைப்பிற்கான முன்மொழிவினைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கும் பொறுப்பு வாய்ந்த பணியினை மேற்கொள்கின்றது. இக்குழு தயாரிக்கும் நகல்திட்டம் அரசியலமைப்புப் பேரவையின் கவனத்திற்கு உள்வாங்கப்படும்.

இந்நிலையியற் குழுவின் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக ஆறு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உபகுழுவிலும் பத்து உறுப்பினர்களும் ஒரு தலைவரும் காணப்படுகின்றார். உப குழுக்கள் முறையே அடிப்படை உரிமை, நீதித்துறை, சட்ட ஒழுங்கு, பொது நிதி, பொதுச்சேவை, மத்திய சுற்றளவு உறவுகள் ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பாக உள்ளன. ஆறு உபகுழுக்களும் மேற்கூறிய விடயங்கள் தொடர்பாகத் துறைசார் நிபுணர்கள், சிவில் அமைப்புகள், அரசியல் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடி தமது அறிக்கைகளை முன்வைத்துள்ளன. மறுபுறமாக, நிலையியற்குழுவானது நாட்டில் நீண்ட காலமாகப் பேசப்பட்டு வருகின்ற முக்கிய பிரச்சினைகளான அதிகாரப் பரவலாக்கம், தேர்தல் மறுசீரமைப்பு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, மதம், இறைமை, காணி, அரசின் தன்மை ஆகியன தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது. இக்குழு துறைசார் நிபுணர்கள், மாகாண ஆளுனர்கள், முதலமைச்சர்கள், சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் போன்ற வேறுப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து வருகின்றது.

நிலையியற் குழுவின் இரண்டாவது கூட்டம் 2016 ஏப்ரல் மாதம் இடம்பெற்றபோது நிலையியற் குழுவினதும் உப குழுக்களினதும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யவும் வசதியளிக்கவும் முகாமைத்துவக்குழு (management committee) ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு ஐந்து பேரைக் கொண்டுள்ளது. உண்மையில் நிலையியற்குழு புதிய அரசியலமைப்பின் அடிப்படைத் தத்துவங்கள் அடங்கிய இடைக்கால அறிக்கையினை நவம்பர் மாதம் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்பட்டபோதும் இதுவரையில் (இக்கட்டுரை எழுதும் வரையில்) இடம்பெறவில்லை. இதற்குத் தேர்தல் முறை, அதிகாரப் பரவலாக்கம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடர்பாகக் கருத்தொருமைப்பாடு எட்டப்படாமையே காரணமாகும்.

வேறுவகையில் கூறுவதாயின் தேர்தல் மறுசீரமைப்பு விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காட்டுகின்ற அக்கறையினை அதிகாரப் பரவலாக்கம் மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர்பாகக் காட்டுவதில்லை. மறுபுறமாக ஐக்கிய தேசியக் கட்சி, மலையக மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் என்பவற்றால் முன்மொழியப்பட்டுள்ள கலப்புத் தேர்தல் முறை தொடர்பாக பெரிதும் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. புதிய தேர்தல் முறை அமுல்படுத்தப்படும் பட்சத்தில் அது கிராமிய மக்களின் மீது இன்றும் செல்வாக்குச் செலுத்திவரும் மஹிந்த ராஜபக்ஷ அணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத்தர வழிசெய்யும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். மறுபுறமாக, சிறுபான்மைக் கட்சிகள் புதிய தேர்தல் முறையின் மூலம் தமது அரசியல் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். உண்மையில், அரசியலமைப்பின் அடிப்படை தத்துவங்கள் தொடர்பாகப் பிரதான அரசியல் கட்சிகளிடையே தாராள நோக்கு ஏற்படவில்லை என்பதனையே இது வெளிக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் காணப்படும் கால தாமதத்திற்கு இது பிரதான காரணமாகும். இடைக்கால அறிக்கை அரசியலமைப்பு பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதன் நன்மைகள் மற்றும் ஏனைய உள்ளடக்கம் குறித்து விவாதிக்கப்படும். அதன்பின்னர் அரசியலமைப்புப் பேரவையில் வழங்கப்படும் திருத்தங்களுடன் ஒரு இறுதி அறிக்கை நகல் அரசியலமைப்புக்கான முன்மொழிவுடன் அரசியல் அமைப்புப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

### அரசியலமைப்பினை நிறைவேற்றுதல்

மூன்றாவது கட்டமானது அரசியல் அமைப்பினை நிறைவேற்றுதலாகும். குறிப்பாக, நகல் அரசியலமைப்பு அரசியலமைப்பு பேரவையில் 2/3 பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்படும். அதேவேளை அரசியலமைப்புப் பேரவையும் கலைக்கப்படும். மறுபுறமாக நகல் அரசியல் அமைப்புக்கான முன்மொழிவு அரசியல் அமைப்புப் பேரவையில் சாதாரண பெரும்பான்மையில் அங்கீகரிக்கப்படுமாயின் அதனைப் பாராளுமன்றம் ஒருமாத காலத்துக்குள் மீள்பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும். ஏற்கனவே குறிப்பிட்டதனைப் போன்று 2/3 பெரும்பான்மையில் அங்கிகரிக்கப்படுமாயின், அது பின்னர் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படும். இறுதியாக அமைச்சரவையின் அனுமதியுடன் நகல் அரசியலமைப்புக்கான முன்மொழிவு அரசியலமைப்பு மசோதாவாக (Constitutional Bill) மாற்றப்படும். பின்னர் அது பாராளுமன்றத்தில் பழைய அரசியலமைப்பினை நீக்குதல் மற்றும் புதிய அரசியலமைப்பினை நிறைவேற்றுவதற்குமான மசோதாவாகச் சமர்ப்பிக்கப்படும். பின்னர் அரசியலமைப்பு மசோதா பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையினாலும் மக்கள் தீர்ப்பினாலும் அங்கீகரிக்கப்படுவதுடன், புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும்.

எவ்வாறாயினும் தற்போது காணப்படுகின்ற சமூகப் பொருளாதார அரசியல் சூழமைவானது அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையின் வினைத்திறனை இழுத்தடிக்கச் செய்யலாம். குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் நிறைவேற்று ஜனாதிபதி முறையினை இல்லாது செய்தால் தம்மால் அரசாங்க வளங்களை அனுபவிக்க முடியாது போகலாம் அல்லது அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினை எதிர்த்துப் போட்டியிடத் தேவையான அரசாங்க அனுசரணை மற்றும் வளங்கள் இல்லாது போகும் என எண்ணக்கூடும். ஆகையால் அரசியல் அமைப்பின் அடிப்படைத் தத்துவங்கள் தொடர்பாகக் கருத்தொருமைப்பாட்டினை எட்டுதல் என்பது பெரிதும் சவாலாக அமையும். எவ்வாறாயினும் ஜனாதிபதி அவர்கள் தேர்தல் காலத்தில் உறுதியளித்தபடி புதிய அரசியலமைப்பினை உருவாக்குதல், நிறைவேற்று ஜனாதிபதி முறையினை நீக்குதல் என்ற தளத்திலிருந்து விலகிச்செல்ல முடியாத நிலையில் காணப்படுகின்றார்.

### முடிவுரை

இலங்கையில் அரசியல் அமைப்பு உருவாக்கமானது ஜனநாயக சட்டகத்துக்கு உட்பட்டதாக அமைய வேண்டும். வேறு வகையில் கூறுவதாயின், அரசியலமைப்பு உருவாக்கமானது ஒரு நாட்டில் வாழும் வேறுப்பட்ட சமூகக் குழுக்களின் வினைத்திறன் மிக்க பங்கேற்புடன், புதிய ஜனநாயக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தினை உயர் சட்டத்தன்மையினை நோக்கி நகர்வதற்கு வழிசெய்வதாக அமைய வேண்டும். இது உயிர்த்துடிப்புள்ள ஜனநாயகத்தின் அடிப்படையாகும். இங்கு பிறிதொரு விடயத்தினையும் குறிப்பிட வேண்டும் - சில சமயங்களில் அரசியலமைப்பு உருவாக்கமானது ஆபத்தானதாகவும் அமையலாம். இவை பலவீனமான, செயற்திறன் குன்றிய அரசுகள் உருவாக வழி செய்கின்றன. ஆகவே இத்தகைய ஆபத்துக்களைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்தல் மிக முக்கிய சவாலாகும். அரசியலமைப்பு உருவாக்கம் என்பது இலட்சிய அரசு (ideal state) ஒன்றினை உருவாக்குதல் அல்லது மிகச்சிறந்த குணாதசியங்களைக் கொண்ட அரசியலமைப்பினை உருவாக்குதல் என்பதனைத் தாண்டி, ஜனநாயகம் சீர்குலையாதிருப்பதனை உறுதி செய்யும் வகையிலான அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையினைக் கடைப்பிடிக்க வேண்டும்.

பெரும்பாலான நாடுகளில் முறையான அரசியலமைப்பு (formal constitution) காணப்படுகின்றது, ஆயினும் அவை ஜனநாயக விழுமியங்களை மறுதலித்துள்ளன. இதற்கு இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பு சிறந்த உதாரணமாகும். ஆகவே இத்தகைய சவால்களை முகாமை செய்வதற்கு வேறுபட்ட மட்டத்திலான பரந்துபட்ட கலந்துரையாடல், பொதுஜன அபிப்பிராயம், பங்கேற்பு, ஊடகப் பிரசாரம், விழிப்புணர்வு, விவாதம், செயலமர்வுகள், ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள் அவசியமாகும். இந்த ஒட்டுமொத்த செயன்முறையும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் அமைய வேண்டும். போதிய மக்களின் அங்கீகாரத்தைப் பெறும் யாப்பானது சமூக ஒப்பந்தம் என்ற உயர் அந்தஸ்தினைப் பெறுகின்றது. ஆகவே இலங்கையில் அரசியல் அமைப்பு உருவாக்கச் செயன்முறையானது இத்தகைய விடயங்களைக் கவனத்தில் கொள்வது காலத்தின் தேவையாகும். அவை வெற்றிகரமானதும் வினைத்திறன் மிக்கதுமான அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையினை நோக்கிய பயணத்திற்கு பெரிதும் துணையாக அமையும். உண்மையில், ஒரு நாட்டில் ஆட்சி முறையின் மீது பிரஜைகளின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதிலும், ஆட்சி முறையின் தரத்தினை உயர்த்துவதிலும் அரசியலமைப்பு மற்றும் அதன் அடிப்படைத் தத்துவங்கள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை மனங்கொள்ளவேண்டும். பின்வரும் கூற்றுடன் இக்கட்டுரையினை நிறைவு செய்வது பொருத்தமாகும். "*நன்கு வடிவமைக்கப்பட்ட அரசியலமைப்பானது ஜனநாயக நிறுவனங்கள் உய்வு பெறுவதற்கு வழிவகுக்கும், அதேவேளை மோசமாக வடிவமைக்கப்பட்ட அரசியலமைப்பானது ஜனநாயக நிறுவனங்கள் நலிந்து செல்வதற்கும், இஸ்திரமற்ற ஆட்சி, அரசியல் சூழல் உருவாகவும் வழிவகுக்கும்*".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரலேகா கிங்ஸ்லியின் கவிதைகள்
## - சில அறிமுகக் குறிப்புகள் -

பெருமாள் சரவணகுமார்,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



இலங்கைப் பெண் கவிதை வரலாற்றில் மலையகப் பெண் கவிதைகள் தனித்துவமான சமூக, பண்பாட்டு, அரசியல் பின்புலங்களைக் கொண்டுள்ளன. மலையகப் பெண் கவிதைகள் பெருந்தோட்டப் பொருளாதார உற்பத்தி உறவுகளையும் அவ்வுற்பத்தி உறவுகள் தோற்றுவிக்கின்ற வாழ்க்கை முறைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. இவற்றோடு, 1990 களில் தமிழ்ச் சூழலில் முக்கியத்துவம் பெறத்தொடங்கிய பெண்ணியக் கருத்துநிலைகளும் மலையகப் பெண் கவிதைப் பரப்பில் சிறப்பிடம் பெறத்தொடங்கியன. இலங்கையில் பெண்ணியக் கருத்துநிலைகளைத் தேசிய ரீதியில் முன்னெடுத்த பெண்ணியவாதிகளும், இடதுசாரிகளும் மலையகப் பெண்கள் குறித்தும் பேசியும் எழுதியும் வந்துள்ளனர். இதன் காரணமாக மலையகப் பெண்கள் மத்தியில் பெண்ணியச் சிந்தனைகளும், பெண்ணியக் கோட்பாடுகளும் அறிமுகமானதோடு, பெண்ணியம் சார்ந்து இயங்குகின்ற இயக்கநிலைப்பட்ட செயற்பாட்டாளர்களையும் தோற்றுவித்தது. இவ்வகையான ஒரு சமூகப் பின்புலத்தில் மேற்கிளம்பிய பெண் கவிஞையாகவும் சமூகச் செயற்பாட்டாளராகவும் சந்திரலேகா கிங்ஸ்லி விளங்குகின்றார்.

சந்திரலேகா கிங்ஸ்லியின் கவிதைகள் தாயகம், ஊடறு, தேட்டம், கலையருவி, புதுவசந்தம் முதலான சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இக்கட்டுரை சஞ்சிகைகளில் வெளிவந்த அவரது கவிதைகளை அடிப்படையாகக் கொண்டது. அவ்வகையில் அவரது 'கிருசாந்திகளும் கிருமினல்களும்', 'ஆரியவதிகளும் ஆணிகளும்', 'அகலிகையே முனிவனும் கல்லானான்', 'நாளை ஒரு நாள்', 'இவைகள் கதைகள் - முடிவல்ல', 'அது வரை', 'வலிமை', 'நீண்ட கனவு', 'கற்கள் - கவண்கள் - தாவீது', 'மனுசி', 'தீர்ப்பு', 'இன்னும் இருக்கின்றது பூமி' முதலான கவிதைகள் அதிக கவனத்துக்குரியவை.

சந்திரலேகா கிங்ஸ்லின் கவிதைகள் பல்வேறு பொருண்மைகளில் இயக்கம் கொள்கின்றன. ஆணாதிக்கச் சமூகச் சூழலில் பெண் என்ற பால்நிலைப் பாரபட்சம் எவ்வெவ் நிலைகளில் காட்டப்படுகின்றன என்பதும் இனத்துவ அரசியலின் பிற்போக்குத்தனங்களை வெளிப்படுத்தும் அதேவேளை ஒடுக்குமுறைகளுக்கெதிரான எதிர்ப்புக்குரலாக அவரது கவிதைகள் எவ்வாறு அமைகின்றன என்பதும் விரிவாக நோக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

இவற்றோடு, மலையகத்தின் தொழிற்சங்க அரசியலின் பிற்போக்கு அம்சங்களையும் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற இனவாத அரசியலின் குரூரத்தையும் மிகத் தீவிரமாக விமர்சிக்கும் கவிதைகளைத் தனித்து ஆராயவேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக இலக்கியப் பரப்பில் பெண்ணியச் சிந்தனைகளைக் கவிதைகளுடாக வெளிப்படுத்தியவர்களுள் சந்திரலேகா கிங்ஸ்லியும் ஒருவர். ஆண்களால் கட்டமைக்கப்பட்ட எல்லா வகையான வரையறைகளிலிருந்தும் பெண் விடுதலை பெறவேண்டும் என்பதை மிக அழுத்தமாகவே அவரது கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. குடும்ப, சமூக, தொழில்நிலைகளில் காட்டப்படும் பால்நிலை பாரபட்சத்துக்கு எதிரான குரலாகவே அவரது மனுசி, வலிமை, இன்னும் இருக்கிறது பூமி முதலான கவிதைகள் அமைந்துள்ள.

சந்திரலேகா கிங்ஸ்லியின் 'வலிமை' என்ற கவிதை தலைமுறைகளுக் கிடையிலான இடைவெளியைக் காட்டுகிறது. சமூக மாற்றத்துக்கேற்ப பெண் பற்றிய நோக்குநிலையும் மாறவேண்டும் என்பதைப் பதிவுசெய்கின்றது அக்கவிதை. எல்லா அடக்கு முறைகளிலிருந்தும் பெண் விடுதலை பெறுவாள் என்ற நம்பிக்கையை விதைப்பதாகவும், பெண்ணை வலிமைப்படுத்துவதாகவும் புதிய சிந்தனையை உடையவளாகவும், அதிகாரப் பூட்டுக்களை உடைத்தெறியும் ஆற்றல் உடையவளாகவும் அக்கவிதை எடுத்துரைக்கிறது. அக்கவிதை வருமாறு:

*"நான் என் பூட்டியின் சாயலல்ல*
*என் பாட்டியின் பிம்பமல்ல*
*என் அம்மாவின் அச்சுமல்ல*
*நான் புதிய படைப்பு*
*என் சிறகுகள் வலிமையானவை*
*என் சிறகுகள் மிக வலிமையானவை*
*என் சிறகுகள் மிகமிக வலிமையானவை*
*என் வார்த்தைகளில் துப்பாக்கியுமுண்டு*
*பூட்டுக்களை உடைத்தெறிந்த*
*புதிய சிந்தனை விதைகள்*
*எனக்குள் உண்டு*
*நிசியிருட்டைக் கிழித்துக்கொண்டு*
*ஓங்கிய அந்த அதிர்வில்*
*சர்வ அலங்காரமும் சரிந்துப் போயின*
*விடுதலைக்கு வித்திட*
*வேகமாய் விரைந்துப் போனாள்*
*வீதி அவளுக்கென்று விசாலமானது"*

'இன்னும் இருக்கிறது பூமி' என்ற கவிதையிலும் ஆண்களின் அதிகார முகம் உடைக்கப்படுவதைக் காணலாம். பெண்ணின் ஒவ்வொரு அசைவும், அவளது நடமாடும் வெளியும் ஆண்களால் தீர்மானிக்கப்படுவதை எதிர்ப்பதாகக் கவிதை அமைகிறது.

*"நினைவில் இருப்பதெல்லாம்*
*ஒவ்வொரு பொழுதும் மாறி மாறி வரும்*
*ஏச்சுகளும் பேச்சுகளும்*
*இழிவான வார்த்தைகளும்*
*இழுத்துக் கோணும் முகங்களும்*
*வார்த்தை வழுக்கி விழுந்தாலும்*
*பழி போடும் பாவங்களும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் வஞ்சகம்
வாசலில் நிற்கு மென்ற வக்கிரமும்
சுதந்திரமாய் சுகங்களைக்கூட
சுமக்கமுடியாத ரணங்களும்
கனவுகளைக்கூட கட்டவிழ்த்து
ரசிக்கமுடியாத ரணங்களும்
இன்னும் நீண்டு போகின்ற அவைகளும்
...........................................................
பெண்ணே எதையும் இழந்துவிடாதே
இன்னுமிருக்கிறது பூமி
எல்லைக்கோடு வரை
உன் கோசங்கள் ஒலிக்கட்டும்
உன் போராட்டங்கள்
நெருப்புப் பூக்களாய் பூக்கட்டும்
உன்னால் தானே
இன்னும் இந்த பூமி
இப்படியழகாய் இருக்கிறது"

'உன் போராட்டங்கள் நெருப்புப் பூக்களாய்ப் பூக்கட்டும்', 'பெண்ணே எதையும் இழந்துவிடாதே இன்னுமிருக்கிறது பூமி', 'உன்னால் தானே இந்த பூமி இப்படியழகாய் இருக்கிறது' முதலான கவிவரிகள் கவிதைக்கு மேலதிக அழுத்தத்தைக் கொடுக்கின்றன. ஆண்களின் ஒடுக்குமுறைக்கெதிரான பிறிதொரு கவிதையாகவே மனுசி என்ற கவிதையும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கவிதை சமூக வெளியில் மட்டுமல்ல குடும்ப அமைப்புக்குள்ளும் பெண் அடக்குமுறை இடம்பெறுவதை அடையாளப்படுத்துவதோடு, அதற்கெதிரான எதிப்புக் குரலாகவும் அமைகிறது.

சந்திரலேகா கிங்ஸ்லியின் 'அகலிகையே முனிவனும் கல்லானான்" என்ற கவிதையும் புதிய கருத்தியலை வெளிப்படுத்துகின்றது. அகலிகை பற்றிய தொன்மக் கதைமரபுகள் பல உள்ளன. அத்தொன்மக் கதைமரபுகளை நவீன சமூகத் தேவைக்கேற்ப மறுவாசிப்பும் மறுபடைப்பும் செய்தவர்கள் பலர். சந்திரலேகா கிங்ஸ்லி அகலிகையாக படிமமாக்கும் பெண் இக்காலத்துக்குரியவள். ஒவ்வொரு காலத்திலும் பெண் என்ற போர்வையில் பெண்ணைக் கல்லாக்கும் அரசியல் நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றது. புராண காலத்தில் கல்லாக்கப்பட்டவளுக்கும் நவீன காலத்தில் கல்லாக்கப்பட்டவளுக்கும் பெரிய வேறுபாடு இல்லை. ஒவ்வொரு காலத்திலும் இயக்கம் கொண்ட நுண்ணரசியலே காரணம் என்பதை பதிவுசெய்வதாகவே அகலிகையே முனிவனும் கல்லானான் என்ற கவிதை விளங்குகின்றது. இக்கவிதையில் கவிஞர் படிமமாக்கியுள்ள முனிவனும் சமகாலத்துக்குரிய மேட்டிமைச் சக்தியாகவே அமைந்துவிடுகின்றது. அக்கவிதை வருமாறு:

"
...........................................................
முள் வேலிகளுக்குள் அகதிகளாய் ஆக்கிவிட்டு
ஏறாத சிங்காசனங்கள் எல்லாம் ஏறி
ஏமாற்றும் வித்தை காட்டி
விந்தைகள் பல செய்த போதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காணாது நிற்கும் முனிவா*
*நீ அகலிகையை மட்டும் ஏன் நோக்கினாய்?*
*அதிகாரமும் பணபலமும்*
*முனிவன் உன் கண்களை முற்றுகையிட்டதோ?*
*அகலிகையின் சிந்தனைகள்*
*ஆக்ரோசமாய் நிமிர்ந்த போது*
*முனிவனே நீ கல்லாகிப் போனாய்*
*முனிவனே நீ கல்லான செய்தி*
*இனி எந்தப் புராணத்தில் வரும்? "*

இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடு ஆயுதப் போராட்டமாக வடிவங்கொண்டபோது அதிகளவு பாதிக்கப்பட்டவர்களாகப் பெண்களே விளங்கினர். அரசப்படைகளின் ஆதரவோடு மிகக் கொடூரமான பாலியல் துஷ்பிரயோகங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. பெண்கள் கடத்தப்படுதல், கொலை செய்யப்படுதல் எனச் சிங்கள இனவாதிகளின் வன்முறைகள் நீண்டுகொண்டே சென்றன. ஆயுதப் போராட்டங்கள் நடைபெற்ற பகுதிகளிலும் அதற்கு வெளியிலும் பெண்கள் வன்முறைக்கு ஆளாகினார்கள். இவ்வகையான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பல பெண் கவிஞர்கள் கவிதைகளை எழுதினர். அவ்வாறு எழுதப்பட்ட கவிதைகளுள் கவிஞர் கலாவின் கோணேஸ்வரிகள், விநோதினியின் கிருஷாந்தி முதலான கவிதைகள் தனித்துவம் மிக்கவை. இவ்வகையான கவிதைகளோடு இணைத்துப்பார்க்கக் கூடியதாக சந்திரலேகா கிங்ஸ்லியின் கிருசாந்திகளும் கிருமினல்களும், நாளை ஒரு நாள், தீர்ப்பு முதலான கவிதைகளும் விளங்குகின்றன.

*கிருசாந்திகளும் கிருமினல்களும்* என்ற கவிதை அரசப்படையினரின் பாலியல் வன்முறைகளை அம்பலப்படுத்துவதாகவும் அவ்வன்முறை அரச ஆதரவோடு எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றது என்பதையும் வெளிப்படுத்தும் அதேவேளை அவ்வன்முறைக்கு எதிரான உரத்தக் குரலாகவும் அமைகிறது.

"...........................................

*கிருசாந்தியும்*
*அங்கு தேவையாக உலா வந்தவள்*
*காக்கிச் சட்டையுடன்*
*ஆட்சி அதிகாரத்தைக்*
*கட்டவிழ்த்து விட்டவர்களின் கண்களில்*
*ஆயுதப்பரிகாரிகளின் நெஞ்சங்களில்*
*பெண்ணென்னும் பெயர் புகுமுன்*
*அங்கங்களின் ஆகர்சிப்பு*
*நுழைந்து நுரைதள்ளிப்*
*பசி அவர்களை பாதி மிருகமாக்கியது*
*கண்களில் காமருசி*
*தேவதைகளைச் சாப்பிடுமளவு முறுக்கேறிப்போனது*
*கிருசாந்திகள் மண்ணில்*
*இழிவுப் பண்டமென ருசி பார்க்கப்பட்டார்கள்*
*ஓ கிருஷ்ண பரமாத்மாக்களே*
*நல்லூர்க் கந்தர்களே*
*நாராய்ப் பிழியப்பட்ட அபலைகளின் நெஞ்சத்தை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விலையே சொல்லப்படாமல்*
*விலைமாது போல் வீணாக்கப் பட்டாள்*
*காமப் பிசாசுக்களின் கண்களுக்கும்*
*அதிகார வர்க்கத்தின் ஆயுதம் ஏந்திய மகான்களுக்கும்*
*நீதியின் விலை சொற்பமானது*
*கிரிமினல்கள் இரட்சகர்கள் ஆக்கப்பட்டார்கள்*
*பாவம் கிருசாந்திகள் மட்டும்"*

'நாளை ஒரு நாள்', 'தீர்ப்பு' முதலான கவிதைகளிலும் பாலியல் பலாத்காரத்துக்கெதிரான எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலிப்பதை அவதானிக்கலாம். கவிஞரின் ஆத்திரமும் ஆவேசமும் நாளை ஒரு நாள் கவிதையில் வீச்சோடு வெளிப்படுவதைக் காணமுடிகின்றது.

*"....................................*
*உன் உணர்வுகள் நைந்து போயின*
*உன் சவ்வுகள் உடைந்து போயின*
*உன் கனவுகள் நொருங்கின*
*உன் காத்திருப்புகள் கருகிப் போயின*
*யாரும் உன்னைக்*
*கண்டு கொள்ளவேயில்லை*

*..................................................*
*மேய்ப்பர்கள்*
*செம்மறிகளைத் தின்று தீர்ப்பது*
*பூமிக்கு புதிதல்ல*
*நம் மண்ணுக்கும் கூட*
*உறங்குகின்ற எரிமலைகள்*
*சீக்கிரமே வெடிக்கட்டும்*
*அவன் நஞ்சுண்ட கண்டனானாலும்*
*சாம்பலாவான் - சாவான்*
*செத்துப் போவதற்கு முன்*
*ஒரு செய்தி....*
*காமுகனே உனக்கும்*
*நாளை*
*பெண்கள் பிறப்பார்கள்"*

'தீர்ப்பு' என்ற கவிதையும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு எதிரான பிறிதொரு கவிதையாக உள்ளது. சிட்டுக்குருவிகளாய் பறந்து திரியும் குழந்தைகளைக்கூடப் பாலியல் பலாத்காரம் செய்யும் கொடுமையைச் சாடுவதாகவே இக்கவிதை விளங்குகின்றது.

*"சிட்டுக்குருவியாய்*
*உலாவந்த*
*தேவதையின் சிறகுகளை*
*பிய்த்து... பிய்த்துப் பிரித்து*
*தூக்குக் கயிறாக்கிய துஸ்டனே*
*மூன்று முரட்டு ஆண்மையின்*
*கோரப்பிடியில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அந்த ரோஜா இதழ்*
*உதிர்ந்து போனதா?*
*பூத்து பூசைக்கு போகுமுன்*
*பூவுக்குள் பூகம்பம் புகுத்திய*
*பொல்லாதவர்களே''.*

'கிருசாந்திகளும் கிரிமினல்களும்', 'நாளை ஒரு நாள்', 'தீர்ப்பு' முதலான கவிதைகள் முன்னிறுத்துகின்ற அரசியல் பார்வை புறநிலையானது. இலங்கைப் பெண் கவிதை வெளியில் அரசப் படைகளின் வன்முறைகள் குறித்து வெளிவந்த பல கவிதைகள் தமிழ்த் தேசியவாதக் கருத்துநிலையின் பின்புலத்தில் அமைந்தவை. தமிழ்ப் பெண்கள், சிங்களப் பெண்கள் என்றவகையிலான இனத்துவப் பார்வை பல பெண் கவிஞர்களிடையே இருந்தது. இவ்வகையான இனத்துவ அரசியல் பார்வை அற்றவர்களில் சந்திரலேகா கிங்ஸ்லியும் ஒருவர் என்பதை அவரது கவிதைகள் பிரதிபலிக்கின்றன. வன்முறைகளுக்கு ஆளாகின்ற பெண்கள் அனைவரினதும் ஒருமித்த குரலாகவே அவரது கவிதைகள் அமைந்துள்ளன. இலங்கைப் பெண் கவிதைப் பரப்பில் சிங்கள அரசப் படையினரின் பாலியல் வன்முறைகள் குறித்து எழுதப்பட்ட கவிதைகளுள் சந்திரலேகா கிங்ஸ்லியின் இக்கவிதைகள் பொருளாலும் அதனை மொழிப்படுத்திய விதத்தாலும் சிறப்பிடம் பெறுகின்றன எனலாம்.

இலங்கைப் பெண்களில் கணிசமானவர்கள் வறுமையின் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டு வேலை செய்பவர்களாக இருக்கின்றனர். வறுமையின் காரணமாகச் சொந்தக் குடும்பத்தை விட்டுச் சென்றவர்கள் படும் துயரங்கள் அதிகம். தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காய்ச் சென்றவர்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையே தொலைப்பவர்களாகவும் மாறிவிடுகின்றனர். பெற்றோரின் அரவணைப்புக் கிடைக்காமல் அவர்களது பிள்ளைகளும் திசைமாறிப் போய்விடுகிறார்கள். பெற்றோரின் பாதுகாப்பில் இல்லாத குழந்தைகள் பாலியல் ரீதியான துஸ்பிரயோகத்துக்கும் ஆளாகிவிடுகின்றனர். மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற பெண்களுக்கு வீட்டு உரிமையாளனின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிடுகின்றது. நிறைவேற்றாத சந்தர்ப்பத்தில் அவளது உயிருக்கும் ஆபத்து உருவாகின்றது. வீட்டு வேலைக்கு என ஏமாற்றி அவளைச் சுயதேவைகளுக்காகப் பயன்படுத்துகின்ற கொடுமையும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. வேலைக்கென அழைத்து அவளை வைத்து வியாபாரம் நடத்தப்படுகின்றது. வீட்டு எஜமானின் விருப்புக்கு இணங்காத பெண்களின் உடம்பில் ஆணி அடிக்கும் அளவுக்குக் கொடுமைகள் நடைபெறுகின்றன. இவ்வகையான பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு கவிதைகளை எழுதியவர்களுள் சந்திரலேகா கிங்ஸ்லி மிக முக்கியமானவர். அவரது ஆரியவதிகளும் ஆணிகளும் என்ற கவிதை அவ்வகையில் குறிப்பிடத்தக்கது. மலையகப் பெண்கள், முஸ்லிம் பெண்கள், சிங்களப் பெண்கள் என்றவகையிலான இனத்துவச் சட்டகம் எதுவுமின்றி இன எல்லைக்கடந்த பெண்களின் ஒருமித்த குரலாக ஒலிக்கும் கவிதையாகவே ஆரியவதிகளும் ஆணிகளும் என்ற கவிதை அமைகின்றது.

சந்திரலேகா கிங்ஸ்லியின் அதுவரை, இவைகள் கதைகள் - முடிவல்ல, நீண்ட கனவு முதலான கவிதைகள் பெண் என்ற அடையாளத்துக்கும் அப்பால் இனத்துவம், இனவாத அரசியல், ஒடுக்குமுறைகள் முதலானவை பற்றிப் பேசுகின்றன. பெண்ணியக் கருத்துநிலை என்ற சட்டகத்துக்குள் மட்டும் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் இயக்கம் கொள்ளவில்லை. ஒடுக்குமுறைகள் எங்கெல்லாம் இடம்பெறுகின்றனவோ அதற்கு எதிரான தர்ம ஆவேசமாகவே அவரது பெரும்பாலான கவிதைகள் விளங்குகின்றன எனலாம். அவரது கவிதைகளிலிருந்து சில எடுத்துக்காட்டுகள்:

"..........................................................................

*ஜீவகாருண்யம் - பௌத்த மதத்தில் அதிகம்*
*புத்தமதம் பூசிக்கப்படும் பூமி*
*அதற்கான அடையாளங்கள்?*
*இரத்த ஆறுகளா?*

...............................................

*நாளை*
*நானும் என் ஜனங்களும்*
*சுனிலும், சுபையரும், சுப்பிரமணியமும்*
*ஒரே புதைக்குழியில்*
*புதைக்கப்பட்டு விடுவோம்......*
*ராஜா – சிவப்பு மேலங்கியுடன்*
*சிம்மாசனமேறி*
*கோலோச்சுவான்*
*மனிதர்கள் மட்டும் இருக்கமாட்டார்கள்".*

இக்கவிதையில் வரும் ராஜா, சிவப்பு மேலங்கி முதலான தொடர்கள் குறியீடகளாய் விரிகின்றன. பௌத்த மதத்தின் ஜீவகாருண்யம் அரசியலில் எவ்வாறெல்லாம் சிதைக்கப்படுகிறது என்பதையும் அதிகாரத்தில் இருப்பவர்களது இனத்துவப் பார்வை எவ்வாறு ஒட்டுமொத்த சமுதாயத்தையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கிறது என்பதையும் இக்கவிதை வெளிப்படுத்துகின்றது.

*அதுவரை, நீண்ட கனவு* ஆகிய இரண்டு கவிதைளும் ஒடுக்குமுறைகளுக்கெதிரான போராட்டத்தையும் சமத்துவமான சமூக வாழ்வையும் வலியுறுத்தவனவாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

"..................................................................

*எழுது எழுதிக்கொண்டேயிரு*
*மகத்துவமான மானுடம்*
*ஒடுக்கப்பட்டு*
*ஓட ஓட துரத்தப்பட்டு*
*சின்னஞ் சிறியனாய் அடக்கப்பட்ட*
*அனைத்தும் விடுதலை பெறமட்டும்*
*நீ......*
*பாடு பாடிக்கொண்டேயிரு*
*இதயமில்லாமல் ஊனப்பட்டுப் போன*
*மரக்கட்டைகள்*
*மீண்டும் எழும்பி மானுட வாழ்வை*
*தேடும்வரை ..............பாடு .....*
*போர்க்களப் பறைகள் ஓயும்வரை*
*மானுட நேயமற்ற மனங்கள்*
*சாகும்வரை*
*நட நடந்து கொண்டேயிரு"* என்று **எது வரை** என்ற கவிதையிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"உணர்வுடன் உதிரத்துடன்*
*வாழ்வின் அர்த்தங்களிலிருந்தும் எதிர்பார்ப்புகளிலிருந்தும்*
*அடக்கி ஒடுக்கப்பட்ட ஆத்திரங்களுடன்*
*இதயத்துக்குள் எரிமலையின் கனவு*
*எப்பொழுதும் நிஜமாகி நிற்கின்ற நீண்ட பெரும் நிஜக் கனவு*
*புதிரான பூமியைப் புரட்டிப் போடும் கனவு*
*இந்தக் கனவைச் சொல்லுவதும் வெல்லுவதும் கூடப்*
*போராட்டக் கனவு*
*எப்பொழுதாவது*
*பூமியை பிளந்து, புதிர்களைக் கடந்து*
*பூகம்பமாய்ப் பலித்துவிடும் பெருங்கனவு"*

என்று நீண்ட கனவு என்ற கவிதையிலும் சமத்துவமான சமுதாயம் ஒன்றின் அவா மேலோங்கி இருப்பதைக் காணமுடிகின்றது.

சந்திரலேகா கிங்ஸ்லி ஒரு சமூகச் செயற்பாட்டாளர். சமூக அசைவை உன்னிப்பாக அவதானித்து வருபவர். இதனால் அவரது கவிதைகள் பெரும்பாலும் புறவுலகு பற்றியதாக அமைந்துவிடுகின்றன. பெரும்பாலான ஈழத்துப் பெண் கவிதைகள் அகவுலகு பற்றியனவாகவே இருக்கின்றன. சந்திரலேகா கிங்ஸ்லி புறவுலக வாழ்வை அதற்கேவுரிய சமூக, தத்துவார்த்தப் பின்புலத்தோடு பார்ப்பதனால் அவரது கவிதைகள் பெறுமதி வாய்ந்தவையாக விளங்குகின்றன. அவரது கவிதைகளின் எடுத்துரைப்புமுறை என்பது ஒற்றைப்படையானதாகவே அமைந்துவிடுவதை அவதானிக்கமுடிகின்றது. அவரது கவிதைகள் பன்முகத்தன்மையை நோக்கி நகரும் போது அவர் மேலும் கவனிப்புக்குள்ளாகும் கவிஞையாகத் திகழ்வார். அவரது கவிதைகள் தொகுப்பு வடிவம் பெறும்போது மலையகப் பெண் கவிதைப் பரப்பிலும், இலங்கைப் பெண் கவிதைப் பரப்பிலும் அதிக முக்கியத்துவம் பெறும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

**பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு**
**முத்தமிட்டுச் சொன்னது பூமி**
**"ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ"**

**— தமிழன்பன். —**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் – ஆண்மை – பெண்ணியம்

**எம்.எம். ஜெயசீலன்,**
**விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



ஆண், ஆண்மை என்பவற்றின் எதிர்வில் இயக்கம் கொள்ளும் பெண்ணியம், இயற்கையான உடற்கூற்றியல் அம்சங்களுடன் பௌதீக பண்பாட்டம்சங்களையும் சேர்த்து ஆண் - ஆண்மை, பெண் - பெண்மை எனக் கற்பிதம் செய்யப்பட்டுள்ளவற்றின் போலிகளைத் தகர்த்தெறிய முனைவதுடன் ஆண், ஆண்மை என்ற அடையாளம் பெண் உடல் மீது நிகழ்த்தும் அத்துமீறல்களையும் அம்பலப்படுத்திவருகின்றது. அவ்வகையில் இலங்கைப் பெண் கவிஞர்கள் ஆண், ஆண்மை என்ற கற்பிதங்களில் கட்டப்பட்டுள்ள போலிகளைத் தோலுரித்துப் பெண்களின் சுயாதீனமான இருத்தலை நிலைநிறுத்த முனையுமாற்றினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழ்ச் சமூக வரலாற்றில் பண்டைய காலத்திலேயே ஆணுக்கானதும் பெண்ணுக்கானதுமான வெவ்வேறு உலகங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளதோடு அவ்வவ் உலகங்களுக்கான ஒழுக்க விழுமியங்கள் கொண்ட அற உடல்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அவ் அற உடல்களுள் ஆணுக்குப் பெருமை, வலிமை, புகழ், அறிவு, கடமை, உரிமை, ஆள்வினை, செயலூக்கமான பாலியல், அதிகாரம் ஆகியவை வேறாகவும் பெண்ணுக்கு உடல் அழகு, மென்மை, பணிவு, அடங்கிய பாலியல், கற்பு ஒழுக்கம், சேவைச்செயல், மடமை, நாணம் ஆகியவை வேறாகவும் கற்பிக்கப்பட்டுள்ளதோடு ஆண்களின் சான்றாண்மை, ஈகை, வீரம், செல்வமுடைமை, தவம், தானம், ஆளுமை முதலிய உயர் அறங்களுக்கு ஈடாகப் பெண்களுக்கு கற்பு – பதிவிரதா தர்மம் என்ற ஒன்றே கற்பிக்கப்பட்டுள்ளது. (ராஜ்கௌதமன், 1997, அறம் அதிகாரம்) இப்புனைவுகளானது ஆணை அதிகாரத்தின் இருப்பிடமாகவும் அவனது அதிகாரப்பரப்பிற்குள் அண்டி வாழ்பவளாகப் பெண்ணையும் கட்டமைத்துள்ளது. அத்துடன் அசமத்துவமான இக்கட்டமைப்பினைத் தொடர்ந்து பேணும் வகையில் காலத்துக்கு காலம் பல கருத்துருவங்கள் உற்பத்தியாக்கப்பட்டும் வருகின்றன. அக்கருத்துருவங்கள் பெரிதும் பெருமை X சிறுமை, தூய்மை X துடக்கு, புனிதம் X அல்புனிதம், சுத்தம் X அசுத்தம் போன்ற இணைமுரணைக் கற்பித்து முன்னதை உயர்ந்ததாகவும் பின்னதை தாழ்ந்ததாகவும் வடிவமைத்துள்ளன. இவற்றுள் உயர்வானதாகக் கருதப்படுகின்ற பெருமை, தூய்மை, புனிதம் போன்றவை தந்தையாதிக்கச் சமூகம் உருவாக்கியுள்ள ஆணின் அதிகாரப் பரப்புக்குள் அடங்கி வாழும் பெண்ணுக்குக் கிடைக்கும் சிறப்பு, கௌரவம் என வரையறை செய்யப்பட்டுள்ளன. ஆகவே, மேலான, விரும்பத்தக்க பெண்ணாக வேண்டுமென்றால் ஆணின் அதிகார வட்டத்துக்குள் அடங்கியவர்களாகப் பெண்கள் வாழ வேண்டும். இத்தகைய அடங்கிய வாழ்வினை விரும்பி ஏற்றுக் கடைப்பிடித்த பெண்களே தமிழ்ச் சமூக வரலாற்றில் மேலானவளாகவும் தெய்வாம்சம் கொண்டவளாகவும் போற்றப்பட்டு வந்துள்ளனர். இக்கற்பிதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் சுயாதீனமான இருத்தலுக்கு தடையாக உள்ளன என்பதை உணர்ந்த பெண்கள் மரபு ரீதியான அப்பெண் படிமத்தைச் சிதைத்துக் கேள்விக்குட்படுத்தி வருகின்றனர். எடுத்துக்காட்டாக,

*"ஆதிமுதல் போற்றிவரும்*
*அந்தக் கிரீடங்களின் மீது*
*அவமதிப்பை விட்டெறிகின்றேன்" (பஹீமா ஜஹான்)*

எனப் பெண்ணின் அணிகலன்களாகப் பண்டுதொட்டு கற்பிக்கப்பட்டவற்றின் மீது தனது பகிரங்க எதிர்ப்பைத் தெரிவிக்கும் பஹீமா ஜஹான், அவ் அணிகலன்களில் சூட்டப்பட்டிருந்த புனிதப் போர்வையை அகற்றி எறிந்துள்ளார். அத்தோடு வாழ்வின் விதிமுறைகளாகக் கற்பிக்கப்பட்டு இருவேறு துருவங்களில் நிறுத்தப்பட்டுள்ள சமத்துவமற்ற ஆண், பெண் உலக இயக்கங்களைப் பலர் சிதைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக,

*"இன்னும்*
*இந்த ஒரே உலகத்திலேயேதான்*
*இருக்கின்றன*
*எனக்கும் அவனுக்குமான*
*வெவ்வேறு உலகங்கள்"*

என இவ் ஒரே உலகத்திலேயே இயக்கம் கொள்ளும் ஆணுக்கும் பெண்ணுக்குமான வெவ்வேறான உலகங்களை இனங்கண்ட பெண்கள், அவ் உலகங்களுள் அதிகாரத்தின் இருப்பிடமாக ஆண் உலகமும் அவ் அதிகாரப் பரப்பிற்குள் அண்டி இயங்குவதாகப் பெண் உலகமும் புனையப்பட்டுள்ள தந்தையாதிக்கக் கருத்தோட்டத்தை முற்றிலும் நிராகரிக்கின்றனர். எடுத்துக்காட்டாக,

*"சாமர்த்தியங்களுடன் வருவான்*
*நேர்மையுடன் வருவாள்*
*தந்திரங்களை வழங்குவான்*
*நம்பிக்கைகளை வழங்குவாள்*
*நிறங்களை மாற்றிக்கொண்டிருப்பான்*
*ஒளியினை அணிந்துகொண்டிருப்பாள்*
*தொடுவான்*
*உணர்வாள்*
*அவனுடையவைகள் சுயநலங்கள் சார்ந்தவை*
*அவளுடையவை தியாகங்கள் சார்ந்தவை" (அனார்)*

என்று அதிகாரத்தின் உறைவிடமாகக் கூறப்பட்ட ஆண் உலகு நேர்மை, நம்பிக்கை, தியாகம் என்பவற்றுக்கு மாறாக சாமர்த்தியம், தந்திரம், சந்தர்ப்பவாதம் கொண்ட சுயநலங்களால் இயக்கம் கொள்கின்றது என ஆண்களால் உருவாக்கப்பட்டுள்ள ஒழுக்க விழுமியங்களைக் கொண்டே ஆண் உலகை நகைக்கிறார், அனார். அத்தோடு ஆதியிலிருந்தே ஆண் தன் தோள்களிலும் தலைகளிலும் சுமந்துவரும் அவனுடைய உலகு பெண்ணின் இருத்தலில் எப்போதுமே அச்சத்தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்துவதாகக் கூறும் பெண்கள் அவ் இருவேறு உலக இயக்கங்களில் பெண்ணின் விடுதலை சாத்தியமில்லை என்பதை உரத்துக் கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நானாக அவனும் அவனாக நானும்*
*சாத்தியமில்லை*
*எனது சந்தோசங்கள் அவனது சந்தேகங்கள்*
*எனது ஆசைகள் அவன் கற்பனை செய்யாதவை*
*அவனது ஆசைகள் என்னை அடிமை கொள்பவை" (றஞ்சனி)*

என அவ்வுலக இயக்கங்களின் உண்மைத் தன்மையை, அசமத்துவத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தும் பெண்கள், தந்தையாதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ள இருவேறு உலகினை மொத்தமாய் நிராகரிக்கின்றனர். எடுத்துக்காட்டாக, ஆண்களும், ஆண்களால் உருவாக்கப்பட்ட கடவுளர்களும் திட்டமிட்டுப் படைத்த இருவேறு உலக நியதிகளின் அசமத்துவத்தினை,

*"நான் அட்டக் கறுப்பி*
*அவன் ஆயிரம் பொன்*
*நான் பொட்டை நாய்*
*அவன் ஆம்பிளைச் சிங்கம்*
*நான் வேசை*
*அவன் சேத்துல மிதிச்சு ஆத்தில துடைக்கலாம்*
*நான் மலடி*
*அவன் சாண்பிள்ளை எண்டாலும் ஆண்பிள்ளை*
*நான் ஊரோடி*
*அவன் சமூகத் தொண்டன்*
*என வெளிச்சமிட்டுக் காட்டும் ஆழியாள்,*
*ஆதலால் பரமபிதாவே!*
*நீ வெண்தாடியோ சடாமுடியோ*
*அர்த்த நாரீஸ்வரரோ அருவமோ உருவமோ*
*ஆராய் வேண்டிலும் இருந்து விட்டுப்போம்*
*ஆனால் ஈரேழு உலகங்கள்*
*அண்டம் ஆகாசம் என்று அறளை பத்தாமல்*
*அடுத்த தடவை தன்னும்*
*உருப்படியாய் படையும்*
*ஒரே உலகத்தை" (ஆழியாள்)*

எனச் சமத்துவமான ஓர் உலகைப் படைக்குமாறு புவியைத் திரட்டி உருட்டிப் படைத்த பரமபிதாவுக்குக் கட்டளைப் பிறப்பிக்கின்றார். அத்துடன் இந்த ஆண், பெண் இணைந்த ஓர் உலக உருவாக்கம் என்ற கருத்திலிருந்து விலகி, பெண்களை உள்ளடக்காத சட்டம், மொழி முதலிய ஆண் அதிகார உற்பத்திகள் யாவற்றிலிருந்தும் விட்டு விடுதலையாகித் தமக்கான உலகினைத் தாமே படைக்கவும் பெண்கள் பலர் முன்வந்துள்ளனர். ஆண்களால் படைக்கப்பட்ட உலகத்தில் ஆண்களின் வார்ப்பாக வடிக்கப்பட்டுள்ள பெண்களில் பெண்ணின் சுயத்தினை அறியமுடியவில்லை என்பதைப் பிரதீபா,

*"நீ*
*படிக்கச் சொன்ன புத்தகம்*
*பார்க்கத் தந்த நாடகம்*
*எதிலும்*
*என்னைக் காணவில்லை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவர்கள்*
*நீ படைத்த பெண்கள்*
*உண்மையில் நான் வேறு" (பிரதீபா)*

எனப் பதிவுசெய்கின்றார். அதனால் பெண்கள் தம் சுயத்தோடு வாழக்கூடிய புதிய உலகினைப் படைக்க முனைகின்றனர். ஆண்-ஆண்மை என்ற அரியாசனத்திலிருந்து அதிகாரம் செலுத்தும் ஆணை, அவனது ஆண்மையைக் கேலிக்கும், நகைப்புக்கும் உள்ளாக்குவதன் மூலம் ஆதியிலிருந்து தொடரும் அத்திமிர் மீதான தமது எதிர்ப்பினைப் பெண்கள் வெளிப்படுத்திவருகின்றனர். எடுத்துக்காட்டாக,

*"தன் மகனுக்கும்*
*ஆண்மையின் இலக்கணத்தை,*
*அறிவிப்பதாய்...*
*தினம் தினம் தாரத்துடன் சண்டையிட்டான்*
*அவளை*
*எட்டிப் பிடித்து*
*கன்னம் வீங்க கைவிரல் பதித்து*
*முஸ்டியால் குத்தி*
*முட்டி வீழ்த்தி*
*கூந்தல் பற்றி*
*சுவத்தில் சாத்தி*
*ஓங்கி அறைந்து ஒரு உதையும் போட்டான்*
*ஒவ்வொரு ஸ்டெப்பாய்*
*ஒயிலாய் பழக்கினான் மகனுக்கும்!" (முகைசிரா முகைடீன்)*

என அறிவு, நிறைவு என்றெல்லாம் கூறப்பட்டு ஆண்மை என்ற போர்வையில் கட்டப்பட்டிருந்த மேன்மை எனும் இலக்கணம் மனைவியை துன்புறுத்துவதில் தான் முழுமைப்பெறுவதாக நகைக்கிறார், முகைசிரா முகைடீன். அத்துடன் தந்தையாதிக்கச் சமூகம் ஆணின் சுயத்தை எவ்வாறு கட்டமைத்துள்ளது என்பதை பின்வருமாறு அம்பலப்படுத்தியுள்ளார் கல்யாணி:

*"நான்*
*உயர்ந்தவன் உன்னதமானவன்*
*தனித்துவமானவன்*
*நான் ஆண்*
*ஆண் என்பதால்*
*ஆற்றல் உள்ளவன்*
*அனைத்தும் அறிபவன்*
*குற்றம் செய்ய முடியாதவன்*
*குற்றம் இருந்தாலும்*
*மன்னிக்கப்பட வேண்டியவன்*
*ஏனெனில்*

*நான் ஆண் குறியை உடையவன்" (கல்யாணி)* என ஆணின் உயர்வுக்கும், உன்னதத்திற்கும், தனித்துவத்திற்கும், குற்றமற்றதற்கும், குற்றம் இருந்தாலும் மன்னிப்பதற்கும், போற்றுதற்கும், கட்டுப்பாடற்றதற்கும், சந்தோசத்திற்கும் அவனது ஆண்குறியே காரணமென்று ஆணாதிக்கத்தின் இருப்பின் மையமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்குறியினை முன்னிறுத்தியுள்ள தந்தையாதிக்கச் சமூகத்தின் நசிந்துபோன சிந்தனை இங்கு வெளிச்சமிட்டுக்காட்டப்பட்டுள்ளது. இந்நசிந்துபோன சிந்தனையின் வாரிசுகள் தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், தமது வேட்கைகளைத் தணித்துக் கொள்ளவும் பெண் உடலை உணர்ச்சிகளற்ற பாலியல் பண்டமாகக் கருதி அவ்வுடல் மீதான அத்துமீறல்களை நிகழ்த்துகின்றனர். அவ் அத்துமீறல்களைக் கணவன், அப்பா, மாமா, நண்பர், ஊரவர், அரச படையினர், விடுதலைப் போராளிகள், அமைதிப் படையினர், புலம்பெயர்ந்தவர்கள் என யாவரும் எவ்வித பேதமுமின்றி கச்சிதமாய் செய்துமுடிக்கின்றனர் என்பதைப் பதிவு செய்துள்ளனர். அதனால் ஆதியிலிருந்து தொடரும் ஆணின் இவ் அதிகாரச் செருக்குக்கு அடிப்படையாக அமைவதாகக் கருதப்படுகின்ற ஆண்மை எனும் ஆணவம் அறுத்தெறியப்படும்வரை பால்சமத்துவம் சாத்தியமில்லை என்பதைப் பலரும் வெளிப்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக,

*"வோட்கா நிரப்பப்பட்ட*
*உனது கண்ணாடிக் குவளையில்*
*எலுமிச்சை சீவல்களாய்*
*எனது கனவுகளோடு வாழ்வும்*
*கரைந்து போனதேன் என்ற*
*எனதொரு கேள்விக்கு*
*உன்னிடம் விடையில்லை*
*உன்னைப் படைத்த*
*உன்னப்பனின் ஆண்மையிடமும்*
*விடையிருக்கப் போவதில்லை*
*அம்மிக்கல்லில் அடித்து நொறுக்கப்படும்*
*சிதறுதேங்காய்போல்*
*உனதாண்மை நொறுக்கப்படும்போது*
*வோட்காவிலும் பியரிலும்*
*கரைந்துபோன கணங்களிலிருந்து*
*எனக்கான பதில் கண்டடையக்கூடும்" (பானுபாரதி)*

என்று ஆண்கள் சூடியுள்ள ஆண்மையை அம்மிக்கலில்லில் அடித்து நொறுக்கப்படும் சிதறு தேங்காய்போல நொறுக்கப்படும்போதே பெண்ணின் வாழ்வும் இருப்பும் முழுமை பெறும் என்கிறார் பானுபாரதி. அத்துடன் ஆண் அதிகார இருப்பின் மையமாகக் கருதப்படுகின்ற ஆண்மையை நிராகரிப்பதாகவே பெண்களின் ஆண் உடல் மறுப்பு எனும் தன்பால் சேர்க்கை அமைகின்றது. எடுத்துக்காட்டாக:

*"மகாராணி முன்*
*அரசவம்சத்தின் பல்லாண்டுச் செருக்குகளோடு*
*நான் அமர்ந்திருப்பதை*
*உள்ளூர வியந்தவள் ரசிப்பதை*
*நானும் ரசித்து போதையேற்றுவதற்கு*
*இரவாகிய கறுப்பு திராட்சையை ருசிப்பதற்கு...*
*எல்லாவிதமான அயர்ச்சிகளையும் மறந்து*
*நான் நிர்வாணமாகும் போது*
*மகாராணி புன்னகைப்பாள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கரும்பச்சைக் கண்ணாடிக்குள் கேட்டுக்கொண்டிருக்கும்*
*காமத்தின் வேட்கை மிகுந்த சங்கீதம்*
*உன் உடல் மாபெரும் இசை*
*மற்றும் எல்லையற்ற பச்சைவெளி என்பாள்*
*என்னருகில் மகாராணி" (அனார்)*

இக்கவிதை இதுவரை காலமும் பெண்கள் தமக்கே உரியது, யாரிடமும் பகிரக்கூடாது என அந்தரங்கமாகப் பேணிய அவர்களது பாலின்பக் கிளர்ச்சிகளைப் பகிரங்கமாக்கியுள்ளதோடு பெண்ணின் பாலின்பத்திற்கு ஆண் துணை அவசியம் இல்லை என்பதையும் பதிவுசெய்துள்ளது. இவ் அந்தரங்கக் கவிழ்ப்பும், ஆண் துணை நிராகரிப்பும் ஆண் அதிகாரத்தை ஆட்டிப்பிடுங்கி எறியும் செயற்பாடாகவே கருதப்படுகின்றது.

ஆணாதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ள மரபுசார் பெண்படிமத்தை முற்றிலும் நிராகரிக்கும் பெண்கள், அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை எல்லாம் தாண்டி சுதந்திரமாக வாழத்துடிக்கின்றனர்.

*"காலம் காலமாக நீ வகுத்த*
*விதிமுறைகளின் வார்ப்பாக*
*அவள் இருக்க வேண்டுமென்றே*
*இப்போதும் எதிர்பார்க்கிறாய்*
*எல்லா இடங்களிலும்*
*அவளது கழுத்தை நெரித்திடவே*
*நெருங்கிவருகிறது உனது ஆதிக்கம்*
*அவள் அவளாக வாழவேண்டும்*
*வழிவிடு" (பஹீமா ஜஹான்)*

என்ற உணர்ச்சிக்கொந்தளிப்பு காலம்காலமாகப் பெண்கள் தம் சுயம் இழந்து ஆணாதிக்கத்தின் வார்ப்பாக வாழ்ந்ததில் இருந்து விடுபட்டுப் பெண் பெண்ணாகத் தன் சுயத்தோடு வாழ வெளிக்கிளம்புவதைக் காட்டுகின்றது. அத்தோடு பண்டுதொட்டு பெண்ணின் அடையாளங்களாக ஆண்கள் கற்பித்தவற்றினை நிராகரித்துப் பெண் என்ற தன் சுயத்தை முதன்மைப்படுத்தும் பெண்கள்,

*"நீங்கள் உருவாக்கிய*
*பெண்மை*
*எனது அடையாளமல்ல*
*நான் பெண்*
*பிறக்கும்போதே" (றஞ்சனி)*

எனக் கலாசாரப் போர்வையில் பெண்களுக்கு ஆண்கள் அணிவித்துள்ள அடையாளங்களைக் களைந்து தமது சுய அடையாளங்களை நிலைநிறுத்தியுள்ளனர். இவ்வாறு இலங்கைப் பெண் கவிஞர்கள் ஆணாதிக்கச் சமூகம் ஆண்-ஆண்மை, பெண்-பெண்மை எனக் கட்டமைத்துள்ள படிமங்களைக் கேள்விக்குட்படுத்தியுள்ளதோடு அச்சமூகம் வரையறுத்துள்ளவை யாவும் பெண்ணின் சுய அடையாளங்களல்ல அவை பெண்ணை அடக்கி வைப்பதற்கும் அவளின் சுயாதீனமான இருத்தலை தடை செய்வதற்கும் ஆணாதிக்கம் உருவாக்கியுள்ள பொறிமுறை என்பதை அப்பட்டமாகப் பதிவு செய்துள்ளதுடன் அவற்றுக்கு எதிரான கலகத்தையும் முன்னிறுத்தியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியம் மீதான போர்த்துக்கேயரது மேலாதிக்கமும் சுதேச ஆட்சியாளர்களது எதிர் நடவடிக்கைகளும் - ஒரு வரலாற்று நோக்கு

க.ஜெயதீஸ்வரன்,
விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



## அறிமுகம்

தென்னாசிய நாடுகளிலே தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்டு விளங்கும் நாடு என்ற பெருமை இலங்கைக்கு உண்டு. இவ்வாறு விளங்கும் இலங்கையின் வரலாற்று வளர்ச்சியில் இடைக்காலமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. இதற்குக் காரணம் பண்டைக்காலம் முதல் தென்பகுதியின் சிங்கள அரசுகளது எழுச்சி மற்றும் அவற்றின் மேலாண்மை பற்றிக் கூறிவந்த இலக்கிய மற்றும் தொல்லியல் ஆதாரங்கள் வடபகுதியில் நாகதீப பண்பாட்டு அடித்தளத்திலிருந்து முகிழ்த்திருந்த தமிழ் அரசுபற்றி ஆதாரபூர்வமாகத் தெரிவிக்கின்ற அதேவேளை தென்பகுதியில் கோட்டை, கண்டி ஆகிய அரசுகள் தோற்றம் பெற்றிருந்ததையும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வரசுகள் நிலவிவந்த காலப்பகுதியில் காலடி பதித்த போர்த்துக்கேயர் முதலில் கோட்டை அரசுடன் தொடர்பை ஏற்படுத்தி அங்கு காணப்பட்ட அரசியல் குழப்பநிலைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கோட்டை அரசை கி.பி 1597 ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்டனர். அதன் பின் யாழ்ப்பாண அரசை கி.பி 1619 ஆம் ஆண்டு தம்வசமாக்கிக் கொண்டனர். கண்டி அரசைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்ட அவர்களுக்கு அது முடியாத காரியமாகவே இறுதிவரை இருந்தது. மதம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் காலடி பதித்த இவர்கள் தம்வசம் இருந்த பகுதிகளில் உள்ள சுதேசிகள் மத்தியில் அவற்றை முன்னெடுக்கும்போது சலுகைகள் வழங்கியும் அடக்குமுறைகளைக் கையாண்டும் முன்னெடுத்து வந்தனர். இவர்களது இந் நடவடிக்கையானது இப்பகுதிகளில் புதியதொரு பண்பாட்டின் ஊடுருவலை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தது. குறிப்பாக, வடபகுதியில் யாழ்ப்பாண அரசைப் பொறுத்தவரை பெரும்பாலான மக்கள் தமிழ் மொழி பேசுவோராகவும், இந்துப் பண்பாட்டில் மூழ்கியோராகவும் காணப்பட்டனர். அதேவேளை தென்பகுதியில் கோட்டை அரசைப் பொறுத்தவரை பெரும்பாலானவர்கள் சிங்கள மொழி பேசுவோராகவும் பௌத்தப் பண்பாட்டில் மூழ்கியோராகவும் காணப்பட்டனர். எனவே, இருபகுதியிலும் வாழ்ந்துவந்த பெரும்பாலான ஆட்சியாளர்கள் முதல் சுதேசிகள் வரை தமது தனித்துவப் பண்பாட்டைப் பாதுகாக்கும் வகையில் போர்த்துக்கேயரது ஆதிக்கம் ஏற்பட்டது முதல் முடிவுறும் வரை அவர்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்தனர். குறிப்பாக யாழ்ப்பாண இராச்சியத்தில் சங்கிலி மன்னன் செகராசசேகரன் காலம் முதல் சங்கிலி குமாரன் காலம் வரை ஆட்சிபுரிந்த மன்னர்கள் தமது தனித்துவப் பண்பாட்டைப் பாதுகாக்கும் வகையில் போர்த்துக்கேயருக்கு எதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேசிகளது ஆதரவுடன் போராடி வந்தனர். எனினும் சில ஆட்சியாளரும் சுதேசிகளும் அவர்களது சலுகைகளுக்கு மயங்கி அவர்களது விசுவாசிகளாக வாழ்ந்து வந்ததுடன் ஆட்சியாளரதும் சுதேசிகளதும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகள் தோல்வியடையவும் காரணமாய் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### போர்த்துக்கேயரது இலங்கை வருகை

ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக வளர்ந்து வந்த அறிவியல் துறைகளைப் பயன்படுத்தி சில ஏகாதிபத்திய நோக்குக்கொண்ட அரசுகள் தமது ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கையை 'நாடுகாண் பயணங்கள்' என்ற எண்ணக்கருவினூடாக முன்னெடுத்து வந்தன. காலணித்துவ ஆட்சியாளர்களில் ஒருவரான போர்த்துக்கேயர் கி.பி 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கீழைத்தேய நாடுகள் மீது தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர். இதன் விளைவு அந்நாடுகளது ஒட்டுமொத்த வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படத்தொடங்கியது. தமது கீழைத்தேய நடவடிக்கைகளுக்கான தலைமையகமாகக் கோவாவினை கொண்டிருந்த அவர்கள் எதிர்பாராத விதமாகவே இலங்கையில் காலடி பதித்தனர். இவர்கள் இலங்கை வந்த காலப்பகுதியில் இலங்கையானது கோட்டை, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் என மூன்று ஆட்சிப் புலங்களாகப் பிரிந்திருந்ததுடன் இவற்றுக்கிடையே முரண்பாடுகளும் நிலவியிருந்தன. இத்தகைய சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய போர்த்துக்கேயர் அப்பகுதியின் ஆட்சியாளர்களுடன் உறவை ஏற்படுத்தி இறுதியில் அவ்வரசுகளைக் கைப்பற்றிக் கொண்டனர். அவ்வகையில் முதலில் கோட்டை அரசையும் பின்னர் யாழ்ப்பாண அரசையும் கைப்பற்றிக் கொண்ட அவர்கள் கண்டி அரசைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டபோது அது அவர்களுக்கு இயலாத காரியமாகவே இறுதிவரை இருந்தது.

இவ்வரசுகள் மீது போர்த்துக்கேயரது மேலாண்மை ஏற்பட முன்பும் ஏற்பட்ட பின்பும் சுதேசிகள் அவர்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்தனர் என்பது வரலாற்று உண்மையாகும். எனினும் அவற்றையெல்லாம் முறியடித்து தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியமை போர்த்துக்கேயரது தனிச்சிறப்பாகும். இதற்கு ஒருசில சுதேசிகள் ஆதரவு வழங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

### கோட்டை அரசு மீதான மேலாதிக்கமும் ஆட்சியாளர்களதும் மக்களதும் எதிர் நடவடிக்கைகளும்.

போர்த்துக்கேயர் காலித்துறைமுகத்தை அடைந்தபோது கோட்டையின் ஆட்சியாளனாக எட்டாம் வீரபராக்கிரமபாகு விளங்கினான். போர்த்துக்கேயர் கோட்டை மன்னனை சந்திக்க விரும்பியபோது அவர்களைச் சுற்றுப்பாதை ஊடாகவே சுதேசிகள் மன்னனிடம் அழைத்துச் சென்றனர். இச்சம்பவமானது சுதேசிகள் இவர்கள் மீது வைத்திருந்த வெறுப்பைப் பிரதிபலிப்பதாக உள்ளது. இவ்வாறு மன்னனைச் சந்தித்த அவர்கள் இலங்கையில் வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டனர். இதேவேளை எட்டாம் வீரபராக்கிரமபாகுவின் பின்னர் கோட்டை அரசில் ஆட்சி உரிமை சம்மந்தமான போட்டி வலுவடையத் தொடங்கியது. அவ்வகையில் கோட்டை மன்னாக இருந்த தர்மபராக்கிரமபாகு அவனது தம்பியான விஜயபாகுவால் ஆபத்து ஏற்படும் என அஞ்சி போர்த்துக்கேயரது உதவியை நாடினான். இதனை சாதகமாகப் பயன்படுத்திய போர்த்துக்கேயர் கொழும்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை கட்டும் உரிமையைப் பெற்றுக்கொண்டதன் மூலம் தமது செல்வாக்கை கோட்டை அரசில் ஏற்படுத்தத் தொடங்கினர். அதேவேளை விஜயபாகு தமையனிடமிருந்து அரசைக் கைப்பற்றியதுடன் போர்த்துக்கேயரது நடவடிக்கைகளை நிறுத்தும் நோக்குடன் கள்ளிக்கோட்டை சமோரினின் உதவியைப் பெற்று அவர்களுக்கு எதிராக செயற்பட்டு வந்தான். இவனே போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்ட முதல் மன்னனாகவும் திகழ்கின்றான். போர்த்துக்கேயரது கோட்டையைத் தகர்க்கும் முயற்சியில் ஈடுபட்ட இவன் தோல்வியைத் தழுவியதன் பின் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படுவதை நிறுத்திக் கொண்டான்.

விஜயபாகுவின் பின்னர் கோட்டை அரசு மேலும் ஸ்திரமற்ற நிலையை அடையத் தொடங்கியது. அதாவது இவனின் பின்னர் கோட்டை அரசு அவனது மகன்களால் மூன்றாகப் பகிரப்பட்டு ஆளப்பட்டு வந்ததுடன் இவர்களிடையே முரண்பாடுகளும் நிலவி வந்தன. இவ்வாறான சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கோட்டை அரசின் அரசியல் நடவடிக்கையில் போர்த்துக்கேயர் தலையிடத் தொடங்கினர். அதற்கு அக்காலத்தில் கோட்டை அரசின் ஆட்சியாளனாக இருந்த புவனேகபாகு களம் அமைத்துக் கொடுத்திருந்தான். இதன்பின்னர் போர்த்துக்கேயரது தலையீடு கோட்டை அரசில் அதிகரிக்கத் தொடங்கியதுடன் சுதேசிகளது எதிர்ப்புணர்வும் வலுவடையத் தொடங்கியது. அவ்வகையில் புவனேகபாகுவின் போர்த்துக்கேயருடனான உறவினை விரும்பாத சுதேசிகள் தமது எதிர்ப்பை வெளியிடும் வகையில் கோட்டை அரசிலிருந்து வெளியேறி சீதாவாக்கை அரசில் குடியேறினர். இதேவேளை சீதாவாக்கை ஆட்சியாளனான மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும் இயக்கத்திற்கு தலைமைதாங்கும் விடுதலை வீரனாக அவதாரம் எடுத்தான். இவன் 1562 ஆம் ஆண்டு போர்த்துக்கேயருக்கு எதிராக முல்லேரியா என்ற இடத்தில் மேற்கொண்ட போரானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த போராக அமைந்திருந்தது. இவ்வாறாக சுதேசிகளிடையே காலத்திற்கு காலம் எதிர்ப்புக்கள் கிளம்பிவந்தபோதும் போர்த்துக்கேயர் அவற்றைச் சமாளித்து தமது செல்வாக்கை நிலைநாட்டி வந்தனர்.

புவனேகபாகுவின் மரணத்தைத் தொடர்ந்து அவனது பேரனான தர்மபாலனை ஆட்சியாளராக நியமித்த போர்த்துக்கேயர் அவனை தமது கைப்பொம்மையாக வைத்திருந்து தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். இதனை விரும்பாத இவனது தந்தை விதிய பண்டார போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டதுடன் கத்தோலிக்கத் தேவாலயங்களை அழித்துவந்தான். இவனைக் கைதுசெய்யும் முயற்சியில் போர்த்துக்கேயர் ஈடுபட்டபோது அங்கிருந்து தப்பி யாழ்ப்பாண அரசில் தஞ்சமடைந்தான். அங்கிருந்தும் போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்பட்டுவந்த வேளையிலேயே மரணமானான். இதேவேளை கோட்டை அரசன் தர்மபாலன் மரணமானதைத் தொடர்ந்து அவன் எழுதிக்கொடுத்த மரணசாசனத்தின் அடிப்படையில் 1597 ஆம் ஆண்டு கோட்டை அரசின் ஆட்சி உரிமையைப் போர்த்துக்கேயர் பெற்றுக் கொண்டதுடன் தமது நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொண்டு வந்தனர். இதேவேளை கோட்டையிலிருந்து போர்த்துக்கேயரைத் துரத்தும் நோக்குடன் சீதாவாக்கை, கண்டி மற்றும் யாழ்ப்பாண ஆட்சியாளர்கள், சுதேசிகள் இணைந்து பலமுறை முயன்றும் அவை பயனற்றவையாகவே முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டி அரசு மீதான மேலாண்மையும் ஆட்சியாளர்களதும் குடிமக்களதும் எதிர்நடவடிக்கைகளும்**

கோட்டை அரசை தம்வசப்படுத்திய போர்த்துக்கேயர் கண்டி அரசின் மீது தமது மேலாண்மையை ஏற்படுத்த முயற்சிசெய்து வந்தனர். கண்டி அரசைப் பொறுத்தவரை அதன் ஆட்சியாளனாகக் காணப்பட்ட விக்கிரமபாகுவின் காலத்திலிருந்தே போர்த்துக்கேயர் தமது தொடர்பை ஏற்படுத்தி வந்தனர். ஆரம்பகாலங்களில் இருபகுதியிடையேயும் சுமுகமான உறவுநிலையே ஏற்பட்டிருந்தது. குறிப்பாக மாயாதுன்னை 1545 ஆம் ஆண்டு கண்டி மீது படையெடுப்பை மேற்கொண்டபோது விக்கிரமபாகு அதற்கெதிராகச் செயற்படும் பொருட்டு போர்த்துக்கேயரது உதவியை நாடியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. விக்கிரமபாகுவின் மறைவின்பின் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலையின் காரணமாகப் போர்த்துக்கேயர் கண்டியரசில் தலையிடும் நிலை ஏற்பட்டு வந்தது. ஆனால் விமலதர்மசூரியன் கண்டியின் அரசுரிமையைப் பெற்றதும் போர்த்துக்கேயருக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கின. 1594 ஆம் ஆண்டு போர்த்துக்கேயருக்கு எதிராக விமலதர்மசூரியன் 'தந்துரே' என்ற இடத்தில் நிகழ்த்திய போரானது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அமைந்தது. அதன் பின் போர்த்துக்கேயர் கண்டி அரசைக் கைப்பற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர். இதற்காகப் பல தளபதிகளைப் பயன்படுத்தி பல முறை படையெடுப்புக்களை மேற்கொண்டபோதும் தோல்வியையே தழுவி வந்தனர். இப் படையெடுப்புக்களில் ஈடுபட்ட தளபதிகளில் முக்கியமானவனாக டி- அசவிடோ என்பவன் குறிப்பிடத்தக்கவனாக விளங்குகின்றான்.

கண்டிமீது மேலாண்மையை ஏற்படுத்த போர்த்துக்கேயர் பல முறை முயன்றும் அது இயலாத காரியமாகவே இருந்தது. அதற்குக் காரணம் மன்னனும் சுதேசிகளும் கொண்டிருந்த எதிர்ப்புணர்வே ஆகும். இவ்வாறான நிலையிலேயே விமலதர்மசூரியன் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்த துரத்தும் நோக்குடன் ஒல்லாந்தரது உதவியை நாடினான். இவ்வாறான நிலையிலேயே கண்டி அரசன் இராஜசிங்கன் காலத்தில் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரது பகுதிகளைக் கைப்பற்றி தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர்.

**யாழ்ப்பாண இராச்சியமும் போர்த்துக்கேயரது மேலாதிக்கமும்**

நாகதீப அரச மரபின் தொடர்ச்சியில் மலர்ந்திருந்த தமிழ் அரசாகக் குறிப்பிடப்படும் யாழ்ப்பாண அரசானது கி.பி 13 ஆம் நூற்றாண்டில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு தோற்றம் பெற்றிருந்தது. வட பகுதியில் சுதந்திர அரசாக விளங்கிய இவ்வரசானது ஆரியச்சக்கரவர்த்திகள் என அழைக்கப்படுபவர்களால் நிறுவப்பட்டிருந்ததாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அந்தவகையில் யாழ்ப்பாண அரசானது யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அது சார்ந்த தீவுகளையும், வன்னியின் சில பகுதிகளையும், மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வகையில் யாழ்ப்பாண இராச்சியம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. இவ்வரசு 17 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடையும் வரை அரசியல், பொருளாதார, சமய, சமூக பண்பாட்டு நிலைகளில் பெருவளர்ச்சி பெற்றிருந்ததை இலக்கிய மற்றும் தொல்லியல் ஆதாரங்களின் மூலம் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர அரசாக விளங்கிய யாழ்ப்பாண அரசுடனான போர்த்துக்கேயரது முதற் தொடர்பானது கி.பி 1543 ஆம் ஆண்டின் பின்பே ஏற்பட்டுவந்தது. அதற்குக் காரணம் அக்காலத்தில் ஆட்சியில் இருந்த சங்கிலி செகராசசேகரன் என்பவனது போர்த்துக்கேயருக்கு எதிரான செயற்பாடுகளும் சுதேசிகளிடையே காணப்பட்ட சுதந்திர உணர்வுமே ஆகும். ஆனால் சங்கிலி செகராசசேகரனது மறைவின்பின் அரசுரிமை சம்மந்தமாக ஏற்பட்ட போட்டித்தன்மை யாழ்ப்பாண அரசின் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை வெளிக்காட்டியது. ஆட்சியுரிமையைப் பெறவிரும்பிய அரசமரபினர் போர்த்துக்கேயரது உதவியை நாடியதனால் அவர்களது செல்வாக்கு படிப்படியாக ஏற்படத் தொடங்கியது. காலப்போக்கில் யாழ்ப்பாண அரசை கைப்பற்றும் நோக்குடன் காணப்பட்ட போர்த்துக்கேயர் 1619 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசின் இறுதி மன்னனான சங்கிலி குமாரனை கைது செய்ததன் மூலம் தமது மேலாண்மையை நிலைநிறுத்திக் கொண்டனர். எனினும் தமிழ்மொழி மற்றும் இந்துப்பண்பாட்டில் மூழ்கியிருந்த யாழ்ப்பாண இராச்சிய மக்கள் காலத்திற்கு காலம் தமது எதிர்ப்புணர்வை போர்த்துக்கேயருக்கு எதிராக வெளிப்படுத்தி வந்தனர். அதற்கெதிராகப் போர்த்துக்கேயரும் தமது கலையழிவுக் கொள்கையை இப்பகுதியில் மிகத்தீவிரமாக முன்னெடுத்து வந்தனர்.

**சங்கிலி மன்னனும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கையும்**

யாழ்ப்பாணஇராச்சியத்தில் பரராசசேகர மன்னனை அடுத்து சங்கிலி மன்னன் கி.பி 1519 ஆம் ஆண்டு ஆட்சிப்பீடம் ஏறினான். இவன் கி.பி 1561 ஆம் ஆண்டுவரை சுமார் நாற்பது ஆண்டுகள் யாழ்ப்பாண அரசின் அரியணையை அலங்கரித்திருந்தான். இவனது ஆட்சிக் காலத்திலேயே யாழ்ப்பாண இராச்சியத்துடனான போர்த்துக்கேயரது முதற் தொடர்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. இவன் மிகவும் தைரியம் உள்ளவனாகவும் கடும்போக்குடையவனாகவும் காணப்பட்டான். அந்நியர்களான போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசில் கால்பதிப்பதை ஆரம்பம் முதலே விரும்பாதவனாகவும் அவர்களுக்கு எதிராகச் செயற்படுபவனாகவும் விளங்கினான். இதனால் போர்த்துக்கேய ஆவணங்கள் இவனை இகழ்ந்தே குறிப்பிடுகின்றன. இது அவனது மொழி, சமய மற்றும் நாட்டுப்பற்றையே பிரதிபலிப்பதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையுடன் காணப்பட்ட சங்கிலி மன்னன் அவர்களால் வரக்கூடிய ஆபத்தை நன்றாக அறிந்த வண்ணமே தனது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்திருந்ததைக் காணமுடிகின்றது. அந்தவகையில் இவனது காலத்தில் போர்த்துக்கேயரது முதற் தொடர்பு கி.பி 1540 ஆம் ஆண்டு ஏற்பட்டுக் கொண்டது. இக்காலத்தில் போர்த்துக்கேயரது வர்த்தகக் கப்பல்கள் யாழ்ப்பாண இராச்சியத்தில் கரையொதுங்கியிருந்தன. சங்கிலி மன்னன் தனது படையை அனுப்பி அப்பொருட்களை பறிமுதல் செய்ததுடன் கப்பல்களையும் அழித்தொழித்தான். இவ்வாறு இவன் நடந்து கொண்டதற்கு காரணம் போர்த்துக்கேயரது மேலாண்மையை ஆரம்பத்திலேயே தடுத்துநிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தாலேயே ஆகும். ஆனால் அச்சம்பவம் போர்த்துக்கேயரை ஆத்திரமூட்டுவதாகவே அமைந்திருந்தது. இதற்கான இழப்பீட்டைப் பெறும் நோக்குடன் போர்த்துக்கேயப்படை மாட்டின் அல்போன்சோ த சூசா என்பவன் தலைமையில் கி.பி 1543 ஆம் ஆண்டு படையெடுத்து வந்தது. சூழ்நிலை பாதகமாக இருப்பதை உணர்ந்த சங்கிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயருடன் போர்புரிய விரும்பாது உடன்படிக்கையை மேற்கொண்டு போர்த்துக்கேயருக்கு இழப்பீட்டை வழங்கி அவர்களைத் திருப்பியனுப்பினான். இது அவர்களது தலையீடு இராச்சியத்தில் ஏற்படுவதை விரும்பாமலே இவ்வாறு நடந்துகொண்டான் என எண்ண முடிகின்றது.

சங்கிலி மன்னனது போர்த்துக்கேயருக்கு எதிரான செயற்பாடானது காலத்திற்கு காலம் இடம்பெற்றே வந்தது. அதற்கு எடுத்துக்காட்டாக மன்னாரில் மதம்மாறிய மக்களுக்கு தண்டனை வழங்கிய சம்பவத்தைக் கூறலாம். அதாவது போர்த்துக்கேயரது மதமாற்ற நடவடிக்கையானது கரையோரப் பகுதிகளில் தீவிரமாக இடம்பெற்று வந்தது. அதன் ஓர் அங்கமாகவே யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதியான மன்னாரில் கத்தோலிக்க மதகுருவான வண. பிரான்சிஸ் சேவியர் தலைமையில் மதமாற்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. இம்மதமாற்ற நடவடிக்கையினால் மீனவ சமூகத்தை சேர்ந்த பலர் கத்தோலிக்கர்களாக மாறிவந்தனர். இதனை அறிந்துகொண்ட சங்கிலி மன்னன் 1544 ஆம் ஆண்டு தனது படையினரை அனுப்பி மக்களை மீண்டும் சைவ சமயத்திற்கு மாறும்படி கட்டளை பிறப்பித்திருந்தான். இவனது கட்டளையை ஏற்கமறுத்த பலரை இவனது படையினர் தமது வாழுக்கு இரையாக்கிவந்தனர். இவ்வாறு இவனது படையினரால் 600 பேர் கொல்லப்பட்டதுடன் பிரான்சிஸ் சேவியரின் சீடனும் சங்கிலி மன்னனின் பிரதிநிதியாக இருந்த இளம்சிங்கம் என்பவனும் இதன்போது கொல்லப்பட்டான். தீவிர இந்துமதப் பற்றாளனான சங்கிலியனுக்கு போர்த்துக்கேயப் பண்பாடு பரவலடைவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே காணப்பட்டது. இதன் மூலம் அவர்களது செல்வாக்கு இராச்சியத்தில் நிலைத்துவிடும் என அவன் கருதியதாலேயே இவ்வாறு செயற்பட்டான் என எண்ணமுடிகின்றது. ஆனால் இவனது இச்செயற்பாடு போர்த்துக்கேயருக்குக் கடுங்கோபத்தைத் தோற்றுவித்திருந்தது. இதனால் அவனை தண்டிக்கும் நோக்குடன் யாழ்ப்பாண அரசு மீது படையெடுப்பை மேற்கொள்ளத் தொடங்கினர்.

போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையுடன் தொடர்ந்து செயற்பட்டுவந்த சங்கிலி போர்த்துக்கேயருக்கு எதிராக அக்காலப்பகுதியில் செயற்பட்டுவந்த தென்னிலங்கை சிங்கள ஆட்சியாளர்களுடன் நட்புறவு கொண்டிருந்தமையைக் காணமுடிகின்றது. அவ்வகையில் போர்த்துக்கேயருக்கு எதிராக போராடிவந்த சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னையுடன் இவன் நட்புறவைப் பேணிவந்தான். மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிடுவதற்கு தென்னிந்தியாவிலிருந்து படைகளை வரவழைத்தபோது அப்படைகள் யாழ்ப்பாணத்தினூடாகச் செல்வதற்கு உதவியளித்துவந்தான். அத்துடன் கோட்டை மன்னன் புவனேகபாகுவிற்கு எதிராக மாயாதுன்னை 1545 ஆம் ஆண்டு படையெடுத்தபோது அப்படையெடுப்பிற்கு தனது உதவியையும் வழங்கியிருந்தான். மற்றோர் நிகழ்வாக புவனேகபாகுவின் மரணத்தைத் தொடர்ந்து அவனது மகளின் மகனான தர்மபாலன் ஆட்சிப்பீடம் ஏறி போர்த்துக்கேயர்க்கு ஆதரவாக செயற்பட்டுவந்தபோது அவனது தந்தை விதியபண்டாரன் அவனுக்கு எதிராகச் செயற்பட்டதுடன் போர்த்துக்கேயருக்கு எதிராகவும் செயற்பட்டுவந்தான். இதனால் போர்த்துக்கேயர் தன்னைக் கொலைசெய்யலாம் என அஞ்சி புத்த தந்ததாதுவுடன் சங்கிலியிடம் தஞ்சமடைந்திருந்ததுடன் போர்த்துக்கேயருக்கு எதிராகச் சங்கிலியுடன் இணைந்து செயற்பட்டு வந்தான். இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிராகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிடுவதற்கு வெடிகுண்டு தயார்செய்தபோது வெடிவிபத்து ஒன்றிலேயே விதியபண்டாரன் யாழ்ப்பாணத்தில் மரணமானான். இச்சம்பவம் காரணமாகவே நல்லூர் பகுதியில் பூதவராயர் ஆலயம் அமைக்கப்பட்டதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிராகச் சங்கிலி தொடர்ந்து செயற்பட்டு வந்ததன் காரணத்தால் போர்த்துக்கேயரும் சங்கிலிக்கெதிராகச் செயற்படும் வகையில் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றும் நோக்குடன் படையெடுப்பை மேற்கொள்ளத் தொடங்கினர்.

**சங்கிலி மன்னனது தோல்வியும் போர்த்துக்கேயருக்கு எதிரான குடிமக்களது நடவடிக்கைகளும்**

சங்கிலி மன்னனின் போர்த்துக்கேயருக்கு எதிரான செயற்பாடுகள் காரணமாக ஆத்திரமடைந்த அவர்கள் யாழ்ப்பாண அரசின் மீது 1560 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்தினோ பிரகன்ஸா என்ற தளபதியின் தலைமையில் படையெடுப்பொன்றை மேற்கொண்டனர். இப்படையெடுப்பால் தோல்வியடைந்த சங்கிலி மன்னன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு போரை முடிவுக்குக் கொண்டுவந்தான். எனினும் படையெடுத்து வந்த போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல அழிவுகளை மேற்கொண்டு வந்தது. சங்கிலி மன்னனோ கையறு நிலையில் காணப்பட்டதனால் அதனைத் தடுக்கமுடியாதிருந்தான்.

போர்த்துக்கேயரோ தமிழ் மக்களது வீடுகளுக்குள் நுழைந்து அங்கிருந்த செல்வங்களைச் சூறையாடிவந்தனர். இந்துக்கள் புனிதமாகப் போற்றும் பசுக்களைக் கொன்று உணவாக்கி வந்தனர். இந்துக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவவேண்டும் எனத் துன்புறுத்தப்பட்டனர். மேலும் இந்துக்களது புனிதத் தலங்களான ஆலயங்களைச் சூறையாடிப் பெரும் அழிவுகளை ஏற்படுத்திவந்தனர். இதனைப் பொறுக்கமுடியாத சுதேசிகள் கிளர்ந்தெழுந்தனர். அந்தவகையில் போர்த்துக்கேயப் படையினரையும் மதகுருமாரையும் கொலைசெய்தனர். மதப்பணி புரிவதற்கு வருகைதந்த கொச்சின் பிஷப் டொம் ஜோஜ் தரெமுடோ இதன்போது சுதேசிகளால் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணத்தவரது எதிர்ப்பலை நாளுக்கு நாள் வலுவடைந்து வருவதைக் கண்ட போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கி மன்னார் சென்றடைந்தது. இந்தவகையில் சுதேசிகளது போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கை வெற்றியளித்திருந்தாலும் அது சிறிதுகாலமே நிலைத்திருந்தது. ஏனெனில் சங்கிலிமன்னனது காலத்தின் பின்னர் யாழ்ப்பாண அரசில் அரசுரிமை தொடர்பாகக் குழப்பநிலையே நிலவிவந்தது. இவ்வேளையில் அரசுரிமையை பெற விரும்பியவர்கள் போர்த்துக்கேயரது உதவியைப் பெற்று அவர்களது செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பட வழியமைத்துக் கொடுத்தனர். இவ்வாறான சுயநலவாதிகளால் சுதந்திர அரசு சிதைக்கப்பட்டமை காலங் காலமாக இடம்பெறும் நிகழ்வாக வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டது.

**புவிராச பண்டாரமும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கையும்**

சங்கிலி மன்னன் கி.பி 1561 ஆம் ஆண்டு மறைந்ததைத் தொடர்ந்து அவன் மகன் புவிராசபண்டாரம் ஆட்சிப்பொறுப்பைப் பெற்றிருந்தாலும் அவன் அரசிலிருந்து வெளியேற்றப்பட்டு காசிநயினார் என்பவன் அரசைப் பெற்றுக்கொண்டான். இவன் மீது வெறுப்புக் கொண்ட போர்த்துக்கேயர் அவனைச் சிறையிலடைத்து தமக்குச் சார்பான ஒருவரிடம் அரசைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளித்தனர். எனினும் பொதுமக்களது உதவியுடன் அரசைப் பெற்ற காசிநயினார் பின்னர் போர்த்துக்கேயரால் கொல்லப்பட்டான். இதன் பின் பெரியபுள்ளை என்பவனைப் போர்த்துக்கேயர் மன்னனாக்கினர். இவ்வாறாக யாழ்ப்பாண அரசில் காணப்பட்ட அரசியல் குழப்பநிலையானது போர்த்துக்கேயரது செல்வாக்கு அதிகரிக்க வழிவகுத்தது.

அரசியல் குழப்பம் நிலவிவந்த வேளையில் சங்கிலியின் மகன் புவிராச பண்டாரம் மீண்டும் அரசுரிமையை கி.பி 1582 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்டான். இவனும் போர்த்துக்கேயருக்கு எதிரான உணர்வு கொண்டவன் என்றவகையில் மன்னாரில் இருந்த போர்த்துக்கேயப் படையுடன் 1590 ஆம் ஆண்டு போரில் ஈடுபட்டான். இப்போர் அவனுக்கு வெற்றியாக அமையாவிடினும் போர்த்துக்கேயரைக் கிலிகொள்ள வைத்திருந்தது. மேலும் இவன் போர்த்துக்கேயருக்கு எதிரான தாக்குதலைத் தீவிரமாக முன்னெடுக்கும் வகையில் அவர்களது எதிரியான கள்ளிக்கோட்டை சமோரினிடம் படையுதவி பெற்றுக்கொண்டான். இவ்வாறு பெற்ற படையுடன் தனது படையையும் இணைத்து போர்த்துக்கேயருக்கு எதிரான போரை ஆரம்பித்தபோது போர்த்துக்கேயர் தமது படைவீரர்களைப் பல பகுதிகளில் இருந்து பெற்று அப்படையெடுப்பை தோற்கடித்தனர். இதன் பின் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றும் வகையில் தமென் டொங்கா என்ற தளபதி தலைமையில் கி.பி 1591 ஆம் ஆண்டு படையெடுத்து வந்து புவிராசபண்டாரத்தை கைதுசெய்து அவனை சிரச்சேதம் செய்ததன் மூலம் போரை முடிவுக்கு கொண்டுவந்தனர். இதன் பின்னர் பெரிய புள்ளையின் மகன் எதிர்மன்ன சிங்கன் என்பவனை மன்னராக்கி வரலாற்றுச் சிறப்புமிக்க 'நல்லூர் உடன்படிக்கையை' மேற்கொண்டு தமது செல்வாக்கை நிலைநாட்டிக் கொண்டனர்.

**எதிர்மன்ன சிங்கனும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளும்**

போர்த்துக்கேயரின் அனுசரணையுடன் ஆட்சிப்பீடத்தில் ஏறிய எதிர்மன்ன சிங்கன் ஆரம்பத்தில் போர்த்துக்கேயருக்குச் சார்பாக நடந்துகொண்டாலும் காலப்போக்கில் போர்த்துக்கேயரது நடவடிக்கையால் அதிருப்தி கொண்டு அவர்களுக்கு எதிராக நடக்கத் தொடங்கினான். அத்துடன் இவன் இந்துக்களுக்கு ஆதரவாக செயற்படுபவனாகக் காணப்பட்டதனால் போர்த்துக்கேயரால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதேவேளை போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டுவந்த கண்டி மன்னர்களான விமலதர்மசூரியன், செனாத் ஆகியோருக்கு தென்னிந்தியாவிலிருந்து கிடைத்துவந்த படையுதவி, ஆயுத உதவி ஆகியவற்றை யாழ்ப்பாணத்தினூடாக கொண்டு செல்வதற்கு உதவிபுரிந்து வந்தான். இவனது இவ்வாறான நடவடிக்கைகள் போர்த்துக்கேயருக்குச் சந்தேகத்தையே ஏற்படுத்தி வந்தன. எனவே எதிர்மன்ன சிங்கனை அரசிலிருந்து நீக்கும் எண்ணத்துடனேயே போர்த்துக்கேயர் காணப்பட்டனர். ஆனால் அவன் கி.பி 1617 ஆம் ஆண்டு மரணத்தை தழுவிக்கொண்டான். அவனின் பின் அவனது மருமகன் சங்கிலி குமாரன் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான்.

**சங்கிலி குமாரனும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளும்**

எதிர்மன்ன சிங்கன் போன்று போர்த்துக்கேயரது அனுசரணையுடன் ஆட்சிப் பொறுப்பை பெற்றுக்கொண்ட சங்கிலி குமாரன் காலப்போக்கில் போர்த்துக்கேயருக்கு எதிராகவே செயற்பட்டு வந்தான். இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படும் வகையில் கண்டி அரசு, நாயக்க அரசு, கள்ளிக்கோட்டை அரசு ஆகியவற்றுடன் தொடர்புகளைப் பேணி அவர்களிடம் படை உதவி பெற்று பல தாக்குதல்களை மேற்கொண்டு வந்தான். அவ்வகையில் 1619 ஆம் ஆண்டு சங்கிலி மன்னனின் கூட்டுப்படை மன்னாரில் தாக்குதலை மேற்கொண்டிருந்த சமயமே சங்கிலியைக் கைதுசெய்யும் நோக்குடன் பிலிப் டீ ஒலிவேறா தலைமையில் படையெடுப்பொன்றைப் போர்த்துக்கேயர் ஆரம்பித்திருந்தனர். இப்படையெடுப்பில் சங்கிலியின் படைகள் தோல்வியைச் சந்தித்துவந்தன. படையின் நிலையை அறிந்துகொண்ட சங்கிலி குமாரன் போர்த்துக்கேயரிடம் அகப்படாது தப்பிக்கும் நோக்குடன் அரச செல்வங்கள் மற்றும் தனது குடும்பத்தினருடன் கடல் வழியாகப் புறப்பட்டான். ஆனால் கடலில் வைத்து போர்த்துக்கேயரால் கைதுசெய்யப்பட்டு கோவாவிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தூக்கிலிடப்பட்டான். தூக்கிலிடும் சந்தர்ப்பம் வரை அவன் கத்தோலிக்க மதத்தைத் தழுவும்படி துன்புறுத்தப்பட்டான். எனினும் அவனது அன்னியருக்கு எதிரான கொள்கையின் விடாப்பிடியால் மதம் மாறாது மரணத்தைத் தழுவினான். இவனது கைதுடன் யாழ்ப்பாணத்து தமிழ் அரசும் அஸ்தமனமானது குறிப்பிடத்தக்கது.

**அரசு வீழ்ச்சியடைந்தபின்னர் போர்த்துக்கேயருக்கு எதிரான குடிமக்களது நடவடிக்கைகள்**

1619 ஆம் ஆண்டு சங்கிலி குமாரனைக் கைதுசெய்ததுடன் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திய போர்த்துக்கேயர் தமது நடவடிக்கைகளைச் சுதந்திரமாக முன்னெடுக்கத் தொடங்கினர். இதனால் சுதேசிகள் பலர் துன்பத்தை அனுபவித்து வந்தனர். குறிப்பாக யாழ்ப்பாண அரசுமீதான படையெடுப்பிற்குத் தலைமைதாங்கிவந்த பிலிப் டீ ஒலிவேறா கடும்போக்கைக் கடைப்பிடித்து தனது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தான். இவனால் யாழ்ப்பாணத்தில் மட்டும் 600 இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. இவனாலேயே நல்லூர் ஆலயமும் அழிக்கப்பட்டது. அதைப் பாதுகாக்க சுதேசிகள் எவ்வளவு கெஞ்சி மன்றாடியும் இரக்கம் காட்டாது அதனை அத்திவாரத்துடன் அழித்தொழித்தான். அத்துடன் இந்துமத அனுட்டானங்களைக் கடைப்பிடிப்பதற்கு தடைவிதித்திருந்தான். இதனால் சுதேசிகள் பலர் இவன் மீதும் இவனது படைமீதும் பெருவெறுப்பைக் கொண்டிருந்தனர்.

போர்த்துக்கேயருக்கு எதிரான உணர்வுடன் யாழ்ப்பாண இராச்சிய மக்கள் காணப்பட்டிருந்த சமயம் பிலிப் டீ ஒலிவேறா 1627 ஆம் ஆண்டு மரணமானான். இது இராச்சியத்தில் இருந்த மக்களுக்கு பெரும் நிம்மதியை வழங்குவதாக இருந்தது. இதேவேளை போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படவும் ஆயத்தமாகி வந்தனர். இவ்வேளையில் யாழ்ப்பாண அரசுமீது மணவினை உறவு மூலம் உரிமை உண்டு எனக்கூறி கண்டி மன்னன் செனரத் 1628 ஆம் ஆண்டு முதலாவது படையெடுப்பை மேற்கொண்டுவந்து போர்த்துக்கேயருடன் போரிட்டான். இதனை சாதகமாக பயன்படுத்திய தமிழ்மக்கள் அவர்களுடன் இணைந்து போரிட்டனர். இதன்போது இரு கத்தோலிக்க மதகுருமாரும் 30 இற்கும் அதிகமான தேவாலயங்களும் அழிக்கப்பட்டன. இது சுதேசிகளிடம் காணப்பட்ட எதிர்ப்புணர்வின் வெளிப்பாட்டையே பிரதிபலிப்பதாக உள்ளது. கடுமையாகப் போராடிய சுதேச படையினர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி 13 நாட்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். எனினும் போர்த்துக்கேயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படைகளைச் சிதறடித்து மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அதன் பின் செனரத் 1629 ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்குடன் படையெடுப்பை மேற்கொண்டபோதும் அப்படையெடுப்பு போர்த்துக்கேயரால் முறியடிக்கப்பட்டது. இப்படையெடுப்பே யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதி படையெடுப்பாகவும் அமைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் சுதேசிகளது போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கையானது மௌனிக்கப்பட்ட ஒன்றாகவே காணப்பட்டது. அதேவேளை போர்த்துக்கேயரும் தமது நடவடிக்கைகளை ஒல்லாந்தர் 1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை கைப்பற்றும்வரை எதுவித தடைகளுமின்றி முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

இலங்கை மீதான போர்த்துக்கேயரது மேலாதிக்கம் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியிருந்தாலும் அவர்கள் இலங்கையில் காலடி பதித்தது முதல் அங்கிருந்த அரசுகளைக் கைப்பற்றியது வரையும் அதன் பின்னரும் அப்பகுதி ஆட்சியாளர்களும் சுதேசிகளும் இவர்களது நடவடிக்கைகளை எதிர்த்தே வந்தனர். இவ்வாறானதோர் நிலையே யாழ்ப்பாண இராச்சியத்திலும் காணப்பட்டது. யாழப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரை தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களை கொண்டுவிளங்கும் பகுதியாக விளங்கியதனால் அந்நியரான போர்த்துக்கேயரது தொடர்பு ஏற்பட்டது முதல் தமது தனித்துவத்தைப் பாதுகாக்கும்வகையில் அவர்களுக்கு எதிராகவே செயற்பட்டுவந்தனர். அதேவேளை போர்த்துக்கேயரது சலுகைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் அடிபணிந்த சிலர் போர்த்துக்கேயரது விசுவாசிகளாக செயற்பட்டு வந்தமையானது சுதேசிகள் மேற்கொண்டுவந்த போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகள் தோல்வியடையக் காரணமாகியது. எனினும் சுதேசிகள் அரசு இழந்த நிலையில் தமது தனித்துவப் பண்பாட்டைப் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களை தாண்டி இன்றுவரை பேணிப்பாதுகாத்து வருவது வியப்பிற்குரிய ஒன்றாகவே திகழ்கின்றது.

## உசாத்துணைகள்


- குல சபாநாதன்,(பதிப்பு), **"யாழ்ப்பாண வைபவமாலை"**, சுன்னாகம், 1949.
- சுவாமி ஞானப்பிரகாசர், **"யாழ்ப்பாணவைபவ விமர்சனம்"**, அச்சுவேலி, 1928.
- சிற்றம்பலம்,சி.க. **"யாழ்ப்பாண இராச்சியம்"**. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளியீடு, திருநெல்வேலி. 1992.
- இந்திரபாலா,க. **"யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்"**. யாழ்ப்பாணத் தொழ்பொருளியற் கழகம், வட்டுக்கோட்டை. 1972.
- குணசிங்கம்,மு. **"இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு"**. எம். வி வெளியீடு, அவுஸ்திரேலியா. 2008.
- குணசிங்கம், மு. **"இலங்கையர் தேசியவாதம்"**. சிட்னி. 1999.
- கிருஸ்ணராசா, செ. **"இலங்கை வரலாறு பாகம்-2"**. பிறைநிலா வெளியீடு, கோண்டாவில். 2005.
- கிருஸ்ணராசா, செ. **"இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்"**. எ.பி கிறியேசன், கொழும்பு. 2012.
- குணராசா,க. மற்றும் கமலா, கு. **"இலங்கைச் சுருக்க வரலாறு"**. கமலம் பதிப்பகம்,
- யாழ்ப்பாணம்.2008. பத்மநாதன், சி. **"யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு"**. குமரன் புத்தக இல்லம், கொழும்பு.2011.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Pathmanathan, S. **"The Kingdom of Jaffna"**. Ceylon news paper Ltd, Colombo. 1978.
- Abeyasingi, Tikiri. **"Jaffna under the Portuguese"**. Lake house investments Ltd, Colombo.1986.
- Gueyroz, Fernao De. **"The temporal and spiritual conquest of Ceylon"**. Translated by Fr.S.G.Perara, Colombo. 1930.
- Silva, K.M.De. **"A History of Srilanka"**. Oxford university press, Delhi. 1981.


# தூரமில்லை

நீல முகடுகளின் ஓட்டைவெளியில்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
மின்னி மின்னி சிறு புன்முறுவல்.
பூத்துக்கிடக்கும் தாரகைகள்
அறியப் போவதில்லை
போர்வையற்ற எங்கள் உயிரின் ஊசலை.
அன்னியமாக்கப்பட்ட
அந்த இராத்திரி
மிகவும் பயங்கரமானது.
அலறமுடியாமல் அந்த இறுக்கத்தை
ஆரவாரப்பட்டு
அணைத்துக் கொண்டேன்.

சப்பாத்துக்களின் உரசலில்
விழிகள் விழித்துக்கொள்ள
மனம் உறைந்துபோய்
உறங்கிக் கொண்டிருந்தது.
ஊடுருவமுடியா தேசங்களுக்குள்
எண்ணங்கள் வலைவிரிக்க
ஆரம்பித்திருந்தன.
எழுதுகோல்கள் ஆயுதங்களாக
குழந்தைகளும் வீரர்களாக,
கண்கள் இலட்சியக் குழம்பாக,
மாறிக்கொண்டிருந்தது
எனக்காகவும் அது காத்திருந்தது.

என் பார்வையின் துல்லியத்தை,
எதிர்காலத்தின் குறிக்கோளை
நான் அதிலேதான் பூட்டியிருந்தேன்.

அதனால் எனக்கு விடிவு கிடைக்கலாம்
இல்லை என் பெயர்
எங்கோ செதுக்கப்படலாம் – ஆனால்
நான் மாறப்போவதில்லை.

வஞ்சனைச் சிலந்தி என்னைச் சுற்றியபோது
வலுவிழக்கத்தான் செய்தேன்.
வாரங்களாகின, மாதங்களாகின
வருடங்களாகையில் நான்
வீழ்த்தப்பட்டேன்.
உருவி எடுக்கப்பட்ட என் உறைவாளை –
ஒருவன்
உயர்த்திக் காட்டுகின்றான்
வென்றுவிட்டானாம்.

அந்த நினைவுகள்
இன்று வடிக்கப்பட்டிருக்கலாம்
அது சிலையாகவோ
இல்லை கண்ணீராகவோ

அந்த நிமிடங்கள் அவனுக்கு
அடி பணிந்துதான் விட்டன.
மாறப்போகும் யுகம் அறியாமல்
அவன் எக்காளமிடுகின்றான்.
கொண்டாட்டத்தின் உச்சத்தில்
குதூகலிக்கும் அவனுக்கு
தெரியப்போவதில்லை
நான் பீனிக்ஸ் என்பது...


**தே.கஜீபன்,**
**மூன்றாம் வருடம்,**
**தமிழ் சிறப்புத்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மாகாண சபை முறைமையும் பிரச்சினைகளும்

திரு.ந.சிவகுமார்,
விரிவுரையாளர்,
அரசறிவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



## அறிமுகம்.

இலங்கையில் காணப்படும் இன முரண்பாட்டிற்கான ஒரு தீர்வு முயற்சியாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்றது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன அவர்களுக்குமிடையே 1987.07.29 ஆம் திகதி இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தத்திற்கமைய, இலங்கைப் பாராளுமன்றம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைச் சட்டத்தை அங்கீகரித்தது. இவ் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து பல குறைபாடுகள் இம்முறைமை தொடர்பில் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இக்கட்டுரையானது, மாகாண சபையின் பிரதான அம்சங்களில் ஒன்றான 'ஆளுநர்' பதவியினை மையப்படுத்தி இம்முறைமையில் காணப்படும் குறைபாடுகளுள் சிலவற்றைச் சுருக்கமாக அடையாளப்படுத்துகின்றது.

## மாகாண சபை முறைமை பற்றிய சுருக்க அறிமுகம்.

அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது சீர்திருத்தம் 1987 நவம்பர் மாதம் 19ஆம் திகதி அமுலுக்கு வந்தது. அரசியல் திட்டத்தின் 154அ சரத்து 1 ஆம் பிரிவு, அரசியல் திட்டத்துக்கமைய ஒவ்வொரு மாகாணத்திற்கும், ஒவ்வொரு மாகாண சபை அமைதல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. இதே சரத்தின் 3 ஆம் பிரிவு, அருகருகே அமைந்துள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை இணைத்து, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணசபை, ஒரே ஆளுநர், ஒரே முதலமைச்சர், ஒரே அமைச்சர்கள் சபை என்பவற்றினை உள்ளடக்கிய, ஒரு நிர்வாக அலகாகச் செயற்பட இடமளிக்கிறது.

1988 ஆம் ஆண்டு, முதலாவது மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தல், மேல் மாகாணம், தென் மாகாணம், வட மத்திய மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகிய மாகாணங்களில் இடம்பெற்றது. இவ்வேளை, தற்காலிகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள், வடகிழக்கு மாகாணமாக இணைக்கப்பட்டிருந்ததுடன், இதில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (The Eelam People's Revolutionary Liberation Front (EPRLF) அதிகாரத்தினைப் பெற்றுக்கொண்டது. இதன் பின்பு, திரு.வரதராஜப்பெருமாள், 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொண்டுவிட்டு, இந்தியா சென்றுவிட்டார் (Ruana Rajapakse 2008). தொடர்ந்து, அப்பகுதிகளில் காணப்பட்ட மோதல் அல்லது குழப்பநிலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமித்தம், 1990 ஆம் ஆண்டில் வடகிழக்கு மாகாண சபை செயற்பட முடியாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக, மாகாண சபைகள் சட்டத்திற்கான, 1990 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க திருத்தச்சட்டம் [Provincial Councils (amendment) Act No. 27of 1990] கொண்டுவரப்பட்டு, வடகிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது (Leitan 2000, p.2). 2006 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் வடகிழக்கு மாகாண இணைப்பானது இல்லாமல் செய்யப்பட்டது.

**மாகாண சபை முறைமையினுடைய பிரதான பகுதிகள்**

மாகாண சபையினது ஆயுட் காலம் ஐந்து வருடங்களாகும். மாகாண சபையினுடைய கட்டமைப்பின் பிரதான ஏற்பாடுகளாக ஆளுநர், முதலமைச்சர் அமைச்சரவை, மாகாண மேல் நீதிமன்றம், நிதி ஆணைக்குழு மற்றும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு என்பனவற்றை அடையாளப்படுத்தலாம்.

**ஆளுநர்**

ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஒவ்வொரு ஆளுநர் இருப்பார். ஆளுநர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படல் வேண்டும். இவர் ஐந்து வருட காலத்துக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார். ஜனாதிபதி விரும்பும் வரை, அவர் பதவி வகிப்பார் (உறுப்புரை 154(ஆ)(2)). அவர் பதவியேற்ற திகதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதிக்குப் பதவி வகிப்பார். ஆளுநர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளை வேண்டுமென்று மீறினால், அல்லது அவரது பதவிக்குரிய தத்துவங்களின் கீழ் துர்நடத்தைகளுக்கு ஆளானால், அல்லது ஊழல் குற்றவாளியானால் அல்லது இலஞ்ச ஒழுக்கக்கேட்டுக்கு உட்பட்டால் அவரை நீக்குமாறு மாகாண சபை உரிய ஆதாரங்களுடன், ஜனாதிபதியைக் கோர முடியும். இத்தகைய ஆளுநருக்கு எதிரான தீர்மானம், மாகாண சபையின் உறுப்பினர்களின் (சமூகமளிக்காதவர் உட்பட) 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும் (13 ஆம் திருத்தம், உறுப்புரை 154ஆ(4)).
ஆளுனரின் கடமைகளாகப் பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

- காலத்துக்கு காலம் மாகாணசபைகளைக் கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல்
- ஒரு கூட்டத்தொடர் முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள், அடுத்த கூட்டத்தொடரைக் கூட்டுதல்.
- மாகாண சபையின் முதலமைச்சரை நியமித்தல்.
- மாகாண சபைகளைக் கலைக்கும்போது, சபையொன்றின் பெரும்பான்மை ஆதரவு பெற்ற முதலமைச்சரின் ஆலோசனைப்படியே செயலாற்றுதல்.
- ஒரு மாகாண சபையின் அமைச்சர்கள், சபையின் ஆலோசனைக்கு உடன்படாதவிடத்து, ஆளுனர் அதனை ஜனாதிபதிக்கு அறிவித்தல்.
- மாகாணசபையில் தேவையானபோது உரையாற்றுதல்.
- ஒரு மாகாண சபையினால் இயற்றி, நிறைவேற்றாது இருக்கும் ஒரு சட்டம் பற்றி அல்லது மற்றைய விடயங்கள் பற்றி சபைக்குச் செய்திகள் அனுப்புதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாகாணப் பகிரங்கச் சேவையைக் கட்டுப்படுத்தல், மாகாணப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், ஒழுக்கக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளுதல்.
- மாகாண பகிரங்க சேவைகள் தொடர்பான விடயங்கள் மீது தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.

**ஆளுநரின் அதிகாரம் தொடர்பான விமர்சனப்பார்வை**

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மத்தியமயமான நோக்கம், இலங்கையில் காணப்படும் இன முரண்பாட்டிற்கு தீர்வு காண்பதாகும். ஆனால், முரண்பாடுகள் மையம் கொண்டிருந்த மாகாணங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீண்டகாலமாக மாகாண சபை நடைமுறையில் இருக்கவில்லை. தற்போது, செயற்படுகின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் பலதரப்பட்ட நடைமுறைப் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்கின்றன. பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம், ஆளுநருடைய தலையீடுகள், மேலும் பல வழிமுறைகளிலான மத்தியரசின் தலையீடுகள் மற்றும் நிதிப் பற்றாக்குறை போன்ற பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் மட்டுமன்றி, ஏனைய மாகாணங்களும், முழுமையானதொரு அதிகாரப்பரவலாக்கலினை இதுவரை பெறாத தன்மையிலேயே செயற்பட்டு வருகின்றன. ஏ.எம். நவரட்ண பண்டார, 'The Administrative Organization and the Public Service' என்ற கட்டுரையில், அரசியலமைப்பு ஏற்பாடுகள் மீள்-மத்தியமயப்படுத்தலுக்கான (Re-centralization) வாய்ப்புகளை வழங்குவதாகக் குறிப்பிடுவதுடன், அதற்கு ஆதாரமாக ஐந்து விடயங்களையும் சுட்டிக்காட்டுகின்றார் (Navaratnan-Bandara 2000). அவற்றுள் முதலாவதாக, ஜனாதிபதியினால் மாகாண ஆளுநர், பிரதான செயலாளர், மாகாணத் தலைமை நிருவாக அதிகாரி போன்றோர் நியமிக்கப்படுதல், மற்றும் மாகாண சபையினைக் கலைத்தல், மாகாண சபையினுடைய அதிகாரங்களைப் பாராளுமன்றத்திற்கு ஒப்படைத்தல், மாகாணத்தின் குறிப்பிட்ட அல்லது அனைத்து நிருவாகச் செயற்பாடுகளையும் பெறுதல் என்பனவற்றைச் சுட்டிக்காட்டுகின்றார்.

மத்தியரசினுடைய நலன்பேண் பாதுகாவலனாக நோக்கப்படுகின்ற ஆளுநர் பதவியானது மாகாணசபைகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற மற்றும் மாகாண சபைகள் செயற்படுத்த எதிர்பார்க்கின்றவற்றை நிறைவேற்றுவதில் பல தடைகளையும், காலதாமதத்தினையும் ஏற்படுத்துவதாக பரவலான முறைப்பாடுகள் இடம்பெறுவதனை அறியலாம். இந்நிலைப்பாடு நீண்டகாலமாக தொடர்கின்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. உதாரணமாக 2009 இல் கிழக்கு மாகாணசபையின் ஆளுநரிற்கும் அமைச்சர்களுக்குமிடையே காணப்பட்ட முரண்பாடானது ஆளுநரினை நீக்குவதற்கான பிரகடனத்தினை கொண்டுவருமளவிற்கு அவர்களைத் தூண்டக்கூடியதாகக் காணப்பட்டது (சிவகுமார் 2012).

ஆளுநருடைய அதிகாரங்கள் தொடர்பான விவாதங்களில், முதலமைச்சர் நியமனம், மாகாணசபையினைக் கலைத்தல் மற்றும் மேலதிக கட்டுப்பாடுகள் விதித்தல் என்பன முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளதுடன், அவை தொடர்பில், வழக்குகளும் எழுந்துள்ளன. அரசியலமைப்பின் உறுப்புரை 154ஊ(4) இன் பிரகாரம், மாகாணத்தின் முதலமைச்சரை நியமிப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம், அம் மாகாணத்தின் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ், அதிகாரம் தொடர்பில் Premachandra v Major Montague Jayawickrama) மற்றும் Premachandra and Dodangoda v Jayawickrama and Bakeer Marker வழக்கிலும் ஆராயப்பட்டது.

வடமேற்கு மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் 1993.05.17 ஆம் திகதி இடம்பெற்றது. இத்தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி என்பன போட்டியிட்டன. வடமேற்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 25 ஆசனங்களையும், பொதுஜன ஐக்கிய முன்னணி 18 ஆசனங்களையும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 09 ஆசனங்களையும் பெற்றன. தென் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 27 ஆசனங்களையும், பொதுஜன ஐக்கிய முன்னணி 24 ஆசனங்களையும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 04 ஆசனங்களையும் பெற்றன (Lakshman and Jayampathy 2010, p.222). குறிப்பிட்ட, இரு மாகாணங்களுக்குமான ஆளுநர்களும் (மேஜர் மொன்டகு ஜயவிக்கிரம – வடமேல் மாகாணம், எம்.ஏ.பாக்கீர் மாக்கார் - தென்மாகாணம்) அரசியலமைப்பின் உறுப்புரை 154ஊ(4) இன் பிரகாரம், மாகாணங்களுக்கான முதலமைச்சர்களை நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்வேளை, போட்டியான உரிமைக்கோரிக்கைக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. தென்மேல் மாகாண சபையில் காமினி ஜயவிக்கிரம ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகவும், பு.ஆ.பிரேமச்சந்திர அவர்கள், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சார்பாகவும் முதலமைச்சராக நியமிக்கப்படுவதற்கான உரிமையினைக் கோரினர். தென்மாகாணத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில், அமரசிறி கார்டியகே ஹேவாவாசம் தொடங்கொட அவர்களும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக எம்.எஸ்.அமரசிறி அவர்களும் முதலமைச்சராக நியமிக்கப்படுவதற்கான உரிமையினைக் கோரினர். 21.05.1993 இல் தென்மேல் மாகாண ஆளுநர் ஜயவிக்கிரமவும், மேல் மாகாண ஆளுநர் M.A.பாக்கீர் மாக்கார் அவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியினுடைய போட்டியாளர்களை முதலமைச்சர்களாக நியமனம் செய்தனர் (Laksman Marasinghe 2009, p.27-28). இந்நியமனத்தினை எதிர்த்து, அரசியலமைப்பின் உறுப்புரை 140 என்பதன் கீழ், யாதுரிமை எழுத்தாணை, உறுதிகேள் எழுத்தாணை மற்றும் ஆணையீட்டு எழுத்தாணை என்பவற்றை விதிக்கக்கோரி, மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் விண்ணப்பங்கள் செய்யப்பட்டன.

ஆளுநரால், முதலமைச்சர்கள் நியமிக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அடிப்படையாக அமைந்தவையென, ஆளுநர்கள் வழங்கிய சத்தியக் கடதாசியில் பின்வரும் விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன: குறித்த மாகாண சபையில், ஐக்கிய தேசியக் கட்சியே தனியொரு கட்சியாக அதிக ஆசனங்களைக் கொண்டிருந்தது என்பதுடன், இவ்விடயம் தொடர்பில் (தென் மாகாணத்திற்கான மாகாண சபை) மக்கள் கூட்டமைப்பு கட்சியும் (PA) ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கட்சியும் (DUNF) சேர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சியை விட ஒரேயொரு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரை மட்டுமே கூடுதலாகக் கொண்டிருந்தனர் என்பதுடன், பிரதிவாதியின் கோரிக்கை தொடர்பாக நம்பகரமான விசாரணைகள் மேற்கொண்டதில், இரண்டாவது பிரதிவாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலமைச்சராக நியமிக்கப்படுதல் வேண்டுமென, நான் உறுதியான கருத்தைக் கொண்டிருந்தேன்.

மனுதாரர்களுக்கான சட்டத்தரணி, நீதிமன்றத்தில் தனது வாதத்தினைச் சமர்ப்பிக்கையில், சம்பந்தப்பட்ட ஆளுநர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசியுடன், ஒவ்வொரு சபையிலும் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறக்கூடியதாக உள்ளவர், இரண்டாவதாக இருப்பவரே எனக் குறிப்பிட்டார். முதலமைச்சர்களை நியமிக்க எண்ணுகையில், ஆளுநர்கள் நியாயமற்ற வகையில் செயற்பட்டுள்ளதுடன், உறுப்புரை 154ஊ(4) என்பதன் கீழான அவர்களது அரசியலமைப்பு ரீதியிலான கடமைகளை மீறியுள்ளனரென வாதத்தில் கூறப்பட்டது.

மாகாண சபை உறுப்பினர்களின் தனியொரு கட்சி அரைப்பங்கிற்கும் மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்காத சந்தர்ப்பத்தில், முதலமைச்சரை நியமிப்பது ஆளுநரின் அதிகாரத்திற்குட்பட்ட தீர்மானத்தின்படியாதல் வேண்டும் என்றும், அது நீதித்துறையில் மீளாய்வுக்குட்பட்டதல்ல என்றும், ஆரம்ப விசாரணையின்போது பிரதிவாதிகளுக்காக வாதிடப்பட்டது.

மேல்முறையீட்டு நீதிமன்றம் அதன் கட்டளையில் பின்வருமாறு குறிப்பிட்டது: பொதுச் சட்டத்தில் முழுமையான அல்லது பிணிப்பில்லாத வகையில் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் என்று ஒன்றில்லை. தீர்மானத்தை மேற்கொள்ளும் தற்றுணிபு அதிகாரமானது, பொதுப் பதவி வகிப்பவர்கள் மீது, மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்துவதற்காக அளிக்கப்பட்டதாகும். அத்துடன், அத்தகைய தற்றுணிபு அதிகாரத்தின் நீதியான பிரயோகமானது, அவை எந்த நோக்கத்திற்காக ஒப்படைக்கப்பட்டது என்பதோடு, ஒப்பீட்டுப் பார்ப்பதன் மூலம் மதிப்பிடப்படும். மேலும், உறுப்புரை 154ஊ(4), ஆளுநருக்கு எந்த நோக்கத்துக்காகத் தற்றுணிவு அதிகாரத்தை அளித்தது என்பதில் எமக்கு சந்தேகம் எதுவுமில்லை. வாக்குரிமையைப் பிரயோகிப்பதன் மூலம் ஒவ்வொரு மாகாணத்தினதும் மக்கள், தங்களது விவகாரங்களை நிர்வகிக்கின்ற தேவைகளுக்காகத் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆளுநர், சபையின் பெரும்பான்மையானவர்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய சிறந்த பிரதிநிதியொருவரை முதலமைச்சராகத் தெரிவு செய்வதற்கும், அதன் மூலம் அம்மாகாணத்தில் மக்களின் அபிலாசைகளுக்கு பயனளிப்பதற்கும் ஏதுவாகவே அவருக்கு இந்தத் தற்றுணிபு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தற்றுணிபு அதிகாரம் வேறு தனிப்பட்ட அல்லது அரசியல் நோக்கத்திற்காக வழங்கப்படவில்லை.

மாகாணத்தின் ஆளுநரொருவருக்கு உறுப்புரை 154ஊ(4) என்பதன் கீழ், காப்பு வாசகம் தவிர்ந்த வகையில், உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரயோகமானது அவரது கணிப்பிற்கும், மதிப்பீட்டிற்கும் மட்டும் தனியே உட்படுகின்ற விடயமல்ல. அது மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நீதித்துறைப் பரிசீலனைக்கு உட்படுகின்ற விடயமாகும். யாதுரிமை எழுத்தாணை, உறுதிகேள் எழுத்தாணை மற்றும் ஆணையீட்டு எழுத்தாணை என்பவற்றுக்கான விண்ணப்பங்களில், மேன் முறையீட்டு நீதிமன்றம் நியாயமானது, நியாயமற்ற தன்மை அல்லது நேர்மையற்ற முறையில் செய்யப்பட்டிருந்தால் அல்லது சம்பந்தப்பட்ட சான்றுகளைக் கவனத்தில் கொள்ளாமை அல்லது பொருத்தமில்லாதவற்றைக் கவனத்தில் கொள்ளுதல், சான்றுகள் இல்லாமை என்பவற்றுடன் ஆனதாவென, மீள்பரிசீலிப்பதற்கான அதிகாரத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டது. இவ் வழக்கின் தீர்ப்பானது, ஒரு திருப்புமுனை அல்லது மைல்கல் தீர்ப்பு (Landmark Judgement) என அழைக்கப்பட்டது (G.R.T.Leitan 2009, p.9).

மாகாணசபையினைக் கலைப்பது தொடர்பிலும், ஆளுநர் அதிகாரங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வதிகாரம் தொடர்பிலும் வழக்குகள் நீதிமன்றின் முன் கொணரப்பட்டுள்ளன. ஐந்து வருட காலத்திற்கிடையில் மாகாண சபையை முன் கூட்டியே கலைக்கக்கூடிய அதிகாரம் பற்றி அரசியலமைப்பின் உறுப்புரை 154ஆ (8)(இ) குறிப்பிடுகின்றது. ஆளுநர் மாகாண சபையைக் கலைக்கலாம். ஆனால், ஆளுநர் தன்னிச்சைப்படி மாகாண சபையைக் கலைக்க முடியாது. ஆளுநர் மாகாண முதலமைச்சரின் ஆலோசனைப்படியே கலைக்க வேண்டும். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த சில மாதங்களுக்கிடையில் சப்ரகமுவ மாகாண சபையையும், வட மத்திய மாகாண சபையையும் கலைத்தது. கலைக்கப்பட்ட மாகாண சபை முதல்வர்கள், இக்கலைப்பை எதிர்த்து, மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். மேன்முறையீட்டு நீதிமன்றம் இக் கலைப்பை வெற்றும் வெறிதானது (Nulll and void) என்று தீர்மானித்ததுடன், உறுதிகேள் எழுத்தாணை (Writs of certiorari) வழங்கியது (Lakshman and Jayampathy 2010, p.291). இதற்கான காரணம், உரிய நடவடிக்கைகளைப் பின்பற்றாமலும், முதலமைச்சர்களின் வேண்டுகோள் இன்றியும், இம் மாகாண சபைகள் கலைக்கப்பட்டமையாகும்.

உயர் நீதிமன்றத்திற்கு இவ்விடயம் தொடர்பில் மகிந்தசோம எதிர் மைத்திரிபால சேனாநாயக்க மற்றும் ஏனையவர்கள் (Mahindasoma v. Hon.Maithripala Senanayake and Others) என்ற வழக்கின் மூலம் மேன்முறையீடு செய்யப்பட்டது. உயர் நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை உறுதிப்படுத்தியதுடன், இரண்டு முதலமைச்சர்களாலும் செய்யப்பட்ட மேன்முறையீடுகளைத் தள்ளுபடி செய்தது (Laksman Marasinghe 2009, p.42). இத்தீர்ப்பின் அடிப்படையில், முதலமைச்சரின் வேண்டுகோள் இன்றி, ஒரு மாகாணசபையை ஆளுநர் கலைக்க முடியாது என்பது தெளிவாகின்றது. ஆளுநரானவர், அவரது அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து பெறுகின்றார் என்பதோடு, தனக்கு உரித்தானதாக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதியின் ஒரு பிரதிநிதியாகவே பிரயோகித்தல் வேண்டும். ஆதலால், ஆளுனரின் இந்த நிறைவேற்றும் அதிகாரத்துக்குப் பணிப்புகளை வழங்குவதும், கண்காணிப்பதும் ஜனாதிபதிக்குரியதாகும் (1978ஆம் ஆண்டு அரசிலமைப்பு, உறுப்புரை 154(ஊ)).

### முடிவுரை

மாகாண சபை முறையானது முழுமையான அதிகாரப்பரவலாக்கலினை இலங்கையில் ஏற்படுத்தவில்லை என்ற வாதத்தினை ஏற்க வேண்டியுள்ளது. இம்முறைமை அமுல்ப்படுத்த தொடங்கிய காலம்முதல் இன்றுவரை பலதரப்பட்ட குறைபாடுகள் இம்முறைமை தொடர்பில் கூட்டிக்காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக நிதி, மனிதவளம், பௌதீக வளம், சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மத்தியரசினுடைய பிரநிதிநிதியாக செயற்பட எதிர்பார்க்கப்படுகின்ற ஆளுநருடைய குறிப்பிட்ட செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியரசினுடைய ஆதிக்கத்தினை தெளிவாகச் சுட்டிநிற்கின்றன. ஆளுநர் மாகாண சபையிலுள்ள சனாதிபதியின் பிரதிநிதியாவார். ஆளுநருடைய அதிகாரப் பிரயோகம் தொடர்பில் நீதிமன்றத்தினுடைய பல தீர்ப்புகள் இடம்பெற்றுள்ளன. ஒற்றையாட்சியின் கீழ் இடம்பெற்றிருக்கக்கூடிய இம்மாகாண சபையினூடான அதிகாரப்பரவலாக்கலில் மத்தியரசினுடைய பாதுகாவலனாக ஆளுநர் செயற்படுவதனைத் தவிர்ப்பது சாத்தியமற்றது. அதேவேளை இம்மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கத்தினை ஆளுநர் உணர்ந்து செயற்பட வேண்டும் என்ற நியாயமான எதிர்பார்ப்பினை அலட்சியப்படுத்த முடியாது. இவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு புதிதாக அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்ற அரசியலமைப்பில் மாகாண ஆளுநருடைய ஆதிக்கச் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் ஏற்பாடுகளை உள்வாங்க முயற்சிப்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## உசாத்துணைகள்


- Amarasinge. Y.R (ed.). 2000. **'Devolution Experience in Sri Lanka (1988-1998)** The administrative and fiscal implications', Provincial council experience: Centre-Province Relations, National Integration Programme Unit(NIPU). Colombo.
- Amarasinghe, Y.R. ed., 2001. **Devolution Experience in Sri Lanka (1988-1998):** The Administrative and Fiscal Implications. Colombo: National Integration Progarmme Unit.
- Amita Shatri. 1994. **The Provincial System in Sri Lanka:** A Solution to the Ethnic Problem?, ICES, Colombo.
- Laksman Marasinghe, **The Provincial Governor Rights and duties under the 13th Amendment, Institute for Constitutional Studies,** Colombo, Sri Lanka, 2009 at pages 27 28.
- Laksman Marasinghe and Jayampathy.W. 2010. **Judicial Pronouncements on the 13th Amendment. A Stamford Lake Publication,** Colombo.
- Laksman Marasinghe and Jayampathy.W. 2010. **13th Amendment: Essays on Practice. A Stamford Lake Publication,** Colombo.
- Leitan. G.R.T. 2000. **'Sri Lanka's system of Provincial Councils',** National Integration Programme Unit (NIPU), Colombo.
- Navaratnan-Bandara.A.M. 2000. **The Administrative Organization and the Public Service,** National Integration Programme Unit (NIPU). Colombo.
- **Parliament of Democratic Socialist Republic of Sri Lanka**-1978. Colombo: Government Printing Cooperation.
- **Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka.,** 1987.Provincial Councils Act, No.42 of 1987. Colombo: Government Printing Cooperation.
- **Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka., 1987.13th Amendment to the Constitution of Democratic Socialist Republic of Sri Lanka,** 1987. Colombo: Department of Government Printing.
- Ruana Rajapakse. 2008. **A Guide to Current Constitutional Issues in Sri Lanka,** Citizens' Trust, Rajagiriya, Sri Lanka.
- Wigneswaran.C.V. 2009. **The thirteenth amendment and the provincial councils' Act No.42 of 1987- Will they help the Tamil Speaking?**, Nakkeeram, Law Students' Hindu Maha Sabha, Sri Lanka law college.
- அம்பலவாணர் சிவராசா. 2006. **இலங்கை அரசியல்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனல் மின் உற்பத்தி நிலையத்தினால் ஏற்படுத்தப்படும் சூழல் மற்றும் விவசாய நடவடிக்கையின் மீதான தாக்கங்கள்

எஸ்.பிரியதர்சினி,
உதவி விரிவுரையாளர்,
எஸ். விஜேசந்திரன்,
முதுநிலை விரிவுரையாளர்,
பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யும் பல்வேறுபட்ட துறைகளில் ஒன்றாகக் கைத்தொழில் துறை காணப்படுகின்றது. இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 19.6% ஆகக் காணப்பட்ட கைத்தொழில் துறையின் வகிபங்கானது 2014 ஆம் ஆண்டில் 32.5% ஆக வளர்ச்சியடைந்துள்ளமையானது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மீதான கைத்தொழிற்துறையின் பங்களிப்பினைப் பிரதிபலித்து நிற்கின்றது (மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2014). இவ்வாறு கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் விரிவாக்கம் மற்றும் பன்முகப்படுத்தல்களினால் ஏற்பட்ட கைத்தொழில் வளர்ச்சியினாலும் மறுபுறத்தில் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட துரிதமான வளர்ச்சிப் போக்கினாலும் மின்சார உற்பத்திக்கான கேள்வி தொடர்ச்சியாக நாட்டில் அதிகரித்து வந்துள்ளது. அவ்வகையில் 2009 ஆம் ஆண்டு மின்சார உற்பத்திக்கான கேள்வியுடன் (1868MW) ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டு மின்சார உற்பத்திக்கான கேள்வியில் (2164.2MW) ஏற்பட்ட அதிகரிப்பானது 296.2 MW[1] ஆகக் காணப்படுவதனூடாக மின்சார உற்பத்திக்கான கேள்வியில் ஏற்பட்டுவரும் தொடர்ச்சியான அதிகரிப்பினைப் அவதானிக்க முடியும் (இலங்கை மின்சார சபை அறிக்கை, 2014). இவ்வதிகரித்த மின் தேவையினைப் பூர்த்திசெய்யும் முகமாக அனல் மின் நிலையங்கள் பல்வேறு சூழல் மற்றும் சமூக பொருளாதாரத் தாக்கங்களைக் கொண்டிருந்த போதும் கொள்கை அளவில் அதன் அவசியத்தை இவை வலியுறுத்தி நிற்கின்றன.

இவ்வாறு அதிகரித்துவரும் மின்தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு புதுப்பிக்கக்கூடிய வளங்களான (Renewable Resource) நீர், காற்று, சூரியசக்தி மற்றும் Biofuel போன்றவற்றைப் பயன்படுத்தும்போது அது சூழலிற்கும் சூழலின் ஏனைய கூறுகளிற்கும் பாதகவிளைவுகளை ஏற்படுத்துவது குறைவாக இருப்பினும், இப்புதுப்பிக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி மின்சாரத்தைப்

[1] MW - Mega watts இது ஒரு மில்லியன் watts இனைக் குறிக்கின்றது. இங்கு watts என்பது மின் உற்பத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சர்வதேச அலகாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ள முடியாத பகுதிகளில் வாழும் மக்களினது மின்சாரத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு அனல் மின் நிலையங்கள் நாட்டிற்கு அவசியமானவையாகக் காணப்படுகின்றன.

இலங்கையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் 12,132GW[2] அளவான மொத்த மின்சாரத்தில் 57% ஆன சுமார் 6915.24GW அளவான மின்சாரம் நீர்மின் உற்பத்தி நிலையங்கள் மூலமும், 41% ஆன சுமார் 4974.12GW அளவான மின்சாரம் அனல்மின் நிலையங்கள் மூலமாகவும் எஞ்சிய 2% ஆன மின்சார உற்பத்தியானது காற்று, சூரியசக்தி மற்றும் Biofuel போன்றவற்றினைப் பயன்படுத்தியும் உற்பத்தி செய்யப்படுகின்றது (இலங்கை மின்சார சபை அறிக்கை, 2014). இதனடிப்படையில் இலங்கையின் மின்சார உற்பத்திக்கு பாரிய பங்களிப்பினை மேற்கொள்ளும் இரண்டாவது மூலமாக அனல் மின் நிலையங்கள் காணப்படுவதுடன் நாட்டின் மின்சாரத் தேவையில் இரண்டில் ஒரு பகுதியினைப் பூர்த்தி செய்வனவாகவும் இவை காணப்படுகின்றன.

அனல் மின் நிலையங்கள் மின்சார உற்பத்தியை மேற்கொள்வதற்காக டீசல், நிலக்கரி மற்றும் மசகு எண்ணெய் போன்ற புதுப்பிக்க முடியாத வளங்களை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி மின்சார உற்பத்தியில் ஈடுபடுகின்றன. இலங்கையில் குறிப்பாக அனல்மின் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் 41%மான மொத்த மின்சாரத்தில் மசகு எண்ணையினைப் பயன்படுத்தி 27%மான அளவு மின்சாரமும் நிலக்கரியினைப் பயன்படுத்தி 14%மான அளவு மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகின்றது (இலங்கை மின்சார சபை அறிக்கை, 2014). இத்தகைய மூலவளங்களைப் பயன்படுத்தி அனல்மின் நிலையங்கள் மின்பிறப்பாக்கத்தில் ஈடுபடுகின்றபோது அவற்றிலிருந்து வெளியேற்றப்படுகின்ற தூசுகள், நச்சுத்தன்மை வாய்ந்த புகைகள், இரசாயனப் பொருட்கள், எண்ணெய் மற்றும் கிறீஸ் கழிவுகள் என்பன சூழல் மாசடைதலுக்கு ஏதுவான காரணிகளாக அமைகின்றன.

அனல்மின் நிலையங்கள் பொதுவாக நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் மின்சார உற்பத்தியைப் பெருக்கி இலாபத்தினை ஈட்டுவதனை பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்ற நிலையில் அவற்றினால் தோற்றுவிக்கப்படும் சூழல் மாசடைதலினளவைக் குறைத்துக்கொள்ளல் மற்றும் சூழலின் தரத்தைப் பேணுவதில் அவை அதிகளவு அக்கறை கொண்டனவாகக் காணப்படவில்லை என்ற வாதங்கள் சூழல் பொருளியலாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அனல்மின் நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் திண்ம, திரவ வாயுக் கழிவுகளினால் சூழற்கூறுகளான நிலம், நீர், வளி, உயிரினப் பல்வகைமை என்பன மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றமையானது இபுன்னயா (2010), பகெலா (2012), கற்றி மற்றும் பலர் (2014) போன்ற பலரது ஆய்வுகளின் மூலமும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வகையில், விவசாய உற்பத்திக்கான தேவைகள் உட்பட மனிதனது அன்றாட அடிப்படைத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் நீர் மற்றும் நீர்நிலைகள் அனல் மின் நிலையங்களினால் வெளியேற்றப்படும் கழிவுகளினால் மிக மோசமாகப் பாதிப்படைந்து வருகின்றமை இனங்காணப்பட்டுள்ளது.

[2] GW -Giga watts இது ஒரு பில்லியன் watts இனைக் குறிக்கின்றது. இவ்வலகானது மிகப் பெரிய மின்னுற்பத்தி நிலையங்களின் மின்னுற்பத்தியை அளவிடப் பயன்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனல்மின் நிலையக் கழிவுகள் பொருத்தமான பாதுகாப்பு முறைகளினூடாக வெளியேற்றப்படாது, நிலத்திலும் நீர்ப்பரப்பிலும் கொட்டப்படுவதனால் அல்லது கசியவிடப்படுவதனால் தரைக்கீழ் மற்றும் தரை மேற்பரப்பு நீர்நிலைகள் அதிகளவில் மாசடைந்து வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இந்நீர் மாசடைவினால் முதன்மைப் பொருளாதார நடவடிக்கையான விவசாயம் மற்றும் நீர்சார் உற்பத்திகள் பாதிக்கப்படுவதோடு மனித சுகாதாரம், சூழற்தொகுதி என்பனவும் அதிகளவில் பாதிப்படையக் காரணமாக அமைகின்றது (கற்றி மற்றும் பலர், 2014).

பொதுவாக ஒரு நாட்டின் விவசாய உற்பத்தித் துறையின் மீது ஏற்படுத்தப்படும் எதிர்க்கணியத் தாக்கமானது உணவு உற்பத்தியை அதிகரித்தல், உணவில் தன்னிறைவுத் தன்மையினை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணித்தல் என்ற இலக்குகளை ஒரு நாடு அடைந்துகொள்வதற்கும் அதனூடாக வறுமை, பஞ்சம், பசி, பட்டினி என்பவற்றை அகற்றுவதற்கும் (விவசாய உற்பத்தித் துறையின் மீது ஏற்படுத்தப்படும் எதிர்க்கணியத் தாக்கமானது) தடையாக அமைகின்றது. நிலக்கீழ் நீர் மாசடைதலினால் நிலத்தின் செழிப்புத்தன்மை மற்றும் மண்ணின் இரசாயனத்தன்மை என்பன பாதிப்படைவதாலும் விவசாயத்திற்கு உதவிபுரியும் மண்வாழ் உயிரங்கிகள் அழிவடைவதாலும் குறித்த நிலத்தின் உற்பத்தித்திறன் வீழ்ச்சியடைய அது விவசாய உற்பத்தியின் இயலளவைக் குறைவடையச் செய்கின்றது.

செழிப்புத்தன்மையற்ற நிலத்தில் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் உற்பத்தியளவு, உற்பத்தித் தரம் என்பன வீழ்ச்சியடைவதோடு, உற்பத்திச் செலவீடும் அதிகரிப்படைவதனால் விவசாய நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாப உழைப்பானது வீழ்ச்சியடைகின்றது (உலகவங்கி அறிக்கை, 2007). லிந்தியம் (2009) என்பவர் சீன நாட்டை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட தமது ஆய்வின் மூலம் நீர்மாசடைவினால் சீனாவின் விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட மொத்த வீழ்ச்சியானது RMB[3] 360 ஆகவும், உற்பத்தியளவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது RMB 280 ஆகவும், உற்பத்தித் தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது RMB 75 ஆகவும் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நீர்மாசடைதலானது விவசாய உற்பத்தி நடவடிக்கையின் உற்பத்தி அளவு, உற்பத்தித் தரம், உற்பத்தித்திறன், வெளியீடு, மற்றும் வருமான ஈட்டம் என்பவற்றின் மீது தாக்கத்தினை ஏற்படுத்துவதனால், விவசாய குடும்பங்கள் வருமான இழப்பிற்கும் வாழ்வாதார நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் விவசாயத் துறையின் உற்பத்தியில் ஏற்படும் வீழ்ச்சியானது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மீது எதிர்க்கணியத் தாக்க விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. இதனால் உணவில் சுயதேவைப் பூர்த்தியினை அடைய முடியாமையின் காரணமாக உணவுப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்படைய அது நாட்டில் அந்நியச் செலாவணிப் பிரச்சினை, மற்றும் வர்த்தக நிலுவைப் பற்றாக்குறை போன்ற நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதுடன் வறுமை, வேலையின்மை மற்றும் பொருளாதார மந்தம் என்பவற்றின் தோற்றப்பாட்டிற்கும் அடிப்படையாக அமைகின்றது. மேலும்

[3] RMB - சீன நாட்டின் நாணய அலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசடைந்த நீரினை உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துவதனால் உற்பத்தித்தரம் மற்றும் உற்பத்தியளவு என்பவற்றில் ஏற்படும் வீழ்ச்சிகளை ஈடுசெய்யும் முகமாக மேலதிகமான உள்ளீடுகளைப் பயன்படுத்துதல், நீரினைச் சுத்தீகரித்தல், நிலத்தை வளப்படுத்தல், நீரிலுள்ள மாசுக்களினளவைக் குறைத்தல் மற்றும் மேலதிகச் சூழல் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என்பவற்றின் காரணமாக ஏற்படும் மீளுருவாக்கச் செலவானது விவசாயிகளுக்கு மேலதிக பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகின்றது. ஹை (2011) என்பவரது கருத்துப்படி மாசடைந்த நீரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் உற்பத்தித் தரம் குறைவடைவதால் சந்தையில் ஏற்படும் விலை வீழ்ச்சி, மொத்த உற்பத்தியளவில் ஏற்படும் வீழ்ச்சி, மீளுருவாக்க செலவீடுகளினால் உற்பத்திச் செலவீட்டின் மீது ஏற்பட்ட அதிகரிப்பு என்பவற்றால் குறிப்பிட்ட விவசாய நடவடிக்கையின் தேறிய இலாபம் வீழ்ச்சியடைகின்றது.

இதனூடாக அனல்மின் நிலையங்களினால் வெளியேற்றப்பட்ட எண்ணெய் மற்றும் கிறீஸ் கழிவுகளினால் மாசடைந்த நீரை விவசாய உற்பத்தி நடவடிக்கைகளிற்குப் பயன்படுத்தி உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது அது விவசாய உற்பத்தியில் எதிர்க்கணியத் தாக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றது என வகைகூற முடியும்.

அவ்வகையில் இலங்கையின் வடபகுதியில் குறிப்பாக யாழ்குடாநாட்டிலுள்ள சுண்ணாகம் பகுதியில் பல்வேறு காலப்பகுதிகளிலும் வெவ்வேறுபட்ட அனல்மின் நிலையங்கள் குறிப்பாக 'Chunnakam Diesel Power Plant of Ceylon Electicity Board (1958)', 'Aggrico Diesel Generator (1995), Nothern Power Plant (2009)', 'Uthuru Janani' (2013) போன்றவை மின் உற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ளன. இவை வடபகுதிவாழ் மக்களின் மின்சாரத் தேவையினைப் பூர்த்தி செய்துள்ள அதேவேளை பல்வேறு சுற்றுச்சூழல் மாசடைவிற்கும் அடிப்படையானவையாக அமைந்துள்ளன. இம்மின் உற்பத்தி நிலையங்கள் புதுப்பிக்க முடியாத வளங்களான டீசல், மசகு எண்ணெய் என்பவற்றை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி மின் உற்பத்தியில் ஈடுபடும்போது அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயன நச்சுத்தன்மை வாய்ந்த புகைகள், திண்ம, திரவ, எண்ணெய் கழிவுகள் என்பன பொருத்தமற்ற முறைகளினூடாக நிலத்திலும் நீர்ப்பரப்பிலும் கொட்டப்படுவதனால் அப்பகுதியின் தரைக்கீழ் நீர் நிலைகள் அதிகளவில் மாசடைந்து வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது (இடர் முகாமைத்துவ அறிக்கை, 2014).

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி சுண்ணாகம் மின்பிறப்பாக்க நிலையத்தினை அண்டிய பகுதி நிலத்தடி நீரில் 73% ஆன கிணறுகளில் உயர்மட்டத்தில் எண்ணெய் படிவுகள் இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் மாசடைந்த நீரில் ஈயம், குரோமியம் போன்ற உலோகங்கள் கலந்திருப்பதாகவும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்குடாநாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் ஏற்பட்டுள்ள நீர் மாசடைதலினால் அப்பகுதிவாழ் மக்களது இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ள அதேநேரம் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் சுத்தமான குடிநீருக்காக அல்லற்படும் அபாய நிலையும் தற்போது நிலவுகின்றது. குடிநீருக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்போன யாழ்குடாநாட்டு மக்களே இன்று தமது அத்தியாவசிய குடிநீருக்காக வேறு இடங்களிற்கு அலைந்து திரிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை குடாநாட்டில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நீர் மாசடைதலிற்கு சுண்ணாகம் மின்பிறப்பாக்க நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட திண்ம, திரவக் கழிவுகள், வாகனம் திருத்துமிடங்கள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் வெளியேற்றப்பட்ட எண்ணெய் கழிவுகள் போன்றன அடிப்படையாக அமைந்திருப்பினும் சுண்ணாகம் மின்பிறப்பாக வளாகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட எண்ணெய் மற்றும் கிறீஸ் கழிவுகள் தான் இத்தரைக்கீழ் நீர் மாசடைவிற்கான பிரதான காரணி என்பது மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையினூடாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

சுண்ணாகம் பகுதியில் கடந்த 1958 முதல் இன்றுவரை பல்வேறு மின்னுற்பத்தி நிலையங்களும் மின் பிறப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளதுடன் இவற்றினால் வெளியேற்றப்படும் திண்ம, திரவக் கழிவுகள் பொருத்தமற்ற முறையில் மின்பிறப்பாக்க வளாகத்தை அண்மித்த பகுதிகளில் கொட்டப்பட்டதனால் அப்பகுதி தரைக்கீழ் நீர்நிலைகள் மாசடைந்துள்ளதாக அண்மைக்காலங்களில் பல்வேறு சர்ச்சைகள் எழுப்பப்பட்டுள்ளன.

இலங்கை மின்சார சபையின் 'Chunnakam Diesel Power Plant' இன் டீசல் தாங்கியானது யுத்தகாலத்தில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சினால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்டீசல் தாங்கியிலிருந்து 1500 கனமீற்றருக்கும் அதிகமான டீசல் நிலப்பரப்பின் மீது வெளியேற்றப்பட்டதுடன் அதில் ஒரு பகுதி டீசல் எரிந்து போக பெரும்பகுதி டீசல் அப்பகுதியிலுள்ள தாழ்வான குளத்தை நோக்கி வழிந்தோடியதுடன் பின்னர் அது எண்ணெய்க்குளம் எனவும் மக்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வெண்ணெய் குளத்தினது தாக்கமும் தரைக்கீழ் நீர் மாசடைவிற்கு ஏதுவான காரணியாகக் காணப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்துவந்த காலத்தில் அப்பகுதி வாழ் மக்களது மின்சாரத் தேவையினைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் 'Aggriko' நிறுவனம் 2009 வரை டீசல் மின் பிறப்பாக்கியைப் பயன்படுத்தி மின் உற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ளது. இதன் மூலம் வெளியேற்றப்பட்ட கழிவுகளும் அப்பகுதியின் தரைக்கீழ் நீர் மாசடைவிற்கு அடிப்படையாக அமைந்துள்ளது (மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆய்வறிக்கை, 2014).

இதனையடுத்து அண்மையில் நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட 'Nothern Power' நிறுவனம் வெளிநாட்டில் பாவித்த நிலையில் தருவிக்கப்பட்ட டீசல் மின்பிறப்பாக்கிகளினைப் பயன்படுத்தி மின்னுற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ளது. இந்த 'Nothern Power' நிறுவனத்திற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதியானது (Environmental Protection Licence) 2013 இற்குப் பின்னரே மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒப்புதலுடன் இலங்கை முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முற்பட்ட காலத்தில் இந்நிறுவனம் சுற்றாடல் தொடர்பான எவ்வித உறுதிப்படுத்தல் அறிக்கையுமின்றியே செயற்பட்டு வந்திருப்பதுடன் 'Aggrico' நிறுவனம் எண்ணெய் கழிவுகளை வெளியேற்றிய அதே இடத்திலேயே இந்நிறுவனமும் தனது மின்னுற்பத்திக் கழிவுகளை வெளியேற்றி வந்துள்ளதால் இதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைக்கீழ் நீர் மாசடைவுக்கு ஏதுவான ஒன்றாக அமைந்துள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது (மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆய்வறிக்கை, 2014).

இவற்றைத் தொடர்ந்து 2014 ஆம் ஆண்டு முதல் இலங்கை மின்சார சபையானது 'உத்துறு ஜனனி' என்ற மின் உற்பத்தி நிலையத்தை இயக்கி வருகின்றது. இது நவீன இலத்திரனியல் தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய மின்பிறப்பாக்கியைக் கொண்டு காணப்படுவதுடன் கழிவுகளை முகாமைப்படுத்தும் புதிய முறைகளையும் கொண்டு செயற்படுவதனால் இதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறைவாகக் காணப்படுவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆய்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதனடிப்படையில் நோக்குகின்றபோது சுண்ணாகம் மின்பிறப்பாக்க வளாகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுகள் தான் இத்தரைக்கீழ் நீர் மாசடைவிற்கான பிரதான காரணி என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பருவமழைக்காலத்தில் சுண்ணாகம் மின்பிறப்பாக்க வளாகத்தினை அண்டிய பகுதிகளிலிருந்து நிலத்தடி நீருடன் கலந்த பெற்றோலியம் மற்றும் ஐதரோக்காபன் என்பன மண் மற்றும் நீர் என்பவற்றுடன் இணைந்திருப்பதோடு தொடர்ந்துவந்த காலங்களில் அவற்றின் பௌதீக இரசாயன உயிரியற் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்களிற்கும் இது அடிப்படையாக அமைந்துள்ளது.

மேற்கூறப்பட்டவற்றின் அடிப்படையில் அனல்மின் நிலையங்களினால் வெளியேற்றப்பட்ட எண்ணெய் மற்றும் கிறீஸ் கழிவுகள் தான் நீர்மாசடைதலிற்கான பிரதான காரணியென உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நீர் மாசடைதலினை எதிர்கொண்டுள்ள பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் பிரதேச சபைகள், விவசாய அமைச்சு, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, அனர்த்த முகாமைத்துவப்பிரிவு உட்பட பல அமைப்புக்களும் நீர் விநியோகத்தில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றினால் வழங்கப்படுகின்ற நீரினை மக்கள் தமது அன்றாடத் தேவைகளிற்குப் பயன்படுத்துகின்ற போதும் விவசாயம் உட்பட்ட இதர நீர்சார் உற்பத்தி நடவடிக்கைகள் மாசடைந்த நீரினைப் பயன்படுத்தியே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வாறு மாசடைந்த நீரினைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியில் ஈடுபட்டு வருவதனால் உற்பத்தித் திறன், உற்பத்தி இயலளவு, உற்பத்தித் தரம், உற்பத்தி விளைச்சல் என்பன பாதிக்கப்படுவதுடன் விவசாயப் பயிரினங்கள் பல்வேறு புதியவகை நோய்களிற்கும் உட்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் மாசடைந்த நீரினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விவசாய வெளியீடுகளைச் சந்தைப்படுத்தும் போது அவற்றிற்கு உரிய விலைகள் கிடைக்கப்பெறுவதில்லை. இதனால் அவ்வுற்பத்திகளிற்கான கேள்வியில் சரிவுநிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளிற்கும் முகங்கொடுத்து வருகின்றனர். எனவே, நீர்மாசடைதலினால் யாழ்குடாநாட்டின் முதன்மைப் பொருளாதார நடவடிக்கையான விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உற்பத்திச் செயற்பாடுகளும் அதிகளவில் பாதிப்படைந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

யாழ்குடாநாட்டின் பிரதான பொருளாதார நடவடிக்கையாகவும் பூர்வீகத் தொழிலாகவும் விவசாயம் காணப்படுவதுடன் அம்மக்களது கலாசார விழுமியங்கள், பாரம்பரியங்கள் யாவும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. யாழ்குடாநாட்டிலுள்ள மக்களில் 1/3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியளவான ஏறக்குறைய 63,280 குடும்பங்கள் விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டு காணப்படுவதுடன் இவர்கள் நெல் தென்னை, பனை, அவரைத் தானியங்களை வாழ்வாதார அடிப்படையிலும் புகையிலை, சின்ன வெங்காயம், மிளகாய், மரக்கறிகள், திராட்சை, வாழைப்பழம் உள்ளிட்ட பயிர்களை வர்த்தக நோக்கிலும் பயிரிட்டு வருகின்றனர்.

இவ்வாறு வாழ்வாதார நோக்கிலும் வர்த்தக நோக்கிலும் விவசாயத்தினைப் பிரதான பொருளாதார நடவடிக்கையாகக் கொண்டு செயற்படும் யாழ்குடாநாட்டு மக்கள் அனல்மின் நிலையத்தினால் ஏற்பட்டுள்ள நீர்மாசடைதலினால் விவசாய உற்பத்திச் செயற்பாடுகளில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் (பிரியதர்சினி மற்றும் விஜேசந்திரன், 2016). விவசாய உற்பத்திச் செயற்பாடுகளின் மீது ஏற்படுத்தப்படும் தாக்கமானது மக்களது வருமானம் மற்றும் வாழ்கைத்தரம் என்பவற்றில் வீழ்ச்சியினை ஏற்படுத்துவதனால் அது நாட்டின் பொருளாதார வளர்ச்சியினைப் பாதிப்படையச் செய்கின்றது.

யாழ்குடாநாட்டு மின் உற்பத்தி நிலையங்களினால் வெளியேற்றப்பட்ட எண்ணெய் மற்றும் கிறீஸ் கழிவுகளினால் வலிகாமம் தெற்கு, தெல்லிப்பளை, கோப்பாய், சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளின் தரைக்கீழ் நீர்மாசடைவானது மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பகுதிகளிலும் விவசாய நிலங்களிலும் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளதுடன் இந்நீர்மாசடைவினால் 13,414 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 45,764 இற்கும் மேற்பட்ட பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது (இடர் முகாமைத்துவ அறிக்கை, 2015). இம்மாசடைந்த நீரை மக்கள் தமது அன்றாடத் தேவைகளிற்குப் பயன்படுத்துவதால் இவர்கள் குறிப்பாக **சுவாசநோய், நுரையீரல் புற்றுநோய், சிறுநீரக செயலிழப்பு, இரத்தப் புற்றுநோய், வலிப்பு** போன்ற பல குணப்படுத்த முடியாத நோய்களிற்கு உட்படும் ஆபத்தான நிலையும் காணப்படுவதாக வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் சிறுவர்கள், கர்பிணித்தாய்மார்கள், முதியவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள அதேநேரம் அவர்கள் அப்பகுதிகளினை விட்டு புலம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்வதனால் பல்வேறு சமூகப் பொருளாதார இன்னல்களிற்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

நீர்மாசடைதலானது விவசாய உற்பத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கை மீது தாக்கத்தினை ஏற்படுத்துவது மட்டுமல்லாது (பிரியதர்சினி மற்றும் விஜேசந்திரன், 2016) மனிதனது பொதுச்சுகாதாரம், சூழற்தொகுதி என்பவற்றின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது (றெட்டி மற்றும் பெகேரா, 2006). அதாவது மாசடைந்த நீரை மக்கள் சமைத்தல் உள்ளிட்ட அன்றாடத் தேவைகளிற்குப் பயன்படுத்துவதனால் இவர்கள் உடலுறுப்பு செயலிழப்பு மற்றும் நுண்ணங்கித் தொற்று போன்ற நோய்களின் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர் (கேனகம மற்றும் பலர், 2013). குவாங் (2010) என்பவரது கருத்துப்படி நீர்மாசடைவதனால் பயிர்ச்செய்கை, கால்நடைவளர்ப்பு, மீன்பிடித்தொழில், கைத்தொழில் நடவடிக்கைகள் என்பன பாதிக்கப்படுவது மட்டுமல்லாது சுற்றுச்சூழலின் தரமும் அழகியற் காட்சிகளும் பாதிக்கப்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். மாசடைந்த நீரினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திகளை மக்கள் நுகர்வு செய்வதனூடாகவும் சுகாதார ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புக்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர். இவ்வாறு ஏற்படும் சுகாதார ரீதியான பாதிப்புக்களினால் மனித மூலதனத்தின் மீது ஏற்படுத்தப்படும் தாக்கமானது ஊழிய உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தி இயலளவு என்பனவற்றில் வீழ்ச்சியை ஏற்படுத்தி உற்பத்தியைப் பாதிப்படையச் செய்வதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது மந்தநிலைக்குத் தள்ளப்படுகின்றது.

எனவே, அனல்மின் உற்பத்தி நிலையங்களினால் வெளியேற்றப்படும் திண்ம, திரவ வாயுக் கழிவுகளினால் சூழற்கூறுகளான நிலம், நீர், வளி, உயிரினப் பல்வகைமை என்பன பாதிப்படைகின்ற அதேநேரம் சுகாதார ரீதியான பாதிப்புக்களிற்கும் சுற்றுச் சூழல் பாதிப்புக்களிற்கும் மக்கள் முகங்கொடுப்பதனால் இது ஒட்டுமொத்த விவசாய நடவடிக்கைகளையும் பாதிப்படையச் செய்கின்றது. இவ்வாறு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்யும் பிரதான துறைகளில் ஒன்றாகக் காணப்படும் விவசாயத்துறையின் மீது ஏற்படுத்தப்படும் பாதிப்பானது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடுகளையும் நிலைகுலையச் செய்கின்றது. எனவே, இது தொடர்பான மேலும் பல விடயங்களை ஆராய்வது தற்காலத்திற்கு மிகவும் பயனுள்ள ஒரு விடயமாக அமைகின்றது.

### உசாத்துணைகள்


- Central Bank of Sri Lanka. (2014). **Annual Report**, Colombo: Sri Lanka.
- Ceylon Electicity Board . (2014). **Annual Report**, Colombo: Sri Lanka.
- Central Environmental Authority. (2014). '**Investigation Report on oil contamination of Ground water at Chunnakam Area**, Jaffna.
- Gung, X.(2010). '**An Estimate of the Economic Consequences of Environmental Pollution in China**'.*Policy Research Center of the National Environmental Environmental Protection agency*,100035. [Online] www.erdixon/.../chinaeco/pollut.htm.Accessed 16 March 2016.
- Henegama, P.H., Dayawansa,N.D.K. and Desilva,S.(2013). '**An Assessment of Social and Environmental Implications of Agricultural Water pollution in NuwaraEliya**'.*Tropical Agricultural Research*. 2494):304-316.[Online] htttp://www.dammid @pdn.ac.lk. Accessed o1 April 2016.
- Ifunanja, A. S. and Jordaan, A.J. (2010). '**The Impact of Oil Spillage on Agricultural Production**'. Unpublished Master Thesis, University of the Free State, Bloemfontein, South Africa. [Online] www.natagri.ufs.za. Accessed 10 March 2016.
- Khati, V.V, Gulwade, P. D. and Deo, S. S (2014).'**Quality Assessement of Surface and Groynd Water around Thermal Power Plants at Warora District**.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. த. சரவணமுத்துப்பிள்ளை : 'தத்தைவிடுதூது' வழியான புரிதல்

பாஸ்கரன் சுமன்,
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



I

*"பத்தொன்பதாம் நூற்றாண்டிலே பகுத்தறிவு, வரலாற்றுணர்வு, ஆங்கில அறிவு, சமூக நோக்கு முதலிய பண்புகளைத் தழுவிநின்று இலக்கணம், இலக்கியம், வரலாறு, அறிவியல் ஆகிய துறைகளில் உழைத்த இலங்கையர்களே பிற்காலத்தவர் நினைவுகூரத்தக்க ஆக்கங்களைச் செய்தனர் என்பது உறுதிப்படுகின்றது. இவர்கள் இருபதாம் நூற்றாண்டுக்குரிய சில போக்குகளையும் நெறிகளையும் முற்படச் சுட்டிச் சென்றனர் எனக் கூறலாம்."*[1]

மேற்கூறிய மதிப்பீடு ஏற்புடையதே. இருபதாம் நூற்றாண்டிலும் தற்காலத்திலும் நவீன இலக்கியச் செல்நெறி பல தளங்களிலும் விரிவடைந்துள்ளது. அந்தப் போக்குகளின் முன்னோடிச் சிந்தனைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே முளைகொண்டன. நவீன இலக்கியச் செல்நெறி பற்றிப் பேசுபவர்களும் அதன் போக்கினை ஆய்வு நோக்கில் அணுகுபவர்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தே ஆரம்பிப்பர். தி.த.சரவணமுத்துப்பிள்ளையின் படைப்புக்களுள் ஒன்றான தத்தைவிடுதூதினை மையங்கொள்ளும் இக்கட்டுரை பத்தொன்பதாம் நூற்றாண்டில் நவீன உள்ளடக்க, உருவ அமைதிகள் இலக்கியத்தில் வெளிப்பட்டு நின்றவாற்றைக் கோடிட்டுக் காட்டி, அந்தக் கால எல்லைக்குள் கட்டுண்டு நின்ற தி.த.சரவணமுத்துப்பிள்ளையிடம் அம்மரபுகள் தொற்றிக் கொண்டமையை எடுத்துரைப்பதாக அமைகிறது.

ஆங்கிலேய காலனித்துவத்தின் வழிவந்த அச்சியந்திரப் பயன்பாட்டின் விரிவு, ஆங்கிலக் கல்வி, அறிவியல் கல்வி, பண்பாட்டு ஊடுருவல், சமூகம் குறித்த புரிதல்கள் எனப் பல்வேறுபட்ட காரணிகள் அக்கால இலக்கியத்தின் உருவ, உள்ளடக்க நவீனத்துவத்தில் செல்வாக்குச் செலுத்தின. மரபுவழிச் சமுதாய அமைப்பையும் அவற்றின் நம்பிக்கைகளையும் வழக்காறுகளையும் எடுத்துரைத்து வந்த படைப்பாளிகளில் சிலர், சமுதாய மாற்றங்களையும் அதன் விளைவுகளையும் எடுத்துரைக்க முயன்றனர். அம்முனைப்புக்கள் முதலில் மரபுரீதியான இலக்கிய வடிவங்களில் நவீன உள்ளடக்கத்தை எடுத்துரைப்பதாகவே வெளிப்பட்டன. இது தொடர்பில் பொ.பூலோகசிங்கத்தின் கீழ்வரும் மதிப்பீடு சுட்டிக்காட்டத்தக்கது:

---

[1] கைலாசபதி,க. 2001, ஈழத்து இலக்கிய முன்னோடிகள், சென்னை : குமரன் பப்ளிஷர்ஸ், பக். 35.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"வெள்ளைக்கார ஆட்சியிலே ஏற்பட்ட புதிய வாழ்க்கை முறைகள், புதுவகையான ஏற்றத்தாழ்வுகள், புதிய நீதிமுறை, புதிய சம்பிரதாயங்கள், புதிய பழக்கவழக்கங்கள், பொதுவில் சமுதாயத்திலே தலை தடுமாற்றங்களையும் சமகால நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டிய சூழ்நிலையையும் தோற்றுவித்தன. இம்மாற்றங்களையும் விளைவுகளையும் புலவர்கள் அனைவரும் சரிவரப் புரிந்துகொண்டனர் என்றோ அவற்றைக் காரணகாரியத் தொடர்புடன் விபரிக்க முனைந்தனர் என்றோ கூறுவதற்கில்லை. ஆயினும் சிலர், அவற்றின் சிற்சில அம்சங்களைக் கண்டு மரபுவழி இலக்கிய வடிவங்களுக்குள்ளேயே அவற்றைச் சித்திரிக்க முற்பட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இத்தகைய சமுதாய இலக்கிய நோக்கு தலைதூக்கியது. சமகாலச் சம்பவங்களைக் கவிப்பொருளாகக் கொண்டு அவற்றினூடாகச் சமுதாயநிலைகள் பற்றிக் கருத்துரைக்கும் போக்கு புதிய செல்நெறியொன்றின் பிரதிபலிப்பு என்றே கொள்ள வேண்டும்."*[2]

இப்போக்கின் முதற்பதிவாக உடுப்பிட்டி குமாரசுவாமி முதலியாரின்[3] (1791 - 1874) ஐந்து கீர்த்தனைகள் விளங்குகின்றன. பிரபுக்கள் மீதும் இறைவன் மீதும் பதிகம், கோவை, ஊஞ்சல் முதலியவற்றைப் பாடிய இவர், 1866 - 1867 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தினாலும் (அட்சய வருடப் பஞ்சம்) கோதாரி - கொள்ளை நோய் (Cholera) நோயினாலும் விளைந்த கொடுமையினைப் பாடினார். கீர்த்தனங்களில் எளிய இசைப்பா வடிவத்தை நவீன உள்ளடக்கத்திற்காக எடுத்துக்கொண்டமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

இதன் தொடர்ச்சியாகப் புராணம், தூது ஆகிய மரபுவழி இலக்கிய வடிவங்களைக் கைக்கொண்டு நவீன உள்ளக்கத்தைப் பாடினர். பெரும்பாலும் தலங்களின் மகத்துவத்தையும் விரத மகிமையையுமே புராணம் எனும் இலக்கிய வடிவத்தினூடு வெளிப்படுத்திய மரபிலிருந்து விடுபட்டு கனகி புராணம், கோட்டுப் புராணம் முதலான படைப்புகள் நவீன உள்ளடக்கங்களைத் தாங்கி வெளிவந்தன.[4] அதேபோல் மரபுவழி தூதுப் பிரபந்த வடிவத்தை

---

[2] கைலாசபதி,க. மு.கு.நூ. பக். 40.

[3] முத்துக்குமார முதலியார் என்பவர் இவருக்கு ஆசிரியர். அவரிடம் இலக்கண இலக்கியங்களை அவர் கற்றுச் சாமதர்த்தியமடைந்ததேயன்றிப் பாடுவதிலும் சாமார்த்தியமடைந்தனர். இவர் இயற்றிய நூல்கள் அருளம்பலக் கோவை, தீருவிற் சுப்பிரமணியர் பதிகம், மூளாய்ச் சித்தி விநாயகர் ஊஞ்சல், நல்லைக் கலித்துறை, கந்தவனநாதர் ஊஞ்சல், இந்திரகுமார நாடகம் முதலியன. பல தனிக்கவிகளும் பாடியுள்ளார் என்பார் சி.கணேசையர் (ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், 2006, கொழும்பு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், பக். 84.).

[4]

**அ)** புராணங்கள் சமயப் பொருண்மையையே பெரும்பாலும் கொண்டிருந்தன. தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்கள் பரவிய காலத்தும் அம்மதம் சார்ந்த படைப்பாளிகள் புராணம் எனும் வடிவத்தினூடு சமயப் பொருண்மையையே எடுத்துரைத்தனர்.

**ஆ)** கனகி புராணமானது, வண்ணார் பண்ணைச் சிவன்கோயில் தாசிகளுள் ஒருத்தியாகிய கனகி என்பவளிடம் அக்காலத்து யாழ்ப்பாணப் பிரபுக்கள் பலரும் கொண்டிருந்த தொடர்பைக் கருவாகக்கொண்டு அங்கதச் சுவையோடு பாடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டு தி.த.சரவணமுத்துப்பிள்ளை பெண் விடுதலை சார்ந்த கருத்துக்களைத் 'தத்தைவிடுதூது' எனும் படைப்பின் மூலம் வெளிப்படுத்தினார்.[5]

II

சிறுவயது முதலே ஒன்றாகப் பழகிய ஓர் ஆணும் பெண்ணும் நாளடைவில் காதலராகின்றனர். தலைவனுக்குப் பொருள் வளம் இல்லாத காரணத்தால் பெண்ணின் பெற்றோர் அக்காதலுக்குத் தடை விதித்து, தனவந்தன் ஒருவனுக்குத் திருமணம் செய்துகொடுக்க முற்படுகின்றனர். இந்நிலையில காதலியின் மனநிலையை அறிந்து வரும் வகையில் தலைவன் தத்தையைத்(கிளியை) தூது அனுப்புகிறான். இந்தப் பின்புலத்தில் அக்காலச் சமுதாயத்தில் பெண்களின் நிலைப்பாடு, சம்பிரதாயபூர்வமான திருமணத்தால் பெண்கள் எதிர்நோக்கும் அவலம், அதிலிருந்து விடுபடுவதற்கான உந்துதல் என்பவற்றைப் படைப்பாக்குகின்றார். சமுதாயப் பிரச்சினை ஒன்றை எடுத்துப்பாட விளைந்தமையால் - கதைக்கருவுக்கு முக்கியத்துவம் கொடுக்க முனைந்தமையால் தூதுப்பொருள் பற்றிய விபரிப்புக்களில் கூடுதல் அக்கறை செலுத்தாது, படைப்புக்குள் உள்நுழைகின்றமையும் குறிப்பிடத்தக்கது. தி.த.ச. எடுத்துரைக்கும் பெண் விடுதலை சார்ந்த கருத்துக்கள் குறித்த புரிதல் எமக்கு அவசியம். அப்புரிதலுக்காக தத்தைவிடுதூதில் மிக முக்கியமெனக் கருதப்படும் கருத்துக்கள் - பாடல்கள் இங்கு விளக்கம் பெறுகின்றன. ஒரு வகையில் தத்தைவிடுதூது எனும் படைப்பிலுள்ள பாடல்கள் பகுத்தும் தொகுத்தும் வழங்கப்படுகின்றன எனலாம்.

**பெண்கல்வி**

- பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினால், அவர்களது காதலர்க்குச் சொல்லுவதற்கு அரிதான துணையாக அமைவதோடு, இந்தப் பழமையான உலகமும் சிறப்படையும் என்று கூறுவதன் மூலம் பெண், கல்வி கற்பதனால் உண்டாகும் நன்மையை எடுத்துரைத்தல்.

*"கல்விநலம் பெற்றனரேற் காரிகையார் காதலர்க்குச்*
*சொல்லருநற் றுணையன்றோ தொல்லுலகு சிறக்குமன்றோ"*
*செய்யுள் : 07*

- பெண் கல்வியை விரும்பாத பயனற்றவர்கள் எல்லோரும், எல்லையற்ற இன்பத்தினைப் பெண்கள் அடைவதற்குத் தடையாக இருக்கின்றனர் என்று கூறுவதன் மூலம் பெண் கல்வி மூலம் எல்லையற்ற இன்பங்கள் பெண்களைச் சேரும் என வலியுறுத்தல்.

*"மெல்லியர்பாற் கல்வி விரும்பாத வீணரெலாம்*

---

**இ)** நீதித்தலம் சென்று (கோடேறி) வழக்கு நடத்தும் வாதி, பிரதிவாதிகளுக்கு நிகழும் பண நஷ்டம், கஷ்டம், அல்லல், தொல்லைகள் என்பனவற்றைப் பொருளாகக் கொண்டெழுந்த படைப்பு கோட்டுப்புராணமாகும்.

[5] திருகோணமலையில் 1867 ஆம் ஆண்டு பிறந்தவர். தமிழ்நாட்டில் நீண்ட காலம் வாழ்ந்தவர். தமிழ்நாட்டில் கீழைத்தேய சுவடிகள் நிலையத்தில் தலைவராகப் பணிபுரிந்தவர். அக்காலப் பகுதியில் அங்கிருந்த சரித்திர ஏடுகளை வாசித்தறிந்ததன் அருட்டுணர்வால் தஞ்சை, திருச்சி நாயக்க பரம்பரையை ஆதாரமாகக் கொண்ட மோகனாங்கி எனும் தமிழின் முதல் வரலாற்று நாவலை எழுதியவர். தத்தைவிடுதூது, முத்துக்குமாரசுவாமி இரட்டை மணிமாலை, முத்துக்குமாரசுவாமி ஊஞ்சல் முதலான இலக்கியங்களையும் இயற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எல்லையிலா வின்படைதற் கிடையூறென் றேயியம்பாய்"*

*செய்யுள் : 07*

• பெருமைமிக்க கல்வியின் நன்மையைப் பெற்றிருக்கும் வாலிபர்களாகிய நாங்கள் கல்லாதவரை விரும்புவோமோ, அல்லது பொருத்தமான பெண் கிடைக்காவிட்டால் துறவு வாழ்வினை விரும்புவோமோ? என்று வினாத் தொடுப்பதன் மூலம் பெண் கல்வியை வலியுறுத்துகிறார். கற்ற இளைஞனின் குரலாக அது அமைவதும் குறிப்பிடத்தக்கது.

*"பீடுடைய கல்விநலம் பெற்றிருக்கும் வாலிபர் யாம்*
*வேடுவரை வேட்பேமோ விளம்பாய் பசுங்கிளியே*
*விரும்புவமோ சந்நியாசம் விளம்பாய் பசுங்கிளியே"*

*செய்யுள் : 03*

**சம்பிரதாயபூர்வமான திருமணத்தால் பெண்கள் எதிர்நோக்கும் அவலம்**

• கண்ணை மறைத்துக் கொண்டு போய்க் காட்டில் விடுகின்ற பூனையைப் போல பெண்களை வீட்டுக்குள் அடைத்து வைத்துப் பின்பு ஒருவரிடம் திருமணம் செய்துகொடுப்பார்கள். அத்தகைய மணவாளனை மணமுடிக்கும் முன் எப்போதும் கண்ணால் பார்த்துக்கூட இருக்கமாட்டார்கள். அவரது பேச்சினை முன்னொருபோதும் கேட்டும் இருக்க மாட்டார்கள் என மரபார்ந்த திருமண முறையைச் சாடுதல்.

*"கண்ணைமறைத் தேகொடுபோய்க் காட்டில்விடும் பூனையைப்போற்*
*பெண்ணை மனையடைத்துப் பின்னொருவர் கைக்கொடுப்பர்*
*கண்ணான்முன் கண்டுமிலர் காதலர்சொற் கேட்டுமிலர்"*

*செய்யுள் : 09*

• சிறந்த பொன்னின் குவியலுடன் கொடிய துன்பம் வந்து சேர்வதைக் காட்டிலும் பொன்னில்லாது வந்து சேர்கின்ற இன்பம் மேலானது எனக் குறிப்பிட்டு, பணத்துக்காகப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் வழக்கம் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

*"செம்பொற் றிரளுடனே வெந்துயரஞ் சேர்வதிலுஞ்*
*செம்பொனிலா வின்பஞ் சிறந்ததெனக் கூறுதியால்"*

*செய்யுள் : 05*

• முட்டாள்களுக்கும் அறிவில்லாதவர்களுக்கும் முதியவர்களுக்கும் எளியவர்களுக்கும் தேடுவதற்கு அரிய இரத்தினம் போன்ற பெண்களை மணமுடித்து வைப்பார்களோ? என வினாத்தொடுப்பதன் மூலம், அத்தகைய மணமுறை அற்றுப்போதல் வேண்டும் என வலியுறுத்தல்.

*"மூடருக்கும் பேடருக்கும் முதியோர் மெலியோர்க்குந்*
*தேடருநல் லிரத்தினம்போற் றெரிவையரைச் சேர்த்துவரோ"*

*செய்யுள் : 03*

• ஆணாகப் பிறந்திருத்தல் மட்டும் அவசியம் எனக் கருதி, வேறு எந்தக் குணநலன்கள் குறித்தும் அக்கறை கொள்ளாமல் பெண்ணை மணஞ்செய்து கொடுத்துவிடுவார்கள். அந்தச் செயலுக்காக வெட்கப்படமாட்டார்கள். தமக்குப் புத்திமதி சொல்பவர்கள் எவரையும் மதிக்கமாட்டார்கள். அவ்வாறு அறிவுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுபவர்களை எள்ளி நகையாடி மகிழ்வார்கள் என்று மரபார்ந்த திருமணத்தால் விளையும் அவலத்தைச் சுட்டிக்காட்டுவார்.

*"ஆணாய்ப் பிறந்த லவசியம்வே றோர்குணமும்*
*பேணார்தம் மின்னுயிராம் பெண்ணைக் கொடுத்திடுவார்*
*நாணார் மதியார் நகைத்தே களித்திடுவார்"*

*செய்யுள் : 11*

• தமது வீட்டுக்கு ஒரு பசு வாங்க வேண்டுமென்றால் பலதடவை பார்த்திருந்தும் தீர்மானம் எடுத்து வாங்குவதற்கு துணிவில்லாது திண்டாடுவது மனிதர்களின் குணமாகும். ஆனால், பெண்ணின் திருமணம் என்றால் கணப்பொழுதில் முடிவெடுத்துவிடுகிறார்கள் என்று குறிப்பிடுவதன் மூலம் எந்தவிதமான சிந்தனையுமின்றி சிறிது காலத்திற்குள் (இமைப்பொழுதில்) முடிவெடுத்துத் திருமணம் செய்து வைத்தல் கூடாது. அதனால் பெண்ணின் உள்ளத்துணர்வுகளும் மழுங்கடிக்கப்படுகின்றன. இந்த வழக்கம் சமூகத்தில் இருந்து அற்றுப் போக வேண்டும் என வலியுறுத்துகிறார்.

*"தம்மனைக்கோர் பசுவேண்டிற் றாம்பலகாற் பார்த்திருந்தும்*
*பின்னுந் துணிவிலராய்ப் பேதுறுதல் மாந்தர்குணம்*
*என்னே மணவினையே லிமைப்பொழுதி லேமுடிப்பார"*

*செய்யுள் : 10*

• அறிவில்லாத ஆடவர்க்குப் பெண்ணைத் திருமணம் செய்துகொடுக்கும் பெற்றோரின் செயலை, வாசனை மிக்க மலர்மாலையை குரங்கின் கழுத்தில் அணிந்து மகிழும் செயலோடு ஒப்பிட்டுக் கூறுதல்.

*"செங்கமல வாள்விழியாட் சேர்க்கக் கருதுமுவன்*
*மங்கைதனக் கேற்ற மணவாள னோபுகலாய்*
*நங்கைநிலைக் கேற்க நடக்கவல னோபுவியிற்*
*கொங்குமலர் மாலை குரங்கிற் களிப்பாரோ*
*கோதையிட மிம்மாற்றங் கூறுதியாற் பைங்கிளியே"*

*செய்யுள் : 12*

**பெண்களின் நிலைப்பாடு**

• அக்காலச் சமுதாயத்தில் ஆணாதிக்கவாதிகள் பெண்களை நோக்கிய விதத்தை எடுத்துரைத்து, அறியாமையாலேயே இவ்வாறு பேசுகிறார்கள் எனவும் சாடுகிறார். அறியாமையில் உழலும் ஆணாதிக்கவாதிகளின் கூற்றுக்களாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்.

○ உண்பது, உறங்குவது, ஊர்க்கதைகள் பேசுவது ஆகியன பெண்களின் தொழில்.

பெண்களுக்குத் தம் கணவரே தெய்வம்.

○ பெண்களுக்கும் அடிமைகளுக்குமிடையில் எவ்வித வேறுபாடுமில்லை.

*"உண்பதுவு முறங்குவது மூர்க்கதைகள் பேசுவதும்*
*பெண்கடொழி லாமென்றே பேசிடுவ ரொருசாரார்*
*பெண்களுக்குத் தம்பதியே பெருந்தெய்வ மென்பர்சிலர்*
*பெண்களுக்கு மடிமைகட்கும் பேதமில்லை யென்பர்சிலர்*
*பேதைமைகா ணிவர்கொள்கை பேர்த்தறிவாய் பசுங்கிளியே"*

*செய்யுள் : 06*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• கிளியை கூண்டில் அடைத்து வைப்பது போல எப்பொழுதும் பெண்களை வீட்டிற்குள் அடைத்து வைக்கும் வழக்கம் சமூகத்தில் இருந்து அற்றுப் போக வேண்டும் என்கிறார்.

***"கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப்பொழுதுங்***
***வீட்டி லடைத்துவைக்கும் விரகிலருக் கியாதுரைப்போம்***
***பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாக் கருதினரோ"***

*செய்யுள் : 08*

III

தத்தைவிடுதூது குறித்து ஆய்வுநோக்கில் சிந்திப்பவர்கள் அப்படைப்பில் வெளிப்பட்டு நிற்கும் பெண் விடுதலைக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பாரதியோடு இணைத்து பல கருத்துக்களை முன்வைப்பர். அவற்றுள் குறிப்பிடத்தக்க இருவரின் கருத்துக்கள் வருமாறு:

1. கூர்ந்து ஆராயும்பொழுது சுப்பிரமணிய பாரதியார், தத்தைவிடுதூது பிரபந்தத்தைப் படித்திருக்கலாம் என்றே தோன்றுகிறது. 'சுயசரிதை', 'புதுமைப்பெண்', பெண்விடுதலை முதலிய பாடல்களிலே பாரதி கூறியிருப்பனவற்றையும் கூறியிருக்கும் முறையினையும் உற்றுநோக்கினால் அவனுக்கு முற்படப் பாடிய கவிஞருள் சரவணமுத்துப்பிள்ளையே சொல்லிலும் பொருளிலும் பாரதிக்கு அணியராய்க் காணப்படுகிறார். சென்னையிலிருந்த ஸ்ரீ நிலையம் அச்சியந்திரசாலையிலே 1892 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்ட தத்தைவிடுதூது நூலினைப் பாரதியார் படித்திருக்கக்கூடும். பெண்விடுதலை பற்றிய நூலாதலின் அதில் தீவிரவாதியாயிருந்த பாரதி அதனைப் பெரும்பாலும் படித்திருப்பார் என்பதற்கு ஆங்காங்கு சில சான்றுகள் காணப்படுகின்றன. தத்தைவிடுதூது நூலில் வரும் சில சொற்றொடர்களின் எதிரொலியைப் பாரதி வாக்கிற் கேட்கலாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்த பலவிதமான கட்டுரைகளையும் நூல்களையும் "ஓய்விலா ஊக்க உணர்ச்சியுடன்" வாசித்த பாரதி இந்நூலைப் படித்திருந்தார் என்று துணிதல் தவறாகாது.[6]

2. தி.த.ச. பணிபுரிந்த "காலேசு"க்குப் பாரதியார் சென்றுள்ளதையும் தி.த.ச. சொற்பொழிவாற்றிய அக்காலேசுத் தமிழ்ச் சங்கம் பற்றிப் பாரதியார் பாடியுள்ளதோடு அங்கு சொற்பொழிவாற்றியுள்ளதையும் (1905) கவனிக்கும்போது தத்தைவிடுதூதினைப் பாரதியார் படித்திருக்கலாமென்ற கைலாசபதியின் ஊகம் வலுப்பெற வாய்ப்புள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.[7] மேற்படிக் கருத்துக்களில் இருந்து கீழ்வரும் மூன்று விடயங்களைத் தொகுத்துக்கொள்ள முடியும் :
   1. பாரதியார் தத்தைவிடுதூது நூலினைப் படித்திருக்கலாம்.
   2. சொல்லாலும் பொருளாலும் பாரதிக்கு முற்பட்ட காலக் கவிஞருள் தி.த.சரவணமுத்துப்பிள்ளை மிக நெருக்கமுடையவராகக் காணப்படுகிறார்.

---

[6] கைலாசபதி,க. மு.கு.நூ. ப 56,57.

[7] யோகராசா, செ. (2007), ஈழத்து நவீன கவிதை, கொழும்பு - சென்னை : குமரன் புத்தக இல்லம், பக்.04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தத்தைவிடு தூது நூலில் வரும் சில சொற்றொடர்களின் எதிரொலியை பாரதியின் வாக்கிற் கேட்கலாம்.

மேற்குறித்த தொகுப்பில் முதலாம் கூற்றை - 'பாரதியார் தத்தைவிடுதூதினைப் படித்திருக்கலாம்' என்பதனை சான்று காட்டி எம்மால் நிரூபிக்கமுடியாதுள்ளது. ஆயின், 'சொல்லாலும் பொருளாலும் பாரதிக்கு முற்பட்ட காலக் கவிஞருள் சரவணமுத்துப்பிள்ளை அணியராகக் காணப்படுவதனை' சான்று காட்டி விபரிக்க முடியும். அந்த ஒப்புமைக்கு பெண் விடுதலை சார்ந்து பாரதி எழுதிய புதுமைப் பெண், பெண்விடுதலை, பெண்கள் விடுதலைக் கும்மி முதலான படைப்புக்கள் துணை செய்யும்.

*"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்*
*றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்*
***வீட்டுக் குள்ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற***
***விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்***

*நல்ல விலைகொண்டு நாயை விற்பார், அந்த*
*நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?*
*கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை*
*கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார்*

*காத லொருவனைக் கைப்பிடித்தே, அவன்*
*காரியம் யாவினும் கைகொடுத்து*
*மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்*
*மாட்சி பெறச்செய்து வாழ்வமடி!*

*(பெண்கள் விடுதலைக் கும்பி)*

*உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்*
*ஓது பற்பல நூல்வகை கற்கவும்*
*இலகு சீருடை நாற்றிசை நாடுகள்*
*யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே*
*திலக வாணுத லார்நங்கள் பாரத*
*தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்*
*விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை*

*வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பவராம்"*

*(புதுமைப் பெண்)*

இக்கவிதைப் பகுதிகள் சொல்லாலும் பொருளாலும் (பெண் விடுதலை) பாரதிக்கு அணியராய் தி.த.ச. விளங்குவதைத் தெளிவாக எடுத்துக்காட்டும். தி.த.ச. பெண் கல்வியை வற்புறுத்தியவர்; பொருளுக்காய் தனவந்தரிடம் பிள்ளையை விற்கும் (திருமணம் எனும் பெயரில்) பெற்றோர்கள் நரகிற்கே உரித்துடையவர்கள் என்று கூறியவர்; பெண்ணை வீட்டுக்குள்ளே பூட்டி வைத்து வளர்ப்பதைக் கண்டித்தவர். இப்பொருள்களையே வீறுடன் பாரதியாரும் கவிதையாக்கினார். மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவற்றையும் மனங்கொள்ளும்போது கீழ்வரும் முடிவுக்கு வர முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேய காலனித்துவத்தின் வழிவந்த சூழல் அவரது சமூக நோக்கிற்குப் பின்புலமாகியது. அது இலக்கியத்தில் (தத்தைவிடுதூதில்) பிரதிபலித்தது. அந்தப் பிரதிபலிப்பு இருபதாம் நூற்றாண்டின் நவீன கவிதைச் செல்நெறிக்கான அடிப்படையாக அமைந்தது. இருபதாம் நூற்றாண்டின் நவீன கவிதைச் செல்நெறிக்கான அடிப்படையை வகுத்தமை 'இருபதாம் நூற்றாண்டின் இலக்கியச் செல்நெறியின் ஒரு போக்கை முற்படச் சுட்டிச் சென்றவர்' என்ற அடையாளத்தை அவருக்கு அளிக்கவேண்டிய கடப்பாட்டைத் தோற்றுவித்துள்ளது.

## பள்ளி நினைவுகள்

விடுமுறை நாள் எண்ணும்
வகுப்பறை நாட்காட்டி
சுடுகின்ற பார்வையில்
சுட்டி அழைக்கும் அதிபரின் ஆட்காட்டி

வாட்டும் வெயிலுக்கு
வாய்க்காலில் நீச்சல்
கூட்டு முறை நாளில்
கூடிய காய்ச்சல்
பேரிட்ட மேசைக்காய்
பெருத்திட்ட கலகம்
நீறிட்ட நெற்றியில் – நண்பா
நீயிட்ட நேரற்ற திலகம்

அஞ்சல் ஓட்டத்தில் – கை
அடைகாத்த கம்பு
பச்சை இல்லத்திற்காய்
பை நிரப்பி வந்த சம்பு
இன்னொரு இதயமாய்
நெஞ்சில் இருத்திட்ட சின்னம்
இடைவேளைக் கஞ்சிக்காய்
இசையமைத்த கிண்ணம்
மஞ்சல் சீருடையில்
மனை திரும்பிய மாலைகள்
கஞ்சல் பொறுக்கும்
கடமை தந்த ஆலைகள்
நஞ்சுக்காய் எனினும்
நண்பனுக்கும் கொடுத்தோம்
பிஞ்சில் பழுத்ததென்ற
பெயரையும் எடுத்தோம்.

தேவாரம் ஓதுகையில்
தேவதையைக் காண
திருட்டாய் திறந்திட்ட கண்கள்
தூவானம் அடிக்கையில்
தோய்ந்தா போவதென்று
பாதி நாற்காலி நாவாலே கேட்ட
நம் பள்ளிப் பெண்கள்.

நா.திருச்செந்தூரன்,
மூன்றாம் வருடம்,
விஞ்ஞானபீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பூரண உரைச்செல்வாக்கில் நன்னூல் என்னும் இலக்கண நூல்

எம். வை. எஃப். ரிஸ்மியா,
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



i

கி.பி. 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியை தமிழில் உரைநடை சிறப்புற வளர்ச்சி பெற்ற காலப்பகுதி எனலாம். இக்காலத்தில் பலவகையான இலக்கிய நூல்களுக்கும் இலக்கண நூல்களுக்கும் உரைகள் எழுதப்பட்டன. படைப்பாளிகளாக விளங்கி இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தினைப் பெற்றுள்ள படைப்பாளிகள் போலவே பல உரையாசிரியர்களும் உரை எழுதியதன் மூலமாக நிலையான இடத்தினைப் பெற்றுள்ளனர்.

இவ்வுரையாசிரியர்களது உரை நூல்கள் ஒரு வலுவுள்ள இலக்கிய இயக்கத்தின் விளைவாகத் தோன்றின என்றும் இவ்வியக்கத்தினை 'மீட்சி இயக்கம்' என்றும் அறிஞர்கள் பலரும் அடையாளப்படுத்துகின்றனர். அதாவது, வடமொழி செல்வாக்கினால் தமிழும் தமிழ் இலக்கிய மரபுகளும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அவற்றை மீண்டும் நிலைநாட்ட முயற்சிப்பதே இவ்வியக்கத்தின் அடிப்படையாக இருந்தது.

இவ்வகையில் இவ்வுரைநூல்கள் அக்காலத்தின் சமூகத் தேவையை பூர்த்தி செய்வதற்கும் மரபைப் பேணுவதற்கும் தேவையாக இருந்த போதிலும் பிற்கால இலக்கிய, இலக்கண வளர்ச்சிக்கும் வழிவகுத்தன.

தொல்காப்பியத்திற்குப் பிறகு தமிழ் இலக்கணச் சூழலில் விதந்துரைக்கப்படும் நூலாகவும், பொதுவாக இலக்கணக்காரர்களால் பெரிதும் விரும்பப்படும் நூலாகவும் நன்னூல் விளங்குகிறது. ஆயினும், இவ்விரண்டுக்குமான இடைவெளியில் பெருங் கவனயீர்ப்பைப் பெறாத உரைநூல்களின், உரையாசிரியர்களின் பங்களிப்பு பிற்காலத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய இலக்கண நூல்களின் ஆக்கத்திற்கு துணை செய்தவாற்றினை வேற்றுமை என்னும் ஒர் இலக்கணக் கூறினை மட்டும் கொண்டு விளக்கமுனைகிறது, இக்கட்டுரை. இவ்விளக்கம் இடைக்கால இலக்கண வளர்ச்சியில் உரையாசிரியர்களுக்குப் பெரும் பங்குண்டு என்பதையும் தொல்காப்பிய உரையாசிரியர்களுக்குப் பின் தோன்றிய இலக்கண நூல்கள் உரைச்சாயல் நூல்களேயன்றி தனி மூல நூல்கள் அல்ல என்பதையும் நிறுவ முனைகிறது. இவ் ஆய்வு முயற்சிக்கு நன்னூலும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம்பூரணரது உரையும் தெரிவு செய்யப்படுகிறது. இத்தெரிவுக்கு கிடைக்கப்பெறும் தொல்காப்பிய உரைகளில் காலத்தால் முந்திய உரையாகவும் நன்னூல் எனும் இலக்கண நூலின் உருவாக்கத்திற்கு முற்பட்ட உரையாகவும் இளம்பூரண உரை இருப்பது காரணமாகிறது. இன்னும், 'சென்ற காலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதிலாத் திறனையெல்லாம் இவருக்கு உணர்த்தி, நிகழ் காலத்தின் சிறப்பும் தோன்றச் செய்து இவருக்கு வழிகாட்டியவர் தொல்காப்பிய உரைகாரரான இளம்பூரணர். ஏனைய தொல்காப்பிய உரைகாரர் அனைவரும் காலத்தால் நன்னூலுக்குப் பிற்பட்டவர். பவணந்தி முனிவர் இளம்பூரணருக்கு 125 ஆண்டுகள் பிற்பட்டு வந்தவராயிருப்பர். இளம்பூரணரின் தொல்காப்பிய உரையைப் பவணந்தி முனிவர் நன்கு கற்றறிந்து முழுமையும் பயன்படுத்திக் கொண்டார்.'[1] என்று கூறும் கருத்தும் ஈண்டு நோக்கத்தக்கது.

ii

## இளம்பூரணம் மற்றும் நன்னூல் ஓர் அறிமுகம்

### நன்னூல்

இது சீயகங்கன் என்பவனின் வேண்டுகோளுக்கிணங்க பவணந்தி முனிவர் இயற்றியது என சிறப்புப் பாயிரம் கூறுகிறது. இந்நூல் 13 ஆம் நூற்றாண்டிற்கு உரியது. எழுத்து, சொல் எனும் இரண்டிற்குமுரிய இலக்கணத்தை இந்நூலின் வழியே அறியலாம். நன்னூல் எழுத்ததிகாரமானது 05 இயல்களைக் கொண்டது.

01. எழுத்தியல்
02. பதவியல்
03. உயிரீற்றுப் புணரியல்
04. மெய்யீற்றுப் புணரியல்
05. உருபுப் புணரியல்

சொல்லதிகாரமும் 05 இயல்களைக் கொண்டது.

01. பெயரியல்
02. வினையியல்
03. பொதுவியல்
04. இடையியல்
05. உரியியல்

இந்நூலுக்குப் பலரும் உரை எழுதியுள்ளனர். அந்தவகையில், மயிலைநாதர் உரை, ஊற்றங்கால் ஆண்டிப்புலவருரை, சங்கர நமச்சிவாயருரை, தம்பிரான் உரை, சிவஞான முனிவர் புத்தம் புத்துரை, கூழங்கைத் தம்பிரான் உரை, ஆறுமுகநாவலருரை எனப் பலரும் உரை எழுதியமை குறிப்பிடத்தக்கது.
இன்னும், பின்வந்த இலக்கண நூல்களுக்கு வழிநூலாக நன்னூல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, வைத்தியநாத தேசிகர் நன்னூலில் இருந்து 250 நூற்பாக்கள் எடுத்து, இலக்கணவிளக்கம் எனும் நூலை 17 ஆம் நூற்றாண்டில் அமைத்திருக்கின்றமையைக் கூறலாம்.

### இளம்பூரணர்

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையர் என்போர் உரை எழுதியுள்ளனர். தொல்காப்பிய உரைகளுள் கிடைக்கப் பெறும் முதலாவது உரையாக இளம்பூரணரது உரை இருப்பதால் இவரை 'உரையாசிரியர்' என்றும் அழைப்பர். தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவராக இவர் விளங்குகிறார். இவருக்கு முன்னும் தொல்காப்பியத்திற்கு உரைகள் எழுதப்பட்டு இருக்கக்கூடும்

[1] அருணசாலம், மு. (1981) **இளம்பூரணர்**, அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம். ப.165.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். எனினும், அவை கிடைக்கப்பெறவில்லை. இளம்பூரணரின் காலத்தினை கி.பி. 11ஆம் நூற்றாண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் கணிக்கின்றனர்.

**iii**

நன்னூலார் தொல்காப்பியத்தை அடியொற்றியே தன் நூலைச் செய்திருக்கின்றார் எனும் கருத்து தமிழ் ஆய்வுலகில் வலுவுடைய ஒன்றே. அதிலும் குறிப்பாக இளம்பூரணரது உரையினை அதிகம் பயன்படுத்தியிருக்கின்றமையினை வேற்றுமை எனும் ஓர் உய்த்தறி கூறினூடாகக் காண முடிகிறது. அதனைப் பின்வரும் வகையில் நோக்கலாம்.

எழுவாய் வேற்றுமையினை நன்னூலார், 'எழுவாயுருபு திரிபில் பெயரே' என்கிறார். இதனூடாக திரிபடையாத பெயரினையே எழுவாய் எனக் கொள்வது புலனாகிறது. இந்த விளக்கத்தினை இளம்பூரணர் உரையிலும் கண்டு கொள்ள முடிகிறது. அதாவது,

*"எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே" (தொ.சொ.65)*

எனும் சூத்திரத்துக்கு இளம்பூரணர், **ஈறு திரியாது உருபு ஏற்றலே** எழுவாயின் இலக்கணம் என்கிறார். எனவே, இந்த உரை விளக்கத்தையே நன்னூலார் விதியாக்கியிருப்பது தெளிவாகிறது. ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகிய உருபுகள் பெயர்ச் சொல்லுடன் சேர்ந்து பொருளை வேறுபடுத்துவது மூன்றாம் வேற்றுமை என நன்னூல் கூறுகிறது. இது கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி ஆகிய பொருள்களைத் தரும்.

இங்கு தொல்காப்பியரது ஒரு வேற்றுமைக்கு ஓர் உருபு சொல்லும் முறையினின்றும் வேறுபட்டு நன்னூல் பல உருபுகளைச் சொல்லுகிறது. ஆனாலும், இவ்வாறு நான்கு உருபுகளைக் கூறுவதும் தொல்காப்பியம் மற்றும் இளம்பூரணர் உரை வழி நின்று பெற்றுக் கொண்டதன் பயனே எனலாம். ஏனெனில், வேற்றுமை மயக்கத்தில் தொல்காப்பியர் 'ஆன்' எனும் உருபினைக் கூறுவதையும் இளம்பூரணர் கையாளும் உதாரணங்களின் வழி 'ஆல்' (வேலாலெறிந்தான்) எனும் உருபினையும் கண்டு கொள்ளலாம். எனவே, இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நன்னூலார் நான்கு உருபுகளாய் வகுத்துத் தந்திருக்கிறார் என்பது புலனாகிறது.

ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபுகளாக 'இல்', 'இன்' என்பனவற்றை நன்னூல் தருகிறது. நன்னூலார் ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள்கள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது எனும் நான்குமே எனத் தேற்றேகாரம் கொடுத்துவிடுகிறார். ஆனால், தொல்காப்பியர், பொருட்களின் வரையறையற்ற தன்மையினால் "அன்ன பிறவும்" என்கிறார். நன்னூலாரின் இத்தேற்றேகாரத்திற்கு இளம்பூரணரின் உரை காரணமாவதைக் கண்டுகொள்ள முடிகிறது. அதாவது, ஐந்தாம் வேற்றுமையின் உருபு 'இன்' எனவும் அது 'இதனின் இற்று இது' எனப் புலப்படுத்தும் எனவும் தொல்காப்பியர் கூறுகிறார். இதனின் இற்றிது என்பதற்கு இளம்பூரணர், 'தனக்குப் பொரூஉப் பொருளைத் தனக்குப் பொருளாக உடைத்து'[2] என்று உரை விளக்கம் தந்திருப்பதால் ஒப்புப் பொருளை எடுத்துரைப்பதே ஐந்தாம் வேற்றுமை என்று உணரலாம். இருப்பினும், இளம்பூரணர் பொரூஉப் பொருளை

[2] தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - இளம்பூரணர் உரை, ப.86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புடையது எனக்கூறியதோடு ஏனைய நீக்கம், எல்லை, ஏது எனும் பொருள்களும் இதற்கு உள எனக் கூறுகிறார். அதாவது,

*"வண்ணம் வடிவே யளவே சுவையே*
*தண்மை வெம்மை அச்ச மென்றா*
*நன்மை தீமை சிறுமை பெருமை*
*வன்மை மென்மை கருமை யென்றா*
*முதுமை இளமை சிறத்த லிழித்தல்*
*புதுமை பழமை ஆக்க மென்றா*
*இன்மை யுடைமை நாற்றந் தீர்தல்*
*பன்மை சின்மை பற்று விடுதலென்*
*றன்ன பிறவும் அதன்பால என்மனார்" (தொ.சொ.75)*

இங்கு வண்ணம் முதல் பற்றுவிடுதல் வரையான பொருட்களை இளம்பூரணர் நீங்கல் மற்றும் பொரூஉப் பொருளுக்குள் அடக்கி விடுகிறார். அன்னபிறவும் என்பதையே எல்லையாகவும் ஏதுவாகவும் கொள்க என்கிறார். எனவே, நன்னூலார் ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள்கள் என நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என வரையறுத்தமை இளம்பூரணர் உரையின் பாதிப்பினாலே என்பது தெளிவுற விளங்குகிறது.

இன்னும்,

*"ஆறாகுவதே*
*அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி*
*தன்னினும் பிறிதினும் இதனது இதுவெனும்*
*அன்ன கிளவிக் கிழமைத்ததுவே" (தொ.சொ.76)*

எனும் நூற்பாவின் ஊடாக 'அது' எனும் உருபு பெற்ற பெயர் தன்னினும் பிறிதினும் இதனது இது என்னும் கிழமை குறித்து வரும் என்பது புலனாகிறது. இதற்கு இளம்பூரணர் உரை வகுக்கையில், 'அது என்னும் பெயரையுடைய வேற்றுமைச்சொல் தன்னோடு தொடர்ந்ததோர் பொருளையும் தன்னின் வேறாகியதோர் இதனதிது என்று கிழமைச் செப்பி நிற்றல் ஆறாம் வேற்றுமையது இலக்கணம்' என்கிறார்.[3] மேலும், அன்ன என்பதற்கு உரை வகுக்கையில், 'அவன, அவள என்னும் ஈற்றகரம் பன்மைப் பொருள் தோன்ற வரும்'[4] என்கிறார். இதனால், ஆறாம் வேற்றுமைக்கு 'அ' எனும் உருபினை இளம்பூரணர் சேர்த்துக் கூறுவது நோக்கத்தக்கது.

வேற்றுமைகளுக்குரிய உருபுகளை வகுக்கையில் ஆறாம் வேற்றுமைக்கு மட்டும் நன்னூலார் ஒருமை, பன்மை என வகுத்து உருபுகளைக் கூறியிருக்கின்றமை நோக்கத்தக்கது. அதாவது, ஆறாம் வேற்றுமையது ஒருமை உருபாக 'அது', 'ஆது' என்னும் உருபுகளும் பன்மைக்கு 'அ' என்பதும் உருபாகும் என்கிறார். இங்கு ஆறாம் வேற்றுமைக்குரிய உருபாக தொல்காப்பியர் 'அது' என்பதை மட்டுமே கூறுகிறார். ஆனால், இளம்பூரணர் 'அது', 'அ'

[3]**தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-இளம்பூரணர் உரை**, (1988) தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், ப.90.
[4]**தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-இளம்பூரணர் உரை**, (1988) தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், ப.90.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றைக் கொள்கிறார். எனவே, இந்த வளர்ச்சி நிலையே நன்னூலாரது ஆறாம் வேற்றுமைக்குரிய உருபுகள் எனலாம்.

இன்னும், இதனது பொருளினையும் நன்னூலார் தற்கிழமை, பிறிதின் கிழமை எனத் தோன்றும் எனக் கூறி தற்கிழமையானது, பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபினாக்கம் என்னும் ஐவகைப் பொருளிலும் பிறிதின் கிழமையானது, பொருள், இடம், காலம் என்ற மூவகைப் பொருளிலும் இடம்பெறும் என்கிறார். இதனை இளம்பூரணர் விளக்கத்துடன் ஒப்பு நோக்குவோமாயின், இளம்பூரணரும் தற்கிழமை, பிறிதின்கிழமை என்ற வகைப்படுத்தலின் ஊடே விளக்குவதைக் காணலாம். அதாவது, இளம்பூரணர் கூறும் தற்கிழமைக்குரிய ஐந்து பொருள்களையும் நன்னூலார் பின்வருமாறு கைக்கொண்டுள்ளார் எனலாம்.

| இளம்பூரணர் | நன்னூலார் |
|---|---|
| ஒன்று பல குழீஇயது | ஒன்றன் கூட்டம் |
| வேறு பல குழீஇயது | பலவின் நீட்டம் |
| ஒன்றியர் கிழமை | பண்பு |
| உறுப்பின் கிழமை | உறுப்பு |
| மெய்திரிந்தாகிய கிழமை | திரிபினாக்கம் |

இவ்வாறு தற்கிழமை வகைப்பாட்டினை வகைப்படுத்தியது போன்று இளம்பூரணர் பிறிதின்கிழமையினை வகைப்படுத்தவில்லை. பிறிதின் கிழமை பகுதிபடாது எனக்கூறுகிறார். எனினும், நன்னூலார் இதனின் நின்றும் வளர்ந்த ஒரு நிலையாகவே பிறிதின்கிழமையினை மூவகைப்படுத்தியுள்ளார் எனலாம்.

ஏழாம் வேற்றுமைக்குரிய உருபுகள் 'கண்ணாதியாகும்' என்று 28 உருபுகளைக் கூறிச் செல்கிறார், நன்னூல் ஆசிரியர். அவையாவன கண், கால், கடை, இடை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, சுனை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் என்பனவாகும்.

இங்கு தொல்காப்பியரால் ஏழாம் வேற்றுமையில் பயன்படுத்தப்பட்ட 19 சொற்களும் உரையாசிரியர்களால் பல்வேறு விளக்கங்களுக்கு உட்பட்டுள்ளன. அதாவது, இந்நூற்பாவுக்கு வெவ்வேறு வகையான உரைவிளக்கங்கள் உரையாசிரியர்களால் தரப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் இளம்பூரணர் அவற்றை ஏழாம் வேற்றுமையது உருபு என்று கூறுகிறார். சேனாவரையர், அப்பத்தொன்பது சொற்களையும் ஏழாம் வேற்றுமையது உருபு அல்ல என மறுத்து அவற்றை ஏழாம் வேற்றுமையின் வெவ்வேறு பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் எனக் கருதுகிறார். நச்சினார்க்கினியர் அவற்றை ஏழாம் வேற்றுமையின் உருபு என்றே கருதியபோதும் கண் என்பதே சிறப்பு உருபு ஏனையவை சிறப்பல்லா உருபு எனவும் கொள்கின்றார்.

இவ்வகையில் இவை வேற்றுமை உருபுகளா, இல்லையா என்பது தொடர்பில் முரண்நிலைகள் தோன்றுகின்றன. எனவே, மோ. இசரயேல், தனது இலக்கண ஆய்வு எனும் நூலில் அச்சொற்களில் பல பெயர்களாகவே செயலாற்றுகின்றன என்று அதற்கான சான்றுகளை முன்வைக்கிறார்.

1. அவை வேற்றுமை உருபுகளாயின் முன் நூற்பாவில் கூறப்பட்ட 'கண்' உருபு மீண்டும் அடுத்த நூற்பாவில் கூறவேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 'தேவகை' (தொ.சொ.82) என்னும் சொல் மொழியில் எந்த இடத்திலும் வேற்றுமை உருபாக வருவதில்லை.
3. புறம் என்னும் சொல் வேற்றுமை உருபாக வருவதற்கு இளம்பூரணர் ஊர்ப்புறத்து இருந்தான் போன்ற எடுத்துக்காட்டினைத் தந்துள்ளார். பெயருடன் இணைக்கப்படும் 'அத்து'ச் சாரியை வேற்றுமை உருபென இளம்பூரணர் கொள்ளும் 'புறம்' என்னும் சொல்லுடன் இணைந்து வருகின்றமையால் 'புறம்' என்ற சொல்லை முழு அளவில் வேற்றுமை உருபெனக் கருதுதல் இயலாது.
4. தொல்காப்பியர் ஒரு வேற்றுமைக்கு ஒரு உருபு என்ற நெறியில் வேற்றுமை இலக்கணம் கூறியுள்ளமையால் அவர் கண் என்ற ஒரு வடிவத்தினை மட்டுமே உருபு என்று கொள்ளுகிறார் எனலாம்.
5. முதல் வேற்றுமை முதல் தொல்காப்பியர் ஒரு நூற்பாவில் வேற்றுமை உருபினையும் அவ்வேற்றுமை தோன்றும் அடிப்படையினையும் சுட்டி, அடுத்த நூற்பாவில் அவ்வேற்றுமையின் பல்வேறுபட்ட பொருள் வழக்கு எல்லையினையும் விளக்குகிறார். இந்த அடிப்படையில் நோக்குங்கால் ஆசிரியர் பத்தொன்பது சொற்களின் வாயிலாக அவ்வேற்றுமையின் பொருள் வழக்குகளைத்தான் கருதியுள்ளார் எனக் கொள்ளுதல் சாலப் பொருந்தும்.[5]

எனவே, இதிலிருந்து தொல்காப்பியர் ஏழாம் வேற்றுமைக்குரிய உருபுகளாக அவற்றைத் தந்திருக்க முடியாது எனும் முடிவினைப் பெறலாம். ஆனால், நன்னூலார் இது சார்ந்த சொற்களை உருபென அமைத்து விதி செய்திருப்பது இளம்பூரணரின் உரையின் செல்வாக்கினால் ஆகும். ஏனெனில், இளம்பூரணரே அப்பத்தொன்பது சொற்களையும் உருபு என வகுத்துத் தந்திருக்கிறார்.

iv

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளும் சான்றுகளும் வேற்றுமை எனும் ஓர் இலக்கணக் கூறில் மட்டுமே கவனம் செலுத்தியிருக்கின்றன. இக்கவனம் நன்னூல் எனும் இலக்கண நூலின் ஆக்கத்திற்கு இளம்பூரணம் எனும் உரை பயன்படுத்தப்பட்டிருக்கும் தன்மையினை எடுத்துக்காட்டுகிறது. இவ் எடுத்துரைப்பு, இளம்பூரணர் எனும் உரையாசிரியரின் பல கருத்துக்களைத் தான் பின் வந்த நன்னூல் நூற்பா வடிவாக்கியிருக்கின்றன எனும் கருத்தை மையமிடுகிறது. எனவே, இம்மையத்தில் நின்றான பார்வை தொல்காப்பிய உரையாசிரியர்களுக்குப் பின் தோன்றிய இலக்கண நூல்கள் உரைச்சாயல் நூல்களேயன்றி தனி மூல நூல்கள் அல்ல என உறுதிகொள்கிறது. அத்துடன் தமிழ் இலக்கண வளர்ச்சியில் உரையாசிரியர்களுக்கான கவனிப்புக்கும் இடத்துக்குமான தேவையினையும் வலியுறுத்துகிறது.

[5] இசரயேல், மோ. (1976) **இலக்கண ஆய்வு – பெயர்ச்சொல்,** ப.116.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப உரைநடையில் கிறிஸ்தவ அறிஞர்களின் பேச்சுவழக்கு நடை

செ.பிறைசில்,
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



தொல்காப்பியத்தில் காணப்படும் உரைநடை பற்றிய குறிப்பும் (செய்யுள் - 172) இறையனார் அகப்பொருளுரையும் தமிழில் உரைநடைகள் இருந்தமைக்குச் சான்றுகள் காட்டினாலும் தமிழில் உரைநடை இலக்கியம் தனியாக வளர்ச்சி பெறவில்லை என்பதே உண்மையாகும். பலரும் உரையாசிரியர்கள் இலக்கண நூல்களுக்கு வகுத்த உரைகளையும், மணிப்பிரவாள நடையையும், கல்வெட்டுக்களில் காணப்பட்ட உரைநடைகளையும் தமிழின் ஆரம்ப உரைநடைகளாகக் குறிப்பிட விரும்பினாலும், ஐரோப்பியர் வந்தபோது தமிழில் இலக்கியப் படைப்புக்கள் மட்டுமின்றி மருத்துவம், சோதிடம், இலக்கணம், அகராதி போன்ற அனைத்துப் படைப்புக்களும் செய்யுள் நடையிலேயே அமைந்திருந்தன. கிறிஸ்தவர்கள் தமிழ்ச் சூழலுக்குள் நுழைந்தபோது தமிழில் உரைநடை மிக ஆரம்ப நிலையிலேயே இருந்தது. இந்நிலையிலேயே தமிழ்ச் சூழலுக்கு வந்த கிறிஸ்தவம் படித்தோருக்கும், பாமரருக்கும் புரியும் வண்ணம், பண்டிதருக்கும் பாமரருக்கும் இடைப்பட்ட உரைநடைவகையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. அதில் பேச்சுவழக்குக்கு முதன்மையளித்தது. பேசும் தமிழை எழுதும் தமிழாகச் சீரமைத்தது. தமிழ்ச் சூழலில் பேச்சு வழக்கை சொல், சந்தி, வாக்கிய அமைப்பு ஆகிய நிலைகளில் சீர்மைப்படுத்தி இலகுவாக எழுதும் உரைநடையை உருவாக்கியதில் கிறிஸ்தவப் படைப்பாளர்களுக்கே பெரும்பங்குண்டு. இம்முயற்சி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகப் படிப்படியாக நிகழ்ந்ததாகக் கருதவேண்டும். கிறிஸ்தவம் தமிழ்ச்சூழலுக்குள் நுழைந்தபோது தமிழ் இலக்கிய உலகில் விரைவாகவும், சரமாரியாகவும் கவிதைபாடக் கூடிய புலவர்கள் உரைநடையில் சில சொற்தொடர்களைக்கூட எழுதத்தெரியாமல் இருந்தமையை உவின்ஸோ என்ற அகராதி அறிஞர் தனது தமிழ் - ஆங்கில அகராதியின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். இவ்வாறான நிலமைக்குக் காரணங்கூறும் அபிடுபாய் என்ற கத்தோலிக்கத் துறவி

> *"பழைய நூல்களில் ஒன்றுகூட உரைநடையிலோ அல்லது மக்கள் பேசும் பாமர மொழியிலோ இல்லை. அவர்களுடைய மருத்துவ நூல்கள்கூடக் கவிதைகளாகத்தான் இருக்கின்றன. இப்படிப் பாமரருக்குப் புரியாத மொழியில் எழுதிவருவது அந்தணர்களின் யுக்தியாகத் தெரிகின்றது. அறிவுத்துறைகளில் பிறசாதியினர் புகாதிருக்கவும், அவற்றைத் தாங்கள் ஏகபோகமாக அனுபவிக்கவும் அவர்கள் கையாண்டு வருகிற பழக்கமாக இருக்கிறது இது."* சரோயினி பாக்கியமுத்து 1990 -23.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிடுகின்றார். தமிழில் உரைநடை முன்னிற்காமைக்கு இன்னுமொரு காரணம் கூறுகின்றார் சரோயினி பாக்கியமுத்து

*"உரைநடை சாதாரண மக்களின் இலக்கிய வாகனம், நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தில் அது தழைப்பதில்லை. ஜனநாயகச் சூழலில் தான் அது வளரமுடிகின்றது. தமிழ்நாட்டு ஆட்சிமுறைகளில் ஜனநாயகமரபு இல்லாததும் அங்கு நிலவிய சாதி வருண அமைப்பும், அவ்வமைப்பின் கடுமையான அமுலும், சமயமும், கல்வியும் ஒருசிலரின் அனுபவமாக மட்டுமே இருந்தமையுமே முக்கிய காரணங்களாக இருந்திருக்கும் எனத் தோன்றுகின்றது."*

இவர் உரைநடையைக் குறிப்பிட்டு இக்கருத்தைக் குறிப்பிட்டாலும் பேச்சுவழக்குப் பயன்படாமைக்கும் இதுவே காரணம் எனலாம். ஆனால் கிறிஸ்தவர்களின் தேவை வேறாக இருந்தது. அவர்கள் தம் மதக் கருத்துக்களை சாதாரண மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டியிருந்தது. இதனால் சாதாரண பேச்சுவழக்கிற்கு முன்னுரிமையளித்தார்கள். மேலும் கிறிஸ்தவர்களுக்கு முக்கியமானது வேதாகமம். இதனால்தான் யாழ்ப்பாண மக்கள் இவர்களை வேதக்காரர்கள் என அழைக்கின்றனர். வேதாகமக் கருத்துக்களை செய்யுளில் அமைப்பது ஆங்கிலேயர்களுக்கு இலகுவானதாக இருக்கவில்லை. ஆகவே அவர்கள் உரைநடைக்கு முக்கியத்துவம் அளித்தனர். அவர்களின் உரைநடை சாதாரண மக்களை மையப்படுத்தியபோது பேச்சுவழக்கை உள்வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. தமிழில் உரைநடை இலக்கியமான நாவலை முதலில் படைத்த கிறிஸ்தவ இலக்கியவாதி மயூரம் வேதநாயகம்பிள்ளை தம் 'பிரதாபமுதலியார் சரித்திரம்' என்ற நாவலின் முன்னுரையில் உரைநடையின் இன்றியமையாமை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"வசன காவியங்களால் மக்கள் திருந்தவேண்டுமேயல்லாது செய்யுட்களைப் படித்துத் திருந்துவது அசாத்தியம் அன்றோ? ஐரோப்பிய மொழிகளில் வசனகாவியங்கள் இல்லாமலிருக்குமானால் அந்தத் தேசங்கள் நாகரிகமும், நற்பாங்கும் அடைந்திருக்கக்கூடுமோ! அப்படியே நம்முடைய தாய்மொழியில் வசன காவியங்கள் இல்லாமலிருக்கின்ற வரையில் இந்தத் தேசமும் சரியான சீர்திருத்தமடையாது என்பது நிச்சயம்."*

கிறிஸ்தவ இலக்கியவாதிகளின் இவ்வாறான சிந்தனைகளே தமிழ்ச் சூழலில் செய்யுள்கள் கல்விமான்களின் கௌரவச் சின்னமாகக் கருதப்பட்டு வந்த நிலையை தகர்த்தெறியச் செய்தன. மேலும் இச் சிந்தனைகளே ஆன்மீக எழுச்சிக்கு மட்டுமின்றி உரைநடையை இலக்கிய வாகனமாக மாற்றி படைப்பிலக்கியங்கள் உருவாக்கம் பெறவும் வழிவகுத்தன. இச் சிந்தனைகளின் வளர்நிலையாகவும், கிறிஸ்தவம் சாதாரண மக்களை நோக்கி தனது கவனத்தைத் திசை திருப்பியபோதும் ஆரம்ப கிறிஸ்தவ இலக்கியவாதிகளும் மொழிபெயர்ப்பாளர்களும் பேச்சு வழக்கிற்கு முதன்மையளித்து ஒரு புதிய உரைநடையை தமிழுலகிற்கு அளித்தார்கள்.

பேச்சுவழக்கு நடை பேச்சு வழக்கையொட்டி ஒரு புதிய உரைநடையை தமிழில் பிரக்ஞைபூர்வமாகத் தொடக்கி வைத்தவர்கள் கிறிஸ்தவர்களே. கிறிஸ்தவப் பனுவல்களை பொதுமக்கள் மொழியில் அமைப்பது ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் போக்காகும். போப்பாண்டவர் டமேசசின் ஆணைப்படி கி.பி 402ல் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு 'வல்கத்தா' எனப்படுகின்றது. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலத்தீன் சொல்லுக்கு 'பொதுமக்களுடையது' என்பது பொருளாகும். ஐரோப்பாவிலிருந்த இந்நிலமையே தமிழ்ச் சூழலில் கிறிஸ்தவர்கள் பேச்சுவழக்கை சங்கடமின்றித் துணிந்து பயன்படுத்த அவர்களுக்கு பலமளித்தது.

தமிழில் கிறிஸ்தவர்களின் உரைநடைவரலாறு 400 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. இக்காலப்பகுதியில் தமிழ் உரைநடை வரலாறு காலத்துக்குக் காலம் மாறிவந்துள்ளதைக் காணமுடிகின்றது. கலைச்சொற்களின் பயன்பாடு, பிறமொழிக்கலப்பு, பேச்சுவழக்கைக் கையாளுதல், மூலமொழியின் மரபுத் தொடர்களை மொழிபெயர்த்தல் போன்ற பல்வேறு நிலைகளிலும் இம்மாற்றம் இடம்பெற்றது. எனினும் பேச்சு வழக்கிற்கு கிறிஸ்தவர்கள் கொடுத்த முதன்மையில் ஏற்ற இறக்கங்கள் காலத்துக்கு காலம் தெரிந்தாலும் எக்காலத்திலும் பேச்சுவழக்குநடை தொடர்ந்தது. கிறிஸ்தவர்களின் ஆரம்பகாலப் படைப்புக்கள் சிலவற்றை எடுத்துநோக்கி அதில் பேச்சுவழக்கு நடையை எவ்வாறு பயன்படுத்தி புதிய உரைநடையை கிறிஸ்தவர்கள் பிரக்ஞைபூர்வமாக ஆரம்பித்தார்கள் என நோக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

தமிழ் இலக்கியத்தில் கிறிஸ்தவர்களின் உரைநடை வரலாற்றை அன்றிக்ஸ் அடிகளாரின் தம்பிரான் வணக்கம் (1557) என்ற நூலுடன் தொடங்கலாம். இந்நூலின் நடை எளிமையானது, சரளமானது, கிறிஸ்தவ சமயத்துக்கான கலைச்சொற்கள் போர்த்துக்கேய மொழியிலிருந்து ஒலிபெயர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. சொற்கள் இடைவெளியின்றி அச்சிடப்பட்டிருத்தல், பந்திபிரிப்பு முறை இல்லாதிருத்தல், நிறுத்தற் குறியீடுகள் இல்லாமை, மெய்யெழுத்து புள்ளிபெறாமை, எகர, ஒகர குறில் நெடில் வேறுபாடுகளின்மை ஆகியவை இந்நூலின் உரைநடையின்கண் அமைவபை. அத்துடன் இந்நூலில் முக்கியமாக நோக்கவேண்டியுள்ளது முகவை மாவட்ட பரதவர்களின் பேச்சுவழக்கைக்காகும். இந்நூலின் முதலிரு பக்கங்களுக்குள் வாத்தை (வார்த்தை), இழமை (இளமை), பாற்க (பார்க்க), வழந்தால் (வளர்ந்தால்), அதினால் (அதனால்), உண்டாகினதால் (உண்டாகியதால்) போன்ற பல பேச்சு வழக்குச் சொற்களைக் காணமுடிகின்றது. இக்காலப்பகுதிக்கு முன்னர் பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் குறைந்தளவு செந்தமிழ் வழக்குகளும், அதிகப்படியான பேச்சுவழக்குகளும் காணப்படுவதை பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை தமது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். ( 1980 பக்.171) ஆனாலும் இலக்கியங்களில் பேச்சுவழக்கு நடையை தமிழ்ப் புலவர்கள் எப்போதுமே இணைத்துக் கொள்ளவில்லை. ஏனனில் இலக்கியத்தில் பேச்சுவழக்குக் கலப்பது தரக்குறைவு என்றே அவர்களால் கருதப்பட்டது.

அன்றிக்ஸ் அடிகளாரைப் பொறுத்தவரை அவர் பேச்சுவழக்கிற்கு அதிகளவு முக்கியத்துவத்தை அவரது அனைத்து நூல்களிலும் வழங்கியுள்ளார். அன்றிக்ஸ் அடிகளாரின் இன்னொரு நூலான 'கிரீசித்தியானி வணக்கம்' என்ற நூலைப் பதிப்பித்த இராசமாணிக்கம் தம் முன்னுரையில் (1963- 217) இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

*"கிறிஸ்தவ மதத்தின் அடிப்படையான கொள்கைகளைச் சிறுபிள்ளைகளும் கண்டுபிடிக்கக் கூடிய முறையில் அக்காலக் கடற்கரைமக்களின் பேச்சு மொழியில் அமைத்துள்ளார்..... பேச்சு வழக்கை ஒட்டி அதுவும், அக்காலப் பரதவர், முக்குவர் பேச்சையொட்டி அமைந்த இந்நூல் இக்காலத்தில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கடற்கரையில் வாழ்ந்த தமிழ் மக்களிப் கொச்சைப் பேச்சைப் படம்பிடித்துக் காட்டுகின்றது."*

இங்கே பதிப்பாசிரியர் இராசமாணிக்கம் பேச்சுவழக்கை கொச்சை மொழியாகவே கருதியுள்ளமையைக் காணமுடிகிறது. ஆனால் தனது தேவையைப் பூர்த்தி செய்யவும், பேச்சு மொழியின் தாக்கமே மக்களை முழுமையாகச் சென்றடையும் என்ற நம்பிக்கையிலும் அடிகளார் தனது நூல்களில் சாதாரண மக்களின் மொழியைப் பயன்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

இவருக்குப்பின் வந்த தத்துவப் போதக சுவாமிகள் கற்றோருக்கென உயர்ந்த நடையையும், சாதாரண மக்களுக்கென பேச்சுநடையையும் பயன்படுத்தியதை இக்னேசியஸ் இருதயம் (1977: 21) எனும் தம் நூலில் குறிப்பிடுகின்றார். இவரின் மணிப்பிரபாள நடைகலந்த படைப்புக்களில்கூட (ஆத்துமநிர்ணயம்) எளிசாய், குடுத்து, பட்டுது, அஞ்சு, அதுகள், வேணும், ஆச்சுது, பன்னி, இத்தை (இதை), அங்கீகரிச்சு, காரணமன்னியே (காரணமன்றியே) முதலிய பேச்சு வழக்குகள் காணப்படுவதைச் சுட்டிக்காட்டலாம். இதற்குப் பொதுமக்களுக்குப் புரியவேண்டும் என்ற காரணத்துடன் தமிழ்நாட்டுக்குள் வந்த கிறிஸ்தவர்கள் முதலில் பேச்சு மொழியையே கற்றுக்கொண்டனர் என்பதும் கவனிக்கவேண்டியதாகும். ஆனால் அறிவிற் சிறந்தவர்களான கிறிஸ்தவ அறிஞர்கள் செந்தமிழ் தெரியாது பேச்சுவழக்கைக் கையாண்டார்கள் என்று பொருள் கொள்ளுதலும் தவறான பார்வையாகும்.

தமிழில் காணப்பட்ட வழக்குகளை செந்தமிழ்வழக்கு, கொடுந்தமிழ்வழக்கு எனப் பிரித்து விளக்கியவர் வீரமாமுனிவர். இரண்டுவகையான தமிழுக்கும் தனித்தனியே இலக்கணமும் எழுதியுள்ளார். செந்தமிழ் நடைக்கு வாமன் சரித்திரத்தையும், கொடுந்தமிழ் நடைக்கு எடுத்துக்காட்டாக பரமார்த்மாகுரு கதையையும் எழுதியுள்ளார். இதற்கு வீரமாமுனிவர் தந்துள்ள முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ஞ. சோசபு சுந்தரராசு(ப.ஆ) (1973- 256-257)

> *"என் இனிய நண்பர்களின் அறிவுரையின்படி பொதுமக்களின் பேச்சுத்தமிழுக்கு எடுத்துக்காட்டாக இப்பகுதியை இவ்விடத்திலமைப்பது என்னுடைய கருத்துக்கு மாறானதன்று. இதனை இவ்விடத்து அமைப்பது தமிழ் பயிலத் தொடங்குபவர்களுக்கு தம் கருத்தினை தமிழில் வெளியிடுவதற்கும் இலக்கண அமைதியோடு வாக்கியம் அமைப்பதற்கும் பயிற்சியளிக்கும். நாம் இங்கே சிறந்த தமிழ் வாக்கியங்களையோ, கலப்பு வாக்கியங்களையோ காணமுயன்றால் ஏமாந்து போவோம். தமிழ்ப் பொது மக்கள் சுருங்கிய சிறு வாக்கியங்களையே கையாழ்வதை விரும்புகின்றனர்..."*

இங்கு வீரமாமுனிவர் தான் பேச்சுவழக்கைக் கையாழ்வதற்கு புதியதோர் காரணம் கூறுகின்றார். சிறந்த தமிழ் வாக்கியங்கள் இல்லாவிடினும் பேச்சுவழக்கை இலக்கண அமைதியில் அமைக்க தனது பேச்சுவழக்கு இலக்கியம் உதவும் என்கிறார். அத்துடன் தமிழ்ப் பொது மக்கள் சுருங்கிய வார்த்தைகளையே பயன்படுத்த விரும்புகின்றனர் என்கிறார். இதிலே வீரமாமுனிவர் மற்றவர்களின் புரிதலுக்கு அதிக முக்கியத்துவமளிப்தைக் காணமுடிகின்றது. இலக்கியங்களின் நடை படித்தவர்களுக்கு மட்டுமே உரியது என்ற கருத்துநிலை பேச்சு வழக்கிற்கு அளிக்கும் முக்கியத்துவத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலைகிறது. இது கிறிஸ்தவர்கள் தமிழ் உரையில் ஏற்படுத்தய முக்கிய மாற்றம் எனலாம்.

தத்துவ போதகர் எழுதிய ஆத்துமநிர்ணயம் போன்ற நூல்கள் மணிப்பிரபாள நடையில் ஆக்கப்பட்டமையினாலேயே அவை தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெறவில்லை. தத்துவ பேதகரின் வாழ்க்கையைத் துருவி ஆராய்ந்த வீரமாமுனிவர் அவர் நூல்களில் உள்ள குறைகளைக் கண்டிருத்தல் வேண்டும். ஆகையாலேதான் அவர் மணிப்பிரபாள நடையை அறவே விலக்கி தமிழ் நடையில் நூல்களை எழுதியுள்ளார். கிறிஸ்தவர்கள் இலக்கியத் துறையையோ அல்லது அறிவுத்துறைகளையோ ஏகபோகமாக அனுபவிக்க விரும்பவில்லை அனைவரிடமும் தமது கருத்துக்கள் சென்றடைய வேண்டும் என்ற கொள்கை இருந்தது. இதுவே இவர்கள் உரைநடைக்கு முக்கியத்தவமளிக்கவும் பேச்சுவழக்கை பயன்படுத்தவும் காரணமாகியது.

வீரமாமுனிவரால் 'கொடுந்தமிழ்' என்பது கொச்சை வழக்ககளைக் குறிக்காமல் 'பேச்சுத்தகு மொழி வழக்கு' (standard spoken variety) 'பொதுக் கிளைமொழி' என்ற பொருளில் கையாளப்பட்டதாக செ.வை சண்முகம் (1993:68) குறிப்பிடுகின்றார். வீரமாமுனிவர் தாம் தொகுத்த சதுரகராதியின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். சூ.இன்னாசி (ப.ஆ) 1989-xiii) "*இது* (சதுரகராதி) *ஐரோப்பியருக்கும் பயனுள்ளதாகும். ஏனெனில் அவர்களில் யாரும் பேச்சுத்தமிழை அறியாமல் செந்தமிழுக்குத் திடீரெனக் குதித்து ஓடத் துணியமாட்டார்கள் என எண்ணுகிறேன்.*" இவரின் இக் கூற்றுக்கு இவ்வகராதியில் இவர் பேச்சுத் தமிழையும் இணைத்துள்ளமையே காரணமாகும். சதுரகராதியில் இடம்பெறும் டம்பக்கம், டாப்பு, டக்கிலும், டாக்கு, டாப்புகிறது, டோல், டோம்பர் போன்ற சொற்களை இங்கு உதாரணமாகக் குறித்துக்காட்டலாம். அதோடு வீரமாமுனிவரின் தனது 'தேம்பாவணிக் கீர்த்தனையில்' சோலி, கொலிக்கும், விருதா, கலியாணம், கெற்பம், சோடு என்ற பல பேச்சுச் சொற்களைப் பயன்படுத்துவதைக் காணலாம். மொத்தத்தில் ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களின் அனைத்து வகை இலக்கியப் படைப்புகளிலும் பேச்சு வழக்கு நடைக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது எனலாம்.

சீகன்பால்கு தம் படைப்புகளில் எண்ணற்ற பேச்சுவழக்குச் சொற்களை கையாண்டுள்ளார். இவரது விவிலிய மொழிபெயர்ப்பு வெளிவந்த போது அது 'பறையர் வேதம்' என அழைக்கப்பட்டமை அம்மொழிபெயர்ப்பில் சாதாரண மக்களின் பேச்சுவழக்குச் சொற்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகளவான முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

கிறிஸ்தவர்களின் வேதாகம மொழிபெயர்ப்பின் உரைநடை தனித்துவமானது. விவிலிய மொழிபெயர்ப்பில் ஆரம்பத்தில் பேச்சுத் தமிழே அதிகம் இடம்பிடித்தது. விவிலிய மொழிபெயர்ப்பாளர்களில் பெப்ரீஷியசும் இரேனியஸ்சும் பேச்சுத்தமிழைத் தரப்படுத்தி எழுதும் தமிழாக உருவாக்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். கற்றோர், பாமரர் இருவருக்கும் புரியவேண்டும் என்ற நோக்கில் வேதாகம மொழிபெயர்ப்பும், உரைநடையமைப்பும் மேற்கொள்ளப்பட்டது. இன்றுவரை கிறிஸ்தவர்கள் வேதாகமம் வாசிப்பதை 'வாசகம்' வாசிப்பது என்றே குறிப்பிடுகின்றனர். இதற்கு வேதாகம நடையில் பேச்சுவழக்கு அதிகம் கலந்திருப்பதே காரணமாகும். விவிலிய உரைநடையில் பேச்சுவழக்கும், வேற்றுமொழிச் சொற்களும் ஆரம்பத்தில் அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்திருந்ததையும் பின்னர் காலத்துக்குக் காலம் மாறிவந்துள்ளதையும் கீழ் வரும் விவிலிய வசனம் ஒன்றின் மூலம் உதாரணத்துக்கு குறிப்பிட்டுக்காட்டலாம்.

*18ம் நூற்றாண்டு*

*"அயிசூரியமுடைத்தானாயிருக்கிய யாதொரு மனுஷன் உண்டாயிருந்தான். அவன் சகலாத்துக்களையும் விலையேறப்பெத்த பிடவைகளையும், தரிச்சுக்கொண்டு அனுதினமும் சந்தோஷப்பட்டுப் பிறுதாபிச்சுக் கொண்டிருந்தான்."* ***(சீகன்பால்கு- 1714)***

*"ஐஸ்வரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன் இத்தாம்பரமும் விலையேறப்பெற்ற புடவையுந் தரித்துக்கொண்டு, அநுதினமுஞ் சம்பிரமாய் வாழ்ந்திருந்தான்."* ***(பெப்ரீஷியஸ் 1774)***

*19ம் நூற்றாண்டு*

*"இத்தாம்பரமும் மெல்லிய வஸ்திரமும்தரித்த ஒரு ஐசுவரியவான் அனுதினமும் சம்பிரமாய் வாழ்ந்திருந்தான்."* ***(பெர்சிவல் 1850)***

*"ஐஸ்வரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான். இவன் இத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரிச்சு, அனுதினமும் சம்பிரமாய் வாழ்ந்திருந்தான்."* ***(பவர் - 1864)***

*20 நூற்றாண்டு*

*"தனவந்தனான மனிதன் ஒருவன் இருந்தான். அவன் செந்நிற ஆடையும் நார்ப்பட்டும் உடுத்திக்கொண்டு நாள்தோறும் உண்டு கழித்துச் சம்பூரணமாய் வாழ்ந்து வந்தான்."* ***(1967)***

*"செல்வமுடைய மனிதன் ஒருவன் இருந்தான். அவன் செந்நிற உடையும் பட்டாடையும் அணிந்து கொண்டு நாள்தோறும் உண்டு கழித்து வளமாய் வாழ்ந்து வந்தான்."* ***(இராஜரீகம் 1979)***

*"செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார்."* ***(1995 பொது மொழிபெயர்ப்பு)***

*"விலையுயர்ந்த ஆடைகளை எப்போதும் அணிந்துகொண்டிருந்த ஒரு செல்வந்தன் இருந்தான். ஒவ்வொரு நாளும் விருந்துண்டு களிக்கும் அளவுக்கு மிகுந்த செல்வனாயிருந்தான்."* ***பரிசுத்த பைபிள் (WBTC) 1996***

இந்த உதாரணம் மூலம் கிறிஸ்தவர்கள் உரைநடையில் மேற்கொண்ட மாற்றங்களையும், தமிழ்ச் சூழலில் உரைநடை மாறிவந்த பாதையையும் காண்டுகொள்ளமுடிகின்றது. இத்தகைய மாற்றங்களை மொழிபெயர்ப்பாளர்களின் தனிப்பட்ட நடையியற் பண்பாக கருத இயலாது. மறாகத் தமிழ்ச் சூழலில் மொழியின்பாற்பட்ட மனப்பாங்கில் ஏற்பட்ட மாற்றங்களாகக் கருத வேண்டும்.

பேசும் தமிழை இலக்கணப்படுத்தி அதை எழுதும் தமிழாகச் சீர்மைப்படுத்தியவரும், முதன்முதலாகச் சந்திபிரித்து எழுதியவரும் இரேனியஸ்சே என சரோயினி பாக்கியமுத்து (1990: 146) குறிப்பிடுகின்றார். இரேனியஸ் பள்ளி மாணவர்களுக்கு பாடநூல்களை எழுதியவராவார் அந்த அனுபவத்தால் பண்டிதர்நடை பழைய சொற்களையும், வழக்கொழிந்த உருபுகளையும் ஏராளமாகக் கொண்டிருந்ததனால் அது பலருக்கும் கடினமானது என எண்ணியிருக்கலாம். அதனால் பேச்சுத் தமிழை எழுதும் தமிழாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரமைத்தார் என கருதமுடியும். பேச்சுத் தமிழை எழுத்துத் தமிழாக மாற்றியமைப்பதிலுள்ள சிக்கல்களை இரேனியஸ் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

*"இந்நடை பல சிதையுண்ட சொற்களையும் தெளிவற்ற விகுதிகளையும் கொண்டுள்ளது. வட்டாரத்துக்கு வட்டாரமும், சாதிக்குச் சாதியும் வேறுபடுகின்றது. இலக்கணம், சொற்பிரயோகம், உச்சரிப்பு அனைத்திலும் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றது. இதன் கொச்சைகள் வேகமாக மாறவும் அழியவும் கூடியன. இந்நடையில் பொதுவாக இக வாழ்க்கைக்குரிய சொற்கள் மட்டுமே உண்டு. தத்தவ, ஆன்மீக விசாரம் குறித்த சொற்கள் அதிகம் கிடையா. மேலும் கற்றோர் இந்நடையை மிக இழிவாக மதிப்பிடுகின்றனர்"*

ஆனால் பேச்சு-எழுத்து வழக்குகளுக்கிடையே உயர்வு-தாழ்வு காணும் மனப்பாங்கு படிப்படியாக மாறத்தொடங்கியது. பின்நாட்களில் பேசுவதுபோல் எழுதுவது உத்தமம் எனப் பாரதி குறிப்பிடுவதையும், புனைகதையாளர்கள் பேச்சுத்தமிழை அதிகம் பயன்படுத்தியதையும் காண்கின்றோம். இம் மாற்றங்களுக்கு வழிவகுத்தவர்களில் முக்கியமானவர்கள் கிறிஸ்தவப் படைப்பாளிகளே எனக் கூறுவதில் தவறிருக்காது.

கிறிஸ்தவர் பயன்படுத்திய உரைநடையைப் பற்றிக் குறிப்பிடும் வி. செல்வநாயகம் (1957-78) அவர்கள்

*"பேச்சுவழக்கில் உள்ள மொழியை ஆதாரமாகக் கொண்டு எழுதுகிற நடை எதுவே அதுதான் சிறந்தது என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதனால் பொதுமக்கள் பேசும் தமிழில் உள்ள சொற்களையும், இலக்கண அமைதிகளையும் பயன்படுத்தி தமிழுக்குப் புதியதொரு நடையிலே தம் கருத்துக்களை வெளியிடத் தொடங்கினர்."*

எனக் கூறியுள்ளமை கிறிஸ்தவர்கள் கையாண்ட மொழிநடையைத் தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வாறாக தமிழ்ச் சூழலிலே உரை நடையில் புதிய கதவுகளைத் திறந்தவர்களில் கிறிஸ்தவ அறிஞர்கள் வளர்த்தெடுத்த பேச்சுவழக்கு நடை மிகச் சிறப்பானது. தற்காலத்தில் பேச்சுவழக்கு நடை பல்வேறு இலக்கியங்களிலும் பயின்று வருகின்றது. எனவே, பேச்சுவழக்கைத் தமிழில் தயங்காமல் புகுத்திய கிறிஸ்தவப் படைப்பாளிகளை உரைநடை வரலாற்றில் மீட்டிப்பார்ப்பது காலத்தின் கட்டாயமாகும்.

**உசாத்துணைகள்**


- எரோணிமுசு, கு. (1995) **"பொது விவிலியம் ஓர் அறிமுகம்"**, திருச்சி: தூய பவுல் இறையியல் கல்லூரி.
- இராசமாணிக்கம்,ச. (1963) **"தம்பிரான் வணக்கம்"**, தூத்துக்குடி : தமிழ் இலக்கிய கழகம்.
- இராசமாணிக்கம்,ச. (1967) **"ஆத்தும நிர்ணயம்"**, தூத்துக்குடி : தமிழ் இலக்கிய கழகம்.
- இன்னாசி, சூ. (1989) **"வீரமாமுனிவம் சில ஆய்வுகள்"**, சென்னை: மாதா பதிப்பகம்.
- இன்னாசி. சூ. (1990) **"கிறிஸ்தவமும் தமிழகமும்"**, சென்னை: உலகத்தமிழாராச்சி நிறுவகம்.
- இன்னாசி, சூ. (1995) **"வீரமாமுனிவர்"** புதுடில்லி: சாகித்திய அகாதமி.
- டேவிற்,பா. (2002) **"கிறிஸ்தவத் தமிழ் நடையியல் நோக்கு"**, சென்னை : உலகத் தமிழாராச்சி நிறுவனம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் பங்களிப்பு

ஜெஸ்மினா ஜெஸீம்,
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



தமிழகச் சூழலை அடுத்து ஈழத்தில் சுமார் 1930 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே சிறுகதையானது அறிமுகப்படுத்தப்படுகின்றது. அன்று தொடங்கி இன்று வரை நவீன இலக்கியம் என்ற வரிசையில் தன்னுடைய இடத்தை விட்டுக்கொடுக்காது சிறுகதை நிலைபெற்று இருக்கின்றமை சிறப்புக்குரியதாகும். சிறுகதையினுடைய மூலகர்த்தாக்களாக நாம் இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், க.தி.சம்பந்தன் முதலியவர்களைக் குறிப்பிடலாம். இவர்களை அடியொற்றியே பிற்கால சிறுகதையாசிரியர்கள் உருவானார்கள் என்பதில் மறுப்பதற்கில்லை. ஆரம்பகாலங்களில் பொதுவாக ஆண்களே சிறுகதைத்துறையில் முக்கியம் பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால் நவீனமும், சமூகமும் முன்னேற்றம் காண அடுக்களைக்குள் ஒடுக்கப்பட்ட பல பெணகள் வெளியுலகை எட்டிப்பார்க்கத் தொடங்கினார்கள். பல்வேறான துறைகளின் மூலம் தங்களுடைய இருப்பை நிலைநிறுத்திக் கொண்டார்கள். அவற்றுள் சிறுகதைத்துறையும் ஒன்றாகும். சிறுகதைத்துறைக்கு பங்களிப்புச் செய்த பெண்களுள் தமிழ்ப் பெண்கள் மட்டுமல்லாது முஸ்லிம் பெண்களும் சலித்தவர்கள் அல்ல எனும் அடிப்படையில் போட்டி போட்டுக்கொண்டு பிற்காலப்பகுதியில் முஸ்லிம் பெண்களின் ஆக்கங்களும் வெளிவரக் கிளம்பின.

இதனடிப்படையில் நாம் நோக்குகின்றபோது ஈழத்தில் சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண் சிறுகதையாசிரியர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அவர்களுள் சிலராக நயீமா சித்தீக், பேராதனை ஷரபுன்னிஸா, புசல்லாவ இஸ்மாலிகா, ஹஸீனா வஹாப், கெக்கிராவ சஹானா, புர்கான் பீ இப்திகார், சுலைமா ஏ. சமி, றியாஸா ஆப்தீன், இர்பானா ஜப்பார், மரீனா இல்யாஸ், எம்.ஏ.றஹீமா, பாத்திமா ரஜப், சித்திறிகா யகீன், ஸரீனா காலித், பேகம் சுபைத்தானி, றீமா ஹாபித், சுல்பிகா, கலைமகள் ஹிதாயா, மஸீதா புன்னாமீன், றஸீனா புகாரி, பௌஸியா யாஸின், மசூறா ஏ. மஜீத், எஸ். எல். மரியங்கண்டு, காத்தான்குடி பாத்திமா முதலியவர்களைக் குறிப்பிடலாம். இவர்களுடைய பல்வேறு வகையான சிறுகதைகள் நூலுருப் பொற்றுள்ளன. சில சாஹித்திய மண்டலப் பரிசும் பெற்றுள்ளன.

இவ்வடிப்படையில் இவர்களுடைய சிறுகதைகளை உற்று நோக்குகின்றபோது சமூகப்பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள், பெண்கள் தொடர்பான பிரச்சினைகள், பெண் கல்வி ஊக்குவிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையில்லாப் பிரச்சினை, போர் குறித்த விடயங்கள் முதலியனவற்றை உள்ளடக்கங்களாகக் காணமுடியும்.

முதற்கட்டமாக ஈழத்து முஸ்லிம் பெண் சிறுகதையாசிரியர்கள் வரிசையில் இடம் பிடிப்பவர் ஸர்பிதா ஆவார். இவருடைய ஆக்கம் 1948 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையினூடாக வெளியிடப்பட்டது. அன்று தொடக்கம் இவர் சுமார் 55 ஆக்கங்களை எழுதியிருந்த போதிலும் எந்தவொரு சிறுகதைகளும் இணைத்து நூலுருப் பெறவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும்.

அடுத்த பெண் எழுத்தாளராக 1947 ஆம் ஆண்டு மலையகத்தில் முனைப்புப் பெற்ற பேராதனை ஷரபுன்னிஸா திகழ்கிறார். இவர் தினகரன், வீரகேசரி, தினமணி, சிந்தாமணி, முஸ்லிம் முரசு, மணி விளக்கு, மணிச் சுடர் முதலிய பத்திரிகைகளின் வாயிலாக தன்னுடைய ஆக்கங்களை வெளியிட்டவர். இவருடைய சிறுகதைகளாக 'அம்மா', 'மனதின் சுமை', 'குறிஞ்சி மலர்கள்', 'தண்டனை', 'கொந்தளிப்பு', 'புதுமை' முதலியவற்றைக் குறிப்பிடலாம். அடுத்த கட்டமாக 1960 காலப்பகுதியில் எழுதத் தொடங்கிய நயீமா சித்தீக் விளங்குகின்றார். நயீமா சித்தீக் ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர். அவர் மலையகத்தைச் சேர்ந்தவர் என்பதால் மலையக வாசகர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்தவர். இதுவரைக்கும் 250க்கும் அதிகமான சிறுகதைகளை எழுதிய இவர் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைப்பரப்பில் அசைக்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளார். இவருடைய 'வாழ்க்கையின் சுவடுகள்', 'வாழ்க்கையின் வண்ணங்கள்' ஆகிய தொகுதிகள் பெரும் வரவேற்பைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோன்று புஸல்லாவ இஸ்மாலியா, தூயவள், மல்லிகா போன்ற புனைப் பெயர்களில் எழுதியவர். இவர் சுமார் 50 சிறுகதைகளை எழுதிய போதிலும் இதுவரையில் ஒரு தொகுப்பேனும் வெளிவராமை கவலைக்குரியதாகும். இவரது சிறுகதைகள் பொதுவாக மலையக மக்களின் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்டவை. அதிலும் பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளார். இதனடிப்படையில் இவர் எழுதிய 'காயாம் பூவும் வாழை மரமும்', 'அப்பாவுக்குக் கல்யாணம்' முதலிய சிறுகதைகள் விதந்து பாராட்டத்தக்கது. அதே போல் கே.ஜெ.மெகர்த்தா என்ற பெயரில் எழுதிய வெலிகாமம் கப்புவத்தையைச் சேர்ந்த காமிலா மஸாஹிம் காணப்படுகிறார். இவரது பல சிறுகதைகள் 1965 – 70 களில் பிரசுரமாகின. இவருடைய 'பிணைப்பு' என்ற கதை தென் மாகாண முஸ்லிம்களின் பேச்சுத்தமிழை அறிமுகம் செய்வதில் வெற்றி கண்டுள்ளமையும் நினைவு கூறத்தக்கது. அடுத்ததாக 1978 ஆம் அண்டில் 'விடிவை நோக்கி' எனும் சிறுகதை மூலம் எழுத்துலகிற்கு அறிமுகமானவர் மாத்தறை ஹஸீனா வஹாப். இவர் இதுவரை 25க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். 1979 ஆம் ஆண்டு இலங்கையில் நடத்தப்பட்ட நாலாவது அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டை ஒட்டி வெளியிடப்பட்ட 'பிறைப் பூக்கள்' எனும் நூலில் பிரசுரிப்பதற்கு என்று தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்கள் 27 பேரின் சிறுகதைகளுள் ஹஸீனா வஹாபின் சிறுகதையும் அடங்கியிருப்பது பெருமைக்குரியதாகும். இவருடைய 'ஹாஜியார் பிள்ளை', 'வாழ்வோரை வாழ்த்துவோம்' முதலியனவும் சிறப்பான சிறுகதைத் தொகுப்புக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 களின் பின் பொதுவாக தமிழ் இலக்கியத் துறைக்கு முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு அதிகரித்தது. அதே வேளை சிறுகதைத்துறையிலும் பலர் முனைப்புடன் செயற்படத் தொடங்கினார்கள். அதன் விளைவானவர்களே இக்காலப்பகுதியில் எழுதத் தொடங்கிய ஸமீனா ஷஹீட், திக்வல்லை ரதீமா. பெரும்பாலும் இவர்களுடைய கதைகள் துப்பறியும் கதைகளாகவே அமைந்தன. மேலும் இதே காலப்பகுதியில் உதித்தவர்தான் சுலைமா சமி. இவர் 'வைகரைப் பூக்கள்', 'மனச்சுமைகள்', 'திசை மாறிய தீர்மானங்கள்' ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவரது கதைகளின் உள்ளடக்கங்களாக சமூக அவலங்கள், சமூக எழுச்சிக்கான முற்போக்குச் சிந்தனைகள், சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் மூட நம்பிக்கைகளைக் கொண்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை உலகிற்குள் காலடி எடுத்து வைத்தவர் காத்தான்குடி பரீதா. இவருடைய சிறுகதைப் பயணம் 1981 ஆம் ஆண்டு 'ஒரு பட்டிக்காட்டுப் பெண் பல்கலைக்கழகம் போகிறாள்' எனும் சிறுகதையினூடாக ஆரம்பிக்கின்றது. சுமார் 17 சிறுகதைகளை எழுதிய இவர் சமூக மடமை, அநீதிகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருதல் ஆகிய நோக்கங்களுக்காக எழுதினார் எனலாம்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் உருவாகிய போதிலும் தொடர்ந்து இலக்கியத்துறையிலே நிலைத்திருப்பது அரிது. காரணம் குடும்பச் சுமை, திருமண பந்தம் இவர்களுக்கு ஒரு முட்டுக்கட்டையாகி விடுகின்றது. ஆனால் 1980 களில் எழுத ஆரம்பித்த பெண்கள் இதனைக் கட்டுடைப்புச் செய்துள்ளமை பாராட்டத்தக்கது. இவ்வகைப் பெண்களுள் ஒருவராக இடம்பிடிப்பவர். அரபா உம்மா. இவருடைய எழுத்து வாழ்க்கை சிறுகதையுடன் மட்டும் நின்று விடாமல் அதையும் தாண்டி கவிதை, கட்டுரை, நாடகம் எனும் தளங்களினூடாகவும் விரிவடைந்துள்ளது. இவர் இன்றும் தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, நவமணி முதலிய பத்திரிகைகளின் வாயிலாக தன்னுடைய சிறுகதையார்வத்தை வெளிக்காட்டிக் கொண்டிருக்கின்றமை தெளிவானதே.

இவர்களைத் தொடர்ந்து முஸ்லிம் பெண் சிறுகதையாசிரியர் வரிசையில் இடம் பிடிப்பவர் தமிழ்ச் சிறப்புப் பட்டதாரியான லறீனா ஏ ஹக். இவர் 2003 ஆம் ஆண்டு 'எருமை மாடும் துளசிச் செடியும்' எனும் தொகுப்பை வெளியிட்டார். இவர் சிறுகதையில் மாத்திரமல்லாது கவிதை, கட்டுரை, நாடகம், ஓவியம் ஆகிய துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவரைப் போலவே பல்துறையில் திறமை பெற்றவர்தான் கெக்கிராவ ஸஹானா. இவருடைய 'ஒரு தேவதைக் கனவு' எனும் தொகுதி விதந்து பாராட்டுக்குரியதாகும். இத் தொகுப்பிற்கு வாழ்த்துரை வழங்கிய தென்னிந்திய எழுத்தாளர் த. ஜெயகாந்தன் குறிப்பிடும்போது,

"திருமதி ஸஹானாவின் 'ஒரு தேவதைக் கனவு' சிறுகதைத் தொகுதி வெளிவருவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தெளிவுற அறிந்திடவும், தெளிவுபெற மொழிந்திடவும், சிந்திப்போருக்கு அறிவு வளர, உள்ளத்தே ஆனந்தக் கனவு பல காட்டலும் வைகறைப் பெற்றவர்கள் எழுதும் படைப்புகள் காலத்தால் என்றென்றும் போற்றப்படும். அவை என்றும் புதியவை. அத்தகைய இலக்கிய வரிசையில் தேவதையின் கனவும் இடம்பெற வாழ்த்துகிறேன்" என வாழ்த்து மொழிகளைத் திருமதி ஷஹானாவின் மீது வீசியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக, பல்வேறு பிரதேசங்களையும், பல வகைப்பட்ட குடும்பப் பின்னணியையும் கொண்ட பல முஸ்லிம் பெண்கள் தங்களுடைய நிலைகளில் நின்று கொண்டு சிறுகதைகளை எழுதியுள்ளனர். இவ்வரிசையில் இர்பானா ஜப்பாரும் இடம் பிடிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவருடைய சிறுகதைகள் தினகரன், சிந்தாமணி முதலிய பத்திரிகைகளின் வாயிலாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தாபன முஸ்லிம் சேவையிலும் ஒலிபரப்பாகியுள்ளன. இவர் 'புதுமைப் பெண்' என்ற சிறுகதைத் தொகுப்பையும் நிஸாரா பாரூக், அஸ்மா டீன், ஹய்ருன் எனும் சிறுகதைகளையும் எழுதியுள்ளார். பேராதனை ஸக்கியா ஜுனைதீன் சிறந்த சிறுகதைகளையும், உருவகக் கதைகளையும் எழுதியுள்ளார். மேலும் மாத்தளை பர்வின் என்ற பெயரில் எழுதி வரும் பௌசுல் ஹினாயா சுமார் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட தொடர்கதைகளையும் சிறுகதைகளையும் தினகரன், மித்திரன் முதலிய பத்திரிகைளின் ஊடாகப் பிரசுரித்துள்ளார். அவற்றுள் 'வாக்கு', 'வீடியோ விபரீதம்' என்பன குறிப்பிடத்தக்க சிறுகதைகளாகும்.

காத்தான்குடி பாத்திமா 'பொய்த் தூக்கங்கள்' எனும் தொகுதி ஒன்றினையும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பரீதா இஸ்மாயில் சித்தி நிஜா, பஸ்லுனா அபூபக்கர், மாஜிதா, அப்துல் மஜீத், பெரோஸா ஹுஸைன், ஷபானா ஜுனைடீன், மும்தஹீனா இல்யாஜ், ஜெமீலா மீரா சாஹிப் முதலியவர்களும் சிறுகதைகளை வெளியிட்டுள்ளனர். அத்தோடு தென் பிரதேசத்தை நோக்குகின்றபோது சில்மியா ஹாதி, பேருவளை ஜுனைத், திக்வல்லை ரகீமா, பண்டாரவளை நஸ்னியா புகாரிதீன், தியத்தலாவ ஜொஹரா ஹஸீன் முதலியவர்களும் வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மக்கினா ரஹீம், வாஹிதா ரஹ்மான், பெரோஸா யூசுப் முதலியவர்களும் ஈழத்து முஸ்லிம் பெண் சிறுகதையாசிரியர் வரிசையில் இடம் பிடிப்பவர்களாவர்.

இவ்வாறாக அன்று தொடங்கி இன்று வரை ஈழத்தில் அதிகமான முஸ்லிம் பெண்கள் சிறுகதைத் துறைக்கு தத்தமது பங்களிப்பினை நல்கி வருகின்றமை வியக்கத்தக்கதும் பாராட்டத்தக்கதுமாகும். இவர்கள் தவிர இன்னும் பலர் ஆங்காங்கே பத்திரிகைகளின் வாயிலாகவும், சஞ்சிகைகளின் வாயிலாகவும் சிறுகதைகளை எழுதி பிரசுரித்து வருகின்றமையும் சிறப்புக்குரியதாகும். இருந்தபோதிலும் அவை வாய்விட்டுச் சொல்லக்கூடிய அளவிற்கு தொகுதிகளாகப் பிரசுரிக்கப்படாமையும், பிரசித்தமாகாதவையாகவும் இருக்கின்றமை கவலைக்குரியதாகும். ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரிசையில் தங்களுடைய பெயர்களை முத்திரியிட்டுக் கொண்டவர்களும், முத்திரை பதிக்க விரும்புபவர்களும் காலப் பொருத்தத்தின் தேவைப்பாடுகளைத் தங்களுடைய கதைகளின் வாயிலாக வெளிக்காட்டுவதன் மூலமாக ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரிசையில் தங்களுக்கான இருப்பை நிலை நாட்ட முடியும் என்பது திண்ணம்.

**உசாத்துணைகள்**


- அந்தனி ஜீவா, (2002) **மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு**, கண்டி: மலையக வெளியீட்டகம்.
- குணராசா, (2001) **ஈழத்துச் சிறுகதை வரலாறு**, யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு.
- நயீமா சித்தீக், (2004) **வாழ்க்கையின் வண்ணங்கள்**, உடத்தலவின்ன: சிந்தனை வட்டம்.
- மரீனா இல்யாஸ், (1998) **தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ்ச் சிறுகதைகள் ஓர் ஆய்வு**, கல்ஹின்னை: தமிழ் மன்றம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தகுமாரசுவாமியும் கலைப்பணியும் ஒரு மெய்யியல் நோக்கு

**இ.நிரோகரன்,**
**உதவி விரிவுரையாளர்,**
**மெய்யியல் மற்றும் உளவியல் துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



## ஆனந்தகுமாரசுவாமி அறிமுகம்

ஆனந்தகுமாரசுவாமி இந்தியாவிலும் ஈழத்திலும் ஒரு தேசபக்தராகவும், இந்தியவியல் ஆராய்ச்சியாளராகவும், கலை வரலாற்றாளராகவும், சிறந்த படிப்பாளராகவும், கீழைத்தேச கலாரசனைகள், சிந்தனைகள், பாரம்பரியத்தின் செழுமையினை மேலைத்தேசத்திற்கு சரியான வகையில் அறிமுகப்படுத்திய முதல் கருத்தாளராகவும் அறியப்படுகிறார். முத்துக்குமாரசுவாமி-எலிசபெத் கிளே பீவி தம்பதியருக்கு 1877ம் ஆண்டு ஆகஸ்ட் 22ம் தேதி பிறந்தார். ஆனந்தா கெண்டி குமாரசுவாமி என்று அவருக்கு பெயரிடுகிறார்கள். கெண்டி என்பது அவர்களுடைய குடும்பப்பெயர் ஆகும். ஆனந்த குமாரசுவாமி இளம் வயதில் முருக மற்றும் சிவன் வழிபாட்டிலும் பகவத் கீதை, இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களின் மீதும் ஈடுபாடு கொண்டார்.

1889ம் காலப்பகுதியில் ஆனந்தகுமாரசுவாமி இந்தியாவைப் பற்றிய தேடல்களில் எப்போதும் ஈடுபட்டிருந்தார். கல்லூரியின் நூலகங்கள் மற்றும் இலண்டன் நகரத்தின் புகழ்வாய்ந்த நூலகங்களில் இவருடைய தேடல்கள் தீவிரமாக வளர்ந்தன. இலண்டன் பல்கலைக்கழகத்தில் புவியியல் பாடத்தில் அவர் டாக்டர் பட்டம் பெற்று பின்னர் டாக்டர் ஆனந்தகுமாரசுவாமியாக மீண்டும் இலங்கை திரும்பினார். ஆனந்தகுமாரசுவாமி இலங்கையில் ஏற்றிருந்த பொறுப்பு வாய்ந்த புவியியல் துறையின் மேலாளர் பதவி அவருடைய இந்தியப் பயணங்களுக்குப் பெரும் இடையூறாக இருந்திருக்கிறது. எனவே, அந்தப் பதவியைத் துறந்தார். தன்னுடைய ஆய்வுகளை மிகவும் சுதந்திரமாகத் தொடர்ந்தார்.

ஆனந்தகுமாரசுவாமியின் மொழிகள் மற்றும் கலைகள் பற்றிய தேடல்கள் அவருடைய குடும்ப வாழ்வினை வெகுவாகப் பாதித்தன. ஆய்வுகளிலேயே தன்னுடைய கவனத்தைத் தொடர்ந்த ஆனந்தகுமாரசுவாமி கலைவெறி கொண்டு இந்தியாவின் மூலை முடுக்கெங்கும் பயணித்தார். பயணங்களின் இடையில் சந்தித்த ரத்னா தேவி என்னும் இலங்கைப் பெண்ணை மீண்டும் மணந்தார்.

ஆனந்தகுமாராசுவாமியின் முழு வாழ்வும் அருங்கலைகளின் மீதான ஆய்வுகளுக்காகச் சமர்ப்பணம் செய்யப்பட்ட ஒன்று. அவருடைய இறுதிக்காலங்களிலும் கூட அவர் கலைகளைப் பற்றிய தீவிரப் பார்வைகள் கொண்டே இயங்கி வந்திருக்கிறார். அமெரிக்காவில் வாழ்ந்திருந்தாலும் அவருடைய உயிர் இந்தியாவில்தான் அலைந்து கொண்டு இருந்தது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வார்கள். அவருடைய மனவெளி எங்கும் இந்தியா, அதன் ஓவியங்கள், நாட்டியம், நாடகம், இசை, சிற்பங்கள், இலக்கியம், மற்றும் பண்பாடு என்று ஒவ்வொரு நாடித்துடிப்பிலும் ஒலித்துக் கொண்டு இருந்தது. இவர் கலைத்துறைக்கு ஆற்றிய அரும்பெரும் சேவைகளால் **கலாயோகி** என சிறப்பிக்கப்படுகின்றார். இவர் கலைப்பணி மட்டுமல்லாது சமய, சமூக பணிகளையும் ஆற்றிய உலகப் புகழ் பெற்ற அறிஞர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய சிறப்புக்குரிய ஆனந்தகுமாரசுவாமி தன்னுடைய 80வது வயதில் 8 செப்டம்பர் 1947 அன்று இந்த உலகை விட்டு நீங்கினார்.

**கலைப்பணி**

ஆனந்தகுமாரசுவாமி கலை என்பது "நடைமுறை சார்ந்தது என்றும் எல்லாக் கலைகளும் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன என்றும், ஒருவரின் உள்ளுணர்வின் வெளிப்பாடு கலை" என்றும் கூறுகின்றார். அந்தவகையில், ஆனந்தகுமாரசுவாமி இலங்கையில் கலைபொருள் ஆராய்ச்சியின் பொருட்டு பல்வேறு பிரதேசங்களிற்குப் பிரயாணம் மேற்கொண்டிருந்தபோது பாழடைந்துவரும் விகாரைகளையும், தேவாலயங்களையும் கண்டார். அக்கட்டடங்களில் இருந்த விலை மதிக்க முடியாத சிற்பங்களும் ஓவியங்களும் செங்கற், மரம் என்பவற்றால் உருவாக்கப்பட்டிருப்பதால் அழிவடைகின்றன. இவற்றைக் காலம் தாழ்த்தாது பாதுகாக்க வேண்டுமென அவற்றோடு தொடர்புடைய பிரமுகர்களுக்கு பகிரங்கக் கடிதங்களை அனுப்பினார். மேலும் பழைய கலைச்சின்னங்களை புனருத்தாரணம் செய்வதிலும் பார்க்க இவற்றைப் பழுதடையமால் பாதுகாப்பது விரும்பத்தக்கது. 'புனருத்தாரணம்' எனும் பெயரில் அநேக கலைச்சின்னங்களின் தனிச்சிறப்பிற்கு பங்கம் ஏற்பட்டுள்ளதைக் கண்டு அவ்வாறல்லாது திறமையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

கலைகளுடன் ஆனந்தகுமாரசாமிக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு சிற்பங்களுடன் நிகழ்ந்திருக்கிறது. **கலைத் தத்துவம், பண்பாடு, தனிமனிதனின் கலைத்திறன், பண்பாட்டுச் சரித்திரம், ஒரு இனத்தின் சரித்திரம், மதம், உலகளாவிய தத்துவப்பார்வை, சமூக ஆளுமை** போன்ற எத்தனையோ உலகங்களை தன்னுள் அடக்கியது சிற்பக்கலை. இந்த சிற்பக்கலையின் அண்மை ஆனந்தகுமாரசாமிக்குள் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. இது அவருடைய வாழ்க்கைப் பாதையை முற்றிலுமாக மாற்றியது என்றும் சொல்லலாம். அந்த பிரம்மாண்டமான கலை வடிவங்களின் பிரம்மாண்டத்தைப் பற்றி, ஆளுகையைப் பற்றி உலகத்துக்கு சொல்ல வேண்டும் என்கிற வேட்கையை உருவாக்கிக் கொண்டார் அவர். தன்னுடைய மனைவியின் உதவியுடன் சுமார் நான்கைந்து வருடங்கள் அவர் இலங்கையின் புராதனக் கலைகளைப் பற்றிய ஒரு திட்டவட்டமான ஒரு முறையான ஆய்வினை மேற்கொண்டார். அதன் பயனாக அவருடைய **Medieval Sinhalese Art (மத்திய கால சிங்களக் கலை)** என்னும் அற்புதமான நூல் பதிக்கப்பட்டது. கீழைநாடுகளை எந்த நாகரிகமும் இல்லாத, கலாசார மேம்பாடோ, கலையழகோ கொண்டிராத காட்டுமிராண்டிப் பகுதிகளாக எண்ணிக் கொண்டிருந்த மேலை நாட்டினரின் தவறான பார்வையை விலக்கி கீழை நாடுகளின் அற்புதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம், கலை பற்றிய சரியான புரிதலை மேற்கத்திய நாடுகளுக்கு இந்த நூல் மூலமாக வெளிப்படுத்தினார்.

இலங்கையின் கலாசாரம், கலைகள் பற்றிய அவருடைய ஆய்வுநூலைத் தொடர்ந்து இந்தியக் கலைகளின் மீதும் தன்னுடைய ஆய்வுப் பணிகளைத் தொடங்கினார். இவரே இந்தியக் கலைப்படைப்புக்களின் தத்துவார்த்த அடிப்படைகளைப் பற்றியும் அவை நம்முள் விரிக்கும் மெய்ஞான தரிசன உலகம் பற்றியும் முதன் முதலாகப் பேசியவராவார். இந்திய சுவர்ச்சித்திரங்களைப் பற்றி, இந்திய சிற்றோவியங்களைப் பற்றி ஏதும் அதிகம் பேசப்படும் அளவுக்குத் தெரியாத காலத்தில் இவர் அதிகம் பேசினார். சொல்லப்போனால் கீழ்த்தேய இந்திய ஓவியங்களுக்கும் கலைப்படைப்புக்களுக்கும் அவை மிகவும் மேன்மையான கலைப்படைப்புக்கள் என்ற அங்கீகாரத்தினை உலக அளவில் பெற்றுத்தந்தவர் ஆனந்தகுமாரசுவாமி.

ரிகேசத்திலும் ஹரித்வாரிலும் அலைந்தார். ராஜஸ்தான் நாட்டுப்புறக்கலைஞர்களைத் தேடிப்பயணித்தார். வங்க ஓவியர்கள் பலரைச் சந்தித்தார். பல விரிவான ஆய்வுக்கட்டுரைகளை எழுதிய வண்ணம் சென்றது அவருடைய வாழ்வு. கலை ஆய்வுகளுக்காக ஆனந்தகுமாரசுவாமி கற்ற மொழிகள் பலவாகும். **பிரெஞ்சு, ஜெர்மன், இலத்தீன், கிரீக், சம்ஸ்கிருதம், பிராகிருதம், பாலி மற்றும் ஹிந்தி** போன்ற மொழிகளை அவர் வலிந்து கற்றிருக்கிறார். ஏற்கனவே அவருக்குத் தெரிந்திருந்த மொழிகள் **ஸ்பானி, டட்ச், பெர்சியன், மற்றும் சிங்களம்** போன்ற மொழிகளாகும். இந்த மொழிகளில் பெரும் பாண்டித்தியமும் பெற்றிருந்தார்.

1910 இல் நிகழ்ந்த ஒரு நிகழ்வு அவரை மிகவும் மனப்பாதிப்புக்கு உள்ளாக்கியது. சர்.ஜார்ஜ் பர்ட்வுட் என்னும் கலை விமர்சகர் மேலை மற்றும் கீழை நாடுகளின் கலைகளைப் பற்றிய ஒரு சொற்பொழிவு ஆற்றினார். "கீழை நாடுகளின் கலைஞர்கள் ஓவியங்கள் மற்றும் சிற்பங்களைப் படைத்தார்கள். ஆனால், அழகியல் பற்றி ஒன்றும் தெரியாமல் அவர்கள் அவைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்துக்கு ஒரு புத்தரின் சிலையை எடுத்துக்கொண்டால் அது வெறும் மரத்தூளினால் உருட்டிப்போடப்பட்ட பட்டாணி உருண்டைகளாகத்தான் எனக்குக் காட்சியளிக்கின்றன" என்று 'பர்ட்வுட' அலட்சியமாகவும் கேவலமாகவும் இந்திய சிற்பக் கலையைப் பற்றிக் குறிப்பிட்டார். இது ஆனந்தகுமாரசுவாமியை வேதனையும் கொதிப்பும் அடைய வைத்தது. பர்ட்வுட் போன்ற விமர்சகர்கள் கீழை நாடுகளின் கலைகளின் மேன்மைகளைப் பற்றி ஏதும் அறியாதவர்கள் என்றும் தங்களுடைய நாட்டில் உலவும் கலை குறித்த பார்வைகள் சார்ந்தே அவர்கள் இயங்குகிறார்கள் என்றும் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்தார். இந்த மேற்கத்திய கலை விமர்சகர்களுக்கு இந்தியக் கலைகளின் மேன்மையைப் பற்றித் தெளிவாகச் சொல்லியாக வேண்டும் என்று தீர்மானித்தார்.

பர்ட்வுட்டின் அலட்சியமான பார்வைக்கு பதில்தரும் வண்ணம் 'Origin of the Buddha Image' என்னும் நூலை உடனடியாக எழுதி வெளியிட்டார். இது உலகின் அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது. இதைத் தொடர்ந்து தன்னுடைய எழுத்துப் பணியை மிகவும் தீவிரமாகத் தொடர்ந்தார். இந்தியக் கலைகளின் மீது தொடர்ச்சியாகப் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி உலகினரின் கவனத்தை இந்தியக் கலைகளின் மீது பதிய வைத்தார். அவருடைய 'Art and Swadeshi' என்னும் நூல் பலராலும் பாராட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'The Arts and Crafts of India and Ceylone' என்னும் 250 பக்கங்கள் கொண்ட நூலை தானே விளக்க ஓவியங்கள் வரைந்து வெளியிட்டார். அந்த நூல் இந்திய சிற்பக் கலைகள், சிற்றோவியங்கள், கைவினைக் கலைப்பொருட்கள் பற்றி விரிவாகப் பேசுகிறது.

1917ம் வருடம் ஆனந்தகுமாரசுவாமியின் வாழ்வில் மிகவும் முக்கியமான காலகட்டமாக அமைந்தது. அவர் பாஸ்டன் நுண்கலை அருங்காட்சியகத்தில் இந்திய, பாரசீக மற்றும் இஸ்லாமியக் கலைகளின் மீதான ஆய்வு இயக்குனராக நியமிக்கப்பட்டார். அங்குதான் சகோதரி நிவேதிதா அம்மையாரை சந்தித்தார். மார்கரெட் ஈ நோபிள் என்னும் ஐரி பெண்மணியான அவர் சுவாமி விவேகானந்தரின் சியையாக சகோதரி நிவேதிதாவாக பெயரும் மதமும் மாறினார். சகோதரி நிவேதிதாவுடன் இணைந்து ஆனந்தகுமாரசுவாமி Myths of the Hindus and Buddhists என்னும் நூலை வெளியிட்டார்.

இந்த காலகட்டத்தில்தான் அவருடைய 'The Dance of Shiva', 'Transformation of Nature in art', 'Christian and oriental Philosophy of Art', 'History of Indian and Indonesian Art', 'Buddha and the Gospel of Buddhism' என்பன போன்ற இன்று வரை பேசப்படும் நூல்களை வெளியிட்டார். தி டான்ஸ் ஆ்.ப் சிவாவின் தமிழ் மொழிபெயர்ப்பும் புத்தரைப் பற்றிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பும் மிக சமீபத்தில் மறுபதிப்புக்களாக வெளிவந்துள்ளன.

அவர் ஒரு சிறந்த புகைப்படக் கலைஞரும் கூட. அவரிடம் சலனப்பட புகைப்படக்கருவியும் இருந்தது. அந்தக் காலத்திலேயே பல குறும்படங்கள் எடுத்திருக்கிறார். அவருடைய ஒரு படத்தில் ஜப்பானிய கெயாப் பெண்கள் தங்கள் நடனங்களின் முத்திரைச் சிறப்புக்களை அவற்றின் நுட்பங்களை அவருக்கு விளக்குகிறார்கள். அவர் காலத்திலிருந்த தேவதாசிகள் சதிர் ஆடுகிறார்கள். அக்காலத்திய நாட்டிய பாணிகள் படம் பிடிக்கப்பட்டுள்ளன. இந்த சலனப்பட நறுக்குகள் சித்தானந்த தாஸ்குப்தாவின் **"சிவனின் நடனம்"** படத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக வெங்கட்சாமிநாதன் குறிப்பிடுகிறார். ஸ்பெயினில் நடக்கும் காளைச் சண்டையைப் பற்றியும் ஒரு திரைப்படம் எடுத்திருக்கிறார். மேலை நாடுகள் மற்றும் கீழை நாடுகளின் பல்வகை நாட்டிய பாணிகளை அறிந்தவர் அவர். அதில் ஆழ்ந்த ஞானம் அவருக்கு இருந்திருக்கிறது. நாட்டிய முத்திரைகளைப் பற்றி அவர் தனியே ஒரு நூல் எழுதியிருக்கிறார். (மிரர் ஆ்.ப் கெஸ்சர்ஸ்) நாட்டியக் கலைஞர் உதயங்கர் "தனக்கு முதன்முதலாக நாட்டியத்தைப் பற்றிய ஒரு சரியான பரிச்சயத்தை ஏற்படுத்தியது ஆனந்தகுமாரசாமியின் இந்த நூல்தான்" என்று குறிப்பிட்டு இருக்கிறார். தத்துவ மரபுகள், நுண்கலைகள், கிராமிய ஆதிகுடிகளின் கலைகள் உட்பட அனைத்து வகைக் கலைகளின் மீதும் ஆழ்ந்த ஞானம் கொண்டு இயங்கியவர் இவர் எனலாம்.

சமீப காலத்தில் மேற்குலகில் அபிமானம் பெறத் தொடங்கிவிட்ட **"கலை கலைக்காகவே"** என்ற கொள்கையை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. "கலைஞன் கருதாவிட்டாலும் கூட ஒரு கலைப்படைப்பு சிருஷ்டியாளனின் அடிப்படை நம்பிக்கைகள் அல்லது கொள்கைகளையும், அவன் பலத்தையும் பிரதிபலிக்கவே செய்யும்" என்ற கருத்தில் இவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். கலையைப் பற்றிய அவரது விளக்கம் ஓவியம், சிற்பம், கட்டட ஆக்கம் இவற்றையும் தாண்டி மிகச் சாமானிய ஒரு வேலை முதல் தெய்வீகப் பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை அனைத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. நுண்கலை, பிரயோகக்கலை என்ற வேறுபாட்டைக்கூட கலாயோகி ஏற்றுக்கொள்ளவில்லை. கலையையும் கலையின் அர்த்தத்தையும் பற்றிய தன் அடிப்படைக் கொள்கைகளை நிருபிப்பதற்கு தெற்காசிய கலாசாரத்தைவிடச் சிறந்தது எதுவுமில்லை என்ற அர்த்தத்தை உணர்ந்துகொண்டவர் ஆனந்தகுமாரசுவாமி. ஆயிரக்கணக்கான வருடகாலம் மரபு தவறாமல் தொடர்ந்து வந்த ஆதாரம் கொண்ட அந்தச் செழுமையான கலைத்துவப் பாரம்பரியம் கருத்துத் தொடர்வுறுத்தலுக்குரிய ஒரு சாதனமாகக் கலையைக் கொண்டிருந்தது என்பது இதன் சிறப்பிலக்கணமாகும். இவ்வகையில் அழியாக் கலைகளின் உட்கிடையான கருத்துக்களைக் கூர்ந்தறிந்து வெளிப்படுத்தியமை இவரது முக்கியமான பங்களிப்பாகும்.

"மேனாட்டுச் சிற்பங்களைப்போல் இந்தியச் சிற்பங்கள் உடலுறுப்பு சாஸ்திர அமைப்புக்களுக்கேற்ப அங்க அமைப்புக்களையும், உறுதியான நரம்புகளையும், மனித அழகையும், முகபாவத்தையும் கொண்டிருக்காது சாதாரண பொம்மைகளாகவே இருக்கின்றன" எனக் கருதி வந்தவர்கள் மேற்குநாட்டினர். மேலைத்தேய கலைப்படைப்புக்கள் மனிதனின் சாதாரண உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய முப்பரிமாணமுள்ள தன்மை நவிற்சிப் படைப்புக்களே. அவற்றின் உயிர்த்துடிப்பையோ, உள்ளத்தின் உணர்ச்சிகளைக் காட்டும் முகபாவங்களையோ காணமுடிவதில்லை. ஆனால் கீழைத்தேயக் கலைகள் குறியீட்டு நோக்கமும், அரூபத்தன்மையும், அலங்காரச் சிறப்பும், ஆத்ம உணர்ச்சி வெளிப்பாடும் கொண்ட இலட்சியக் கலைப்படைப்புக்கள். இவைகளிற் காணப்படும் அங்க அமைப்பும், சாயலும், கால்களின் நிலையும், கைகளின் முத்திரைகளும், ஆடையணிகலன்களும், ஆயுதங்களும் பிறவும் மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்ட அரும்பெரும் தத்துவங்களை விளக்குவன. இந்தவகையில்தான் "இந்தியக் கலையானது இலட்சியமயமுடையதும், மறைஞானத்தன்மை உடையதும், குறியீட்டுத்தன்மை உடையதும், பரஞானத்துவம் உடையதுமாகும்" என ஆனந்தகுமாரசுவாமி தனது 'Indian Sculpture and Painting' எனும் நூலில் கூறுகின்றார்.

இடைக்காலத்தில் கலாயோகி அவர்கள் **"கலையிற் இயற்கையின் திரிபு"** (1934) போன்ற பல்வேறு வெளியீடுகளிலே ஆசிய மேற்குலக சமூகங்கள் பற்றிய பல அம்சங்களை ஒப்பிட்டும் வேற்று நோக்கியும் ஆராய்ந்து இரு பண்பாடுகளிலும் பெண்களுக்குரிய அந்தஸ்த்து தொடக்கம் கலாதத்துவங்கள், அழகியல் விளக்கங்கள் வரையான அம்சங்களை மதிப்பீடு செய்கின்றார். "கிரேக்க தெய்வங்களின் உருவங்கள் சிறந்த இலட்சணங்கள், பொருந்திய மனித உருவத்தைப் போல செய்யப்பட்டவை. அவ்வுருவங்களின் தசை, நரம்பு, விலா முதலிய உறுப்புக்கள் பார்ப்பவர் மனதைக் கவரத்தக்க முறையில் அமைக்கப்பெற்றவை. இந்திய உருவங்கள் அப்படி அமைக்கப்படவில்லை. கை கால்களின் நரம்புகள், பொருத்துக்கள் தோன்றப்பெறாமல் அமைக்கப்பட்டவை. இந்திய உருவங்கள் சடத்தன்மையை உணர்த்தாமல் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவன" என்பன போன்ற கருத்துக்களை ஆனந்தகுமாரசுவாமி தனது ஒப்பியல் ஆய்வின் மூலம் வெளிக்கொணர்ந்தார்.

இந்தியப் பாட்டினதும், இசைக்கருவியின் தனி இசையினதும் தனித்துவமான அம்சம் அதன் விஸ்தாரமான ராக அழகுதான். பல சுரங்கள் ஒரே நேரத்தில் கேட்கும் தன்மையதே ஐரோப்பிய இசை இங்கு ராக அழகு உருவகக் காரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதிலும் பார்க்க கருத்தோடு சேர்க்கப்பட்ட தேவையற்ற விஸ்தாரமாகத் தோன்றுகின்றது. ஆனால் இந்தியாவில் சுரமும், நுண்தொனி அழகும் ஒரு நெருங்கிய இணைப்பை உண்டாக்குகின்றது. ஏனெனில் ஒத்திசையில் வேறுபட்ட நிலையிலுள்ள இணையொலிகள் ஏற்படும் ஓசைபோல் இந்திய இசையில் ராக அழகு இத்தொழிலைச் செய்கின்றது. பக்க இசை முக்கியமாக இருக்கவேண்டிய ஐரோப்பியக் கலை சங்கீதத்தில் அது இல்லாதபோது எவ்வாறு மொட்டையாகக் கேட்குமோ அதுபோன்றதே ராக அழகு இல்லாத இசை இந்திய செவிகளுக்குப்படும். இதுபோன்ற தனிப்பட்ட தன்மையதே இடைவிடாது ஒரு சுரத்திலிருந்து ஒரு சுரத்திற்குச் செல்லும் ஒலியாகும். இந்தியாவில் பாடப்பட்ட அல்லது வாசிக்கப்பட்ட கருத்திலும் பார்க்க சுரங்களின் இடைவெளியினாலே ஒலியின் தொடர்ச்சியை அறிகின்றோம். இதற்கு நேர்மாறாக, ஐரோப்பிய இசையின் செங்குத்தாகப் பிரிக்கப்பட்ட ஒத்திசைத் தன்மையின் பாட்டும், குரலோடு கேட்கும் திருகாணிக் கருவிகளது தன்மையதின் ஒலியும் பழக்கப்படாத இந்திய செவிகளுக்குக் **"குழிகள் நிறைந்ததாக தென்படும்"** எனக் கூறுகின்றார். இதன் மூலம் ஆனந்தகுமாரசுவாமி நுணுக்கமான முறையில் இந்திய இசையில் ஐரோப்பிய இசையை ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

ஆனந்தகுமாரசுவாமியின் தளராத ஆராய்ச்சியின் மூலம் இராஜபுத்தான் ஓவிய மரபுகளின் தனித்துவமான இரு வேறு தன்மைகளை, இருவித ஓவியங்களை மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்து இனங்கண்டு அவற்றைப் வெளிப்படுத்த முடிந்தது. கலைவரலாற்றில் அவரது 'ராஜபுத்தான் ஓவியங்கள்' பற்றிய ஆய்வு அவரது உயர்ந்த சாதனையை எடுத்துக்காட்டுகின்றது. அவருடைய கலை பற்றிய ஆய்வும், ஆர்வமும் நிதானமிக்க தத்துவப் பார்வையாக பரிணமித்தது.

இவரது இறுதிக்கால எழுத்துக்கள் தத்தவ சிந்தனை செறிந்தன. இந்தவகையில் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்களது **கலைத்துறை - ஒப்பியல்** ஆய்வு அவரை ஒரு தத்துவஞானியாகவும் பரிணமிக்கச் செய்தது. அத்துடன் கலைத்துறையில் அவரது காத்திரமான பங்களிப்பிற்கு இவ்வொப்பியல் ஆய்வு வித்திட்டது எனலாம். மேனாட்டுக் கலை விமர்சகர் முல்க்ராஜ் போன்றவர்கள் கலைத்துறையில் கிழக்கையும் மேற்கையும் ஒப்பியல் ரீதியான ஆய்வினை மெற்கொள்ள கலாயோகியே வித்திட்டவர் ஆவார்.

தொடக்கத்திலிருந்தே மேலை நாடுகள் கீழைத்தேசங்கள் மீது செலுத்திய செல்வாக்கை கண்டனம் செய்தவர்களில் முன்னோடியாக விளங்குகிறார் ஆனந்தகுமாரசுவாமி. இந்தியக் கலைகளின் மீதான வெளிச்சத்தை மேலை நாடுகளுக்குப் பாய்ச்சிய இவர் தன்னை ஒரு தமிழனாக அடையாளம் காண்பதில் மிகவும் பெருமை அடைந்திருக்கிறார். அமெரிக்காவில் வாழ்ந்து ஆங்கிலத்திலேயே எழுதி வந்திருந்தாலும் தாய்மொழிக் கல்வி பற்றிய அவருடைய கருத்துக்கள் மிகவும் ஆச்சரியம் அளிப்பதாக இருக்கின்றன. உலகின் பாரம்பரியத்தில் தன்னுடைய பாரம்பரியத்தினையும் தன்னுடைய பாரம்பரியத்தில் உலகப் பாரம்பரியத்தையும் கண்டு நம் கற்பனைகளுக்கும் எட்டாத விரிவினையும் ஆழத்தையும் கொண்டு இயங்கிய உலகத்தமிழன் என்று ஆனந்தகுமாரசுவாமி குறித்து ஒவ்வொரு தமிழனும் பெருமைப் பட்டுக்கொள்ளலாம்.

**உசாத்துணைகள்**


- ஞானகுமாரன்,நா., (2003), **"மெய்யியல்"**, செல்வம் வெளியீடு, பருத்தித்துறை யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாராயணன்,க., (1985), **"மேலைநாட்டு மெய்ப்பொருள்"** , (சோக்ரட்டிஸ் முதல் தக்காலம் வரை), தமிழ் புத்தகாலயம், சென்னை.
- சுபாசினி,S., கமிலஸ்,B., (2002), **"தர்சனம்",** மெய்யியற் கழகம், மெய்யியற்துறை, யாழ் பல்கலைக்கழகம்.
- http://faculty.vassar.edu/giborrad/gerardod2/files/classes/syllabi/PhilArtAesthetics.pdf
- http://ciml.250x.com/archive/marx_engels/on_me/mikhail-lifshitz-the-philosophy-of-art-of-karl-marx.pdf.


# பிரிவு

மொழி மறந்ததோ – பறவைகள்
வழி தொலைத்ததோ
நிஜம் கலைந்ததோ – நினைவுகள்
உயிர் இழந்ததோ
சிரிப்பிறந்ததோ – உதடுகள்
உயிர்ப்பறுந்ததோ
வனப்பழிந்ததோ – மலர்கள்
மணம் முடிந்ததோ
வரி சிதைந்ததோ — கவிதை
கரு கரைந்ததோ
நிறம் குறைந்ததோ — ஓவியம்
நீர் நனைந்ததோ
எங்கு தோன்றினோம் – பிரிந்திட
இங்கு கூடினோம்
வண்ணம் மாறினும் – மண்ணில்
வாழ்ந்து போகிறோம்
பிரியுமாயினும் உறவுகள்
இன்றும் சேர்க்கிறோம்
பிரியும் நாளிலே வலியுடன்
கடந்து போகிறோம்...


**ச.பிரியந்தினி,**
**முதலாம் வருடம்,**
**விவசாய பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜதந்திரம் பற்றிய கண்ணோட்டம்

லிண்டா பிரசானி எழிலரசு,
உதவி விரிவுரையாளர்,
அரசறிவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



## 1. இராஜதந்திரத்திற்கான வரைவிலக்கணம்

இராஜதந்திரம் என்பது வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு பகுதியாகவும் சர்வதேச அரசியலில் இடம்பெறுகின்ற முக்கிய நடவடிக்கையாகவும் காணப்படுகின்றது.

### 1.1 இராஜதந்திரம் பற்றிய அறிஞர்களின் கூற்றுக்கள்

Harold Nicolson என்பவரின் கூற்றின் படி "பேச்சுவார்த்தை என்ற வழிமுறையைப் பயன்படுத்தி சர்வதேச உறவுகளை முகாமைப்படுத்தல் அதாவது சர்வதேச உறவுகளைத் தூதுவர்கள் மூலம் ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைப்படுத்தும் ஒருமுறையே இராஜதந்திரமாகும்."

Quincy Wrights என்பவரின் கூற்றின் படி இராஜதந்திரமானது இரண்டு மட்டங்களில் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

1. நுட்பங்கள் திறன் போன்றவற்றையுடைய பேச்சுவார்த்தை
2. பேச்சுவார்த்தைக் கலை. இது உயர்ந்தளவிலான நோக்கங்களை குறைந்தளவிலான செலவுகளுடன் அடைந்துகொள்கிறது.

Sir Ernest Satow: உளவுத்துறை மற்றும் உத்யோகபூர்வ உறவுகளை சுதந்திர அரசுகளின் அரசாங்களுக்கிடையில் பிரயோகிக்கும் செயற்பாடே இராஜதந்திரம் ஆகும்.

இவ்வரைவிலக்கணங்களின் படி இராஜதந்திரமானது சர்வதேச அரசியலில் தனது நலன்களை அரசுகள் பாதுகாக்க மேம்படுத்தல், விரிவுபடுத்தல் போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகக் கண்டு கொள்ளப்படுகின்றது. வெளிநாட்டுகொள்கைகளுக்கு ஒத்த பணியை இராஜதந்திரம் மேற்கொள்கிறது. அரசுகளுக்கிடையிலான உறவுகளை வழிநடத்துவதற்கான நுட்பங்களையும் வழிமுறைகளையும் இராஜதந்திரம் மேற்கொள்கிறது. இராஜதந்திரமானது வெளிநாட்டு அலுவலகம் போன்ற வலைப்பின்னல் ஊடாகச் செயற்படுகின்றது. இராஜதந்திரம் தோன்றிய சந்தர்ப்பத்தில் யுத்தம் மற்றும் பாரிய முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவை. இராஜதந்திரத்தினூடாக இது நடத்தப்படுகின்றது. இராஜதந்திரியே குறித்த அரசாங்கத்தின் கண்ணாகவும், காதாகவும் ஏனைய நாடுகளில் செயற்படுவார்.

### 1.2 இராஜதந்திரத்தின் பிரதான பகுதிகள்

**பேச்சுவார்த்தை** :- இரண்டு அரசுகளுக்கிடையில் நேருக்குநேர் அல்லது மூன்றாம் தரப்பு பங்களிப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமிஞ்ஞை காட்டல்**

இவ்வழிமுறையானது ஓர் அரசுக்கு ஏனைய அரசானது எதிர்காலத்தில் எவ்வகையான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டுமென்பதை எச்சரிக்கையுடன் வழங்குகிறது. அரச தலைவர்களினால் எச்சரிக்கை அறிக்கைகளை வெளியிடல், தனது படைப்பிரிவினை உஷார் நிலையில் வைத்திருத்தல். பொருளாதார மற்றும் வர்த்தகத் தடைகளை விதித்தல்.

**பிரபல இராஜதந்திரம்**

இவ்வழிமுறையானது ஓர் அரசினால் ஏனைய அரசின் மீது தேசிய மற்றும் சர்வதேச பொதுநல அபிப்பிராயத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் ஆகும். இதில் இராஜதந்திரிகள் என்பவர்களே முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் அரசின் தலைவர்களின் பிரதிநிதிகளாகக் கண்டுகொள்ளப்படுவதுடன் உயர்ந்தளவிலான வரப்பிரசாதங்களை அனுபவிக்கின்றனர்.

**இராஜதந்திரத்தின் தன்மை**

இராஜதந்திரத்தின் பின்னணியில் அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ அழுத்தங்கள் காணப்படுவதுடன் இவை இராஜதந்திரத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றன. இச்செயன்முறையில் ஆதரவு, கேள்வி மற்றும் கருத்துக்கள் பரிமாற்றப்படுவதைக் காணலாம். இராஜதந்திரத்தின் அடிப்படையிலான எந்நேரமும் சமாதான முறையிலான பேச்சுவார்த்தையே கண்டுகொள்ளப்படுகின்றது. அத்துடன் வரையறுக்கப்பட்ட பலப்பிரயோகமும் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வகையில் பின்வரும் பண்புகள் இராஜதந்திரம் தொடர்பில் அடையாளப்படுத்தப்படுகின்றது.

1. இராஜதந்திரமானது ஒழுக்கம் மற்றும் ஒழுக்கமற்ற தன்மையையுடைய ஒரு இயந்திரமாகக் கண்டுகொள்ளப்படுகிறது.
2. இராஜதந்திரமானது வெளிநாட்டு அலுவலகங்கள், தூதுவராலயங்கள் ஊடாக செயற்படுகின்றது. மேலும் அது அதன் தன்மையின் பல்வகைமையானது. நடைமுறையில் இதன் பல்வகைமை செயற்பாடு அதிகரித்துக் காணப்படுகிறது. சர்வதேச நிறுவனங்கள், பிராந்திய ஒழுங்கமைப்புக்கள், கூட்டுப் பாதுகாப்புச் செயன்முறைகள் போன்றன இராஜதந்திரத்தின் பல்வகைமை செயற்பாடுகளாகும்.
3. இராஜதந்திரமானது பல்வகைப்பட்ட நலன்களின் கூட்டாகும்.

## 1.3 புதிய இராஜதந்திர முறையின் பிரதான பண்புகள்

### 1. புவியியல் பிரதேசம் பரவலுருதல்

20ஆம் நூற்றாண்டில் எண்ணிறைந்த நாடுகளின் தோற்றம் காரணமாக புவியியல் பிரதேசங்கள் பரவலடைந்து இருப்பதுடன் அதற்கேற்ப இராஜதந்திர கொள்கைகளும் தொடர்புகளும் அபிவிருத்தியடைந்துள்ளன. 1899 ஆம் ஆண்டு, 1907 ஆம் ஆண்டு நடைபெற்ற டேக் மாநாடுகளில் பங்குபற்றிய அரசுகளின் எண்ணிக்கை 44 ஆகும். UNO உருவாக்கத்தில் பங்குபற்றிய நாடுகள் 50 ஆகும். இன்று அதன் தொகை 193 வரை வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கேற்ப இராஜதந்திர சேவைகள் மற்றும் புவியியல் பரவலும் அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. இராஜதந்திரத்தின் பன்முக செயற்பாடு**

அரசுகள் மட்டுமன்றி சர்வதேச நிறுவனங்களும் தோன்றியிருப்பதால் இராஜதந்திர சேவை அரச பரப்பை தாண்டி வளர்ச்சியடைந்துள்ளது. சர்வதேச சங்கம் நிறுவப்பட்டதன் பின்னர் பன்முகச்செயற்பாட்டு இராஜதந்திர முறை ஆரம்பிக்கப்பட்டது. இன்று சர்வதேச மட்டத்தில் மட்டுமன்றி பிராந்திய மட்டத்திலும் நூற்றுக்கணக்கான சர்வதேச நிறுவனத்தின் செயற்பாட்டைக் காணலாம்.

**3. இராஜதந்திர ஜனநாயகமயமாதல்**

தற்கால இராஜதந்திர சேவைகளில் தென்படும் ஒர் பண்பு இச்சேவையில் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்திய உயர்குழாம் வகுப்பினரின் தலைமைத்துவம் வீழ்ச்சி அடைந்து சமூகத்தின் பல மட்டங்களிலும் ஆட்கள் நுழையத் தொடங்கின. அச்சேவை முழு சமூகத்திற்கும் திறந்து விடப்பட்டது. இச்சேவை முழுமையாக வெளிநாட்டு ஒரு மக்கள் தளத்தை வழங்கியதுடன் அவர்கள் தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் எனக் கருதப்பட்டனர். இவற்றின் காரணமாக இராஜதந்திர சேவை ஜனநாயகமயமாகியது. தற்கால வெளிநாட்டு வேலையோடு தொடர்பான பிறிதொரு ஜனநாயகப் பண்பு வெளிநாட்டு வகுப்பில் ஈடுபடும் அரசாங்கங்கள் தலைவர்கள் போன்றவர்களின் தனியுரிமையிலிருந்து விடுபட்டு சட்டத்துறையும், சிவில் சமூகமும் மக்களும் பங்குபற்றும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**4. பாராளுமன்ற இராஜதந்திர முறையின் அபிவிருத்தி**

சர்வதேச நிறுவனங்கள் ஊடாக சர்வதேசப் பிணக்குகளைத் தீர்க்கும் முறையே பாராளுமன்ற இராஜதந்திர முறை எனப்படும். இதற்குச் சிறந்த உதாரணமாக UNO குறிப்பிடலாம். இங்கு சகல உறுப்பு நாடுகளும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி ஒவ்வொரு வாக்குரிமையைப் பெற்றுள்ளன. சர்வதேச பிரச்சினை பற்றி வாதப்பிரதிவாதங்கள் நடத்தி பெரும்பான்மை வாக்கு மூலம் தீர்மானம் மேற்கொள்ளப்படுவதால் பாராளுமன்ற இராஜதந்திரம் என அழைக்கப்படுகின்றது.

**5. திறந்த இராஜதந்திரம்**

இராஜதந்திரம் ஜனநாயகமயமானதன் விளைவாக திறந்த இராஜதந்திர முறை உருவாகியது. இதன் பொருள் நேரடியான பேச்சு வார்த்தை மூலம் நேரடியான உடன்படிக்கைகளுக்கு வருவதாகும். ஜனாதிபதி வூட்றோவில்சனின் 14 அம்சங்களிலும் இடம்பெற்ற ஒரு அம்சம் திறந்த இராஜதந்திர முறையின் மூலம் வெளிப்படையான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். இதன் ஒரு பண்பு ஜனநாயகத்திற்கு அதிகம் பொருத்துவாகும் என்ற சில இராஜதந்திரிகள் இரகசிய இராஜதந்திரத்தையே பெரிதும் விரும்புகின்றனர். ஏனெனில் தனது உபாயங்களை எதிர் தரப்பினர் முன்னரே அறிந்துகொண்டால் பேரம் பேசும் சக்தி குறைந்துவிடுவதால் ஆகும். மேலும் இராஜதந்திரிகள் கூடுதலாக மக்களின் அவதானிப்புக்கு உட்படுவதாலாகும். இதனால் அத்தியாவசியமாக செய்ய வேண்டிய விடயமொன்றைப் பொது மக்களினால் கைவிட வேண்டிய நிலை உண்டாகும். இரகசிய இராஜதந்திரத்தினில் இவ்வாறான நிலையை எதிர்நோக்க வேண்டியதில்லை.

உதாரணம்: 1962 கியூபா மினஷல் நெருக்கடி முடிவுக்கு கியூபாப் பிரதேசங்களில் ரஷ்யா தனது மினஷல்களைத் தரித்து வைக்கும் திட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிட்டது. 'தூதுவர்கள் இவ்வாறு மினசல்களை தரித்து வைத்திருப்பின் தாக்குவோம்' என்ற அமெரிக்காவின் அறிவிப்பு ரஷ்யாவை இச்செயற்பாட்டிலீடுபட வைத்தது.

**6. அரச தலைவர் மாநாடு**

இது தற்கால இராஜதந்திர சேவையில் அபிவிருத்தியடைந்துள்ள ஒரு புதிய அம்சமாகும். அரச தலைவர்கள் இரு தரப்பு முறையிலோ பல் தரப்பு முறையிலோ சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதை இன்று பரவலாகக் காணலாம். இதற்கு மேலதிகமாக வெளிநாட்டமைச்சர்களுக்கு பொது அலுவல்கள் சேவை அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்புகளும், பேச்சுவார்த்தைகளும் இடம்பெறுகின்றன.

**அரசுகளுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் இராஜதந்திரப் பேச்சுவார்த்தையின் வகிபங்கு**

அரசுகள் தனது தேசிய நலனை அடைந்து கொள்ளும் வகையில் சர்வதேச அரசியலில் செயற்படும்போது இராஜதந்திரம் எனும் அம்சமானது மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு, போர், கலாசாரம், சூழல், மனித உரிமைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் இராஜதந்திரம் அமையப்பெறுகிறது. இவற்றினை சுமூகமான முறையில் பேச்சுவார்த்தைகள் மூலம் அடைந்துகொள்ளும்போது தேசியநலன் பூர்த்தி செய்யப்படுகின்றது.

இராஜதந்திரத்தின்போது இடம்பெறும் பேச்சுவார்த்தையானது கலையாகக் கருதப்படுகின்றது அதற்கான காரணங்களாக பின்வரும் பண்புகளை இனங்காணமுடியும். இதன்வாயிலாக இராஜதந்திரம் வெற்றியடைகிறது. இதன் வெற்றிக்குச் சகலவகையிலும் வெளிநாட்டமைச்சர்கள் மற்றும் இராஜதந்திரிகள் ஆகியோரின் செயற்பாடுகளே முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

- Use An Advocate (Shuttle Diplomacy)
- Super rationality

  பேச்சுவார்த்தைக்கு வரும் இரு தரப்புகளும் தனது தனிப்பட்ட நலனை பூர்த்திசெய்யும் வகையில் கலந்துகொள்ளல் வேண்டும். சம்பந்தப்படுகின்ற அனைத்து தரப்புகளும் வெற்றியடையும் வகையில் அமையப் பெற வேண்டும். உதாரணமாக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சீனாவுடன் கொண்டிருக்கும் பொருளாதார உறவுகள் பற்றிக் கூறமுடியும். அதாவது பொருளாதார நெருக்கடி மற்றும் உற்பத்திச் செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக சீனாவுடன் ஐரோப்பிய நாடுகள் உறவினைக் கொண்டுள்ளது. சீனாவும் தனது சர்வதேச பொருளாதாரச் சந்தையை விஸ்தரிப்பதற்காக இதனை வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றது.

- Use of Objective Criteria

  பல சந்தர்ப்பங்களில் இராஜதந்திரமானது சம்பந்தப்படும் தரப்புகளின் உறவுகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் ஆகியன திட்டமிடப்பட்ட முறையிலான சட்டபூர்வமான படிமுறைகளின் அடிப்படையில் இடம்பெறும். நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இம்முறை பின்பற்றப்படுவதனைக் காணலாம். குறிப்பாகப் பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள் தமது வருடாந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தினைக் கூட்டி பல்வேறு விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதைக் காணலாம்.

உதாரணம்:

1. சார்க் அமைப்புக் கூட்டத்தின்போது இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் நேருக்குநேர் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.
2. கடந்த வருட ஐ.நா. சபை மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரின் போது பலஸ்தீன் தன்னையும் ஒரு அங்கத்துவ நாடாகச் சேர்த்துக்கொள்ளும் படியான கோரிக்கையை வெளிக்காட்டுவதற்காக பலஸ்தீன அதிபர் பலஸ்தீன் கொடியுடன் கூட்டத்தொடரில் அமர்ந்ததைக் கூறலாம். இது பலஸ்தீன அரசின் அங்கத்துவத்தை வலியுறுத்துவதற்றாக பலஸ்தீன அதிபரால் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கான இராஜதந்திரமாக அமைந்தது.

- Tit for Tat

இதுவும் இராஜதந்திரத்தின் முக்கியமான பண்பாகும். இம்முறைமையானது அமைதியான முறையில் தீர்க்க உதவுகின்றது. இதில் மூன்று படிமுறைகள் பின்பற்றப்படுகின்றது.

- ✓ Always cooperate, until provoked.
- ✓ If provoked, always retaliate with equal force.
- ✓ Be quick to forgive.

என்பனவாகும். இதற்குச் சிறந்த உதாரணமாக அமெரிக்கா மற்றும் சீன உறவை கூறலாம். இவ்விரு அரசுகளும் பொருளாதார ரீதியில் சுமூகமான உறவை ஒத்துழைப்புடன் பேணிவருகின்றது. ஆனால் இவ்விரு அரசுகளுக்கிடையில் உலக வல்லரசுக்கான போட்டி காணப்படுகின்றது. இவ்விரு அரசுகளும் பொருளாதாரம் மற்றும் இராணுவ ஆயுதங்கள் என்ற வகையில் சமமான பலத்தினைக் கொண்டுள்ளது. இதற்கமைவாகவே இவ்விரு அரசுகளுக்கிடையில் பேச்சுவார்த்தை இடம்பெறுகின்றது.

- Make Your Ideas Seem Like Their Ideas

A leader is best when people barely know he exists, when his work is done, his aim fulfilled, they will say: we did it ourselves. - Lao Tzu

இராஜதந்திர பேச்சுவார்த்தைகளின்போது சம்பந்தப்படும் தரப்புகளில் குறித்த தரப்பின் அபிலாசைகளை மற்றைய தரப்பும் தனது விருப்பம் எனக் கருதி முன்வைத்தலினை குறிக்கின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக 1985ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இந்தியாவின் பிரதமர் இந்தியாவின் வல்லரசு நிலைக்குப் பாதிப்பாக இலங்கை மேற்கத்தேய உறவினைக் கண்டறிந்தது. இதனை தடுப்பதற்காக இந்தியா நேரடியாக இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டதைக் காணக்கூடியதாயுள்ளது. 13 ஆம் திருத்தம் என்பது பலவந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும் இருப்பினும் இலங்கைத் தரப்பு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இதனைக் கண்டறிந்தது.

- Code Words & Politeness

இராஜதந்திர பேச்சுவார்த்தைகளின்போது சில வார்த்தைகளை மறைத்து வேறுமாதிரியில் குறிப்பிடுவதனைக் காணலாம். இதன்மூலம் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கினைச் சுமூகமாகவும் மிகவும் திறமையாகவும் அடைந்து கொள்வதைக் குறிப்பிடலாம். உதாரணமாக, அமெரிக்க லிபியா மீதான தாக்குதல் நடவடிக்கையைக் குறிப்பிடலாம். மிகவும் தந்திரமான பேச்சு வல்லமை இராஜதந்திரிக்குக் காணப்பட வேண்டும். இதன்போது சிறப்பான வகையில் இராஜதந்திரத்தை அடைந்து கொள்ள முடியும்.

இராஜதந்திரத்தில் பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதற்கான காரணம் மிகவும் இலகுவான முறையில் தனது இலக்கினை அடைந்து கொள்வதற்காகப் பயன்படுத்துகின்ற கருவியாகக் காணப்படுகின்றது. சர்வதேச அரசியலில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதற்குப் பல காரணங்கள் மறைவில் காணப்படுகின்றன.

**மதிப்பீடும் முடிவுரையும்**

" **இராஜதந்திரம் என்பது பேச்சு வார்த்தைக் கலை மட்டுமல்ல** " இராஜதந்திரம் என்பது பேச்சுவார்த்தைக் கலை மட்டுமல்ல. அதற்கும் அப்பால் பல பணிகளை மேற்கொள்கின்றது (முற்பகுதியில் விளக்கம் செய்யப்பட்டுள்ளது). இன்று இராஜதந்திரத்தின் பணிகள் மற்றும் அதன் வரைவிலக்கணம் விரிவுசெய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் இராஜதந்திரம் தேசிய நலனையும் வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் செயற்படுகின்றன. அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் இவற்றுக்குச் சிறந்த உதாரணமாகக் கூறமுடியும்.

அரசுகளுக்கு இடையிலான ஊடாட்டத்தின்போது ஏற்படுகின்ற விரிசல்களால் யுத்தம் என்பது இடம்பெறுவதற்கான வாய்ப்புக் காணப்படும். ஆகவே இராஜதந்திரம் இவ்வாறான சந்தர்ப்பத்தில் யுத்தத்தை நிறுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளும். இன்று சீனாவுக்கு ஏனைய அரசுகளால் இடம்பெறும் நெருக்கடிகளின்போது பொருளாதார இராஜதந்திரத்தினைப் பயன்படுத்தி யுத்தத்தைத் தடுக்கின்றது. உலக இராஜதந்திரத்தின் தோல்வியே 1ஆம், 2ஆம் உலக போர்கள் இடம்பெற்றதற்கான காரணம் ஆகும். ஆனால் இன்று உலக நாடுகள் அரசுகளுடன் மாத்திரமன்றி உலக அமைப்புகளுடன் கொண்டிருக்கும் உறவிலும் இராஜதந்திரம் காணப்படுகின்றது. அந்தவகையில் 193 அங்கத்துவ நாடுகளை உள்ளடக்கியுள்ள ஐ.நா அமைப்பின் இராஜதந்திர நடவடிக்கையே உலக சமாதானத்தையும், பாதுகாப்பையும் உறுதிசெய்து வருகின்றது. இதனால் இன்று வரை 3ஆம் உலக யுத்தம் இடம்பெறாது உள்ளது.

சில சந்தர்ப்பங்களில் இராஜதந்திரம் யுத்தத்தை ஏற்படுத்துகிறது. யுத்தத்தின் மூலம் தேசிய நலனையும், தனது அடைவையும் பூர்த்தி செய்து கொள்கின்றது. அமெரிக்காவானது ஈராக், லிபியா மீது யுத்தம் புரிந்த சந்தர்ப்பத்தைக் கூறமுடியும். இன்னொருவகையில் கூறின் இராஜதந்திரம் கூட்டுறவை ஏற்படுத்துகின்றது. அரசுகளுக்கு மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தி யுத்தத்தைத் தவிர்க்கிறது. இத்தகைய கூட்டுறவின் மூலம் தனது தேசிய நலனையும் சில சந்தர்ப்பங்களில் பிராந்திய அரசுகள் கூட்டிணைந்து தனது பிராந்தியக் கூட்டுறவையும் இராஜதந்திரத்தின் மூலம் பேணிக்கொள்கின்றன.

John D Rockey என்பவரின் கூற்றின் படி இராஜதந்திரம் என்பது பொதுவாகப் பேச்சுவார்த்தை மூலமே அடையப்பெறுகின்றது. ஆனால் அதற்கும் அப்பாற்பட்டது. உண்மையில் இராஜதந்திரம் என்பது இரு அரசுகளுக்கு இடையிலான ஒரு தொடர்பாடல் கலை என்கிறார். இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பேச்சுவார்த்தை
2. குறிப்புணர்தல்
3. பொதுசன அபிப்பிராயம்

ஆகிய அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. ஆகவே, இன்று இராஜதந்திரம் என்பது பேச்சுவார்த்தை கலை என்பதற்கும் அப்பால் தொடர்பாடல் கலை என்று வர்ணிக்கப்படுமளவிற்கு இராஜதந்திரத்திண் பணிகள் விரிவடைந்துள்ளது.

சர்வதேச அரசியலில் பிற நாடுகளுடன் உறவினைப் பேணுவதற்கு வெளிநாட்டுக் கொள்கை மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. வெளிநாட்டு கொள்கை வெற்றியடைவதற்கு இராஜதந்திரிகள் மிகவும் முக்கிய வகிபங்கினைக் கொண்டுள்ளனர்.

இராஜதந்திரம் இலகுவில் வெற்றியடைவதற்கு பேச்சுவார்த்தையே உதவி புரிகின்றது. சமகாலத்தில் அமைதியான முறையில் உறவுகளுக்கான வியூகத்தினை உருவாக்குகின்றது. அரசுகளுக்கிடையில் இடம்பெறும் வெளிப்படையான பேச்சுவார்த்தையானது சிறப்பான உறவைக் கட்டியெழுப்புகின்றது.

இத்தகைய வெளிப்படையான பேச்சுவார்த்தையானது அரசுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிளவுகள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது. மேலும் சிறப்பான இராஜதந்திரத்தின் பேச்சுவார்த்தையானது பலவீனமான அரசுகளையும் சர்வதேச அரசியலில் செயற்பட வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அமைதியான முறையில் சர்வதேச அரசியலில் தேசிய அரசுகள் செயற்படுவதற்கு வாய்ப்பாக அமைகின்றது.

சர்வதேச அரசியலில் அரசுகள் மத்தியில் சிறப்பான உறவைக் கட்டியெழுப்புவதற்கும், தேசிய நலனை அடையப்பெறுவதற்கும் இராஜதந்திரம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஆகவே இன்று இராஜதந்திரத்தைப் பேச்சுவார்த்தைக் கலை என மட்டுப்படுத்தப்பட முடியாதுள்ளது. மாறாக தொடர்பாடல் கலை எனுமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது.

**உசாத்துணைகள்**


- Siracusa, J.M. 2010. **Diplomacy a very short introduction.** published in the United States by Oxford University press Inc., New York.
- Web sites
- http://maihold.org/mediapool/113/1132142/data/Sharp.pdf
- https://repository.library.georgetown.edu/bitstream/handle/10822/552936/oscarsonSpencer.pdf?sequence=1
- http://maihold.org/mediapool/113/1132142/data/Sharp.pdf




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலையுதிர்காலம்

நான் வாழுகின்ற
இந்த நொடியை
தவிர எதுவுமே
எனக்குரியதாக இல்லை
ஆனாலும் இந்த நொடியில்
நேற்று இருந்த நீ இல்லை,
நாளை வரப்போகும்
அவர்கள் இல்லை,
பத்து வருடங்களுக்கு
முன்னால் நான் கழித்த
இதே நாள்,
இதே இடம்,
இதே நிமிடம்,
இதே மனிதர்கள்,
இன்றும் அதே
போல் என்னிடம் இல்லை

பத்து வருடத்துக்கு முன்னால்
இருந்த நான்
கூட இன்று
நானாகவே இல்லை
கொஞ்சம் உடல்
பெருத்திருக்கிறது,
வயது கூடியிருக்கின்றது,
ஆடல், பாடல்,ஓடல்,
எல்லாமே ஒடுங்கித் தான்
போயிருக்கின்றன...

சிந்தனைகளில்
இப்போதெல்லாம்
சின்னைப்பிள்ளைத்தனம்
இல்லை
பிச்சைக்காரன்
தட்டாய் இப்போதெல்லாம்
என் மூளை
கலவையாயில்லை

இந்த காலங்களில்
ஒரு துரோகியிடம்
இருந்து துரோகத்தைக் கற்றுக்
கொண்டேன்

ஒரு நண்பனிடம்
இருந்து காலை வாருவதைக்
கற்றுக்கொண்டேன்
ஒரு பிச்சைக்காரனிடம் இருந்து
வாழ்வின் வெறுமையைக்
கற்றுக்கொண்டேன்
ஒரு மூதாட்டியிடம்
முதுமையின் தனிமையைக்
கற்றுக்கொண்டேன்

ஒரு மலட்டுத்தாயிடம்
பிள்ளையைக் கொண்டு
நிரம்பாத வயிற்றின்
வெறுமையை உணர்ந்து
கொண்டேன்
திருமணமாகாத
அயல் கிராமத்து
சிறுமி வன்புணர்வால் வயிறு
நிறைந்ததையும்
கேள்வியுற்றேன்.

இப்படி இன்னும்
இன்னும் ஏதேதோ
கற்று கொண்டு தான்
இருக்கின்றேன்
எனக்குச் சொந்தமான
இந்த நொடியில்

-நர்மி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தனித்தன்மை உறுதிப்படுத்தல் - சோழராட்சி வரலாற்று நோக்கு

வ.கபிலன்,
உதவி விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



தென்னாசியாவில் நீண்ட தொடர்ச்சியான வரலாற்று மரபை கொண்டமைந்த நாடு இலங்கை. இது இந்தியாவிற்கு அண்மையில் இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இதனால் ஆரம்பகாலம் முதல் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே அரசியல், பண்பாட்டு, வர்த்தக தொடர்புகள் நிலவி இருந்தன. வட இந்தியாவுடனான தொடர்புகளுக்கும் தென் இந்தியாவுடனான தொடர்புகளுக்கும் இலங்கையின் புராதன துறைமுகங்களான மாதோட்டம், ஜம்புகோளப்பட்டினம், கோகர்ணம், என்பன முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளன. அத்துடன் இத்துறைமுகங்கள் அரசியல், பண்பாடு, வர்த்தக நடவடிக்கை உள்வாங்கும் பகுதிகளாகவும் வெளியிடும் பகுதிகளாகவும் ஓர் பரிவர்த்தன மையங்களாக செயலாற்றி இருந்தன. இவற்றின் ஊடாகவே இந்தியாவில் இருந்து ஆக்கிரமிப்புக்களும், படைநடவடிக்கைகளும் இடம்பெற்றன.

இலங்கையின் முதலாவது இராசதானியாக அநுராதபுரம் விளங்கி இருந்தது. பண்டுகாபயனால் தலைநகராக உருவாக்கப்பட்ட அநுராதபுரம் கி.பி 1017இல் சோழர்களது படையெடுப்பு வரை சிறப்பு வாய்ந்த இராசதானியாக விளங்கியது. இக்காலப்பகுதியில் மதமும் அரசும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இருந்தது. கோகர்ணம், ஜம்புகோளப்பட்டினம், மாதோட்டம் என்பன இதன் ஆட்சிக்குக்கு உட்பட்ட பகுதிகளாக இருந்தன. இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்த வடகிழக்கு பிரதேசங்கள் அநுராதபுர இராசதானியின் மேலாண்மைக்கு உட்பட்டிருந்தது. யாழ்ப்பாண இராச்சிய காலத்திற்கு முன்பு தமிழர்களின் தனித்தன்மையை உறுதிப்படுத்தும் காலமாக பொலநறுவையின் சோழர் ஆட்சிக் காலப்பகுதியைக் குறிப்பிடலாம்.

சோழராட்சி காலத்திற்கு முன்னரே தமிழர்களின் தனித்தன்மையை உறுத்திப்படுத்துவது தொடர்பில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனினும் தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படையில் தமிழ் அரச குடியிருப்புக்கள், தமிழ் சிற்றரசுகள், இந்து மதம், தமிழ் பிராமி வரிவடிவம் என்பனவும் தென் இந்தியாவுடனான அரசியல், படை உதவிகள், பண்பாட்டு தொடர்புகள் என்பன தமிழரின் தனித்தன்மையை உறுதிப்படுத்தினாலும் இந்நிலைமை சோழர் ஆட்சிக் காலத்திலேயே மேலும் செம்மைப்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம்.

தமிழர்களின் தனித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அரச குடியிருப்புக்கள் துணை நிற்கின்றன. பெருங்கற்கால பண்பாட்டின் முதிர்ச்சியில் தமிழ் குடியிருப்புகள் அமைந்திருந்தன என்பதற்கு பூநகரி ஆய்வின் அடிப்படையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ப.புஸ்பரட்ணம்' அவர்களது 'பூநகரி தொல்பொருள் ஆய்வு' எனும் நூல் சான்று பகிர்கின்றது. பூநகரயில் 'ஈழ, ஈல' என, பெயர்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள் பல கண்டு பிடிக்கப்பட்டன. அத்துடன் ஆனைக்கோட்டையில் கிடைத்த கோவேத பொறித்த முத்திரை, அம்பாந்தோட்டையில் கிடைக்கப்பெற்ற 'திசபுரசடநாகராச' எனும் எழுத்துப் பொறித்த நாணயம், மகாவம்சத்தில் வடக்கிலும், கிழக்கிலும் இருந்து தமிழ் சிற்றரசுகள் பற்றியசெய்திகள், பல்லவர் ஆட்சிக்காலத்தில் நாயன்மார்களில் ஒருவரான சம்பந்தர் திருக்கேதீஸ்வர ஆலயம் மீது பாடிய 'தமிழ் குடி பெருக்கி' எனும் தேவாரம், சிறிமாற சிறிபல்லவனின் அநுராதபுரம் நோக்கிய படையெடுப்பின் போது மாதோட்டத்திலிருந்த மக்கள் அதற்கு ஆதரவு அளித்தமை, தொடர்பான மகாவம்ச செய்திகள், அநுராதபுரகாலத்தில் 'சேனன்', 'குத்திகன்', 'எல்லாளன்' முதலான தமிழ் மன்னர்களது படைநடவடிக்கைகளும் ஆட்சியும், வட இலங்கை மீதான பராந்தக சோழனது முற்றுகை என்பன பொலநறுவை சோழர் ஆட்சிக்கு முன்னரே தமிழ் அரசும், குடியிருப்புக்களும் இருந்தன என்பதற்கு சான்றுகளாகும். எனினும் கி.பி 1017 இலங்கையில் சோழர் ஆட்சியில் பொலன்னறுவை இராசதானியாக்கப்பட்ட பின்பு முழு இலங்கையும் சோழரது நிர்வாகத்திற்கு உட்படுத்தப்பட்டதுடன் இலங்கை 'மும்முடிச் சோழமண்டலம்' என ஒன்பதாவது மண்டலம் ஆக்கப்பட்டு இலங்கேஸ்வரனால் ஆழப்பட்டது.

பொலநறுவையில் சோழர்களது பல நிர்வாகப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. மண்டலம், வளநாடு, கூற்றம், வாரியம் என்பனவும் பிராமண குடியிருப்புக்கள், சதுர்வேதி மங்களங்கள், ராஜ ராஜபெருந்தெரு முதலானவை அமைக்கப்பட்டிருந்தன. ராஜராஜனின் விருதுப் பெயர்கள் பல ஆட்சிபிரதேசங்களுக்கு குறிப்பாக சூட்டப்பட்டன. பொலன்னறுவை 'ஜனநாதமங்கலம்' என அழைக்கப்பட்டது. ராஜராஜ வளநாடு, நிகரிலி சோழ வளநாடு என நிர்வாகப் பெயர்கள் பல விருதுப் பெயர்களைத் தாங்கி நின்றது. இவ்வாறு சோழராட்சியில் தமிழ் குடியிருப்புக்கள் நிர்வாக எல்லைகள் என்பன தமிழர்களின் தனித்தன்மைக்கு வலுவூட்டியது. அத்துடன் இவை பின்வந்த சிங்கள மன்னர்களான விஜயபாகு, பராக்கிரமபாகு முதலானவர்களாலும் பின்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தமிழ் மொழியின் தொன்மை, தனித்தன்மை என்பனவற்றை சங்ககாலப் பகுதியிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. புஸ்பரட்ணம் அவர்கள் பூநகரியில் மேற்கொண்ட ஆய்வில் 21க்கு மேற்பட்ட தமிழ் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றில் 'ஆய்', 'வேள்', 'ஈழ' முதலான பெயர்கள் வாசிக்கப்பட்டன. அத்துடன் தமிழ் மொழிக்கே உரித்தான சிறப்பு எழுத்துக்களான ற, ழ, ன, ள முதலான எழுத்துக்கள் அக்கால சிங்கள பிராமி கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டிருந்திருந்தன. ஆனைக்கோட்டை முத்திரைகள், அக்குறுகொட, கந்தரோடை, உடுத்துறை பகுதிகளில் கிடைக்கப்பெற்ற நாணயங்களில் பொறிக்கப்பட்டிருந்திருந்த பிராமி எழுத்துக்கள் மூலம் சோழராட்சிக்கு முன்னரே தமிழ் மொழி தனித்தன்மை பெற்றிருந்தது எனக் கூறப்பட்டாலும் சோழராட்சிக்காலத்திலேயே தமிழ் மொழி பொலநறுவை இராசதானியின் நிர்வாக, அரச மொழியாக அமைந்திருந்தது. மேலும் சோழர் ஆட்சியின் பின்பும் தமிழர்வாழ்ந்த பகுதிகளில் தமிழ் மொழி சிங்கள மன்னர்களால் அரச கரும மொழியாகவும், நிர்வாக மொழியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைபிடிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக 1ஆம் பராக்கிரமபாகுவின் நயினாதீவுக் கல்வெட்டினைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் பெருங்கற்கால முதிர்ச்சியில் இருந்து இந்து மத வழிபாடு காணப்பட்டமைக்கு ஆரம்பகால நடுகல் வழிபாடுகளும், முருக வழிபாடும், கிராமிய வழிபாடுகளும் சான்றுகளாகும். இலங்கையில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு முன்னர் அநுராதபுர இராசதானியில் இந்து மதமும் நிலவியது, இதற்குச் சான்றாக மகாவம்சத்தில் பண்டுகாபயன் மன்னன் சிவிசால, சேத்தியசால எனும் கோவில்களை அமைப்பித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தேவநம்பிய தீஸனின் தந்தை பெயர் 'மூடசிவன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாசேனன் ஆட்சியில் கிழக்கு இலங்கையில் மூன்று இந்து ஆலயங்களை அமைப்பித்த செய்தி சிங்கள வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டடுள்ளது. மேலும் தென் இந்தியாவில் பல்லவர் ஆட்சிக்காலத்தில் தேவார முதலிகளால் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேச்சர ஆலயங்கள் மீது தேவாரங்கள் பாடப்பட்டுள்ளது. அத்துடன் பராந்தக சோழன் வடபகுதி முற்றுகையின் போது பூநகரியில் மன்னித்தலை சிவாலயம் அமைத்திருந்தான். இவ்வாறு இலங்கையில், பொலநறுவையில் சோழர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு இந்து மதம் தனித்தன்மையுடன் காணப்பட்டாலும் சோழர் ஆட்சிக்காலத்திலேயே இந்துமதம் 'அரச மதம்' எனும் அந்தஸ்தைப் பெற்றது. பொலநறுவையில் 1ஆம், 5ஆம், 6ஆம் இலக்க சிவதேவாலயங்களும், பிரம தேயங்களும் அமைக்கப்பட்டிருந்தன. சோழர்களது விருதுப்பெயர்களை தாங்கியும் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இரவிகுல மாணிக்க ஈஸ்வரம், உத்தம சோழ ஈஸ்வரம், இராஜராஜேஸ்வரம் முதலான ஆலயங்களைக் குறிப்பிடலாம். இவை சோழர் ஆட்சிக்காலத்திலேயே இந்து மத தனித்தன்மை மேலும் வலுப்படுத்தப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் பெருங்கற்கால முதிர்ச்சியில் சங்க காலத்திற்குச் சமமான ஓர் இனக்குழு அமைந்திருந்தது. என்பதனை பூநகரியில் கிடைத்த 'வேள்', 'வேளீர்' எனும் எழுத்துப்பொறித்த மட்பாண்ட சானசங்கள் உறுதிப்படுத்துகின்றன. சேர் ஜரவாதம் மகாதேவன், பரமு புஷ்பரட்ணம் முதலானவர்கள் இதன் காலப்பகுதியை சங்க காலத்திற்கு சமமானது என உறுதிப்படுத்துகின்றனர். இந்திய ஆய்வாளரான ரோமிலாதாபர் வட இந்தியாவில் 'ராஜா' எனும் பதத்திற்கு சமமான பதமே வேள் எனக் குறிப்பிட்டுள்ளார். வட இலங்கையின் உடுத்துறையில் 'நாகநகர்', 'நாக நாடு' எனும் எழுத்துப் பொறித்த நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை நாக அரசு இருந்த செய்தியை உறுதிபடுத்துகின்றது. மேலும் கந்தரோடையை தலைநகராக கொண்டு கி.பி 7ம் நூற்றாண்டில் ஓர் அரசு இருந்த செய்தி கூறப்பட்டுள்ளது. இவை சோழர் ஆட்சிக்கு முன்பே தமிழ் அரச மரபு இருந்த செய்திகளை உறுதிப்படுத்தினாலும் சோழர் ஆட்சியில் தான் தமிழர்களது முழுமையான அரச மரபு நிலை நிறுத்தப்பட்டது. 77 ஆண்டுகள் இலங்கையொரு தமிழ் அரச மரபின் கீழ் இருந்துள்ளதுடன் 'மும்முடிச் சோழ மண்டலம்' என அழைக்கப்பட்டது.

பல்லவரோடு தமிழகத்தில் தோன்றி வளர்ந்த திராவிடக் கட்டடச் சிற்பக் கலைகள் சோழர் ஆட்சிக்காலத்தில் இலங்கையிலும் வளர்ச்சியடைந்துள்ளமையைக் காணமுடிகின்றது. சோழர்காலத்தில் இலங்கையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிர்வாகிகள், படைவீரர்கள், கலைஞர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகர்கள் எனப் பல பிரிவினரும் குடியேறியமையால் தமிழகத்தைப் போல் இலங்கையிலும் சோழர்கால மரபைக் கொண்ட ஆலயங்கள், சிற்பங்கள் தோற்றம் பெற வழிவகுத்தன. பொலநறுவையிலுள்ள 2ஆம், 5ஆம் சிவாலயங்கள், பதவியாவில் கண்டு பிடிக்கப்பட்ட 5 சிவாலயங்களின் அழிபாடுகள், கந்தளாய், மாதோட்டம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் கண்டு பிடிக்கப்பட்ட சோழர்கால ஆலயங்கள் தொடர்பான அழிபாடுகள் என்பன இதற்குச் சான்றுகளாகும். மன்னித்தலையில் அமைந்துள்ள சிவன் ஆலயம் பராந்தகன் கால கட்டிடக்கலைப் பாணியைத் தழுவி அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சோழர்களது கலை மரபு தமிழர்களின் கட்டிட, சிற்பக் கலை மரபில் மட்டுமன்றி சிங்கள மன்னர்களின் கலை மரபிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட வழிகோலியது. சோழர்களது நீண்ட ஆட்சியினால் திராவிடக் கலை மரபு பின்வந்த சிங்கள மன்னர்களது ஆட்சியிலும் நிலைபேறாக்கம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு 'இலங்காதிலக விகாரை' ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமிழர்களுக்கெனத் தனித்துவமான பிரதேசங்களை கோடிட்டுக் காட்டியவர்கள் சோழர்களே. இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் தமிழரது பாரம்பரிய நிலப்பரப்பு என்ற அடிப்படையில் சோழர்காலத்தில் சிறப்புப்பெற்றுள்ளது. சோழர்காலத்திற்கு முன்பு வட இலங்கையிலும், கிழக்கு இலங்கையிலும் தமிழர்கள் வாழ்ந்தாலும் சோழர்காலத்துடன் தான் இப்பிரதேசங்கள் தமிழருக்குரிய தனித்துவமான பிரதேசங்களாக மையகேந்திரநிலையமாக காணப்பட்டது. இதற்கு காரணம் சோழர்காலத்திற்கு முன்பே தமிழர்கள் செறிவாக வாழ்ந்தமையே ஆகும். பூநகரி, மாதோட்டம், திருகோணமலை ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம், பதவியா, கந்தளாய் பகுதிகளில் கிடைத்த கல்வெட்டுக்கள், தொல்பொருட்கள் என்பன இதற்கு சான்றுகளாகும். மாதோட்டத்தில் கிடைத்த சோழசாசனம் 'மாதோட்டம் இராஜராஜபுரம்' எனவும், அங்குள்ள வீதியொன்று 'இராஜராஜ பெரும் வீதி' எனவும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்களின் தனித்தன்மையானது கடல்சார் வணிகத்தின் மூலம் முதன்மைப்படுத்தப்பட்டது. இதற்கு மாதோட்டம், திருகோணமலை, பூநகரி ஊர்காவற்துறை முதலான இலங்கை துறைமுகங்களின் அமைப்பும் பங்களிப்பும் முக்கியமானது. இலங்கையில் சோழராட்சி ஏற்படுத்தப்பட்ட போது தென் இந்தியாவின் காயல், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி என்பன இலங்கையின் மாதோட்டம், கோகர்ணம், ஜம்புகோளபட்டினத்துடன் நெருங்கிய வர்த்தக உறவுகளை பேணின எனக் கூறப்படுகின்றது.

இலங்கையில் உள்ள வீரவளஞ்சியர், திசையாயிரத்து ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார் போன்ற வணிக கணங்களைச் சார்ந்தவர்கள் பெரியளவில் வெளிநாட்டு வாணிபத்தை மேற்கொண்டனர். மணிக்கிராமத்தார் என்ற வணிக கணம் சோழர் காலத்தில் செயற்பட்டமைக்கு 4ஆம் கஜபாகுவின் 'பதுளைத்தூண் கல்வெட்டு' சான்று பகிர்கின்றது. அத்துடன் பதவியா, பொலநறுவை போன்ற இடங்களில் காணப்படும் சோழர் காலத்திற்குரிய தமிழ் கல்வெட்டுக்களில் தமிழ் வணிகர் பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. சோழர் ஆட்சிக்கு பின்பும் வணிக கணங்கள் சிறப்பு பெற்று விளங்கின, 1ஆம் பராக்கிரமபாகு காலத்தில் 'அந்தரக்க தூர' என்ற தனிப்பகுதி நிறுவப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறநாட்டு வாணிபத்தில் பங்காற்றியுள்ளமையை 1ஆம் பராக்கிரம பாகுவின் கல்வெட்டு எடுத்துக்காட்டுகின்றது.

தமிழகத்தில் பயன்படுத்தப்பட்ட இடப்பெயர்கள் பல சமகாலத்தில் இலங்கையிலுள்ள வடக்கு கிழக்குப் பிரதேசங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது. அத்துடன் சங்க காலப்பகுதியில் தமிழுக்குரித்தான பின்னொட்டுப் பெயர்களான மலை, வில், பிட்டு, கட்டு, அடி என்பன இணைத்து ஊர்ப்பெயர்களாக அழைக்கப்பட்டன. ஈழ ஊர், கோணாவில், கோணமலை, புலையன் குடா, வெள்ளாங்குளம், சோழ மண்டலம், நல்லூர், ஆலங்கேணி போன்ற பெயர்கள் தமிழகத்தில் காணப்பட்ட இடப்பெயர்களை ஒத்து காணப்படுகின்றன. இது சோழராட்சியால் சோழர்காலத்தில் இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் குடியேற்றங்கள் ஏற்பட்டதைக் காட்டுவதுடன் இன்றும் இப் பெயர்கள் பின்பற்றப்படுவதை அறியக் கூடியதாக உள்ளது.

தமிழர்களின் தனித்தன்மையை அடையாளப்படுத்தப்படுவதற்கு அவர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களும் முக்கிய சான்றுகளாகும். நாணயங்கள் தனித்தன்மையுடன் வெளியிடுகின்ற சுதேச அரச மரபு காணப்பட்டமைக்கு உடுத்துறையில் கிடைத்த நாக நாணயங்களும், சுந்தரோடையில் கிடைத்த இலட்சுமி நாணயங்களும் சான்றுகளாகும். ஆரம்ப காலம்முதல் தமிழர்கள் நாணயங்களை வெளியிட்டு தனித்தன்மையினைப் பேணினாலும் சோழர் ஆட்சிக்காலத்திலேயே முதன் முதலில் மன்னனது உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் வெளியிடப்பட்டன.

கல்வெட்டுக்களைத் தமிழில் வெளியிட்ட சோழர் சர்வதேச வர்த்தகத்திற்காக நாணயங்களை வடமொழியில் வெளியிட்டதோடு அவற்றை வெளியிடுகின்ற மன்னனின் உருவத்தையும் நாணயத்தின் முன்பக்கத்தில் பொறித்துக் கொண்டனர். இம் முறையை முதன் முதலில் அறிமுகப்படுத்திய முதலாம் இராஜ ராஜ சோழனின் ஆட்சி இலங்கையில் இருந்ததனால் இம்மரபு இலங்கையிலும் அறிமுகமானது. இதனால் சோழராட்சிக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த 1ஆம் விஜயபாகு, 1ஆம் பராக்கிரமபாகு, போன்ற மன்னர்கள் இம் முறையைப் பயன்படுத்தி நாணயங்களை வெளியிடுவதற்கு சோழராட்சியே வழிவகுத்தது எனலாம்.

சோழராட்சிக் காலத்தில் பெருந்தொகையான தமிழப்படைகள் இலங்கை வந்துள்ளதாக சூளவம்சம் குறிப்பிடுகின்றது. 1ஆம்இராஜேந்திரன் போன்ற சோழ மன்னர்களின் ஆட்சி காலத்தில் வேளைக்காரர், வலங்கை, இடங்கை, சிறுதனம், பிள்ளைத்தனம், வடுகர், போன்ற படைப்பிரிவுகள் இலங்கை வந்துள்ளமையை அறியமுடிகிறது. சோழராட்சிக் காலத்தில் வேளைக்கார படையையே மன்னர்கள் மெய்காப்புப் படையாக நியமித்திருந்தனர். இவர்கள் இலங்கையில் சோழராட்சியில் மட்டும் அல்ல சிங்கள மன்னர்கள் ஆட்சி காலத்திலும் அரசனது மெய்க்காப்புப் படையாகவும், தந்ததாதுவினைப் பாதுகாக்கும் படையாகவும் விளங்கியிருந்தனர். 1ஆம் விஜயபாகுவின் கல்வெட்டுக்களில் இருந்து இதனை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் சிங்கள நிர்வாகத்தில் தமிழர்கள் படைவீரர்களாகவும் நிர்வாகிகளாகவும் கடமையாற்றிய போதும் தம் இனம், மதம் சார்ந்த நடவடிக்கைகளில் சிங்கள மன்னர்கள் சில சந்தர்ப்பங்களில் எதிராகச் செயற்பட்டபோது அதனை எதிர்த்துள்ளமையையும் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, மேற்கூறப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நோக்கும் போது இலங்கையில் தமிழர்கள் சோழர் காலத்திற்கு முன்பே தனித்தன்மையுடன் வாழ்ந்து இருந்தாலும் சோழர்காலமே அதனை மேலும் உறுதிப்படுத்த துணைநின்றது. இன்றுவரை இலங்கைத் தமிழர் பண்பாட்டிற்கான வலுவான ஓர் அடிப்படையை அரசியல் பொருளாதார, நிர்வாக, சமய, சமூக, கலைப் பண்பாட்டுத் துறைகளில் ஈட்டிக்கொடுக்க உதவியவர்கள் சோழப் பேரரசர்களே. சூளவம்சம் "விஜயபாகு இல்லையெனில் சிங்கள இனமே இல்லாமல் போயிருக்கும்" எனக் குறிப்பிடுவதில் இருந்து சோழர் ஆட்சியில் தமிழர்களின் தனித்தன்மையினைப் புரிந்து கொள்ள முடிகின்றது. பேராசிரியர் அரசரட்ணம் அவர்கள் சோழராட்சி இல்லையெனின் தமிழர்களின் தனித்துவம் அழிக்கப்பட்டிருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளமை காலத்தின் நிதர்சனமே.

## உசாத்துணைகள்


- புஷ்பரட்ணம், ப. (2000 ), **தொல்லியல் நோக்கில் இலங்கை தமிழர் பண்பாடு**, பவாணி பதிப்பகம்.
- சிற்றம்பலம், சி.க. (1993), **யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு**, யாழ்ப்பாண பல்கலைக் கழகம்.
- பத்மநாதன். சி. (1984), **இலங்கை தமிழ் வணிக கணங்களும் நகரங்களும்**, சிந்தனை, தொகுதி 02, திருநெல்வேலி.
- கிருஷ்ணராசா. செ. (1999), **இலங்கை வரலாறு பாகம் - 1, திருநெல்வேலி,**
- புஷ்பரட்ணம். ப. (1993), **பூநகரியும் தொல்பொருள் ஆய்வும்**, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.


**அக்கினிப் பெருமுச்சு அசைகிறது**
**கிராமத்தின தென்னை மரங்கள்**
**சூரியனைக் கொய்து**
**தலையிற்சூடிக் கொள்கின்றன.**

**– சுபத்திரன் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் சீதனமும்

க.கஸ்தூரி,
உதவி விரிவுரையாளர்,
மெய்யியல் மற்றும் உளவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



*"ஆயிரம் செருப்புகள் தேய்ந்தே ஒரு நல்ல வரன் கிடைக்கிறது. அதிலும் ஆயிரத்தில் ஒன்று தான் உருப்படியாய் உள்ளதாம். இதில் காது குத்தியதும், தலைக்கு கலர் பூசியதுந்தான் அதிகமாம், இப்படி சல்லடையிட்டு கண்டறிந்த பின்னும் கூட திருமணம் இலகுவாய் அமைந்து விடுவதில்லை. அதன் பின்பு சீதனப் பேச்சுவார்த்தை இடம் பெறுகிறது"*

இது பெண் எனும் இதழில் பிரசுரமாகியிருந்த செய்தி ஆகும். இதன் மூலம் திருமணமும் அதனுடன் இணைந்த சீதனமும் தொடர்பிலான சிக்கல்களை அறிந்து கொள்ள முடிகிறது. சீதனம் என்னும் சொல் ஸ்தீரி, தனம் என்ற சொற்களின் இணைப்பினால் உருவானது ஆகும். இச்சீதனம் தொடர்பில் **'Adele Ann'** எனும் அறிஞர் கூறுகையில்,

***"சமூக கட்டமைப்பில் நடப்பியலாகவுள்ள சீதன முறையானது வரலாற்றுப் பழமையில் ஆழமாக வேர் பதித்து நிற்கின்றது என்பதையும், இலகுவில் வளைந்து கொடாத தன்மையைக் கொண்டதாயும் அது உள்ளது. மேலும் புறவயமானதொரு சமூகப்பண்பாடு மெய்மை என்பதால், சீதன முறைமையை ஒரு சமூகப்பிரச்சினை என்ற கண்ணோட்டத்தில் நோக்குவது பொருந்தும்"*** என்கிறார்.

பொதுவான பார்வையில், மனித பண்பாட்டுடன் தொடர்புபட்டதொரு அம்சமே சீதனம் ஆகும். உண்மையில் சீதனம் என்பது ஒரு பாரம்பரிய முறைமையாகும். இது பெண்ணுக்காக பெற்றோரால் கொடுக்கப்படுவதும், பெண்ணால் திருமணம் செய்யும் ஆணுக்கு கொடுக்கப்படுவதுமான ஒரு பொருளாதார முறைமை ஆகும். ஆனால் இன்று சீதனமானது வன்முறை, ஒடுக்குமுறை, பெண்ணடிமைத்தனம் என்றே பொருள் கொள்ளப்படுகிறது. இருந்தபோதும் கூட பெண்களுக்கு எதிரான வன்முறைகளை பண்பாடுகள், சம்பிரதாயங்கள், மரபுகள் மற்றும் மதங்கள் மூலம் சமுதாயம் இதனை நியாயப்படுத்துகின்றது. ஆணும் பெண்ணும் சேர்ந்ததுதான் இல்வாழ்க்கை. ஆனால், இன்று ஆண் - பெண் இருவரும் மணவாழ்க்கையில் இணைவதில் சீதனம் எனும் பொருளாதாரத் தடை குறுக்கிடுகின்றது. ஆரம்பத்தில் திருமணத்தின் போது பொருட்களே பெரிதும் பரிமாற்றப்படும் வழக்கம் காணப்பட்டது. இது **'மணக்கொடை'** எனப்பட்டது. அதாவது மணமகளால் மணமகன் வீட்டிற்கு கொடுக்கப்படும் பொருள் அல்லது பணம் ஆகும். இன்று மணக்கொடை முறை அழிந்து வரதட்சணை முறை தோன்றியுள்ளதுடன், வரதட்சணை கொடுத்தால் தான் பெண்களுக்குத் திருமணம் என்ற நிலை உருவாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. பாரம்பரிய சடங்கான திருமணம் இன்று கொடுக்கல் வாங்கல் வியாபாரமாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் பெண்ணின் மீதான பாசத்தால் பெண்ணின் தந்தையால் அல்லது அவளது சகோதரனால் பணமோ, பொருளோ, நகையோ வழங்கப்பட்டது. ஆனால் இன்று பணம், நகை, தளபாடங்கள், வீடு, ஆடைகள் மேலும் மணமகனுக்கும் துணிகள், சில ஆபரணங்கள் போன்றனவும் வழங்கப்படுகின்றன. அத்துடன் தற்போதைய சீதன நிலவரம் தொழில் அடிப்படையில் பாரிய மாற்றத்தையும் உள்வாங்கியுள்ளது. சான்றாக வைத்தியன், பொறியியலாளன் என ஒவ்வொரு தொழில் தரத்திற்கேற்பவும் சீதனம் தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு கோடி பணம், ஐம்பது பவுண் நகை, மாடி வீடு என வைத்தியனுக்கு விலை பேசப்படுவதைக் காணமுடிகின்றது. மேலும் இங்கு இன்னுமொரு விடயம் முக்கியமாக நோக்கத்தக்கது ஆகும். அதாவது, ஆணின் தொழில் தகைமைக்கேற்ப சீதன அளவு அதிகரிக்கின்ற போதும் பெண்களின் கல்வி, தொழில் முன்னேற்றம் சீதன அளவில் பாரிய தாக்கத்தை செலுத்தவில்லை என்றே கூற வேண்டும். அதாவது ஒரு வைத்திய பெண், ஒரு வைத்திய ஆணைத் திருமணம் முடிப்பதாக இருந்தாலும் கூட அங்கும் சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், காதல் திருமணங்களில் கூட சீதனம் எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும் மறுக்க முடியாதுள்ளது.

ஆதிகாலந்தொட்டு இன்றுவரை பெண் மென்மையானவள், ஆணின் துணையின்றி அவளால் வாழ முடியாது போன்ற சித்தாந்தங்கள் இன்னும் சமூகத்தில் பின்பற்றப்பட்டுக் கொண்டு வருகிறது. பெண்ணை வாழ்க்கைப்படுத்தலும், வாழ்க்கைப்படுத்தும்போது அவர்களின் புதுவாழ்க்கைக்கு அத்திவாரமிடுவதற்கு தம்மால் இயன்ற சொத்துக்களையும், சன்மானங்களையும் வழங்க வேண்டியது தமக்குரிய பொறுப்பும் கடமையும் என பெற்றோர் எண்ணிக் கொள்கின்றனர். இன்றும் கூட சீதன அளவைக் கொண்டு குடும்பத்தின் அந்தஸ்தினை எடைபோடும் மனப்பாங்கு காணப்படுகிறது. இதனால் அந்தஸ்தினை தக்க வைக்க எண்ணிப் பலர் தம்மால் முடியாது என்றாலும் சீதனம் கொடுக்கவும், வாங்கவும் விரும்புகின்றனர்.

இன்று திருமணத்தை வர்த்தகமயமாக்கியுள்ள இச்சீதனம் இளம் பெண்கள் மத்தியிலும், பெற்றோர் மத்தியிலும் மனோவியல் தாக்கங்களையும், சுமைகளையும் ஏற்படுத்தியுள்ளது. இச்சீதனப் பேதங்களினால் இன்று திருமண வயதை எட்டியும் வாழ முடியாது தவிக்கும் உள்ளங்கள் ஏராளம். இன்று முதிர்கன்னிகள் அதிகரித்துள்ள அதேவேளை முதிர்வாலிபர்களது நிலைமை நோக்கத்தக்கது. அதாவது தனது சகோதரிகளுக்காகச் சீதனம் சேர்க்க வேண்டி திருமண வயதை தவறவிட்டவர்களும், தனக்கு சீதனம் போதாது எனப் பல திருமணங்களை நிராகரித்து அதிக சீதனத்துடன் வரும் பெண்ணிற்காகக் காத்துக் கொண்டிருப்பவர்கள் சிலரும் தற்கால சமூகத்தில் தோற்றம் பெற்றுவிட்டனர்.

சில பெண்களால் தன் தந்தையிடமிருக்கும் பணத்துக்கேற்ற மணமகனை அடைய முடிகிறதே ஒழிய தன் மனதுக்கேற்ற மணமகனை அடையமுடியாத துர்பாக்கிய நிலையும் காணப்படுகிறது. உண்மையில் சீதனம் வெளியால் இருந்து பார்க்கும் போது பேசப்படுகின்றதும், விசாரிக்கப்படுகின்றதுமான சுவாரஸ்யமான விடயமாக இருந்தாலும் கூட அது எத்துணை பாரதூரமானது என்பதை சில விளைவுகளின் ஊடாக அறிந்து கொள்ள முடிகிறது. எடுத்துக்காட்டாக: Stress, Depression போன்ற உளத்தாக்கங்களுக்கு உட்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை வாழ்க்கை மீது வெறுப்பு, தற்கொலை எண்ணம் போன்ற மனப்பாங்கையும் சிலரிடத்தில் அவதானிக்க முடிகின்றது.
மன இணைவினாலான பந்தம், என்று பண இணைவை மையப்படுத்தி கட்டமைக்கப்படத் தொடங்கியதோ அன்று முதல் குடும்பங்கள் சீர்குலைந்து, பிரச்சினைகள், சித்திரவதைகள், வன்முறை, விவாகரத்து, பிள்ளைகளை சரியாகக் கவனியாமை, கடன், தற்கொலை, வெளிநாட்டு வாழ்க்கை, நிம்மதியின்மை, மகிழ்ச்சியின்மை மற்றும் வாழ்க்கையில் பிடிப்பின்மை போன்ற பல சிக்கல்களை சமூகத்தில் சீதனம் நேரடியாகவோ மறைமுகமாகவோ தோற்றுவித்துள்ளது.

கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் எனப் பின்பற்றப்பட்டு வந்த சீதனமானது, இன்று பேஷன் (Fashion) ஆகி விட்டது. தமிழர் பாரம்பரியம் இன்று அனைவரது பாரம்பரியமுமாகி விட்டது. கிறிஸ்தவர்களிடத்தோ, இஸ்லாமியர்களிடத்தோ இம்முறை ஆரம்பத்தில் புழக்கத்தில் இருக்கவில்லை காலப்போக்கிலே இம்முறை பலராலும் உள்வாங்கப்படலாயிற்று. இன்று இன, மத வேறுபாடின்றி சீதனம் ஏதோவொரு வடிவில் சகலரிடமும் பின்பற்றப்படுகின்றது. இன்றைய ஆண்களோ அவர்களது குடும்பத்தினரோ பெண் பார்க்கும் படலத்தின் போது பெண் ஆணை விட கல்வி, தொழிலில் குறைந்தவளாக இருக்க வேண்டும் அல்லது சமமாக இருக்க வேண்டும், அழகானவளாக இருக்க வேண்டும் என்பதைப் போன்று அதிக சீதனச் சொத்துக்குரித்துடையவளாக இருக்க வேண்டும் என்பதையும் நோக்கத் தவறுவதில்லை.

உண்மையில், சீதனம் சில பெண்களால் எதிர்க்கப்பட்டாலும் அவர்கள் இறுதியில் தனது குடும்பத்தின் கட்டாயத்தின் பேரில் திருமணம் முடித்துக் கொள்ளும் போது சீதனம் கொடுக்கின்றனர். அதேவேளை சீதனத்திற்கு மறுப்புத் தெரிவித்து திருமணம் முடிக்காத பெண்களும் உள்ளனர். ஆக இந்த வரதட்சணை பெண்ணைப் பெற்றாருக்கு சுமையாக்கி விட்டது. மறுபுறம் இன்று சில பெண்களும் கூட சீதனத்தை ஆதரித்து வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. சில பெண் பிள்ளைகள் தாமே தம் தந்தையிடம் தனக்கு என்ன வேண்டும் எனக் கேட்பதும், சகோதரிகளிடையே சீதனத்தால் ஏற்படும் மனக் கசப்புக்களும் இன்று வெகுவாக காணப்படுகின்றதுடன் சீதனம் கொடுத்து மணமுடித்த பெண்கள் மண வாழ்க்கையின் பிற்பாடு கணவனுடனோ, அவரது குடும்பத்தினரிடமோ அதிகாரம் செய்யும் பாங்கும் காணப்படுகிறது. சீதனம் பெண்ணை மகாராணியாக மட்டுமன்றி சர்வாதிகாரியாகவும் மாற்றிவிடும் போக்கும் காணப்படுகிறது.

இன்று சிந்திக்க வேண்டிய முக்கிய அம்சம் யாதெனில் கல்வி அறிவும், வாலிப முறுக்கும், இளரத்தமும், உழைக்கும் வலிமையும், மனோதிடமும் கொண்ட இளம் வாலிபர்கள் கூட பணக்கார வீட்டில் மணமுடித்து போக ஆசைப்படுகின்றனர். சமூகத்தில் மாதர் சங்கங்களும், பெண்ணிய வாதிகளும், பெண்ணிய நிறுவனங்களும் தோற்றம் பெற்றுள்ள போதிலும் கூட சீதனத்தை அழித்துவிட முடியவில்லை என்பதிலிருந்து பெண்களும் சீதனத்தை வார்த்தைகளால் எதிர்க்கின்றனரே ஒழிய அதனை தடுக்க முன்வரவில்லை என்பது புலனாகிறது. இவையே இன்றும் சீதனம் தனது இருப்பை வலுவாக வைத்திருக்க ஏதுவாயிற்று. மற்றும் பெண் விற்பனைப் பண்டமாகிறாள், பேரம் பேசப்படுகிறாள் எனக் கருதப்படும் நிலை இன்று சில பெண்களால் நிராகரிக்கப்படுகிறது. அவர்களைப் பொறுத்த வரையில் இன்று ஆணுக்கு விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசப்படுகிறது. சீதனத்திற்காகவே வளர்க்கப்பட்டு கல்வி புகட்டி நல்ல தொழிலில் ஆண்மகன் நிலை நிறுத்தப்பட்டு அவனது தரத்திற்கேற்ப விலை பேசப்பட்டு திருமண சந்தையில் ஆண் விற்கப்படும் நிலையே இன்று காணப்படுகிறது என்கின்றனர். இதை **ஆண் விபச்சாரம்** என்றும் விபரிக்கின்றனர்.

தற்காலத்தில் ஏற்பட்ட இந்த மாற்றங்களால் சமூகத்தில் பாரிய விளைவுகள் ஏற்பட்டுள்ளன. வட்டிக்குப் பணம் கொடுத்தல், தற்கொலைகள், சீதனச் சாவுகள், சீதனக் கொடுமைகள் போன்றன ஏற்பட்டு விட்டன. இந்தியாவில் திருமணத்தின் பின்னதான சீதனக் கொடுமைகள் அதிகம் என்றே சொல்ல வேண்டும். விவாகரத்து, தீ மூட்டல், தற்கொலை, சித்திரவதைகள் என அன்றாடம் அறியும்படி உள்ளது. சீதனத்தினால் திருமணத்தின் பின்னரான தாக்கங்கள் குறைவாக இருந்தாலும் திருமணம் முடிப்பது என்பதுதான் சிக்கலாய் உள்ளது. இன்றும் திருமண வயதை எட்டிய பெண்கள் அதிகரித்துச் செல்லும் போக்கிற்கு இதுவே காரணம் எனவும் கூறப்படுகிறது.

***இன்று இருப்பவர்கள் பணத்தை வாரித் தன் பிள்ளைக்கு சீதனமாக அள்ளி அள்ளி கொடுக்கிறார்கள். பணம் இல்லாதவர்களின் நிலை என்ன ஆவது?*** சீதனத்தில் எதுவித நன்மைகளுமில்லை இதனை சமுதாயத்தில் இருந்து களைய வேண்டும் எனப் பரவலாக பேசப்படுகின்ற போதும் அதிலுள்ள சில நன்மைகள் ஒரு சிலரால் ஏற்கப்படுகின்ற தன்மையும் உள்ளது. சீதனம் நன்மையானது என வாதிடும் ஒருசில பெண்களது நியாயப்படுத்தல்களை நோக்குவோமாயின் சீதனம் என்ற நடைமுறை சமூகத்தில் இல்லாதுவிடின் பெண்களுக்கென எதுவித சொத்துக்களும் இருந்திருக்க வாய்ப்பில்லை என்ற விதத்தில் அமைந்த வாதங்களும் உள்ளன. நாம் வாழும் இந்த சமுதாயத்தில் ஒரு சில செயல்களை ஆண்கள் செய்தால் ஒரு பார்வையிலும், பெண்கள் செய்தால் வேறோரு பார்வையிலும் காணும் குணாதிசயம் இருக்கின்றது. மேலும் பெண் குழந்தைகளைப் பெற்றோர்கள் தங்களுக்கு கடன் சுமையை அதிகரிக்க பிறந்திருப்பதாகவும், ஆண் குழந்தை தங்களைக் காப்பாற்றும் என்றும் நினைக்கின்றார்கள். இவ்வாறு இந்த சமூகம் ஆணுக்கும் பெண்ணுக்கும் குறிப்பிட்ட சில வரையறைகளை வகுத்துள்ளது. இவ்வாறு சமூகத்தால் பெண்ணுக்கென ஒதுக்கப்பட்டதே சீதனம் ஆகும்.

சீதனமானது பண்பாடு என்ற ரீதியில் சமூகத்தினுள் நுழைந்த ஒரு அம்சம். ஆனால் இன்று சீதனத்தின் பங்கு சமுதாயத்தில் அதிகரித்துள்ளதுடன் அது தனக்கான இடத்தை விரிவாக்கிவிட்டது. இதனால் பல பாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆக சீதனம் வெறுமனே ஒரு கலாசாரம், பண்பாடு என்றோ அல்லது அது ஒரு சமூகப்பிரச்சினை என்றோ ஒதுக்கிவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை, கடமை பற்றிய மெய்யியல் - ஒழுக்கவியல் நோக்கு

**புலேந்திரன் நேசன்,**
**உதவி விரிவுரையாளர்,**
**மெய்யியல் மற்றும் உளவியல் துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



உரிமை, கடமை பற்றிய எண்ணக்கருக்கள் மெய்யியலிலே பெரிதும் பேசப்படுகின்றன. இவை பல்வேறு அடிப்படையிலும் ஒன்றுடன் ஒன்று இணைவு பெற்ற வகையிலே அர்த்தம் பெறுகின்றன.

**உரிமை என்றால் என்ன?**

திருப்திகரமான குடியியல் வாழ்க்கையையும் அரசியல் வாழ்க்கையையும் அனுபவிப்பதற்கு மனிதர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை நிபந்தனைகயே உரிமைகள் என்று சுருக்கமாக் கூற முடியும். மனித உரிமைகள் பற்றிய எண்ணக்கருவை முதலாவதாக ஒரு ஒழுக்கம் சார் எண்ணக்கருவாகவே அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டும். இதன் அர்த்தம் சரி, பிழை, நன்மை, தீமை பற்றிய மூலக்கொள்கையின் படியே மனித உரிமைகள் பற்றிய எண்ணக்கரு நியாயமாகிறது என்பதாகும். ஒழுக்கம் என்பது அனைத்துலகத் தன்மை பொருந்தியதாகும். அனைத்துலக ஒழுக்கம் என்பது பொது மனிதத்துவம் ஆகும். இப் பொது மனிதத்துவத்தை அளவுகோளாகக் கொண்டு மனித உரிமைகள் விளக்கப்படுகின்றன.

**உரிமைகள் பற்றிய அறிஞர்களது கருத்துக்கள்.**

- ***லஸ்கி:*** *மனிதன் தனது சமூக வாழ்வை சிறப்பாக வாழ தேவைப்படும் நிபந்தனைகளே உரிமைகளாகும்.*
- ***அரிஸ்ரோட்டில்:*** *மனிதன் வாழ்ந்தால் மட்டும் போதாது அவன் உரிமையுடன் வாழவேண்டும். அதாவது மனிதன் சமூகத்தில் நன்றாக வாழ வேண்டும். அவனது நலன்கள் பாதுகாக்கப்பட்டால் தான் நன்றாக வாழ இயலும். தனது நலனைப் பேணி பொது நலனையும் பாதுகாப்பதற்கு ஒருவருக்குள்ள சக்தியே உரிமைகள் எனப்படும். எவ்வாறு சமூக வாழ்வு நிலை பெற அரசாங்கம் பிறந்ததோ அவ்வாறே தனி மனிதனின் வாழ்வை வளமாக்குதல் உரிமையின் கடமையாகும்.*
- ***தோமஸ் பெயின்:*** *மனிதன் என்ற முறையில் எவையெல்லாம் எனது உரிமைகளோ அவையெல்லாம் பிறவின் உரிமைகளாகும். என் உரிமையை நான் விரும்பி அடைவது போல பிறர் உரிமையை உத்தரவாதம் செய்யவும் நான் கடைமைப்பட்டவன்.*
- ***ஹேறபர்ட் ஸ்பென்ஸர்:*** *ஒவ்வொரு மனிதனும் தாம் விரும்புவதை மற்றவர்களைப் பாதிக்காமல் செய்து பயனடைதல் இயற்கை உரிமையாகும்.*

உண்மையில் எவருடைய தூண்டுதலும் இன்றி மக்கள் தாமாகவே செயல்படுவதற்கு எந்த ஆற்றல்களை அல்லது அதிகாரங்களைப் பெற்றிருக்கிறார்களோ அவ் ஆற்றல்களுக்கு அல்லது அதிகாரங்களுக்கு நாட்டுச் சட்டத்தில் பாதுகாப்பும் அதிகாரத்தில் ஆதரவும் இருக்குமானால் அவ் அதிகாரங்கள் அல்லது ஆற்றல்கள் உரிமைகள் எனப்படும்.

மனித உரிமையின் வரலாறு பல ஆயிரம் ஆண்டுகளை உள்ளடக்கியுள்ளதுடன் பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக் காலம் முழுவதிலும் சமயம், பண்பாடு, மெய்யியல், சட்டம், கருத்தியல் ஆகிய துறைகளின் வளர்ச்சியினால் வளம் பெற்றுள்ளது. மனித உரிமைகள் என்பது எல்லா மனிதர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையான உரிமைகளும், சுதந்திரங்களுமாகும். இவ் உரிமைகள் மனிதர்கள் மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்கட்குக் கிடைத்த அடிப்படையான விட்டுக் கொடுக்க அல்லது மறுக்க இயலாத சில உரிமைகளாகக் கருதப்படுகின்றன. அதாவது உரிமைகள் இயற்கையானவை. அவை மனித இயற்கையிலிருந்து இயல்பாகத் தோன்றியவையாகும். இனம், சாதி, நிறம், சமயம், பால், தேசியம், வயது, உடல், உள வலு ஆகியவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு தனி மனிதருக்கும் இருக்கும் இவ் அடிப்படை உரிமைகள் மனிதர்கள் சுதந்திரமாக, சமூகமாக நலமாக வாழ அவர்களுக்கு இயல்பாக இயற்கையாக இருக்கும். உரிமைகள் என்பது மனித உரிமைகளின் மூலம் பற்றிய ஒரு மெய்யியல் நோக்காகும்.

மனித உரிமைகள் வரலாறு முழுவதும் தொடர்ந்து உருவாகி வந்துள்ள ஒரு கோட்பாடாகும். மனித உரிமைகள் தொடர்பான குறிப்புக்களைக் கொண்ட சட்டத்தொகுப்பின் அடிப்படையாக 'ஹமுறாபி' சட்டத்தொகுப்பைக் குறிப்பிடலாம். ஹமுறாபி பிரமாணங்கள் கி.மு 4ஆம் நூற்றாண்டுகட்கு முன்னர் உருவாக்கப்பட்டது. இது 282 சட்டங்களை உள்ளடக்கி இருந்தது. அதே போன்றதே 'பபிலோனிய அஸ்அரிச் சட்டங்கள்', 'இந்திய வேதகால தர்மங்கள்' போன்றவற்றிலும் கூறப்பட்டுள்ளது. மனித உரிமைகளை மெய்யியல் வரலாற்றுடன் தொடர்புறுத்தி நோக்கும் போது கிரேக்க காலம், மத்திய காலம், நவீன காலம், தற்காலம் என வளர்ச்சியடைந்து வந்துள்ளமையினைக் காணலாம். கிரேக்கக் காலத்திலேயே தன்னிச்சைப் படியான துன்புறுத்தலைத் தடுப்பதை விட மனித உரிமைகள் கோட்பாடு என்பது ஒரு மகத்தான பொருளில் விளங்கியது. மனித உரிமைகள் இயற்கை உரிமையோடு அதாவது இயற்கைச் சட்டத்திலிருந்து கிடைக்கின்ற உரிமைகளோடு ஒத்ததாகக் காணப்படுகிறது.

மத்திய காலத்தில் கொள்ளை அளவிலான அதிகாரத்தை மட்டற்ற முறையில் பிரயோகிப்பதை ஒழுக்க நெறிகள் கட்டுப்படுத்தின. கட்டுப்பாடற்ற அதிகாரத்தைப் பெற விரும்பிய மன்னர்கள் தமக்கு ஆதாரமாகக் காட்டிய தெய்வ வழி உரிமை என்னும் மத்திய காலக் கொள்கை அரசின் மாட்சிமை மிக்க மன்னர்களுக்குரிய விசேட சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டது. இவ்வாறு காலகட்ட ரீதியாக மனித உரிமை தொடர்பான கருத்து முன் கொண்டு செல்லப்பட்டாலும் 1215ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி இங்கிலாந்து மன்னன் ஜோன் அளித்த **"மக்னா காட்டா"** உரிமைகள் சாசனம் பிரபுத்துவ உரிமைகளையும் அரசன் மக்களுடைய சலுகைகளை ஆக்கிரமிக்க மாட்டார் என்றவாறான ஒப்பந்தமாக காணப்பட்டது.

மனித உரிமைகள் பல வகைப்படுகின்றன. பல்வேறு அறிஞர்கள் பல்வேறாகப் பிரிக்கின்றனர். அவையாவன அரசியல் உரிமைகள், இயற்கை உரிமைகள், குடியியல் உரிமைகள், அடிப்படை உரிமைகள், சமூக உரிமைகள், பொருளாதார உரிமைகள் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். குடியியல் உரிமைகளிலேயே சமூக உரிமைகள் மற்றும் பொருளாதார உரிமைகள் அடங்கும். சமூக உரிமைகளில் வாழ்வதற்கான உரிமை, கல்வி கற்பதற்கான உரிமை, விரும்பிய மதத்தை பினபற்றுவதற்கான உரிமை, சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமான உரிமை, ஒன்று கூடும் உரிமை, பேச்சு உரிமை, எழுத்து உரிமை, சம வாய்ப்புக்களைப் பெறவதற்கான உரிமை, குடும்ப வாழ்க்கையை அனுபவிப்பதற்கான உரிமை, காரணமின்றிக் கைது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படாது இருப்பதற்கான உரிமை, குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கும் வரை நிரபராதி என்ற அந்தஸ்தில் இருக்கும் உரிமை, காலாவதியான சட்டங்களினால் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை, நடமாடும் உரிமை, பொது நடவடிக்கைகளில் பங்குபற்றும் உரிமை, ஒப்பந்த உரிமை போன்றவற்றைக் கூறலாம்.

பொருளாதார உரிமைகளில் வேலை செய்யும் உரிமை. நியாயமான சம்பளத்தைப் பெறும் உரிமை, தொழிற் சங்கங்களை அமைக்கும் உரிமை, தொழிற் சங்க அங்கத்துவங்களைப் பெறும் உரிமை, விரும்பிய தொழில் ஒன்றை ஆரம்பிக்கும் உரிமை, சொத்துரிமை, ஓய்வெடுப்பதற்கும் பொழுது போக்கிற்குமான உரிமை என்பனவாகும். அதே போல அரசியல் உரிமைகள் என்னும் போது வாக்களிக்கும் உரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, அரச பதவிகளை வகிக்கும் உரிமை, அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை, அரசாங்கத்துக்கு மனுத் தாக்கல் செய்யும் உரிமை போன்றவற்றைக் கூறலாம்.

**கடமை என்றால் என்ன?**

மனித உரிமைகள் பற்றி நோக்குமிடத்து அவற்றோடு இணைந்துள்ள கடமைகளையும் பொறுப்புக்களையும் அறியாது செயற்படுதல் பயனற்றதாகும். உரிமைகள் கடமைகளைத் தொடர்கின்றன. ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல் உரிமைகளோடு கடமைகளும் இணைந்துள்ளன. கடமைகளைச் செய்யாது உரிமைகளோடு மட்டும் அனுபவிக்கும் போது அங்கு குழப்பங்கள் ஏற்படுகின்றன. அதேவேளை ஒருவனுக்கு உரிமைகளை வழங்காது கடமைகளை மட்டும் சுமத்தினால் அவன் அடிமையாகி விடுவான். அதனால் உரிமைகளும், கடமைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகும்.

**கடமையின் வகைகள்**

**1. மனித உரிமைகள் தொடர்பாக அரசுக்குள்ள கடமைகள்.**

மனிதப்பிறவி என்ற அடிப்படையில் மனிதன் பெறும் உரிமைகள் நிறைவு பெறவேண்டுமாயின் அவை அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இப் பிரதான பொறுப்பை நிறைவேற்றுவதே அரசின் பிரதான கடமையாகும். இதன்படி உரிமைகளை வழங்குவதும் பாதுகாப்பதும் நடைமுறைப்படுத்துவதும் அரசு எனும் நிறுவனமாகும். அதனால் அரசானது மனித உரிமைகளைச் சார்ந்த பாரிய பொறப்புள்ள கடமைகளை செய்கின்றது. சகல வகையான மனித உரிமைகளும் அரசின் மீது பிரதான 3 வகையான கடமைகளை சுமத்துகிறது.

1. கௌரவம் மதிப்புசார் கடப்பாடு
2. பாதுகாப்பு சார் கடப்பாடு
3. பூர்த்தி செய்தல் சார்ந்த கடப்பாடு

மேற்குறிப்பிட்ட கடமைகளின் படி அரசு தன்னால் இயன்றதை மேற்கொள்ளாதிருக்கும் நிலையோ அல்லது அரசு தனது பொறுப்பினை தட்டிக்கழிப்பதன் மூலம் ஏதேனும் ஒரு உரிமை மீறப்படும் நிலையோ மனித உரிமை மீறல் நிலை எனப்படும். எவ்வாறாயினும் மனித உரிமைகள் மீதான அரசின் கடப்பாடுகள் அரசின் அதிகார பூர்வமான வெளியீடோ அல்லது அரசு தனது கருணையின் அடிப்படையில் மேற்கொள்வதோ அன்றி, அது மனித உரிமைகள் தொடர்பாக மனிதர் முன்வைத்த கோரிக்கைகளில் இருந்து உருவானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. மனித உரிமைகள் தொடர்பாக தனி மனிதனுக்குள்ள கடமைகள்.**

மனித உரிமைகளுக்கும், கடமைகளுக்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் மனிதன் ஒழுங்கு முறையின் அடிப்படையிலும் சட்டரீதியாகவும் பெற்றுக் கொள்ளும் உரிமைகளுக்குப் பதிலாக அவன் சில கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டும். உரிமைகள் மனிதனால் சரியாகப் பயன்படுத்தப்படும் போது தான் பொருளுடையதாகின்றன. அதனால் கடமைகளைச் சரியாக செய்யுமாறு தனி மனித உரிமைகள் மனிதனைத் தூண்டுகின்றன. எடுத்துக்காட்டாக எனக்குள்ள பேச்சுரிமையானது அதனை சரியாக பயன்படுத்த வேண்டும் என்ற கடமையை என் மீது சுமத்துகிறது. அப்போது தான் நான் மட்டுமன்றி பிற மனிதரும் சமூகமும் நாடும் பயன்பெறுகின்றன.

மனித உரிமைகள் சட்டம் சார்ந்தவை, ஒழுக்கம் சார்ந்தவை எனப் பிரிக்கப்படுவது கடமைகளையும் சட்டம் மற்றும் ஒழுக்கத்தின் பாட்பட்டவை என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். சட்டக் கடமைகள் நீதி மன்றுகளால் வலியுறுத்தப்படுபவை. அவற்றை நிறை வேற்றாவிட்டால் அவன் தண்டனைக்குள்ளாவான். ஒழுக்கக்கடமைகள் நீதிநெறி அடிப்படையில் எழுந்தவையாகும். சமூகத்தினதும் பிற மனிதரினதும் ஒப்புதல் அல்லது ஒப்புதல் இன்மையின் அடிப்படையில் அது இயங்குகின்றது. பெற்றோருக்கு மரியாதை செய்தல், அவர்களைப் பராமரித்தல், ஏழைகளிடம் பரிவு காட்டுதல் போன்றவை நீதி நெறிக் கடமைகள் ஆகும்.

மனித உரிமைகள் மனிதன் மீது சுமத்தும் கடமைகளை மூன்றாக வகுக்கலாம்

1. பிற மனிதர் மீது மனிதனுக்குள்ள கடமைகள்.
2. சமுதாயத்தின் பால் மனிதனுக்குள்ள கடமைகள்.
3. அரசு தொடர்பாக மனிதன் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்.

எனவே, உரிமைகளை அனுபவிக்கும் மனிதன் தனக்குள் மேற்கூறப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதிலும் ஒழுங்காகச் செயற்படுவதே சிறந்த ஒழுக்கமாகும்.

**உரிமையும் கடமையும்**

உரிமையும் கடமையும் ஒன்றை தழுவிய இரு வேறு கருத்தாக்கங்களாகும். ஒருவரின் உரிமை இன்னொருவரின் கடமையாகவும், இரண்டாமவரின் கடமை முதலாமவரின் உரிமையாகவும் அறியப்படுகிறது. உரிமை, கடமை என்ற சொற்களைப் பயன்படுத்தும் மெய்யியலாளர்கள் இவை ஒரு நியம கருத்துடையவை என ஏற்றுக்கொண்டிருந்தனர். x என்பவர் y என்பதனைச் செய்ய உரிமை பெற்றுள்ளார். இயல்பில் வேறுப்பட்டவை. x இடம் ஒரு தொலைபேசி உள்ளது என்பது போன்ற கூற்றுக்களும் ஒரே விதமானவை என இவர்களால் கருதப்பட்டது. உண்மையில் இவ்விரு கூற்றுக்களும் இயல்பில் வேறுப்பட்டவை. x இடம் ஒரு தொலைபேசி உள்ளது என்ற கூற்று அதற்குரிய நேர்வினை அவதானிப்பதன் மூலம் வாய்ப்புப் பார்க்கப்படலாம் ஆனால் y என்பவர் செய்ய உரிமையுடையவர் என்ற உண்மையினை அறிவதாயின் நேர்வினை தேடுவதற்குப் பதிலாக நடைமுறையில் இருக்கும் சட்டங்களினை ஆராய்தல் வேண்டும் என்பர்.

புலனறிவு வாதிகளின் கருத்துப் படி உரிமைகள், சட்டம் என்ற தொடர்பின் அடிப்படையிலேயே கருத்துடையனவாகின்றன. இந்த வகையில் உரிமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் சட்டத்தினால் பாதுகாக்கப்படும் நலன் என்று கொள்ளப்படும். சட்டத்தினால் வெறுமனே ஒரு உரிமையைப் பாதுகாக்க முடியாது. உரிமை அதை உடையவர் மீது உறையும் போது தான் அது உரிமையாக கணிக்கப்படுகின்றது. உடையவர் இல்லாத உரிமை இருக்க முடியாது. ஆகவே உரிமை என்று கூறும் போது பொதுவாக பின்வரும் அம்சங்கள் வலியுறுத்ததப்படுகின்றன. உரிமையை உடையவர் உரிமையின் நிமித்தம் ஏற்படும் கடமையைச் செய்ய வேண்டியவர் உரிமையின் நிமித்தம் செய்ய வேண்டிய செயல் உரிமையைச் சார்ந்த பொருள் உரிமையைப் பெற்றவரின் பாத்தியம் என்பனாகும்.

இங்கு உரிமை என்று கூறும் போது அதையொட்டி அரசு அல்லது சமூகம் ஒரு தனி நபருக்கோ ஒரு கூட்டத்தினருக்கோ செய்ய வேண்டிய கடமை ஒன்றுள்ளதையும் அறியலாம். "ஒவ்வொரு உரிமையும் அதனுடன் தொடர்புடைய கடமையில் தங்கியுள்ளது என்கிறார்" ஒஸ்ரின் . பெரும்பாலான மனிதர்கள் ஓரளவு நிலையான சமூக அரசியல் சூழ்நிலையில் வாழ்கின்றனர். இதனால் தான் சிலர் உரிமைகளை உடையவர்கள் என்றும் மற்றவர்களுக்குச் சில கடமைகளினை தாம் செய்ய வேண்டியவர்கள் என்றும் அனுமானித்துக் கொள்கின்றனர். இங்கு உரிமைக்கும் கடமைக்கும் இடையிலான தொடர்பு என்ன என்பது வினாவாகின்றது உரிமையும் கடமையும் ஒரே நியமத் தொடர்பின் இரு வேறுப்பட்ட பெயர்கள் என்றும் இதனால் உரிமைகளே கடமைகளைப் பிறப்பிப்பதாகவும் கூறப்படுகின்றது. இது தர்க்க கட்டாயப்படுதல் அல்ல ஆனால் ஒழுக்கவியல் கருத்திலேயே பேசப்படுகிறது.

சமூகத்தொடர்பில் தான் உரிமைகளும் கடமைகளும் இருப்பதாக கூறப்படுகிறது. அதாவது சிலவற்றைச் செய்யும் உரிமையும் சிலவற்றை செய்ய வேண்டிய கடப்பாடுகளும் சமூக இயக்கத்தில் மட்டுமே காணப்படுகின்றன. அதாவது எந்தெந்த நலன்களைப் பேணுவதற்காக சட்டமானது மற்றையோர் மீது கடமைகளை விதிக்கின்றதோ அந்த நலன்களே உரிமையாகின்றன. இவ்வாறு "உரிமை என்பதை சமுதாயத்தில் நேர்மையானது எனக்கூறும் போது அக் கூற்றை நிறைவேற்றும் கடப்பாட்டை கடமை எனலாம்" என்பது வில்லியம் லில்லியன் கருத்தாகும் .மேலும் இவர் "பொது நலனின் பெயரால் ஒரு சமுதாயமோ வேறு சிலரோ சமுதாயத்தில் அமைந்திருப்பவர்களே தனிமனிதர் ஒருவரிடம் உரிமையும் கேட்பதை அந்த தனி மனிதன் தன் கடப்பாடாக கொண்டு நிறைவேற்றுவதை தான் 'கடமை' என்ற சொல் குறிக்கின்றது" என்கிறார்.

கடமைக்கும் உரிமைக்குமான தொடர்பை லில்லி தரும் பின்வரும் எடுத்துக்காட்டின் மூலம் புரியலாம் "ஒரு குழந்தைக்குக் கல்வி கற்க உரிமை இருக்கிறது என கூறும் போது அதன் பெற்றோருக்கோ நாட்டுக்கோ அக்குழந்தைக்கு ஏற்ற கல்வியை புகட்டுவது கடமையாகின்றது. அதாவது ஒரு மனிதனுக்கு ஓர் உரிமை இருப்பதாக கூறும் போது வேறொரு மனிதனுக்கு அல்லது சமூகத்திற்கு அவ்வுரிமை காரணமாக எழும் கடமைகளை செய்து முடிக்க வேண்டும் என்ற நிலை ஏற்படுவதை அறியலாம். எவரும் தம்மால் செய்ய முடியாத செயல்களைப் பற்றி எண்ணி காலத்தை வீணாக்கிவிடக் கூடாது" என்பர். உரிமையும் கடமையும் ஒன்றாக சேரும்போது தான் மனித உரிமை முழு வடிவம் பெறுகிறது. சரியாகக் கடமையை செய்யாதவன் மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை பற்றிப் பேசக்கூடாது. பேசவும் முடியாது ஒருவருக்கு இயற்கையாக கிடைக்கும் உரிமைகளை யாரும் தடுக்கவோ அழிக்கவோ முடியாது. உரிமைகளை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். கடமைகளை ஒழுங்காகச் செய்வதன் மூலம் மனித உரிமைகளைப் பாதுகாக்கலாம். எப்போதெல்லாம் உரிமைகள் பறிக்கப்படுகின்றதோ அப்போது அதனை போராடி மீட்க வேண்டியது மனித சமூகத்தின் கடமையாகும்.

**உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி பல்வேறு சமயங்களின் கருத்துக்கள்**

உரிமைகளை அனுபவிப்பதையும் கடமைகளை நிறைவேற்றுவதைப் பற்றியும் இந்து சமயம், பௌத்த சமயம், கிறிஸ்தவ, சமயம் இஸ்லாம் போன்ற சமயங்கள் பல்வேறு விடயங்களை விளக்குகின்றன. இந்து சமயத்தில் இராமாயணம், மகாபாரதம் என்பன அடிப்படை உரிமைகளைப் பேசுகின்றன. மனுஸ்மிருதி ஆட்சியாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிகள், கடமைகள் பற்றிய தனி மனித கடமைகள் பற்றியும் அவை பேசுகின்றன. சிறுவர் உரிமை, கல்வி உரிமை, ஒழுக்கம் போன்றவற்றையும் கூறுகின்றன.

மேலும் பௌத்த மதத்தில் "மனிதனாப் பிறந்த சகலருக்கும் சமமான அந்தஸ்து இருக்க வேண்டும்" என்று புத்தர் கூறினார். மேலும் பஞ்சசீல, அட்ட சீல, தஸ சீல போன்றவற்றிலும் பல்வேறு வகைகளில் மனித உரிமைகள், கடமைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்தவ சமயத்தில் மனித உரிமைகள் பற்றி கூறும் போது ஒருவனது உயிரையோ உடலையோ கொண்டு விடாதே கொலை செய்பவர் தீர்ப்பு நாளில் ஆபத்தை சந்திக்க நேரிடும் என்றும் நீ நல்லவனாக இருந்தால் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்துக்கொள் என்றும் நல்லவனுக்கும் கெட்டவனுக்கும் ஒரே மாதிரியான அன்பைக் காட்டுவாயாக என்றும் சமாதானத்தை உண்டாக்குபவர்கள் கடவுளின் குழந்தைகள் என்றும் கொலை செய்யாது இருப்பாயாக என்றும் பிறர் உடைமையை விரும்பாது இருப்பாயாக என்றும் கூறப்படுவதைக் கானலாம்.

அடுத்து இஸ்லாமிய சமயத்தில் புனித அல்குர்ஆனில் மனித உரிமைகளையும் கடமைகளையும் வலியுறுத்தும் வகையில் வசனங்கள் அமைந்திருப்பதை அறியலாம். "மனிதர்களே நாம் உங்களை ஒரு ஆணில் இருந்தும் பெண்ணில் இருந்தும் படைத்தோம் பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில் உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் அதிக இறையச்சம் கொண்டவர் தான்"

"வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள்"

"ஒரு சாராரின் மீது நீங்கள் கொண்டிருக்கும் வெறுப்பு உங்களை அத்து மீறலான செயலுக்குத் தூண்டக்கூடாது"

எனவே, இவ்வாறு மனித உரிமைகள் கடமைகள் பற்றி அனைத்து சமயங்களும் பேசுகின்றன.

**உரிமைகள், கடமைகள் பற்றிய விமர்சன ரீதியிலான மெய்யியல் நோக்கு**

பொதுவாக உரிமைகள், கடமைகள் பற்றி அரசியலில் பேசப்பட்டாலும் மெய்யியல் மற்றும் ஒழுக்கவியல் நோக்கில் உரிமைகள், கடமைகள் பற்றிய எண்ணக்கருக்களை ஆராய்வது இவ்விடத்தில் சாலப் பொருந்தும் கிரேக்க காலத்தில் சோக்கிரடீசின் காலம் தொடக்கம் இன்று வரை மெய்யியலாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனம் செலுத்திய எண்ணன்கருக்களில் உரிமைகள், கடமைகள் என்பன முக்கியம் பெறுகின்றன.

ஆதி கிரேக்க மெய்யியலாளரான பிளேட்டோ தனது குடியரசு என்ற நூலில் ஆள்வோரின் தகுதியும் கடமையும் பற்றிப் பேசுவது அறியத்தக்கது. இவரது கருத்துப்படி 'நீதிநெறி' என்பது தனி மனித வாழ்வில் ஆன்ம இணக்கமாகவும் சமுதாய அரசியல் வாழ்வில் தத்துவ இணக்கமாகவும் காணப்படுகின்றது. தனி மனித வாழ்விலும் அரசியல் அமைப்பிலும் நீதி நெறியை நிலவச் செய்வது ஆள்வோரின் கடமை அணைத்திற்கும் பொறுப்பேற்பவர்கள் ஆள்வோர்களே என்பது பிளேட்டோவின் அரசியல் தத்துவ மரபாகும்.

மேலும் பகுத்தறிவு இயல்பாக மேம்பட்டிருப்பவர்கள் ஆளும் தகுதியடையவர்கள். ஆண் நாயைப்போலவே பெண் நாயும் வீட்டைக் காக்க வல்லது என்ற உவமை கூறி அறிவுடைய பெண்களும் ஆள்வோர் வரிசையில் இடம் பெறலாம் என்கிறார்.

அடுத்து அரிஸ்டோட்டில் உரிமைகள் பற்றி கூறி உள்ள கருத்தை நோக்கின் அது பிளேட்டோவின் கருத்துக்கு மாற்றமானதாகவும் தற்கால நடைமுறைக்கு பொருத்தமற்றதாகவும் இருப்பதை அறியலாம். அதாவது இவரது கணிப்பில் பெண்கள் ஆண்களுக்கு அடங்கிச் செயல்பட வேண்டிய அடிமைகள், இயல்பாகவே பெண்கள் ஆண்களை காட்டிலும் தாழ்ந்தவர்கள், வளர்ச்சி ஏணி படியின் கீழ் இருப்பவர்கள் என்று தவறான கருத்தை கூறினார். மேலும் பெண்கள் மன உறுதி இல்லாதவர்கள் என்பதால் தனித்து நின்று செயல்படும் தகுதியும் திறமையும் பென்களுக்கு இல்லை, வீட்டின் அமைதியான வாழ்வு நடத்தவே அவர்களால் முடியும், வாய் மூடி மௌனியாக இருப்பதே பெண்ணுக்கு பெறுமை, ஆணையிடுவது ஆணுக்கு வீரம், ஆணைக்கு அடிபணிவது பெண்னுக்கு அழகு மேலும் திருமண வயது கருவுறுவதற்கேற்ற காலம் மக்கள் தொகை போன்றவற்றை அரசே தீர்மானிக்க வேண்டும், முப்பது வயது ஆண் இருபது வயதுப் பெண்னை மணந்தால் அவர்களது பாலுணர்வு ஒத்த நிலை உடையதாகவும் ஒரே காலத்தில் நிறைவு பெறுவதாகவும் அமையும் என அரிஸ்டோட்டில் கருதுகிறார். “பிறந்த குழந்தையை கொல்வதைக் காட்டிலும் பிறக்க முன் கருக்கலைப்பு செய்வதே சிறந்தது” என்றும் இவர் கூறினார். இவரது கருத்துப் படி ஆண் பெண் சமத்துவமாக உரிமையை அனுபவிக்கும் நிலை நிராகரிக்கப்படுவதை அறியலாம்.

அடுத்து சமயம் மேலோங்கி இருந்த மத்திய காலத்தின் மெய்யியலாளரான புனித அக்குவைனாஸ் இறையியலை தத்துவத்தோடு இணைத்ததால் 'கிறிஸ்தவ அரிஸ்டோட்டில்' என்று அழைக்கப்படுகிறார். இவர் உரிமைகள் பற்றிப் பேசும் போது இறையியல் சட்டம் நிரந்தரமானது ஒவ்வொருவருக்கும் உரிய உரிமைகளை வழங்கும் பொருட்டு உறுதியாக நிலைப்பெற்று இருக்கும் தீர்ப்பு தான் நீதியாகும் ஆட்சியாளனுக்கு சமயம் முக்கியம் இல்லை என்றாலும் அரசின் திருச்சபைக்குக் கட்டுப்பட வேண்டும் திருச்சபையின் கீழ் வாழும் ஏனையோரின் உரிமைகள் மறுக்கப்படக்கூடாது நியாயத்தைத் தீர்மானிப்பதற்கு உதவும் உரிமை விதிகளே” என்றும் கூறினர்.

அடுத்து நவீன கால மெய்யியலாளரான காண்டின் ஒழுக்கவியல் “கடமை” என்று கருத்தாக்கத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு ஒழுக்கவியல் கோட்பாடாகும். ஓரளவு நடைமுறை தேவை அல்லது ஆசையை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையின் பொருட்டு புரியப்படும் செயல்கள் மட்டுமே நல்லதாகும். ஒரு நன்மைக்கான சித்தம் மட்டுமே உள்ளார்ந்த நல்ல அம்சமாகும். அதாவது, பயன்கருதாது கடமையின் பொருட்டு செய்யப்படும் செயல்களே ஒழுக்கச் செயல்கள் என வலியுறுத்தப்படுகின்றது. இது ஒழுக்க விதிகளின் காண்டினுடைய அடிப்படையை வலியுறுத்துவதோடு பொதுமையான ஒழுக்க தீர்மானங்களுக்குரிய தேவை என்பதும் அவரது நம்பிக்கையாகும். இவை சார்ப்பற்ற கடப்பாடு என்ற கோட்பாட்டுக்கு வழி வகுத்தது. இவ்வாறு உரிமை, கடமைகள் பற்றிய எண்ணக் கருக்கள் அமைந்து காணப்படுகின்றது.

# அவித்தை

நான்!
சிந்திக்கவில்லை - ஆனால்
உயிரின் இருப்பு
உணரப்படவே செய்கிறது
இற்றைவரை.

உடலுள் உயிர் வாழவே
ஹிருதயம் நெஞ்சுள்ளே
புதையுண்டு உள்ளது
மனிதன் வாழ்கிறான்
மற்றொன்று மாண்டுவிட்டது
கவர்ச்சிப் பொருளாக ஒன்று
கருத்துப்பொருளாக மற்றொன்று
மனிதன்
மனிதம்
வேறாகிவிட்டது - ஆனால்
உயிரின் இருப்பு உணரப்படவே
செய்கிறது
இற்றை வரை.

ஓ...ஓ...நான்
சிந்திக்கின்றேன் – ஆகவே
உயிரோடுதான் இருக்கிறேன் –
அவை
எவை என
எண்ணுகையில் உலகம்
எங்கோ உருண்டோடி விடுகிறது
நான் அப்படியே இருக்கிறேன்

சிந்தித்தவைக்கும்
சிந்தித்துகொண்டு
இருப்பவைக்கும்
சிந்திக்க போவதுமானவற்றுக்கும்
உருக்கொடுத்து
உயிர் அளிக்க முன்னமே
உலகம் அவற்றை
அமரத்துவப்படுத்திவிடுகிறது.

உண்மைகள் யாவும்
உண்மையற்றதாகவும் –
பொய்கள்
யாவும் பொய்களற்றதாகவும்
இசைவாக்கமடைகின்றன.
மரணித்தவனாய்
நோக்குகின்றேன்

ஆகவே
நான் சிந்திக்கவில்லை –
ஆனாலும்
உயிரின் இருப்பு
உணரப்படுகிறது
இற்றைவரை....

இ.ஜெயந்தன், மூன்றாம் வருடம்,
மெய்யியல் மற்றும் உளவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்குச் சொந்தம்...

**பிரியந்தினி சத்தியசீலன்,**
**முதலாம் வருடம்,**
**விவசாய பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



"***பிரபல*** நடிகை நித்தியாவின் திடீர் முடிவு: நடிப்புத் துறைக்கு பிரியாவிடை கொடுத்தார்.", சுடர் வானொலியின் செய்திகள் ஒலித்துக் கொண்டு இருந்தது. இன்றைய நாளின் பரபரப்பான செய்தி அது தான். நித்தியா மிகச்சிறந்த நடிகை. வேற்று மாநிலப் பெண் கதாநாயகிகளால் தமிழ் சினிமா ஆக்கிரமிக்கப்படும் இக்காலத்தில் தன் நடிப்பால் மட்டும் ரசிகர்களைக் கவர்ந்த தமிழ்ப்பெண். அண்மையில் அறிவிக்கப்பட்ட தேசிய விருதுகளில் இரண்டு நித்தியாவிற்கு சொந்தமானது. அப்படியிருக்க இன்று இந்த திடீர் முடிவு அனைவரையும் குழப்பிக் கொண்டிருந்தது.

செய்தியைக் கேட்டபடியே வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் அனு. அந்தச் செய்தி அவளையும் விட்டுவைக்கவில்லை. நித்தியாவின் நடிப்பைக் கண்டு அவளுக்கு அடிமையானவர்களில் அனுவும் ஒருத்தி. அதனால் அவளின் மனமும் குமுறியது. "முட்டாள்..." அனுவின் வாய் தன்னை அறியாமல் முணுமுணுத்தது. "நடிப்பின் அருமை தெரியாதவள். சினிமாத்துறை இவளுக்கும் விளையாட்டாகி விட்டது. நல்ல வாய்ப்புகள் தேடி வரும் நேரம் ஏன் இப்படி ஒரு முடிவு? முட்டாள்... முட்டாள்" அவள் தனக்குத் தானே கூறிக்கொண்டாள்.

நித்தியாவின் முடிவை விமர்சிக்கும் தகுதி அனுவிற்கு உண்டு. பேபி அனு, அன்றைய தமிழ் சினிமாவின் குழந்தை நட்சத்திரம். மழலை மாறா வயதிலே அரிதாரம் பூசியவள். தமிழ் சினிமாவின் பிரபலங்களின் மடியிலும் தோளிலும் உரிமையோடு தவழ்ந்த குழந்தை. விவரம் அறியாத வயதிலே காட்சியோடு ஊறிக்கரைந்து போக அந்தச் சிறுமிக்குத் தெரிந்தது. விளையாடும் வயதிலேயே பல விருதுகளைக் கண்டவள். சிறந்த கதாநாயகி ஆகிவிட வேண்டும் என்ற ஆசையை அன்றே மனதில் பதித்துக்கொண்ட பேதை. ஆனால் பாவம் விதி விடவில்லை. வாய்ப்புக்கள் சரியாக அமையாது போக குடும்பச் சூழ்நிலை கூச்சல் போட தன் கனவை கனவாகவே அவள் கலைத்து விட்டாள். நாளைய சினிமாவின் நம்பிக்கை விளக்கு அன்று அணைந்து போனது.

இன்று அனு தமிழ் நாட்டின் பிரபல தொலைக்காட்சியொன்றில் நிகழ்ச்சி தொகுப்பாளர். பல விதமான நிகழ்ச்சிகளை நேயர்களுக்குப் பிடித்த வகையில் தொகுத்து வழங்கினாள். எத்தனையோ பிரபலங்களைப் பேட்டி கண்டு அவர்களின் மனதிற்கு நெருக்கமானாள். குறித்த தொலைக்காட்சி அனு இன்றி அமையாது எனும் அளவுக்கு இன்று அவள் ஒவ்வொரு வீட்டின் சின்னத்திரையிலும் குடியேறி விட்டாள். அப்படிப்பட்டவளுக்கு நித்தியாவின் முடிவை விமர்சிக்க முழு உரிமையும் இருந்தது. பல கேள்விகள் சிந்தனையைக் குலைக்க வேலைக்குப் புறப்பட்டுப் போனாள் அனு. வேலைத்தளத்திலும் இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுக்கள். நித்தியாவைப் பற்றிப் பல விமர்சனங்கள். பிரபல நடிகரோடு ஏற்பட்ட காதல் முறிவு, இயக்குனர் ஒருவரோடு ஏற்பட்ட முரண்பாடு, கல்யாண ஏற்பாடுகள் நடக்கின்றதாம் கவர்ச்சியாக நடிக்க மறுத்தே இப்படியொரு முடிவு, பேசும் வாய்கள் பலவாறாக பேசிக்கொண்டன. எல்லாவற்றையும் காதில் போட்டுக் கொண்ட அனு ஏதும் பேசாமல் தன் பணியில் மூழ்கிப்போனாள்.

நாட்கள் செல்லச்செல்ல இந்த விவகாரம் சூடு தணிந்தது. ஆனால் மீண்டும் அது தலையெடுத்தது. தேசிய விருது வழங்கல் வைபவம். பல நாட்களாக வெளியுலகிற்கு முகம் காட்டாமல் இருந்த நித்தியா இன்று பேசுவாள். இந்த எதிர்பார்ப்பே அனைவரின் மனங்களிலும் நிலைத்திருந்தது. அழகிய வெண்ணிற ஆடையில் ஒரு தேவதை போல அமர்ந்திருந்தாள் நித்தியா. அழகு அப்படி ஒரு அழகு. ஒளிப்படக்கருவிகள் அவளையே வட்டமிட்டன. தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புகளில் அவளின் முகமே அடிக்கடி திரை நிறைத்தது.

கண்களில் எதையோ சாதித்த பெருமிதம். உதட்டில் ஒரு மந்திரப் புன்னகை. முகத்தில் எந்த சலனமும் இன்றி நிகழ்வை இரசித்திருந்தாள் முன்னாள் நடிகை நித்தியா. அனைவரும் எதிர்பார்த்திருந்த அந்த நிமிடம் வந்தது. இரண்டு தேசிய விருதுகள் ஒன்றாக அறிவிக்கப்பட்டன நித்தியாவுக்காக, அவளின் நடிப்புத் திறமைக்காக ஒன்று தமிழில் மற்றொன்று மலையாளத்தில் சிறந்த கதாநாயகி. முதலமைச்சர் கைகளால் விருதுகள் வழங்கப்பட்டன. கரகோசம் வானைப் பிளந்தது. இரண்டொரு வார்த்தை பேசும் படி கேட்டாள் நிகழ்ச்சி தொகுப்பாளினி. இதையே எதிர்பார்த்தது போல ஒலிவாங்கி நித்தியாவின் கைகளுக்கு தாவியது.

அரங்கமே மௌனத்தில் மூழ்க தன் மௌனம் கலைத்தாள் நித்தியா. "இன்று நான் பெற்றுக் கொண்ட இந்த விருதுகள் இரண்டும், இதுவரை நாட்களும் நான் பெற்றப் புகழும் அங்கீகாரமும் என்னுடையதல்ல. இது என் ராதாவிற்கு சொந்தமானது. ராதா திஸ் இஸ் போ யூ... " விருதுகளை ஒரு முறை உயர்த்திக் காட்டிவிட்டு, அடுத்த வினாவை எதிர்பாராதவளாக மேடையை விட்டு அகன்றாள் நித்தியா, மீண்டும் அதே மௌனம், அரங்கம் சலசலப்பானது.

யார் இந்த ராதா? இதுவரையில் கேட்டறியாத பெயர். நித்தியா பற்றி அறிந்த பலருக்கும் ராதாவைத் தெரிந்திருக்கவில்லை. நித்தியாவின் வருங்காலக் கணவர் தான் ராதா என்று செய்தியொன்றும் பரவியது. ஆனால் எதுவும் நம்பும்படி இல்லை. நித்தியாவின் உறவுகளிலோ அல்லது நட்பு வட்டாரத்திலோ யாரும் ராதாவை அறிந்திருக்கவில்லை. பல தொலைக்காட்சிகளும் வானொலிகளும் நித்தியாவை நாடினாலும் அவள் எதற்கும் தன் மௌனம் கலைத்தபாடில்லை.

சில நாட்கள் ஓடி மறைந்தன. காலை வேளை அலுவலகத்திற்குள் நுழைந்தாள் அனு. அவளுக்கென்று ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. எப்படியோ பாடுபட்டு பலரின் சிபாரிசுகளை பெற்று நித்தியாவை பேட்டி காணும் வாய்ப்பை வென்றிருந்தது அவளின் தொலைக்காட்சி. மிகவும் அரிய வாய்ப்பு நேரடி நிகழ்ச்சி, நித்தியாவுடன் சில நிமிடம் மாலை நான்கு மணிக்குக் காணத்தவறாதீர்கள். மீண்டும் மீண்டும் ஒளிபரப்பானது அந்த விளம்பரம். வேலைகளைப் புறம் தள்ளி விட்டு பல கேள்விகளுக்கு விடைதேடிப் பலரும் காத்திருந்தனர்.

நித்தியாவின் வீட்டின் முன்புறம் நிகழ்ச்சிப் படப்பிடிப்பிற்கான வேலைகள் மும்முரமாக ஏற்பாடாகிக் கொண்டு இருந்தன. பல கேள்விகளுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகளைத் தேடிவிடும் நோக்கில் தயாராகினாள் அனு. பாழாய்ப்போன கமெரா வேலை காட்டியது. ஒரு இடத்தில் நிற்காது தன்பாட்டிற்கு அது சுற்றித் தொலைத்தது.

மாலை நான்கு மணி, கமெராவை சமாதானப்படுத்தி நிறுத்தினர் நிகழ்ச்சிக் குழுவினர். பேச ஆரம்பித்தாள் அனு. வழக்கமான வணக்கம். "நித்தியா தமிழ் சினிமாவில் மட்டுமல்ல இந்திய சினிமாவிலும் தனக்கென்று ஒரு இடம் பிடித்துக்கொண்டவர். எந்த விதமான சினிமாப் பின்னணியும் இல்லாத தமிழ் குடும்பத்தில் இருந்து வந்து தன் நடிப்பால் உயர்ந்தவர். அண்மையில் இரண்டு தேசிய விருதுகளை வென்று நம் மனங்களில் இடம்பிடித்தவர்" ஒருங்கிணைப்பாளர் தந்த காகிதத்தில் இருந்ததை ஒப்பித்தாள் அனு.

மீண்டும் சுற்றிய கமெரா நித்தியாவை நிலை குத்தியது. அழகிய தேவதை போல அவள் அதே மந்திரப் புன்னகை. கண்களில் இன்று என்றும் காணாத பூரிப்பு. வழக்கமான தன் பாணியில் நேர்காணலை ஆரம்பித்தாள் அனு. நித்தியாவைப் பற்றிய சில பொதுவான தகவல்களின் பிறகு அந்தக் கேள்வி, அனைவரும் கேட்க எண்ணிய கேள்வி "வாய்ப்புக்களும் புகழும் தேடி வரும் இந்தச் சூழ் நிலையில் ஏன் திடீரென சினிமாவை விட்டு விலகி விட்டீர்கள்?" மௌனம் கலைத்தாள் நித்தியா, "என் இலக்கை நான் அடைந்து விட்டேன்".

"புரியவில்லை நித்தியா கொஞ்சம் தெளிவாகக் கூறுவீர்களா?" தொடர்ந்தாள் அனு. "என்னுடைய இலக்கு சினிமாத் துறையில் என் திறமையால் ஒரு தேசிய விருதேனும் வெல்ல வேண்டும் என்பது தான் அதை வென்றுவிட்டேன். இனி நடிப்பில் எனக்கு எந்த வேலையும் இல்லை" என்றாள் நித்தியா. மனம் குமுறியது அனுவிற்கு. தான் நேசிக்கும் கலை இவளுக்கு விளையாட்டுப் பொருளானதால் கோபம் எல்லை மீறியது. "அது என்ன ஒரு தேசிய விருது? சினிமாவை நேசிக்காத நீங்கள் எதற்கு இப்படி ஆசைப்பட வேண்டும்?" கேள்வியால் அழுத்தினாள் அனு. பொறுமையாக வினாவும் படி சைகை செய்தனர் நிகழ்ச்சிக் குழுவினர்.

அதே மந்திரப் புன்னகை நித்தியாவிடம். "இது என் ஆசையல்ல என் ராதாவின் ஆசை. ஒரு தேசிய விருதாவது வெல்ல வேண்டும், நடிப்பில் சாதிக்க வேண்டும் என்பது என் ராதாவின் ஆசை. அதைத் தான் நான் நிறைவேற்றினேன். அதனால் தான் என் விருதுகள் அவளுக்குச் சொந்தம் என்றேன்". கூறிவிட்டுப் புன்னகைத்தாள் நித்தியா. அவளின் புன்னகை இப்போது அனுவை மேலும் வெறுப்பேற்றியது. அவள் அத்தோடு விட்டுவிடவில்லை.

"நீங்கள் நடித்து விட்டு, உங்கள் திறமையால் இந்த விருதுகள் வென்றுவிட்டு இப்போது இது இன்னொருவருக்குச் சொந்தம் என்று சொன்னால் அதை எப்படி ஏற்றுக்கொள்வது?. இது அந்த நபரையும் கேவலப்படுத்தும் செயல் என்று தோன்றவில்லையா?" கோபத்துடன் கணை தொடுத்தாள் அனு. எல்லை மீறுகிறாய் என கை அசைத்தார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர். ஆனால் நித்தியா எந்த விதக் கோபமும் கொள்ளவில்லை. மாறாக நிகழ்ச்சிக் குழுவினரை அவள் வீட்டின் வலது புறம் தனியாக அமைக்கப்பட்ட அறை ஒன்றினுள் கூட்டிச்சென்றாள்.

விருதுகள், சான்றிதழ்கள், பரிசுப்பொருட்கள் என நிறைந்து இருந்தது அந்த அறை. அனுவிடம் கேள்விகளை எதிர்பாராமல் கதாநாயகி பேச ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கேயுள்ள அனைத்தும் இந்த ஐந்து வருட சினிமா வாழ்வில் நான் சம்பாதித்தவை. ஆனால் இவை என்னுடையதல்ல. எல்லாம் என் ராதாவுடையது. இந்த ஒரு விருதைத் தவிர," கூறியபடியே மலை போல அடுக்கிருந்த விருதுகளிடையில் சிறிய கேடயம் ஒன்றை நித்தியா கையில் எடுத்தாள். ஒரு மனிதன் ஓடுவது போன்ற உருவத்துடன் கூடிய கேடயம் அது. நிச்சயம் அது சினிமாவுக்குச் சொந்தமான விருது அல்ல.

அனுவின் கண்களைப் பார்த்தாள் நித்தியா. அவளிடம் கேள்விகள் இல்லை. தானே பேசினாள் நித்தியா. "இது என் சிறுவயதில் மரதன் ஓட்டப்பந்தயம் ஒன்றில் நான் வென்றது. எங்கள் பாடசாலையில் மிக பெரிய அளவில் மரதன் ஓட்டப்போட்டியொன்று ஒவ்வொரு வருடமும் நடைபெறுவது வழக்கம். நானும் என் நண்பி ராதாவும் விளையாட்டுக்களில் மிகவும் ஆர்வம் உள்ளவர்கள். எனக்கு மரதன் ஓட்டத்தில் முதல் இடம் வென்று விட வேண்டும் என்பது கனவு. ஆனால் ராதாவுக்கு குறுந்தூர ஓட்டத்திலேயே ஆர்வம் இருந்தது. மரதன் ஓட்டப் போட்டிகளில் அவள் விருப்பம் காட்டியதில்லை. நான் மூன்று வருடங்களாக முயற்சி செய்தும் அந்த விருதை வென்று விடமுடியவில்லை. குறிப்பிட்ட வருடம் நான் கடுமையாக பயிற்சி செய்தேன். எப்படியேனும் இம்முறை முதலாவதாக வரவேண்டும் என்று தீவிர முயற்சி செய்தேன். ஆனால் விதி, போட்டிக்கு இரண்டு வாரம் முன்பு ஏற்பட்ட விபத்தில் என் வலதுகால் முறிந்து போனது.

என் கனவும் கலைந்து போனது. படுக்கையில் புரண்டபடி கதறினேன். போட்டியில் பங்குபற்ற முடியாமல் போனது கூடப் பரவாயில்லை. ஆனால் என் நண்பி ராதா என்னை பார்ப்பதற்கோ எனக்கு ஆறுதல் கூறவோ என்னுடன் இருக்கவில்லை. அந்த வேதனை என்னை மிகவும் வாட்டியது. இரண்டு வாரம் கழித்து ஒரு நாள் காலை நான் கண் விழித்த போது ராதா என் முன் நின்றாள். நான் கோபத்துடன் அவளைப் பார்க்க, அவள் புன்னகையோடு இந்த விருதை என்னிடம் நீட்டினாள். "நீ வெற்றி பெற்று விட்டாய் நித்தியா" ராதா கூறினாள்.

எனக்கு எதுவும் புரியவில்லை. ராதா என்னை அணைத்துக் கொண்டாள். "இத்தனை நாள் நான் உன்னைப் பார்க்க வராமல் இருந்தது தவறு தான். என்னை மன்னித்து விடு. ஆனால் அதைவிட மிக முக்கியமான வேலை எனக்கு இருந்தது. நீ மூன்று வருடம் கற்ற வித்தை அனைத்தையும் இரண்டு வாரத்தில் நான் கற்க வேண்டி இருந்தது. உன் ஆசையை நிறைவேற்ற, உனக்காக இந்த விருதை வென்று கொடுக்க, வாங்கிக்கொள் நித்தியா" கூறியபடியே விருதை என்னிடம் தந்தாள் ராதா.

நான் கண்ட என் கனவு. கைகளில் வாங்கிக் கொண்டு அதை கண்ணாரப் பார்த்தேன். விருதின் அடியில் ராதாவின் பெயரும் அவள் முதலாம் பரிசு பெற்றமையும் பொறிக்கப்பட்டு இருந்தது. என் கண்கள் கலங்கின. எனக்குத் தெரியும் அவள் இதற்காக எப்படி எல்லாம் உழைத்திருப்பாள் என்று, விருதை மீண்டும் அவளிடம் கொடுத்து இது உன்னுடையது என்றேன். அவள் புன்னகைத்தபடி என்னிடம் கூறினாள். "இது உன்னுடைய ஆசை நித்தியா. மரதன் ஒட்டப்போட்டியில் ஓட வேண்டும் என்பதும் முதல் இடம் பெற வேண்டும் என்பதும் உன்னுடைய கனவு. என் இலக்கு அதுவல்ல. என் இலக்கு உன்னால் முடியாது போன உன் கனவை உன் கைகளில் சேர்த்துவிட வேண்டும் என்பது மட்டுமே. இதை நீ ஏற்றுக் கொண்டால் நம் இருவரின் ஆசையும் நிறைவேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விருதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை, இது உனக்கு சொந்தம் நித்தியா".

அன்று அவள் கூறியது நியாயம் என்று தோன்றியது. "அவள் என் உயிர் நண்பி. எனக்காக என் ஆசையை அவள் நிறைவேற்றினாள் அதை நான் ஏற்றுக்கொண்டேன். இது என்னுடைய விருது". கூறிய படியே அந்தச் சிறிய கேடயத்தை முத்தமிட்டாள் நித்தியா. நிகழ்ச்சிக் குழுவினரிடையில் மௌனம் குடிகொண்டது. அனுவை ஏக்கத்துடன் பார்த்தாள் நித்தியா. அனுவிடம் எந்தக் கேள்வியோ அசைவோ இல்லை. முன்பு இருந்த கோபமும் இல்லை. நித்தியா அவளிடம் கேட்டாள், "இப்போது சொல், இது என்னுடைய விருது என்றால் இங்கு இருக்கும் மற்றைய அனைத்தும் யாருக்குச் சொந்தம்?" அனுவின் கண்கள் பனித்தன. அவள் வாய் திறந்தாள், "எனக்கு… இவை எனக்குச் சொந்தம்… என் விருதுகள்". கூறியபடி நித்தியாவை அணைத்துக் கொண்டாள் அனு.

பாழாய்ப் போன கமெரா மீண்டும் சுற்றியது, சுழன்று கொண்டு சமாதானமானது. கமெரா எதையோ தீவிரமாய் நெருங்கியது. அது நித்தியாவின் விருது. அவள் கைகளில் இருந்த மரதன் கேடயம். அதன் அடியில் பொன்னிற தகட்டில் பதிக்கப்பட்டிருந்தது. "மரதன் ஓட்டப்போட்டி, முதல் பரிசு, செல்வி. அனுராதா ராம்குமார்".

"புதியதோர் உலகம் செய்வோம் – கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!
பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்!
புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்"

பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மருத்துவக் கல்வியை தனியார் மயப்படுத்துகை ஒரு நடுநிலை நோக்கு

வே.குகதாசன்,
விடுகை வருடம்,
மருத்துவ பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



## அறிமுகம்

அரசாங்கம் குடிமக்களது தேவைகளைத் திருப்தி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியமை இன்றியமையாதது. திறந்த பொருளாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நாடுகளில் இத்தகைய நடவடிக்கைகள் பெரும்பாலும் தனியார்துறையினரால் முன்னெடுக்கப்படுகின்ற போதும் அரசாங்கம் அவற்றைக் கட்டுப்படுத்துகின்ற, நெறிப்படுத்துகின்ற பொறுப்பைக் கொண்டதாக இருக்கும். சமவுடமைப் பொருளாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நாடுகளில் பெரும்பாலான செயற்பாடுகளுக்கு அரசாங்கங்களே பொறுப்பாக இருக்கும். இவையிரண்டிற்கும் இடையிலான கலப்புப் பொருளாதாரக் கொள்கைகளைக்கொண்ட நாடுகளும் உள்ளன.

மக்களால் அன்றாடவாழ்வில் பயன்கொள்ளப்படும் பொருட்கள், சேவைகள் போன்றவற்றுள் சுகாதாரத்துறை சார்ந்த சேவைகள் தனித்துவமானவை. ஏனெனில் இத்துறைசார்ந்த பிரதிபலிப்புகள் மக்களை நேரடியாகப் பாதிப்பவை. இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னரான காலப்பகுதியிலிருந்தே பெரும்பாலும் கல்வி, சுகாதாரம் என்பன இலவசமாகவே வழங்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலங்களில் இலங்கையின் சுகாதாரத்துறையின் தரம் மேம்பட்டுள்ளது. இதனாலேயே சராசரி ஆயுட்கால அதிகரிப்பு, சிசுமரண வீதம், தாய்மாரது மரணவீதம் போன்றவற்றினுடைய குறைவு, போசாக்கு தரத்தின் அதிகரிப்பு போன்றவை எய்தப்பட்டுள்ளன. உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகள் இவற்றை உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய இலக்குகள் மட்டுப்படுத்தப்பட்ட சுகாதாரத்துறை சார்ந்த ஆளணி வளத்துடனேயே அடையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிலைக்கு தரம்வாய்ந்த மருத்துவர்கள் ஏனைய சுகாதாரத்துறை சார்ந்த ஆளணியினர் வளங்கள் போன்றவற்றில் ஏற்பட்ட பண்புசார் அதிகரிப்புகள் காரணமாயிற்று. இத்தகைய ஒரு நிலையில் மேலதிக சுகாதாரத்துறை சார்ந்த ஆளணியினரது உருவாக்கம் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடுவதற்கான வாய்ப்புக்களை நிராகரிப்பதற்கில்லை. எவ்வாறாயினும் மக்களிற்கான சேவைகளைச் சுகாதாரத்துறையில் அதிகரிப்பதற்கான நகர்வுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியமை இன்றியமையாதது.

உலகளாவிய மருத்துவக் கல்வியின் ஆரம்பம் தனியார்துறை சார்ந்ததாகவே இருந்தது. மருத்துவக் கல்விசார் நடவடிக்கைகள் அரச சார்பற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்படுகின்றமை தனியார் மயப்படுத்தப்பட்ட மருத்துவக் கல்வித்துறையாகும். எவ்வாறாயினும் பகுதிபட அரசபங்களிப்புகளுடன் இயங்கும் நிறுவனங்களும் உள்ளன. எது எப்படியாயினும் அரசகட்டுப்பாடும் கண்காணிப்புச் செயற்பாடுகளும் மருத்துவக்கல்வி நிறுவனங்களின் பொருட்டு தவிர்க்கப்பட முடியாதவை. தனியார்துறை சார்ந்த மருத்துவக் கல்வியின் நோக்கங்கள் முற்றிலும் இலாப நோக்கிலானவையாக, இலாப நோக்கற்ற சமூகசேவையை அடிப்படையாகக் கொண்டவையாக அமையலாம். இவை பல்கலைக்கழக ஒழுங்கமைப்பிலானவையாக, நோயியல் சிகிச்சைகளை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்கலாம். பல்கலைக்கழக ஒழுங்கமைப்பிலானவை அடிப்படைச் சித்தாந்தங்கள், தத்துவங்கள் என்பனவற்றைப் போதிப்பதுடன் பரிகாரங்களிலும் சிகிச்சைகளிலும் பயிற்சியளிப்பவை. நோயியல் சிகிச்சைகளை அடிப்படையாகக் கொண்டவை வெறுமனே பரிகாரங்களிலும் சிகிச்சைகளிலும் பயிற்சியளிப்பவை.

உலகளாவிய ரீதியில் மிகக்கூடியளவு தனியார் மருத்துவ நிறுவனங்களைக் கொண்டநாடு இந்தியாவாகும். எவ்வாறாயினும் உலக சுகாதார நிறுவனத்தினது மருத்துவக்கல்வி தொடர்பான உலகளாவிய தரப்படுத்துகையில் 112 வது நிலையிலேயே இது காணப்படுகின்றது. இதற்கடுத்தபடியாக ஐக்கிய அமெரிக்காவில் தனியார் மருத்துவக்கல்வி நிறுவனங்கள் 62 காணப்படுகின்ற போதும் இவை அரச ஆதரவு பெற்று இயங்கும் இலாபநோக்கற்றவையாகும். ஐக்கிய இராச்சியத்தில் இத்தகைய ஒரு நிறுவனம் மட்டுமே காணப்படுகின்றது. தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா போன்ற நாடுகளில் பெரும்பாலான மருத்துவக்கல்வி நிறுவனங்கள் தனியாருக்குரியவை. சீனா, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் சகல மருத்துவக்கல்வி நிறுவனங்களும் அரச கட்டுப்பாட்டிலானவை. இலங்கையைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் மருத்துவர்களை உருவாக்கிக்கொண்டு இருப்பது எட்டு அரச பல்கலைக்கழகங்களினது மருத்துவ பீடங்களே ஆகும். அத்துடன் இலங்கை மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாடுகளில் காணப்படுகின்ற தனியார் மருத்துவ பீடங்களில் இருந்து வெளியாகும் தொழில்சார் வைத்தியர்களாகப் பதிவு செய்வதற்கான பரீட்சையில் சித்தியடையும் மருத்துவர்களும் குறைந்தளவில் பங்களிப்புச் செய்கின்றனர். எண்பதுகளில் இலங்கையில் வடகொழும்பிலும் யாழ்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்ட தனியார் மருத்துவபீடங்கள் பலத்த எதிர்ப்புகள் காரணமாக பின்னர் தொடரப்பட முடியாமல் தோல்வியைத் தழுவி இருந்தன.

**தேவைக்கான காரணங்கள்**

ஒரு நாட்டில் மக்களது சுபீட்சமான வாழ்க்கையின் பொருட்டான சுகாதாரத்துறை சார்ந்த ஆளணியினரின் எண்ணிக்கை, பரம்பல் போன்றவை பல்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதாய் இருக்கும். அரசியல், பொருளாதாரம், சமூகம் சார்ந்த காரணிகளால் சில சமூகங்களில் இத்தகைய தேவை அபரிமிதமாக நிலவலாம். சுகாதாரத்துறையின் பண்பும் தரமும் வெறுமனே அத்துறை சார்ந்த ஆளணியினரின் எண்ணிக்கையினால் மட்டும் தீர்மானிக்கப்பட மாட்டாது. ஆளணியினரின் சீரான பரம்பல், பல்லினத்துவமான திறன்கள் மற்றும் சிறந்த மனிதவள முகாமைத்துவம் போன்றவற்றிலும் தங்கியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ சேவையினது தரமும் பண்பும் துறைசார்ந்த ஆளணியினரது எண்ணிக்கையிலும் தரத்திலும் தங்கியவை. இலங்கை மருத்துவக்கல்வி உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்ற நிலை காணப்படுகின்ற போதும் எண்ணிக்கையைப் பொறுத்தவரை இலங்கையில் சுகாதார சேவையின் பொருட்டு மருத்துவர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவுகின்றது. இத்தகைய நிலையில் மருத்துவக் கல்வித்துறையில் தனியார் துறையினரது பங்களிப்பு தவிர்க்க முடியாததாகின்றது, இயல்பானதாகின்றது. அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்களை உருவாக்குவதில் அரச பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு மட்டும் போதியதன்று என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது. அத்துடன் அதிகரித்த பல்கலைக்கழக அனுமதித்தேவைகள் இருந்த போதும் ஈடுசெய்யமுடியாத அரசாங்கத்தினது கையறுநிலையை ஓரளவில்தானும் பிரதியிட்டுக் கொள்வதற்கும் தனியார் துறையினரது பங்களிப்பு தேவைப்படும்.

இலங்கையில் தற்போதைய யுத்தத்திற்குப் பின்னரான அரசியல், பொருளாதார, சமூக மாறுபாடுகளும் உலகளாவிய கவன ஈர்ப்பும் பொதுக்கல்வியினது தரமும் கோளமயமாக்கலும் கூட மருத்துவக் கல்விக்கான கேள்வியை பூர்த்தி செய்வதற்கான சந்தைவாய்ப்புக்களை இலங்கைக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் சாதகமான அம்சங்களையே கொண்டுள்ளன. மேலும் வருடாந்தம் பல்கலைக்கழகங்களில் மருத்துவப்பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்து உள்ளகப்பயிற்சி பெறாமல் வெளியேறுபவர்கள், சுகாதாரத்துறை சாராத துறைகளில் பணிக்கமர்பவர்கள் பின்னர் புலம் பெயர்பவர்கள் போன்றவர்களால் உண்டாகும் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டிய தேவையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

தனியார்துறை சுகாதார சேவையினின்றும் பயன்கொள்ளத்தக்க மத்தியதர வர்க்கத்தினரின் தொகையும் தொடர்ச்சியாக இலங்கையில் அதிகரித்தே வருகின்றது. இதற்கு இலங்கைக் குடித்தொகையில் சமூகக்கட்டமைப்பில் ஏற்பட்டுவரும் மாற்றம் காரணமாகும். இதனால் தனியார் மருத்துவக் கல்வியை நுகரக்கூடிய மக்கள்தொகை அதிகரித்துள்ளது. அத்துடன் தொடர்ச்சியான குடித்தொகைப்பருமன் அதிகரிப்பு, வாழ்க்கைக்கான எதிர்பார்க்கை, சராசரி ஆயுட்கால அதிகரிப்பு மற்றும் மருத்துவத்துறையிலான அதிகரித்த தொழில்நுட்ப பங்களிப்பு போன்றவையும் சுகாதார சேவைக்கான கேள்வியை அதிகரித்துள்ளது. இத்தகைய பின்னணியில் மருத்துவக் கல்வியில் தனியார் துறையினரது பங்களிப்பு தவிர்க்க முடியாதது.

அரசாங்கங்கள் மாறும் காலப்பகுதிகளில் கொள்கை மாறுபாடுகள் காரணமாக தனியார்மய சார்புத்தன்மை மேலெழுவது வழமையாகும். அத்துடன், கொள்கை ரீதியில் அரசாங்கம் உயர்கல்விக்கான மானியங்களைக் குறைக்கும் பொழுதும் தனியார்துறையின்பாலான உயர்கல்விக்கான திருப்பம் இடம்பெறும். இத்தகைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நபர்கள் அதீத இலாபமீட்டும் துறையாக மருத்துவக் கல்விப்போதனையை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தவிர்க்கப்பட முடியாதவை.

அண்மைக்காலங்களில் இலங்கையிலிருந்து பெருமளவு மாணவர்கள் இறுக்கமான பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகள், சிரேஸ்ட இடைநிலைக்கல்வி ஒழுங்கமைப்புக்களிலுள்ள பலவீனங்கள் முதலான பல்வேறு காரணங்களாலும் வெளிநாடுகளில் மருத்துவக் கல்வியை நாடுகின்ற தன்மை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இலங்கையில் தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவக்கல்வி நிறுவனங்களைத் தாபிப்பதன் மூலம் மேற்படி காரணத்தினால் உருவாகும் அந்நியச் செலாவணி இழப்பை தவிர்த்துக் கொள்ள முயலலாம்.
இலங்கையில் 13 வது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழான அதிகாரப் பரவலாக்கச் செயற்பாடுகளின்கீழ் மாகாணசபைகள் தனியார் உயர் கல்வி நிறுவனங்களை அனுமதிக்கும் அதிகாரத்தைக் கொண்டவை. இது சமூகக் குழுமங்களின் மேம்பாட்டிற்கு ஆதாரமாக அமைய வல்லது. இந்தவகையில் பிராந்தியரீதியில் தனியார் மருத்துவக் கல்விநிறுவனங்கள் தாபிக்கப்படலாம். அவற்றின் மூலம் பிராந்திய அரசுகள் வரிகளை ஈட்டிக்கொள்ள எத்தனிக்கலாம்.
மருத்துவக்கல்வி பெருமளவு மூலதனச் செலவுகளுடனானது. இதனால் இதனை முதலீட்டுச் செயற்பாடுகளின் பொருட்டான வழிகளுள் ஒன்றாக தெரிவு செய்வது அண்மைக்கால அறிவுசார் பொருளாதார வளர்ச்சிப் போக்குகளின் அடிப்படையில் தவிர்க்க முடியாததுமாகும்.

மேற்படி விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் மற்றும் நெறிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுமிடத்து மருத்துவக் கல்வித்துறையிலான தனியார் மயப்படுத்துகையினால் எழுந்துள்ள சமகால நிலைமைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படும். தீர்வுகள் இயல்பாகவே கிடைக்கப் பெறுவனவாக இருக்கும். இதற்கு ஒருவகையில் அரசு சார்பான நேர்மையும் வினைத்திறனும் விளைதிறனும்மிக்க நிர்வாக ரீதியான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மட்டும் போதுமானவையாக இருக்கலாம்.

### தனியார் மயப்படுத்துகை மட்டும் தீர்வாகாது

இலங்கையினது மருத்துவத்துறை சார்ந்த சகலநிலைகளிலுமான தேவைகளுக்கு தனியார் மயப்படுத்துகை மட்டும் தீர்வாக அமையாது. அரசாங்கத்தினால் மருத்துவக்கல்வித் துறையின்பாலான தனியார் மயப்படுத்துகை கட்டுப்பாடற்ற வகையில் ஊக்குவிக்கப்பட்டு அவற்றினது வெளியீடுகளான மருத்துவர்கள் மற்றும் இணைந்த சுகாதாரத்துறை ஆளணியினர் தேசிய ரீதியிலான துறைசார்ந்த தேவைகளை நிரப்புபவர்களாக அன்றி வெறுமனே பிரதியிடுபவர்களாக இருப்பின் அது தேசிய ரீதியில் பாரிய துறைசார்ந்த பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அமையும். மேற்கத்தைய நாடுகளில் இத்தகைய பாதிப்புகள் ஏற்படும் பட்சத்தில் மக்களைப் பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளன. இலங்கையில் அத்தகைய ஏற்பாடுகள் இல்லாத நிலையில் விளைவுகள் பாரதூரமானவையாக அமையும்.

மருத்துவத்துறையில் பல்துறைசார்ந்த திறன்களைக் கொண்ட ஆளணியினரது வெளிப்பாடுகள் நிபுணத்துவ ரீதியிலான மேம்பாட்டிற்கு இன்றியமையாதவை. தனியார் மயப்பட்ட மருத்துவக்கல்வித் துறையில் இது அடையப்படுவதற்கான வாய்ப்புக்கள் பெரிதும் குறைவானது. தனியார்மய மருத்துவக்கல்வி அளவறிரீதியிலான வெளியீடுகளுக்கு பொறுப்பாக அமையலாமே தவிர பண்பறிரீதியிலான வெளியீட்டிற்கு காரணமாவதற்கான சந்தர்ப்பங்கள் பெரிதும் குறைவாகும்.

தனியார் மருத்துவத்துறை சார்ந்த உள்ளீடுகளாகவும் வெளியீடுகளது இலக்குக் குழுக்களாகவும் பெரும்பாலும் நகர்ப்புறம் சார்ந்தவர்களே காணப்படுவர். அதாவது மருத்துவர்களாக பயிற்றப்படுபவர்களும் அவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட பின்னர் அவர்களால் சிகிச்சிக்கப்படுபவர்களும் அல்லது பயன்பெறுபவர்களும் மாநகரங்களையும் நகரங்களையும் சேர்ந்தவர்களாகவே பெரும்பாலும் இருப்பர். இதனால் குறித்த வர்க்கத்தினர் மட்டுமே தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவக் கல்வித் துறையினால் பயனடைவர். காலப்போக்கில் மருத்துவர்களையும் ஆரோக்கியமான திடசாலிகளையும் ஒரு குறித்த சமூகத்திலேயே பெருமளவில் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இதனால் மருத்துவக் கலாநிதிகள் உயர்சமூகத்தினராகவும் இவர்களும் நோயாளிகளும் பாரிய சமூக இடைவெளியைக் கொண்டவர்களாகவும் இருப்பர். இதனால் துறைசார்ந்த மருத்துவர்களது பரம்பலில் காணப்படும் சீரற்ற தன்மை மேலும் அதிகரிக்கும். எவ்வாறாயினும் சமகாலத்தில் மருத்துவத்துறை ஆளணியினரும் பயனாளிகளும் கலப்புச் சமூகங்களுக்குரியவர்களாகக் காணப்படுவதனால் தொடர்ந்தும் பயனளிப்பவர்களும் பயன்கொள்பவர்களும் அவர்களது சமூகநிலைகளும் இவர்களிற்கிடையிலான இடைவினைகளும் தொடர்ச்சியாகப் பேணப்படும்.

தனியார்துறை மருத்துவக்கல்வி ஊக்குவிக்கப்படும் பட்சத்தில் அதனால் பயன்கொண்டவர்களும் தம்மால் அக்கல்வியைப் பெறுவதற்காகச் செலவிடப்பட்ட தொகையினையும் அதன் பொருட்டான வட்டியையும் சமூகத்திலிருந்தே திரட்டிக்கொள்ள விளைவர். இப்போக்கு மீண்டும் சமூகபொருளாதாரக் கட்டமைப்பின்பால் பாதிப்புக்களையே உண்டு பண்ணும். மக்கள் சுரண்டப்படுவர். அபரிமிதமான கட்டுப்பாடற்ற தனியார்மயப் படுத்துகை நீண்டகால அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள இலவச மருத்துவக் கல்வி மற்றும் சுகாதார சேவையினை கேள்விக்குறியாக்கலாம்.

மேற்படி தனியார் மருத்துவக் கல்வி நீண்ட கால அடிப்படையில் தரப்பிரள்வுகளுடனான வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு காரணமாகும். இது மருத்துவர்களை வேலைவாய்ப்பு அற்றவர்களாகவும் கீழுழைப்பு நிலையிலானவர்களாகவும் மாற்றுவதற்குக் காரணமாகும். இது தேசியரீதியில் இவர்களை உருவாக்கிக் கொள்வதற்காக பல்வேறு தரப்பினராலும் வழங்கப்பட்ட பங்களிப்புகளில் பயனறுநிலையினை ஏற்படுத்தும். ஏனைய துறைகளைப்போல் அல்லாது விசேடமாக இவர்களைப் பயிற்றிக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட நோயாளரது அர்ப்பணிப்புகள் அர்த்தமற்றவையாகும்.

**பிரச்சினைகள்**

தனியார் மருத்துவக் கல்லூரிகளது விரிவுரையாளர்கள், நிபுணத்துவ ஆலோசகர்களது தகுதிகள் தொடர்பான பிரச்சினைகள் தலையெடுக்கச் செய்யும். இவர்களுள் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டவர்கள். அவர்களுள் பெரும்பாலானவர்கள் தத்தமது நாடுகளில் மருத்துவசபைப் பதிவுகளைத் தொடர்ந்தும் பேணிக்கொள்ள முடியாதவர்கள். இவர்களுள் பெரும்பாலானவர்கள் இரட்டை நியமனங்களைக் கொண்டவர்கள். குறுகியகால ஒப்பந்தங்களின்கீழ் பணிக்கமர்பவர்கள். இதனால் மாணவ ஆசிரிய விகிதம் உயர்வாகக் காணப்படும். பல்கலைக்கழக அடிப்படையிலான வழிகாட்டல்களில் குறைபாடுகள் நிலவுவதைத் தவிர்க்க முடியாமல்போகும்.

போதனா வைத்தியசாலைகளும் பீடங்களுக்கான உள்ளகக் கட்டமைப்புக்களும் அரச மருத்துவ பீடங்களினை ஒத்தனவாக விருத்தியாக்கிக் கொள்ளப்படுவதில் குறைபாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இதற்கான காரணங்களுள் இலாபநோக்கம் தலையாயது. வருடாந்த உள்ளீர்ப்புகள் இரண்டாகக் காணப்படுகின்றமை போன்றவை பிரதானமானவை. உடற்கூற்றியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கைகளின் பொருட்டான மனித உடல்களைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் நிலவும்.

தனியார்மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்படும் மருத்துவக்கல்வியின் தரம் தாழ்நிலையில் காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. இவற்றினது கல்விச் செயற்பாடுகள் தனியார் வைத்தியசாலைகளை அடிப்படையாகக் கொண்டவை. இத்தகைய வைத்தியசாலைகளை நாடும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படும். இவர்கள் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் காலவளவு குறைவாகக் காணப்படும். நோய்களது பல்லினத்துவத் தன்மை குறைவாகக் காணப்படும். இத்தகைய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுபவர்கள் கட்டணம் செலுத்தி அனுமதி பெறுபவர்களாதலால் இவர்கள் தாம் மருத்துவக்கல்விச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுவதற்கான ஒப்புதலை வழங்காதவர்களாகக் காணப்படுவதற்கான வாய்ப்புக்களும் உண்டு. மேலும் சமூக மருத்துவம், சட்ட மருத்துவம், மருத்துவ நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பான கற்கைகள் அரசமருத்துவக்கல்வி நிறுவனங்களினூடாக மட்டும் மேற்கொள்ளத்தக்கவையாகும்.

சுகாதார மருத்துவ பராமரிப்புத் தொகுதியுள் நுழைவு பெறும் மாணவரும் பின்னர் அவர்கள் சுகாதார மருத்துவ பராமரிப்பாளராக சமூகத்தினுள் பிரவேசிக்கும் பொழுதும் பிரச்சினைகள் தலையெடுப்பது தவிர்க்கப்பட முடியாததுமாகும். அரச பல்கலைக்கழகங்களில் போல அன்றி தளர்வான அனுமதிப் போக்குகள், பாடநெறி நடைமுறைகள் மற்றும் பரீட்சைகளிலுள்ள குறைபாடுகளால் இத்தகைய பிரச்சினைகள் உண்டாகும். மாணவரது கல்வித்தகைமைக்கப்பால் கட்டணச் செலுத்துகைக் கொள்ளளவே பெரும்பாலும் அனுமதியின் பொருட்டான அடிப்படையாக அமைவதனால் இது மேலும் தீவிரமடையும். இவர்களின் மீதான மக்களின் நம்பகத் தன்மையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

தனியார் மருத்துவக்கல்வி நிறுவனங்கள் உருவாகி ஸ்தாபிதமடையும் பொழுது அவற்றுக்கும் அவற்றினின்றும் வெளிப்படும் மருத்துவப் பட்டதாரிகளுக்குமான அங்கீகாரம் பிரச்சினைக்குரியதாகும். திட்டமிடப்படாத குறுகிய நோக்கங்களுடனான இலாபத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட மருத்துவக்கல்வி தொடர்பான நிறுவன ரீதியான முயற்சிகள் நாளடைவில் தேசியரீதியிலான பிரச்சினைகள் உருவாவதற்குக் காரணமாகும். கற்பதற்காகச் செலவிடப்பட்ட மாணவரது பணம் வியர்த்தமாகும். கல்வியைப் பெற்றுக் கொண்ட மாணவரது எதிர்காலம் பாதிக்கப்படும்.

மேற்படி பிரச்சினைகள் நிவர்த்திக்கப்படுவதன் மூலமும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள இலவச சுகாதாரத்துறையினது அடைவுகள் பேணப்படத்தக்க வகையில் தனியார் மருத்துவக் கல்வித்துறை சம்பந்தப்பட்ட ஒழுங்கமைப்புக்களால் தரநிர்ணய நியமங்களுக்குட்படுத்தப்படுவதன் மூலமும் மருத்துவத்துறை சார்ந்த தனியார் மயப்படுத்தப்பட்ட கல்வியினது பயன்களைத் தேசியரீதியில் அனுபவித்துக் கொள்ளலாம். அதேவேளை இலவச மருத்துவக் கல்வியும் இலவச சுகாதார சேவையும் இலங்கையில் அதன் தேசிய அபிவிருத்தியில் தொடர்ந்தும் பங்களிப்புக்களை வழங்கச் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும்.

எது எப்படி இருந்தபோதிலும் தனியார் துறையிலான மருத்துவக் கல்விக்கான தேவையும் அதாவது கேள்வியும் அதன் பொருட்டான நிரம்பலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண சந்தைக் கோட்பாடுகளுக்கமைவாக மட்டுமன்றி இயற்கை நியதிகளாலும் தீர்க்கப்படுவனவாக இருக்கும். தனியார்துறையிலான மருத்துவக்கல்வி நிறுவனங்களது அபரிமித அதிகரிப்பு அதன்பாலான கேள்வியைக் குறைப்பதுடன் அத்துறையினின்றும் வெளிப்படும் மருத்துவப் பட்டதாரிகளது தரத்தினையும் பாதிக்கச் செய்வதால் இவர்களின் நம்பகமும் தகுதியும்கூட தகுதிகாண்நிலைக்கு ஆளாவது இயல்பானதாகலாம். இத்தகைய நிலையில் மேற்படி நிறுவனங்களது அதீதமான அதிகரிப்பும் ஆட்சேர்ப்பும் கூடப் பாதிக்கப்படும். இதனால் இவை ஒரு இயக்கச்சமநிலையில் பேணப்பட வேண்டிய கட்டாய தேவை எழுவது தவிர்க்கப்பட முடியாததாகும்.

**உசாத்துணைகள்**


- De Silva, N.R., Perera, K.K.Y.W., Gunatunge, R.S. and Tantrigoda, D.A. (2008) '**How many doctors should Sri Lanka have ?**', *Ceylon Medical Journal*, vol. 53, no. 3, September, pp. 93-98.
- Dominique , E., Debra, L. and Orvill, A. (2000) ***Issues in Health Services Delivery*** - *Human Resources for Health*, World Health Organization.
- Karle, H (2010) '**How do we Define a Medical School**', *SQU Medical Journal*, vol. 10, no. 2, August , pp. 160-168.
- Sanjeev, D., Anuradha, D., Ankur, S. and Parul, S. (2014) '**Privatization of Medical Education in India: A Health System Dilemma**', *International Journal of Medicine and Public Health*, vol. 4, no. 1, Jan- Mar, pp. 17-22.
- Shehnaz, S.I. (2010) '**Privatisation of Medical Education** ', *SQU Medical Journal*, vol. 10, no. 1, April, pp. 6-11.


## அம்மா நீ!

வார்த்தை இன்றி உன்னுடன் பேசினேன் விழிகளின்றி
உணைரசித்தேன் காற்றின்றி சுவாசித்தேன் கவலையின்றி
வாழ்ந்தேன் அன்று உன் கருவறைதனிலே
எட்டு மாதம்தனில் உதைத்தேன் உனை அன்று
நோகவைக்க அல்ல இன்னும் சில நாட்களில் உன்
முகம் காணப்போகிறேன் என்ற மகிழ்ச்சியில்

மறுபிறவி எடுத்துவந்தும் என் உருவம் கண்டவுடன்
உன் வலி மறந்து எனைக்கண்டு புன்னைகைத்தாய்
உனக்கு வலிதந்து பிறந்ததால் என்னவோ எனக்கு
வலிக்கும்போ தெல்லாம் அழுகிறேன் அம்மா என்று
நான் அழுவதைத் தாங்கமுடியாமல் உன் உதிரத்தினைப்
பாலாக ஊட்டி எனை ஆறுதலடையச் செய்தாய்

எனைத் தாலாட்டி சோறூட்டி பாராட்டி முடிசூட்டப் போராடும்
மணிமகுடம் அணியா அரசிபோல் வாழ்கிறாய்
நான் செய்யும் குற்றங்களை மன்னிக்கும் ஒரே ஒரு
நீதிமன்றமாய் உண்டு உன் இதயம் என்பதை அறிந்தேன்
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உன் கருவிலேயே
மீண்டும் மீண்டும் பிறக்க தவமிருப்பேன் தாயே...!

வி.அனுஜன்,
முதலாம் வருடம், விஞ்ஞானபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இன முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட நோர்வேயின் மத்தியஸ்த செயற்பாடு தொடர்பான ஒரு நோக்கு

**ம.சந்திரலேகா,**
**மூன்றாம் வருடம்,**
**அரசறிவியல் துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



## இன முரண்பாடு ஓர் அறிமுகம்.

*"முரண்பாடு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அல்லது குழுக்கள் அல்லது அரசுகளுக்கிடையில் ஏற்படுவதாகும்."* இன்றைய காலத்தில் அரசுகளுக்குள்ளும் அரசுகளுக்கு வெளியிலும் முரண்பாடுகள் இடம்பெற்ற வண்ணமிருக்கின்றன. இன முரண்பாடு என்பது அதிகம் பேசுபொருளாகக் காணப்படுகின்றது. இன்று இன முரண்பாடானது சர்வதேசரீதியாக பரந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. அதாவது இவ்வினமுரண்பாடுகள் 1990க்கு பின் பெருவளர்ச்சி கண்டவையாக உள்ளன. அதனாலேயே மோதல்கள் பற்றிய ஆய்வில் இனமுரண்பாடு முக்கியப்படுத்தப்படுகின்றது.

*"பல்லினத்தன்மை கொண்ட சமூகக்கட்டமைப்பில் இனமுரண்பாடு என்பது தவிர்க்கமுடியாத ஓர் அம்சமாக அமையப்பெற்றுள்ளது. அதாவது அச் சமூகத்தில் வாழும் மக்கள் பல்வேறுபட்ட தேவைகள், அபிலாசைகள், அடையாளங்கள், தனித்துவங்களைக் கொண்டிருப்பர். அவற்றை அடைவதற்கு முயற்சிக்கும் வேளையில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. இவ்வாறு தோன்றும் இனமுரண்பாடுகள் ஆழமாக வேரூன்றிய காரணிகளின் வெளிப்பாடாகக் கொள்ளப்படுகின்றது."* அதாவது

**இனப்பாகுபாடு** - சிறுபான்மை, பெரும்பான்மை என நோக்கப்படுதல் மற்றும் நிற, மொழி பேதங்கள் வெளிப்படுத்தப்படுதல். உதாரணமாக, இலங்கையில் தமிழர் சிங்களவர் என நோக்கப்படும் அதேவேளையில் அமெரிக்காவில் நிறபேதம் மேன்மைப்படுத்தப்படுகின்றது.

**இருப்பு பற்றிய அச்சம்** - தாம் மற்றைய இனங்களினால் அழிக்கப்பட்டு விடுவோம் என்ற எண்ணம் எழுச்சிபெறுவதுடன் தம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் வளர்ச்சி பெறுதல். உதாரணமாக ஆரம்பத்தில் இலங்கையில் சிங்களவர் மத்தியில் தோன்றிய இவ்வச்சம் பின்நாட்களில் தமிழர்கள் மத்தியில் பற்றிக் கொண்டது.

**இயற்கையாக அமைந்த சமூகப் பன்முகத்தன்மை** - இனம், மதம், மொழி, கலாசாரம், நிறம் என்ற பல்வேறுபட்ட வேற்றுமைகள் இயற்கையாகவே சமூகத்தில் வளர்ச்சி பெற்றிருத்தல். உதாரணமாக, இலங்கை, அமெரிக்கா, ஆபிரிக்கா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக உளவியல் காரணிகள்** - சமூக உறவுகள், கலாசாரங்களுக்கு இடையிலான தவறான தொடர்பாடல்கள், சமூக அநீதிகள் என்பன இடம்பெறல். இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறும் போது இனமுரண்பாடுகள் வளர்ச்சி பெறுதல்.

**சீரான வளப்பங்கீடு இன்மை** - பல்லின சமூகத்தில் சீரான வளப்பங்கீடு இன்மையின் காரணமாக முரண்பாடு எழுச்சி பெறுகின்றது. இலங்கையில் எழுச்சி பெற்ற முரண்பாட்டிற்கு அடிப்படைக் காரணம் ஒழுங்கான வளப்பங்கீடு இன்மையே ஆகும்.

**காலனித்துவ ஆட்சி மற்றும் அடையாள உணர்வு எழுச்சி பெறுதல்** - இதனை இலங்கையின் அனுபவத்தினூடான கண்ணூடாகக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது பிரித்தானியரின் பிரித்தாழும் தந்திரத்தின் விளைவே இலங்கையின் முரண்பாட்டிற்கான அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது (பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் இனமுரண்பாட்டு அடிப்படைகள் தூண்டப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது).

அரசியல் தலைவர்களின் சுயலாபத்தினை நோக்காகக் கொண்டு செயற்பட வந்தமையின் காரணமாக மக்கள் அனைவரும் சமனாக நோக்கப்படாது பிரிவுபடுத்தப்பட்டனர். உதாரணமாக **J.R.ஜெயவர்த்தன, S.W.R.D.பண்டாரநாயக்கா** ஆரம்பகாலத்தில் இலங்கையர்களுக்கிடையில் காணப்பட்ட முரண்பாடு என்பது வன்முறையற்றதாகவே காணப்பட்டது. காலப்போக்கில் அரசுக்கும் சிறுபான்மை தமிழ் ஆயுதக்குழுக்களுக்கிடையிலும் ஆயுத முரண்பாடாக எழுச்சி பெற்றது. இது **'இலங்கையின் உள்நாட்டு ஆயுதமுரண்பாடு'** என அழைக்கப்பட்டது. இவ்வாறு வளர்ச்சி பெற்ற முரண்பாடானது 1980க்கு பின்பு தீவிரமாக வளர்ச்சி பெற்றதுடன் 2009ல் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதும் இனமுரண்பாட்டின் வேர்கள் இன்றுவரை முழுமையாக அறுவடை செய்யப்படாது இன்றும் முரண்பாட்டின் எச்சங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் இனமுரண்பாடு எழுச்சி பெற்று வளர்ந்தபோது அதனை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதிலும் குறிப்பாக **நோர்வேயின் செயற்பாடுகள்** அளப்பரியதாகும். அந்தவகையில் நோர்வேயின் மத்தியஸ்தச் செயற்பாடுகளை நோக்குதல் அவசியமாகும்.

**இலங்கையில் நோர்வேயின் மத்தியஸ்தச் செயற்பாடுகள்**

**மத்தியஸ்தம் என்பது மோதல் தரப்பினரிடையே ஒரு பரிமாற்றல் ஊடகமாக அமைகின்றது.** அதாவது மோதல் தரப்பினரிடையே நேரடியாக இடைத்தொடர்பினை ஏற்படுத்துவதே மத்தியஸ்தத்தின் முக்கிய குறிக்கோளாகக் கொள்ளப்படுகின்றது. பிரச்சினையொன்றில் தொடர்புடைய தரப்புக்களை அவற்றின் சொந்த விருப்பங்களைக் கோருவதன் மூலம் ஓர் உடன்பாட்டிற்குக் கொண்டுவருவதன் மூலம் பிரச்சினையைத் தீர்த்தல். அதாவது நடுநிலைமை, பக்குவமான நிலைமைகள், விட்டுக்கொடுப்புப் போன்றவைகளை உள்ளடக்கிய சமாதானம் செய்கின்ற பரஸ்பர ரீதியான ஒரு செயற்பாடாகும். அதாவது மோதல் தரப்பினரிடையே இணைப்புப் பாலமாகச் செயற்படல் எனப்படுகின்றது.

நோர்வேயானது இலங்கையில் மத்தியஸ்தச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு விரும்பியமைக்குக் காரணம் யாதெனில் அது பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் வகித்ததுடன் அதனது வெளிநாட்டுக் கொள்கையில் ஏனைய நாடுகளில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் **'நோர்வே சமாதான விரும்பி'** எனப்படுகின்றது. மேலும் இலங்கையில் முரண்பாட்டில் ஈடுபட்ட தரப்புக்களான **இலங்கை அரசு** மற்றும் **LTTE** யினால் நோர்வேயின் மத்தியஸ்த செயற்பாடுகள் விரும்பப்பட்டமையுமாகும்.

1995ல் இலங்கையில் மூன்றாம் ஈழப்போர் ஏற்பட்டதனைத் தொடர்ந்து சந்திரிக்கா இலங்கை இனமுரண்பாடு தொடர்பில் நோர்வே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தச் செயற்பாட்டினை முன்னெடுக்கும் எனக் குறிப்பிட்டார். இதனடிப்படையில் **நோர்வேயின் முன்னாள் சுற்றாடல் மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்கெய்ம்** 2000.02.16ல் இலங்கை வந்ததை சந்திரிக்கா, ரணில் மற்றும் லக்ஷ்மன் கதிர்காமன் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர். இதேபோன்று 2000.11.27ல் மாவீரர் தின உரையில் பிரபாகரன் இலங்கை அரசிற்கு தனது ஒழுங்கமைப்பு நிபந்தனைகள் எதுவும் அற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக அறிவித்ததுடன் நோர்வேயின் மத்தியஸ்தச் செயற்பாட்டினையும் ஏற்றுக்கொண்டார்.

சமாதான முயற்சியானது முதலில் இலங்கையின் விசேட தூதுவராக நோர்வேயினால் நியமிக்கப்பட்ட எரிக்சொல்கெய்மினால் முன்னெடுக்கப்பட்டது. இதில் முரண்பாட்டுத் தரப்புக்கள் இரண்டும் நேரடியாகச் சந்திக்காதபோதும் இவர் இரு தரப்புக்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். 2வது முயற்சியான பேச்சுவார்த்தை 2002.01.24ல் ஆரம்பமானதுடன் இரு தரப்பினரும் ஒரு மேசைக்கு அழைக்கப்பட்டதோடு இப்பேச்சுவார்த்தையானது ஒரு மாதப் போர் நிறுத்தத்தை அடுத்து ஆரம்பமானது. இவ்வேளையில் அரசும் மோதல் தவிர்ப்பினை மேற்கொண்டது. LTTE அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் "புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் எனவும் தமிழ் மக்கள் சுமூகமாக வாழும் சூழல் ஏற்படுத்தப்படும்போது தாம் பேச்சுவார்த்தைக்கு தயார்" எனக்கூறிய போதும் இரு தரப்பினருடனும் தொடர்பு கொண்டு கதைத்ததுடன் தடைகள் நீக்கப்பட ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டார். இதன் காரணமாக மேற்குலக நாடுகளால் **'எரிக்சொல்கெய்ம்'** **'தபாற்காரர்'** போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதாகக் குறிப்பிடப்பட்டது.

தற்காலப் போர்நிறுத்தத்தை நிரந்தரமாக்கும் பொருட்டு **புரிந்துணர்வு ஒப்பந்தம்** கைச்சாத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தமானது மோதல் மட்டுப்படுத்தல் செயற்பாடாக அமைந்தது. நோர்வே பிரதிநிதிகள் முன்னிலையில் அரசு சார்பாக ரணிலும் LTTE சார்பாக பிரபாகரனும் கைச்சாத்திட்டனர். இவ் ஒப்பந்தமானது வவுனியாவில் 2002.02.22ல் கைச்சாத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தமீறலைக் கண்காணிக்கும் பொருட்டு நோர்வே தலைமையில் சுவீடன், பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து உறுப்பினர்களை உள்வாங்கிய வகையில் அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவானது **'SLMM'** என அழைக்கப்பட்டது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்துடன் 06 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இதனடிப்படையில் 1ம், 2ம் சுற்றுப் பேச்சுசார்த்தைகள் தாய்லாந்திலும் 3ம் சுற்றுப் பேச்சுவார்த்தை நோர்வேயிலும் 4ம் சுற்றுப் பேச்சுவார்த்தை தாய்லாந்திலும் 5வது ஜேர்மனியிலும் 6வது ஜப்பானிலும் இடம் பெற்றது. இவ்வாறு நோர்வேயினால் முன்னெடுக்கப்பட்ட மத்தியஸ்தச் செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறான நிலைமையினைக் கொண்டமைந்தது என்பது தொடர்பாக நோக்குவது அவசியமாகும்.

**இலங்கையில் நோர்வே மேற்கொண்ட மத்தியஸ்த செயற்பாட்டின் நிலை**

இலங்கையில் நோர்வேயினால் முன்னெடுக்கப்பட்ட மத்தியஸ்தச் செயற்பாடானது பல்வேறு நன்மைகளை வழங்கியுள்ளது.

**இரு தரப்பினரதும் கருத்துப் பரிமாற்றத்திற்கு வழிவகுத்தது**. அதாவது எந்தவொரு கருத்துப் பரிவர்த்தனையும் இடம்பெற்றிராத வேளையில், இரு தரப்பினருக்கிடையிலும் கருத்துப்பரிமாற்றத்திற்கு வழியமைத்துக் கொடுத்ததாக நோர்வேயின் செயற்பாடுகளில் குறிப்பிடப்படுகின்றது.

**சர்வதேசச் சமுகத்திற்கு இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக எடுத்துக் காட்டியதுடன் அதனைத் தீர்வுக்கு கொண்டுவருவதற்கு சர்வதேச சமூகத்தை தூண்டியது**. அதாவது 2005ம் ஆண்டு விசேட தூதுவராக UNO பில்கிளின்டனை சுனாமி தொடர்பான செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு நியமித்தமையானது சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான சர்வதேச முயற்சியாகக் கொள்ளப்பட்டது.

**LTTE மீதான தடைகள் 2002க்கு பின்பு நீக்கப்பட்டமை**. இச் செயன்முறையானது பேச்சுவார்த்தைகளைத் தடையின்றி நகர்த்துவதற்கு துணைபுரிந்ததோடு மக்கள் தொடர்பிணை LTTE தரப்பினர் விஸ்தரித்துக் கொள்ளவும் உதவியது.

**இரு தரப்பினரிடையிலும் நெகிழ்ச்சி தன்மையான போக்கு வளர்ச்சி கண்டமை**. அதாவது LTTE தரப்பினர் (பாலசிங்கம்) "புலிகள் அமைப்பு தனியான அரசு ஒன்றை உருவாக்குவதற்கான யுத்தத்தில் ஈடுபடாது" எனக்குறிப்பிட்டதுடன் அரசு சமஷ்டி அல்லது கூட்டாட்சியை ஏற்பதாக அறிவித்தது.

**அரசியல் தீர்வை காண்பதில் இரு தரப்பினரிடையிலும் இணக்கம் காணப்பட்டமை**. ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளின் போது சமஷ்டி செயன்முறைக்கு ஆதரவு தெரிவித்ததுடன் அதிகாரப்பங்கீடு தொடர்பாக பல்வேறு நாடுகளின் யாப்புகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன (பெல்ஜியம், USA, USSR). இதனடிப்படையில் மத்தியிலும் சுற்றிலும் அதிகாரத்தை எவ்வாறு பகிர்வது, புவியியல் பிரதேசங்கள், மனிதவுரிமை பாதுகாப்பு, அரசியல் மற்றும் பொதுநிர்வாக பொறிமுறை, சட்ட ஒழுங்குகள் என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் இதற்காக நோர்வே தலைமையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுகள் பற்றிய ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

**சர்வதேச சமூகத்தின் பொருளாதார உதவிக்கான ஆர்வம் அதிகரித்தமை.** சமாதான முயற்சிகளைப் பலப்படுத்தும் முகமாக நாடுகள் உதவி வழங்கி வந்ததுடன் சமாதான பாதையில் நின்று விலகக்கூடாது எனும் எச்சரிக்கையினையும் விடுத்தன. இதனடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு என USA, சுவிஸ்லாந்து, டென்மார்க், ஜப்பான் போன்ற நாடுகள் உதவிகளை வழங்கின.

**இலங்கையில் நீண்டகால யுத்த தவிர்ப்பு ஒன்றை ஏற்படுத்தியதில் நோர்வேயின் பங்கு மகத்தானது என இலங்கை பிரச்சினை தொடர்பான உயர்மட்ட சந்திப்பில் குறிப்பிடப்பட்டது.** இச் சந்திப்பு 2005.12.19ல் பிரசல்ஸ்சில் இடம்பெற்றதுடன் இதில் USA உதவி ராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரீனா றோக்கா, EU ஆணையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரேரோ வோல்ட்னர், ஜப்பான் விசேட பிரதிநிதி அகாசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நோர்வேயின் செயற்பாட்டின் காரணமாக இலங்கையின் இனப்பிரச்சினை சுமூகமான தீர்வினை நோக்கி நகர்த்தப்பட்டாலும் நோர்வேயின் மத்தியஸ்தச் செயற்பாடுகள் தோல்வியில் முடிந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. இது பல்வேறு காரணிகளின் தாக்கத்தின் காரணமாகத் தோல்வியினைத் தழுவிக்கொண்டது. அந்தவகையில் **நோர்வேயின் முயற்சி தோல்வியுற்றமைக்கான காரணங்களை பின்வருமாறு நோக்கலாம்.**

**நோர்வேயினால் முன்னெடுக்கப்பட்ட முதற்கட்ட பேச்சுவார்த்தைகளின்போது இரு தரப்பும் நேரடியாக சந்திப்பில் ஈடுபடவில்லை.**

LTTE தரப்பினர் போர் நிறுத்தத்தினை அறிவித்த போதும் அரசாங்கம் அதற்கு சாதகமாகப் பதிலளிக்கவில்லை. மேலும் இரு தரப்பினரும் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் மத்தியஸ்த செயற்பாட்டினை மேற்கொள்ளும்படி கூறவில்லை. அதாவது **அரசாங்கம் சர்வதேசத்திற்கு தாம் சமாதான விரும்பிகள் என வெளிப்படுத்த எண்ணியதுடன் LTTE தரப்பினர் தமிழர்களுக்குச் சிங்கள அரசாங்கம் உரிமைகளை வழங்காது என்ற நோக்கை உலகிற்கு உணரவைப்பதற்குப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டது.** மேலும் இலங்கையின் அரசியல் கட்சிகள் மற்றும் சில ஒழுங்கமைப்புக்கள் நோர்வேயின் சமாதான தூதுவரின் வருகையை வரவேற்கவில்லை. இந்தியாவின் உள்துறை அமைச்சர் பிரபாகரனை தம்மிடம் ஒப்படைக்கும்படி கூறியமை. இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக முதற்கட்டப் பேச்சுவார்த்தை தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்து **போர்நிறுத்த ஒப்பந்தம்** கைச்சாத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் நோர்வே தலைமையில் ஒரு 'கண்காணிப்புக்குழு (SLMM)' ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவிற்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களே வழங்கப்பட்டிருந்தது. அதாவது, கண்காணிப்பு அதிகாரம் வழங்கப்பட்ட போதும் அது முழுமையானதாக அமையவில்லை. மேலும் மட்டக்களப்பில் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு முன்பு புலிகள் இராணுவ வண்டி மீது தாக்குதல்களை மேற்கொண்டமையால் கண்காணிப்புக்குழு தனது செயற்பாடுகளை 2006.01.19ல் நிறுத்திக்கொண்டது (03 வருடங்கள் மாத்திரமே செயற்பட்டது). அரசு மற்றும் LTTE ஒப்பந்தம் என்பதனால் மூன்றாம் தரப்பால் அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

**நோர்வே இரட்டை செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டி ஏற்பட்டமை** சமாதான அனுசரணையாளர் செயற்பாடு மற்றும் கண்காணிப்பு குழுத்தலைமை, அத்துடன் ஒப்பந்தத்தில் சிறுவர்களை போருக்குத் திரட்டுதல், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான குறைபாடு, கடல் வலயம் தொடர்பான பிரச்சினை என்பன உள்வாங்கப்படாமை.

நோர்வேயினால் LTTE கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியாமல் போனமை, யாழ் பிரதான பாதைகள் திறக்கப்பட்டதன் விளைவாக LTTE அப்பிரதேசத்தினூடாக பிரயாணம் மேற்கொள்ளும் மக்கள், பொருட்கள் மற்றும் வாகனங்கள் மீது வரி விதிக்கத் தொடங்கியமை, மேலும் LTTE தரப்பினர் ஆயுதங்கள், பணம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ பொருட்களை அதிகளவு சேகரித்துக் கொண்டமை போன்றனவும் காரணமாயின.

**இருதரப்பும் தமது விரோதிகளைக் கொலை செய்தமை.** 2002-2005 ஆவணி வரை 3113பேர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் இதில் 141 அரசியல் படுகொலைகளும் உள்ளடங்குகின்றன. இது நோர்வே மத்தியஸ்த செயற்பாட்டினை முன்னெடுக்க முடியாமல் தடுமாறியதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**நோர்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் LTTEக்கு சார்பான நாடுகள் என விமர்சிக்கப்பட்டமை.** அதாவது LTTEக்கு நோர்வே நோராட், ரெட்பானா போன்ற அமைப்புக்கள் ஊடாக நிதி வழங்கியதாகக் கூறப்பட்டது. 2005ம் ஆண்டு எரிக்சொல்கெய்ம் 2.2 மில்லியன் அமெரிக்கடொலரினைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக வழங்கியதாகக் குறிப்பிடப்படுகின்றது. மேலும் LTTEக்கு ஒஸ்லோவில் சர்வதேச தொடர்பாடல் தலைமையகத்தினை அமைப்பதற்கு நோர்வே அனுமதி வழங்கியமை, அத்துடன் நோர்வேயில் 100 LTTE உறுப்பினர்கள் கல்வி கற்பதற்கான விசாவினை வழங்கியமை போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

கருணா LTTEயில் இருந்து பிரிந்து கிழக்கு மாகாணப் புலிகளின் தலைமையை ஏற்றதுடன் 2004.03.03ம் திகதி தம்முடன் தனியான போர்நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்ளும்படி அரசு மற்றும் நோர்வேயை வேண்டியமை.

சுனாமியின் நிமிர்த்தம் கொண்டுவரப்பட்ட **பொதுக்கட்டமைப்பு** சகலதரப்பினரையும் அனுசரித்து செல்லும் நிலையில் இருக்கவேண்டும். ஆனால் முஸ்லிம் தரப்பினர் கைவிடப்பட்டனர். இதனால் முஸ்லிம் தரப்பினர் ஒரு புறமும் மக்கள் விடுதலை முன்னணி இன்னொருபுறமும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டன.

2003ல் சந்திரிக்கா 03 அமைச்சுக்களை (உள்நாட்டு, பாதுகாப்பு, தொலைத்தொடர்பு) தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தமை. அதனைத் தொடர்ந்து இடைத்தேர்தலை நடத்தியமை.

ஜப்பானில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது LTTE தரப்பினர் ஜப்பானியர் ஒழுங்கு செய்த விருந்தினை ஏற்காததுடன் ஜப்பானின் பிரசித்தி பெற்ற இடங்களை பார்வையிடச் செல்லவில்லை. என்பன LTTE தரப்பின் சமாதான செயன்முறையில் ஈடுபாடற்ற தன்மையை வெளிப்படுத்தியதாக எரிக்சொல்கெய்ம் குறிப்பிடுகின்றார்.

**LTTE தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பதில் குறியாக காணப்பட்டமை.** அதாவது கிழக்கு மாகாணத்தில் பொலீஸ் நிலையம், நீதிமன்றம், தனக்கெனத் தனியான நீதிச்சட்டங்கள் என்பவற்றை ஏற்படுத்திக் கொண்டது. இதனால் அரசாங்கம் LTTE நிழல் அரசாக செயற்பட்டு வருவதாக நோக்கியமை.

2003.07.17 அரசு **'வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டுமானம்'** என்ற பெயரில் யோசனைகளை நோர்வே மூலமாக கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்தபோதும் அதனை LTTE தரப்பினர் ஏற்காது. அதற்கு மாற்றுத்திட்டமாக **'தன்னாட்சி அதிகாரசபை'** யோசனைகளை LTTE முன்வைத்ததுடன் அது அரசியல் அமைப்புக்கு வெளியில் வைத்து நோக்கப்படவேண்டும் எனக்கூறியமை. இவ்வாறு முரண்பட்ட கருத்துக்களையும் யோசனைகளையும் இரு தரப்பும் கொண்டிருந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006 மார்கழி அன்ரன் பாலசிங்கத்தின் மரணத்தை தொடர்ந்து LTTE தரப்பில் முடிவுகள் யாவும் பிரபாகரனின் தனிப்பட்டதாக அமைந்தது. UN மனிதவுரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளர் ஜோன்ஹோல்ம்ஸிற்கும் புலிகளின் சர்வதேசப் பிரதிநிதி குமரன் பத்மநாதனுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடாத்த நோர்வே அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தமையானது இலங்கை அரசினை அதிருப்தி அடையச்செய்தது. ஏனெனில் இலங்கை அரசின் அனுமதி பெறப்படாமல் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடாக இது அமைந்தமை.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதுடன் அரசியல் ரீதியான விட்டுக்கொடுப்புகளை முன்னெடுக்க மஹிந்த ராஜபக்ஷ தயாராக இருந்தபோதும் LTTE அதனை மறுத்தமை. அதாவது புதிய அரசாங்கமானது தேர்தல் இல்லாமலே பிரபாகரனை வட-கிழக்கிற்கு முதலமைச்சராகத் தெரிவு செய்வதற்கு முயற்சி செய்ததுடன் அது தொடர்பாக எரிக்சொல்கெய்ம்க்கு தனது அபிப்ராயத்தையும் முன்வைத்தார். ஆனால் LTTE தரப்பினர் தமது சுயலாபம் மற்றும் தமது கருத்துக்களிலே கவனத்தைச் செலுத்தினர். LTTE தரப்பினர் அதிகளவு போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயற்பாடுகளை முன்னெடுத்தது மட்டுமன்றி ஒப்பந்தத்தில் இருந்து விலகிக்கொண்டமை. இதனை அடுத்து 2008ம் ஆண்டு அரசாங்கமும் ஒப்பத்தந்தில் இருந்து விலகியமை.

மென்மையானதும் பலவீனமானதுமான நோர்வேயினால் ஒப்பந்தத்தைப் பின்பற்றச் செய்வது கடினமாக அமைந்தது. மேலும் USA மற்றும் இந்தியாவின் ஆலோசனைகளின் பெயரிலே நோர்வே மத்தியஸ்த செயற்பாடுகளை மேற்கொள்ள வந்தது. அந்தவகையில் இவ்விரு நாடுகளினதும் தாக்கம் அதிகளவு காணப்பட்டமை. உதாரணமாக, 2004ம் ஆண்டு இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சியேற்றபோது சோனியாகாந்தி அதிகளவு செல்வாக்குமிக்க நபராக மாறியமை.

இவ்வாறான காரணிகளின் மூலம் நோர்வேயினால் முன்னெடுக்கப்பட்ட சமாதானச் செயன்முறைகள் தோல்வியடைந்ததாகக் குறிப்பிடப்படும் அதேவேளை, உண்மையில் எவ்வாறான காரணிகளின் காரணமாகத் தோல்வியடைந்தது என்பதனை ஆராயும் பொருட்டு நோர்வே அரசின் ஆதரவுடன் **நோர்வேயின் மைகேல்சன் நிலையம், லண்டனின் கீழ்திசை நிலையம் மற்றும் ஆபிரிக்க கல்வி நிலையம்** என்பன ஆய்வுகளை மேற்கொண்டு 208 பக்கங்கள் கொண்ட அறிக்கையைச் சமர்ப்பித்தது. இவ் அறிக்கைக்கு **'Powns Of Pease'** எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. **மிக் கெல்சன் நிலையத்தைச்** சேர்ந்த **'குன்னர் சேர்போ'** என்பவர் நோர்வே மேற்கொண்ட சமாதான முயற்சி தோல்வியடைந்தமைக்கு 04 காரணங்களை முன்வைக்கின்றார்.

1. இலங்கை அரசாங்கமும் LTTE உம் சமாதான முயற்சிகளில் பங்கு கொண்டபோதும் தமது நிலைப்பாடுகளை விட்டுக்கொடுக்காமலே இருந்தனர். இதனால் இரு தரப்பினரும் அரசியல் தீர்வைக்காணும் செயற்பாட்டில் உளச்சுத்தியுடன் ஈடுபடவில்லையென்று கூறிவிடமுடியாது. ஆனால் இந்த சமாதான முயற்சி எப்படி அரசியல் ரீதியாக நிறைவுற வேண்டும் என்று இருதரப்பினரும் அவர்கள் வரையறுத்துக்கொண்ட நிலையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு எந்தவொரு மாற்றத்தினையும் செய்யவில்லை.
2. இலங்கையின் அரசியலமைப்புக் கட்டமைப்பு ரீதியான நடைமுறைகளும் நோர்வே மேற்கொண்ட சமாதான முயற்சியைப் பாதித்தன. இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவிய பரம்பரை அரசியல் உட்கட்சிப்போட்டிகள் முக்கியமானவர்களுக்கு நன்மை செய்யும் அரசியல் தேசியவாத அணிச்சேர்ப்புப் போன்றனவும் நாட்டை சீர்திருத்துவதற்கும் சர்வதேச நாடுகள் தலையிடுவதற்கும் தடங்கலாக இருந்தன.

3. ஒரு பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு இருந்த வாய்ப்பு என்பது மிகவும் குறுகியதாகவும் இராணுவரீதியிலான சமநிலை இருக்கும் ஒரு நிலை, மேற்கு நாடுளுடன் ஒத்த கருத்துணர்வில் இயங்கும் ஓர் அரசு இருப்பது பலதரப்பட்ட சர்வதேச நாடுகளின் ஆதரவு பேச்சுவார்த்தைச் செயற்பாடுகளுக்கு இருந்தது என்ற நிலை போன்றவை மிகவிரைவிலேயே மாறிவிட்டன. முக்கியமாக 2004ல் புலிகள் இயக்கம் பிளவுபட்டமையானது இராணுவ சமநிலையை அரசுக்கு சாதகமாக்கியதுடன் புலிகளின் இவ் பிளவுக்குப் பின்பு இருதரப்புமே மற்றத்தரப்பிற்குக் குறிப்பிடத்தக்க சலுகைகளைக் காட்டவேண்டியதற்கான தேவைகளைக் குறைத்துவிட்டது.

4. UN சமாதான வழிமுறை பாதுகாப்பு உத்தரவாதங்கள், சர்வதேச உதவி, பொருளாதார சீர்திருத்தங்கள் போன்றன சிங்கள தேசியவாத எதிர்வினையை ஏற்படுத்தின. இதனால் ஒரு தேசியவாதக் கட்சி ஆட்சிக்கு வந்தமையினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆசியநாடுகளின் உதவியுடன் புதிய சர்வதேசப் பாதுகாப்பு வட்டத்தைத் தாக்காதவராக அமைத்துக்கொண்டு புலிகள் மீது கடும் அணுகுமுறையை கைக்கொள்ள உதவியது.

போன்ற காரணிகளின் காரணமாக சமாதான முயற்சி தோல்வியைத் தழுவியதாக குறிப்பிடுகின்றார். இவ்வாறான காரணிகளின் காரணமாக இலங்கையில் நோர்வேயினால் முன்னெடுக்கப்பட்ட மத்தியஸ்தச் செயற்பாடுகள் தோல்வியினைப் பெற்றிருப்பினும் அதனது மத்தியஸ்த செயற்பாடானது இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு புதிய பார்வைக்கு வழி வகுத்தது என்றால் மிகையாகாது.

**உசாத்துணைகள்**


- சர்ஜீன்,ஏ. றிபான்,ஏ,எம். (2012), **சமகால அரசறிவியல் எண்ணக்கருக்கள்,** கொழும்பு : இஸ்லாமிக் புக் ஹவுஸ்.
- **நோர்வேயின் நடவடிக்கைகள் குறித்து இலங்கை** (01.04.2009), (Available: http://www.globaltamilnews.net ),(access from -06.10.2016).
- **இலங்கையின் இன முரண்பாட்டில் நோர்வே,** (Available: http://jsangar.blogspot.com), (access from -06.10.2016).
- **சமாதான முயற்சிகளில் நோர்வேயின் அனுபவம்** - வி.சிவலிங்கம் (Erik solhein உதவியுடன் Mark salter இனால் எழுதப்பட்ட **TO END THE CIVIL WAR** என்ற நூலில் இருந்து தொகுக்கப்பட்டது.) ,(Available: http://ilakkiyainfo.com ),(access from -06.10.2016).
- (Available: http://inioru.com ),(access from -06.10.2016).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தில் இரசாயன வளமாக்கி மற்றும் கிருமிநாசினிப் பாவனையும் அதன் விளைவுகளும்

நா.சுஜீவன்,
மூன்றாம் வருடம்,
புவியியற்றுறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



## அறிமுகம்

இரசாயனக் கிருமிநாசினிகளை இன்று உலக நாடுகள் பயிர்ச்செய்கைக்கு அதிகளவில் பயன்படுத்தி வருகின்றன. உயிர்ச் சூழலை நஞ்சூட்டும் செயற்பாடாகக் கிருமிநாசினிப் பயன்பாடு காணப்படுகிறது. கல்சியம், செப்பு, கந்தகம் முதலான அசேதன இரசானப் பொருட்களும் டி.டி.ரி அல்லது அல்ட்ரின், எல்ட்ரின், மலத்தியோன், பறதியோன், பேகொன் முதலான செயற்கைச் சேதன இரசாயனப் பொருட்களும் இன்று கிருமிநாசினிகளாக மாறியிருக்கின்றன.

**டி.டி.ரி, எல்ட்ரின்** போன்றவை இலகுவில் நீரில் கரைவனவன்று. ஆதலால் அவை உணவுச்சங்கிலியில் பிரவேசிக்கின்றன. இதன் காரணமாக அவற்றின் நச்சு விளைவு உயிர்சூழலில் பரவிப் படிப்படியாக அவற்றின் நச்சுத்தன்மை அதிகரிக்கிறது. உதாரணமாக மீன் உணவான பிளாந்தனில் சேரும்போது 800 மடங்கும், பிளாந்தனை மீன் உண்ணும்போது 11600 மடங்கும், பறவைகள் அந்த மீனை உண்ணும்போது 92000 மடங்கும் நச்சுத்தன்மை அதிகரிக்கிறது. சைபீரிய வாத்துக்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இவ்வாறு நச்சுத் தன்மை அதிகமாக இருந்தமை உறுதிசெய்யப்பட்டது.

மிகப் பொதுவான வேதிப்பொருட்கள், மாசுக்கள், பெற்றோலிய ஐதரோபன்கள், கரையங்கள், பூச்சிகொல்லிகள், ஈயம், பார உலோகங்கள் என்பவை மிகப் பிரதான மாசாக்கிகள் ஆகும். மண்மாசடைதலால் ஏற்படக்கூடிய மிகமுக்கிய பிரச்சினை உடல்நலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பாகும். இது மண்ணுடனான நேரடித் தொடர்பாலோ மண்ணுடன் நேரடித் தொடர்புடைய நீர்மாசடைதல் மூலமோ ஏற்படலாம். இதில் சிறுநீரக தொற்று முக்கியமானது.

விவசாய நிலங்களில் கிருமிநாசினிகள், பீடைநாசினிகள் மற்றும் இரசாயன உரங்கள் என்பவற்றின் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வாறு பயன்படுத்தப்பட்ட நிலத்தினூடாக நீரானது வெள்ளப்பெருக்கு காலங்களில் பாய்ந்து செல்லும் போதோ அல்லது நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கூடாக ஆறுகளில் இந்நீர் கலக்கின்றபோதோ அத்தகைய மாசுக்களைக் கழுவிச்சேர்த்த வண்ணமே நகர்கின்றது. மேலும் இரசாயனக் கிருமிநாசினி பீடைநாசினி என்பவற்றின் கொள்கலன்கள் அருகிலுள்ள நீர்நிலைகளில் விடப்படுவதும் நீர்மாசடைதலுக்கு ஏதுவாகின்றது. வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை விவசாய நடவடிக்கைகள் அதிகளவு நிலப்பரப்பில் இடம்பெறுவதால் இத்தகைய மாசாக்கம் இடம்பெறுகின்றது. குறிப்பாக இந்தியா, இலங்கை, போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாசிய நாடுகளில் இந்நிலை அதிகம் அவதானிக்கப்படுகின்றது. இலங்கையில் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் சிறுநீரக நோய்த் தாக்கம் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளது. அதற்குக் கிருமிநாசினி மற்றும் வளமாக்கிகள் காரணம் எனக் கூறி சிலவற்றுக்குத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக **'கிளைக்கோயன்'** இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

விவசாய விளைச்சல் அதிகரிப்பதற்காக இன்று இரசாயன வளமாக்கிகளும், கிருமிநாசினிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு பயன்படுத்தும்போதும், வினைத்திறனற்ற பாவனையாலும் சூழல் பாதிப்புக்களை உருவாக்குகின்றன. பயிர்களுக்கு இடப்படும் இரசாயன வளமாக்கிகள் நீருடன் அடித்துச் செல்லப்படுவதால் நீர்நிலைகளில் அவை கலந்து நீர் மாசடைகிறது. இதனால் நீரில் மிதக்கின்ற அல்காக்கள் செழிப்பாக வளரும். இதனால் அவை நீர்ப்பரப்பை மூடிப்படர்ந்து விடுவதால் நீருக்குள் சூரிய ஒளி செல்வது தடுக்கப்படுகிறது. இதனையே **'நற்போசணையாக்கம்'** என்பர். இதன் காரணமாக நீரிலுள்ள ஒட்சிசனின் அளவு குறைவடைய ஆரம்பிக்கும்போது நீரிலுள்ள உயிரினங்கள் போதிய ஒட்சிசன் மற்றும் சூரிய ஒளியைப் பெற முடியாது போகும்.

இரசாயனப் பசளைகளை அதிகளவில் பயன்படுத்துவதால் மண்ணின் நுண்ணங்கிகளும் பாதிப்புறுகின்றன. நைதரசன் வட்டம், காபன் வட்டம் போன்ற இயற்கை வட்டச் செயற்பாடுகளும் பாதிப்புக்குள்ளாகின்றன. வயலிலுள்ள களை மற்றும் பீடைகள், பூச்சிகளை அழிப்பதற்கு அதிக செறிவுள்ள பூச்சி கொல்லிகளை விவசாயிகள் உபயோகித்து வருகின்றனர். இப் பூச்சிகொல்லி மருந்துகள் நீர்நிலைகளில் சேரவிடப்படுகின்றன. அத்தோடு நீர்ப்பாசனம் செய்வதன் மூலமே அதிகளவான இரசாயனம் பூமியின் கீழ்ப்பகுதிக்கு விடப்படுகிறது. அந்நீர் பின்னர் தரைக்கீழ் நீராக மாற்றமடையும்போது தரைக்கீழ் நீர் நச்சுத்தன்மை அடைகிறது. இந்நீரை மனிதன், தாவரங்கள், விலங்குகள் பயன்படுத்தும்போது அவற்றின் கலங்கள் நச்சுத்தன்மையடைகின்றன. மனித உடம்பினுள் பூச்சிகொல்லிகளின் செறிவு அதிகரிக்கும்போது உடல் பலவகையான நோய்த் தாக்கங்களை எதிர்கொள்கிறது. சிலவேளைகளில் உயிர் ஆபத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. மண்ணில் வாழும் நுண்ணங்கிகளையும் இப்பூச்சிகொல்லிகள் அழித்து விடுகின்றன. இதனால் காபன் வட்டம், நைதரசன் வட்டம் முதலான இயற்கைச் சுழற்சிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றன.

**கிருமிநாசினி மற்றும் வளமாக்கிப் பாவனையின் தாக்கம்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் **செறிவு வேளாண்மை (Intensive Agriculture)** நெடுங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறைந்த நிலப்பரப்பில் கூடுதலான வேளாண் இடுபொருட்களைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் அமோக விளைச்சல் பெறும் முறைமை 'செறிவு வேளாண்மை' எனப்படுகிறது. இரசாயன உரம், பீடைகொல்லி, களைகொல்லி என இரசாயனங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. இரசாயனங்களைப் பயன்படுத்த வேண்டிய அளவு, வகை, காலநேரம், பக்கவிளைவு போன்றனக் குறித்த விழிப்புணர்வு ஏதுமற்ற நிலையில் பிரயோகிக்கப்படுகின்றது. யாழ் குடாநாட்டின் அடித்தளம் 'மயோசீன்' காலத்து சுண்ணாம்பு பாறைகளாலானது. இப்பாறைகள் மூட்டுக்களையும் நுண்துளைகளையும் கொண்டிருப்பதனால் வேளாண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசாயனங்கள் மழைநீருடன் சேர்ந்து வடிந்தோடி சுலபமாக நிலத்தடி நீருடன் கலந்து விடுகின்றது.

இலங்கை வருடந்தோறும் 80 பில்லியன் பெறுமதியான அசேதன வளமாக்கிகள் இறக்குமதி செய்வதாக பல அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கை ஒரு வெப்பமண்டல நாடாகையால் இவ் இரசாயனப் பொருட்களால் வெளியேற்றப்படுகின்ற ஈரத்தன்மையாலும் வெப்பத்தாலும் அதிகளவான நைதரசன்டை ஒக்சைட் வாயு மண்ணிலிருந்து உருவாக்கப்படுகின்றது.

இரசாயன உரங்களின் பாவனையானது 1960களின் ஆசிய, லத்தின் அமெரிக்க நாடுகளில் இரசாயன உரங்களை அறிமுகப்படுத்திய பசுமைப்புரட்சியால் (Green Revolution) பூகோளமயமாக்கப்பட்டது. விவசாயிக்கும் சமூக நலன்புரி அமைப்புக்களுக்கும் ஆதரவு நல்குகின்ற "GRAIN" என்ற நிறுவனம் இரண்டு அழிவை ஏற்படுத்தும் போக்குமுறைகளை கோடிட்டுக் காட்டியுள்ளது.

- ➢ வெப்பமண்டல நாடுகளில் இரசாயன உரப்பாவனையின் அதிகரிப்பானது நிலத்திலிருந்து அதிகளவான நைதரசன்டை ஒக்சைட்டை உருவாக்கும்.
- ➢ அதிக உரச்சேர்கையானது நைட்ரைஜன் டை ஒக்சைட்டின் வெளியேற்று வீதத்தை கணிசமான அளவு அதிகப்படுத்துகின்றது.

இரசாயன உரங்களின் சிறப்புத்தன்மை வரையறுக்கப்பட்டதாகும். எனவே, ஒவ்வொரு வருடமும் விவசாயிகள் அதிகப்படியான விளைச்சலைப் பெறுவதற்கு அதிகளவான இரசாயன வளமாக்கிகளைப் பாவிப்பதானது இதன் மிகக் கொடிய நிலையாகும். கடந்த 4 தசாப்தங்களில் நைடரஜன் உரங்களின் மூலம் ஏற்படும் விளைச்சல் மூன்றில் இரண்டு பங்கு குறைவடைந்துள்ளது. ஆனால் இதன் பாவனையோ ஒவ்வொரு ஹெக்டெயருக்கும் ஏழு மடங்காக அதிகரித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) பல விவசாய இரசாயனங்களை ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், மேற்கு ஐரோப்பிய நாடுகள் முதலியவற்றில் பயன்படுத்துவதற்கும், அவற்றை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தடைவிதித்துள்ளது. 1987/88 காலவேளையில் ஐக்கிய அமெரிக்காவில் இறக்குமதியாகிய இறைச்சி, அன்னாசி, கோப்பி முதலியவற்றில் கிருமிநாசினி நச்சுத் தன்மைகள் இருப்பது கண்டறியப்பட்டது.

பரிசீலனைக்குட்பட்ட விவசாயிகளில் நச்சுதன்மைச் செறிவு உடலில் கலந்திருப்பது கண்டறியப்பட்டது. கண்பார்வைக் குறைவு, மூச்சு விடுவதில் சிரமம், தசைப்பிடிப்புக்கள், ஓயாத தலையிடி என்பன இதன் விளைவாக ஏற்படுகின்றன. பிறக்கின்ற குழந்தைகளில் கூட இத்தகைய நச்சுத்தன்மை செறிவு அவதானிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சூழல் சபையின் கணிப்பீட்டின் படி வருடாவருடம் 22 ஆயிரம் மக்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கிருமிநாசினிப் பயன்பாட்டின் தாக்கத்தால் இறக்கின்றனர்.

சர்வதேச கிருமிநாசினிச் செயற்றிட்டத்தினால் (PAN) 12 கிருமிநாசினிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த 12 கிருமிநாசினிகளும் **"Dirty Dozen"** என்று அழைக்கப்படுகின்றன. **2-4T5DBCP, அல்ட்ரின், BHC, குளோடான், டி.டி.ரி, பறக்குவாட், எத்லின்ட் - டிப் றோமைட், பறதியோன், பென்ரகுளோரோபெனோல், காம் ஹொலார், குளோரோடிடமிபோம்** முதலானவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய மாசுக்களாகும். அவற்றில் நான்கு மட்டுமே இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

வேளாண்மையில் பயன்படுத்தப்படும் நைதரசன் உரங்களிலிருந்து **நைத்திரேற்று ($NO_3^-$)** அதிகளவில் தண்ணீரில் கலக்க நேருகிறது. இது குடிநீருடன் உடலை அடையும்போது குடல்வாழ் பக்ரீறியாக்களினால் **'நைத்திரைற்றாக ($NO_2^-$)'** மாற்றப்படுகிறது. ஆபத்து இங்கேதான் ஆரம்பிக்கிறது. நைத்திரற்று சமிபாட்டு நொதியங்களுடன் தாக்கமடைந்து **'நைத்திரோசமைன்கள் (Nithrosamines)'** எனப்படும் வேதிகளாக உருவாகுகின்றன. இவை மிகப்பயங்கரமான புற்றுநோயத் தூண்டிகள். தொண்டை, இரப்பை, பெருங்குடல், சிறுநீர்ப்பை உட்படப் பல்வேறு உறுப்புக்களிலும் புற்றுநோயை ஏற்படுத்த வல்லன. அத்தோடு நைத்திரைற்று குழந்தைகளின் செங்கலங்களிலுள்ள **ஈமோகுளோபினை (Hemoglobin) மெதிமோகுளோபினாக (Methemoglobin)** மாற்றிவிடக்கூடியது. இதன்மூலம் **ஒட்சிசன்($O_2$)** கொண்டு செல்வதில் இடையூறுகளை ஏற்படுத்தி **'நீலக்குழந்தைகளின் (Blue Babies)'** பிறப்புக்கும் காரணமாக அமைகின்றது.

அதிர்ச்சியளிக்கும் விதமாக சுன்னாகம் பிரதேசக் கிணறுகளில் நைத்திரேற்று அனுமதியளிக்கப்பட்ட அளவை விட மிக உயர்வாக இருப்பதும் இப்பிரதேசத்திலேயே தொண்டை மற்றும் இரைப்பை புற்றுநோயாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதும் தெரியவந்துள்ளது. சுன்னாகம் பெருமளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற ஊர் என்பது அறிந்ததே. இவ் ஆய்வுக்கு முன் யாழ் பல்கலைக்கழகத்தின் இரசாயனபீடம் மேற்கொண்ட ஒரு ஆய்விலும் கோண்டாவில், உரும்பிராய், வல்வெட்டித்துறை, வேலணை போன்ற விவசாயக் கிராமங்களிலும் கிணற்று நீரில் நைத்திரேற்று அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வுகள் ஏனைய விவசாயப் பிரதேசங்களுக்குரிய அபாயமாகக் கொள்ள முடியும்.

யாழ் குடாநாட்டில் 60க்கும் அதிகமான பீடைகொல்லிகள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் ஒன்றான **'கார்போ-பியூறன் (Carbo – Furan)'** பூச்சிகொல்லி நஞ்சாக நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படுகிறது. கென்யாவில் விவசாயிகள் தங்கள் கால்நடைகளைக் கவருகின்ற சிங்கங்களைக் கார்போ.ஃ.பியூறன் நஞ்சு வைத்தே கொல்கின்றனர் என்பதிலிருந்து அதன் கொல்திறனைப் புரிந்து கொள்ளமுடியும். யாழ் குடாவைப் போலவே கற்பிட்டிக் குடா விவசாயிகளும் கார்போ.ஃ.பியூறன் நஞ்சை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தண்ணீரில் கார்போ.ஃ.பியூறன் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. ஆகவே கற்பிட்டிக் குடாவின் ஒத்த மண்ணமைப்பைக் கொண்ட யாழிலும் நிலத்தடி நீரில் கார்போ.ஃ.பியூறன் ஊடுருவியிருக்கும் என்பது திண்ணம்.

எகிப்தில் 'அலெக்காண்ட்ரா பல்கலைக்கழகத்தில்' மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் முயல்களின் விந்துகளின் உற்பத்தியை கார்போ.ஃ.பியூறன் பாதிப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதைவிட யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்படுகின்ற **டயொசீனோன் (Diazionon), பூச்சிகொல்லி, அலகுளோர் (alachlor), அட்ராசின் (Atracin), களைகொல்லி நஞ்சுகளும்** விந்துகொல்லிகளாக செயற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக ஆண்கள் மலடாகும் போக்கு உலகளவில் அதிகரித்திருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களின் விந்துகளின் எண்ணிக்கையை விட தற்போது உள்ளவர்களில் விந்துகள் குறைவாகவே உற்பத்தி செய்யப்படுகின்றது. அதுமாத்திரமில்லாமல் வீரியம் குறைந்த, உருத்திரிபுற்ற, கருமுட்டையைத் துளைக்க முடியாதவாறு ஈட்டி முனை மழுங்கிய விந்துகளும் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. இப்படி விந்துகள் அளவிலும் தரத்திலும் தாழ்ந்து போவதன் சூத்திரதாரிகளில் முதன்மையானது பீடைகொல்லி நஞ்சுகள் தான். குடிநீருடன் உடலைச் சென்றடையும் இவை **'ஈஸ்திரோஜன் (Estrogen)'** என்ற பெண் ஓமோனைப் போலவே பாசாங்கு செய்து ஆண்மையைப் பறித்து வருகிறது.

நாட்டின் சில பிரதேசங்களில் கடந்த 20 ஆண்டுகளாக மர்மமாக இருந்துவரும் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு மண்ணில் கலக்கும் விவசாய இரசாயனப் பொருட்களே காரணம் என்று தமது ஆய்வுகள் உறுதி செய்வதாக வைத்தியர் சங்கங்களின் ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இலங்கையில் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற காரணங்களினால் ஏற்படும் சிறுநீரக நோய்க்கு உள்ளான முதலாவது நோயாளி அனுராதபுரம் மாவட்டத்தில் 1993ம் ஆண்டில் கண்டறியப்பட்டார். அதன் பின்னர் அடுத்த 10 ஆண்டுகளில் அந்த எண்ணிக்கை **15.5%** ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை மருத்துவர் சங்க அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

"உலகில் இலங்கையில் தான் விவசாய இரசாயனம் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது" என இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் 'Dr.அனிருத்த பாதெனிய' தெரிவித்துள்ளார். ஏனைய நாடுகள் **10-12** என்ற அலகுகளில் விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்தும் போது இலங்கையில் **284** அலகுகள் என்ற அளவில் இரசாயனம் பயன்படுத்தப்படுகின்றது. இரண்டாவது நிலையில் இருக்கும் பங்களாதேஷ் **164** அலகுகள் என்ற அளவில் உள்ளது. இந் நாட்டை விட இலங்கையின் பாவனை இரண்டு மடங்காக உள்ளது என்றும் அனிருத்த பாதெனிய தன்னுடைய ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

1950-70 களிலேயே இலங்கையில் விவசாய இரசாயனப் பாவனை தொடங்கியதாகவும் அதன் பின்னரே இலங்கையில் சிறுநீரக நோயாளிகளும் அதிகளவில் அடையாளம் காணப்பட்டதாகவும் Dr.அனிருத்த பாதெனிய குறிப்பிட்டார். கடந்த காலங்களில் யுத்தம் நடைபெற்ற வடக்குப் பிரதேசங்களில் விவசாய இரசாயனப் பொருட்கள் கொண்டு செல்வதில் காணப்பட்ட தடை காரணமாக அப்பகுதியில் குறைவாக இருந்த சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை தற்போது இப்பகுதியிலும் அதிகரித்து வருவதும் கண்டறியப்பட்டுள்ளது.

ரஜரட்டப் பகுதியில் முதலில் கண்டறியப்பட்டதால் **'ரஜரட்ட சிறுநீரக நோய்'** என்றும் இதற்கு பெயர் உள்ளது. இன்று இந் நோய் அப்பகுதியையும் தாண்டி **பொலன்னறுவை** மற்றும் **அம்பாந்தோட்டை** போன்ற ஏனைய தென்னிலங்கைப் பகுதிகளையும் பெருமளவில் பாதித்துள்ளது. இப்போது இந்நோய் மெதுவாக வடக்கு நோக்கியும் நகர்ந்து வருகிறது. இதையடுத்து அரசு சிறுநீரக நோயை கண்காணிக்கப்படும் நோயாக அறிவிக்க வேண்டும். விவசாயத்தில் இரசாயனப் பாவனை தொடர்பான கொள்கைத் திட்டங்களை மாற்றியமைத்தல், 1960களின் முன்னர் இருந்த பாரம்பரிய உரங்களைக் கொண்ட விவசாய முறையை ஊக்குவித்தல் போன்றவை மூலம் இந் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தலாம் என சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெக்சிக்கோவிலிருந்து ஐக்கிய அமெரிக்காவினுள் ஒரு குட்ஸ் புகையிரதப்பெட்டிக்குள் களவாக வர முயன்ற ஐவர் அப்பெட்டிக்குள் ஏற்றியிருந்த பொருட்களின் நச்சுத்தன்மை காரணமாக அண்மையில் இறந்து போயினர். சில வருடங்களுக்கு முன் வயலுக்கு கிருமிநாசினி தெளித்துவிட்டு வீசியெறிந்த பறக்கோட் வெற்றுப் போத்தலில் நீரள்ளி அருந்திய இலங்கைச் சிறுவன் ஒருவன் மரணமடைந்தான். பம்பாயிலிருந்து கொச்சினுக்குக் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட கோதுமையும், சீனியும் கிருமிநாசினிக் கசிவால் நஞ்சாகியது. அவற்றை உட்கொண்ட 106 கேரள மக்கள் மரணமடைந்தனர். கிருமிநாசினி தெளிக்கப்பட்ட வயலிலிருந்து பிடிக்கப்பட்ட நண்டுகளை உட்கொண்டதால் கர்நாடகாவில் பலர் பாதிப்புற்றனர். போபாலில் நடந்த அனர்த்தம் இவையனைத்தையும் விட பாரதூரமானதாகும்.

மூன்றாம் மண்டல நாடுகளில் விற்பனைக்கு வருகின்ற காய்கறிகள், பழவகைகள் என்பவற்றில் கிருமிநாசினி விசிறலின் விளைவான நச்சுத்தன்மையாதல் பாரியதொரு பிரச்சனையாக காணப்படுகின்றது. சந்தைக்கு வருகின்ற 75 சதவீதமான இவ்வகைப் பொருட்கள் இரசாயன நஞ்சுடையவையாகும். காய்கறிகளை அறுவடை செய்வதற்கு முதல் நாள் கூட விவசாயிகள் அவற்றிற்கு கிருமிநாசினி தெளிக்கின்றனர். இலங்கையில் நிகழ்ந்த பரிசோதனைகளில் பயறு, கௌபி போன்றவற்றில் மலத்தியோன், பொரிபொஸ் என்பவற்றின் செறிவு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கருவாடு பழுதடையாதிருக்க மலத்தியோன் விசிறப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் கருவாட்டிலும் மலத்தியோன் செறிவு காணப்படுகிறது.

தானியங்களையும் ஏனைய உணவுப் பொருட்களையும் களஞ்சியப்படுத்தும் போதும் கிருமிநாசினி தெளித்தும் கலந்தும் வைக்கப்படுகின்றன. இவற்றை மக்கள் நுகரும் போது பாதிப்புக்கும், உயிரிழப்புக்கும் உள்ளான சம்பவங்கள் பலவுள்ளன. 1982ம் ஆண்டில் குருநாகல் பகுதியில் கூட்டுறவுக் கடையில் கோதுமை மாவைக் கௌ்வனவு செய்து பயன்படுத்திய பலர் பாதிப்புக்குள்ளாகினர்.

**கிருமிநாசினிகளால் ஏற்படும் பாதிப்புக்கள்**

- ❖ கிருமிநாசினிகளிலுள்ள நச்சுத் தன்மை நீர், தாவரம், விலங்குகளின் ஊடாக உயிர் சூழலைப் பாதிக்கின்றது. இந் நச்சுத் தன்மை தாவர, விலங்கின இழையத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இதனால் உயிர்மத்தின் இணைமரபுக்கீற்று வகைமாற்றம் நிகழ்ந்து உயிர்ப்பல்லினத் தன்மை பாதிக்கப்படலாம்.
- ❖ கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதால் வளிமாசடைகிறது. கிருமிநாசினி ஆலைகளிலிருந்து வெளியேறும் புகை, தூசு எனபன அயல் பிரதேச மக்களைப் பாதிக்கின்றது.
- ❖ கிருமிநாசினி தொழிற்சாலைக் கழிவுகள் நீர்நிலைகளில் கலக்கவிடப்படுவதால் நீர்நிலைகள் மாசாக்கப்படுகின்றன. நீர்வாழ் உயிரிகள் மற்றும் நீர்வாழ் தாவர அழிவுக்கும் இது ஏதுவாகின்றது.
- ❖ காய்கறிகள், தானியங்கள், பழவகைகள் போன்றவற்றின் அமோக விளைச்சலுக்காகக் கிருமிநாசினி மற்றும் வளமாக்கிகள் பாவிக்கப்படுகின்றன. இவை அவற்றைத் தாக்கும் பூச்சிகளைக் கொன்றாலும் அவற்றின் நச்சுத்தன்மை தாவரங்களின் விளைச்சல் மூலம் வெளியேற்றப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ பூச்சி நாசினி, இரசாயன வளமாக்கிகள் போன்ற இரசாயனப் பொருட்களில் அடங்கியுள்ள பார உலோகங்கள் உணவுச் சங்கிலிகளின் வழியே மீன்களின் உடலைச் சென்றடையும். மீன் சந்தையில் பார உலோகங்களின் அளவு அதிகரிப்பதால் அம்மீன்கள் தொற்றுக்கு ஆளாகி இறக்கும். மேலும் அவ்வாறான நச்சுத்தன்மையான இரசாயனப் பொருட்கள் மீன் தசையில் தேங்கியுள்ள மீன் மனித நுகர்வுக்கு பொருத்தமானதல்ல. இதனால் மனிதனும் பல நோய்களை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது.
- ❖ பூச்சிநாசினி, இரசாயனப் பதார்த்தங்களில் உள்ள பார உலோகங்கள் நீர்த்தாவரங்களில் தேங்குவதால் மீன்களின் உணவு மற்றும் இனப்பெருக்க இடம் போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
- ❖ சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பிறப்புரிமையியலுக்குரிய முறையில் மாற்றியமைக்கப்பட்ட பக்ரீரியாக்களைக் கொண்டு பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயத்தில் உயிரியல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட பக்ரீரியாவினால் உருவாக்கப்படும் ஒருவகை நச்சுப்பதார்த்தம் இக்குடம்பிகளின் உணவுக்கால்வாய் இழையங்களை அழிப்பதன் மூலம் குடம்பிகளை அழிவடையச் செய்கிறது.
- ❖ விவசாய நிலங்களில் விளையும் களைகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் நாசினிகளினால் தாவரங்களின் விகாரங்கள் தூண்டப்படுகிறது. எனவே, இதை இல்லாமல் செய்ய களைக் கட்டுப்பாட்டின் போது நுண்ணங்கிகளைப் பயன்படுத்தும் உயிரியல் தொழில்நுட்ப முறை கண்டறியப்பட்டுள்ளது. இதனால் களைநாசினியில் உள்ள இரசாயனம் உணவுச்சங்கிலி வழியாக மனித மற்றும் விலங்கு உடலைச் சென்றடைவது தடைசெய்யப்படுகிறது. எனினும் உயர் தொழில்நுட்ப முறைக்கு அதிக செலவு ஏற்படும் என்பது இதற்குத் தடையாகவுள்ளது.

### முடிவுரை

இன்றைய கால கட்டத்தில் மிகவும் அபாயகரமானதாக மாறியிருக்கும் இப்பிரச்சனைக்கு விரைந்து செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். காரணம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சில இடங்களை மாத்திரம் தாக்கிய இந் நோய் இன்று இலங்கையின் பல பாகங்களைத் தாக்க ஆரம்பித்துள்ளது. ஆகவே, அரசானது விரைந்து இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அத்தோடு சூழலியலாளர்கள் தங்களாலான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயாராக வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை சூழல்சார் அமைப்புக்கள் என்பது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. பாடசாலை, கல்வியியற் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களைக் கூட்டிணைத்து நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளை ஒழுங்கமைத்து நடாத்துவதன் மூலம் இதன் தாக்கத்தில் இருந்து ஓரளவுக்கு விடுபட முடியும். சூழல் சார் பாதுகாப்புச் சட்டம், கிருமி நாசினி மற்றும் வளமாக்கி தடைச்சட்டம் போன்றவற்றை உரிய முறையில் அரசு நடைமுறைப்படுத்தும் போதும் தாக்க வீதத்தைக் குறைக்க முடியும். இலங்கையானது அபிவிருத்தி பற்றி சிந்திக்கின்ற போது சூழற் பாதுகாப்பு, நிலைத்திருக்கும் அபிவிருத்திக் கோட்பாடுகளை நிலைநிறுத்தி திட்டங்கள் மற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்துமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் கிருமிநாசினி, களைநாசினி மற்றும் வளமாக்கி சார் பிரச்சினைகளை இலகுவில் கட்டுப்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்**


- Balakrishnan.P, "**Agriculture and Bio Diversity**", IUCN Regional Biodiversity Program, Asia.
- David.R.Harris, Gordon.C.Hilmon (Editor), "**Foraging and Farming**", "**The evolution of plant exploitation**", institute of archaeology, university college London.


## வியர்வையின் விதியினமே.......!

உரசும் வெயிலில் ஓட்டைக் கூரைகளும்
ஊஞ்சலாடும் சுவரில் விண்நீர் தாரைகளும்
மாட்டின் சாணகத்தில் மண்தரைமூடியும்
மார்புதட்டி சரித்திரத்தில் வறுமையைத்தேடும்
நாடோடி கூட்டத்தின் உயிரோடிவாழும்
கல்லறை லயங்களே...

கொட்டும் குளிரில் கொழுந்தெடுத்து
வாட்டும் வெயிலில் இரத்தம் வார்த்து
உழைப்பை உறிஞ்சி உயிர்பறிக்கும்
அட்டைப்பூச்சி அரக்கர்களை
எப்போது அழித்திடுவாய்..!

தேயிலைக்கு உரமாகி மாய்ந்தது போதும்
தேசிய உரிமையை மறந்தது போதும்
கைகட்டி தலையாட்டி வாழ்ந்தது போதும்
அதிகாரத்தையெண்ணி அஞ்சியது போதும்
பார்விழிக்க பறையடித்து
கட்டெறும்பாய் கரம்கோர்த்து
நாளைய விடியலில் நம்மவருக்கோர்
கோவணத்தையேனும் குடியுரிமையாக்கிட
கொதித்தெழுவாய் உழைப்பினமே..
வியர்வையின் விதியினமே.......!


**சி.ஸ்ரீகாந்த்.**
**இரண்டாம் வருடம்,**
**விஞ்ஞானபீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை நாவல் (பெண்ணிய நோக்கிலான திறனாய்வு)

எம்.எஸ்.ஷப்னா,
மூன்றாம் வருடம்,
தமிழ்த்துறை,
பேராதனைப்
பல்கலைக்கழகம்.



i

தமிழ் எழுத்தாளர் உலகில், கொங்கு மணம் வீசும் கொங்கு வட்டார நாவல்களைத் தமிழுலகுக்குத் தந்தவர்களுள் ஆர்.சண்முகசுந்தரம் முக்கிய இடம் வகிக்கிறார். வட்டாரம் என்ற சொல் நிலவியலோடு தொடர்புடையது. ஒரு குறிப்பிட்ட பகுதியை நிலைக்களமாகக் கொண்டு, அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கையை எடுத்துக்காட்டும் நோக்குடன் எழுதப்படும் நாவல்களையே வட்டார நாவல் எனக்கூறுவர். இவ்வகை நாவல்களில் கதை ஒரு சிற்றூரிலோ அல்லது சிறிய நகரத்திலோ நடப்பதாகக் காட்டப்படுவதுடன் வர்ணனைக் கூறுகள் நிறைய இடம்பெறும். இந்த வகையில் நோக்கும்போது, ஆர்.சண்முகசுந்தரத்தின் நாகம்மாள், பூவும் பிஞ்சும், அறுவடை, சட்டி சுட்டது போன்ற நாவல்கள் வட்டார நாவல்களில் குறிப்பிடத்தக்க நாவல்களாகக் காணப்படுகின்றன.

ii

எழுபது வயதில், கல்யாண ஆசையில் பெண் தேடும் சின்னப்ப முதலியாரின் கதை சொல்லும் அறுவடை என்ற நாவல், 1960 இல் எழுதப்பட்டது. பணம், பணம் என்று பணத்துக்காகவே அலைந்து கொண்டிருக்கும் நாச்சிமுத்து, அவனுடைய செல்ல மகள் தேவானை, அவளுடைய காதலன் சுப்ரமணியன் (சின்னப்ப முதலியாரின் பேரன்) சின்னப்ப முதலியாருக்கும் தன் மகனுக்குமாகச் சேர்த்து மணமகள்களைத் தேடிக் கொண்டிருக்கும் கருப்பண முதலியார் போன்ற வெகு சில பாத்திரங்களில் ஒரு பெரும் காவியத்தையே படைத்திருக்கிறார் ஆசிரியர். கருப்பண முதலியார் தன் வீட்டில் அமர்ந்திருப்பதைப் பார்க்கும் தேவானை நினைக்கிறாள், இந்த ஆள் ஏன் நம் வீட்டில் உட்கார்ந்திருக்கிறார்? "அவர் மகனுக்குப் பெண் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பது தெரியும். ஆனால் சதா தறிக்குழியே சதம் என்று அழுந்திக்கிடக்கும் சொறி சிரங்கு பிடித்த பயலுக்கா, அப்பா தன்னைக் கல்யாணம் செய்து கொடுப்பார்?" எனத் தன் தந்தை மீதான நம்பிக்கையில் தனக்குத்தானே கூறிக்கொண்டு தன் மனதைத் திடப்படுத்திக் கொள்கிறாள். கடைசியில் அவளது அன்புக்குரிய தந்தை இக்கட்டான சூழ்நிலையில் தன் மகளைப் பணக்காரன் ஒருவனுக்கு கட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் எழுபது வயதுக் கிழவனான சின்னப்ப முதலியாருக்கே அவளைக் கட்டிக் கொடுக்க முடிவு செய்து விடுகிறார்.

சுப்ரமணியனிடம் இந்தக்கொடுமையான விடயத்தைச் சொல்லி அழும்போது, அவன் சிறிது சிரித்துக்கொண்டே **"எவனையாவது கட்டிக்கிட்டு எங்காச்சும் போயிருந்தயானால் நமக்கு எவ்வளவு கஷ்டம்? எங்க தாத்தனெக் கட்டிக்கிறது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதாப் போச்சு" என்கிறான். இந்த இக்கட்டிலிருந்து எப்படித் தப்பிப்பது என்று புரியாத தேவானை, "நமக்குள் இருக்கும் உறவைப்பற்றி ஊரெல்லாம் சொல்லி விடுங்களேன்" என்று சுப்ரமணியனிடம் சொல்கிறாள். 'எதற்கு?' என்று சுப்ரமணியம் திருப்பிக்கேட்டபோது, "அப்போதாவது முதலியார் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டார் அல்லவா?" என்கிறாள். "இதற்கெல்லாம் எங்க தாத்தா மசியமாட்டார். இதுக்கு முன்னாலே படிதாண்டாப் பத்தினிகளெத்தான் கூட்டிக்கிட்டு வந்து வச்சிருந்தாரா? எல்லாம் தேவடியாள்கள் தானே?" என்கிறான் சுப்ரமணியன்.

மின்னலில் தாக்குண்டவள் போல் தேவானை துடிக்கிறாள். இவளைப் போல ஒரு தேவடியாளைக் கல்யாணம் செய்து கொள்ள அவனுடைய தாத்தா தயங்க மாட்டாராம்! 'பளார்' என்று சுப்ரமணியனின் கன்னத்தில் ஓர் அறை கொடுத்துவிட்டு, அவன் முகத்திலே காறித்துப்புகிறாள் தேவானை. இறுதியில் தேவானையின் நிலை என்னவானது என்பது கதையின் முடிவாக இருக்கிறது. யாருமே எதிர்பார்க்காத ஒரு காவிய முடிவாக இது காணப்படுகிறது.

iii

'அறுவடை' நாவலானது, வட்டாரத் தன்மை கொண்ட நாவலாக இருந்தாலும், பெண்ணிய நோக்கில் ஆராய்வதற்கு மிகவும் பொருத்தமான நாவலாக அமைந்திருக்கிறது என்பதை நாவலின் கதைச்சுருக்கத்தினூடாகவே எம்மால் அறிந்து கொள்ள முடியுமானதாக உள்ளது. இந்நாவலினூடாக ஆர்.சண்முகசுந்தரம் அவர்கள் பாரிய சமுதாய மாற்றத்தை எதிர்பாரக்கின்றார் என்பது தெளிவாகிறது.

காலம்காலமாகத் தமிழ் இலக்கிய உலகில் பெண்மையின் சித்தரிப்புக்கள் பல்வேறு விதமாக வெளிப்பட்டு நிற்பதை எம்மால் அவதானிக்க முடியும். இந்தவகையில் அறுவடை நாவலினுள் பெண்மையின் சித்தரிப்புக்கள் பல்வேறு வகைகளில் தோற்றமளிக்கின்றன. இவற்றை ஆசிரியரின் பாத்திரப்படைப்பினூடாக எம்மால் உணர்ந்து கொள்ள முடியும். அறுவடையில் ஆசிரியர் சித்தரித்துக்காட்டும் சமூகமானது ஓர் ஆணாதிக்கச் சமூகம் என்பது, அவர் நாவலில் படைத்துக்காட்டிய பாத்திரங்களின் செயற்பாடுகளினூடாகப் புலப்படுகின்றது.

சின்னப்பமுதலியார் மனதளவில் மென்மையான பாத்திரமாக இருந்தாலும் தனது எழுபது வயதிலும் திருமண ஆசை கொண்டவராக இருக்கிறார். தனது மனைவி இறந்ததன் பிற்பாடு பல பெண்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார். பெண் இனத்தைப் போகப்பொருளாக நினைத்து நடக்கும் தன்மை சின்னப்பமுதலியாரிடம் காணப்படுகிறது. பெண்கள் மீதான வன்முறையோ பெண்களைத் துன்புறுத்தும் செயற்பாடுகளோ இவரிடம் இல்லாவிடினும் தள்ளாடும் வயதிலும் பெண்ணாசையில் இளம் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்ய முன்வருகிறார். அந்தப்பெண்ணின் எதிர்காலம் குறித்து அவர் சிந்திக்கவில்லை. இதில் அவரது ஆணாதிக்கப்பண்பு வெளிப்படுகிறது.

சின்னப்பமுதலியாருக்குப் பெண் தேடும் முயற்சியில் இருக்கின்ற கருப்பணமுதலியாரும் தனது சுயநலத்துக்காகவும் பணத்தேவைக்காகவும் தேவானையை சின்னப்பமுதலியாருக்குத் திருமணம் செய்து வைப்பதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் செய்கின்றார். நாச்சிமுத்து, மகளை நேசிக்கும் தந்தையாக இருந்தாலும் சின்னப்பமுதலியாரிடம் இருந்த சொத்துக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணமும் அவனின் கண்களை மறைக்கின்றன. தனது சொந்த இலாபத்துக்காக, அதாவது தான் சின்னப்பமுதலியாரிடம் பட்டகடனை அடைப்பதற்காகத் தனது மகளையே பலிகொடுக்க முன்வருகின்றான்.

அங்கம்மாள் இந்நாவலில் தேவானையின் அத்தையாக வலம் வருகிறாள். சிறுவயதிலேயே கைம்பெண்ணாகி, கணவன் வீட்டிலேயே பிழைக்க வழியின்றி தாய் வீடு வந்து, இங்கும் தன்மானத்தோடு உழைத்துச் சாப்பிடுபவள். சிறுவயதிலேயே விதவையான இவளுக்கு மறுமணம் செய்து தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள அந்தச்சமூகம் இடம் கொடுக்கவில்லை. இது ஒருவிதமான பெண் ஒடுக்குமுறையைச் சித்தரிக்கின்றது. ஓர் ஆண் வயதான காலத்தில் இளம் பெண்ணைத் திருமணம் செய்வதனை அங்கீகரிக்கும் அச்சமூகம் அங்கம்மாளை வயதாகும் வரை கைம்பெண்ணாகவே விட்டு வைத்திருக்கின்றது. இது பாரிய ஒடுக்குமுறையாக விளங்குகிறது. ஆணாதிக்கத்தின் உச்சகட்ட வெளிப்பாடு அங்கம்மாளின் வாழ்வை நோக்கும் போது தெரிகிறது. அதேவேளை அங்கம்மாள், தானே உழைத்து கௌரவத்துடன் தனது வாழ்வை நடத்திச்செல்வதானது பெண்ணின எழுச்சியைக் காட்டுகிறது. ஒரு பெண்ணால் ஆணின் துணையின்றி வாழலாம் என்பதற்குச் சிறந்த உதாரணமாக அங்கம்மாள் விளங்குகிறாள்.

தனது தம்பியின் மகள் தேவானை ஒரு வயதானவருக்கு வாழ்க்கைப்படப் போகிறாள் என்பதையறிந்ததும், அவளுக்கு நேரவிருக்கும் அநீதியை நினைத்து அழுகிறாள். பெருந்துன்பமடைகிறாள். அந்த நேரத்தில் அவளால், கதறி அழுவதைத்தவிர வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை. அவள் தனது தம்பியின் மகளுக்காகத் தனது எதிர்ப்பைக் காட்டவில்லை. இது பெண் அடிமைத் தனத்தின் வெளிப்பாடாகும். தானே உழைத்து பிறர் கையை எதிர்பார்க்காமல் வாழும் ஒரு மனத்திடமான பெண்ணே, தேவானை விடயத்தில் ஊமையாகிறாள். ஆண்களின் தன்னிச்சையான போக்கு என்பது பெண்ணடிமைத் தனத்தின் இன்னொரு நிலையாகும். அங்கம்மாளின் செயல் எமக்கு இதனைத் தெளிவுபடுத்துகிறது. 'அங்கம்மாள்' என்ற ஒரு பாத்திரத்தினூடாகவே, பெண்ணிய நோக்கில் பல கருத்துக்களை எம்மால் அறிய முடிகின்றது.

அங்கம்மாளுக்கு நேர்மாறான பாத்திரமாக சின்னப்ப முதலியாரின் மருமகள் திகழ்கிறாள். இவள் சற்று வித்தியாசமாகப் பெண்ணடிமைத்தனத்திலிருந்து நீங்கி கணவனை அடிமையாக வைத்து ஆட்சி செய்யும் பெண்ணாக சித்தரிக்கப்படுகிறாள். சின்னப்ப முதலியார் தனது மாளிகை போன்ற வீட்டை விட்டு விட்டு தோட்டப்புறத்தில் சிறிய வீடு அமைத்து வாழ இவள் காரணமாகிறாள். இவள் கால மாற்றத்தின் ஒரு சிறிய அடையாளமாக சித்தரிக்கப்படுகிறாள்.

ஆணாதிக்கத்தின் தெளிவான விம்பமாக சுப்ரமணியன் விளங்குகிறான். காதல் என்ற பெயரில் ஒரு பெண்ணை ஏமாற்றி சர்வசாதாரணமாக அவளை நிராகரிக்கிறான். ஒரே நொடியில் அப்பெண் தன்னில் வைத்திருந்த அதியுயர் நம்பிக்கையை உடைத்தெறிகிறான். இக்கட்டான நிலையில், தன்னையே உயிராக நினைத்துக் கொண்டிருந்த பெண்ணை இவன் காப்பாற்றவில்லை. மாறாக, 'தேவடியாள்' எனக் கிண்டலடிக்கிறான். அச்சமூகம் ஆண்களுக்கு அளித்திருக்கும் உச்சகட்ட சுதந்திரத்தின் வெளிப்பாடு சுப்ரமணியனின் செயற்பாடுகள் மூலம் தெளிவாகிறது. பெண் என்பவள் தனியே போகப்பொருள் எனவும் அது ஆண்கள் அனுபவிக்க உருவாக்கப்பட்ட சதைப்பிண்டம் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களை நோக்கும் ஆண்களின் மனப்பாங்கு சுப்ரமணியத்தினூடாக வெளிப்படுகிறது.

எழுபது வயது கிழவனான சின்னப்ப முதலியாருக்கு தேவானையைத் திருமணம் செய்து வைக்க இவளது தந்தை தீர்மானித்து விடுகிறார். தேவானைக்கு நேரவிருக்கின்ற இவ் அநீதியை யாரும் மறுத்துப் பேசவில்லை. அவளது அன்புக்குரிய அத்தை கூட துன்பமிகுதியால் அழுது புலம்புவதோடு நிறுத்திக்கொண்டாள். தான் உயிர் என மதித்த காதலனிடம் போய்க் கூறியழுத போது, **"எவனயாவது கட்டிக்கிட்டு எங்காச்சும் போயிருந்தயானால் நமக்கு எவ்வளவு கஸ்டம்? எங்க தாத்தனக் கட்டிக்கிறது நல்லதாப்போச்சு!"** எனக் கூறி கேலி செய்கிறான். தன்னைச் சுற்றியிருந்த தன் அன்புக்குரியவர்கள் தன்னைக் கைவிட்ட தருணத்திலும் கூட, தனக்காகத் தானே பேசும் துணிவைக் கூட இந்த அபலை இழந்திருந்தாள். **"உன்னைச் சின்னப்ப முதலியாருக்குக் கட்டிக் கொடுப்பதுன்னு தீர்மானம் பண்ணிட்டேன்"**

என அவளது தந்தை கூறியதும், இடிந்து போய் உட்கார்ந்து விடுகிறாள். ஊமையாகி விடுகிறாள். "ஐயோ! அப்பா" என்று கூவிக்கொண்டே குப்புற விழுந்து தன் தந்தையின் காலைப் பிடித்துக் கொண்டு கதறி அழுகிறாள். தந்தையின் தீர்மானத்திற்கான தன் எதிர்ப்பை அவளால் இவ்வாறுதான் காட்ட முடிந்தது. அவள் தனக்கென உருவாக்கி வைத்திருந்த ஆசைகள், கனவுகள், உணர்வுகள் அனைத்தும் ஒரே நொடியில் உடைத்து நொருக்கப்பட்டன. தன் காதலன் தன்னை நிராகரித்துப் பேசுகின்ற போது அதிர்ச்சியாலும், கவலையினாலும் பிரமித்து நின்ற தேவானை, அவன் தன்னைத் தேவடியாள் என்று கூறிய ஒரே காரணத்துக்காக அவனது கன்னத்தில் 'பளார்' என்று அரை கொடுத்துவிட்டு அவனது முகத்தில் காறித்துப்புகிறாள். இது ஒரு வகையில், பெண்ணின் சுய கௌரவத்துக்கான எதிர்ப்பாக அமைந்து காணப்படுகின்றது. அவளது இச்செயல் பெண்களை அவமதிக்கும் ஆண்களுக்கு ஆசிரியர் புகட்டும் பாடமாக அமைகிறது.

iv

கதையின் முடிவு யாரும் எதிர்பாராத வகையில் அமைந்துள்ளது. தேவானையின் நிலை என்ன? என்பதே கதையின் முடிவாக அமைகிறது. யாரும் உதவாமல் தனி மரமாக்கப்பட்ட தேவானை சின்னப்ப முதலியாரை கல்யாணம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்படுகிறாள். கல்யாண நாளன்று சின்னப்ப முதலியாரின் சொத்து பறிபோய்விடும் என்ற காரணத்தினால், அவரை விடம் வைத்துக் கொன்று விடுகின்றனர். போலீஸ் விசாரணைக்காக வருகின்றனர். மணப்பெண்ணை அழைத்து வரும்படி உத்தரவிடுகின்றனர். தேவானையை அழைத்து வர அவளது தந்தை நாச்சிமுத்து சென்று கதவைத்திறக்க முற்படும் போது, கதவு உள்பக்கம் தாழிடப்பட்டிருந்ததால் திறக்க முடியவில்லை. கதவை உடைத்தனர். 'மணக்கோலத்துடன் கலியாணப் பெண் விட்டத்தில் கழுத்துக்குச் சுருக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள்' என நாவல் முடிகிறது.

தன் விருப்பமின்றி கிழவனை கல்யாணம் செய்து கொள்ளும் படி தனக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட அநீதியை ஏற்றுக் கொண்டு வாழ்வதை விட, இறப்பதே மேல் என தேவானை எடுத்த முடிவானது அனைவரையும் சிந்திக்க வைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணாதிக்கத்துக்கு எதிரான தனது எதிர்ப்பைப் பேச்சின் மூலமோ போராட்டத்தின் மூலமோ வெளிப்படுத்த இடம் கொடுக்காத அச்சமூகத்துக்குச் சாவின் மூலமாகத் தன் எதிர்ப்பைக் காட்டுகிறாள். அச்சமயத்தில் அவளுக்கு இருந்த ஒரே ஆயுதம் இதுதான் என்பதை நாவலை வாசிக்கும் அனைவரும் புரிந்து கொள்வர். அந்தச் சமூகத்தில் இது போன்று யாருக்கும் அநீதியிழைக்கப்படக்கூடாது என்ற வகையில் தேவானையின் மரணம் அமைந்திருக்கிறது. மரணம் என்ற எதிர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாதாயினும் நாவலில் அவள் ஏற்றுக்கொள்ளவைத்து விடுகின்றாள்.

V

நாவலுக்கு 'அறுவடை' என்ற தலைப்பு மிகவும் பொருத்தமானதாக அமைகிறது. வயல்வெளிகளில் விதையிலிருந்து உற்பத்தியாகி செழிப்பாக வளர்ந்த நெற்கதிர்கள் காற்றின் தூண்டுதலுக்கேற்ப அசைந்து ஆடிக் குதூகலமாக இருப்பதாகத் தோன்றும். அக்குதூகலம் அறுவடை என்ற ஒரு செயலினால் அழிக்கப்படுகின்றன. ஒரு சில காலப்பொழுதுகளில் மனிதன் தனது சுயநலத்துக்காக நெற்கதிர்கள் முழுவதையும் அறுவடை செய்கிறான். அவன் அறுவடை செய்யும்போது, நெற்கதிர்களின் அழகு அவனுக்குத் தெரிவதில்லை. அதனால் ஏற்படும் பயனையே அவன் கருத்தில் கொள்கிறான்.

இது போல, தேவானையின் குதூகலமான வாழ்வு சிலரின் சுயநலத்துக்காக அறுவடை செய்யப்படுகிறது. அவளது ஆசைகள், கனவுகள், இலட்சியங்களை அவளது தந்தை அறுவடை செய்கிறார். அவளது காதல், நம்பிக்கை, எதிர்காலம் போன்றவற்றை அவளது காதலன் அறுவடை செய்கிறான். இவ்வாறாக ஒரு சமூக அறுவடையில் தேவானை இல்லாமலே போகிறாள்.

'பெண்ணியச் சிந்தனைகளை முன்வைக்கும் எழுத்தாளர்கள் ஆண்களா பெண்களா என்பது முக்கியமல்ல. அவர்களது எழுத்துக்கள் தான் முக்கியம்' என்ற கூற்றை ஆர்.சண்முகசுந்தரம் தனது நாவலினூடாக நிரூபித்துக் காட்டுகிறார். சமூக பொருளாதார பண்பாட்டுத்தளங்களில், பெண்களை மௌனங்களாக்கி ஆண்கள் ஆதிக்க அரியணையில் அமர்ந்திருப்பதை ஆசிரியர் இந்நாவலில் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.

**மலையில்**
**புலிகளைச் சந்தித்தேன்**
**காயமின்றித் தப்பித்தேன்**
**சமவெளிகளில்**
**மனிதரைச் சந்தித்தேன்**
**சிறையில் கிடக்கிறேன்.**

**—ஹேரசிமின்—**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ச் சுகாதாரமும் வாய்ப் புற்றுநோயும்

விபூஷிதா ஜோன்சன்,
முதலாம் வருடம்,
பல் மருத்துவ பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



பல் வரிசை அழகுக்கு மட்டுமல்ல ஆரோக்கியத்துக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. "பல் போனால் சொல் போச்சு" என்ற கூற்று பற்களின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. 'பற்கள்' பாதிக்கப்பட்டால் பல்வேறு நோய்களும் எட்டிப்பார்க்கும். பற்கள்தான் ஒருவரின் ஆரோக்கியத்தை நிர்ணயிக்கின்றன. எத்தகைய சுத்தமானவருக்கும் வாயில் அதிகமான பக்ரீரியாக்கள் இருக்கும். வாய்ச் சுத்தம் மிகவும் முக்கியமானது. வாய் சம்பந்தமாக சிறு பிள்ளைகளுக்குப் பற்சொத்தை போன்ற நோய்கள் வரும். நாற்பது வயதாகிவிட்டால் நீரிழிவு போன்ற நோய்களாலும் பல் சம்மந்தமான பிரச்சனைகள் வரும். பல் பாதிப்பால் இதய நோய்களும் வரும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

வாயினுள் அதிகமான பக்ரீரியாக்கள் வளருவதாகச் சொல்கிறார்களே அது ஏன்? வாயிலிருந்து சுரக்கும் திரவங்களின் உதவியுடன் நாம் உட்கொள்ளும் உணவில் இருக்கும் காபோவைதரேற்றுக்கள் நொதித்தல் அடைகின்றன. ஒவ்வொரு உணவு வேளையின் போதும் பற்களின் மேற்பரப்பினது PH 7 இல் இருந்து 5 ஆகக் குறைக்கப்படுகின்றது. இது பக்ரீரியாக்களின் வளர்ச்சிக்கு மிகவும் சாதக நிலமையாகும். வெல்ல உணவுகள் பக்ரீரியாக்களின் வளர்ச்சியை மேலும் அதிகரிக்கின்றது. சில பக்ரீரியாக்கள் முரசு இழையங்களை உணவாகப் பயன்படுத்துவதால் முரசில் குருதிப் பெருக்கும் அலற்சியும் ஏற்படும். எனவே இறுதியில் முரசு இழையங்கள் வெண்ணிறமாகி இறக்க நேரிடுவதுடன் பற்களும் இழக்கப்படும்.

சில பக்ரீரியாக்களினால் வெல்ல உணவுகள் அமிலங்களாக மாற்றப்படும். இவ்வமிலங்கள் பல் மிளிரிமை அரிப்பதால் பற்சூத்தை ஏற்படுகின்றது. தார்களைக் கொண்ட உணவுகளையும் முழுமையாக வேகவைக்கப்படாத காய்கறிகள் போன்றவற்றையும் மெல்லும்போது பற்களுக்கான குருதி வழங்கல் அதிகரிக்கும். இதனால் திடமான பற்களையும் ஆரோக்கியமான முரசையும் பெற்றுக் கொள்ளலாம். புளோரைட் ஆனது பல் மிளிரியின் உற்பத்திக்கு அவசியமாகும். நாளாந்தம் ஒருவர் குடிக்கும் நீரின் மூலமாகவோ பற்பசையின் மூலமாகவோ தேவையான புளோரைட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பல் பராமரிப்பு பல் முளைக்கத் தொடங்கும் முன்பே ஆரம்பிக்கப்பட வேண்டும். அதாவது பல் முளைக்கும் பருவத்தில் சில முக்கியமான நடைமுறைகளைக் குழந்தைக்குத் தாய் கடைப்பிடிப்பதன் மூலம் ஆரோக்கியமான பல்லைப் பெற்றுக் கொள்ள முடியும். பல் நாம் பிறக்கும்போதே முதிர்ச்சி அடையாத நிலையில் தாடை என்புக்குழியில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, பல் முளைக்கும் முதலே சரியான வாய்ச் சுகாதாரம் பேணப்பட வேண்டும்.

தற்காலத்தில் வாய் மற்றும் பல்லில் ஏற்படும் மிக முக்கியமான ஆபத்தான பிரச்சனையாக இருப்பது வாய்ப் புற்றுநோய். இலங்கையில் அதிகளவில் ஏற்படும் இரண்டாவது புற்றுநோயாக இது இனங்காணப்பட்டுள்ளது. அதிலும் ஆண்களுக்கு அதிகளவில் ஏற்படும் புற்றுநோயாக வாய்ப்புற்றுநோய் காணப்படுகின்றது. வாய்ப் புற்றுநோய் வாயின் பல பகுதிகளில் ஏற்படலாம். உதடு, நாக்கு, கன்னங்களின் உட்புறப் பகுதி, பல் ஈறுகள், வாயின் மேல், கீழ்ப் பகுதிகளைப் பாதிப்படையச் செய்கின்றது.

**வாய்ப் புற்றுநோயின் பொதுவான அறிகுறிகள்**

1. வாயில் ஏற்படும் வீக்கங்கள் மற்றும் கட்டடிகள்.
2. வாயில் ஏற்படும் கொப்பளங்கள் ஆறாமல் குறைந்தது பத்து நாட்களாவது இருக்கும்.
3. வாயிலிருந்து இரத்தக்கசிவு ஏற்படும். வெள்ளை அல்லது சிவப்பு நிறப் புள்ளிகள் வாயின் உட்புறத்தில் ஏற்படும்.
4. நாக்கின் அடியில் சிறு கட்டிகளும் வாயின் மேற்புறத்தில் சிறு புண்களும் கன்னப்பகுதிகள் போன்றவற்றில் ஈறுகள், வீக்கங்களும் உருவாகும்.
5. வாயைத் திறத்தல், அசைத்தல், உணவு மெல்லுதல் கடினமாதல் போன்ற அறிகுறிகள்.
6. குரலடைப்பு, குரல் தொனியில் மாற்றம்.
7. உணர்விழப்பு, வலி போன்றன முகம், கழுத்து, வாய் போன்ற பகுதிகளில் காணப்படல்.
8. காது வலி.
9. அதிகமான எடை இழப்பு.
10. வாய் துர்நாற்றம்.

**வாய்ப் புற்றுநோய்க்கான காரணங்கள்**

1. புகைப்பிடித்தல் (புகைப் பிடிக்காதவர்களிலும் பார்க்கப் புகைப் பிடிப்பவர்களுக்கு வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாகக் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது).
2. புகையிலை மெல்லுதல்.
3. அதிகளவில் மதுபானம் அருந்துதல்.
4. குடும்ப வரலாறுகள் - குடும்ப உறவினர்களிடையே வாய்ப் புற்றுநோய் காணப்படின் அது மற்றவர்களில் ஏற்படும் சாத்தியம் உண்டு (எனினும் அது மிகக் குறைவான சாத்தியம்).
5. HPV வைரஸ் (Human Papilloma Virus).

25 வீதமான வாய்ப் புற்றுநோய் தொடர்ச்சியாக மதுபானம் அருந்தும் பழக்கமுள்ளவர்களில் ஏற்படுகின்றது என அறியப்பட்டுள்ளது.

பல் வைத்தியரை அணுகி ஆறு மாதங்களுக்கு ஒருமுறையாவது வாயை முழுமையாகப் பரிசோதனை செய்வது நல்லது. எந்தப் புற்றுநோயையும் ஆரம்பத்தில் கண்டறிந்தால் முழுமையாகக் குணப்படுத்த முடியும். பெரும்பாலான வாய்ப் புற்றுநோயாளர்கள் இறுதிநிலையில் தான் இனங்காணப்படுகின்றனர். ஏனெனில் ஆரம்ப அறிகுறிகள் பற்றி அறியாமை, முறையாகப் பல் வைத்தியரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகி ஆலோசனை பெறாமை போன்ற காரணங்களால் இறுதிநிலை அடைந்த பிறகுதான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

பலர் மத்தியில் இருக்கும் ஒரு பிரச்சனையாக இருப்பது வாய்த்துர்நாற்றம். வாய் துர்நாற்றம் அடிப்பது போல் இருப்பின் உடனடியாகப் பல் மருத்துவரை அணுகுவது நல்லது. வாய் துர்நாற்றம் ஏற்பட வாயிலுள்ள குறைபாடுகள் மட்டும் காரணம் கிடையாது. தொண்டை, வயிறு போன்றவற்றில் ஏற்படும் கோளாறுகளும் வாய்த்துர்நாற்றத்திற்குக் காரணமாகும். நீரிழிவு நோய் தோன்ற வாய்த்துர்நாற்றமும் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தற்போதைய பரபரப்பான உலகில் அறிவியல் சான்றுகள், ருசிக்காக புசிக்கும் ஆட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சி புற்றுநோயை ஏற்படுத்தவல்லன என்பதைக் கண்டறிந்து நிரூபிக்கின்றன. மேலும் உணவு வகைகளில் தாவரங்களிலிருந்து கிடைக்கும் உணவுகள், காய்கறிகள், பழங்கள், தானிய வகைகள் எல்லா வகையான புற்றுநோயையும் குறைக்க உதவுகின்றன. அதிலும் முட்டைக்கோஸ், புரோக்கலி, எலுமிச்சை, அறுகம்புல் போன்றன இச் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

வாய்ப் புற்றுநோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை, கீமோதெரபி, கதிர்வீச்சு சிகிச்சை மூலம் சிறந்த நிவாரணம் வழங்க பல் மருத்துவர்கள் முயற்சிக்கின்றார்கள். இருப்பினும் புற்றுநோயை முழுமையாக அகற்றப் புற்றுநோய் திசுக்களை உருவாக்கும் காரணிகளை அழிக்க வேண்டும். இப் பணியை "புரோக்கலி" ஆற்றுவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இவ்வகையான காய்கறிகளிலுள்ள "சல்ரோபன்" இத்தகைய திசுக்கள் உருவாவதைத் தடுக்கின்றன. மேலும் இது தொடர்பான ஆய்வுகள் தொடர்கின்றன.

இன்றைய கால கட்டத்தில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் இருக்கும் அதேநேரம் முன்னோர்களிடம் இவ்வகையான நோய் நிலமைகள் அரிதாகவே காணப்பட்டது. இதற்கான முக்கிய காரணம் நம் அன்றாட வாழ்வின் ஊட்டல் முறையில் ஏற்பட்ட மாற்றங்களாகும். நேரமின்மையைக் காரணம் காட்டி, உடல் ஆரோக்கியம் கருதாது, பணத்தைக் குறி வைத்து உடல்நிலையை மறக்கும் சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

உணவை மருந்தாக உண்ட தமிழர் பண்பாடு மறைய மருந்தே உணவாக மாறியது கண்கூடு. நம் பெரியோர்கள், விஞ்ஞானிகள் அல்லாவிடினும் தமிழ்ப் பாரம்பரியம் அறிந்தவர்கள், ஆரோக்கியமாக வாழ்ந்தவர்கள் என்பதை உணர்ந்து நாளைய சந்ததிக்கும் இது தொடர்பான விழிப்புணர்வை வழங்கி வாய்ப் புற்றுநோயை எதிர்த்து வாய்ச்சுகாதாரத்தைச் சரியாகப் பேணி சுகம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் காலநிலையில் சூறாவளியின் வகிபங்கு


**சி.லதீஸ்குமார்,**
**விடுகை வருடம்,**
**புவியியற்றுறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



## இலங்கையின் காலநிலை

உலகிலே எந்த ஒரு இடத்திலும் மனிதனின் செயற்பாட்டினைக் கட்டுப்படுத்தும் முக்கிய காரணியாகக் காலநிலை காணப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு இடத்தில் நீண்ட காலமாக (குறைந்தது 30 ஆண்டு வரையில்) வளிமண்டலத்தில் காணப்படும் நிலைமை 'காலநிலை' என வரைவிலக்கணப்படுத்தலாம். வளிமண்டலத்தின் மூலப்பொருட்கள் (மற்றும் அவற்றின் மாற்றங்கள்) அதாவது சூரியக் கதிர்கள், வெப்பநிலை, ஈரப்பதன், மேகம், மழைவீழ்ச்சி (வீதம், தெளிவு, அளவு), வளிமண்டல அமுக்கம், காற்றின் வேகம் மற்றும் வீசும் திசை ஆகியன காலநிலைக்குள் உள்ளடங்கும் (Critchfield, 2010). இலங்கையின் அமைவிடமானது இலங்கையின் காலநிலையில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இலங்கை மத்திய கோட்டிற்கு வடக்கே அகலாங்கு $5^{0}$ 55'' முதல் $9^{0}$ 51'' வரையிலான இடைவெளிக்கும் கிழக்கே நெட்டாங்கு $79^{0}$ 42'' முதல் $81^{0}$ 53'' வரையிலான இடைவெளிக்கும் இடையிலே அமைந்துள்ளது.

இலங்கையானது மத்திய கோட்டுக் காலநிலையைக் கொண்ட ஒரு நாடாகக் காணப்படுகிறது. அதாவது, உயர் வெப்பநிலையும் அதிகளவான ஈரப்பதனையும் கொண்ட காலநிலையாகும். பிரதானமாக கொப்பன் மற்றும் ஹேயன் உலகக் காலநிலை வகைப்பாட்டின் அயன மழைக்காட்டுக் காலநிலை (Af), அயன பருவக்காற்றுக் காலநிலை (Am), அயன சவன்னாக் காலநிலை (Aw) என்பவற்றைப் பிரதானமாகக் கொண்டுள்ளது (Domros, 1974). இலங்கை உலர் வலயம், இடை வெப்ப வலயம் மற்றும் ஈர வலயம் என, மூன்று பிரதான காலநிலை வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் காலநிலையில் அமைவிடம், நாட்டின் தரைத்தோற்றம் (மலை உச்சிகள், மலைத் தொடர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சமனற்ற தரைத்தோற்றம்), நிலம், நீர்ப்பரப்புக்கள் மற்றும் தாவரப் போர்வைகள் என்பன பிரதான செல்வாக்கினைச் செலுத்துகின்றன. இலங்கை வருடாந்த மழைவீழ்ச்சியில் அதிகமாகப் பருவப்பெயர்ச்சிக் காற்று, வெப்பச் சலனம் மற்றும் சூறாவளி ஊடான மழைவீழ்ச்சியினைக் கொண்டுள்ளது. இலங்கையின் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சியானது சுமார் 2500 mm ஆகக் காணப்படுகிறது. அதேவேளை சராசரி வெப்பநிலையானது சுமார் 26.5$^{0}$C ஆகக் காணப்படுகிறது. இலங்கையின் காலநிலை வருடம் முழுவதும் ஒரே மாதிரியாக காணப்படாமல் பருவ ரீதியாக மாறுபடுகின்றது. அவையாவன:

1. முதல் இடைப் பருவக் காற்றுக் காலம் (மார்ச் முதல் ஏப்ரல் வரை).
2. தென்மேல் பருவக் காற்றுக் காலம் (மே முதல் செப்டம்பர் வரை).
3. இரண்டாம் இடைப் பருவக் காற்றுக் காலம் (ஒக்டோபர் முதல் நவம்பர் வரை).
4. வடகீழ் பருவக் காற்றுக் காலம் (டிசம்பர் முதல் பெப்ரவரி வரை).


மேலே குறிப்பிட்ட இலங்கையின் காலநிலையிலே சூறாவளியானது முக்கியமான தாக்கத்தைச் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையிலே சூறாவளி தொடர்பான விடயங்களை நோக்குவோம்.

### சூறாவளி

தாழமுக்கம் காணப்படும் மையத்தை நோக்கி ஏனைய உயரமுக்க பகுதிகளிலிருந்து அதிவேகமாக வரும் காற்றானது அதனை மையமாக வைத்து ஒரு பாரிய அளவிலான சுழற்சி ஒன்றினை உருவாக்கி குறிப்பிட்ட ஒரு பாதையில் பயணிப்பதே 'சூறாவளி' ஆகும். அவ்வாறு பயணிக்கும் பாதையிலே பாரியளவிலான அழிவுகளை உண்டாக்கும். சூறாவளியை பிரதானமாக இரண்டு வகையாக வகைப்படுத்துவர். (இவ்வகைப்பாடு சூறாவளி தோன்றும் பிரதேசத்தை மையமாக வைத்து வகைப்படுத்தப்படுகிறது).

- வெப்பவலய சூறாவளி
- இடைவெப்பவலய சூறாவளி

அந்தவகையில் இலங்கையின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் சூறாவளியாக வெப்பவலய சூறாவளி காணப்படுகிறது. வெப்பவலய சூறாவளியைச் சற்று விரிவாக நோக்கினால் வெப்பவலயத்திலே (வட அகலாங்கு 23½$^{0}$ இற்கும் தென் அகலாங்கு 23½$^{0}$ இற்கும் இடையில் மத்திய கோட்டிலிருந்து வடக்கு மற்றும் தெற்காக 500 km அப்பால்) மட்டும் தோன்றுகிறது. இச்சூறாவளி தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளாகப் பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.



Source:https://www.google.lk/url?sa=i&rct=j&q=47.

- ✓ பரந்த நீர்ப்பரப்பு (சமுத்திரம்).
- ✓ கடல் மேற்பரப்பு வெப்பநிலை 26.5$^{0}$C விட மேற்பட்டதாக இருக்கவேண்டும் (, 26.5$^{0}$C).
- ✓ மிதமான ஈரப்பதனைக் கொண்டிருக்க வேண்டும்.
- ✓ மத்திய கோட்டிலிருந்து 500 Km அப்பாற்பட்டதாகக் காணப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறாவளி உருவாகும் முறையினை நான்கு கட்டங்களாக வகைப்படுத்தலாம். அவையாவன, குழப்பம், தாழமுக்கம், புயல் மற்றும் சூறாவளி என்பனவாகும். மத்திய கோட்டுப் பகுதியில் நேரடியான சூரியக் கதிர்வீச்சினால் பெறப்படும் வெய்யிலானது அதிகமாகக் காணப்படும். இதனால் வெப்பநிலையானது ஒப்பீட்டளவில் உயர்வாகக் காணப்படும். எனவே, சமுத்திர நீர் மேற்பரப்பின் வெப்பநிலையானது சடுதியாக அதிகரிக்கின்றது. இவ்வாறு சமுத்திர மேற்பரப்பில் அதிகரிக்கின்ற வெப்பநிலையால் கீழைக்காற்று பலமாக மேற்கு - கிழக்காக வீசும். இதனால் வெப்பச் சலனமானது உருவாகின்றது. இதுவே முதலாவது கட்டமாகும். மேலும், இவ்வாறு உருவாகிய வெப்பச் சலனம் காரணமாக பல திசைகளில் உள்ள உயரமுக்கங்களிலிருந்து காற்றானது வேகமாக (39 mph) அமுக்கம் குறைவான அக்குறிப்பிட்ட இடத்தை நோக்கி செல்லும். இக்கட்டத்தில் மூடிய அமைப்பினைப் பெற்றுக் காணப்படும். இதுவே இரண்டாம் கட்டமான தாழமுக்கமாகும். தாழமுக்கமானது வலுவடையும்போது புயலாக மாற்றமடையும். அப்போது உயரமுக்கங்களிலிருந்து தாழமுக்கத்தை நோக்கி வரும் காற்றின் வேகம் (39-74 mph) மேலும், உயர்வாகக் காணப்படும். அப்போது மேலும், பல தாழமுக்கக் கோடுகளை கொண்டிருக்கும். இந்நிலையே மூன்றாம் கட்டமான புயல் ஆகும். புயலானது மேலும் வலுவடைந்து சூறாவளியாக மாற்றமடைகின்றது. இந்நிலையில் கண் உருவாகி அதனை மையமாக வைத்து பாரிய அளவிலான சுழற்சி உருவாகி குறிப்பிட்ட திசையில் வேகமாக (74 mph) நகர்ந்து பாரிய அழிவை உண்டாக்கும். இதுவே சூறாவளியின் இறுதி நிலை ஆகும்.

**இலங்கையின் காலநிலையில் சூறாவளி**

சூரியன் மார்ச்-21 மற்றும் செப்டம்பர்-23 ஆகிய நாட்களில் மத்திய கோட்டில் உச்சம் கொடுக்கின்றது. இலங்கையானது மத்திய கோட்டிற்கு அருகில் அமையப் பெற்றிருப்பதன் காரணமாக மார்ச் முதல் ஏப்ரல் வரையும், ஒக்டோபர் முதல் நவம்பர் வரையும், இலங்கையைச் சூழவுள்ள பிரதேசங்களில் வெப்பநிலையானது உயர்வாகக் காணப்படும். ஆகவே, மேலே குறிப்பிட்ட காலப்பகுதிகளில் அதிகளவான சூறாவளிகள் இலங்கைக்கு அருகில் உருவாகுகின்றன. அதிலும் குறிப்பாக ஒக்டோபர் முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதியில் அதிகளவில் உருவாகின்றது. ஏனெனில், அக்காலப் பகுதியில் சூரியக்கதிர்களின் தாக்கம் காணப்படுவதோடு சமுத்திர நீர்ப்பரப்பின் அளவும் ஒப்பிட்டளவில் அதிகமாகக் காணப்படும்.

கடந்த 120 ஆண்டுகளில் இருபது தடவை சூறாவளிகளின் தாக்கத்திற்கு இலங்கை உட்பட்டிருக்கின்றது. இதிலே 18 சூறாவளிகள் வங்காள விரிகுடாவிலும் 2 அரபிக் கடலிலும் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றுல் 1978 ஆம் ஆண்டு உருவான சூறாவளியே பாரிய அழிவை ஏற்படுத்தியது. வங்காள விரிகுடாவில் உருவாகின்ற சூறாவளிகளின் பாதையானது பெரும்பாலும் இலங்கையை விட்டு விலகி இந்தியாவின் ஒடிசா மாநிலத்தின் ஊடாக செல்கின்றது. வருடத்திற்கு இரண்டு முறை சூறாவளியின் இரண்டாம் கட்டமான தாழமுக்கம் வங்காள விரிகுடாவில் உருவாகின்றது. அவ்வாறு உருவாகும் தாழமுக்கமானது சூறாவளியாக உருவாகாமல் பெரும்பாலும் வலுவிழந்து போகின்றது. சூறாவளி உருவாகின்ற போது ஆயிரம் கிலோமீற்றர் வரையில் வளிமண்டலத்தில் குழப்பநிலையானது தொடர்ந்து பல நாட்களுக்கு காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது காற்றின் திசை மாற்றமடையும், காற்றின் வேகம் மிக அதிகமாகவும் தாழமுக்கமும் வளியின் ஈரப்பதனும் அதிகமாகக் காணப்படும். பரந்த அளவில் மழைவீழ்ச்சி கிடைக்கும் மற்றும் வெப்பநிலைத் தளர்ச்சி என்பன சாதாரண நிலையிலிருந்து வேறுபட்டுக் காணப்படும். இதனால் வங்காள விரிகுடாவில் உருவாகின்ற சூறாவளியின் காரணமாக இலங்கையின் வளிமண்டலத்தில் குழப்பநிலை ஏற்படுகின்றது.

இரண்டாம் இடைப் பருவக் காற்றுக் காலப்பகுதியில் தாழமுக்கம் மற்றும் சூறாவளியின் தாக்கங்கள் பாரிய அளவில் இலங்கையின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஒப்பீட்டு ரீதியில் இரண்டாம் இடைப் பருவக் காற்றுக் காலப் பகுதியில் சந்திக்கும் நீர்ப்பகுதியின் அளவு அதிகமாக இருப்பதனாலாகும். மேலும், இக்காலப் பகுதியில் கடல் மேற்பரப்பில் குழப்ப நிலை காரணமாகவும் வளியின் நிலைக்குத்தான மேல்எழுகை (Convection) காரணமாகவும் அதிகளவான இடி மின்னல்கள் உருவாகின்றன. இதனால் இலங்கை அதிகளவான இடி, மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகுகின்றது. அடுத்ததாக குழப்பநிலை மேலும் அதிகரித்து தாழமுக்கமாக மாறும்போது நாட்டினைச் சூழ திரள்முகிலகள் பரந்த அளவில் உருவாகி, நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் அதிகளவான தீவிரத்தன்மையுடைய மழைவீழ்ச்சி (Intensive rain) கிடைக்கின்றது. அது புயலாக மாற்றமடையும்போது வேகமான காற்றிற்குக் கூடுதலாக வடக்கு மற்றும் கிழக்கு கரையோர பிரதேசங்கள் உட்படுகின்றன. இவ்வாறு சூறாவளியின் ஒவ்வொரு கட்டத்திலும் மேலே குறிப்பிட்ட தாக்கங்கள் இலங்கையின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இலங்கையில் சூறாவளியால் வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு மற்றும் கடல் சீற்றம் ஆகிய இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. வேகமாக வீசுகின்ற புயற்காற்றினால் கடல் அலையின் வேகம் அதிகரித்து பாரிய அலைகளை உருவாக்குகின்றது. இவ்அலைகள் கரையோரப் பிரதேசங்களை தாக்குகின்றது. அதிகளவான தீவிரத் தன்மையுடைய மழைவீழ்ச்சியின் (Intensive rain) காரணமாக நாட்டின் பெரும்பாலான இடங்களில் குறிப்பாக, மேல் மற்றும் தென் மாகாணங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது. அத்துடன், மலையக பிரதேசங்களில் அதிகளவான நிலச்சரிவுகளும் ஏற்படுகின்றன. எடுத்துக் காட்டாக 2016 வைகாசியில் வங்காள விரிகுடாவில் உருவான *"BOB-01"* சூறாவளியால் இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் கடல் சீற்றம், மலையகத்தின் அரநாயக்காவில் நிலச்சரிவுகள், கொழும்பில் களனி ஆறு பெருக்கெடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு போன்றன சுட்டிக்காட்டத்தக்கது.

**உசாத்துணைகள்**


- Critchfield, J.H., (2010) ***General Climatology*** **(4th ed), PHI Learning private Limited**, New Delhi- 110001.
- Domros Manfred., (1974) ***The Agroclimate of Ceylon***, **Franz steinerverlaggmbh**. Wiesbaden.
- Nianthi, K. W. G. Rekha., (2012) ***Climatological Research in Sri Lanka***, **Chathura Printers**, No. 69, Kumaradasa Place, Wellampitiya, Sri Lanka.
- *http://www.bom.gov.au/cyclone/faq/index.shtml#*
- *http://www.bom.gov.au/cyclone/about/intensity.shtml*
- *http://www.bom.gov.au/cyclone/about/.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இந்து சமயத்தின் நிலைமை

என்.டி.இர்ஷானா,
விடுகை வருடம்,
வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



இந்திய உபகண்டத்தின் தென்கீழ்த்திசை நோக்கி சில மைல்கள் தூரம் பாக்கு நீரிணையால் பிரிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பாக இலங்கை அமைந்துள்ளது. இந்நாடு 'சிவபூமி' எனத் திருமூலரால் விதந்துரைக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் பல சிறந்த சிவதலங்கள் இருந்திருக்கின்றன. தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்னும் இரு சிவத் தலங்களையும் பழமைமிக்க முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் என்னும் பதிகளையும் தன்னகத்தே கொண்டது இந்நாடு.

அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்ற கதிர்காமம், மாவிட்டபுரம், நல்லூர், செல்வச்சந்நிதி என்பன போன்ற பக்தியைப் பெருக்குகின்ற பழம்பெரும் சுப்பிரமணிய ஆலயங்களும் மற்றும் வல்லிபுரம், பொன்னாலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள விஷ்ணு ஆலயங்களும் மிகப் பழமை வாய்ந்தவை. பாலாவி, மாணிக்க கங்கை, நகுலதீர்த்தம் (கீரிமலை தீர்த்தம்), வில்லூன்றி, பாபநாசம் போன்ற புண்ணிய தீர்த்தங்கள் பலவும் அமைந்த புண்ணிய பூமி இலங்கை.[1]

இலங்கையின் வடபாகத்தை பூர்வந்தொட்டு தமிழர் ஆண்டு வந்தனர். 'வீணாகானபுர' எனப்படும் யாழ்ப்பாணம் முற்காலம் தொடக்கம் சைவசமயிகளுக்கும், சைவாலயங்களுக்கும், தமிழ் வித்துவான்களுக்கும், தமிழ் நூல்களுக்கும் நிலைக்களமாக விளங்கி வந்திருக்கின்றது. யாழ்ப்பாண அரசர்களின் பாதுகாப்பினாலும் ஊக்குவிப்பாலும் வட இலங்கையில் சைவமும், தமிழும் பெரும் வளர்ச்சி கண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பிரதேசம் தமிழ்நாட்டிற்கு அண்மையில் இருப்பதும், இரு பிராந்தியங்களுக்குமிடையே தொடர்ச்சியான வர்த்தக உறவுகள் இருந்தமையும், தமிழ்நாட்டில் காலத்திற்குக் காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டு அலை அவ்வப்போது இப்பிரதேசத்தையும் பாதித்தது. தென்னாசியாவில் பல்லாயிரமாண்டுகளாகப் பலவகைப்பட்ட இனங்கள் மத்தியில் நிலவிவந்த வழிபாட்டு முறைகளும், தத்துவங்களும் காலப்போக்கில் இணைந்து இந்துமதம் என்னும் பெயரைப் பெற்றது.

யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகள் தென்னிந்தியாவின் தென்பகுதியிலிருந்து வந்து குடியேறியதனால் இவர்களுடன் இந்துமதமும் இங்கு அறிமுகமாகியது. இதனால் யாழ்ப்பாணத்தின் ஆதிமதம் இந்து மதமாகும். பௌத்த மதத்தையும்

[1]இந்துசாதனம். 2000-05-17 பக் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள இனத்தையும் முதன்மைப்படுத்தும் மகாவம்சம் போன்ற பாளி நூல்களும், இவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த பிற்கால வரலாற்று நூல்களும், கி.மு ஆறாம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்களே இலங்கையில் ஆதிக்குடிகள் எனவும், இவர்களே பிற்கால சிங்கள மக்களின் மூதாதையினர் எனவும் கூறுகின்றன. அத்துடன் இக்குடியேற்றம் நடைபெற முன் இங்கிருந்தவர்கள் இயக்கர், நாகர் எனவும் கூறுகின்றது. ஆனால் அண்மைக்காலத்தில் இலங்கையின் சில பாகங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும், தொல்லியல் மேலாய்வுகளும் இக்குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு முன்னரே தென்னிந்தியாவின் சிறப்பாக தமிழ்நாட்டின் திருநெல்வேலிப் பகுதியில் இருந்து வந்த மக்கள் இலங்கையில் குடியேறியுள்ளனர் என்பதை நிரூபித்துள்ளன.

இலங்கைத் தீவின் தென் பெரும்பகுதி தாமிரபரணி என்றழைக்கப்பட்ட வேளையில் வடபகுதி நாகதீபம் அல்லது நாகதீவு என வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் பூர்வக்குடிகளான நாகர்கள் தென்னிந்தியாவில் 'ஆதி ஓஸ்ரலோயிட்' வர்க்கத்தினர் எனவும் நாக வழிபாட்டை மேற்கொண்டோர் எனவும் தொல்லியலாளர் கூறுவர். அத்துடன் நாகர்கள் வாழ்ந்த பிரதேசம் பண்டைய நாளில் நாகதீபம் எனப்பட்டது. இப்பெயர் குறிக்கும் ஆள்புலப் பரப்பு சுருங்கியும் விரிந்தும் வந்துள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நாகதீபம் என்ற பெயர் சுட்டும் ஆள்புலம் 'நயினாதீவு' எனச் சிலவிடத்தும், அவ்வாறன்று 'யாழ்ப்பாணக்குடா நாடு' எனச் சிலவிடத்தும் கருதப்பட்டுள்ளது. எனினும், இலங்கைத்தீவின் வடபெரும் ஆள்புலத்தின் பண்டைய பெயர் நாகதீபம் எனக் கொள்வதே ஏற்புடையதாகவுள்ளது. **"வரலாற்றுக் காலத்தில் நாகதீபம் என்ற பிரதேசம் இலங்கையின் இன்றைய வடமாகாணத்தைக் குறித்ததாக டபிள்யூ.கெய்கர் குறித்துள்ளார்"**.[2]

இலங்கையின் வடபகுதியே வரலாற்றுக்கால நாகதீபம் என்பது பாக்கர் என்பவரின் முடிவு.[3] மகாவம்சத்தில் நாகதீவு பற்றியக் குறிப்புகள் பல உள்ளன. இரு நாக மன்னர்களுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காகப் புத்தர் நாக தீவிற்கு இரண்டாவது முறையாக வருகை தந்தார் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[4] **"வசபன் என்ற மன்னன் (கி.பி 127-171) அனுராதபுரத்தை ஆண்ட காலத்தில் இசிகிரியன் என்பவன் நாகதீபத்தை ஆண்டதாக வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனக் குறிப்பிலிருந்து[5] இலங்கையின் வடபகுதி நாகதீபம் என வழங்கப்பட்டமை நிரூபணமாகின்றது".**

இலங்கையின் புதைப்பொருளியல் நாயகமான '**பரணவிதாரண**' ஈழத்தில் பல பிரதான இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்து மீட்டெடுத்த புதைப்பொருட்கள் காலத்தால் முந்தியவையெனவும் இவை இந்துமத நிகழ்வுகளே என்றும் கூறியுள்ளமையைக் கொண்டு இலங்கையில் பெருந்தொகையினரால் இம்மதம் பேணப்பட்டு வந்ததை ஊகித்து அறிய முடிகின்றது. இவ்வாறு பேணப்பட்டு வந்த இந்து மதத்திலே பௌத்த மதத்தின் தோற்றம் எத்தகைய தாக்கத்தினை

---

[2]Geiger, H, Culture in Mediaeval Times, Ed:by heigz Be Chert, 1960 page: 108
[3]Parker, H, Ancient Ceylon ,Colombo- 1909,page:14
[4] Mahavamsa,Translated into English by Wilhelm Geiger-1950../ Chapter 1; 46 and 47 ,page 6
[5] Paranavitna,S, Vallipuram Gold Plate, Epigraphia Zeylania, Vol,IV, P,237



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது என்பதைச் சற்று விரிவாக பார்க்குமிடத்து, கி.மு இரண்டாம் நூற்றாண்டளவில் தேவநம்பியதீசன் இலங்கையை ஆட்சிபுரிந்த காலத்திலேயே பௌத்தம் ஈழத்திற்கு வருகை தந்ததாகக் கூறப்படுகின்றது.

இவ்வருகை பற்றி கூறவந்த மகாவம்சம் தேவநம்பியதீசன் காலத்திலே இந்தியாவை ஆண்ட பௌத்த மதத்தினனாகிய அசோக மன்னன் தனது மகன் மகிந்தனிடம் பரிசுப் பொருட்களைக் கொடுத்து தீசனிடம் அனுப்பியதாகவும், அவனை கௌரவித்த தீசன் மக்கள் முன்னிலையில் அவனைப் பிரசங்கமாற்றும் படி பணித்ததாகவும், மகிந்தன் அறம், ஆசாரம், ஒழுக்கம் என்பவற்றைக் கொண்ட சொற்பொழிவினை ஆற்றினான் எனவும் இது மக்களுக்குப் பெரும் விருப்பைத் தந்ததாகவும் கூறுகின்றது. அவ்வாறே மன்னனும் மக்களும் பௌத்த மதத்தைத் தழுவியதாக அறிய முடிகின்றது.

எனவே, தற்செயலாகவோ திட்டமிட்டோ பௌத்தம் இலங்கையில் வருகை தந்தமையை அறிய முடிகின்றது. மதம் மாறிய தீசன் மக்களுக்கு மதச் சுதந்திரம் வழங்கினான் எனவும் அறியமுடிகின்றது. அத்துடன் தீசனுக்குப் பின் வந்த மன்னர்கள் பௌத்தர்களாகக் காணப்பட்டதுடன் அதனை வளர்க்கும் நோக்கில் பௌத்த ஆலயங்கள், பௌத்த சங்கங்கள் என்பவற்றை உருவாக்கினர். எனவே, கி.மு. இரண்டு தொடக்கம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையில் வரலாற்றில் பௌத்தத்தின் செல்வாக்கே மேலோங்கிக் காணப்பட்டது எனலாம். ஆனால் இந்து மதம் முழுமையாக அழிவு பெறவில்லை. ஆயினும் இந்து மதத்தின் நலிவுநிலை இக்காலத்திலே இருந்தது என்பதை மறுக்க முடியாது. இவ்வாறு நலிவுற்றுக் காணப்பட்ட இந்துமதமானது ஆறாம் நூற்றாண்டின் பின் இலங்கைகக்கு வருகைப் புரிந்த இந்திய மன்னர்களால் மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ச்சியடைந்தது. [6]

கி.பி. ஆறாம் நூற்றாண்டு தமிழ் நாட்டின் சமய வரலாற்றில் புதிய காலகட்டத்தின் தொடக்கமாக இருந்தது. இக்காலத்தில் பல்லவர் ஆட்சியினால் ஏற்பட்ட பக்தி இயக்கம் சமண, பௌத்த மதங்களை வீழ்ச்சியடையச் செய்வதோடு இந்து மதத்தில் மறுமலர்ச்சியினையும் ஏற்படுத்தியது. இத்தாக்கம் யாழ்ப்பாணம் தமிழகத்துடன் கொண்டிருந்த அரசியல், வர்த்தகத் தொடர்பினால் இங்கும் எதிரொலித்தது. இதனால் இங்கும் பல்லவக் கலை மரபினைப் பின்பற்றி ஆலயங்கள் அமைக்கப்பட்டன. குறிப்பாக பூநகரியிலுள்ள வெட்டுக்காட்டில் உடைந்த சிலையின் பகுதிகளும், அரசபுரத்தில் கருங்கல்லில் பொன்மூலம் பூசப்பட்ட 1.1/2 அடி உயரமான விநாயகர் சிலையும் பல்லவக் கலைமரபிற்குரியதாகக் காணப்படுகின்றன.

பல்லவரைத் தொடர்ந்து பத்தாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்து மத வரலாற்றிலே **'தமிழகத்தின் பொற்காலம்'** எனச் சிறப்பிக்கப்படும் சோழ மன்னர்களது ஆட்சிக்காலமும், வருகையும் இந்து சமயம் முக்கியத்துவம் பெறக் காரணமாக அமைந்தது. சோழர் ஆட்சியில் இந்து சமய வழிபாடும் இந்து ஆலயங்களின் தோற்றமும் மிக உச்ச வளர்ச்சி பெற்றன.

சோழப்பேரரசர்களாகிய முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரனது நடவடிக்கைகள் இதற்கு உந்துசக்தியாக விளங்கியமையினைச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. இலங்கையின் பெரும்பாலான பிரதேசப் பரப்பினை தமக்குரியதாக்கிக் கொண்டு சோழர்கள் பொலன்னறுவையை இராசதானியாக்கி

[6] மனோகரன், த, இந்துநாகரிகம், அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு, 2007. பக் 173-174



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி புரிந்தனர். இவர்கள் இராஜராஜன் காலத்தில் இராஜேந்திரன் தலைமையில் இலங்கைக்கு வந்த படையெடுப்பானது பௌத்த செல்வாக்கைக் கலைத்து பௌத்த மன்னர்களை வலுவிழக்கவும், பௌத்த ஸ்தாபனங்களைச் செயலிழக்கவும் வைத்து இந்து மதத்தை நிலைக்க வைக்க முற்பட்ட பெருமை சோழர்களுக்கே உரியது. சோழர்கள் பௌத்தத்தின் மற்றுமொரு மையஸ்தானமாகிய பொலன்னறுவையை இராசதானியாக்கியது மட்டுமல்லாமல் அதற்கு **'ஜனநாதமங்கலம்'** எனப் பெயர் சூட்டி அங்கு இந்தியக் குடியேற்றங்களை ஏற்படுத்தியதாகவும் அறிய முடிகிறது. சோழர் ஆட்சியின் நிறைவாய் இராஜேந்திரன் அமைத்த **'வானவன்மாதேவி ஈஸ்வரம்'** எனும் ஆலயம் சோழரின் சமயப்பணிக்கு சிகரம் வைத்தாற் போன்று விளங்குகின்றது.

இலங்கை முழுவதனையும் கைப்பற்றி சோழப் பேரரசுடன் இணைத்த முதலாம் இராஜேந்திரன் காலத்திற்குரிய இரண்டு கல்வெட்டுக்கள் யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்கள் ஒன்று சாத்தல என்பவன் நல்லூரில் அமைந்த இந்துக்கோயில் ஒன்றுக்கு மிருக (சாவாமூவாப் பேராடு) தானம் அளித்ததுடன் அவற்றின் பாலிலிருந்து பெறப்பட்ட நெய்யே கோயில் விளக்கெரிக்கப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதன்மூலம் சோழர் பிற இடங்களில் இந்து சமயத்திற்கு அளித்தது போன்ற ஆதரவை யாழ்ப்பாணத்திற்கு அளித்துள்ளனர் என்பது புலனாகிறது.

சோழர் மறைந்தாலும் சோழர் ஆட்சி ஈழ வரலாற்றில் குறிப்பாகத் தமிழர் வரலாற்றில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. சோழராட்சியின் தவிர்க்க முடியாத விளைவு யாதெனில் ஈழத்தின் மதத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் இந்து பிராமண சைவ சமய நடைமுறைகளும், திராவிடக்கலையும், கட்டிடக்கலையும், தமிழ் மொழியும் ஊடுருவி மிகப்பலம் வாய்ந்த முறையில் மேலோங்கியது.

சோழராட்சியைத் தொடர்ந்து பொலனறுவை சிங்கள மன்னர்களின் ஆட்சிக்காலத்திலும் இந்துமதம் சிறந்து விளங்கியது. மாகன் பொலன்னறுவையில் ஆட்சி புரிந்த காலத்தில் (1215-1255) சைவசமயிகளும், தமிழரும் மேலாதிக்கம் மிக்க மக்களாக விளங்கினர். மாகன் சிங்களவரால் தமிழரிடமிருந்து கைப்பற்றப்பட்டிருந்த நிலங்கள், சொத்துக்கள் என்பவற்றைக் மீளப்பறித்துத் தமிழருக்குக் கொடுத்தான். இதனைச் சூளவம்சம் இவ்வாறு கூறும்: "சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையே தர்மமான சமத்துவம் பராட்டிய எல்லாளனைப் போல மாகன் விளங்கவில்லை. இவன் தன் தமிழ்த் துணைவரிடம் விசேடமாக அன்பு பாராட்டி அவர்களுக்கு வயல்களும், புற்றரைகளும், வீடுகளும், தோட்டங்களும், பணியாட்களும், மாடுகளும், எருமைகளும் தொகுத்துக் கூறுங்கால் சிங்களவரின் உடமைகள் யாவற்றையும் கொடுத்தான்".

நல்லூர் இராசதானி தோற்றம் பெறுவதற்கு முன்னர் வட இலங்கையில் சாவகன் தலைமையில் தமிழரசு ஒன்று இருந்ததையும் அவ்வரசு சிங்கள அரசுக்கு எதிராக போரிட்டதையும் சிங்கள மன்னர்கள் அவ்வரசைத் தோற்கடிக்க பாண்டியரின் படையுதவியை நாடியதையும் சமகாலப் பாளி இலக்கியங்கள், பாண்டியக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. சில நாணயங்களின் முன்புறத்தில் நந்தியும் பின்புறத்தில் தேவநாகரி எழுத்தில் **'ஸ்ரீ சாவக'** என்ற பெயரும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் ஸ்ரீசாவக என்பதனை பத்மநாதன் 'ஸ்ரீசாவகன்' என வாசிக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். இவற்றிலிருந்து நல்லூருக்கு முன்னோடியாக அரசு ஒன்று இருந்தமையும், அவ்வரசில் இந்தசமய வழிபாடு முக்கியத்துவம் பெற்றமையும் தெளிவாகின்றது. 1282 இல் ஆரியச்சக்கரவர்த்திகள் தலைமையில் ஏற்பட்ட பாண்டியப் படையெடுப்பின் விளைவால் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் 350 ஆண்டுகளாக யாழ்ப்பாண அரசில் இருந்தது. இக்காலத்தில் சமயப்பற்றாலும், சமயப்பணியாலும் யாழ்ப்பாணப் பிரதேசம் இந்துப் பண்பாட்டில் வளர்ச்சி கண்டது. இவர்களுக்கு வழங்கப்பட்ட சேதுகாவலன், கங்கையாரின் கங்கைக் கொண்டவன் போன்ற விருதுப் பெயர்கள் இவர்களின் சமய ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாக உள்ளது.

ஆரியச்சக்கரவர்த்திகள் தமது நாணயங்களிலும், ஆவணங்களிலும், அரச முத்திரைகளிலும் சேதுவைத் தமது மங்கள மொழியாக பயன்படுத்தியமை இவர்கள் தமது பழம் பதியாகிய புண்ணிய தலங்கள் நிரம்பிய இராமேஸ்வரத்தில் மேற்கொண்டிருந்த ஈடுபாட்டிற்கு சான்றாகும். இதுபோன்று இவர்கள் சிவசின்னமாகிய நந்தியின் வடிவினைத் தமது அரச சின்னமாகவும், அரச முத்திரைகளுள் ஒன்றாகவும் பயன்படுத்தியமை இந்து சமயத்தின் மீது இவர்கள் கொண்ட பற்றுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருமுன்னர் யாழ்ப்பாண இராச்சியத்தில் மட்டும் ஐநூற்று எண்பது சைவக் கோயில்களும் மடங்களும் இருந்தன. மடங்களிலும் கோவில்களிலும் கல்வி கற்பிக்கப்பட்டது. புராணபடனம் சமமாக நடைபெற்று வந்தது. பலவகைச் சாத்திரங்களும் ஆராயப்பட்டன. செகராசசேகரம், பரராசசேகரம் போன்ற மருத்துவ நூல்கள் ஆக்கப்பட்டன. அரச ஆதரவில் **'கல்விச் சங்கம்'** ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வந்தது. அதன் வளர்ச்சியின் பொருட்டு **'சங்கத்தார் வயல்'** களுமிருந்தன. புலவர்கள் பலர் அச்சங்கத்தின் அங்கத்தவர்களாயிருந்தனர். இரகுவம்சம் இயற்றிய அரசகேசரி அச்சங்கப் புலவர்களுள் ஒருவராவார். இவ்வாறாக ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இந்து மதம் சிறப்புடன் இருந்தது என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது.

**உசாத்துணைகள்**


- Navarathnam, c.s A **Short History of Hinduism**, Sir canmuganatha press, Jaffna, 1964
- சா.வே. ஜம்புலிங்கம்பிள்ளை **கைலாயமாலை** பதிப்பு, சென்னை – 1939
- **செகராசசேகரம்** - ஞானப்பிரகாச யந்திரசாலை, அச்சுவேலி – 1932
- **செகராசசேகரமாலை** - இ. சி. இரகுநாதையர் பதிப்பு, கொக்குவில் - 1942
- குல. சபாநாதன் (பதிப்பாசிரியர்), **யாழ்ப்பாண வைபவமாலை** சுன்னாகம், 1949
- இராசநாயகம். செ, **யாழ்ப்பாணச்சரித்திரம்-ஆங்கிலேயர் காலம்**, வண்ணார்ப் பண்ணை: சிறிசண்முகானந்தா அச்சகம், 1934
- குணராசா க. **ஈழத்துவர் வரலாறு**, கொழும்பு: பூபாலசிங்கம் பதிப்பகம், 1996
- குலரத்தினம், க. சி. **சைவம் வளர்த்த சான்றோர்கள்**, மிலக்ரவைத் கனகராசா வெளியீடு
- பத்மநாதன், சி, **இலங்கையில் இந்துசமயம்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு- சென்னை, 2005
- பத்மநாதன், சி, **யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2011
- மனோகரன், த, **இந்துநாகரீகம்**, அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு, 2007.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிற்றம்பலம், சி. க, **யாழ்ப்பாண இராச்சியம்** (ப.ஆ), திருநெல்வேலி: யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,1992
- வேலுப்பிள்ளை, **ஆ.தமிழர் சமய வரலாறு**, கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 2011.


# நான் (பல்)கலையில்

மாற்றம் புதியது எண்ணற்ற
திருப்பு முனைகளுடன் திடீரென...
வாழ்க்கையை உணர்கின்றேன்
யாரிடம்சொல்ல? -சொன்னாலும்
யார்க்கும் புரிவதில்லை
ம்.. போகட்டும் போகட்டும்...
புதிதாக வாழத்தொடங்குவோம்
ஆற்றிக்கொள்கிறேன் மனதை
ஆற மறுக்கிறது என்னசெய்ய?
முடிவில் தடம்பதித்தேன்...

நான் நீல்ஆம்ஸ்ரோங் அல்ல
அது வரலாற்றுப்பதிவும் அல்ல
ஆனால் எனக்கது ஒருமைல்கல்
புதிய இடம் புதிய முகங்கள்
தேடினேன் தமிழ் முகத்தை
ஆங்காங்கே ஒன்றோ இரண்டோ
மற்றைய முகங்கள் கர்ஜிக்கின்றன
என்ன இது? தமிழ்அழிவது
கண்முன்னே புலப்படுகிறது
செந்தமிழை பறைசாற்ற-வீரத்
தமிழர்கள் விரைகின்றனர்
பல்கலையைநோக்கியல்ல
வேற்றுக்கிரகத்திற்குத் தான்
ம்.. அங்கேயாவது தமிழ்நிலைக்க
வேண்டுகின்றேன் இறைவனிடம்...

அரசியலில் நடப்பதைக்கொண்டு
இனமொன்றை வெறுப்பது தவறு
என உணர்ந்தேன் – பலரிடம்
பழகியபிறகு சிந்தித்தேன்
நல்லவர்கள் வெளியில் இல்லை
மனதில் குடிகொள்கிறார்கள்
உண்மையான சகோதரத்துவத்தை
உணர்கிறேன் அவர்களிடம்...

நாளைய நல்விடியலுக்காய்
பட்டம் மட்டும் பெறவரவில்லை
பட்டத்துடன் சேர்ந்து உயர்ந்த
வானமதில் பறக்கக்கற்றுக்கொள்ள
வருகின்றேன் எதிர்க்காற்றையும் தாண்டி
எம்மால் எதிர்காலத்தில் சிலர் நன்மை
பெறப்போகிறார்கள்..!


**ஷாலுஜா இலங்கேஸ்வரன்,**
**முதலாம் வருடம்,**
**பல் மருத்துவ விஞ்ஞான பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பண்பாடு – அறிந்ததும் அறியாததும்

**சிவசோதி கேசவன்,**
**விடுகை வருடம்,**
**தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



ஒவ்வொரு பிராந்தியமும் தனக்கெனத் தனித்துவமான பாரம்பரியத்தினையும் பண்பாட்டினையும் கொண்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது வன்னிப் பிரதேசம் தொடர்ச்சியான பாதிப்பினை எதிர் கொண்டமையாலும், 'வன்னி' , 'வன்னியர்' என்ற சொல்லாடல்களைத் தாழ்வான வகுப்பினர் என வேறு பிராந்தியங்களில் வசித்தோர் புறநடையாகப் பொருள் கொண்டமையாலும்,வன்னி தொடர்பான ஆய்வுகள் குறிப்பிட்டுக் கூறுமளவிற்கு முனைப்புப் பெறவில்லை எனலாம். வன்னி தொடர்பாகக் கருத்துக்களை வெளியிட்ட புலமையாளர்களாகக் கருதத் தக்கவர்களும்,சந்தர்ப்ப சூழ்நிலையால் ஆங்காங்கே வன்னி தொடர்பான ஆக்க பூர்வமான செய்திகளைப் பகிர்ந்துகொண்டனரேயன்றி,அது தொடர்பாக வெளிப்படையான செய்திகளைத்தர எத்தனிக்கவில்லை.வன்னி தொடர்பான செய்திகளைத் தாங்கிவந்த படைப்புக்கள் முழுமைபெற்ற படைப்புக்களாக அமையவில்லை. இந் நிலையில், வன்னிப் பண்பாடு குறித்த பூரண தெளிவினை ஏற்படுத்த வேண்டிய தேவையுணரப்படுகிறது. அதனைப் பகுதியளவில் பூர்த்தி செய்யும் முகமாக இக் கட்டுரை அமைகிறது.

வட இலங்கையில் தனித்துவமான பாரம்பரியத்தினைக் கொண்ட பகுதிகளிலொன்றாக வன்னிப் பிரதேசத்தினையும் கருத முடியும். தற்போது வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பிரதேசங்களையே வன்னி எனச் சுட்டுவர். எனினும், ஆரம்பகாலகட்டங்களில் 'வன்னி' எனச் சுட்டப்பட்ட நிலப்பகுதி விலாசமாகவிருந்தமையை அறிய முடிகிறது. ஆரம்ப காலங்களில் மட்டக்களப்பு,திருகோணமலை, புத்தளம், குருநாகல் போன்ற பெரும் பகுதிகளை உள்ளடக்கிய நிலப்பகுதியே வன்னி எனச் சுட்டப்பட்டது என்பர்.[1] வன்னியின் எல்லைகள் குறித்து இயம்பும் பழம் பாடலொன்று அதனைத் தெளிவுபடுத்துகிறது.

*"எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்*
*பல்லோர் புகழருவி தெற்கெல்லை-நல்லதிருக்*
*கோண மலைகீழ்பால் கேதீச் சரம்மேற்கில்*
*மாணத் திகழ்வன்னி நாடு"*[2]

---

[1] சுப்பிரமணியம்,நா. (2003) "வன்னிப் பிரதேச இலக்கியம்" "கொம்பறை", கனடா;வன்னிக் கலாசார அமையம். பக்- 09

[2] மெற்றாஸ்மயில்,செ. (1980) "வன்னிவள நாட்டுப் பாடல்கள்", ஒட்டிசுட்டான்; முல்லை இலக்கிய வட்டம். பக்-vii



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி என்பது வெறும் காடுகள் மாத்திரமல்ல. வன்னியில் இதுவரை அடையாளங் காணப்பட்டுள்ள தொல்பொருட் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு நோக்குகையில் வன்னியில் நேர்த்தியானதொரு பண்பாடு நிலவியிருக்க வேண்டுமென ஊகிக்கலாம். வன்னிப் பிரதேச மக்களில் பெரும்பான்மையானோர் விவசாயத்தினையே நம்பி வாழ்ந்தனர். விவசாய நடவடிக்கைகளோடு இன்றும் தன்னைப் பிணைத்துள்ள வவுனியா மாவட்டமானது வன்னியின் விவசாயப் பாரம்பரியத்திற்கு எடுத்துக்காட்டாய் அமைகிறது. "பிரதேசம் எங்கும் குளங்களை அமைத்த இவர்கள், விவசாயத்தின் மீது கொண்டிருந்த தீராக் காதலினால் தமது கிராமங்களிற்கும் விவாசாய நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கும் பெயர்களைச் சூட்ட முற்பட்டனர். இதனால், வவுனியாவில் உள்ள தொண்ணூற்றைந்து வீதமான ஊர்களின் பெயர்கள் 'குளம்' என்ற பின்னொட்டைக் கொண்டு முடிவடைவதனையும்,ஏனையவற்றுள் சில மடு,ஓடை,மோட்டை, போன்ற பின்னொட்டுக்களைக் கொண்டு முடிவடைவதனையும் காணலாம்."[3]

பண்டைய வன்னிப் பண்பாடு ஆரம்கால கட்டத்தில் செம்மையுற்றிருந்தமையை அறிய முடிகிறது. மாதோட்ட நகரும்,திருகோணமலை நகரும் உலகளாவிய ரீதியில் கவனத்தைப் பெற்ற பிரதேசங்களாகவிருந்திருக்க வேண்டும். "திருக்கேதீஸ்வரத்தைப் பற்றிய பார்வை "வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்" என்றும் திருகோணமலை பற்றிய பார்வை "குரைகடலோதம் நித்தலங் கொழிக்கும் கோணமலை" என்றும் ஒரு பக்கத்திலே வங்கம் மலிகின்ற கடல் மறுபக்கத்திலே நித்திலம் கொழிக்கின்ற கடல் என்றும், தமிழகத்தவர் இலக்கிய நோக்காக ஈழத்தைப் பார்த்த பார்வையின் முதல் அங்கம் வன்னியாகவே இருக்கின்றது. எனவே,திருகோணமலை வன்னியும், மாதோட்ட வன்னியும் அப் பிரதேசங்களில் இருந்த பண்பாடுகளும்தான் தமிழ் நாட்டில் இருந்த அக்கால இலக்கியவாதிகளின் கண்ணோட்டத்திற்கு உட்பட்டிருக்கிறது."[4] என்பர். சங்கப் பாடல்களைப் பாடிய புலவர்களுள் ஒருவரான ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்தவராக அடையாளப்படுத்துவதனைக் காணலாம்.

பூதந்தேவனார் குறிஞ்சி,பாலை ஆகிய திணைகளிலேயே செய்யுட்களை யாத்துள்ளார். இதனைக் கொண்டு நோக்குகையில், அவர்தம் வாழ்வியலுடன் குறிஞ்சி, முல்லை ஆகிய திணைகள் செல்வாக்குச் செலுத்தியிருக்க வேண்டுமென்றும், உயர்ந்து நீண்ட மலையின் ஒரு பகுதி வரட்சி பொருந்திய பாலையாகவும், மறு பகுதி செழிப்பான குறிஞ்சியாகவும் அமையுமெனவும் குறிப்பிடும் ஆய்வாளர்கள், தொல்லியல் சான்றுகள் கிடைக்கப் பெறப்பட்ட கேகாலை மாவட்டத்தின் வட எல்லையிலுள்ள, பட்டிய கம்பளை எனும் இடத்தினை ஈழத்துப் பூதன் தேவனார் பிறப்பிடமாய்க் கொண்டிருக்கக் கூடும் என்பார். இப் பிரதேசத்தின் ஒரு பகுதி மலை நாடாகவும், மறு பகுதி வரட்சி பொருந்திய மகாவன்னியாகவும் இருக்கிறதென்பர்.[5] அத்துடன் ஆரியச்

---

[3]கேசவன்,சி. (2014) "வவுனியாவும் நரசிம்மர் வழிபாடும்", இந்து தருமம், பேராதனை;இந்து மாணவர் சங்கம்,பேராதனைப் பல்கலைக்கழகம். பக்-03

[4]சுப்பிரமணியம்,நா. (2003) "வன்னிப் பிரதேச இலக்கியம்" "கொம்பறை", கனடா;வன்னிக் கலாசார அமையம். பக்- 09

[5]வேலுப்பிள்ளை,ஆ. (2009) "ஈழத்துப் பழைய இலக்கியங்கள் வரலாற்றுத் தேடல்", கொழுப்பு-சென்னை;குமரன் புத்தக இல்லம். பக்-22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்திகள் காலத்திற்குரியதாகச் சுட்டப்படும் இலக்கியங்களில் பெரும்பாலானவையும், பிற்கால இலக்கியங்கள் பலவும் பண்டைக் காலத்தில் "வன்னி" எனச் சுட்டப்பட்ட பிரதேசங்களிலிருந்தே மேற்கிளம்பின என்பர்.[6] கைலாயமலை,வையாபாடல்,கோணேசர்கல்வெட்டு ஆகிய வரலாற்று நூல்களும் வன்னியை மையப்படுத்தியே எழுந்தன என்றும், 'இரகுவம்சம்' என்ற மொழிபெயர்ப்பு நூல் மாத்திரமே யாழ்ப்பாணத்து நல்லூரிலே தோன்றியதென்றும், "கதிரைமலைப்பள்ளு வன்னிப்பிரதேச வயற்புலத்தைக் களமாகக் கொண்ட, தமிழில் தோன்றிய முதலாவது பள்ளு இலக்கியம் எனக் கருதப்படத்தக்க படைப்பெனவும் புலமையாளர்கள் குறிப்பிடுவதனைக் காணலாம்.[7] இவற்றைக் கொண்டு நோக்குகையில் பண்டைக்காலத்தில் "வன்னி" எனச் சுட்டப்பட்ட பிரதேசம் செழிப்புற்றிருந்தமையை ஊகிக் முடிகிறது. தற்போது "வன்னி" எனச் சுட்டப்படும் பிரதேசம் குறுகியுள்ளதனையும் வன்னிப் பண்பாடு தொடர்பாக மக்கள் மத்தியில் தாழ்வான சிந்தனை நிலவுவதனையும் அவதானிக்க முடிகிறது. காலவோட்டத்தில், வன்னி மக்களை "வன்னியர்" என்ற தாழ்வான வகுப்பாக வேறு பிரதேசங்களிலிருப்போர் புறநடையாகப் பொருள் கொண்டமையையும், "வந்தேறுகுடிகள்" எனச் சுட்டியதையும் அறிய முடிகிறது. எனினும் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள், வன்னிப் பண்பாடு குறித்த தொன்மையினையும் சிறப்பினையும் எடுத்தியம்புவதாக அமைகிறது. எதுஎவ்வாறாகவிருப்பினும், வன்னிப் பண்பாடென்பது இயற்கையுடன் பின்னிப் பிணைந்தவொன்றேயாகும். வன்னி நிலப்பரப்பு அதிகமாகக் காடுகளைக் கொண்டது. இதன் விளைவாக, இலங்கையில் நடைபெற்ற யுத்தங்களில் வன்னிப் பிரதேசம் யுத்த கேந்திர மையமாத் தொழில்பட்டதனை அவதானிக்க முடிகிறது. இதன் விளைவாகவும் வன்னிப் பண்பாடு பாதிப்பினை எதிர் கொண்டது எனலாம். சமகால வன்னிப் பிரதேசத்தின் பண்பாட்டுக் கூறுகள் அருகி வருவதனையும், செயலொடுக்கம் பெறுவதனையும் உணர முடிகிறது.

**தொல்லியல் நோக்கில் வன்னி**

வன்னிப் பிரதேசம் தொல்லியல் நோக்கிலும் முக்கியத்துவம் பெறுவதனை அவதானிக்க முடிகிறது. "வன்னிகள் 13 ஆம் நூற்றாண்டில் உற்பத்தியானவை என்ற கருத்து வரலாற்று ஆய்வாளர்களிடையே நிலவி வந்துள்ளது. ஆனால் அந்தக் கருத்தினை முற்றாக நிராகரிக்க வேண்டிய நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இந்நிலை புதிய ஆய்வுகளின் விளைவாக உருவாகியுள்ளது. வன்னிகளின் வரலாறு பூர்வகாலத்துச் சிற்றரசுகளின் உற்பத்திகளுடன் தொடர்புடையதாகும்.அது கிறிஸ்தாப்பப்திற்கும் முற்பட்டது."[8] என்பர். "வன்னியில் மலைப் பாறைகளில் வெட்டப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் ஐம்பத்து நான்கு இதுவரை அடையாளங் காணப்பட்டுள்ளன. அவை யாவும் ஏறக் குறைய 2000 ஆண்டுகளிற்கு முற்பட்டவை."[9] எனவும் "தேவநம்பியதீஸனின் காலத்தை அண்டிய பகுதிக்குரிய கல்வெட்டுக்கள் வவுனியா மாவட்டத்திலுள்ளன. இவற்றின் வரிவடிவம் கி.மு.3ஆம் 2ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தனவே."[10] எனவும் ஆய்வாளர்கள் கூறுவதனை நோக்க முடிகிறது. அத்துடன், வன்னியின் பல பகுதிகளிலும் பெருங்கற்கால நாகரிகத்திற்குரிய எச்சங்கள் கிடைக்கப்

---

[6] சுப்பிரமணியம்,நா. (2003) "வன்னிப் பிரதேச இலக்கியம்" "கொம்பறை", கனடா;வன்னிக் கலாசார அமையம். பக்- 10

[7] சுப்பிரமணியம்,நா. (2003) "வன்னிப் பிரதேச இலக்கியம்" "கொம்பறை", கனடா;வன்னிக் கலாசார அமையம். பக்- 10

[8] பத்மநாதன்,சி.(2012) முன்னுரை, "இலங்கையின் வன்னி மாவட்டங்கள்: ஒரு கையேடு" ,முள்ளியவளை; வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய பரிபாலனசபை. பக்-xii

[9] மு.கு.நூல், பக்-xxii

[10] சிற்றம்பலம், சி.க (1996) "ஈழத்து இந்து சமய வரலாறு- பாகம்-01" யாழ்ப்பாணம்;யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.பக்-123



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்பட்டதனையும், அவை ஏனைய பிரதேச எச்சங்களிலிருந்து தனித்துவப்படுவதையும் ஆராய்ச்சியாளர்தம் குறிப்புகள் சுட்டி நிற்கின்றன. “பண்டைய வன்னி நாட்டில் இன்றைய புத்தள மாவட்டமும் ஒரு பகுதியாகும். இங்கே உள்ள பொம்பரிப்பு என்னும் இடத்தில் தாழிகளில் இறந்தோரை அடக்கம் செய்யப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. அனேகமாக 8000 தாழிகள் இங்கே காணப்படுகின்றன என்றும், ஏறத்தாழ 12,000 பேர் இத்தாழிக்காட்டில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கலாமென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இறந்தோரைத் தாழிகளில் அடக்கஞ் செய்வது பற்றிய தகவல்கள் சங்க இலக்கியங்களில் ஏராளமாகக் காணப்படுகின்றன. பழந்தமிழர் மத்தியில் ‘சுடுதல்’’ ஒரு முக்கிய வழக்கமாக வளர்ச்சி பெற முன்பு அடக்கம் செய்தலே வழக்கு. இத்தகைய அடக்கங்களில் தாழிகளில் அடக்கம் செய்வதும், நிலத்திற் குழி பறித்து நீளக்கிடத்தி அடக்கஞ் செய்தல் போன்றனவும் அடங்கும்.”[11] இத்தகைய எச்சங்களைத் தற்காலத்தில் வன்னி எனச் சுட்டப்படும் பிரதேசங்களிலும் இனங்காண முடிகிறது.

“மன்னாரிலுள்ள மாந்தையில் இற்றைக்கு கால் நூற்றாண்டுக்குக் முன் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் விளைவாக மனித எலும்புக்கூடு ஒன்று கிட்டியது. பொம்பரிப்பில் கிடைத்த மனித எலும்புக்கூட்டின் பிரதான பகுதிகளான தலை, கை, கால் உறுப்புகள் போன்றவையே முக்கியம் பெற, மாந்தையில் பூரண நிலையிலுள்ள மனித எலும்புக்கூடு கிட்டியது குறிப்பிடத்தக்கது. வவுனியா மாவட்டத்திலுள்ள ‘மாமடுவ’’ என்ற கிராமத்திலும் கல்லாலான பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் உள. இத்தகைய சின்னங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கதிரவெளியிலும் உள. விரிவான ஆய்வு நடைபெறின் வன்னிநாட்டில்மேலும் பல இடங்களில் ஈமச்சின்னங்கள் பற்றிய சான்றுகள் கிட்டும்.”[12] வன்னியில் கிடைக்கப் பெறப்பட்ட கல்வெட்டுக்கள், தொல்பொருட் சின்னங்கள் குறித்தும் அவற்றின் தனித்துவம் குறித்தும் பல்வேறு விதமான கருத்துக்களை ஆராட்சியாளர்கள் வெளிப்படுத்தியிருக்கக் காண்கிறோம்.

“பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் கிடைத்துள்ள எலும்புக் கூடுகளில் பெரும்பாலனவை வன்னி மாவட்டத்திலே காணப்படுவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவற்றுள் பொம்பரிப்பு, மாந்தை எலும்புக்கூடுகளைக் குறிப்பிடலாம். பொம்பரிப்பில் பல மண்டை ஓடுகளும், ஏனைய மனித எலும்புகளும் கிடைத்துள்ளன. இவற்றை ஆராய்ந்த மானிடவியலாளரான கென்னடி என்ற அறிஞர் இவை தென்னிந்தியாவிலுள்ள பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் கிடைத்துள்ள எலும்புக்கூடுகளை ஒத்துள்ளன எனக் கூறி, இவர்கள் இன்றைய திராவிட மொழிகள் பேசும் தென்னிந்திய மக்களின் மூதாதையினர் எனவும் கூறியுள்ளார்.”[13] என்பர். அத்துடன், “பெரிய கற்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட ஈமச் சின்னங்கள் காணப்படும் இடங்களுள் வவுனியா மாவட்டத்திற்கு தனிச் சிறப்புண்டு. அவற்றுள் மாமடு என்ற இடத்தில் பரந்த அளவில் அமைக்கப்பட்ட ஈமச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதையொத்த ஈமச் சின்னங்கள் அண்மையில் செட்டிகுளத்தில் கண்டு பிடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.”[14] “அண்மையில் வவுனியா மாவட்டத்தில் சாஸ்திரிகூழாங்குளம் என்ற மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் போது பரந்த அளவிலான புராதனக் குடியிருப்புக்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு கிடைத்த கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள், இருப்புக் கருவிகளின் எச்சங்கள், பல்வேறு

[11] சிற்றம்பலம், சி.க. (2011) “வன்னி நாடும் திராவிடரும்”,ஓமந்தை மத்தியகல்லூரி நூற்றாண்டு விழா மலர். பக்-26-27

[12] சிற்றம்பலம், சி.க. (2011) “வன்னி நாடும் திராவிடரும்”,ஓமந்தை மத்தியகல்லூரி நூற்றாண்டு விழா மலர்.பக்-27

[13] சிற்றம்பலம், சி.க. (2011) “வன்னி நாடும் திராவிடரும்”,ஓமந்தை மத்தியகல்லூரி நூற்றாண்டு விழா மலர்.பக்-27

[14] புஷ்பரட்ணம்,ப. (2015) “தொன்மைமிகு வட்டாரம் வவுனியா”, வவுனியம்(பிரதேச மலர்), வவுனியா; வவுனியா பிரதேச செயலகம். பக்-15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களில் அமைந்த சுடுமண் உருவங்கள் போன்றன இம் மாவட்டத்தில் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே பெருங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன."[15]

வன்னிப்பிரதேசத்தில் கிடைக்கப் பெறப்பட்ட கல்வெட்டுக்களில் தமிழ் மொழியின் பிரயோகம் குறித்தும் ஆய்வாளர்கள் தெளிவுபடுத்தத் தலைப்படுவதனைக் காண்கிறோம். "வவுனியா மாவட்டத்தில் இரு கல்வெட்டுக்களும், அநுராதபுரத்தில் ஒரு கல்வெட்டும், அம்பாறை மாவட்டத்தில் ஒரு கல் வெட்டுமாக நான்கு கல்வெட்டுகளில் 'தமிழ" (தமிழன்) என்ற குறிப்பு வருகிறது. அதாவது இக் குறிப்பு தமிழ்மொழி பேசிய கூட்டத்தைக் குறித்து நிற்கின்றது. வவுனியாவிலுள்ள பெரிய புளியங்குளத்திலுள்ள இரு கல்வெட்டுகளில் தமிழ் வணிகனாகிய விசாகன், பௌத்த மதத்திற்கு அளித்த தானம் பற்றிய குறிப்புண்டு. விசாகன் தமிழ(ன்) எனக் குறிப்பிடப்படுவது அவன் மொழி இங்கு வழக்கிலிருந்ததையும், பௌத்தத்திற்கு அளித்த தானம் இவன் பௌத்தனாகவும் இருந்திருக்கலாம் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறு நோக்கும்போது இக்கல்வெட்டு இந் நாட்டில் தமிழர்களும் பௌத்தர்களாக இருந்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. தமிழ் பௌத்தர் பற்றிய இன்னொரு சான்று மாத்தளை மாவட்டத்திலுள்ள குகை ஒன்றில் உள்ளது. இதுவும் பழைய கல்வெட்டாக அமைந்து பிராமி மொழியிலுள்ளது. எனவே விசாகன் கல்வெட்டு வணிகத் துறையில் தமிழ் வணிகர் பெற்ற முக்கியத்துவத்தையும் தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்ததையும், அவர்களிற் சிலர் பௌத்தர்களாகவும் இருந்ததையும் உறுதிப்படுத்துகிறது. அத்துடன் இக்கல்வெட்டில் வரும் தமிழ் மொழிக்கே சிறப்பான 'ழ" வரி வடிவம் தமிழ் மக்கள் வவுனியா மாவட்டத்தில் வாழ்ந்த ஆதிக் குடிகள் என்பதற்கு அசைக்க முடியாத சான்றாகும்."[16] அதுமட்டுமன்றி, "இலங்கையிலே காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களில் வவுனியா மாவட்டத்தில் உள்ளவற்றிலேதான் தமிழ் மொழியின் செல்வாக்கு மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது."[17] எனக் கூறுவதனையும் அவதானிக்க முடிகிறது.

**சமூக நிலைமை**

தொல்காப்பியம் சுட்டும் ஐவகை நிலங்களுள், மருதம், முல்லை, நெய்தல் ஆகிய மூன்று நிலங்களையும் வன்னிப் பிரதேசம் கொண்டுள்ளமையை அவதானிக்கலாம். வன்னியின் சமூக அமைப்பு முறைமை தனித்துவமாய் அமைவதனைக் காணலாம். ஏனை பிரதேசங்களிலிருந்து புவியியல் ரீதியாக மாறுபட்ட தன்மைகளைக் கொண்டமைந்தமையாலும், பெரும் பகுதி காடுகளாய் அமைந்தமையாலும் வன்னியின் சமூகக் கட்டமைப்பு தனித்துமான முறையில் கட்டமைக்கப்பட்டிருக்கக் கூடும். வன்னி மக்கள் பெரும்பாலும் வேளாண்மை, வேட்டையாடல்,மீன் பிடி முதலிய தொழில்களில் ஈடுபட்டனர். இவர்கள் தாம் மேற்கொண்ட தொழில்களினூடாகத் தமக்குத் தேவையான பொருளாதார வளத்தினைக் கட்டமைத்துக் கொண்டனர். இதனால், இவர்களிற்கு வேறு பிரதேசங்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலமை ஏற்படவில்லை.

எனினும், "வன்னிப்பகுதியின் சமூக – பொருளாதார அமைப்பை மற்றைய பிரதேசங்களின் சமூக பொருளாதார அமைப்புடன் ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது பொருளியல் அறிஞர்கள் எடுத்துக்கூறும் 'சமனற்ற வளர்ச்சிக் கோட்பாடு' *(The Concept of Unequal Development)* அங்கு நிதர்சனமாகத் தொழிற்படுவதைக் காணலாம். அதாவது சில அமிசங்களிற் சில இடங்களில் பெரு வளர்ச்சி காணப்பட்டாலும் சில

[15]புஷ்பரட்ணம்,ப. (2015) "தொன்மைமிகு வட்டாரம் வவுனியா", வவுனியம்(பிரதேச மலர்), வவுனியா; வவுனியா பிரதேச செயலகம். பக்-15.

[16]சிற்றம்பலம்,சி,க. (2011) "வன்னி நாடும் திராவிடரும்", ஓமந்தை மத்திய கல்லூரி நூற்றாண்டு மலர். பக்-29

[17]பத்மநாதன்,சி. (2012) முன்னுரை, "இலங்கையின் வன்னி மாவட்டங்கள்: ஒரு கையேடு" ,முள்ளியவளை; வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய பரிபாலனசபை. பக்-XXV



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிசங்களிற் சில இடங்களின் வளர்ச்சி சிறிதும் இல்லாது, மிகப்புராதன மரபுகள் நின்று நிலவுவதைக் காணலாம். இத்தகைய பிரதேசங்களின் வரன்முறையான சமூக வரலாற்றை அறிந்து கொள்வதற்கு அந்தப் புராதன பாரம்பரியங்களை நன்கு அறிந்து கொள்ள வேண்டியதவசியமாகின்றது."[18] என்பர். கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தச் சூழல் வன்னியின் சமூகக் கட்டமைப்பையும், பண்பாட்டுத் தளத்தினையும் வெகுவாகப் பாதித்தது எனலாம். இதன் போதும் மேலே குறித்ததனைப் போன்ற சமனற்ற வளர்ச்சி இடப் பெற்றதனையும் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக, வவுனியா மாவட்டத்தினை பல்சமூக ஊடாட்டப் பிரதேசமாக அடையாளப்படுத்துவர். இப்பிரதேசத்தின் ஒரு பகுதி விடுதலைப்புலிகளது கட்டுப்பாட்டிலும், மற்றைய பகுதி இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலும் இருந்தது. இப் பிரதேசத்தினைக் கடந்த கால அரசியல் சூழலைக் கொண்டு பின்வருமாறு நோக்க முடியும்.

1. விடுதலைப்புலிகளது நேரடி கட்டுப்பாட்டிற்குள் இருந்த பிரதேசங்கள்
2. இலங்கை இராணுவக்கட்டுப்பாட்டினுள் இருந்த பிரதேங்கள்
   1. சிங்களப் பிரதேசங்கள்
   2. இராணுவத்தின் நேரடிக் கட்டுப்பாட்டினுள் இருந்த தமிழ்ப் பிரதேசங்கள்
   3. விடுதலைப்புலிகளது செல்வாக்கிற்குட்பட்ட,அவர்தம் மறைமுக அதிகார எல்லைப் பிரதேசங்கள்
   4. வேறு தமிழ் ஆயுதக் குழுக்கள் அதிகாரம் செலுத்திய பிரதேசங்கள்

இதில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதியில் தமிழ்,சிங்கள, முஸ்லீம் ஆகிய மூன்று இனத்தவரும் வசித்தனர். இப் பிரதேசத்தில் இடப்பெயர்வுகள் ஒப்பீட்டளவில் குறைவாயிருந்தமையாலும், ஏனைய பிரதேசத்தவர் குடியேறியதாலும் நவநாகரிக மோகத்தாலும் இப் பிரதேசம் வளர்ச்சி கண்டது. ஆனால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் பண்பாட்டுத் தேக்கம் நிலவியதனை அவதானிக்க முடிகிறது. மரபுரிமைகள் குறித்த விழிப்புணர்வினாலும், நவீன தொழில்நுட்ப வசதிகள் ஒப்பீட்டளவில் குறைவாகவிருந்தமையாலும் மரபார்ந்த விடயங்கள் இயங்கு நிலையிலிருந்தன எனலாம். விடுதலைப்புலிகளது மறைமுகச் செல்வாக்கு நிலவிய பிரதேங்களிலும்,தமிழ் ஆயுதக் குழுக்களது செல்வாக்கு நிலவிய பிரதேசங்களிலும் ஓரளவு பண்பாட்டுத் தேக்கம் நிலவியதனை அவதானிக்க முடிகிறது. யுத்தத்தினால் சமூகக் கட்டமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும்,இப் பிரதேசங்களிலே மட்டும்தான் வன்னிப் பண்பாட்டின் எச்சங்களை அவதானிக்க முடிகிறது. எனினும், யுத்தத்திற்குப் பின்னரான வன்னிப் பண்பாட்டுச் சூழலில் பாரியதொரு வேறுபாட்டை அவதானிக்க முடிகிறது. நவநாகரிக மோகம், நவீன தொழில்நுட்பத்தின் திடீர்த் தாக்கம் என்பவையும், மூத்த தலைமுறையினரின் இழப்பும் பண்பாட்டுக் கூறுகள் அருகக் காரணமாயின எனலாம்.

தற்போது வன்னியில் தமிழ், சிங்கள, முஸ்லீம் இனத்தவர்கள் வசிப்பதனை அவதானிக்கலாம். எனினும், தமிழர்களே அதிகமாக வசிப்பதனைக் கணக்கெடுப்பு விபரங்கள் சுட்டி நிற்கின்றன.[19] இப் பிரதேசங்களில் சிங்கள மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் அவர்தம் பண்பாடுகளே முதன்மை பெறுகிறது. யுத்தத்திற்குப் பின்னரே முஸ்லீம், சிங்களக் குடியேற்றங்கள் பாரியளவில் இடம்பெற்றமையையும் அவதானிக்க முடிகிறது. இதன் விளைவாக வவுனியாப் பண்பாட்டுச் சூழலில் பாரியதொரு அதிருப்தி ஏற்பட்டதையும், மரபார்ந்த விடயங்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்டமையையும் அவதானிக்க முடிகிறது. எனினும் தமிழர்தம் பண்பாட்டுக்கூறுகளும், இந்துமதச் செல்வாக்கும் காத்திரமானதொரு நிலையில் வன்னிப் பண்பாட்டுச் சூழலில் பயில் நிலையிலிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

[18] சிவத்தம்பி.கா. (1980) "சிறப்புரை" : "வன்னிவள நாட்டுப் பாடல்கள்", ஒட்டிசுட்டான்; முல்லை இலக்கிய வட்டம். பக்-xxii-xxiii

[19] "Vavuniya Today-2016", (2016) District Palanninig Secretariat, District Secretariat,Vavuniya. page-37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாதியமைப்பு**

வன்னியில் சாதிய அமைப்பு முறையும் ஓரளவு தனித்துவமாய் அமைந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது. "இங்கு யாழ்ப்பாணக் குடாநாட்டிற் காணப்படுவது போன்று சாதியமைப்பின் கெடுபிடிகள் காணப்படுவதில்லையெனினும் ஏறத்தாழக் குடாநாட்டிற் காணப்படுவதுபோன்ற அதிகார முறையைக் கொண்டதாகவேயுள்ளது."[20] குறிப்பாக வவுனியாவிலுள்ள கிராம அமைப்பு முறையை நோக்குகையில் ஆரம்ப காலந்தொட்டு வழக்கிலிருக்கும் கிராமங்களில் சாதிய முறைகளை இலகுவாக அடையாளங் காணமுடிகிறது. பொதுவாக இக் கிராமங்களில், வேளாள வகுப்பினர் அதிகமாகவும், அவ்வூரின் எல்லைப் பகுதிகளில் வண்ணார், கட்டாடி, பறையர், நளவர் முதலான வகுப்பினர் வசிப்பதனையும் அவதானிக்க முடிகிறது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான கிராமங்களில் இம் முறைமை அருகி விட்டாலும், கீழ்ச் சாதியினர் எனச் சுட்டப்படுவோர்தம் நிலங்களும், அவர்தம் தலைமுறையினரையும் அவதானிக்க முடிகிறது. வவுனியாவிலுள்ள பெரும்பாலான கிராமிய வழிபாட்டிடங்கள் வேளாளர்க்குரியதாயிருப்பதனையும், பெரும்பான்மையானோர் வேளாளர்களாயிருப்பதனையும் அறிய முடிகிறது. இதனை முன்பு சாதிய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு தெளிவுபடுத்துவதாய் அமைகிறது[21].

**சமய நிலை**

வன்னியின் சமய நிலையை நோக்குகையில், இந்துமதத்தினைச் சார்ந்தோர் மொத்த சனத்தொகையில் அதிகமாயுள்ளதனைக் காணலாம். தற்போதைய சூழ் நிலையில், வன்னிப் பிரதேசத்தில் உள்ளடங்கும் மன்னார் மாவட்டத்தில் கிறிஸ்தவ சமயத்தின் ஊடுருவல் அதிகமாயுள்ளதனை அவதானிக்க முடிகிறது. எனினும் வவுனியா மாவட்டத்தில் பெரும்பான்மையாக இந்து சமயத்தவர் வசிப்பதனைக் காண்கிறோம்.[22] வவுனியாவில் சிங்களவர்களும் இந்துக்களாயிருந்தமை குறித்து அறிய முடிகிறது.[23] இன்றைய சூழ்நிலையில் சிங்கள இந்துக்களை அவதானிக்க முடியாவிட்டாலும், பெரும்பான்மையானோர் இந்துக்களே என்பதனைக் கணக்கெடுப்புப் புள்ளி விபரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

வவுனியாவின் அல்லது வன்னியின் சமய, சமூக நிலை குறித்து நோக்க முற்படுவோர், குளப்பண்பாட்டுப் பின்னணியில் நோக்க முற்படுவதனைக் காண்கிறோம். அதனைப் பின்வரும் கூற்று தெளிவுபடுத்துகின்றது. "வன்னிப் பிராந்தியத்தில் பண்டு தொட்டு குளங்களை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புக்களும், குறுநில அரசுகளும் பௌத்த, இந்து ஆலயங்களும் இருந்ததற்கான சான்றுகள் பாளி,சிங்கள, தமிழ் இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. பிரித்தானியரால் பண்டார வன்னியன் வெற்றி கொள்ளப்படும் வரை இப் பிராந்தியத்தின் பெரும் பகுதி வன்னிச் சிற்றரசர்களால் ஆட்சி செய்யப்பட்டது. இதனால், இப்பிராந்தியத்தில் யாழ்ப்பாணத்தைக் காட்டிலும் பழமை வாய்ந்த இந்துக் கோயில்கள் இருந்திருக்கும் எனக் கருத இடமுண்டு. இங்கிருந்து கொண்டுவரப்பட்ட கருங்கற்களைக் கொண்டே யாழ்ப்பாணத்திலும் பல இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டன." [24]என்பர். இதுவரை

---

[20]சிவத்தம்பி.கா. (1980) "சிறப்புரை" : "வன்னிவள நாட்டுப் பாடல்கள்", ஒட்டிசுட்டான்; முல்லை இலக்கிய வட்டம்.பக்-xxii

[21]Lewis,J.P. (1895), "Manual Of The Vanni Districts Of The Northern Province, Ceylon" ,Colombo; H.C.Cottle,Acting Govet.Printer Ceylon. Page-82.

[22]"Vavuniya Today-2016", (2016), District Palanninig Secretariat, District Secretariat,Vavuniya. page-36

[23]Lewis,J.P. (1895), "Manual Of The Vanni Districts Of The Northern Province, Ceylon" ,Colombo; H.C.Cottle,Acting Govet.Printer Ceylon. Page-90.

[24]புஷ்பரட்ணம்,ப. (2015) "தொன்மைமிகு வட்டாரம் வவுனியா", வவுனியம்(பிரதேச மலர்), வவுனியா; வவுனியா பிரதேச செயலகம். பக்-20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் அடையாளங்காணப்பட்ட தொல்லியல் எச்சங்களின்படி, செட்டிகுளம் சந்திரசேகரர் ஆலயம் தொன்மையானதென்பர். இவ்வாலயம் கி.பி.247இல் வீரவாயன் செட்டி என்ற வணிகனால் அமைக்கப்பட்டதென்பர்.[25] வன்னிப் பண்பாட்டுச் சூழலில் தொன்று தொட்டு கிராமிய வழிபாட்டு முறைகளே முதன்மை பெற்றிருப்பதனை அவதானிக்க முடிகிறது. எனினும், சம காலத்தில் பல ஆலயங்கள் ஆகம மயமாக்கலிற்குள் உட்படுவதனைக் காணலாம்.

**வீடமைப்பு முறை**

வன்னிப் பிரதேசத்திற்குரிய சிறப்பாக வீடமைப்பு முறையாக வட்ட வீட்டினைச் சுட்டுவர். "நடு விலே உயரமான தூண் அமையும். அதன், உச்சியிலே வட்டமாகக் கை மரங்கள் இணைக்கப்பட்டு கூம்பு வடிவிலே சுற்றவர இறக்கி மண்சுவர், சார்புக் கப்பு என்பவற்றில் பாரம் பொறுக்க வைத்து மேலே பனையோலையால் வேய்வர். இந்த வீட்டின் ஒற்றை வாசற்புறத்தில் இருபுறமும் திண்ணைகளும் அமையும். இவ்வீட்டுக்குப் புறம்பாகத் தனியாக சமயற் கொட்டில் (குசினி), வெளிமால் என்பன அமையும். இந்த வட்ட வீட்டுக்குள் இறைச்சிக்கறி கொண்டு போதல், வீட்டுக்கு விலக்கான நிலையிற் போதல் என்பன தவிர்க்கப்படும். குறிப்பிட்ட ஒரே பரப்புள்ள நீள் சதுர வீடமைப்பதை விட வட்ட வீடமைப்பது செலவு சுருக்கம் என்றும், தொழில் நுட்பச் சிரமம் குறைவானதென்றும் கூறப்படுகின்றது."[26] எனினும், யுத்தத்திற்குப் பின்னர் இவ்வீடமைப்பு முறை அருகி விட்டதெனலாம். நெல்லினைப் பாதுகாக்கும் தனித்துவமன மரபும் வன்னியில் பயில் நிலையிலிருந்தமையை அவதானிக்க முடிகிறது. நெல்லைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் வட்டக் கூட்டு முறைமையினூடாக நெல்லினைப் பாதுகாத்தனர். இதனை "கொம்பறை" என்பர். "நெல்லுப்பட்டடை" என்ற முறைமையின் ஊடாகவும் நெல் பாதுகாக்கப்பட்டதை அறிய முடிகிறது. "பரண் அமைத்து வைக்கோலை நன்கு பரவி, வைக்கோல் கத்தையை நாலா பக்கமும் அடுக்கி உயர்த்தி, அதனுள்ளே நெல்லைப் போட்டுப் பின் வைக்கோல் திரி கொண்டு நாலா பக்கமும் இறுக்கிக் கட்டுவர். பின் வைக்கோல் கத்தைகள் கொண்டே மூடி முடிவில் கோலால் வேய்ந்து விடுவர். இவற்றில் இடப்படும் நெல் சுமார் 8 முதல் 15 வருடங்கள் வரை பாதுகாப்பாகவிருக்கும்"[27] இதனை நெல்லுப்பட்டடை என்பர்.

கொம்பறை என்பது களிமண்ணால் ஆக்கப்படுவதாகும்.இது வட்ட வடிவாக இருப்பதுடன், பானையைப் போன்ற தோற்றமுடையது. இக் கொம்பறையில் நெல்லினைப் போடுவதற்கு முன்னர், சூரியனுக்குப் பொங்கலிட்டு வழிபடும் மரபிருந்ததனை அறிய முடிகிறது. "ஒன்றரை முழ உயரமுள்ள நான்கு சிறு தூண்களை சதுரமாக நட்டு அவற்றின் மேல் பலகையிட்டு அதன் மேல் கொடிகளாற் பின்னப்பட்ட வட்டவடிவமான இருபக்கமும் திறந்த கூடையை வைப்பர். அக்கூடையின் மேல் ஓலைக் கூடையிட்டு மூடுவர். பலகை பரப்பப்பட்ட அடித் தளத்தில் மண்இட்டு சாணியால் மெழுகுவர். அதிலே நெல்லை இட்டுவைத்தால் வருடக் கணக்காக அது பழுதுபடாமலும், எலி, அணில், குருவி முதலியவற்றால் அழிக்கப்படாமலும் பாதுகாப்பாக இருக்கும்."[28] சம காலத்தில் இத்தகைய வீட்டமைப்பு முறைகள், நெல் களஞ்சியப்படுத்தும் முறைமை என்பவை அருகி விட்டதெனலாம். குறிப்பாக வட்ட வீட்டு முறை யுத்தத்திற்குப் பின்னர்

[25] பூலோகசிங்கம்,பொ., (1996), "வன்னி நாட்டின் வரலாறு", மருதநிலா: வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர். பக்-05.

[26] சுப்ரமணியம்,நா. (1982), "வன்னிப் பிரதேச சமூக ஒழுங்கமைப்பும் நாட்டார் வழக்கியலும்"பண்டார வன்னியன் விழா மலர், வவுனியா;வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபை. பக்-25

[27] கனகரத்தினம்,இரா.வை. (1982) "வன்னி மக்களின் மரபும் பண்பாடும்-ஓர் ஆய்வு", பண்டார வன்னியன் விழா மலர், வவுனியா;வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபை. பக்-51

[28] சுப்ரமணியம்,நா. (1982), "வன்னிப் பிரதேச சமூக ஒழுங்கமைப்பும் நாட்டார் வழக்கியலும்"பண்டார வன்னியன் விழா மலர், வவுனியா;வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபை. பக்-28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து விட்டது. நவீன கட்டட அமைப்பு முறைகளினூடாக அபிவிருத்தி புலப்பட்டாலும்கூட, மரபுகள் இழக்கப்படுவது கவனத்திற்குரியது.

**நாட்டார் இலக்கிய மரபு**

வன்னிப் பிரதேசத்தில் நெடு நாட்தொட்டு நாட்டார் கலைக்கூறுகள் சிறப்பானதொரு நிலையில் பேணப்படுவதனை அவதானிக்க முடிகிறது. இற்றைவரைத் தனித்துவமாக அவை திகழ்வதும் குறிப்பிடத்தக்கது. "பள்ளு" என்ற பிரபந்த வகை தோன்றக் காரணமான[29] பண்டிப்(பன்றி) பள்ளு, குருவிப்பள்ளு முதலான இலக்கியங்களும், ஆண் ஒப்பாரி பாடும் பாணியிலமைந்த வேலப்பணிக்கர் ஒப்பாரி முதலான நாட்டார் இலக்கிய வகைகளும் வன்னியில் தோற்றம் பெற்றிருப்பதனை அவதானிக்க முடிகிறது. அத்துடன், பிள்ளையார் சிந்து, பரமசிவன் சிந்து, நாகதம்பிரான் சிந்து, முருகையன் சிந்து, அம்மன் சிந்து, விறுமன் சிந்து, வைரவர்(வயிரவர்) சிந்து, ஐயனார் சிந்து, வீரபத்திரன் சிந்து, அண்ணமார் சிந்து, வதனமார் சிந்து, நாச்சிமார் சிந்து, முறிகண்டியான் சிந்து, ஐவர் சிந்து, குளக்கோட்டன் சிந்து, குருவிச் சிந்து முதலிய சிந்துப் படைப்புக்களும், "கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கும்மி" எனும் கும்மி இலக்கியமும், வந்தனம், கமக்காரன் வயந்தன், பறவை வயந்தன், கல்லடியான் காதல் முதலிய நாட்டார் இலக்கிய படைப்புக்களும் கருக்கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

**பண்டிப்(பன்றி) பள்ளு**

பண்டிப் (பன்றி) பள்ளு என்ற இலக்கியம் வன்னிப் பண்பாட்டுச் சூழலிற்குரிய தனித்துவமான நாட்டார் இலக்கிய வடிவமாகும். பள்ளு இலக்கியங்கள் எனப் பொதுவாக வரையறை செய்யப்படும் இலக்கியங்களின் அமைப்பு முறையிலிருந்து வேறுபட்ட இலக்கிய வடிவமாக பண்டிப் (பன்றி) பள்ளு என்ற இலக்கியம் அமைகிறது. இதன்கன் தாளக்கட்டு,ஓசையமைப்பு, நாடகப் பாங்கு எள்ளல் சுவை, முதலிய கலைக் கூறுகளை அவதானிக்க முடிகிறது. விவசாயிகள் தமது களைப்பினை மறந்து மகிழப் படைக்கப்பட்ட படைப்புக்களாகையால், இதில் எள்ளல் சுவை மிகுந்திருக்கிறது எனலாம். வன்னிப் பிரதேசத்தில் மட்டுமன்றி ,ஈழத்து நாட்டார் இலக்கியச் சூழலில் கலைத்துவக் கூறுகளைச் சிறப்பாகக் கொண்டிருக்கும் இலக்கியப் படைப்பாக இவ்விலக்கியத்தினை அடையாளப்படுத்த முடியும். "பள்ளு" என்ற பெயருடன் இது வழக்கிலிருப்பினும் "பள்ளு" எனச் சுட்டப்படும் பிரபந்த வகையாக இதனைக் கருத முடியாது. எனினும், அனைத்துப் பள்ளு இலக்கியங்களும் விவசாய நடவடிக்கைகளைப் பின்புலமாகக் கொண்டு படைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இதனடிப்படையிலும், ஈழத்தில் தோன்றிய கதிரை மலைப் பள்ளே தமிழ்ச் சூழலில் முதற் பள்ளு இலக்கியமாகச் சுட்டப்படுவதிலிருந்தும், திருப் பொற்சுண்ணம், திருவெம்பாவை முதலான நாட்டார் வடிவங்கள் பின் நாட்களில் நேர்த்தியானதொரு இலக்கிய வடிவங்களாக பரிணமித்ததைக் கொண்டும், "பள்ளு" என்ற நாட்டார் இலக்கியமே, செழுமையான பள்ளு என்ற இலக்கியம் தோன்ற அடிப்படையாக இருந்திருக்க வேண்டுமென்ற முடிவிற்கு வரலாம்[30]. பண்டிப் பள்ளு என்ற இலக்கியம் யாப்பிலக்கணத் தெளிவுடைய ஒருவரால்தான் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதனை அவ்விலக்கியத்திலுள்ள பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன. இவ்விலக்கியமானது, கடவுள் வாழத்து, பன்றிகளின் வருகை, பன்றிகள் சொல்வது, பன்றி கண்ட கனவு, பன்றி குட்டிகளுடன் பேசுதல், பன்றி மனைவியுடன் பேசுதல், பன்றி குட்டிகளைப் பசியாறப் பணித்தல், காவல்க்காரன் வருகைபற்றிக் குட்டிகளுக்கு எச்சரித்தல்,மானிடரை வாழ்த்துதல் போன்ற எட்டுப் பகுதிகளைக் கொண்டமைவதனைக் காணலாம்.

---

[29]கைலாசபதி,க. (1982), "வன்னிப் பிரதேசமும் நாட்டார் பண்பாட்டியலும்", பண்டார வன்னியன் விழா மலர், வவுனியா;வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபை. பக்-04

[30]கைலாசபதி,க. (1982), "வன்னிப் பிரதேசமும் நாட்டார் பண்பாட்டியலும்", பண்டார வன்னியன் விழா மலர், வவுனியா;வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபை. பக்-04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"சீர்பொருந்தும் உலகினில் மானிடர்*
*சென்ன லான விளைவை யளிக்க*
*ஊர்பொ ருந்திய பண்டிமேல் இன்னிசை*
*ஓத ஐங்கர னேயருள் தாராய்"*

என்ற கடவுள் வாழ்த்துப் பாடலுடன் இவ்விலக்கியம் ஆரம்பமாகிறது. இதில் இறைவனைத் துதிக்கும் ஆறுபாடல்கள் உள்ளன. அவற்றுள் நான்கு கணபதியையும், தலா ஒன்று முருகனையும் சிவனையும் போற்றுகின்றன. பண்டிப் பள்ளு முழுவதும் ஓசைக் கட்டமைப்பிற்குள் உள்வாங்கப்பட்டுப் படைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். பன்றிகளின் வருகை எனும் பகுதியில் அமையும்,

*"அந்தியும் சந்தியு மறிந்தே- அதில்*
*சிந்தைகள் விந்தைகள் புரிந்தே-பரும்*
*பந்துகள் போலவே உருண்டே-தனிப்*
*பண்டியு மோடி வந்ததுவே"* முதலான பாடல்கள்,

*"தரு -தந்தென தெந்தென தென்னா -தென*
*தெந்தென தெந்தென தென்னா"* என்ற தாளக் கட்டினுள் அமைந்திருப்பதனைக் காண முடிகிறது.

பண்டிப் பள்ளு முழுவதும் எள்ளல் சுவை மேலோங்கி இருப்பதனைக் காண்கிறோம். பாமர மக்கள் வயல் வேலைகளின் போது தமது களைப்பினைப் போக்கப் பாடிய பாடல்கள் இவை என்பதால்,தமது களைப்பினை மறந்து மகிழ எள்ளல் சுவைசார் பாடல்களை அதிகம் பாடினர் எனலாம். பன்றிகள் கூட்டமாக வருவது இங்கு,

*"நண்டுகள் குஞ்சுகள் போலே -பல*
*பெண்டுகள் பிள்ளைகள் கூடப்*
*பண்டுள்ள பேர்களும் சூழ -தனிப்*
*பண்டியுமோடி வந்ததுவே."*

எனப் பதிவு செய்யப்படுவதனைக் காணலாம். பன்றிகளின் உருவச் சித்திரிப்பு இவ்வாறு வருணிக்கப்படுவதனைக் காணலாம்.

பன்றி தனது மனைவியை வருணிக்கப் பயன்படுத்தும் உவமைகள் எள்ளல் சுவை மிகுந்தவையாய் அமைவதனைக் காணலாம்.

*"பன்னு மடியு நுணியும் தறித்த*
*பனந்துண் டம்போ லழகியார்*
*பாவை யெனது ஆசைக் கிசைந்த*
*பருத்த உரல்போ லிடையினாள்."*

இங்கு தறித்த பனையின் குற்றியினைப் போல தனது மனைவியின் உடலுள்ளது எனப் பன்றி வருணிக்கிறது. பொதுவாக உரலின் ஒடுங்கிய சிறிய பகுதியைப் பெண்களின் இடைக்கு உவமிப்பது வழக்கம். ஆனால், இங்கு பருத்த உரலினை இடைக்கு உவமிப்பதனைக் காணலாம்.

இவ்விலக்கியத்தில் பன்றிகளிற்கிடையே இடம்பெறும் உரையாடல்களினூடாகக் கதை நகர்த்தப்படுவதனைக் காணலாம்.பன்றி தனது மனைவி, பிள்ளைகளுடன் முற்றி விளைந்திருக்கும் வயலிற்கு வருகிறது.தனது சிறிய குட்டிகளிற்கு மானிடர்கள் கண்டால் கொன்று விடுவார்கள் என்று எச்சரித்து அவதானமாய் நெல்லுண்ணுமாறு பணிக்கிறது, தனது மனைவியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுமாறு கண்டிப்புடன் கூறுகிறது. அதிகாலை நிலம் வெளிக்கும் போது பற்றைக்குள் தனது குட்டிகளைச் செல்லுமாறும்,பொழுது சாயும் வரை உறங்குமாறும் பணிக்கும் பன்றி மானிடரை வாழ்த்துமாறும் கூறுகிறது.இவ் மானிட வாழ்த்துடன் இப் பன்றிப் பள்ளு நிறைவடைகிறது.

**ஆண் ஒப்பாரியும், ஆண் உடன்கட்டை ஏறலும்**

தமிழ்ச் சூழலில் நாட்டார் பாடல்கள் தனித்துவம் பெற்றுள்ளதனை அவதானிக்கலாம். இதில் ஒப்பாரிப் பாடலென்பது பெரும்பாலும் பெண்களிற்கே உரியதாய் அமைகிறது. அதேபோன்று உடன் கட்டை ஏறலும் பெண்களிற்கே உரியது. கணவன் இறந்த பின்னர் கணவனது உடல் எரியும் நெருப்பில் மனைவி விழுந்து தன்னை மாய்த்துக் கொள்ளும் வழக்கம் நெடு நாட் தொட்டு தமிழ்ச் சூழலில் பயில் நிலையிலிருக்கிறது.ஆனால், ஆண் உடன் கட்டையேறும் வழக்கம் தமிழ்ச் சூழலில் அரிது. வன்னிப் பண்பாட்டுச் சூழலில் மேற்குறித்த இரு விடையங்களிலிருந்தும் மாறுபட்டதொரு இலக்கியப் படைப்பாக மேற் கிளம்பியுள்ள இலக்கியமாக வேலப் பணிக்கர் ஒப்பாரியை அடையாளப்படுத்த முடியும். ஒப்பாரிப் பாடலில் கதை கூறும் புது உத்தி முறையைக் கையாண்டு இவ்விலக்கியம் படைக்கப்பட்டுள்ளதனை அவதானிக்கலாம்.பெண் இறந்த பின்னர் உடன் ஆண் கட்டையேறும் வழக்கத்தினை முன் நிறுத்தும் இவ்விலக்கியம் சமூகத்தில் புரட்சியை விளைவிக்க முனைவதனைக் காணலாம்.

இவ்வாறு நோக்குகையில் வன்னிப் பிரதேசம் தனக்கெனத் தனித்துமான பண்பாட்டு மரபுகளைக் கொண்டிருப்பது தெளிவாகிறது. "வன்னி" எனச் சுட்டப்படும் பிரதேசம் வெறும் காடுகள் மாத்திரமல்ல. வன்னியில் நேர்த்தியான பண்பாட்டு மரபொன்று நிலவியதனை ஊகிக்க முடிகிறது. அப் பண்பாட்டுக் கூறுகளின் எச்சங்களாகவே வன்னியில் அடையாளங் காணப்பட்டுள்ள தொல்பொருட் சின்னங்கள் அமைகின்றன எனலாம். அத்துடன், இலங்கையில் இதுவரை அடையாளங் காணப்பட்டுள்ள தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களுள், வவுனியா பிரதேசக் கல்வெட்டுக்களில் தமிழ்மொழி உன்னத நிலையிலிருப்பதனைக் கொண்டு, வன்னிப் பிரதேசத்தில் பண்டைக் காலத்தில் தமிழ்மொழி எத்தகையதொரு இடத்தினை வகித்ததென்பதனையும் ஊகித்தறிய முடிகிறது. வன்னிப் பிரதேசத்தில் வழக்கிலிருக்கும் நாட்டார் இலக்கியக் கூறுகளும் தனித்துவமாய் அமைவதனைக் காணலாம். வன்னிப் பிரதேசத்தில் தனித்துவமான கிராமிய வழிபாட்டு முறைகள் பயில் நிலையிலிருப்பினும் விரிவஞ்சி அவை குறித்து ஆராயத் தலைப்படவில்லை. வன்னிப் பிரதேசம் கொண்டுள்ள தனித்துவமான பண்பாட்டு மரபுகளை நடு நிலைமையாக ஆராய்ந்து ஆவணப்படுத்த வேண்டிய தேவைப்பாடும்,அவற்றை நுணுகி ஆராய்ந்து தர்க்க ரீதியாக எடுத்துரைக்க வேண்டிய தேவைப்பாடும் உணரப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயன் மருத்துவத்தின் மகத்துவமும் இடுப்பு வலி, மூட்டு வாதம் குறித்த சில பதிவுகளும்

க.ஹரன்ராஜ்,
விடுகை வருடம்,
இயன் மருத்துவப் பிரிவு,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



## அறிமுகம்

இயன்மருத்துவம் (physiotherapy) என்பது மருத்துவத்துறையில் இயல்பியல், பௌதிகவியல் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் பிரயோகிக்கும் நவீன மருத்துவமுறையாகும். இயன் மருத்துவத்தின் மூலம் என்பு, தசை, மூட்டு, நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. இருப்பினும் இயன்மருத்துவம் பற்றிய விழிப்புணர்வு பல பிரதேசங்களில் மக்களிடத்தே இல்லாமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சில பிரச்சனைகளுக்கு நோயாளிகள் பொருத்தமான சிகிச்சை முறையைத் தெரிவு செய்யாமல் பல இடங்களுக்கும் சென்றலைந்து பொருத்தமற்ற வைத்திய முறைகளில் சிகிச்சை பெறுவதால் அச்சிகிச்சை பலனளிக்காது கடைசி நேரத்தில் இயன்மருத்துவ பிரிவுக்கு வருவதை இன்று பல வைத்தியசாலைகளில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அத்துடன் சிகிச்சைக்கு அதிக பணத்தை செலவு செய்த பின் இறுதியாக இயன்மருத்துவத்தின் மூலம் முற்றிலும் குணமடைவதும் கண்கூடே. ஆரம்பத்திலேயே இயன்மருத்துவ நிலையங்களை அணுகாது பல இடங்களிலும் பொருத்தமற்ற சிகிச்சை பெறுவதால் சில கோளாறுகளின் தாக்கம் முன்பிருந்ததை விட பல மடங்கு அதிகரிப்பதால் சிகிச்சையளிப்பதிலும் மிகுந்த சிரமங்கள் எதிர்நோக்கப்படுகிறது.

## இயன் மருத்துவ சிகிச்சை பிரிவுகள்

இயன்மருத்துவத்தால் சிகிச்சையளிக்கப்படும் சில பிரதான பிரச்சனைகள் வருமாறு:

- தோள்பட்டைவலி (Shoulder pain)
- தசைவலி (Muscle)
- இடுப்புவலி (Lower back pain)
- மூட்டுவலி (Joint pain)
- தசைப்பிடிப்பு (Muscle)
- கீழ் வாதம் (Osteo arthritis)
- பக்கவாதம் (Stroke)
- தோள் மூட்டு இறுக்கம் (Frozen shoulder)
- கூனல் முதுகு (Kyphosis)
- பக்க நெளிவான முள்ளந்தண்டு (Scoliosis)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயன் மருத்துவத்தில் சிகிச்சையளிக்கப்படும் சில உப பிரிவுகள் வருமாறு:

1. Electrotherapy (மின்னாற்றல்) மின் அலைகளையும், மின் காந்த கதிர்ப்புகளையும் சிகிச்சை நோக்கத்துக்காகப் பயன்படுத்தும் முறை இதுவாகும். இம் முறை செயலிழந்த நரம்பு, தசைகளைத் தூண்டி அவற்றின் இயக்கத்தை மேம்படுத்தவும், நீண்ட காலமாக உள்ள பல வலிகளுக்கு (Chronic pain) நிவாரணமளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இவற்றில் வலிகளைக் குறைப்பதற்கு செங்கீழ்க் கதிர்கள் மூலமான சிகிச்சை (Infra Red Therapy), செயலிழந்த நரம்புகளை செயல்படத்தூண்டும் TENS, IFT மின்னியல் சிகிச்சை முறைகள், சேதமடைந்த தசை, மெல்லிழையங்களைத் திருத்தி அமைக்கும் முறை Ultra Sound Therapy, ஆழமான உடலிழையங்களில் ஊடுருவி வலி நிவாரணமளிக்கும் Short Wave Diathermy(SWD) முறை, Micro Wave Diathermy(MWD) சிகிச்சை போன்றன பயன்படுத்தப்படுகின்றன.
2. Hydrotherapy –நீர் நிலையியல், நீர் இயக்கவியல் போன்ற பௌதிகவியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தி சிகிச்சையளிக்கும் முறையாகும். சாதாரண தரைகளில் உடற்பயிற்சி செய்வதற்கு சிரமப்படுபவர்கள் சிகிச்சை அளிக்கும் தடாகத்தினுள் இலகுவாக உடற் பயிற்சி செய்து உடலுறுப்புக்களை உறுதியாக்குகின்ற சிகிச்சை முறையாகும். சில மன நோய் சார்ந்த வலிகளிற்கு(Psychological pain) சிகிச்சையளிக்கவும் இம்முறை பயன்படுகிறது.
3. Exercise Therapy- உடற் பயிற்சிமூலம் தொற்றா நோய்கள் வராமல் தடுப்பதற்கும், சில நோய்களை குணப்படுத்தவும் இம்முறை பயன்படுகிறது. பிரதானமாக பக்கவாதம் போன்ற நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கு இம்முறை பெரிதும் உதவுகிறது.
4. Chest Physiotherapy- ஆஸ்த்துமா, மார்பு, சுவாசம் சம்பந்தப்பட்ட சில நோய்களுக்கு இம்முறை மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது. தீவிர சிகிச்சைப்பிரிவுகளில்(ICU) அனுமதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பதற்கான மிகவும் இன்றியமையாத சிகிச்சை முறையாக இம்முறை பெரிதும் உதவி புரிகின்றது.

**இயன்மருத்துவத்தின் மகத்துவம்**

இயன்மருத்துவத்தில் மாத்திரைகளின் பயன்பாடு வெகுவாக குறைக்கப்படுவதால் பக்க விளைவுகள் இழிவளவாக்கப்படுகிறது. அன்றாட வாழ்க்கை முறையில் உள்ள சில வகையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் ஒரு விஷேட மருத்துவ முறையாக இயன்மருத்துவம் திகழ்கிறது. பெண்கள் குதியுயர்ந்த பாதணிகளை அணிவதால் குதிக்காலில் ஏற்படும் சில பிரச்சினைகளுக்கும் சில வேளைகளில் அவ்வாறு குதி உயர்ந்த பாதணிகளில் நடக்கும்போது இடறுவதால் ஏற்படும் பிரச்சனைக்கும் இயன்மருத்துவம் ஒரு சிறந்த முறையாகும்.

இன்றைய நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கணினி மயப்படுத்தப்பட்ட வங்கிகள், அலுவலகங்கள், பல்வேறு தொழில்நுட்ப நிலையங்களில் அதிக நேரம் கணினிக்கு முன்பு அமர்ந்து பணிபுரிவதால் தோள்பட்டையில் வலி, தசை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நார்களில் சோர்வு என்பன ஏற்படுகின்றன. இத்தகைய பிரச்சினை உடையவர்கள் வலி நிவாரணம் பெற இயன்மருத்துவம் பெரிதும் துணைபுரிகிறது.

அத்துடன், மோட்டார் சைக்கிளில் அதிகளவு நேரம் பயணம் புரிவதாலும் மோட்டார் வண்டியைச் செலுத்துவதாலும் நாளடைவில் அது முதுகுவலி, நாரிவலி, தோள்பட்டை வலியையும் ஏற்படுத்துகிறது. இவ் வலியிலிருந்து நிரந்தர நிவாரணம் பெறவும் இயன்மருத்துவம் பெரிதும் உதவுகிறது.

பொதுவாக 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் முழங்கால் வலி, மூட்டு வீக்கம் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுத்துகின்றன. இதற்கு மிகப்பிரதான காரணம் வயதாகும் போது மூட்டுக்களைச் சூழவுள்ள வன்கூட்டுத்தசைகளின் உறுதி குறைவடைதலும் மென்மையடைதலும் ஆகும். பலவீனமான வன்கூட்டுத்தசைகளின் உறுதியின்மை காரணமாக மூட்டுக்களை உருவாக்குகின்ற எலும்புகள் ஒன்றோடொன்று தேய்வடைந்து சேதமடைவதால் மூட்டு வலிகள், மூட்டு வீக்கம், மூட்டு வாதம் என்பன ஏற்படுத்தப்படுகின்றன. இத்தகைய எலும்பு, மூட்டு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு நிவாரணமளிக்கும் ஓர் உன்னத சிகிச்சை முறையாக இயன் மருத்துவம் திகழ்கிறது.



இயன் மருத்துவம் வெறுமனே உடலில் பல தரப்பட்ட வலிகளுக்கு வெறுமனே வலி நிவாரணி மாத்திரைகளை வழங்கி தற்காலிக தீர்வைத் தரும் முறையல்ல. மாறாக வலிக்கான பொருத்தமான காரணங்களைக் (Causes) கண்டறிந்து அதற்கு சிகிச்சையளித்து நிரந்தர வலி நிவாரணத்தைத் தரும் பக்க விளைவு அற்ற ஒரு சிகிச்சை முறையாகும்.

**இடுப்பு வலி - Lower Back pain.**

இடுப்பு வலி என்பது இன்று உலகில் 80% க்கும் அதிகமானவர்களினால் நாளாந்தம் அனுபவிக்கப்படுகின்ற பாரிய பிரச்சினை ஆகும். பெரும்பாலானவர்கள் பல முறை வைத்தியசாலைகளுக்கு சென்றும் பல வலி நிவாரணி மாத்திரைகளைப் பாவித்தும், பல விசேட வைத்திய நிபுணர்களிடம் சென்றும் பலர் சிகிச்சை பலனளிக்காமல் கண்ட கண்ட சில பிழையான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்று நோய் நிலைமையைப் பல மடங்கு அதிகரித்த பின்னரே இறுதியாக இயன் மருத்துவ நிலையங்களை நாடுவதைக் காணலாம். "கண் கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் எதற்கு" என்பதைப் போல இடுப்பு வலிக்குரிய சிறந்த சிகிச்சையை ஆரம்பத்திலேயே பெற்றுக்கொண்டால் இடுப்பு வலியின் பெருமளவு தாக்கத்தைக் குறைத்து ஆரோக்கியமான வாழ்க்கை வாழலாம்.

**இடுப்பு வலி ஏற்படுவதற்கான காரணிகள்**

1. இடுப்பு வலி ஏற்படுவதற்கான பிரதான காரணியாக நாம் அன்றாட வாழ்க்கையிலே கடைப்பிடிக்கின்ற **பிழையான உடற்கூற்றியல் நிலையே(Abnormal Postural habbits in the day to day life)** காணப்படுகிறது. இதுவே பெரும்பாலானவர்களில இடுப்பு வலிக்கு பிரதான காரணியாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **பிழையான விதத்தில் ஆசனங்களில் அமர்தல்/இருத்தல்(Wrong sitting posture), ஒழுங்கற்ற விதத்தில் நிற்றல்(Wrong standing posture)** போன்றவற்றின் பிழையான உடற்கூற்றியல் நிலைகள் அல்லது முறைகள் இடுப்பு வலியை ஏற்படுத்தும் மிகப் பிரதானமான காரணியாக அமைகின்றன.
3. **முறையற்ற விதத்தில் பாரங்களைத் தூக்குவதனால் இடுப்பு, முதுகு தசைகளின் மீது ஏற்படுத்தப்படும் சமச்சீரற்ற விசைகளின் விளைவாக ஏற்படும் தசைப் பிரச்சனைகள் இடுப்பு வலிக்கு மற்றுமொரு காரணியாக அமைகிறது.(Wrong Biomechanics of weight lifting).**
இதன் காரணமாக இடுப்புத் தசைகளில் தசைப்பிடிப்பும், நுண்ணிய அளவிலான தசை நார்களின் சேதமும் ஏற்படும். இது இடுப்பு வலிக்கான மற்றுமொரு காரணியாக அமைகிறது.
4. **முள்ளந்தண்டு என்புகளுக்கிடையில் காணப்படும் உராய்வு நீக்கிப் பதார்த்தமான Gelly பதார்த்தம் முறையற்ற உபயோகத்தின் காரணமாக வெளி நோக்கித் தள்ளப்படுவதனால்(Disk herniation)** அது முண்ணாண் நரம்புகளின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் விளைவாகவும் இடுப்பு வலி ஏற்படும். இது நரம்புடன் சம்பந்தப்பட்ட இடுப்பு வலியாகும். இவ் வலி ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்துக்கு நகர்ந்து செல்வது போல இருக்கும். இதற்கு (Disk herniation) இடுப்புத் தசைகள் பலவீனமாக காணப்படுதலும் ஒரு காரணமாகும்.
5. அளவுக்கு அதிகமான உடற் பயிற்சி இடுப்புத் தசைகளை அதிகளவு செயற்பாட்டுக்கு உள்ளாக்கும்போது தசைநார்களில் ஏற்படம் சேதங்களும் இடுப்பு வலிக்கு மற்றுமொரு காரணியாக அமைகிறது.

**இடுப்பு வலிக்கான மேலும் சில காரணிகள் வருமாறு**

1.Osteo Arthritis.

2.கூனல் முதுகு – Kyphosis.

3.பக்க நெளிவான முள்ளந்தண்டு – Scoliosis.

4.ஒழுங்கற்ற, குதியுயர்ந்த பாதணிகளை பயன்படுத்தல்.

5.முறையான உடற்பயிற்சியின்மை.

6.தசைப் பிடிப்பும், தசை இறுக்கமும்-Muscle tightnes and Muscle spasm.

**முறையான உடற்பயிற்சியும், ஒழுங்கான ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களும்** இடுப்பு வலி வராமல் தடுக்கக்கூடிய எளிய முறைகளாகும். நீண்ட கால இடுப்பு வலியால் அவதியுறுபவர்கள் ஒரு **சிறந்த திறமையான இயன் மருத்துவரை (Physiotherapist)** அணுகி முறையான உடற்கூற்று நிலை சம்பந்தமான ஆலோசனைகளையும், முறையான இயன் மருத்துவ சிகிச்சையும் பெறுவதன் முலம் சிறந்த பலன்களைப் பெறலாம்.


**சில முதுகு வலிப் பிரச்சினைகளுக்கு அறுவைச்சிகிச்சை பலனளிக்கும். ஆனால், பல பிரச்சினைகளுக்கு இயன் மருத்துவ சிகிச்சை மூலம் நன்மையான விளைவுகளை அடையலாம்**. அத்தோடு முதுகு வலி வராமல் தடுப்பதற்குரிய வழி முறைகளையும் அறியலாம். இயன் மருத்துவம் வெறுமனே முதுகு வலிக்கு வலி நிவாரணி மாத்திரைகளை வழங்கி தற்காலிகத் தீர்வை தரும் முறையல்ல. மாறாக, வலிக்கான பொருத்தமான காரணங்களைக்(Causes) கண்டறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குச் சிகிச்சையளித்து நிரந்தர வலி நிவாரணத்தைத் தரும் பக்க விளைவு அற்ற ஒரு சிகிச்சை முறையாகும்.

**இடுப்பு வலியைக் குறைப்பதற்கான சில எளிய உடற்பயிற்சிகள் வருமாறு:**




மூட்டு வாதம் (ஆதரைட்டிஸ்) - Osteo Arthritis

இன்று நாளுக்கு நாள் அதிகமாகப் பேசப்படுகின்ற விடயம் மூட்டுவாதப்பிரச்சினை ஆகும். மருத்துவத்துறை எவ்வாறு வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறதோ அதே போல மூட்டுவாதத்தால் பாதிப்படைபவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கிட்டத்தட்ட 200 வகையான மூட்டு வாத நோய்கள் உண்டு. அதில் பிரதான வகையான Osteo Arthrits பற்றி நோக்கலாம்.

மூட்டுக்களில் ஏற்படுகின்ற அழற்சி(Joint Inflammation). அதாவது மூட்டுக்களில் உராய்வு நீக்கியாக என்புகளைச் சூழ்ந்து காணப்படுகின்ற பாய்பொருள் மற்றும் தொடுப்பிழையங்கள் சிதைவடைந்து ஏற்படுகின்ற வலி, மூட்டு வீக்கம், மூட்டு இறுக்கமடைதலுடன் கூடிய மூட்டு அழற்சி என்பன மூட்டுவாதப்பிரச்சினைகள் ஆகும்.

பொதுவாக மூட்டுக்களில் Gelly தன்மையான உராய்வு நீக்கிப் பதார்த்தங்களும், என்பின் தொடுகையுறுகின்ற மேற்பரப்பைச் சூழ்ந்து கசியிழையமும் காணப்படும். இவை என்புகள் ஒன்றோடொன்று தொடுகையுற்று மூட்டுக்கள் தேய்வடைவதை தடுக்கின்றன. ஆனால், பல்வேறு வகையான காரணிகள் மூட்டுவாதப்பிரச்சினைகள் ஏற்படுவதில் பங்களிப்புச் செய்கின்றன.

**ஆதரைட்டிஸ்ஸை ஏற்படுத்தும் பிரதான காரணிகள்.**

**1). அதி கூடிய உடற் பாரம்/ பருமன் (Over weight)**

ஒருவர் உயரத்திற்கேற்ற சாதாரணமான நிறையைக் கொண்டிராமல் மேலதிக நிறையைக் கொண்டிருத்தல். இதன்போது உடல்பாரத்தின் பெரும்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்கால் மூட்டின் ஊடாக கடத்தப்படும். இவ்வாறான அதிகூடிய அழுத்தங்கள் முழங்காலில் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்படும்போது அது மூட்டுவாத நோய் நிலைமையின் விருத்திக்கு பங்களிப்பு செய்கிறது.

**2). மூட்டுக்களில் ஏற்படும் அடி மற்றும் சேதங்கள் (Direct Trauma)**

மூட்டுக்களில் ஏற்படும் அடி, சேதங்கள் மூட்டுக்களின் சாதாரண தொழிற்பாடுகளைப் பாதிப்பதால் இது ஆதரைட்டிஸ் ஏற்படக் காரணமாக இருக்கின்றது. இது மூட்டுக்களில் அழற்சியை (Joint Inflammation) ஏற்படுத்துவதன் காரணமாக மூட்டு வீக்கமடைதல் (Swelling) , கடுமையான வலி (Severe Pain) உணரப்படுதல் போன்றவை மூட்டு வாதம் ஏற்படக் காரணமாக அமைகின்றன.

**3). நோய் நுண்ணங்கித் தொற்றுக்கள் (Joint Infection)**

பல்வேறு வகையான நுண்ணங்கித் தொற்றுக்களின் காரணமாக மூட்டுக்களின் தொழிற்பாடு பாதிக்கப்படுகிறது. இதன் போது மூட்டுக்கள் சிவத்து, வீக்கமடைந்து, கடும் வலியுடன் காணப்படும். நுண்ணங்கித் தொற்றுக்கள் வழமைக்கு மாறாக அதிகரிக்கின்றமையும் ஒரு காரணமாக அமைகின்றது. அத்தோடு நுண்ணங்கித் தொற்றுக்களால் உராய்வு நீக்கி பதார்த்தம் சிதைவடைந்து ஆதரைட்டிஸ் உருவாகக் காரணமாக அமைகிறது.

**4). தொழில் (Occupation)**

பல்வேறு வகையான தொழில்களில் முழங்கால் மூட்டு திரும்பத் திரும்ப அதிகளவில் மடிதலுக்கும் நீட்டுதலுக்கும் உள்ளாவதும் இந்நிலை ஏற்படக் காரணமாகி விடுகிறது. ஆசிரியர்கள், Traffic Police, அதிகளவு நேரம் நின்று வேலை செய்பவர்கள் போன்றோர்களுக்கு மூட்டுவாதப்பிரச்சினைகள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

**5). வயதாதல் (Aging)**

வயதாகும் போது மூட்டுக்களைச் சூழவுள்ள தசை நார்களின் உறுதி குறைவதன் காரணமாக உராய்வு நீங்கி பாய் பொருளின் அளவு குறைவதனால் மூட்டுவாதப்பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

**6). பால் (Sex)**

பொதுவாக பெண்களே அதிகளவு மூட்டுவாதப்பிரச்சினைகளில் பாதிக்கப்படுகிறார்கள். கிட்டத் தட்ட 60% பெண்கள் மூட்டுவாதப்பிரச்சினைகளினால் பாதிக்கப்படுகிறார்கள்.

**7). பிறப்புரிமையமைப்பு**

சில மூட்டுவாதப்பிரச்சினைகள் ஏற்படுவதற்கு அதற்குக் காரணமான பரம்பரை இயல்பு ஒரு சந்ததியிலிருந்து மற்றைய சந்ததிக்கு கடத்தப்படுவது காரணமாக அமைகிறது.

**8). நிர்ப்பீடணத் தொகுதியில் ( Immune system ) ஏற்படும் பாதிப்பு.**

**9). உயர் குருதியமுக்கம்.**

**10). உடற்பயிற்சியின்மை.**

**11). இரத்தத்தில் உயர் கொழுப்பு உள்ளடக்கம்.**

**12). புகைத்தல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூட்டுவாதத்தை இனங்காணல்**

மூட்டுவாதத்தின் அறிகுறிகள் படிப்படியாகவோ அல்லது சடுதியாகவோ தென்படலாம். ஆதரைட்டிஸ் என்பது ஒரு நீண்ட கால நோய் நிலைமையாகும். இதன்போது அறிகுறிகள் அடிக்கடி தோன்றலாம் அல்லது எப்போதாவது தோன்றலாம்.

**சில பிரதானமான எச்சரிக்கைக்குரிய அறிகுறிகளை (Warning Signs and Symptoms) கொண்டு ஆதரைட்டிஸ்ஸை ஓரளவு இனங்கண்டு கொள்ளலாம்.**

**1). மூட்டுக்களைச் சூழ கடுமையான வலி காணப்படல் (Severe Pain)**

சிலரில் மூட்டுக்களைச் சூழ தொடர்ச்சியாக வலி இருந்து கொண்டே இருக்கும். சிலரில் அடிக்கடி வலி ஏற்படும். வலியானது குறித்த ஒரு மூட்டிலோ அல்லது பல மூட்டிலோ அவதானிக்கப்படலாம்.

**2). மூட்டு வீக்கமடைதல் (Swelling)**

மூட்டுவாதத்தினால் பாதிக்கப்பட்ட மூட்டானது சாதாரண மூட்டின் பருமனை விட வீக்கமடைந்து காணப்படும். அத்தோடு பாதிப்படைந்த மூட்டின் மேற்பரப்பு பளபளப்புத் தன்மையுடையதாகத் தோற்றமளிக்கும்.

**3)மூட்டு விறைப்புத் தன்மையுடையதாக இருக்கும்- Joint Stiffness**

மூட்டுவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காலையில் எழும்போது மூட்டு விறைப்புத் தன்மையுடையதாக இருக்கும். பின்னர் நேரம் செல்லச் செல்ல மூட்டினுடைய விறைப்புத் தன்மை படிப்படியாகக் குறையும். அதிக நேரம் நாற்காலியில் அமர்ந்து விட்டு எழும்போது மூட்டானது விறைத்தது போல அல்லது திமிர்த்தது போல இருக்கும். நேரம் செல்லச் செல்ல மூட்டு இலேசானதாக மாறும். பொதுவாக மூட்டினுடைய விறைப்புத் தன்மை குறைவடைய சுமார் 30-60 நிமிடங்கள் வரை எடுக்கும்.

**4). மூட்டு என்புகளை அசைப்பது மிகக் கடினமாக இருக்கும்- Reduce mobility of the Joint**

**5). உடற் பயிற்சியின் போது அதிக வலி உணரப்படுதல்**

**6). நடக்கும்போது முழங்கால் ஒரு பக்கத்துக்குச் செல்வது போன்று இருக்கும் (Buckling of the Knee joint when walking)**

சிறந்த உணவுப் பழக்க வழக்கமும், முறையான உடற்பயிற்சியும் மூட்டுவாதம் வராமல் தடுப்பதற்கு இன்றியமையாத எமது இரண்டு கண்களைப் போன்ற இரு விடயங்களாகும். மூட்டுவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் வலியைக் குறைத்து சிறந்த வலி நிவாரணம் பெறவும், பாதிப்படைந்த மூட்டின் அசைவை அதிகரித்து சேதமடைந்த மூட்டு இழையங்களை திருத்தி அமைக்கவும் கூடிய பல்வேறு சிகிச்சை முறைகள் இயன் மருத்துவத்திலேயே உண்டு. அத்தோடு, ஒரு நோயாளியின் நோய் நிலைமைக்கேற்ப அவரது உடல்நலத்தை முழுமையாக அலசி ஆராய்ந்து அவருக்கு மிகப் பொருத்தமான உடற்பயிற்சிகளை சரியான கால நேர இடைவெளிகளில் திட்டமிட்டு வழங்க ஒரு இயன் மருத்துவராலேயே முடியும். சில பிழையான, அளவுக்கதிகமான உடற்பயிற்சிகள் மூட்டுவாதத்தில் உள்ளவர்களை முன்பிருந்ததை விட பல மடங்கு எதிர் மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். எனவே, முறையான உடற்பயிற்சிகளை ஒரு திறமையான இயன் மருத்துவரிடம் கலந்தாலோசித்து அவருடைய வழிகாட்டலுக்கேற்ப பின்பற்றுவது சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியாத இரவுகள்...

கா.சுகேசன்,
மூன்றாம் வருடம்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



**கண்களை** மூடிக்கொண்டு படுத்தும் தூக்கம் அவனோடு போராடிக்கொண்டிருந்தது. அவன் தான் என்ன செய்வான், தன்னோடு பிறந்த மூன்று சகோதரிகளைக் கரை சேர்ப்பதற்காகவே இறைதூதுவனால் படைக்கப்பட்டவன் ஆயிற்றே.

முரளிக்கு 18 வயதுதான் இருக்கும் ஆனால், அவனது சிந்தனைகளோ 30 வயதை நிரம்பி இருந்தது. வயதைக்கூட வறுமை விட்டுவைக்கவில்லை. மறுகணம், தனக்கு விடிவு வரும் என்ற நம்பிக்கையில் கண்கள் சமாதானத்திற்கு வர

"எங்கையடி கரைசேராததுகள் மூணும் போட்டுதுகள், இதுகள் எங்கதான் உருப்படப் போகுதுகளோ, எல்லாம் நான் செத்துப்போக நடுத்தெருவிலதான் நிக்கப்போகுதுகள். எனக்கெண்டா நிம்மதி. இதையெல்லாம் பாக்கிறதுக்கு நான் உயிரோட இருக்கமாட்டன்."என்றார் கனகலிங்கத்தார்.

இந்த அட்டகாசங்கள் எல்லாம் முரளிக்குப் பழக்கப்பட்டவைதான்.

"என்ர கண்ணீரைத் துடைக்க ஒருத்தன் வரமாட்டானா"என்று மனதுக்குள்ளே சொல்ல இடமில்லாமல் ஓலைச்செத்தைக்குத் தன் சோகத்தை அழுது கெண்டே முணுமுணுத்தாள் புகழினி.

இதையெல்லாம் பொருட்படுத்தாது மரமண்டைகள் போல புவனாவும், அஸ்வினியும் தாயக்கட்டையோடு போராடிக்கொண்டு இருந்தனர். சரஸ்வதிக்கு இவற்றையெல்லாம் பார்க்கும் போது சின்னத்திரை பார்ப்பது போன்று இருந்தது.

அவள் அப்படித்தான்!

ஒருநாள் கனகலிங்கம் குடித்துவிட்டு வந்து திண்ணையில் தள்ளி விழுத்தியபோது சிறுபிள்ளை ஆனவள் தான். இன்றும் அவள் சிறுபிள்ளைதான். இதையெல்லாம் நாடகமாய் பார்த்து முடிப்பதற்கு இடையில் சேவல் கூவும் சத்தம் கேட்டுவிட்டது அவன் காதில்.

ஏன் புள்ளை ராசாத்தி, எனக்கொரு சாயத்தண்ணி தாறியா?

"என்ன சாயத்தண்ணியா, இவர் இரவில செய்யிற கூத்துக்கு எல்லாம் தேத்தண்ணி கேட்குதோ......?" என முடிப்பதற்குள் கனகலிங்கத்தின் கண்கள் அஸ்வினியின் வாயை அடைத்து விட்டது.

"நில்லுங்கோப்பா கொண்டாறன்" என்றாள் புகழினி.

சீனிப்போத்தலுக்கும் கரண்டிக்கும் இடையில் சிறிய போராட்டம் இடம்பெற்ற பின்னர் அதன் விளைவால் கொஞ்சச் சீனி கிடைத்தது. "என்னதான் பேசினாலும் எங்களுக்குச் சாப்பாடு போட்டவராச்சே" எனத் தன் மனசுக்குள் நினைத்துக்கொண்டு சாயத்தண்ணியை ஊற்றினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தாங்கோப்பா" எனக்கு ஒரு 200 ரூபாய் தாறியளோ?

"இன்னத்துக்கு இப்ப உனக்குக் காசு?" எனப் பல்லைக்கடிக்கும் தந்தைக்கு காரணம் சொல்ல முடியாமல் பின்வாங்கிச் சென்றாள் புகழினி. அவள் பெண்ணாச்சே!

விடியற்காலையிலேயே சரஸ்வதியின் சிரிப்புக் கனகலிங்கத்தின் முகத்தில் கோபத்தை மேலும் வரச்செய்து விட்டது. ஆனாலும் வேலை அவனைத் துரத்தி விட்டது.

இது ஒருபுறம் இருக்க முரளி தன் மனசுக்குள் எப்படியாச்சும் இண்டைக்கு அப்பாவைக் கேட்டு விடவேண்டும் என்ற உறுதியோடு அவர் வருகைக்காகக் காத்திருந்தான். அக்கணத்தில் துன்பத்தைத் தவிர இன்பத்தையே அறியாத அவன் மனதில் எத்தனையோ அழகான பட்டாம்பூச்சிகள் வெளிநாட்டு ஆசைகளைப் பறக்கவிட்டன.

"என்ர அக்காக்கு நல்ல இடத்தில கலியாணம் கட்டி வைக்கனும். தங்கச்சியாக்களை நல்லாப் படிக்க வைக்கனும். அம்மா, அப்பாவை இனியாச்சும் இருத்தி வைச்சுப்பாக்கனும்." என்று ஒவ்வொன்றாய் எண்ணுவதற்குள் தந்தையின் வரவு அவனைக் குழப்பிவிட்டது.

"அப்போய்...."

"என்ன சொல்லு, உனக்கும் ஏதும் காசு வேணுமோ?

"இல்லை நான் வெளிநாடு போகப்போறன். ஏதாச்சும் பண்ணுங்கோ." என உரத்த குரலில் கூறினான்.

"இனி இருக்கிறது நாங்க இருக்கிற இந்தத் துண்டுக்காணிதான். இதையும் விக்கச் சொல்லுறியோ? சொல்லன்."

"விக்க வேண்டாம். அடமானம் வைச்சுத்தாங்கோ. நான் அங்கை போய் எல்லாம் மீட்டு எடுப்பன்."

அவன் அழுது புலம்புவதைப் பார்த்த கனகலிங்கத்தின் முகத்தில் சம்மதத்தின் அறிகுறி தென்பட்டது. இந்தச் சிறுவயசில அவன் மனதில் எத்தனையோ துன்பங்கள், துயரங்களைத் தாங்க முடியாமல் தான் இந்தப் பிடிவாதங்களும், போராட்டங்களும் என்று கனகலிங்கம் விளங்கிக்கொண்டான். எதுவுமே அறியாத சரஸ்வதிக்கு "இண்டைக்கும் ஏதாச்சும் சண்டையோ? என்ர பிள்ளையோட போலத்தான் இருக்கு" எனச் சிரித்தவாறே தன் தொழிலில் கவனம் செலுத்தினாள்.

சிரிப்பது தான் அவள் தொழிலாச்சே!

அவள் சிரிப்பதில் தான் வேதனைகள் எல்லாம் புதைந்து இருப்பதை முரளியால் மட்டுமல்ல எல்லோராலும் அறியக்கூடியதாய் இருந்தது. முரளிக்கு இந்த ஊரைவிட்டுத் தன் குடும்பத்தை விட்டுப் போறதை நினைச்சுக்கதறி அழனும் போல இருந்தாலும் "நான் செத்துப் போனாலும் உன்ர அக்கா, தங்கச்சிகளைக் கரைசேர்த்து வைக்கிறது உன்ர பொறுப்புதான்" என்ற கனகலிங்கத்தின் வார்த்தை அவனது கவலைகளைக் காற்றோடு கலக்கச் செய்து விட்டது.

தாயின் அருகில் வந்து

"அம்மா, நேய்!"

"இஞ்ச பாரன் ஒருக்கா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சின்னப்பிள்ளைபோல சிரிக்க ஆரம்பித்துவிட்டாள். அவனும் சொல்லவேணும் என்ற கடமைக்காய்ச் சொல்லிவிட்டுப் போனான்.

"நான் உன்னைவிட்டு நாளைக்குப் போறனனை வெளிநாட்டுக்கு. எப்ப வாறன் என்டே தெரியாது. அப்பாவோட சண்டை பிடிக்காத என்னனை! நான் சொல்லி எங்க புரியப் போகுது உனக்கு?"

"நான் உன்னை விட்டு நாளைக்கு வெளிநாட்டுக்குப் போறனை."

போகும் நாளும் வந்தது. இரவு பூராக நித்திரையே இல்லை. முரளியின் கண்கள் நித்திரை இல்லாததாலோ, கவலையாலோ சிவந்து கிடக்கின்றது என்பதை யாராலும் புரிந்து கொள்ளமுடியவில்லை.

எல்லோரிடத்திலும் இருந்து விடைபெற்றுச் செல்லும்போது கனகலிங்கத்தின் தெத்திப்பற்கள் மட்டுமே அவனை வழிஅனுப்பி வைத்தது.

ஒரு மூலையில் இருந்து, அவன் தன்னைவிட்டுப் பிரிந்து போவதையே அறியாத தாயின் கண்களில் அப்பொழுதான் கண்ணீர்த் துளிகளை எல்லோராலும் பார்க்கக்கூடியதாய் இருந்தது.

அவள் பைத்தியம் தான். என்றாலும், தாய்மையின் இருப்பிடமாச்சே!

கொழும்புப் பேரூந்தும் கொடிகாமத்தில் அவனைக் குடும்பத்தில் இருந்து பிரித்து ஏற்றிச் சென்றது. இந்த ஊரைவிட்டுச் செல்லும் முரளி "திரும்பி எப்ப வருவேன்?" என்ற கேள்விக்குறியுடன் விடைபெற்றுச் சென்றான். அவ்வூரும் அவனை வழியனுப்பி வைத்தது.

ஒன்று, இரண்டு, மூன்று என நாட்களும் நகர்ந்து கொண்டே இருந்தன. அவனைப்பற்றிய எவ்வித தகவலும் வரவில்லை. இதை எல்லாம் ஆவலுடன் எதிர்பார்ப்பது தாயாச்சே! ஆனாலும் அவள் தான் சிறுபிள்ளையாச்சே!

அம்மோய்!

புவனாவின் குரல் கேட்டும் அவள் பேசாமல் மௌனமாக இருந்துவிட்டாள்.

"அண்ணை கள்ளமாய்ப் போன கப்பலை நேவிக்காரங்க பிடிச்சிட்டாங்களாம்"

யாருக்குச் சொல்லுறது என்று தெரியாம நடுவீட்டுக்குள்ள நின்று கத்தினாள். அது எல்லோரையும் நடுநடுங்கச்செய்தது.

இதைக்கேட்ட புகழினிக்குத் தனது ஆசைகள் எல்லாம் காற்றோடு கலந்து போனதைக் கண்டு கலங்காவிட்டாலும் தன் தம்பியை நினைத்துக்கதறி அழுதாள்.

"தனக்கு வாழ்வு கொடுக்க ஒரு தேவன் வரமாட்டானா?" என்ற ஏக்கத்துடன் புகழினி படுக்கை அறையை நோக்கிச்சென்றாள்

கனகலிங்கம் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே குடிக்கப் பழகினான். வேறு என்னதான் அவனால் செய்ய முடியும்.

அக்குடிசையில் தாயின் முணுமுணுப்பு மட்டும் போகவில்லை. "முரளி எங்கை போட்டான்? அஞ்சு நாளாக்காணல்லை."

நாட்கள் நகர்ந்து சென்றன. அவளது கேள்வியில் மட்டும் மாற்றமே இல்லை.

"தம்பி எங்கை போட்டான்............?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மற்றும் தனியார் கூட்டுறவு (3P System)

நா.திவ்யா மிஹிராங்கனி,
இரண்டாம் வருடம்,
அரசறிவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



அரச மற்றும் தனியார் கூட்டுறவு என்ற எண்ணக்கருவிற்கு இதுவரை உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்று இல்லாத போதும் பொதுவாக அரசாங்கம் தான் மக்களுக்குச் செய்ய வரும் சேவைகளினைத் தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு அவற்றுடன் இணைந்தவண்ணம் சேவை வழங்கும் செயற்பாடுகளைச் செய்ய முற்படும்போது அதனை அரச மற்றும் தனியார் கூட்டுறவு என்பர். இது தனியார் மயமாக்கலில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு எண்ணக்கருவாகும். ஆரம்பகாலங்களில் இருந்து அரசாங்கம் மக்களுக்குச் சேவை செய்தலைத் தனது தனிமுதன்மைவாய்ந்த ஒரு செயலாகக் கொண்டு செயற்பட்டு வந்தது. ஆனால், இன்றைய அரசுகளின் ஆட்புல எல்லைகள் பரந்து விரிந்து காணப்படுவதனாலும் மக்கள் தொகை அதிகமாக் காணப்படுவதன் காரணமாகவும் அரசாங்கத்தினால் தான் முன்னெடுக்கும் செயற்றிட்டங்களைத் தனியாக மேற்கொள்ள முடியவில்லை இதன் விளைவாகத் தனியார் துறைகளின் உதவியுடன் தனது சேவைகளை வழங்க முற்படுகின்றது.

அரசாங்கம் தனது கொள்கை நடைமுறையாக்கத்தினைப் பொதுத்துறை நிர்வாகங்களினூடாகவே மேற்கொள்கின்றது. அந்தவகையில் நிர்வாகத்துறை கொள்கை நடைமுறையாக்கத்தின் போதும் எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுகின்றதோ அதேபோல் தனியார் துறைகளும் அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முன்வரும் போதும் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கின்றன. 3P முறையின் கீழ், ஆரம்பகாலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த சேவைகளில் பல, தனியார் துறைகளினால் வழங்கப்படும். உதாரணமாக:- போக்குவரத்து, தொலைபேசி தொடர்பாடல், நீர் விநியோகம், மின்சாரம், தபால் சேவை, சுகாதார சேவைகள், கழிவகற்றல், நலன்புரி சேவைகள் போன்ற பல்வேறுபட்ட சேவைகளைத் தனியார் துறைகள் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்படுதல்.

இப்புதிய முறையானது 1980 காலங்களில் புதிய பொது முகாமைத்துவத்தின் அறிமுகத்துடன் உருவாக்கப்பட்டது. இது மேற்கத்தைய நாடுகளில் முதன் முதலில் தோற்றம் பெற்றது. பிரித்தானியப் பிரதமராக இருந்த மாங்கிரட் தச்சர் அவர்களின் காலத்தில் நிர்வாகச் சேவை வழங்குவதில் ஏற்பட்டிருந்த நெருக்கடிகள் இதன் தோற்றத்திற்கு வழிசமைத்தது. இவருடைய ஆட்சிக் காலத்தில் பிரித்தானியாவில் பொதுத்துறை நிர்வாகப் பணிகளை ஆற்றுவதற்கென அதிக எண்ணிக்கையிலான நிர்வாகிகள் இருந்தார்களே தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குரிய வேலைகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லை. இதனால் ஏற்பட்டிருந்த நெருக்கடிகள் காரணமாக மாங்கிரட் தச்சர் அவர்கள் 'DOWNSIZING PUBLIC SECTOR' எனும் புதிய கொள்கைத்திட்டத்தினைக் கொண்டுவந்து பிரித்தானியப் பொதுத்துறை நிர்வாகிகளில் 200ற்கும் மேற்பட்டவர்களைக் குறிப்பிட்டளவு பணத்தொகையை வழங்கிப் பதவி விலக்கினார். இதன்மூலம் பிரித்தானியப் பொதுத்துறை நிர்வாகத்தினால் வழங்கப்படும் சேவைகள் வினைத்திறன் மிக்கவகையில் அமைந்ததுடன் அரசாங்கத்தின் வீண் செலவீனங்களும் குறைக்கப்பட்டன. பொதுத்துறை நிர்வாகிகள் தமது கடமைகளைச் சரிவரச் செய்ய முற்பட்டதுடன் தனியார் முகவர்களின் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட்டன.

சமகாலத்திலேயே அமெரிக்காவில் இத்தகையதோர் புதிய மாற்றம் கொண்டுவரப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த றொனால்ட் ரேகர் "தன்னுடைய ஆட்சிக் காலத்தில், அரசாங்கம் மக்களுக்கு சேவை செய்வது தனது மரபார்ந்த தனிமுதன்மை வாய்ந்த கடமையாகும்" எனச் செயற்படுவதால் குறிப்பிட்ட நாட்டின் வரவு செலவு திட்டத்தில் பாரிய துண்டு விழுவதாகவும் அதே நிலைமையே அமெரிக்காவிற்கும் ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டு அரசாங்கம் தானே தனியாக மக்களுக்கு செய்ய முன்வரும் சேவைகளை சுருட்டிக் கொள்ளவேண்டுமெனக் குறிப்பிட்டார். அத்தகைய சேவைகளை வழங்குவதற்கென தனியார் துறைகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். இதற்காக 'ROLLING BACK THE GOVERNMENT' எனும் புதிய கொள்கைத்திட்டத்தினைக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தினார்.

இதன் மூலம் பணியகவமைப்பின் (பொதுத்துறை) பருமனைக் குறைத்தல், அதிகாரப்பரவலாக்கத்தை மேற்கொள்ளல், பொதுச்சேவைக்கான செலவைக் குறைத்தல், அரசாங்கத்தின் செயற்பாட்டுப் பணிகளில் சிலவற்றை ஒப்பந்த அடிப்படையில் தனியார் முகவர்களுக்கு வழங்கல், பெறுபேற்றின் அடிப்படையில் மதிப்பீட்டு முறைகளை மேற்கொள்ளல், வியாபாரமாக்கல், சந்தையை அடிப்படையாக கொண்ட நிர்வாகத்தின் செயற்பாடுகளை ஆதரித்தல் அரசாங்கத்தின் வகிபங்கினைக் கட்டுப்படுத்தல் போன்றன நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. மேற்கூறிய இரு கொள்கைத்திட்டங்களும் புதிய பொது முகாமைத்துவத்திற்கு வித்திட்டன.

இப் புதிய பொது முகாமைத்துவமானது அரச மற்றும் தனியார் கூட்டுறவினை ஆதரிக்கும் ஒன்றாக தோற்றமளிக்கின்றது. அந்தவகையில் புதிய பொது முகாமைத்துவத்தில் முக்கியத்துவம் வாய்ந்த 'ROLLINGBACK', 'THE NIGHT WATCHMAN', 'VALUE FOR MONEY', 'CUSTOMER IS THE KING' மற்றும் 'CUSTOMER CARE' போன்ற எண்ணக்கருக்கள் 3P முறையை வளர்த்தெடுப்பனவாக அமைந்தன. அதாவது 'ROLLINGBACK' என்பதனூடாக அரசாங்கம் தனது செயற்பாடுகளைச் சுருட்டிக்கொள்ள வேண்டும் எனவும் 'THE NIGHT WATCHMAN' என்பதனூடாக அரசாங்கமானது தனியார் முகவர்களுக்குத் தனது கடமைகளை ஒப்பந்தங்கள் மூலம் பிரித்து வழங்கி முகவராண்மைகள் சேவைகள் வழங்கும்போது அவற்றை இரவு நேர காவலன் போல மேற்பார்வை செய்யும் வேலையை மாத்திரம் அரசாங்கம் மேற்கொண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமெனவும் மேற்பார்வையின்போது முகவர்களால் பொதுமக்கள் அசாதாரண விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டால் அத்தகைய சந்தர்ப்பங்களில் நிவாரணத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாத்திரம் அரசின் தலையீடு இருந்தால் போதுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தன. அத்தோடு 'VALUE FOR MONEY' என்பதனூடாகப் பணத்திற்கேற்ற பெறுமதியான சேவையை வழங்கல், சேவை நாடிகளை அரசனாகக் கருதி செங்கம்பளம் விரித்து வரவேற்று சேவை வழங்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தன.

புதிய பொது முகாமைத்துவம் மூன்றாம் உலக நாடுகளில் பாரியளவிலான மாற்றங்களைக் கொண்டுவந்தது. அந்தவகையில் நிர்வாகத்தில் வினைத்திறனான மற்றும் விரைவான சேவை வழங்கலை ஏற்படுத்தலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. தற்காலத்தில் பெரும்பாலான நாடுகளில் அரச மற்றும் தனியார் துறைகள் பொதுச்சேவை வழங்கலில் ஈடுபடுதல் அதிகமாகவே உள்ளது. இதற்கு காரணம் அரச சேவைகள் வினைத்திறன் குன்றியதாகவும் அதேநேரம் தனியார் நிறுவனங்களின் அதிகரித்த தன்மையும் அவற்றின் விரைவான சேவை வழங்கலையும் காணக்கூடியதாகவுள்ளமை ஆகும். இதனாலேயே அரசாங்க சேவைகளைத் தனியார் கம்பனிகளுடன் இணைந்தவண்ணம் மேற்கொள்வதற்கு பெரும்பாலான அரசுகள் ஊக்கம் காட்டுகின்றன.

பொது மற்றும் தனியார் கூட்டுறவு இங்கிலாந்தில் மாங்ரட் தச்சர் மற்றும் அமெரிக்காவில் றொனால்ட் ரேகன் ஆட்சிக்காலத்தில் அறிமுகமாகி மெக்சிகோ, நியூசிலாந்து, தென் கொரியா, தாய்வான், சிங்கப்பூர், நோர்வே, பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகளில் கூடிக்குறைந்த வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இது மேற்கத்தய நாடுகளுக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் பழக்கப்பட்ட ஒன்றாகக் காணப்பட்ட போதிலும் வளர்ந்து வரும் ஆசிய ஆபிரிக்க மற்றும் பசுபிக் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு ஒரு புது அனுபவமாகும். அத்துடன் இப்புதிய முறையினை முன்னேற்றுவதற்கு இன்று பல அரசாங்கங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பெரும்பாலும் ஒரு நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்காக இத்தகைய புதிய முறையினைக் கையாளுவது இன்றைய காலகட்டத்தில் வழக்கமாக உள்ளது.

**உசாத்துணைகள்**


- Dorji, C. T. (1998) **Administrative Training in Devoloping Countries**, Vikas Publishing House (Pvt) Ltd : New Delhi
- John Clarke, Sharon Gewirtz, **Eugene McLaughlin (2000) New Managerialism New Welfare**, Sage Publication : London, Thousand Oaks, New Delhi
- Nicholas Henry (2003) **Public Administration and Public Affairs**, Prentice Hall of India (Pvt) : New Delhi
- Manivasagar, A. V. (2001) **Aspects of Public Administration**, Unie Arts (Pvt) Ltd :Colombo-13.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலியல்வாதம் கருத்தும் முக்கியத்துவமும் ஓர் அறிமுகம்

த.கார்த்திகா,
இறுதிவருடம்,
அரசியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



## கருத்தியல் ஓர் அறிமுகம்.

கருத்தியல் என்பது "கருத்துக்களின் விஞ்ஞானம்" (Science Of Ideas) என்று கூறப்படுகின்றது. அத்துடன் கருத்தியல் என்பது கருத்துக்களிற்கான மதிப்பீடாகவும் காணப்படுகின்றது. 'Destutt De Tracey' என்பவராலேயே கருத்தியல் என்ற சொல் அறிமுகப்படுத்தப்பட்டது. இவர் நடைமுறைச் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கும் ஒன்று என்றவகையில் கருத்தியலைப் பயன்படுத்தினார். மேலும் 'H.M.Drucker' என்பவர் கருத்தியல் என்பது "விஞ்ஞான பூர்வமற்ற இறந்த காலத்திற்கான நவீன பதில்" எனக் குறிப்பிட்டார். அரசியலில் காணப்படும் கருத்தியல்களில் அண்மைக் காலத்தில் தோற்றம் பெற்ற கருத்தியல்களில் ஒன்றாகவும் முக்கியமானதாகவும் சூழலியல்வாதம் காணப்படுகின்றது.

**சூழலியல்வாதம்**

சூழல் எனும்போது பூமியானது கற்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம், உயிர்க்கோளம் எனும் பகுதிகளை ஒருங்கிணைத்துள்ளது. இங்கு வாழும் உயிரினங்கள், தாவரங்கள், வளி, நீர், கனியங்கள் முதலானவை சூழல் எனும் அம்சத்தில் அடங்கும். யுனெஸ்கோ சூழலை 'VIOSPHERE' எனக் கூறுகின்றது. மானிட சூழல், பூமியைச் சுற்றியுள்ள சூழல், கோள்கள், கடல் மேற்பரப்பிருந்து கீழ்நோக்கிய ஆயிரக்கணக்கான கிலோமீற்றர்களும் சூழல் என்பதனுள் அடங்கும். கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து 18ம் நூற்றாண்டில் எழுச்சிபெற்ற கருத்தியலாக இது காணப்படுகின்றது. அதாவது சூழலை மாசடையச் செய்யும் செயற்பாடுகள் அதிகரித்தமையானது சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நின்றமையானது சூழலியல் வாதத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

சூழலியல் என்பது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சமூக, கலாசார, அரசியல், பொருளாதார, தொழில்நுட்பம் என்பவற்றுடன் இயற்கையான வளிமண்டலம், புவிச்சரிதவியல், உயிரியல், நீரியல், காலநிலை ஒழுங்குகளுக்கிடையில் காணப்படும் தொடர்புகள் பற்றிய இயல் எனப்படுகின்றது. "மனிதனுக்காக சூழல் படைக்கப்படவில்லை பூமிக்காகவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான்" என சூழலியல்வாதிகள் வலியுறுத்துகின்றனர். சூழலியல்வாதமானது சட்டபூர்வமாக தக்கவைத்துக் கொள்வதையும் மீட்பித்தலையும், இயற்கைச் சூழலை முன்னேற்றுவதையும், சுற்றுச் சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவர விலங்குகளின் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதுமான நடவடிக்கையாகக் கொள்ளப்படும்.

சூழலியல் எனும் சொல்லானது ஜேர்மனிய உயிரியலாளரான 'ஏர்னற் ஹேக்கீல்' (ERNST HAECKEL) என்பவரால் 1869 இல் பயன்படுத்தப்பட்டது. "சூழலுடன் உயிரினங்களுக்குள்ள தொடர்பு பற்றிய அறிவியல்" என அவர் இதை வரையறுத்தார். இவரைத் தொடர்ந்து 'இயுஜெனியஸ் வார்மிங்' (Eugenius Warming) என்பவர் 1895 இல் சூழலியல் தொடர்பான விரிவான பாடநூல் ஒன்றை எழுதினார். இவ்வாறு கூறுகின்ற வேளையில் சூழலியல் (Ecology) என்ற சொற்பதமானது கிரேக்கச் சொல்லில் இருந்து தோற்றம் பெற்றதாகக் காணப்படுகின்றது. அதாவது கிரேக்கச் சொல்லான Oikos + logos என்ற பதங்களின் இணைப்பாகவே Ecology என்ற சொல் உருவாக்கம் பெற்றுள்ளது. Oikos என்பது வீட்டிலுள்ள (House hold) அல்லது இயற்கையான சூழல் (Habitat) என்னும் பொருளைத் தருகின்றது. Logos என்பது ஏதேனும் ஒன்றைப் பற்றிய விஞ்ஞானம் அல்லது நியாயாதிக்கம் எனப் பொருள்படுகின்றது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சூழலியல் என்பது முக்கியத்துவம் வாய்ந்த கருத்தியலாகக் காணப்படுகின்றது.

மனித இனத்தினுடைய தோற்றத்துடன் மனிதனுக்கும் சூழலிற்கும் இடையிலான தொடர்பு ஏற்பட்டது. அக்காலத்தில் இருந்தே மனிதனது செயற்பாடுகள் சூழலை மாசடையச் செய்வதுடன் தொடர்புபட்டிருந்த போதிலும், மனிதர்கள் அனைவரும் ஒன்றாக வாழ்ந்தமையும் சூழல் மாசடைவு பற்றி அறியாமையும் அது தொடர்பான விளைவுகள் தொடர்பாக அறிந்திருக்காமையும் சூழல் மாசடைவானது சிக்கலிற்குரிய விடயம் என்பதை மக்கள் உணர்ந்து கொள்வதில் தாமதத்தை ஏற்படுத்தியது. அந்தவகையில் 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளில் சூழலியல் தொடர்பான பிரச்சனைகள் தெளிவாக உணரப்பட்டதுடன் மனிதன் தனது தேவைகளுக்காக இயற்கையையும் இயற்கைப் பொருட்களையும் கட்டுப்படுத்துகின்றபோது இயற்கை சூழல் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளத் தவறுகின்றான். இதனால் ஏற்பட்ட பிரச்சனைகளும் இயற்கைச் சூழலின் முக்கியத்துவத்தினையும் கருதி உலகளாவிய ரீதியில் சூழலியல் வாதம் தோற்றம் பெற்றதுடன் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது.

**சூழலியல்வாதமும் அரசியல் முக்கியத்துவமும்.**

சூழலியல் என்ற கருத்தியலானது சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைகின்றது, என்றவகையில் சூழலியல் வாதமானது அரசியல் கருத்தியலில் தனக்கென ஒரு இடத்தினைப் பிடித்துள்ளது. இன்றைய காலத்தில் சூழல் மாசடைவு என்பது தேசிய மற்றும் சர்வதேச பிரச்சனையாக மாற்றமடைந்துள்ளது. ஒவ்வொரு தனிமனிதனும் அவன் வாழும் அரசும் சூழல் மாசடைவில் முக்கிய பங்காளர்களாகக் காணப்படுவதனால், அதனை பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் ஒவ்வொரு தனிமனிதனிற்கும் தேசிய அரசுகளுக்கும் சர்வதேச அரசுகளுக்கும் உரித்துடையதாக்கப்பட்டுள்ளது.

சூழல் பிரச்சினையானது சர்வதேச மற்றும் தேசிய அரசுகளின் அரசியல், பொருளாதார, நிலவுடைமைப் பிரச்சினையாக மாற்றமடைந்து காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தேசிய அரசும் சூழல் பிரச்சனையால் ஏற்படும் சுகாதார பாதிப்புக்கள், சுற்றுச் சூழல் சமத்துவம் குன்றல், அரசுகளின் இருப்புகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படல் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்தும் சூழல் மாசடையாத வகையில் மேற்கொள்ள வேண்டியது இன்றைய அரசுகளின் கடமை மற்றும் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

உலக பொருளாதார வளர்ச்சியின் தத்துவங்களானது உலகினது சூழல் தரத்தினை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. சூழலானது நிலப்பரப்பு, ஆகாயம், நீர்ப்பரப்பு போன்றவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இவற்றில் உயிரின தொகுதிகளின் செயற்பாடுகள் பௌதீகச் சூழலை மாசுப்படுத்துவதானது, உலக ரீதியில் பல சூழல் பிரச்சினைகளுக்கு வித்திடுகின்றது. இத்தகைய பிரச்சினைகளைத் தடுப்பதற்கான அல்லது தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையோ செயற்திட்டங்களையோ தனியொரு அரசினாலேயோ ஒரு பிராந்தியத்தினாலேயோ மேற்கொள்ள முடியாத காரணத்தினால் இப் பிரச்சனை உலகப் பிரச்சினையாக நோக்கப்படுவதுடன் உலக நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து எதிர் கால உலகின் நிலைத்தலை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டு சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சூழல் சார் மாநாடுகளை நடத்துதல் மற்றும் தேசிய சர்வதேச சட்டங்களை உருவாக்குதல் போன்றவற்றின் ஊடாக சூழலியல்வாதக் கருத்தியல் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இன்று இக் கருத்தியல் பசுமை அரசியல் கருத்தியலாக (Green Political Ideology) வளர்ச்சி அடைந்துள்ளது.

ஆரம்பகாலத்தில் சூழலியல் வாதமானது மனிதனுக்கும் சூழலிற்கும் இடையிலான தொடர்பைக் குறிப்பதாகக் காணப்பட்டது. 19ம் நூற்றாண்டின் பின்னர் சூழலியலானது அரசியலில் செல்வாக்குப்பெற்ற ஒன்றாக மாற்றமடைந்தது. அதாவது அரசையும் சூழலையும் தொடர்புபடுத்தி பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அந்தவகையில் 1970 ஆம் ஆண்டில் Bahro என்பவர் "மேற்கத்தேயக் கைத்தொழில்மயமாதல், அரசை அடிப்படையாகக் கொண்ட சமூகச்சூழல் பிரச்சினைகளில் ஒன்றாகும்" (Western industrialization, state-based societies are part of environmental problem) என்றார். அதாவது இவர் அராஜகவாதியாகத் தன்னைக் காட்டிக்கொண்டு கைத்தொழில்மயமாதல் மற்றும் சமூகத்தில் அரசு காணப்படல் என்பன சூழல் பிரச்சினையாகும் என்றார்.

இன்று அரசியலிலும் அரசியல்யாப்புக்களிலும் சூழலியல் சம்பந்தமான விடயங்கள் தாக்கம் செலுத்துகின்றன. ஒரு நாட்டின் பொருளாதாரக் கொள்கை அந்த நாட்டின் சூழலை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கைத்தொழில் வளர்ச்சி, அணு இரசாயன ஆயுத உற்பத்தி, பரிசோதனை, பயன்பாடு போன்ற மனிதனின் செயற்பாடுகளினால் சூழல் மாசுபடும் தன்மை அதிகரித்துச் செல்கின்றது. இத்தகைய செயற்பாடுகளானவை அரசு சூழலைப் பாதுகாக்க வேண்டிய கடமையை கொண்டது என்பதை வலியுறுத்துகின்றது. மாலைத்தீவு ஜனாதிபதி அப்துல் கைம் "மாலைத்தீவு கடல் மட்டத்தில் இருந்து 1.5m உயரத்தில் காணப்படுகிறது. ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் கடல் மட்டம் 59cm ஆல் உயர்கின்றது. இது தொடர்ந்தால் மாலைத்தீவு கடலில் மூழ்கும், இதனைத் தடுக்க வேண்டுமாயின் சர்வதேச அரசுகள் தனது பொருளாதார செயற்பாட்டினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்து நிற்கக்கூடியவாறு ஒருங்கிணைப்பதன் மூலம்தான் தடுக்க முடியும்" என்று கூறினார். இவர் இதனூடாகச் சூழலை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் தேசிய அரசுகள் மட்டுமன்றி சர்வதேச அரசுகளும் அதில் அக்கறை செலுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றார்.

சூழலினைப் பாதுகாக்கக் கூடியவகையில் அரசின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதுடன், அரசினால் உருவாக்கப்படும் கொள்கைகளும் திட்டங்களும் சூழலியல் சார் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டதாகவும் அவற்றைப் பாதிக்காதவகையிலும் உருவாக்கப்படுவது அவசியமானதாகும். சூழலானது பரந்துபட்டதாகவும் மனித குலத்திற்கும் ஏனைய உயிர்களுக்கும் பொதுவானதுமாகக் காணப்படுவதனால், ஒன்றில் ஏற்படும் தாக்கம் ஏனையவற்றிலும் பாதிப்பை ஏற்படுத்தும். இது இயற்கைச் சமநிலையைப் பாதிப்படையச் செய்யும் என்பதுடன் இயற்கை மனிதனின் இருப்பிற்கு அவசியமானதுமாகும்.

சூழலியல் வாதமானது அரசியலில் பெற்றுக் கொண்ட முக்கியத்துவமானது சர்வதேச அமைப்புக்களிலும் தாக்கம் செலுத்தியதுடன் சூழலியல் தொடர்பான மாநாடுகள் பலவும் இடம் பெறவும், சூழலியல் தொடர்பான இயக்கங்கள் தோற்றம் பெறவும் காரணமாக அமைந்தது. இச் செயற்பாடுகளானவை அரசுகள் சூழலியல் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவதற்குத் தூண்டின. சர்வதேச அமைப்புக்களும் சுற்றுச் சூழல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கின. இதன் விளைவாக சூழலியல் தொடர்பாகப் பல்வேறுபட்ட மாநாடுகள் இடம்பெற்றதுடன் அது தொடர்பான இயக்கங்களும், அமைப்புக்களும் தோற்றம் பெற்றன. அத்தகைய அமைப்புக்களாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சூழல் திட்டம் (UNE), சிப்கோ இயக்கம் (1973 CHIPO), அப்பிக்கோ இயக்கம் (1983 APPICKO), சூழலுக்கும் அபிவிருத்திக்குமான உலக ஆணைக்குழு (1987) Green Peace போன்றவற்றைக் கூறலாம்.

முடிவு

சூழல் என்பது இன்றைய காலத்தில் பாதுகாத்துப் பேணவேண்டிய ஒரு விடயம் என்றவகையில் அனைத்துத் துறைகளிலும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுவதுடன் நடைமுறையிலும் அதனைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகியுள்ளது. அத்துடன் சூழல் தொடர்பான இயக்கங்கள் மற்றும் அமைப்புக்களின் செயற்பாடுகள் என்பன இன்று அதிகரித்து வருவதுடன் சூழலியல்வாதம் அரசியல் பரிணாமத்தையும் பெற்றுக் கொண்டது.

**உசாத்துணைகள்**


- Roger Eatwell and Anthony Wright., 1999. **Contemporary Political Ideologies**. London and NewYork.
- Andrew Vincent., 1995. **Modern Political Ideologies**. USA:Blackwell Publishers Inc.
- http://www.thinnai.com **பசுமைப் பார்வைகள் சுற்றுச் சூழல் அரசியல்** - 4 மு.ரவி ஸ்ரீனிவாஸ். 5/3/2016 7.5**8.ஆ**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம்

அ.லோயலா கப்ரீனி,
இரண்டாம் வருடம்,
அரசறிவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



உலகின் முதலாவது பெண் பிரதமரைக் கொண்ட நாடு என இலங்கையானது சர்வதேச அளவில் புகழ் பெற்றது. அவ்வாறே நிறைவேற்று அதிகாரம் கொண்ட பெண் ஜனாதிபதி ஒருவர் இலங்கையை ஆட்சி செய்தமையானது இலங்கை அரசியலில் பெண்கள் பெற்ற செல்வாக்குக்கு நல்ல உதாரணமாகும். ஆனால் தற்காலச் சூழலை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இலங்கை அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றமையினை அவதானிக்க முடிகிறது.

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவமானது ஜனநாயகத்தின் திறவுகோலாகும். அரசியல் பிரதிநிதித்துவமானது பெண்களின் அடிப்படை உரிமையாகும். மேலைத்தேய நாடுகளில் பெண்களது அரசியல் பங்குபற்றுதலானது சில சந்தர்ப்பங்களில் ஆண்களுக்குச் சமமானதாக அமையப் பெற்றுள்ளது. ஆனால் ஆசிய நாடுகளில் அரசியலில் பெண்களின் பங்குபற்றல் குறைவாகவே காணப்படுகின்றது.

தாம் சார்ந்த பிரதேச மக்களுக்குச் சிறப்பான சேவையை வழங்குதல், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இஸ்திரமான சமுதாயத்தை உருவாக்குவதற்கும் உதவி செய்யத் துணை நிற்றல், சமூக சேவைகளை வழங்குதல், அரச சீர்கேடுகளைக் குறைத்து இலஞ்ச ஊழலை குறைத்தல் போன்றன பெண்கள் அரசியலில் பிரதிநிதித்துவம் வகிப்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகளாகும்.

இலங்கையின் அரசியலமைப்பில் பெண்கள் வாக்காளர்களாகவும் அரசியல் பிரதிநிதிகளாகவும் இரட்டைப் பாத்திரத்தை வகிக்கின்றனர். வாக்கெடுப்பு தொடர்பாக நோக்கும்போது சர்வசன வாக்குரிமை இலங்கைக்கு வழங்கப்பட்ட டொனமூர் யாப்பு காலப்பகுதியில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக் கூடாது எனப் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருப்பினும் அவற்றை மறுத்து பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

இன்றைய இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களில் 5% ஆனோர் பெண்களாகவும் உள்ளூராட்சி அமைப்புகளில் 3% ஆனோர் பெண்களாகவும் காணப்படுகின்றனர். இத்தரவின்படி பெண்கள் அரசியலில் பங்கேற்காமல் இருப்பதற்கான காரணங்களாக சில சமூக கலாசாரக் காரணிகள் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கு சட்ட ரீதியான எந்தவித தடைகளும் இல்லாதிருந்த போதிலும் சில சமுதாய காரணிகள் இதற்குத் தடையாக அமைகின்றன.

- அரசியல் கட்சிகளின் ஆதரவு குறைவு
- பெண்களுக்கிடையில் காணப்படும் வன்முறைக்கான அச்சம்
- நிதி தட்டுப்பாடு
- பெண் வேட்பாளர்களது குடும்பங்களுக்குச் சமூகத்தால் பல வேளைகளில் அவப்பெயர் ஏற்படல்
- தைரியம் குறைவு
- அரசியலில் பிரஜை என்பதனை விட இல்லத்தரசி என்ற பார்வையே சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருத்தல்
- பெண்கள் தாமாகவே அரசியல் கட்சிகளின் தலைமையைப் பெற மறுத்தல்
- பெண்கள் அரசியலில் ஈடுபடும்போது தனிமைப்படுத்தப்படல்
- தந்தை வழி மரபு
- வீடு என்ற அமைப்பின் பலவீனம்
- அரசியலை நோக்கிய பெண்களின் மனோபாவம்
- வன்முறையான அரசியல் கலாசாரம்

மேற்கூறப்பட்ட காரணங்களால் இலங்கையில் பெண்களது அரசியல் பங்குபற்றல் குறைவாகக் காணப்படுகின்றது. இவற்றை நீக்கி பெண்களது அரசியல் பங்குபற்றலை அதிகரிக்கச் செய்ய வேண்டுமாயின் அதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1994ஆம் ஆண்டிலும் 1999ம் ஆண்டிலும் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் இரு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் 2000ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் 11 பெண்கள் பிரதிநிதித்துவம் செய்தனர்.

அதேவேளை 2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 116 பெண்கள் போட்டியிட்ட போதிலும் 7 பெண்கள் மட்டுமே பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்டனர். அதிலும் மகளிர் விவகார அமைச்சராக ஒரு பெண் மட்டும் அமைச்சரவைக்குத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் 2010 ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது அரசியல் கட்சிகளால் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை மிக குறைவாகவே காணப்பட்டது. எனினும் தற்போதைய இலங்கைப் பாராளுமன்றத்தில் 13 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

இலங்கையின் நிலைமை இவ்வாறிருக்க மேலைத்தேய நாடுகளில் பெண்கள் அதிகமாக அரசியலில் ஈடுபாடு கொண்டு விளங்குவதனை அறியக்கூடியதாக உள்ளது. உதாரணமாக பிரித்தானியாவின் "இரும்புப் பெண்மணி" என அழைக்கப்பட்ட மார்கிரட் தச்சர், ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்ட ஹிலாரி கிளிண்டன் போன்றோரை மேலைத்தேய உலகில் பெண்களது அரசியல் பங்குபற்றலுக்கான சிறந்த உதாரணமாகக் கொள்ள முடியும். ஆசிய நாடுகளில் பெண்களது அரசியல் பங்குபற்றலை நோக்கும்போது அண்மையில் மரணமடைந்த இந்தியாவின் தமிழ்நாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலமைச்சர் அமரர். செல்வி ஜெயலலிதா ஜெயராம் அவர்களைப் பெண்களது அரசியல் பங்குபற்றுதலுக்கான சிறந்த உதாரணமாகக் கொள்ள முடியும். அத்தோடு நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் அதிகளவிலான பெண்கள் அரசியலில் பங்கெடுப்பதையும் குறிப்பிடலாம்.

தென்னாசியாவில் பெண்களது அரசியல் பங்குபற்றலை அதிகரிக்கச் செய்வதற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் இலங்கையைப் பொறுத்தவரை பெண்கள் முன்வராமை பிரதான குறைபாடாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இலங்கையில் மந்திரிசபை உள்ளூராட்சி அமைப்புகளில் 33% பெண்களுக்கு ஒதுக்குவதற்கு இணங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நல்லாட்சியில் பெண்களின் பங்கேற்பானது அத்தியாவசியமான ஒரு விடயமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். தேசிய மட்டங்களில் பெண்களை வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு அரசியல் கட்சிகள் தயங்கி வரும் போக்கு களையப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் எதிர்கால இலங்கையில் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அதற்காக பல முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை இலங்கையில் அதிகரிக்க வேண்டுமாயின் முதலாவதாக இலங்கை மக்களது மனங்களில் உள்ள பால்நிலை வேறுபாடுகளைக் களைய வேண்டும். பொதுவாகவே அரசியல் என்றால் அது ஆண்களுக்குச் சொந்தமான ஒரு விடயம் என்றும் அடாவடி, வன்முறை போன்ற விடயங்கள் அரசியலில் காணப்படுவதனால் அது ஆண்களுக்கே முறையாக நடாத்தி செல்ல முடியும் போன்ற தப்பெண்ணங்கள் மக்கள் மத்தியில் காணப்படுகின்றன. ஆனால் உண்மையில் அரசியல் என்பது நாட்டு மக்களுக்கு உண்மையான சேவையை வழங்கக்கூடிய உன்னதமான ஒரு துறையாகும். எனவே பாடசாலைக் கல்வி தொடக்கம் உயர்கல்வி வரையில் பெண்களது தலைமைத்துவத்தை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்நடவடிக்கைகளை அரசாங்கம், அரசியல் கட்சிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என எல்லா மட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டும். இதற்கான முன்மொழிவுகளாக பின்வருவனவற்றை முன்வைக்கலாம்.

- எல்லா மட்ட அரசியல் அமைப்புகளிலும் பெண் விகிதாசாரத்தை உள்வாங்க நடவடிக்கை எடுத்தல்
- பெண்களுக்கான கோட்டாவை பாராளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளிலும் ஒதுக்குதல்
- அரசியலமைப்பு உருவாக்க செயற்பாடுகளில் பெண்களது பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
- தலைமைத்துவ பயிற்சிகள் வழங்குதல்
- ஊடகத்தின் துணையுடன் சிறந்த வலையமைப்புகளை உருவாக்குதல்
- பால்நிலை தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் இவை தொடர்பாகப் பாரியதொரு பங்களிப்பை ஆற்றக் கூடியனவாகக் காணப்படுகின்றன. அதாவது சமூகத்தில் பால்நிலை சம்மந்தமான விளக்கத்தினை அதிகரிக்க செயலமர்வுகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்தல், திறன் விருத்திப் பயிற்சிகளைப் பெண்களுக்கு வழங்குதல் என்பனவற்றைக் குறிப்பிட முடியும்.

இவ்வாறே அரசியல் கட்சிகளும் பெண்களைத் தேர்தல்களில் வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு முன்வர வேண்டும். தமது கட்சிகளில் வெளித்தெரிகின்ற முக்கியமான பதவிகளுக்குப் பெண்களை நியமித்தல் வேண்டும் அவ்வாறு நியமிக்கும்போது வெறுமனே பொம்மைகளைப்போல வைத்திருக்காது அவர்களுக்கான சம சந்தர்ப்பம் மற்றும் சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட அதற்கு பெண்களது ஒத்துழைப்பானது மிகமிக அவசியமாகும். அதிலும் குறிப்பாகப் பெண்களது குடும்பங்கள் மற்றும் அவர்கள் வாழ்கின்ற சமூகம் இதற்கான ஒத்துழைப்புகளைப் பெண்களுக்கு வழங்கத் தயாராக இருக்கும்போதே இலங்கை அரசியலில் பெண்களது பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முடியும்.

பெண்களது அரசியல் பிரவேசம் முற்றுமுழுதாக இலங்கையில் இல்லை எனக் கூறுவதற்கில்லை. ஆனால் அது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே, அரசியலில் பெண்களையும் அதிகளவில் உள்வாங்கி ஆட்சியை கொண்டு நடாத்தும்போது ஜனநாயகத்தின் அம்சங்கள் நன்கு பேணப்பட முடியும் என்பதே இதன் கருத்தாகும்.


உசாத்துணைகள்

- தில்ருக்ஷி பொன்கோ , மொ.பெ நடேசன் ,**சமாதான முயற்சிகளில் பால்நிலை பிரதிநிதித்துவம்** : பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
- www.un.org>daw>egm>does **women's political participation: issues and challenges**
- www.bbc.com>tamil> **இலங்கை அரசியலில் பெண்கள்.**


**அறிவை விரிவுசெய்..! அகண்டமாக்கு.!**
**விசாலப்பார்வையால் விழுந்து மக்களை**
**அணைந்துகொள்! உன்னைச் சங்கமமாக்கு**
**மானிடசமுத்திரம் நானென்று கூவு**

**—பாரதிதாசன்—**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்கதை மரபும் சிலப்பதிகார இலக்கிய உருவாக்கமும்
## (சிலப்பதிகாரம் தொடர்பான சில குறிப்புகள்)

சி. குருபரநாத்,
மூன்றாம் வருடம்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



*"நெஞ்சையள்ளும் சிலப்பதிகார மென்றோர்*
*மணியாரம் படைத்த தமிழ்நாடு"*

முன்னோர்களின் வாழ்க்கைப் பதிவேடுகளே வரலாறு. அம்மக்களைக் கருவூலமாகக் கொண்டு அவர்களது பழக்க வழக்கங்கள், பண்பாட்டுக் கோலங்கள், அவற்றால் முகிழ்ந்தெழுந்த நாகரிகங்கள் என்பவற்றை மனிதர்களுக்கு நன்மை பயக்கும் வண்ணம் எடுத்தியம்புவதே வரலாற்றின் எண்ணக்கரு எனலாம். இன்றைய தலைமுறையினருக்காக முன்னோர்களால் விட்டுச்செல்லப்பட்ட எல்லாமே மரபு எனப்படும். இத்தகைய மரபுசார் விடயங்களுள் பழங்கதை மரபுகளும் ஒன்றாகும். பொதுவாகப் பழங்கதையென்றால் தொன்மம் மிக்க கதைக்கூறுகள் வாய்மொழி மரபாகவோ அல்லது இலக்கியங்கள் வாயிலாகவோ பயின்று வருவதாகும்.

*"தொன்மை தானே உரையொடு புணர்ந்த*
*பழமை மேற்றே"*

*(தொல்காப்பியம்)*

எனத் தொன்மத்திற்கு வரைவிலக்கணம் கூறுகின்றது தொல்காப்பியம். இத்தகைய பழங்கதை மரபுகள் சமுதாயத்தேவை, பண்பாட்டுப் பாதுகாப்புக் கருதி பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை பயின்று வந்திருப்பதனை நாம் அவதானிக்கலாம். இதற்கு உதாரணமாக நவயுக பாரதியின் பாஞ்சாலி சபதத்தையும், புதுமைப்பித்தனின் சாபவிமோசனத்தையும் குறிப்பிடலாம்.

நிலவுடைமைச் சமுதாயமானது செழிப்புற்றிருக்கும் காலப்பகுதியில் தோற்றம் பெற்ற இலக்கிய வடிவமாகக் காவியம் எனும் இலக்கிய வடிவம் விளங்குகின்றது. பேரரசின் எழுச்சியின் போது அல்லது வீழ்ச்சியின் போது காவியங்கள் தோற்றம் பெற்றிருப்பதனை இலக்கிய வரலாற்று வழி நாம் கண்டு கொள்ளலாம். வடமொழி இலக்கண நூலான தண்டியலங்காரம் *"பெருங்காப்பிய நிலை பேசுங்காலை......."* எனும் சூத்திரத்தின் வழி காவிய இலக்கிய வடிவம் அமைவுபெற வேண்டிய விதிகளைப் பற்றிக்குறிப்பிடுகின்றது. மேலும் இன்னோர் சூத்திரத்திலே

*"அறமுதனான்கினும் குறைபாடுடையது காப்பியம் என்று கொள்ளப்படும்"* எனக் குறிப்பிடுகின்றது. இதனைச் சிறுகாப்பியம் எனச்சுட்டலாம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வகையிலே தண்டியலங்காரமானது காவியம் எனும் இலக்கிய வடிவம் அமைய வேண்டிய வரையறையினைத் தெளிவாகவே முன்வைத்திருப்பதனை நாம் அவதானிக்கலாம். இவ்வகையிலே தமிழின் முதல்காப்பியம், முத்தமிழ்க் காப்பியம் எனப் போற்றப்படும் சிலப்பிகாரம் தண்டியலங்காரம் சுட்டும் காவிய மரபைக் கொண்டுள்ளதா? என்பது கேள்விக்குறிய விடயமாகும். ஆனால் இக்கட்டுரையானது இதனை ஆராய முற்படவில்லை. கி.பி 8ஆம் நூற்றாண்டுதனில் தோற்றம் பெற்ற சிலப்பதிகாரமானது தமிழின் முதல்காப்பியமாகவும் முத்தமிழ் காப்பியமாகவும் போற்றப்படுகின்றது[1]. 'கால்டுவெல்' ஐயரின் திராவிட மொழிகளில் ஒப்பிலக்கண ஆய்விற்குப்பின் தென்னிந்திய வரலாறு பற்றிய இடைவெளியை நிறைவு செய்யும் முகமாக 1892ஆம் ஆண்டு சிலப்பதிகார முதல் பதிப்பானது வெளிவந்தது. அது வெளிவந்ததனைத் தொடர்ந்து அது பன்முக வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டது. அதன் வழி தென்னிந்திய வரலாறானது புதுக்கட்டமைப்பினைக் கண்டது. சிலப்பதிகாரப் பனுவலும் அதன் வழி நடந்த திராவிட இயக்க அரசியலும் சுவாரஸ்யம் மிக்கது.

சிலப்பதிகாரமானது நிலவுடைமைச் சமுதாயமும் வணிக சமுதாயமும் மேலோங்கிய காலப்பகுதியில் தோற்றம் பெற்றிருப்பதனை சிலப்பதிகார வழி நாம் கண்டுகொள்ளலாம். சிலப்பதிகாரம் வணிக மக்கள் சிறப்படைந்த காலத்துக் காப்பியம் ஆகலாம் என்பர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்.[2] சிலப்பதிகாரப் பதிப்பினைத் தொடர்ந்து சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வுகளும் தொடங்கி விட்டன. சிலப்பதிகாரக் கதையானது சிலப்பதிகார காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் நிலவிய பழங்கதை மரபுகளைக் கொண்டு கட்டமைக்கப் பட்டுள்ளது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. இது குறித்த சில கருத்துக்களை முன்வைப்பதாக இக் கட்டுரையானது அமைகின்றது.

உலக இலக்கிய வரலாற்றினைப் பொறுத்தமட்டில் எல்லாவற்றிற்கும் முதன்மை மரபாக வாய்மொழி இலக்கிய மரபானது விளங்குகின்றது. இதிலிருந்தே இன்றைய இலக்கிய மரபானது தோற்றம்பெற்றுள்ளது. ஓர் இலக்கிய படைப்பானாலும்சரி கலையானாலும்சரி அது சூனியப்பிரதேசத்திலே தன்னிச்சையாகத் தோற்றம் பெற முடியாது. அவை குறிப்பிட்டதோர் சமூகச்சூழலிலேயே தோற்றம் பெற முடியும். இவ்வாறு தோற்றம் பெறுகின்ற படைப்பானது தனது சமூகத்தின் பிரதிபலிப்பாகத் தோற்றம் பெறும். சமூகத்தின் பல கூறுகளையும் அப்படைப்பானது கொண்டிருக்கும். அக்கூறுகளில் ஒன்றே பழங்கதை மரபாகும். சிலப்பதிகார காப்பியமும் இத்தகையதோர் பழங்கதை மரபினை வைத்துக் கட்டமைக்கப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். பத்தினித் தெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் கூறும் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் தம் காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் நிகழ்ந்த பழங்கதை மரபினைக்கொண்டு சிலப்பதிகாரக் கதையினைக் கட்டமைத்துள்ளார்.

சிலப்பதிகாரக் கதை மரபினையொத்த கதையம்சங்களை நாம் சங்க இலக்கியங்களிலே காணலாம். சங்ககாலமானது இனக்குழுச் சமுதாயம் அழிவடைந்து (தேய்ந்து) நிலவுடைமைச் சமுதாயம் தோற்றம் பெறுகின்ற மாறுபட்ட நிலைக்களக் காலமாக விளங்குகின்றது. இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களிலே சிலப்பதிகார மையக் கதாப்பாத்திரமான கண்ணகி பற்றிய

[1] எஸ் . வையாபுரிப்பிள்ளை, "தமிழ்ச்சுடர் மணிகள்".
[2] தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், "சமணத் தமிழ் இலக்கிய வரலாறு", பக்69.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையம்சங்களை நாம் அவதானிக்கலாம். சிலப்பதிகார காவியத்தின் கதாநாயகியான கண்ணகி வரலாற்றில் இரண்டு முக்கியமான செய்திகள் உள்ளன. ஒன்று அவளைத் துறந்து கோவலன் மாதவியோடு இன்பந்துய்த்து வாழ்ந்தமை. இச்செய்தி புறநானூற்றில் வரும் கண்ணகியென்பவளின் சரித்திரத்தோடு ஒற்றுமையுடையது. வையாவிக் கோப்பெரும்பேகன் என்ற வள்ளல் ஒருவன் தனது மனைவியாகிய கண்ணகியென்பாளைத் துறந்து வேறொருத்தியுடன் வாழ்ந்தனன் என்பது

*"கிளையை மன்னங் கேள்வெய் யோற்கென*
*யாம்நற் றொழுதனம் வினவ, காந்தள்*
*முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா*
*யாம்அவன் கிளைஞரே மல்லேம் கேளினி*
*எம்போல் ஒருத்தி நலனயந் தென்றும்*
*வரூஉம் என்ப வயங்குபுகழ் பேகன்*
*ஒல்லென ஒலிக்கும் தேரொடு*
*முல்லை வேலி நல்லூ ரானே"*

*(புறம் : 144)*

என்ற செய்யுள் பகுதியால் அறியலாம். பேகன் வரலாற்றிலே அவனால் துறக்கப்பட்டவளுக்குப் பெயர் கண்ணகி என்பதே இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது.[3] இச்செய்யுளின் பொருளைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம். பேக! மாலைக்காலம் வரச் சிறிய யாழில் இரங்கற் பண்ணாகிய செவ்வழி எனும் பண்ணை இசைத்து, மழையை ஏற்றுக்கொண்ட நின் காட்டைப் பாடினோம். அது கேட்டு நீலநறு நெய்தல் போன்று பொலிந்த மையுண்ட கண்கள் கலங்கிச் சொரிந்த கண்ணீர்த் துளிகள் பூண் அணிந்த மார்பை நனைக்க ஒருத்தி வருந்தி அழுதனள். யாம் அவளை வணங்கி இளையோய்! எம்முடைய நட்பை விரும்புவோனுக்கு நீ உரிமை உடையயோ? எனக்கேட்டனம். அவள் காந்தள் மொட்டுப் போலும் விரலால் தன் கண்ணீரைத் துடைத்து யாம் அவனுடைய கிளைஞரேம் அல்லேம் நீ இப்பொழுது கேட்பாயாக எம்மை ஒப்பாள் ஒருத்தியின் அழகைக் காதலித்து விளங்கிய புகழுடைய பேகன் ஒல்லென முழங்கும் தேருடன் முல்லை வேலி பொருந்திய நல்லூருக்கு எந்த நாளும் சென்று வருவன் என்று பலரும் சொல்லுவர் எனக் கூறினாள். அத்தன்மையாளுக்கு நீ அருள் செய்யாதிருத்தல் கொடிது ஆகும்.

பேகன் அருள் செய்யாவழி கண்ணகி உயிர் இழத்தலும் பேகனுக்குப் பழி உண்டாதலும் ஏற்பட்டுக் கொடுமையாய் முடியும் என்பதைப் புலவர் தன் நட்பின் நெருக்கத்தால் அரசனுக்கு இடித்துரைத்து கண்ணகியிடம் செல்ல அறிவுறுத்துகின்றார்.[4] மேலும், பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து இருந்த நிலையில் பெண்ணின் வருத்தத்தைப் புலப்படுத்துமாறு பாடியது.[5] எனவும் பேகன் அருளாவழிக் கண்ணகியார் உயிரிழத்தலும் பேகனுக்குப் பழியுண்டாதலும் கொடுமையாய் முடியும்[6] எனவும் உரையாசிரியர்கள் மேற்குறித்த புறநானூற்றுப் பாடலுக்குப் பொருள் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

---

[3] கா. அய்யப்பன், "சிலப்பதிகாரம் பன்முக வாசிப்பு", பக்39.
[4] ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, "புறநானூறு".
[5] வ.த. இராம சுப்பிரமணியம், "புறநானூறு மூலமும் தெளிவுரையும்".
[6] அ.மா. பரிமளம், கு.வெ. பாலசுப்பிரமணியன்(தொகுப்பு) "புறநானூறு மூலமும் உரையும்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலப்பாடலிலே கண்ணகி என்ற பெயர் இடம்பெறவில்லை ஆனால் உரையாசிரியர்கள் மேற் குறித்த பாடலிலே பேகனால் துறக்கப்பட்டவளது பெயர் கண்ணகியெனக் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிறிதொரு செய்தி தலைவியொருத்தி தனது காதலனைப் பிரிந்த துயராற்ற முடியாது தனது ஒரு முலையைத் திருகியெறிந்தாள் என்பதாகும். இதுவும் நற்றிணையில் காணப்படும் ஒருசெய்தியோடு ஒத்துள்ளது.

*"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்*
*குருகார் களனியின் இதனத் தாங்கண்*
*ஏதிலாலன் கவலை கவற்ற*
*ஒருமுலை யறுத்த திருமா வுண்ணி"*

*(நற் : 216)*

தன்மீது கொண்ட அன்பைத் துறந்து விலகிச்சென்று அயலான் போலாகிவிட்ட காதலனைப்பற்றி கவலைக்கொண்டு தனது ஒரு முலையை அறுத்தெறிந்த ஒருபெண்ணின் சரித்திரமே இப்பாடலில் வெளிப்படுகிறது. நற்றிணையடிகளை ஞாபகத்திற் கொண்டு

*"பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்*
*ஒருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினி"*

என்ற பதிகத்தின் அடிகள் தோன்றின என்பதும் எளிதில் ஊகிக்கக் கூடியதே என எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.[7]

கண்ணகி மதுரையை எரித்துவிட்டு இறுதியில் மலைநாடு சென்றாள் என்றக் கதையைப் போலவே நற்றினைச் செய்யுள் வரலாறும் அம்மலைநாட்டு தொடர்புடையதாக விளங்குவதை 'உண்ணி' என்ற பெயரால் அறியலாம். இன்றும் இந்திய மலை நாட்டில் வழங்கும் மக்கட் பெயர்களுள் இவ்வுண்ணி யென்பது ஒன்றாகும். வேங்கைமர நிழலின் கீழே கண்ணகி வந்து நின்றாளென்பது

*"பூத்த வேங்கைப் பொங்கக் கீழோர்*
*தீத்தொழி லாட்டியேன் யானென் றேங்கி"*

*(கட்டுரைக் காதை. 192-2)*

எனவும்,

*"நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்*
*தேயவங் கொள்ளுமின் சிறுகுடியீரே...."*
*"பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்*
*ஒருமுலை யிழந்த நங்கைக்குப்*
*பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே"*

*(குன்றக்குரவை,14-22)*

எனவும் வருவனவற்றாலும் உணரலாகும் எனவும் இவர் பதிவு செய்துள்ளார். சங்க இலக்கியங்களிலே இனக்குழு சமுதாய எச்சங்களைப் பரவலாக நாம் காணலாம். அவ்வகையிலே சங்க இனக்குழச் சமுதாயத்தில் மறவர் என்றக் குடி பாலை நிலத்திலே கள்ளி மர நிழலில் கொற்றவை என்ற வீரத்தெய்வ வழிபாட்டினை மேற்கொண்டு இருந்தனர் என்ற செய்தியை நாம் சங்க இலக்கிய

[7] கா. அய்யப்பன், "சிலப்பதிகாரம் பன்முக வாசிப்பு", பக்40-41.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி கண்டுகொள்ளலாம். இக் கொற்றவையே பிற்கால கண்ணகியாக மாற்றுருவம் கண்டாள் என சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் யாப்பருங்கல விருத்தியிலும் பேராசிரியர் உரையிலும் வெட்டுண்டு கிடந்த தனது காதலனுடைய உடலைக் கண்டு தலைவி யொருத்தி அழுதுபுலம்பிய செய்தியொன்றும் காணப்படுகின்றது. இச் செய்தியானது வாய்மொழி மரபினூடாகக் கடத்தப்பட்டு வந்திருக்கலாம்.

சிலப்பதிகார நிகழ்வுகளுள் கண்ணகி அரண்மனைக் காவலனிடம் வாயில் நேரும் நிகழ்வானது தனித்துவமானது. ஔவையாரால் பாடப்பட்ட கீழ்வரும் பாடலானது சிலப்பதிகாரத்தின் இலக்கிய அமைப்பினை ஞாபகப்படுத்துவதாக உள்ளது.

*"வாயிலோயே வாயிலோயே*
*வள்ளியோர் செவிமுதல் வயங்கு மொழி வித்திதாம்*
*உள்ளியது முடிக்கும் உரனுடைய உள்ளத்து*
*வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்*
*பரிசிலர்க்கு அடையா வாயிலோயே"*

(ஔவையார், புறநானூறு)

மேற்குறித்த ஔவையாரின் நெடுமானஞ்சி குறித்த பாடலில் வரும் *"வாயிலோயே வாயிலோயே"* எனும் வரிகளே நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது. மேற் குறித்த வரியின் உணர்ச்சி மிகு சொல்லாடலின் மேலெல்லையினை சிலப்பதிகாரத்திலே கண்ணகியின் வாயில் நேர்தல் பகுதியில் காணலாம். மேற்குறித்த ஔவையாரின் பாடலையும் சிலப்பதிகாரத்திலே இடம் பெறும் வாயில் நேர்தல் பகுதியையும் இணைத்துப் பார்க்கும் பொழுது அதன் வீரியத்தை நாம் காணலாம்.

கதையில் இருந்து கதைப்பாடலும் கதைப்பாடலில் இருந்து காவியமும் தோற்றம் பெறுவதாகக் கூறப்படுகின்றது. இவ்வகையிலே சங்க காலத்திலே நிலவிய கண்ணகி பற்றிய இலக்கியச் செய்திகளையும், வாய் மொழித்தகவல்களையும் சிலப்பதிகாரக் கண்ணகியிலே நாம் காணலாம். இன்றும் கூட சிலப்பதிகாரக் கண்ணகி தொடர்பான மாறுபட்ட கதைகளும் கதைப்பாடல்களும் வழிபாட்டு முறைமைகளும் இந்தியாவிலும் இலங்கையிலும் நிலவி வருவதனை நாம் அவதானிக்கலாம். ஈழத்திலே சிலப்பதிகாரக் கதையானது கண்ணகி வழக்குரை, சிலம்பு கூறல், கோவலனார் கதை என மூன்று நிலைகளில் காணப்படுகின்றது.

இவ்வகையிலே நோக்கியவிடத்து சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் தம் காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் நிலவிய இலக்கியச் செய்திகளையும் வாய்மொழித் தகவல்களையும் கையாண்டு சிலப்பதிகாரக் கதையைக் கட்டமைத்துள்ளார் எனக் குறிப்பிடலாம்.

## உசாத்துணைகள்


- அய்யப்பன்,கா. (2009) **சிலப்பதிகாரம் பன்முக வாசிப்பு**, சென்னை, மாற்று வெளியீடு.
- அருணாசலம்,ப. (1985) **சிலப்பதிகாரச் சிந்தனை**, சென்னை, பாரி புத்தகப்பண்ணை.
- கைலாசபதி,க. (1999) **பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்**, சென்னை, குமரன் புத்தக இல்லம்.
- சரவணன்,ப. (2008) **சிலப்பதிகாரம் மூலமும் செவ்வுரையும்**, சென்னை, சந்தியா பதிப்பகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இராம சுப்பிரமணியம்,வ,த. (2000) **புறநானூறு மூலமும் தெளிவுரையும்**, சென்னை, திருமகள் நிலையம்.
- பரிமளம்,அ,மா, பாலசுப்பிர மணியம்,கு,வெ. (2004),(பதிப்பு) **புறநானூறு மூலமும் உரையும்**, சென்னை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்.
- துரைசாமிப்பிள்ளை ஒளவை,சு. (1977) **புறநானூறு**, சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
- சாமி சிதம்பரனார், (1988) **சிலப்பதிகாரத் தமிழகம்**, சென்னை, சிவகாமி சாமிசிதம்பரனார் இலக்கிய நிலையம்.
- சுப்பிரமணியம்,வ,த. (1998) **தண்டியலங்காரம்**, சென்னை, முல்லை நிலையம்.
- ஜெயமோகன். (2010) **சங்கச்சித்திரங்கள்**, சென்னை, சபரி பிராசஸ்.


**உலகம் இன்று வறுமையுற்றுள்ளது**
**அன்பிலே வறிய**
**வன்பாலை உலகு செய்தோம்**
**அன்பகத்தீர்**
**தயவு செய்து பிடி அன்பு செய்வீரா ?**

**–சு. வில்வரத்தினம்–**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகநோய் மற்றும் இரத்தச்சுத்திகரிப்பு முறை

யோ.கிருத்திகன்,
விடுகை வருடம்,
இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.




சிறுநீரகம் என்பது எமது உடலின் முக்கிய சில செயற்பாடுகளை ஆற்றுகின்ற ஒரு உறுப்பாகும். எமது உடலின் கழிவுகளை அகற்றுதல், உடலின் இரத்த அழுத்தத்தைப் பேணுதல், உடலின் சோடியம் மற்றும் பொட்டாசியத்தின் அளவைப்பேணுதல், அமோனியா போன்ற நச்சுக்கழிவுகளை அகற்றுதல் போன்ற பல முக்கியமான தொழிற்பாடுகளைப் புரிகின்றது. ஒரு மனிதனுடைய சிறுநீரகத்தின் இந்த சாதாரண செயற்பாடுகள் நீண்டகால அளவில் சிறுது சிறிதாக குறைவடைந்து செல்லுகின்ற நிலையை "நீண்டகால சிறு நீரகக்கோளாறு" என்று அழைப்பார்கள் (Chronic kidney disease - CKD). அதாவது, சிறு நீரகம் பல இலட்சக்கணக்கான சிறுநீரகத்திகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.




சிறுநீரக நோயினை சிறுநீரகத்தியின் வடிகட்டு வீதத்தின் அடிப்படையில் ஐந்து வகையாகப் பிரிப்பார்கள். இதன் இறுதி நிலை அதாவது ஐந்தாவது நிலையை, சிறுநீரகத்தின் முற்றுமுழுதான செயலிழப்பு (endstage kidney failure) என்று அழைப்பார்கள். இந்த நிலைக்குச் சென்ற நோயாளிகளுக்கே இரத்த சுத்திகரிப்பு செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது.

சிறு நீரகக்கோளாறின் ஆரம்பக் கட்டங்களில் நோய்க்கான அறிகுறிகளை இனங்காண்பது கடினம். ஆனால் இறுதி நிலையில் பின்வரும் அறிகுறிகள் தென்படும்.



- உடல் நிறையில் குறைவு ஏற்படும்
- உணவில் விருப்பமின்மை
- கை, கால்களில் வீக்கம்
- களைப்பு, இளைப்பு, மூச்சுத்திணறல்
- சிறுநீரில் இரத்தம்
- நித்திரைக்குழப்பம்.

### இதற்கான சிகிச்சை முறைகள்

1).வாழ்க்கைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தல் (தினசரி உடற்பயிற்சி செய்தல், மது மற்றும் புகைத்தலைக் கட்டுப்படுத்தல், நிறையுணவை உண்ணுதல், நிறையை கட்டுக்குள் வைத்திருத்தல்).

2).மருந்துகள் மூலம் உயர்குருதியமுக்கம், கொலஸ்ரோல் மற்றும் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


3).இரத்தச்சுத்திகரிப்பு முறையைப்பயன்படுத்தல் (dialysis).
4).சிறுநீரகமாற்று சத்திரசிகிச்சை (kidney transplantation)

**இரத்தச்சுத்திகரிப்பு முறை (Hemodialysis)**


இம்முறையானது செயற்கைமுறையில் இரத்தத்தை சுத்திகரிக்கும் ஒரு முறையாகும். சிறுநீரகம் செயலிழப்பதன் காரணமாக சிறு நீரகச்செயற்பாடு பாதிப்படைந்த நோயாளர்களுக்கு இம்முறைமூலம் இரத்தம் சுத்திகரிக்கப்படுகின்றது. இச்செயற்பாட்டின்போது இரத்தத்தை ஒரு இயந்திரத்தினுள் (dialyser)




செலுத்துவார்கள். இவ் இயந்திரம் செயற்கைச் சிறுநீரகம் போன்று தொழிற்பட்டு இரத்தத்தில் இருக்கும் யூரியா, நைட்ரஜன் போன்ற கழிவுகளை அகற்றுவதுடன் இரத்தத்தில் இருக்கும் சோடியம், பொற்றாசியம் போன்றனவற்றின் சமநிலையையும் இது சரிசெய்யும். இந்த இயந்திரத்தை உடலினுள் இணைப்பதற்காக நாடியையும் நாளத்தையும் இணைத்து 'fistula/graft' ஒன்றை உருவாக்குவார்கள் இதனூடகவே இயந்திரத்திற்கு இரத்தம் பரிமாற்றப்படும். இச் செயன்முறையின்போது நோயாளிக்கு எந்த வலியும் ஏற்படாது. சாதாரணமாக இச் செயன்முறை 3 அல்லது 4 மணித்தியாலங்கள் வரை நீடிப்பதால் பொதுவாக நோயாளிகள் நித்திரைக்குச் சென்றுவிடுவார்கள். ஆனால் சில நோயாளிகளுக்கு குருதியமுக்கம் குறையுமாயின் தசைப்பிடிப்பு, வாந்தி, தலைவலி போன்ற பக்கவிளைவுகள் ஏற்படும். இவ் இரத்தச்சுத்திகரிப்புச் செயன்முறைக்கு எடுக்கும் நேர அவகாசமானது நோயாளியின் சிறுநீரகத்தின் தொழிற்பாட்டின் அளவு, நிறை என்பவற்றிற்கேற்ப வேறுபடும்.



இரத்தச்சுத்திகரிப்புக்கு அடுத்தபடியாக சிறுநீரக நோயாளர்களுக்கு மேற்கொள்ளப்படும் சுத்திகரிப்புச்செயன்முறையை 'Peritoneal dialysis' என்று அழைப்பார்கள். இச்செயன்முறையின்போது ஒரு இறப்பர் குழாய் வயிற்றுப்பகுதிக்குள் (peritoneal cavity) அனுப்பப்பட்டு சுத்திகரிப்பு மேற்கொள்ளப்பட்டும். இது இரத்தச் சுத்திகரிப்புச்செயன்முறையை விட இலகுவானது, செலவு குறைந்தது. இச் சுத்திகரிப்புச் செயன்முறைகளானது சிறுநீரக செயலிழத்தலுக்கான தற்காலிகத் தீர்வையே தரும். இறுதி நிலை சிறுநீரகக் கோளாறைக்கொண்டிருக்கும் நோயாளிகள் வாழ் நாள் முழுவதும் இச்சுத்திகரிப்பு செயன்முறையில் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்படும். ஆனால் அந் நோயாளி சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையை மேற்கொள்ளுமிடத்து சுத்திகரிப்பிற்கான தேவையைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.



சிறுநீரகச் செயலிழத்தல் நோய்க்கு உள்ளான நோயாளிகள் தமது உணவு தொடர்பில் முக்கியக் கவனம் எடுக்கவேண்டும். சோடியம், பொட்டாசியம் அதிகம் உள்ள உணவுகளை குறைக்கவேண்டும் முக்கியமாக பழங்கள் (அப்பிள், ஒரேஞ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைப்பழம்). உணவில் உப்புச்சேர்த்தலை முடிந்த அளவிற்கு குறைக்கவேண்டும். பால் உணவுப்பொருட்கள் (சீஸ், யோகட்) உண்பதை குறைக்கவேண்டும்.


இலங்கையைப் பொறுத்தவரையில் 'Chronic kidney disease of unknown aetiology (CKDu)' என்ற சிறு நீரக நோய் காணப்படுகின்றது. வழமையாக நீண்டகால சிறுநீரக செயலிழத்தலுக்கு(CKD) உயர்குருதியமுக்கம் மற்றும் நீரிழிவு நோய் என்பன முக்கிய காரணிகளாக இருந்தாலும் (CKDu) இவ் வகை சிறுநீரக செயலிழத்தலுக்கு சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அனுராதபுரம், பொலனறுவை மற்றும் பதுளை மாவட்டத்தைச்சேர்ந்தவர்களாவர். பொதுவாக இரத்தச்சுத்திகரிப்பு சிகிச்சைபெறும் நோயாளிகளின் ஆயுட்காலம் 5 - 10 வருடங்கள் வரை நீடிக்கப்படுகின்றது. இருப்பினும் சிலர் 15 வருடங்கள் வரை தொடர்ச்சியான இரத்தச்சுத்திகரிப்புமுறை மூலம் உயிர்வாழ்கின்றனர். பொருத்தமான உணவுப்பழக்கம், உடற்பயிற்சி மற்றும் இந் நோய் நிலைக்கு வழிசெய்யும் உயர்குருதியமுக்கம், நீரிழிவு நோய் போன்றவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல், நடத்தையியலில் மாற்றத்தைக் கொண்டுவருதல் ஆகியவற்றின் ஒருமித்த பங்களிப்பின் மூலம் நோயாளி தன் வாழ்க்கைக்காலத்தை அதிகரித்துக்கொள்ளமுடியும்.


**பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்**
**இறவாத புகழ் உடைய புது நூல்கள்**
**தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்**
**-மகாகவி. சுப்ரமணிய பாரதியார்-**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரைகலை





ரா.டிலீசன்,
இரண்டாம் வருடம்,
முகாமைத்துவபீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் சான்றோர் விருது

## க. ப. சிவம்



மலையகத்தின் முன்னோடிப் பத்திரிகைகளில் ஒன்றான 'மலைமுரசு' ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளருமான கலாபூஷணம் க. ப. சிவம் அவர்கள் மத்திய மாகாணத்தில் கண்டி, மீகனுவ அம்பிடிய பகுதியில் கருப்பண்ணபிள்ளை பச்சையம்மாள் தம்பதியினருக்கு 1933.05.13ம் திகதி மகனாகப் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை அம்பிடிய செமினறி றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை எஸ்.எஸ்.சி.அம்பிடிய கல்லூரி, எச்.எஸ்.சி.கண்டி தூய சில்வஸ்டர் கல்லூரியிலும் பயின்றவராவார்.

1958இல் முத்தமிழ் முழக்கம் மாத சஞ்சிகை மூலமாக எழுத்துத் துறையிலும் சமூகப்பணியிலும் பிரவேசித்தார். கடந்த 51 வருடங்களாக 1965ம் ஆண்டு முதல் இன்றுவரை வீரகேசரிப் பத்திரிகையின் கண்டி நிருபராக சேவைசெய்து வருகின்றார். தனது செய்திச் சேவையில் மலையக இந்திய வம்சாவழி மக்களின் பல்துறை நல மேம்பாட்டிற்காக விசேடமாக கவனம் செலுத்துபவர். சாதி மத உணர்வுகளுக்கு இடமளிக்காமல் மனிதமே மானுட முயற்சிக்கு ஒரே வழி என்ற கொள்கையைத் தனது ஊடகக் களத்தில் ஓயாமல் முன்னெடுப்பவர்.

1958 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகத்தின் கண்டி செயலாளராகத் தமது பொதுப்பணியை ஆரம்பித்தார். அக்கால கட்டத்தில் வெளியான உரிமைக்குரல், நாம், சமூக முன்னேற்றம் அண்ணா, பகுத்தறிவு போன்ற பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதியுள்ளார். 1960 களில் மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு அதில் முக்கிய பங்கு வகித்ததோடு மலையகக் கலை, இலக்கியப் பேரவையின் ஸ்தாபக உறுப்பினருமாவார். மலையக இளைஞர்கள் மத்தியில் மலையக உணர்வுகளையும் அவர்களது தன்மானம், சுயமரியாதை, கல்வி, கலாசாரம் மற்றும் பல்துறை எழுச்சிக்கும் விழிப்புணர்ச்சிக்கும் மேடைப் பேச்சுக்களின் மூலமும், கருத்தரங்குகளின் மூலமும் மலையக மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். நாடகங்கள் பலவற்றைக் கண்டியில் மேடையேற்றியவர். இவரது பல்துறைப் பணிகளைப் பாராட்டி பல்வேறு அமைப்புகள், இலங்கை அரசாங்கக் கலாசார மற்றும் இந்துக் கலாசார அமைச்சுக்கள், மத்திய மாகாண சபை அமைச்சுக்கள், ஆளுனர் மற்றும் முதலமைச்சு போன்றன பல விருதுகளையும் பட்டங்களையும் சான்றிதழ்களையும் வழங்கின.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், மலையகக் கலை இலக்கிய மன்றம், முத்தமிழ் மன்றம், சிவகலா மன்றம், மீகனுவ மக்கள் முன்னேற்றக் கழகம், கண்டி சமாதான இயக்கம், மலையக மக்கள் இலக்கியப் பேரவை, மத்திய மாகாண இந்துமா மன்றம், கண்டி சுதந்திர ஊடகவியலாளர் சங்கம், லக்கி கலா மன்றம், இந்து பௌத்த நல்லிணக்க முன்னணி உட்பட மேலும் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து மலையக கல்வி, கலை, கலாசார, சமூக, சமயப் பணிகளில் சேவையாற்றியவராவார். இவர் இன ஐக்கியத்திற்கும், தமிழ் சிங்கள நல்லிணக்கப் புரிந்துணர்வு, சகவாழ்வு, நலமேம்பாட்டிற்காக பணிபுரிந்து வருபவர். இலக்கிய உலகில் தமிழ்மணி, சமூகச்சுடர், இரத்தின தீபம், ஊடகச்செம்மல் போன்ற பட்டங்களை பெற்றதோடு 2006ம் ஆண்டு கலாசார அமைச்சு 'கலாபூசணம்' பட்டத்தையும் வழங்கியது. 1984 ஆம் ஆண்டு கண்டி ஐக்கிய கலா மன்றமும் 1985 ஆம் ஆண்டு கலாசார அமைச்சும் 'பத்திரிகை முன்னோடி' பட்டம் வழங்கி கௌரவித்தது. இவர் இந்து கலாசார அமைச்சின் ஊடே முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமாகிய அமரர் டி.பி. விஜயதுங்க அவர்களினால் 'தமிழ் மணி' விருது பெற்றது குறிப்பிடத்தக்கது.

"இறுதி மூச்சுவரை ஊடகவியலாளராகவே திகழ வேண்டும் என்ற அவாவும் நாட்டின் அனைத்து குடி மக்களும் சம உரிமைகளோடு, நான் ஒரு இலங்கையன் என்ற பொது உணர்வோடும் பெருமையோடும் வாழவேண்டும்" என்பதே இவரது பேரவாவாகும். இவரது கலை, இலக்கியச் சேவையை பாராட்டி, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் 'சங்கச் சான்றோர்' விருதினை வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் சான்றோர் விருது

## இரா. அ. இராமன்



இலங்கைப் பத்திரிகைத் துறையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வருகின்றவரும் கலை இலக்கியத் தொண்டரும் குறிஞ்சித்தேனி ஆசிரியருமான கலாபூஷணம் இரா. அ. இராமன் அவர்கள் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தின் பூரணவத்தையைச் சேர்ந்தவராவார். இவர் அழகன், தேவி தம்பதியினருக்கு 1942.12.03ம் திகதி மகனாகப் பிறந்தவராவார். ஆரம்பக் கல்வியை கண்டி இரட்சணைசேனை தமிழ்ப் பாடசாலையில் கற்றார். இவர் தினகரன் பத்திரிகையில் பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் பிரதம ஆசிரியராக இருந்தபோது பிரசுரமான "வெள்ளிக்கிழமை" என்ற தனது முதல் சிறுகதையின் மூலம் கலை, இலக்கிய உலகில் அறிமுகமாயினார்.

இவர் ஆசிரியராக இருந்து அம்மா, பூரணம், கண்டி இலக்கியச் செய்தி மடல் போன்ற சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளார். மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவராகவும் இவ் ஒன்றியத்தின் ஊடாக நூற்றுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் நூல்களுக்கு வெளியீட்டு விழாக்களையும் அறிமுக விழாக்களையும் நடாத்தியுள்ளார். இவர் மக்கள் கலை ஒன்றியத்தோடு இணைந்து குறிஞ்சித்தேனி பதிப்பகத்தின் ஊடாக சக எழுத்தாளர்களின் 35 நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளதோடு, சிறுகதைப் பயிற்சிப்பட்டறை, கவிதைப் பயிற்சிப்பட்டறை, தினகரன் இதழோடு இணைந்து அகில இலங்கை ரீதியில் சிறுகதைப்போட்டி நடாத்தி பரிசுப்பெற்ற சிறுகதைகளை நூலுருவில் கொண்டு வந்தார். மேலும் இலக்கிய வாதிகளிற்கு பாராட்டு விழாக்களை நடாத்தி நிதி உதவிகளையும் வழங்கியுள்ளார்.

கண்டி மறுமலர்ச்சி மன்றத் தலைவராகவும் கைலாசபதி ஆய்வுமையம் எனும் அமைப்பை எழுத்தாளர் ரா. நித்தியானந்தனோடு இணைந்து ஆரம்பித்து இணைச்செயலாளராக இருந்து பணியாற்றியுள்ளார். கண்டித் தமிழச் சங்கப் பொதுச்செயலாளராக 4 வருடங்கள் பணியாற்றியதோடு இன்றுவரை மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவராகவும் தினக்குரல் கண்டிக் கிளையின் முகாமையாளராக கடந்த 15 வருடங்களாகவும் கடமையாற்றுகின்றார். இவர் கண்டியில் நடந்த மத்திய மாகாண தமிழ்ச் சாகித்ய விழா சிறப்புமலர் தொகுப்பாசிரியராக இருந்து காத்திரமான ஒரு இலக்கிய மலரை ஆக்கி அளித்துள்ளார்.

2015ம் ஆண்டு கலாபூஷணம் விருது, மத்திய மாகாண தமிழ்ச் சாகித்ய விழா விருது, ஊவா மாகாண தமிழ்ச் சாகித்ய விழா விருது, மத்திய மாகாண இஸ்லாமிய தமிழ்ச் சாகித்ய விழா விருது, மாத்தளை விபுலானந்தர் கலாமன்ற விருது, மலையக கலை கலாசார சங்கத்தின் இரத்தினதீப விருது, கண்டி மனித உரிமை அமைப்பின் விருது, புஸல்லாவை நட்சத்திர கலைப் பேரவை விருது போன்ற விருதுகளே இவரது கலை, இலக்கியச் சேவையையும் சிறப்பையும் வெளிப்படுத்தும்.

இரா. அ. இராமன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்ச் சங்கத்தோடும் 35 வருடகால உறவைக் கொண்டவராவார். பேராசிரியர் தில்லைநாதன், பேராசிரியர் பத்மநாதன் முதல் இன்றைய தமிழ்த்துறைத் தலைவர் வ.மகேஸ்வரன் அவர்கள் வரை உறவுகளை ஏற்படுத்திக் கொண்டவராவார். அமரர் பேராசிரியர் க. அருணாசலம் அவர்களின் அனைத்து நூல்களையும் மற்றும் பேராசிரியர் துரை. மனோகரன் அவர்களின் நூல்களையும் மக்கள் கலை இலக்கியத்தின் ஊடாக வெளியிட்டுள்ளார். இவரது கலை, இலக்கியச் சேவையை பாராட்டி, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் 'சங்கச் சான்றோர்' விருதினை வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் சான்றோர் விருது
## எஸ். எம். ஏ. ஹஸன்



மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கலாபூஷணம் சேகுமுஹம்மது அப்துல் ஹஸன் அவர்கள், பன்னூல் ஆசிரியரும் ஓய்வு பெற்ற கல்வி மற்றும் பிரதம கல்வி அதிகாரியும் முன்னாள் ஒறாபிபாஷா கலாசார மத்திய நிலையப் பணிப்பாளருமாவார். அல்ஹாஜ், எஸ்.எம்.ஏ.ஹஸன், 'ஷஹனா' ஆகிய பெயர்களில் எழுதிய இவருடைய கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள், தர்க்கவியல் கட்டுரைகள் போன்றவை இலங்கையில் வெளிவரும் தினசரிகள், வாரமலர்கள், சஞ்சிகைகளிலும் இந்தியாவில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன.

1927-05-27ம் திகதி பிறந்த எஸ்.எம்.ஏ.ஹஸன் அவர்கள் ஆசிரியராகத் தனது தொழிலை ஆரம்பித்து பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும் கடமையாற்றியிருக்கின்றார். "பேராதனைப் பூந்தோட்டம்" எனும் தலைப்பில் இவரது முதலாவது கட்டுரை 1944ம் ஆண்டில் தினகரனில் பிரசுரமானது. 1958-1964 காலப்பகுதியில் கண்டி மாவட்ட, வீரகேசரிப் பத்திரிகை நிருபராகப் பணியாற்றியதுடன், 1960-61ம் ஆண்டுகளில் வீரகேசரி பத்திரிகையில் வாரம்தோறும் வெளிவந்த 'இஸ்லாமிய உலகம்' எனும் பகுதிக்குப் பொறுப்பாளராகவும் செயலாற்றியுள்ளார்.

மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற எஸ்.எம்.ஏ.ஹஸன் அவர்களினால் எழுதி வெளியிடப்பட்ட நூல்களாக பதியுத்தீன் மஹ்மூத் - வாழ்க்கைச் சுருக்கம் - (1969), அருள்வாக்கி அப்துல் காதர் (1973), நான் கண்ட பண்டாரநாயக்கா (மொழிபெயர்ப்பு - 1975), கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் (1975), நெஞ்சத்தாமரையின் இன்ப நினைவுகள் (1975), கம்பன் கவியமுதம் - கவிதை விளக்கம் (1976), அமெரிக்க கருப்பு இன முஸ்லிம்கள் (மொழிபெயர்ப்பு - 1976), யசஹாமி (சிறுவர்களுக்கான குறுநாவல் - 1979), வைத்தியர் திலகம் அப்துல் அஸீஸ் (1997), அல்லாமா இக்பால் - ஓர் அறிமுகம் (1998), அல்லாமா இக்பால் - இதயப்புதையல் (1999), யசஹாமி சிங்கள மொழிபெயர்ப்பு (2001), இலங்கையில் ஒறாபி பாஷாவும் சகாக்களும் - (2009) போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

முத்தமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி, முஸ்லிம் முரசு ஆசிரியர் வ.மி.ஷம்சுதீன், தினகரன் ஆசிரியர் ஏ.எல்.எம்.கியாஸ், வீரகேசரி ஆசிரியர் வீ.எஸ்.வாஸ் ஆகியோரைத் தனது எழுத்துலக குருக்களாக என்றும் நன்றியுடன் நினைவு கூர்ந்து வரும் இவரின் கலை இலக்கியச் சேவையை கௌரவித்து இலங்கை அரசு 1999இல் இவருக்கு அதி உயர் விருதான 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவித்தது.

அத்துடன், 1975ம் ஆண்டு காலியில் நடைபெற்ற சாகித்திய விழாவில் இவரால் எழுதப்பட்ட 'கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்' நூலுக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. மேலும் 1976ம் ஆண்டு கலாநிதி சு.வித்தியானந்தன் தலைமையில் கண்டியில் நடைபெற்ற விழாவில் 'கலைமணி' பட்டமும், 1993ம் ஆண்டில் முஸ்லிம் கலாசார விவகார அமைச்சினால் நடத்தப்பட்ட 'வாழ்வோரை வாழ்த்துவோம்' விருது வழங்கும் நிகழ்ச்சியில், 'கன்ஸுல் உலூம்' எனும் பட்டமும், 1994ம் ஆண்டில் மத்திய மாகாண இந்துகலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட கலைஞர் பாராட்டு வைபவத்திலும் கௌரவிக்கப்பட்டார். இவரின் கலை, இலக்கியச் சேவையைப் பாராட்டி பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் 'சங்கச் சான்றோர்' விருதினை வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுத்தாளர் கௌரவம்

## மூத்த எழுத்தாளர் செ. அந்தனி ஜீவா

கலை இலக்கியத் துறையில் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் அந்தனி ஜீவா 1944ஆம் ஆண்டு மே மாதம் செபஸ்டியன், லட்சுமி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவராவார். ஆரம்பக் கல்வியைக் கொழும்பு சுவர்ணவீதி தமிழ்ப் பாடசாலையிலும், எஸ்.எஸ்.ஸி வரையிலான கல்வியினைப் பம்பலப்பிட்டிய சென்.மேரிஸ் கல்லூரியிலும் கற்றார். கொழும்பு, நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறை டிப்ளோமாப் பட்டம் பெற்றுள்ளார். இவர் எழுத்து, ஊடகம், கலை, ஆகிய முத்துறைகளிலும் முழுநேரமாக ஈடுபட்டுள்ள எழுத்தாளரும், பன்னூலாசிரியரும், நாடகக்கலைஞரும், பத்திரிகையாளருமாவார்.1960ம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகையில் "பாட்டுக்கொரு புலவன்" என்ற தலைப்பில் பிரசுரமான ஆக்கமே இவரின் முதல் இலக்கிய பிரவேசமாகும். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டுரைகளையும், பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவற்றுள் ஈழநாடு, சிந்தாமணி, சிரித்திரன், அமுதம், தேசபக்தன் ஆகியவற்றில் வெளிவந்த மலடு, விதி, புருட் சலட், தவறுகள், நினைவுகள் ஆகிய சிறுகதைகள் பாராட்டுக்குரியவையாகும். "ஈழத்தில் தமிழ் நாடகம்" என்ற பெயரில் கவிஞர் மீராவின் அகரம் வெளியீடாக 1981 இல் வெளிவந்த நூலே இவரின் எழுத்தில் வெளிவந்த முதல் நூலாகும். இதனைத் தொடர்ந்து அன்னை இந்திரா, காந்தி நடேசையர், மலையகமும் இலக்கியமும், அக்கினிப் பூக்கள், சி.வி சில நினைவுகள், மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் எழுத்தாளர் பங்களிப்பு, மலையகம் வளர்த்த கவிதைகள், கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள், குறிஞ்சி மலர்கள், குறிஞ்சிக்குயில்கள், அம்மா, மலையக மாணிக்கங்கள், முகமும் முகவரியும், திருந்திய அசோகன், நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம், மலையகத் தொழிற்சங்க வரலாறு, சிறகு விரிந்த காலம் போன்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார்.மலையக இலக்கிய வரலாற்றை "மலையகமும் இலக்கியமும்" என்ற நூலில் 1995 ஆம் ஆண்டு மலையக வெளியீட்டகம் வெளியிட்டது. இந்நூலுக்கு 1996 ஆம் ஆண்டு அரச கரும மொழித் திணைக்களத்தில் நடாத்தப்பட்ட தமிழ்த் தின விழாவில் அரச இலக்கிய விருது கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அந்தனி ஜீவாவின் புகழ் பெற்ற நாடகத்தின் பிரதியாக்க நூலான "அக்கினிப் பூக்கள்" என்ற நூலிற்கு 1999 ஆம் ஆண்டில் சிறந்த நாடக நூலிற்கான அரச சாகித்திய விருது கிடைத்தது. அந்தனி ஜீவா இளவயதில் பத்திரிகைத் துறையில் ஈடுபாடு கொண்டு "ஜனசக்தி" பத்திரிகையிலும் தினபதி பத்திரிகையிலும் பணியாற்றி குன்றின் குரல், கொழுந்து சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், சிறகு சஞ்சிகையின் இணையாசிரியராகவும் கடமையாற்றியிருக்கின்றார். தேசியப் பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, தினக்குரல் போன்ற பத்திரிகைகளில் இவரது ஆக்கங்களை எழுதியுள்ளார். அந்தனி ஜீவாவின் அரை நூற்றாண்டு அனுபவ சுவடுகளையும் 'ஜீவ நதி' சஞ்சிகையில் எழுதினார் அது 'ஒரு வானம்பாடியின் கதை' என்ற தலைப்பில் 2014 ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தது.

அந்தனி ஜீவா எழுபதுகளின் நாடக மேடையில் தனது காலடிச் சுவடுகளைப் பதிக்கிறார். அந்தனி ஜீவாவின் ஐந்தாவது நாடகமான "அக்கினிப் பூக்கள்" அவருக்கு பெயரையும் புகழையும் தேடிக் கொடுத்தது. இந்த நாடகம் இதுவரை 16 தடவை மேடையேற்றப்பட்டுள்ளது. இலங்கை கலாசாரப் பேரவை 1978 ஆம் ஆண்டு நடாத்திய அரச நாடக விழாவில் அலைகள் என்ற நாடகம் சிறந்த நடிகை சிறந்த இசையமைப்புக்கான இரண்டு விருதுகளைப் பெற்றது. அந்தனி ஜீவாவின் மலையகம் சம்பந்தமான செயற்பாடுகளில் மிக முக்கியமானது மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு, மத்திய மாகாண கல்வி அமைச்சர் கௌரவ வி. புத்திரசிகாமணியின் ஊடாக அமைச்சின் அனுசரணையுடன் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் நெறியாள்கையுடன் அந்தனி ஜீவாவின் செயற்பாட்டுடன் மலையக தமிழாராய்ச்சி ஆய்வு மாநாடு 1994 ஆம் ஆண்டு நான்கு நாட்கள் பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது. இவ்வாறாக கலை இலக்கியத் தளத்தில் தனது தடத்தை ஆழப்பதித்த அந்தனி ஜீவாவின் கலை, இலக்கியச் சேவையை பாராட்டிப், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் 'எழுத்தாளர்' கௌரவத்தை வழங்கி வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் கௌரவம்
## மூத்த எழுத்தாளர் எஸ். எல். எம். ஹனீபா



இலங்கைச் சிறுகதைச் சூழலில் மறந்துவிட முடியாத ஒரு சிறுகதை ஆளுமையாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா ஆவார். இவரின் சிறுகதைத் தொகுப்புகள் குறைந்தளவே ஆயினும் அச்சிறுகதைகள் சமூகப்பரப்பிலும், வாசக எண்ணங்களிலும் ஏற்படுத்திய அதிர்வுகள் மிக அதிகமானவை. தன் எழுத்துக்களால் கிழக்கிலங்கை வாழ் மக்களின் பண்பாடு, மொழி, சமயம் அது சார் பிற ஊடாட்டல்களை கச்சிதமாகப் படம் பிடித்துக் காட்டியவர் இவராவார்.

கிழக்கிலங்கை தந்த எழுத்தாளர் சின்னலெவ்வை முகம்மது ஹனீபா அவர்கள் 1946.04.01ம் திகதி மட்டக்களப்பு மீராவோடையில் பிறந்தவராவார். கிளிநொச்சி கால்நடை விவசாயப் பள்ளியில் இரண்டு வருடங்கள் கல்வி பயின்றதோடு இருபத்தைந்து வருடங்களாக அதாவது 1990ம் ஆண்டு வரை இலங்கையின் பல்வேறு பகுதிகளில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவர் முன்னாள் வட-கிழக்கு மாகாணசபையின் உறுப்பினராகவும் உதவித் தவிசாளராகவும் இருந்தவராவார்.

கடந்த 50 வருடங்களாக நவீன தமிழ் இலக்கியத்தில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவராவார். 1966ம் ஆண்டு ராதா என்னும் சஞ்சிகையில் வெளிவந்த "நெஞ்சின் நினைவினிலே" என்ற சிறுகதையே இவரின் முதல் இலக்கியப் பிரவேசமாகும். இன்சான், இளம்பிறை, சுதந்திரன், சுடர், வீரகேசரி, சிந்தாமணி, பூரணி, கணையாழி, பாமஸ் ஆகிய இதழ்களில் தனது படைப்புக்களை வெளியிட்டுள்ளார். பின் அவ்விதழ்களில் வெளியான இதழ்களின் தொகுப்பாக "மக்கத்துச் சால்வை" என்ற சிறுகதை நூலை வெளியிட்டார். இதுவே எஸ்.எல்.எம்.ஹனீபாவின் முதல் தொகுப்பாகும். இத்தொகுதிக்கு 1994ல் தமிழ் நாடு கோவை லில்லி தேவ சிகாமணி விருதும், இலங்கை அரசின் சாகித்ய விருதும் பெற்றார். இச் சிறுகதைகளில் கிழக்கிலங்கையின் வாழ்க்கை முறையினை மானுஷீகத்தின் அழகு சிதையாமல் வெளிக்காட்டியுள்ளார்.

2008ம் ஆண்டு இவரின் தேர்ந்த சிறுகதைகளின் தொகுதியாக "அவளும் ஒரு பாற் கடல்" என்ற நூல் தமிழ் நாட்டின் காலச்சுவடு பதிப்பில் வெளிவந்தது. இப்படைப்பும் எஸ்.எல்.எம்.ஹனீபா அவர்கள் எழுத்தாற்றலிற்கு மற்றுமொரு சான்றாகும். எழுத்தாளர் என்பதை விடவும் தன்னை ஒரு வாசகனாக முன்னிறுத்த அதிகம் விரும்புகின்றவர். சிறந்த அரசியல்வாதியும் மேடைப்பேச்சாளருமான இவரிற்கு தமிழ் இலக்கிய சூழலில் விருதுகளுக்கும் சால்வைகளுக்கும் குறைவிருந்ததில்லை. இவ் இலக்கிய இளைஞருக்குப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் 'எழுத்தாளர்' கௌரவத்தை வழங்கி வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளங்கதிரின் அஞ்சலி
## பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்

கடந்த ஒரு தசாப்த காலத்தில் நமது நாட்டில் தமிழுக்கும் சைவத்துக்கும் வளத்தைக் கொடுத்த அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணம் நெடுந்தீவு மேற்கு பகுதியில் 23.08.1946 அன்று இராமநாதர் வைத்தியலிங்கம், சிவகாமிப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வியை 1951- நெடுந்தீவு கோட்டைக்காடு மங்கையக்கரசி வித்தியாசாலை, 1952 நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை, 1953 – 1965 யாழ்-முத்துத்தம்பி வித்தியாசாலை மற்றும் 1966 – 1968 யாழ் - செங்குந்தா இந்துக் கல்லூரி ஆகியவற்றிலும் உயர்கல்வியை 1968 – 1972 காலப்பகுதியில் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பயின்று இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். 'ஆறுமுகநாவலர் சைவத்திற்கு ஆற்றிய பணி' என்னும் தலைப்பிலே ஆய்வு செய்து முதுகலைமாணி பட்டத்தையும் பூர்த்தி செய்துள்ளார். இவர் 1974 -1980ல் களனிப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும் 1983ம் ஆண்டிலிருந்து 2012ம் ஆண்டு வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர், முதுநிலை விரிவுரையாளர், இணைப்பேராசிரியர் - சிறப்பு நிலை, பேராசிரியர் - சிறப்பு நிலை, வருகைதரு விரிவுரையாளர், அரச பாடநூல் ஆலோசகர், கொழும்பு தமிழ்ச் சங்க ஆயுட்கால உறுப்பினர் போன்ற பொறுப்புக்களிலிருந்து கடமையாற்றியுள்ளார்.

ஈழ நாட்டில் புராணபடனச் செல்வாக்கு, ஏழாலை அத்தியடி புவனேஸ்வரி அம்மன் ஆலய வரலாறு ஒரு நோக்கு, நாவலர் மரபு, நாவலர் உரைத்திறன், ஆறுமுகநாவலர் வரலாறு – ஒரு புதிய பார்வையும் பதிவும், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை புலமையில் ஓர் ஆய்வு, ஈழத்துச் சைவசமய வளர்ச்சியில் சித.மு. பசுபதிச்செட்டியாரின் பங்களிப்பு, நாவலர் ஆளுமையும் புலமைத்துவமும், ஆறுமுகநாவலர் வரலாறு ஒரு சுருக்கம் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் சமயம் - வரலாறு – கோட்பாடு, தமிழ் சமயப் புலமையாளர்கள், ஆறுமுகநாவலர், விமர்சனங்கள், கட்டடக்கலையும் விக்கிரகவியலும், நாட்டாரியல், ஆராய்ச்சிப் பதிப்பு முயற்சிகள் போன்ற பல்வேறு துறைகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1996, 1997, 1998ம் ஆண்டுகளில் 'பண்பாட்டியல்' , 'பேராசிரியர் தில்லைநாதன் மணிவிழா' மலர் ஆகியவற்றின் ஆசிரியராகவும் 2003ம் ஆண்டு '2வது உலக இந்து மாநாடு சிறப்பு மலர் இலங்கை', 2004ம் ஆண்டு 'பத்மம்' மலராசிரியர்குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். 1995ம் ஆண்டு 'வே. கனகரத்தின உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம்' என்ற நூலிற்கு "சாகித்ய மண்டல விருதும்", 1996ல் 'சி. செல்லையாபிள்ளையின் யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களின் சரித்திர சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலை' என்ற நூலின் ஆராய்ச்சிப் பதிப்பு முயற்சிக்கு இந்துசமய, பண்பாட்டு கலாசார அமைச்சினால் விருது பெற்றதோடு 2007ம் ஆண்டு "ஆறுமுகநாவலர் வரலாறு – ஒரு புதிய பார்வையும் பதிவும்" நூலிற்கு 'சம்பந்தர் விருதினையும்' பெற்றார். உன்னதமான மானிட இயல்புகள் பலவற்றை கொண்டவராக புகழப்படும் இரா. வை. கனகரத்தினம் 24.05.2016 அன்று தமிழ் இலக்கிய உலகை விட்டு மறைந்தார். இப்பெருந்தகையின் கலை இலக்கிய சைவ பணிகளிற்கும் புலமைக்கும் தலைவணங்குவதுடன் இளங்கதிர் தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கம் – நாடக விழா 2016

**முதலாமிடம்** :- இதுவா சுதந்திரம்(கலைப்பீடம் - இரண்டாம் வருடம்).
**இரண்டாமிடம்** :- சிறகுகள்(கலைப்பீடம் - மூன்றாம் வருடம்).
**மூன்றாமிடம்** :- அம்மா நீ எங்கே (விஞ்ஞானபீடம் - முதலாம் வருடம்).
**சிறந்த நடிகர்** :- இதுவா சுதந்திரம்(அப்பா) – கவிதாஞ்சன் கிருபாகரன்.
**சிறந்த நடிகை**:- இதுவா சுதந்திரம்(அம்மா) - டிலக்சனா.
சிறகுகள்(தாய்) – நவகீதா.

**நினைவில் நின்ற பாத்திரம்**:-
அம்மா நீ எங்கே(தாய்) – தர்ஷிகா.

**சிறந்த நெறியாழ்கை**:- இதுவா சுதந்திரம் - கவிதாஞ்சன்,
கிருபாகரன்,
கொன்சித்தா கொன்ஷன்ரன்.

**சிறந்த ஒப்பனை**:- இதுவா சுதந்திரம் - கொன்சித்தா கொன்ஷன்ரன்,
கவிதாஞ்சன் கிருபாகரன்,
உதயரோகினி ராசு,
தயாளினி குமாரசாமி,
பாமகள் பாலசுப்பிரமணியம்.

**சிறந்த பிரதி**:- இதுவா சுதந்திரம் - கலாகரன் விக்னேஷ்வரன்.
**சிறந்த மேடை முகாமைத்துவம்**:-
இதுவா சுதந்திரம் - றிச்சட் மேர்வின் மனுவல்,
கொன்சித்தா கொன்ஷன்ரன்.
**சிறந்த பின்னனி இசை**:- இதுவா சுதந்திரம் - சதுர்ஷன் வன்னியசிங்கம்.

**நடுவர்கள்**:- திருமதி.ஆன்.யாழினி சதீஸ்வரன்,
திருமதி.ஹரோசனா ஜெயசீலன்,
திரு சண்முகநாதன்,
திரு ஏ.எஸ்.எம்.பீலிக்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்க நிகழ்வுகளுடன் ஒரு சங்கமம்

**வருடாந்த பொதுக் கூட்டம்**

இடம்: கெம்பா சிற்றுண்டிச்சாலை மண்டபம்,
காலம்: 11.02.2016,
நேரம்: மாலை 5 மணி.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், தமிழ்ச் சங்கப் பெரும் பொருளாளர் சிரேஸ்ர விரிவுரையாளர் வ.தர்மதாசன் தமிழ்ச் சங்க கணக்காய்வாளர் கலாநிதி ம.அல்பிரட் மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர் கலாநிதி க.ரொசான் ராகல் ஆகியோரது முன்னிலையில் 2014-2015 செயற்குழுவின் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் புதிய செயற்குழுத் தெரிவும் அவர்களுக்கான பொறுப்புக்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**தைப் பொங்கல் விழா**

இடம்: குறிஞ்சிக் குமரன் ஆலயம், பேராதனைப் பல்கலைக்கழகம்,
காலம்: 14.01.2017,
நேரம்: காலை 5 மணி.

தழிச் சங்க உறுப்பினர்களின் ஏற்பாட்டில் தமிழ்ச் சங்க உபதலைவரின் தலைமையில் தைப்பொங்கல் நிகழ்வு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**சிவராத்திரி நிகழ்வு**

இடம்:-குறிஞ்சிக்குமரன் ஆலயம், பேராதனைப் பல்கலைக்கழகம்,
காலம்:- 07.03.2016,
நேரம்:- இரவு 9.00.

தமிழ்ச் சங்க செயற்பாட்டின் இன்னொரு அங்கமாக குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் வருடா வருடம் நடைபெறும் சிவராத்திரி விழாவில் தமிழ்ச் சங்கம் சார்பாக "பக்தி இசைக்கானங்கள்" எனும் நிகழ்வு இடம்பெற்றது.

**புதுவசந்தம் 2016**

இடம்: ஈ.ஓ.ஈ பெரேரா அரங்கு,
காலம்: 28.04.2016,
நேரம்: மாலை 06.30 மணி.

பேராதனைப் பல்கலைக்கழகப் புதுமுக மாணவர்களை வரவேற்கும் முகமாகவும் புதுமுக மாணவர்களின் கலையாற்றல்களை வெளிக்கொணரும் முகமாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சங்கத் தலைவர் தலைமை தாங்க மாலை 7 மணியளவில் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. இந் நிகழ்வில் புதுமுக மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

**பிரியாவிடை நிகழ்வு**

இடம்: பொறியியல் பீட சிற்றுண்டிச்சாலை மண்டபம்,
காலம்: 12.06.2016,
நேரம்: மாலை 7 மணி.

தமிழ்ச் சங்கத்தின் 2014-2015 செயற்குழு உறுப்பினர்களுக்கான பிரியாவிடையும் விருந்துபசாரமும் தமிழ்ச் சங்கத் தலைவரின் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர், பெரும்பொருளாளர், கணக்காய்வாளர், தொழில்நுட்ப ஆலோசகர் ஆகியோர் பங்கு பற்றியதுடன் கடந்த வருட செயற்குழு உறுப்பினர்களுடன் 2015-2016 செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் முன்னாள் செயற்குழு உறுப்பினர்களுக்கான சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

**கவிதை நூல் வெளியீட்டு விழா**

காலம்:- 07.06.2016,
நேரம்:- பி.ப 3 மணி,
இடம்:- கருத்தரங்கு மண்டபம். (கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்).

பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்(மூன்றாம் வருடம்) நா.திருச்செந்தூரன் எழுதிய **"யாதுமாகி"** என்ற கவிதை நூல் தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவரும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்துறையின் தலைவருமான பேராசிரியர் வ.மகேஸ்வரன் அவர்கள் தலைமையில் தமிழ்ச்சங்கத்தால் வெளியிடப்பட்டது. இவ்விழாவில் வரவேற்புரை மாணவன் சு.பிரகலாதன், ஆசியுரை அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்(மன்னார்), தலைமையுரை பேராசிரியர் வ.மகேஸ்வரன், அறிமுகவுரை பண்பலை வேந்தன் T.S முகுந்தன், வெளியீட்டுரை தமிழ்ச் சங்கத் தலைவர் ப.கீர்த்தனன், ஆய்வுரை தமிழ்த்துறை விரிவுரையாளர் எம்.எம்.ஜெயசீலன், ஏற்புரை நூலாசிரியர் ஆகியோர்களால் நிகழ்த்தப்பட்டது.

**நாடகத் திருவிழா**

இடம்: ஈ.ஓ.ஈ பெரேரா அரங்கு,
காலம்: 31.08.2016,
நேரம்: மாலை 7 மணி.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் நாடக ஆற்றலை வெளிக் கொண்டுவரும் வகையில் மாணவர்களுக்கிடையிலான நாடகப் போட்டி நாடாத்தப்பட்டது. பல கதைக் கருக்களைக் கொண்ட நான்கு நாடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றப்பட்டன. இதில் "இதுவா சுதந்திரம்" என்ற நாடகம் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

### குறிஞ்சிச்சாரல்

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் கலையாற்றலை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வெளிப்படுத்தும் முகமாகப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் வருடந்தோறும் 'குறிஞ்சிச்சாரல்' விழாவினை நிகழ்த்துகின்றது. அவ்வகையில் இவ்வாண்டும் 23.04.2017 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கண்டி, 'இந்து கலாசார மண்டபத்தில்' பிற்பகல் 3.00 மணியளவில் விழாவானது நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவையாளர் துரைசாமி சிவசுப்ரமணியம் கலந்துகொண்டார். சங்கச் சான்றோர் விருதினை தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் அவர்கள் க.ப.சிவம், இரா.அ.இராமன், எம்.எஸ்.ஏ ஹசன் ஆகியோர்களிற்கு வழங்கி கௌரவித்தார்.

### கலை விழாவும் இளங்கதிர் சஞ்சிகை வெளியீடும்

இடம்: ஈ.ஓ.ஈ பெரேரா அரங்கு,
காலம்: 03.10.2017,
நேரம்: மாலை 6.30 மணி.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க செயற்குழு 2015-2016 இன் ஏற்பாட்டில் கலைவிழாவும் இளங்கதிர் சஞ்சிகை வெளியீடும் வெகு விமர்சையாக இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகப் பேராதனைப் பல்கலைக்கழகப் பிரதி துணை வேந்தர் பேராசிரியர் ஆர். எல். விஜயவீர சிறப்பிக்க, தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், தமிழ்ச் சங்கப் பெரும் பொருளாளர் வ.தர்மதாசன், தமிழ்ச் சங்கக் கணக்காய்வாளர் கலாநிதி ம.அல்பிரட் மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர் கலாநிதி க.ரொசான் ராகெல் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் எஸ்.எல்.எம் ஹனீபா, செ.அந்தனி ஜீவா ஆகியோரின் கலை இலக்கியச் சேவையைப் பாராட்டி தமிழ்ச் சங்கத்தின் 'எழுத்தாளர்' கௌரவமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வுடன் இணைந்தே 2017ம்(கல்வியாண்டு 2015/2016) வருடத்தின் புதுமுக மாணவர்களை வரவேற்கும் 'புது வசந்தம்' நிகழ்வும் அவர்களது கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க நிகழ்வுகளின் சில நிழற்படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்க செயற்குழு 2015/2016

## பேராதனைப் பல்கலைக்கழகம்



இருப்பவர்கள் : தலைவர் - செல்வன். ப.கீர்த்தனன், கணக்காய்வாளர் - கலாநிதி. ம.அல்பிரட், பெருந்தலைவர் - பேராசிரியர். வ.மகேஸ்வரன், துணைவேந்தர். பேராசிரியர். உபுல் பீ. திஸ்ஸாநாயக்க, பெரும் பொருளாளர் - திரு. வ.தர்மதாசன், ஆலோசகர் - கலாநிதி. க.ரொசான் ராகல், செயலாளர் - செல்வன். பா.பசீகரன்.

நிற்பவர்கள் : செல்வன். சி.ஸ்ரீகாந்த் (இதழாசிரியர்), செல்வன். சோ.பாலதினேஸ், செல்வன். கு.கனேந்திரன் (உப செயலாளர்), செல்வி. கு.தயாளினி, செல்வி. க.தனுசியா, செல்வி. ம.பிரியந்தி, செல்வி. த.அருள்விழி (இதழாசிரியர்), செல்வி. கு.மதுஷிகா, செல்வன். கு.கீர்த்தனன், செல்வன். நி.ஜனலக்ஷன் (இளம் பொருளாளர்), செல்வன். தே.கஜீபன்.

நிற்பவர்கள் : செல்வன். மு.ஜானக்ககுமார், செல்வன். நா.ரவீஸ் (உப தலைவர்), செல்வன். பா.கோஜப்பிரியன் (வெளியீட்டாளர்), செல்வன். ஏ.நிதர்ஷன், செல்வன். கே.கஜானன், செல்வன். க.சுகேசன், செல்வன். ஜி.கௌசிகேசன், செல்வன். ச.சம்சன், செல்வன். க.டோஜிதன்.

படத்தில் இல்லாதோர் : செல்வன். தே.தேலக்ஷன், செல்வன். ம.சுகிதகுமார், செல்வன். எம்.ஆ.சாஜித், செல்வன். கே.சாய்ஸ்காந்தன், செல்வன். ஜி.சிவாம்சன், செல்வன். ஆர்.டிலீசன், செல்வன். சி.பிரணவன், செல்வி. வை.ஜனனி, செல்வி. ஜெ.கம்சிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்க செயற்குழு 2015/2016

| | |
|---|---|
| பெருந்தலைவர் | : பேராசிரியர். வ. மகேஸ்வரன். |
| பெரும் பொருளாளர் | : திரு .வ. தர்மதாசன். |
| கணக்காய்வாளர் | : கலாநிதி. ம. அல்பிரட். |
| ஆலோசகர் | : கலாநிதி. க. ரொசான் ராகல். |
| தலைவர் | : செல்வன். ப. கீர்த்தனன். |
| செயலாளர் | : செல்வன். பா. பசீகரன். |
| உபதலைவர் | : செல்வன். நா. ரவீஸ். |
| உபசெயலாளர் | : செல்வன். கு. கனேந்திரன். |
| இளம் பொருளாளர் | : செல்வன். நி. ஜனலக்ஷன். |
| இதழாசிரியர்கள் | : செல்வன். சி. ஸ்ரீகாந்த். |
| | : செல்வி. த. அருள்விழி. |
| வெளியீட்டாளர் | : செல்வன். பா. கோஜப்பிரியன். |


## செயற்குழு உறுப்பினர்கள்

: செல்வன். சோ. பாலதினேஸ்.
: செல்வன். பா. கோஜப்பிரியன்
: செல்வன். ப. கௌசிகேசன்.
: செல்வன். கு. கீர்த்தனன்.
: செல்வி. கு. தயாழினி.
: செல்வன். க. சுகேசன்
: செல்வன். ரா. டிலீசன்.
: செல்வன். செ. சம்ஷன்.
: செல்வன். சி. பிரணவன்.
: செல்வன். கே. றோஜிதன்.
: செல்வி. வை. ஜனனி.
: செல்வன். தே. தேலக்ஷன்.
: செல்வன். ம. சுகிதகுமார்.
: செல்வி. க. தனுசியா.
: செல்வி. கு. மதுஷிகா.
: செல்வன். தே. கஜீபன்
: செல்வன். எம். ஆ. சாஜித்.
: செல்வன். கே. சாய்ஸ்காந்தன்.
: செல்வன். ஜி. சிவாம்சன்.
: செல்வி. ஜெ.கம்சிகா
: செல்வன். மு. ஜானக்ககுமார்.
: செல்வன். கே. கஜானன்.
: செல்வன். ஏ. நிதர்சன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்க செயற்பாடுகள் தொடர்பாக வெகுசன ஊடகங்களில்...









சங்கச்சான்றோர் விருதுபெற்றனர்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சங்கச் சான்றோர் விருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கமும் அதன் கடந்தகாலப் பெருந்தலைவர்களும்



பேராசிரியர்
சி.சுந்தரலிங்கம்



பேராசிரியர்
க.கணபதிப்பிள்ளை
(1948 - 1963)



பேராசிரியர்
வி.செல்வநாயகம்.
(1964 - 1970)



பேராசிரியர்
சு.வித்தியானந்தன்
(1976 - 1977)



பேராசிரியர்
ஆ.வேலுப்பிள்ளை
(1978 - 1981)



பேராசிரியர்
சி.தில்லைநாதன்
(1982-1994, 1999-2001)



பேராசிரியர்
க.அருணாசலம்
(1995 - 1998)



பேராசிரியர்
எம்.ஏ.நு.்.மான்.
(2002 - 2005)



பேராசிரியர்
துரை. மனோகரன்.
(2006 - 2009)



பேராசிரியர்
வ.மகேஸ்வரன்
(2011 - 2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1948 முதல் 2016 வரையிலான தமிழ்ச் சங்க செயற்குழுக்களின் விபரத்திரட்டு

| ஆண்டு | இதழ் | பெருந்தலைவர் | பெரும்பொருளாளர் | தலைவர் | உபதலைவர் | செயலாளர் | இளம்பொருளாளர் | இதழாசிரியர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1948/49 | 01 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி வி.அப்பாப்பிள்ளை | வி.சண்முகநாதன் | தே.ஜெயராஜா | எ.தேவராசா | சி.வி.ராஜசுந்தரம் | த.சண்முகசுந்தரம் |
| 1949/50 | 02 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி வி.அப்பாப்பிள்ளை | சி.குணபாலசிங்கம் | வி.சிவசுப்பிரமணியம் | வி.பேரம்பலம் | வி.ஜே.இராமநாதன் | நா.தம்பிமுத்து |
| 1950/51 | 03 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி வி.அப்பாப்பிள்ளை | ஆர்.என்.முத்துராஜா | வி.எ. முருகேசம்பிள்ளை | கே.பாலசிங்கம் | கே.மகேஸ்வரன் | அரங்கநாதன் |
| 1951/52 | 04 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி வி.அப்பாப்பிள்ளை | ஆர்.என்.முத்துராஜா | கு.பரமோதயம் | - | - | சி.முருகவேள் |
| 1952/53 | 05 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | திரு. கனகசபதிப்பிள்ளை | க.சி.மாணிக்கவாசகர் | கு.பரமோதயம் | வ.தங்கராசா | எஸ்.குமாரசுவாமி | செ.மு.ஹனிபர் |
| 1953/54 | 06 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | திரு. கனகசபதிப்பிள்ளை | மகாலிங்கம் | கு.நல்லசிவம்பிள்ளை | - | - | வெங்கடேச சர்மா |
| 1954/55 | 07 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | திரு.வி.எம். முருகேசம்பிள்ளை | கே.செல்வரத்தினம் | கு.நல்லசிவம்பிள்ளை | ஆ.க.ஆறுமுகசாமி | எஸ்.சமீம் | இ.சிவகுருநாதன் |
| 1955/56 | 08 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | பேராசிரியர் கனகசபாபதி | கி.கோபாலரட்ணம் | சரவணபவா | க.சிவப்பிரகாசம் | - | ஆர்.முமரதேவன் |
| 1956/57 | 09 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | ச.ஹரி.சண்முகராசா | இமானுவல் கமலநாதன் | ரி.எஸ்.மேதர் | பொ.கமலேந்திரன் | சே.குணரத்தினம் |
| 1957/58 | 10 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | நா.இராசரத்தினம் | சு.விவானந்தன் | ஏ.பி.வி.கோமசு | சு.சண்முகபவா | ஆ.வேலுப்பிள்ளை |
| 1958/59 | 11 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | அ.இரத்தினம் | பொ.கதிர்வேலாயுத பிள்ளை | செ.வே.காசிநாதன் | தி.சாம்பவி | ச.அடைக்கலமுத்து |
| 1959/60 | 12 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | மு.கணேசசுந்தரம் | க.சீவநாயகம | கோ.சோமசுந்தரம் | சி.பாலசுப்பிரமணியம் | மு.தளையசிங்கம் |
| 1960/61 | 13 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | சோ.கணேசநாதன் | க.சண்முகயோதி | பு.காசிப்பிள்ளை | அ.சண்முகதாஸ் | வி.கி.இராசதுரை |
| 1961/62 | 14 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | அ.சண்முகதாஸ் | க.அருமைநாயகம் | க.ஸ்ரீஸ்கந்தராஜா | வ.கிருஸ்ணசாமி | எஸ்.செபநேசன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | இதழ் | பெருந்தலைவர் | பெரும்பொருளாளர் | தலைவர் | உபதலைவர் | செயலாளர் | இளம்பொருளாளர் | இதழாசிரியர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1962/63 | 15 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | சி.நடராஜா | ச.நேசராசா | ந.சிவகுருநாதன் | எஸ்.எச்எம்.ஜமீல் | செ.கதிர்காமநாதன் |
| 1964/65 | 16 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி சு.வித்தியானந்தன் | க.நாகேந்திரன் | க.ஸ்ரீஸ்கந்தராசா | க.சின்னராசா | த.தெட்சணாமூர்த்தி | ந.வேல்முருகு |
| 1965/66 | 17 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி சு.வித்தியானந்தன் | நா.மயில்வாகனம் | வீ.கந்தசாமி | பொ.அருந்தவநாதன் | கு.சோமசுந்தரம் | ஆ.சிவநேசச்செல்வன் |
| 1966/67 | 18 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி சு.வித்தியானந்தன் | சு.தேவதாஸ் | செ.மு.மு.மர்ஜான் | க.தர்மராஜா | நா.கனகரத்தினம் | சு.சடாட்சரசண்முகதாஸ் |
| 1967/68 | 19 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி சு.வித்தியானந்தன் | ஆ.ரவீந்திரன் | செ.மகாலிங்கம் | நா.சுப்பிரமணியம் | பி.ஜேசப்பு | ஆ.பாலேந்திரன் |
| 1968/69 | 20 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி சு.வித்தியானந்தன் | மு.குமாரசுவாமி | தா.நாகரட்ணம் | அ.ரகுமூர்த்தி | செ.சுவாமிநாயகம் | க.சரநாதன் |
| 1969/70 | 21 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி த.யோகரத்தினம் | வி.ந.ஜேக்கப் | பொ.ஆனந்த ஜெயசேகரம் | க.சந்திரகுமார் | ஐ.சிஞானசுந்தரம் | த.செல்வரத்தினம் |
| 1976/77 | 22 | பேராசிரியர் சு.வித்தியானந்தன் | கலாநிதி சி.பத்மநாதன் | சி.நவரத்தினம் | ஏ.ஜமீல் | பா.மகேஸ்வரன் | பா.சுதர்சன் | சி.கருணானந்தராஜா |
| 1978/79 | 23 | பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை | திரு. மு.சின்னத்தம்பி | கு.பரராஜசேகரம் | கி.இரவீந்திரன் | ம.சிவகுமார் | ச.பார்த்திபன் | பி.புனிததாஸ் |
| 1979/80 | - | பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை | திரு. மு.சின்னத்தம்பி | வ.மகேஸ்வரன் | அ.வசந்தகுமார் | செ.திருச்செல்வம் | எஸ்.சறீகரன் | - |
| 1980/81 | 24 | பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை | திரு. மு.சின்னத்தம்பி | கி.செல்வராஜா | அ.முருகானந்தா | ந.சண்முகப்பிரபு | வி.விஜயகுமாரன் | பூ.காசிநாதன் |
| 1981/82 | 25 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. மு.சின்னத்தம்பி | மா.வைகுந்தவாசன் | க.மு.சிறாஜ் | நா.ரஞ்சன் | அ.ஜேர்ஜ் சந்திரகுமார் | கு.குலேஸ்வரகுமார் |
| 1991/92 | 26 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | ஜனாப் எம்.எல்எ.காதர் | வ.பவஹரன் | க.ந. சண்முகதாசன் | ஆர்.எம்.இம்தியாஸ் | ம.ஜோதிராஜ் | த.தவவதனி |
| 1992/93 | 27 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | ஜனாப் எம்.எல்எ.காதர் | க.ந.சண்முகதாசன் | பி.எம்.ஜமாஹிர் | சு.சிவானந்தன் | இ.வாசுகி | எஸ்.வைபூரீதர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | இதழ் | பெருந்தலைவர் | பெரும்பொருளாளர் | தலைவர் | உபதலைவர் | செயலாளர் | இளம்பொருளாளர் | இதழாசிரியர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1993/94 | 28 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | ஜனாப் எம்.எல்எ.காதர் | செ.செல்வரூபன் | சி.மதியழகன் மு.வ.அப்துல் கையூம் | அ.பெனடிக்ற் இராஜேந்திரன் | பெ.ராஜகுலசிங்கம் | எம்.ஏ.முகமது றமீஸ் |
| 1994/95 | 29 | கலாநிதி அருணாசலம் | பேராசிரியர் வை.நந்தகுமார் | பா.பாலநந்தகுமார் | இ.லெ.அப்துல் நாசர் | கி.ஜுடஸ் இராஜநாதன் | ஞசை அன்டனிதாஸ் | எச்.எம்.கலால்தீன் |
| 1996/97 | 30 | கலாநிதி அருணாசலம் | பேராசிரியர் வை.நந்தகுமார் | ப.பிரதீபன் | ஏ.சி.பி.முஹமட் | சி.பரணீஸ்வரன் | தா.ஸ்ரீராமநாதன் | இரா.இரவிசங்கர் |
| 1997/98 | 31 | கலாநிதி அருணாசலம் | பேராசிரியர் வை.நந்தகுமார் | பொ.சுரேந்திரன் | ந.நிலானி | ம.மெறாயஸ் | சி.சிவசுதன் | இரா.சர்மிளாதேவி அ.ப.மு.அஸ்ரப் |
| 1998/99 | 32 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | ஜனாப் எம்.எஸ்.எம்.அனஸ் | க.நரேந்திரநாதன் | தி.விஜயரேகா | செ.கிள்ளிவளவன் | சு.உ.தயசீலன் | பா.பிரதாபன் |
| 1999/00 | 33 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | கலாநிதி எம்.ஏ.எம்.சித்திக் | செ.ருக்ஷகான் | பா.நிரஞ்சினி | வ.ஜெயரூபன் | ப.குகநேசன் | வே.முருகதாசன் மதுராந்தகி |
| 2000/01 | 34 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | பேராசிரியர் அ.சிவராசா | வ.சுகந்தன் | க.விக்னராஜா | பா.சந்திரகாந்தன் | தி.சண்முகதாசன் | சு.ஜெகநாதன் க.ஈசன் |
| 2002/03 | 35 | பேராசிரியர் சி.தில்லைநாதன் பேராசிரியர். நு.்.மான் | கலாநிதி பி.சரவணகுமார் | மா.ருபவதனன் | இ.ற.றிசாத் றூமி | சி.சிவகுலம் | செ.றியால்ட் ஞானப்பிரகாசம் | வி.கோகுலசிங்கம் ந.புஸ்பராசா |
| 2004/05 | 36 | பேராசிரியர் நு.்.மான் | கலாநிதி பி.சரவணகுமார் | க.தயாநிதி | சி.பத்மசிரூபன் | ஒ.ஐம்பிகை | சு.அருணன் | ஜே.ஆன்.யாழினி |
| 2005/06 | 37 | பேராசிரியர் துரை மனோகரன் | பேராசிரியர் இ.சிவகணேசன் | எஸ்.சுதாகரன் | எம.சி.றஸ்மின் | த.தர்மசிறி | சி.சிவரூபன் | சி.துளசிகா பொ.சந்திரகுமாரி |
| 2006/08 | 38 | பேராசிரியர் துரை மனோகரன் | பேராசிரியர் இ.சிவகணேசன் | அ.குககுமாரன் | கா.கார்த்திபன் | எஸ்.சுகிர்தன் | இ.சஞ்சயன் | தே.ஜெகன் பெ.சரவணகுமார் |
| 2008/09 | 39 | பேராசிரியர் துரை மனோகரன் | பேராசிரியர் இ.சிவகணேசன் | ச.தனுஜன் | செ.பகீரதன் | சா.தயாகரன் | செ.அஜேந்திரா | மு.ஜெயசீலன் யோ.கலைவாணி |
| 2011/12 | 40 | பேராசிரியர் வ.மகேஸ்வரன். | பேராசிரியர் இ.சிவகணேசன் | அ.செந்தூரன் | சி.வித்யாஷனி. | ச.கோபிநாத் | ப.விஸ்வலிங்கம் | பா.சுமன் லோ.வித்யாஷினி |
| 2012/13 | 41 | பேராசிரியர் வ.மகேஸ்வரன். | பேராசிரியர் இ.சிவகணேசன் | ப.விஸ்வலிங்கம் | தி.கேதீஸ்வரன் | ச. கோபிநாத் | முரளிதுவாரகேஷ் | இரா.அன்பரசன் சு.சரணியா |
| 2013/14 | 42 | பேராசிரியர் வ.மகேஸ்வரன். | பேராசிரியர் இ.சிவகணேசன் | இ.கோபிசங்கர் | இ.இராகுலராஜ் | அ.யோகேஸ்வரன் | இ.குகன்ராஜ் | கு.லக்ஷி எம்.சுகிதகுமார் |
| 2014/15 | 43 | பேராசிரியர் வ.மகேஸ்வரன். | திரு.வ.தர்மதாசன் | அ.சஞ்சீவன் | நா.ரவீஸ் | ம.கஜநேசன் | த.திருவரன் | செ.பிறைசில் உ.நிவேதிகா |
| **2015/16** | **44** | **பேராசிரியர் வ.மகேஸ்வரன்.** | **திரு.வ.தர்மதாசன்** | **ப.கீர்த்தனன்** | **நா.ரவீஸ்** | **பா.பசிகரன்** | **நி.ஜனலக்ஷன்** | **சி.ஸ்ரீகாந்த் த.அருள்விழி.** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றென்றும் நன்றியுடன்...

இளங்கதிரின் இவ்விதழை வெளியிட தன் இன்னருளைப் பொழிந்த தமிழ்த் தாய்க்கு முதற்கண் மன, மொழி, மெய்களால் வணங்கி நன்றியுரைக்கிறோம்.

- இம்மலர் சிறப்புற வாழ்த்துரைத்த துணை வேந்தர், பெருந்தலைவர், பெரும் பொருளாளர், சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் அவர்களுக்கும்,
- காத்திரமான ஆக்கங்களை தந்துதவிய பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், மற்றும் எமது சக மாணவ மாணவிகளுக்கும்,
- உடனிருந்து வழிகாட்டிய தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் அவர்களுக்கும், ஆலோசனை வழங்கி பல உதவியகள் புரிந்த தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் பெ.சரவணகுமார், எம்.எம்.ஜெயசீலன், உதவி விரிவுரையாளர் பா.சுமன் அவர்களுக்கும், ஆக்கங்களை பெற உதவி செய்த விரிவுரையாளர்கள் எஸ்.பாஸ்கரன், நா.சிவகுமார் அவர்களுக்கும், ஆக்கங்களை தெரிவுசெய்து தந்த உதவி விரிவுரையாளர் செ.பிறைசில் அவர்களுக்கும் மற்றும் இவ் இதழ் சிறப்பாக வெளிவர ஒத்துழைப்பும், ஒத்தாசைகளும் வழங்கிய தமிழ்மொழியின்மேல் தீராப்பற்றும் ஈடுபாடும் கொண்ட நண்பர்கள் சி.குருபரநாத், தே.கஜீபன், ச.நிஷாந்தினி, மு.இளையராஜா, வி.அனுஜன், ரா.ஜெயகாந்த் மற்றும் தமிழ்ச் சங்க செயற்குழுக்களின் விபரத்திரட்டை தொகுக்க உதவிய க.சுஜீவன் ஆகியோர்களுக்கும்,
- விளம்பரங்களையும், நிதி உதவிகளையும் தந்துதவிய வர்த்தக நல் உள்ளங்களுக்கும், அவற்றை சேகரிப்பதில் சிறப்புடன் செயற்பட்ட தமிழ்ச் சங்க செயற்குழுவிற்கும் ஏனையோருக்கும்,
- தமிழ்ச் சங்கப் போட்டிகளின் போது நடுவர்களாகக் கலந்து சிறப்பித்த விரிவுரையாளர் திருமதி.ஆன்.யாழினி சதீஸ்வரன், திருமதி.ஹரோசனா ஜெயசீலன், திரு சண்முகநாதன், திரு ஏ.எஸ்.எம்.பீலிக்ஸ் ஆகியோர்களுக்கும்,
- இம்மலரை அச்சிட உதவிய 'ஸ்பேஸ் எட்வெடேசிங் அன்ட் டெக்நொலொஜி' நிறுவனத்திற்கும்,

இவ்விதழ் சிறப்புற அனைத்து வழிகளிலும் உதவிசெய்து இம்மலரின் வளத்திற்கு கரம்கோர்த்த அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவர்களது பணி எதிர்காலத்திலும் இளங்கதிரை வளம்படுத்த உதவ வேண்டும் என வாழ்த்துகிறோம்.

இதழாசிரியர்கள்,<br>
சி.ஶ்ரீகாந்த் (விஞ்ஞானபீடம்),<br>
த.அருள்விழி (கலைப்பீடம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Royal Pharmacy & Distributors






...y Road, Nawalapitiya.
(Phone-0542224305
Mobile-0777-919530)

# Saratha's

Dealers in plastic & Aluminium Wares, Gift items, Ever silver items, Brassware, Glass items & Ceramic items




No,3A,Kotmale Road, Nawalapitiya.
Tel:-054-2222373/077-3213477

# Mahalingam

JEWELLERY HOUSE


*(Dealers in Latest Design with solid Gold & Ever silver items)*



***SRI MAHALUXMI PAWN BROKERS***

*No:57,Kotmale Road,*
*Nawalapitiya.*
***Tel:-054-2222376***

# NAWALAPITIYA OIL STORES





**For Reliable quality standard**

No.25,Gampola Road,
Nawalapitiya.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பௌதிகவியல்
A/L 2018 & 2019
Theory with Revision
A.T. Muruganirojan. B.sc(Hons))
077 656 0664


Ahkalya - jewellery





NO.36, Kandy road,
Nuwareliya.
Tel/Fax : 052-2223074



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இருக்க உளங்கொண்டாய்
இன்பத் தமிழுக் கிலக்கியமாய்
இன்றும் இருத்தல் செய்கின்றாய்
இறவாய் தமிழோடு இருப்பாய் நீ...

— சு. பாரதியார். —





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





BANK OF CEYLON
BOC
ලංකා බැංකුව இலங்கைவங்கி

**SUPER GRADE BRANCH**
115/7, Sirimavo Bandaranaike Mawatha,
Peadeniya.
Tel. 081 4475283, Email : boc588@boc.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப் பெண்ணேயுன்
நலங்காணார் ஞாலங்காணார்

- பாரதிதாசன் -



SPACE 071 9611311

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org